
THAIVEEDU DECEMBER 2023 டிசம்பர் www.thaiveedu.com

# தாய்வீடு

## எழுதித்தீராப் பேனாவின் அரை நூற்றாண்டு



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா,
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## நலம்! நலமறிய ஆவல்!

இது கொண்டாட்டங்களின் காலம். தீபாவளியில் தொடங்கி, விளக்கீடு, திருப்பிறப்பு, புத்தாண்டு எனத் தொடர்ந்து பொங்கல் திருவிழாவரை உற்றாரும் உறவினரும் கூடிக்களித்துக் கொண்டாடி மகிழும் காலம். இருந்தபோதும், இந்தக் காலம் மனமகிழ்வை மட்டுமல்லாது, பலருக்கு மன அழுத்தத்தையும் கொடுக்கும் காலமாக இருக்கிறது.

பூமிப்பந்தின் மேலரைக்கோளத்தில் உள்ள வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இது பனிக் காலம். நீண்ட இரவுகளைக் கொண்ட காலம். இக்காலத்தில் பலரும் பருவகாலப் பாதிப்புக் கோளாறு (Seasonal Affective Disorder-SAD) எனும் ஒருவகை மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். அண்ணளவாக 15 விழுக்காடு கனடியர் தமது வாழ்நாளில் பருவகாலப் பாதிப்புக் கோளாற்றை மந்தமான அளவிலாவது தாம் உணர்வதாகப் பதிவுசெய்வார்கள் எனக் கனடிய உளவியற் சங்கம் தெரிவிக்கிறது. அமெரிக்காவில், பத்து மில்லியன் மக்கள் இந்தக் கோளாற்றால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், இந்த உளநோய் ஆண்களைவிட நான்கு மடங்கு அதிக மாகப் பெண்களைத் தாக்குகின்றது என்றும் பொஸ்ரன் பல்கலைக்கழக ஆய்வொன்று தெரி விக்கிறது. இருபது வயதைக் கடந்து வயது அதிகரிக்க அதிகரிக்க, இந்நோய் தாக்குவ தற்கான சாத்தியப்பாடும் அதிகரிக்கும். ஆதலால் இந்நோயால் வயது முதிர்ந்தவர்களே மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், ஏற்கனவே ஏனைய உளநலச் சிக்கல் களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இந்த நோயின் தாக்கத்தைக் கூடுதலாக உணர்கிறார்கள் என்றும் உளநல வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். தாம் இந்தக் கோளாற்றால் பாதிக்கப்பட்டி ருக்கிறோம் என்று உணராமல், அதற்கான உதவியை நாடாமல், அதைக் கடந்து செல்பவர் களையும் கணக்கிலெடுத்தால், இந்நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இன்னும் பன்மடங்கு அதிகமாகுமென்பதே உளநலச் செயற்பாட்டாளர்களின் கருத்தாயிருக்கிறது.

இந்த எண்ணிக்கையில் நிச்சயம் எம் ஒவ்வொருவரினது உறவு வட்டத்திலும் நட்பு வட்டத் திலும் இருப்பவர்களும் இருப்பார்கள். ஏன், நாங்களே அதில் இருக்கலாம். இந்நோயின் அறி குறிகளாக, நாளின் பெரும்பொழுதில் சோர்வாக இருத்தல், சோகமாக உணர்தல், முன்னர் ஈடுபாடு காட்டிய செயற்பாடுகளில் ஆர்வம் இழத்தல், மந்தமாகவும் வலுவற்றும் உணர்தல், அளவுக்கு அதிகமாகத் தூங்குதல், மாச்சத்துள்ள உணவுகளை அதிகமாக நாடி, அளவுக்க திகமாக உண்டு, உடல் எடை அதிகரித்தல், கவனத்தைக் குவிப்பதில் சிரமப்படல், நம்பிக் கையிழந்தும் பயனற்றவராயுணர்ந்தும் குற்றவுணர்ச்சியாலும் அலைக்கழிதல் என்பவற்றோடு, உயிர் வாழ்வதில் பயனில்லை என்ற உணர்வு மேலிடலும் இருக்கிறது.

இந்த நோய்க்கான காரணிகள் தெளிவாக அறியப்படாதபோதும், பனிக்காலத்தில் குறைவான சூரிய ஒளி உடலுக்குக் கிடைப்பது ஒரு முக்கிய காரணியாகக் கருதப்படுகிறது. அதனால், ஒளிச்சிகிச்சை (Phototherapy) இந்நோய்க்கான ஒரு முக்கிய சிகிச்சையாகக் கையாளப்படு கிறது. இருந்தபோதும், இந்த நோய் கோடைகாலத்திலும் சிலரைத் தாக்குகின்றதென்பதை நோக்கும்போது, சூரிய ஒளி மட்டுமே நோய்க்கு மருந்தாகாது என்பது தெளிவாகிறது. இந்த நோய் தொடர்பாக உளநல வல்லுநர்களின் முக்கிய அறிவுறுத்தலாகவிருப்பது இந்த நோயின் அறிகுறிகளை நீங்கள் உணர்ந்தாலோ, அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் உணர்வதாக அறிந்தாலோ அதைத் தட்டிக்கழித்துவிடாதீர்கள் என்பதே.

நீங்கள் உணர்ந்தால், உளவளத்துணையை நாடுங்கள். நோயின் அறிகுறிகளை உணர்ந்தால் வலிந்து செயற்படுங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள். கடுங்குளிரேயாயினும் வெளியே சென்று ஈரப்பதனற்ற குளிர்காற்றை நாளுக்கு ஒருமுறையேனும் சுவாசியுங்கள். எப்போதாவதொ ருநாள் தோன்றினாலும், அந்த நாளில் கதிரவனை நேரில் சந்தித்து நலம் விசாரியுங்கள். மிக முக்கியமாக, உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு உங்கள் மனநிலையைத் தெரியப்படுத் துங்கள். எங்களுக்குக் காய்ச்சலோ தடிமனோ வந்தால், அயலவர்களுக்குத் தெரிவிக்க நாம் தயக்கங்காட்டுவதில்லை. இதுவும் கடந்து போகும் ஒரு நோயே. எனவே தயக்கம் தேவையில்லை.

இன்னொருவர் உணர்வதாக அறிந்தால், அவருக்கு ஆதரவாய் இருங்கள். அவர்கள் உணர் வுகளை உதாசீனம் செய்யாது மதிக்கும் அதேநேரம், அவர்களுக்கு அறிவுறுத்துங்கள். தேவையான உதவியைத் தேடிக்கொடுங்கள். முக்கியமாக, உங்கள் தொடர்பு வட்டத்தில் உளநோயால் அவதிப்படுபவர்களோ, தனிமையில் வசிப்பவர்களோ இருந்தால், உங்கள் கொண்டாட்டங்களின் நடுவே, கொஞ்சம் நேரமொதுக்கி அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நலம் விசாரியுங்கள். உங்கள் கொண்டாட்டங்களில் இணைத்துக் கொள்ளுங்கள்.

இது போன்ற கொண்டாட்ட காலங்களிலேயே மிகவும் அதிகமான தற்கொலை முயற்சிகள் நடைபெறுகின்றனவெனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. நீங்களோ, நாங்களோ, எங்கள் அன்புக்குரியவர்களோ இந்த எண்ணிக்கைக்குப் பங்களிக்காதிருக்க நாம் உதவலாம்.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


**நலம்! நலமறிய ஆவல்!** 3

**இஸ்ரேல் - பாலஸ்தீனம்: விடுதலையின் பின்னடைவும் காலனித்துவ ஆக்கிரமிப்பின் தீவிரப்படுத்தலும்** 5
- ரூபன் சிவராஜா

**நதியிலிருந்து கடலுக்கு அமெரிக்கா-ஹமாஸ்-இஸ்ரேல்** 11
- ரதன்

**அங்காதிபாதம் 400 - குகைத் திட்டம்** 16
- பால. சிவகடாட்சம்

**டோபமைன்** 20
- நிரேஷ் ரட்ணம்

**விடுமுறைக்கால விளக்குகள் மின்செலவைக் கூட்டுமா?** 24
- வேலா சுப்ரமணியம்

**பிள்ளைகளின் எதிர்கால படிப்புச் செலவு** 26
- செந்தூரன் புனிதவேல்

**நாம் பேரண்டத்தின் தனிக்காட்டு ராஜாக்கள் அல்லர்?** 27
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**சுவிட்சர்லாந்தின் லூசெர்ன் சிங்கம்** 31
- குரு அரவிந்தன்

**தற்காலத் தமிழ்த் திரைப்படங்களில் இலக்கியத் தாக்கம்** 34
- ஓவியர் ஜீவா

**Killers of the Flower Moon** 38
- ரதன்

**ஈழத் தமிழர்தம் நவீன நாடக வரலாற்றின் தனித்துவங்களைக் கண்டறிதல்** 42
- து. கௌரீஸ்வரன்

**நூற்றாண்டு விழாக் கண்ட பாலர் ஞானோதயச் சங்கம்** 53
- வே. விவேகானந்தன்

**மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தெய்வமாடற் சடங்கின் தனித்துவம்** 46
-சந்திரசேகரன் சசிதரன்

**கிளிநொச்சி மண் ஈந்த தீரன் ஞானப்பிரகாசம் ஞானராஜா** 53

**ரொறன்ரோவில் 'நினைவு நல்லது'** 56

**நவ உலகின் அறிவுப்பெருக்கில் நிமிர்ந்து நிற்க வழியமைக்கும் வாசிப்புப் பண்பாடு** 62
- அகமட் பிஸ்தாமி

**மலையகத்தின் 'இறப்பர்' வாழ்வியலையும் கவிதைகளாக யாத்தல் வேண்டும்** 64
- மல்லியப்புசந்தி திலகர்

**ஒலி - ஒளி ஊடகரின் 'நினைவு நல்லது'** 70
- உதயன் S. பிள்ளை

**ஜேர்மனிய வாழ்வியலின் அசலான எழுத்து** 74
- மு. நித்தியானந்தன்

**எக்காலத்திற்கும் பொருந்தும் ஒரு நாடகம்** 79
- துஷி ஞானப்பிரகாசம்

**தடைசெய்யப்பட்ட செவ்வியல் நூலும் இரண்டு தேவதாசிகளும்** 82
- ச. சத்தியதேவன்

**மொழிபெயர்ப்புக் கவிதையும் வாசகர் பார்வையும்** 85
- மைதிலி தயாநிதி

**தாமரைச்செல்வியைக் கொண்டாடுதல் என்பது...** 90
- யசோதா பத்மநாதன்

**எங்கள் கிராமத்தின் அடையாளம் தாமரைச்செல்வி** 94
- சாள்ஸ் குணநாயகம்

**வாசகர் வாசகங்கள்...** 96

**தாமரைச்செல்வியின் புனைவுலகு - வரலாற்றின் அடையாளமும் வரலாற்றை உருவாக்கும் திறனும் கொண்டது** 99
- கருணாகரன்

**அகம் என்பதே எழுத்தானவர்** 102
- ரஞ்ஜனி சுப்ரமணியம்

**தாமரைச்செல்வியின் கதைகள் - தமிழ் வாழ்வியல் குறித்த ஓர் இலக்கியச் சாட்சியம்** 105
- இந்திரன்

**தாமரைச்செல்வியின் ஓவியங்களுட் சில...** 107

**அங்கிருந்த துயர வாழ்வுதான் என் எழுத்துகளாக வெளிவந்தது...**
- தாமரைச்செல்வி
நேர்காணல்: சேகர் தம்பிராஜா 108

**கங்காரு நாட்டின் படகு மனிதர்களை நோக்கி நகர்ந்த கதை !** 114
- லெ. முருகபூபதி

**இலக்கியவாழ்வில் பொன்விழாக் காணும் தாமரைச்செல்வி அவர்களின் 'எழுத்தும் வாழ்வும்'** 118
- சந்திரா இரவீந்திரன்

**நிழல்** 126
- தாமரைச்செல்வி

**கரிக்கட்டையாய்ப் போகும் ஹெய்ட்டியின் காடுகள்** 130
- சதீஸ் செல்வராஜ்

**சோழ வல்லவன் படையெடுப்பு ஈழமும் சோழமும்** 135
- வி. துலாஞ்சனன்

**மதமும் பண்பாடும்** 138
- ஜிஃப்ரி ஹாசன்

**அமைதிப்படையின் பிரசன்னம் பற்றிய ஆய்வுகளும் பின்னூட்டங்களும்** 140
- என். செல்வராஜா

**வீரசோழன்** 144
- த. ஜீவராஜ்

**ஆய்வு என்றால் என்ன? ஆய்வு முன்மொழிவு என்றால் என்ன?** 147
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**லெனினின் நூற்றாண்டை நோக்கி -3 அரசும் புரட்சியும்** 151
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**பழமும் கனியும்** 160
- நாஞ்சில் நாடன்

**1766-க்கும் 1796-க்கும் இடையே மட்டக்களப்பு** 166
ஆங்கில மூலம்: ஜே.ஆர். ரௌஸ்ஸன்ற்
தமிழில்: சா. திருவேணிசங்கமம்

**பாரதி சொல்லும் சிதம்பர ரகசியம்** 172
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து....** 176
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**தி. ஜானகிராமன் என்னும் வசீகரம்** 179
- சு. வேணுகோபால்

**தொன்மையைத் தேடி ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள்** 185
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**வாழ்வுரிமை** 192
- மா. சித்திவினாயகம்

**திரு. வேட்ஸ்வேத்தும் கிராமத்துச் சிறுமியும்** 198
- ஸ்ரீஃபன் ப்படலர் லீக்கொக்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்



# இஸ்ரேல் - பாலஸ்தீனம்

## விடுதலையின் பின்னடைவும் காலனித்துவ ஆக்கிரமிப்பின் தீவிரப்படுத்தலும்

**- ரூபன் சிவராஜா**

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கை பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு இட்டுச் செல்லும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் நடைமுறையில் அது பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற்றும் காலனித்துவ ஆதிக்கத்தை விரிவுபடுத்த வழிகோலியுள்ளது என்பதே நிதர்சனம். தற்போதைய போர் வெடிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர், கொள்கை மற்றும் கணக்கெடுப்பிற்கான பாலஸ்தீன மையம் (Palestinian Center for Policy and Survey Research -PSR) நடத்திய கருத்தாய்வில் 1993-ம் ஆண்டுக்கு முன்பிருந்ததை விட இன்று மோசமான சூழல் நிலவுவதாக மூன்றில் இரண்டு பங்கினர் தெரிவித்துள்ளனர் என Le Monde Diplomatique நவம்பர் 2023 இதழின் ஒரு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

### பேச்சுவார்த்தையின் விளைவு – ஆக்கிரமிப்பு விரிவாக்கம்:

1993-ன் சமாதான உடன்படிக்கையில் பாலஸ்தீனர்கள் வரலாற்று ரீதியான ஒரு விட்டுக்கொடுப்பினைச் செய்தனர். அவர்களுடைய அடிப்படைக் கோரிக்கையான முழுமையான பாலஸ்தீனத் தாயகக் கோரிக்கையிலிருந்து இறங்கி, 1947- ல் ஐ.நா திட்டத்தின் மூலம் பாலஸ்தீனர்களுக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்ட 22 வீதமான நிலப்பரப்பினைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தனர். ஆனால் இஸ்ரேல் எதுவித விட்டுக்கொடுப்புகளையும் செய்யவில்லை. இறைமையுள்ள பாலஸ்தீனத் தாயகம் சமாதானப் பேச்சுகளில் மட்டுமல்ல இஸ்ரேல் தரப்பின் நிகழ்ச்சி நிரலில் ஒருபோதும் இருந்திருக்கவில்லை.

அரபு நாடுகள் பலவற்றுடனான உறவில் இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் தொடர்பான பல உடன்பாடுகளை இஸ்ரேல் எட்டி வந்துள்ளது. இப் புறநிலையில் பாலஸ்தீன மக்களின் உரிமைகள் மறக்கப்பட்டதும் புறக்கணிக்கப்பட்டதுமாக ஆகியிருந்தன. அரசியல் அர்த்தத்தில் ஹமாஸின் ஒக்ரோபர் 17 தாக்குதல் நிரந்தரத் தீர்வின் அவசியத்தைப் பேசு பொருளாக்கியுள்ளது. அரபு நாடுகளுடனான இஸ்ரேலின் உறவு என்பது அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார இலக்குகளைக் கொண்டவை. அமெரிக்க நலன்களையும் அடிப்படையாகக் கொண்டது.

கடந்த 30 ஆண்டுகளில், அதாவது ஒஸ்லோ உடன்படிக்கை எட்டப்பட்டதிலிருந்து சமகாலம் வரையான காலப்பகுதியில் பாலஸ்தீன மக்களுக்கான இறைமையுடைய தனி நாடு அமைவதற்கான புறநிலை திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பாலஸ்தீனத் தனியரசை அமைப்பதற்கான முனைப்புடன் தொடங்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறையில் இஸ்ரேலிய அரசிற்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமைந்தது. அதாவது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் மீதான பிடியை மேலும் இறுக்குவ



தற்கும் மேலும் பல பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கும், காலனித்துவ விரிவுபடுத்தல் மூலம் யூதக் குடியேற்றங்களை விரிவுபடுத்துவதற்கும் வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

### நோர்வேயின் சமாதான அனுசரணை: தோல்வியின் தொடக்கம்:

இஸ்ரேல்-பாலஸ்தீனத் தரப்புகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அனுசரணை நாடாக நோர்வே செயற்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகளாக நோர்வே பல்வேறு தரப்புகளுக்கிடையிலான சமாதான முன்னெடுப்புகளில் அனுசரணையாளர் பங்கினை வகித்திருக்கின்றது. அவற்றில் அதீத கவனம் பெற்ற தொடக்கமாக இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கிடையிலான பேச்சுவார்த்தையே விளங்குகின்றது. இதுவரை நோர்வே கிட்டத்தட்ட 12 முரண்பாட்டுச் சூழமைவுகளுக்கான அனுசரணை வழங்கியுள்ளது. இவற்றில் பல தோல்வியடைந்துள்ளன. சில நிரந்தரத் தேக்கத்திற்குள்

தள்ளப்பட்டுள்ளன. வெகு சில மட்டுமே தீர்வினை எட்டியுள்ளன.

பிலிப்பைன்ஸ், ஆப்கானிஸ்தான், சோமாலியா, சூடான், கொலம்பியா, இலங்கை, இஸ்ரேல்-பாலஸ்தீனம், ஹைதி, நேபால், மியான்மார் உட்பட்ட நாடுகளில் சமாதான முன்னெடுப்புகளில் அனுசரணைப் பாத்திரம் வகித்துள்ளது. தற்போதும் சில நாடுகளில் அப்பாத்திரத்தை வகித்து வருகின்றது. தவிர, இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத பல்வேறு முரண்பாட்டுத் தரப்புகளுடனான இரகசியப் பேச்சுக்களிலும் நோர்வே ஈடுபட்டுள்ளது. இஸ்ரேல்-பலஸ்தீனம், இலங்கை அரசு-தமிழீழ விடுதலைப் புலிகள், கௌத்தமாலா அரசு - அந்நாட்டின் போராட்ட அமைப்புகள், கொலம்பிய அரசு - கொலம்பிய விடுதலை அமைப்பு (FARC) ஆகிய தரப்புகளுக்கிடையிலான நோர்வேயின் சமாதான முயற்சிகள் அதிக கவனம் பெற்றவையாகும். இவற்றில் இஸ்ரேல் - பலஸ்தீனம், சிறிலங்கா - விடுதலைப் புலிகள் ஆகிய சமாதானப் பேச்சுகள் பெரும் தோல்வியிலும் அரசியல் உரிமைகளுக்குப் போராடிய தரப்புகளுக்குப் பெரும் அழிவாகவும் முடிவடைந்த பேச்சுவார்த்தைகளாகும்.

## கௌத்தமாலா:

கௌத்தமாலாவில், பல கெரில்லாப் போராட்ட இயக்கங்கள் பல தசாப்தங்களாக அரசை எதிர்த்துப் போரிட்டன. பல நூறாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதோடு, உள்நாட்டில் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாகினர். குவாத்தமாலாவிற்கான நோர்வேயின் சமாதான ஈடுபாடு 'நோர்வேஜிய தேவாலய உதவி - Norwegian Church Aid' அமைப்பின் பிரதிநிதியான பெத்தர் ஸ்கவ்வென் முன்முயற்சியிற் தொடங்கியது. அவர் அந்நாட்டில் நீண்டகாலம் பணியாற்றியவர். அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் நோர்வே அரசாங்கத்தைச் சமாதான முன்னெடுப்பில் ஈடுபடுத்தினர். அதற்கமைய 1990-ல், முரண்பாட்டுத் தரப்புகள் ஒஸ்லோவிற்கு அழைக்கப்பட்டு சமாதான முன்னெடுப்பிற்கான வரைபு உருவாக்கப்பட்டு பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. அடுத்த கட்டமாக, பேச்சுவார்த்தைகள் முன்னேற்றப் பாதையிற் சென்றவேளை, அனுசரணையின் முதன்மைப் பாத்திரத்தினை ஐ.நா எடுத்துக் கொண்டது. மத்தியஸ்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டது. 1996-ல் தரப்புகள் இறுதி உடன்படிக்கையிற் கையெழுத்திட்டன. உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும், அந்நாடு இன்னும் உலகில் வன்முறை அதிகம் இடம்பெறும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. குறிப்பாக சமூக-பொருளாதார சமத்துவமின்மை, நிலப்பங்கீடு மற்றும் மனித உரிமைகள் போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் நீடிக்கின்றன. முரண்பாட்டுத் தரப்புகளுக்கும் கட்சிகளுக்கும் இடையிலான ஆயுத மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதைச் சமாதான முன்னெடுப்புச் சாத்தியப்படுத்தியது.

## இலங்கைத் தீவு:

இலங்கைத் தீவில், சமாதான முன்னெடுப்புகளில் நோர்வே 2000 - 2006 வரை ஈடுபட்டது. 2002-ல் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும், அடுத்தடுத்த ஆண்டுகளில் சமாதான முயற்சி பெரும் சவால்களுக்குள் தள்ளப்பட்டது. 2009-ல் பெரும் இரத்தக் களரியுடன் பெரும் இன அழிப்பினைச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளையும் சிறிலங்கா அரசாங்கம் அழித்தது. நேரடியான சமாதானப் பேச்சுகள் தொடங்கப்பட்ட 7 ஆண்டுகளில் சிறிலங்கா அரசாங்கம் இராணுவ ரீதியாக போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. இன்று, இலங்கையில் உள்நாட்டுப் போர் இல்லை. ஆனால் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு இன்னும் சாத்தியப்படவில்லை. முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணிகள் இன்றும் அப்படியே உள்ளன.

## கொலம்பியா:

நோர்வேயின் சமாதான முயற்சியின் மற்றொரு குறிப்பிடத்தக்க உதாரணம் கொலம்பியா. கொலம்பிய அரசு மற்றும் கொலம்பிய விடுதலை அமைப்பான FARC-ற்கு இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அம்முரண்பாட்டுக்கான அரசியற் தீர்வு எட்டப்பட்டதில் நோர்வேயின் பங்கு முக்கியமானதாகும். நோர்வேயின் சமாதான முயற்சிகளில் வெற்றியடைந்த முயற்சியாக இதனைக் குறிப்பிடலாம். நிதி ரீதியான பங்களிப்பினைச் செய்ததோடு, அப்பேச்சுவார்த்தைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதிலும் நோர்வேயின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இரண்டு வருட இரகசியப் பேச்சுவார்த்தைக்கு பின், 2012-ம் ஆண்டு பேச்சுவார்த்தை தொடங்கியது. 2016 நவம்பரில் இறுதி உடன்படிக்கை கைச்சாத்தானது.

## பேச்சுவார்த்தைகள்: பாலஸ்தீன விடுதலைக்கு எதிரான பொறி:

1993-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இஸ்ரேல் - பாலஸ்தீனத் தரப்புகளுக்கிடையிலான ஒஸ்லோ உடன்படிக்கையானது பாலஸ்தீன விடுதலைக்கு எதிரான பொறி என்பதோடு, முதற் கோணல் முற்றும் கோணல் என்பதற்கு அமைய நோர்வேயின் சமாதான அனுசரணையினது நீடித்த தோல்வியாகவும் உள்ளது. ஒஸ்லோ உடனபடிக்கை-1 ல், செப்ரெம்பர் 13, 1993-ல் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் மற்றும் இஸ்ரேலின் அன்றைய பிரதமர் (தொழிற்கட்சி) Yitzhak Rabin ஆகியோர் வெள்ளை மாளிகையில் கையெழுத்திட்டனர். உடன்படிக்கை கைச்சாத்தாவதற்கு முன்னர் நீண்ட இரகசியப் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் முன்னெடுக்கப்பட்டன. அடிப்படையில் அதுவொரு கொள்கை ரீதியிலான விடயங்களை உள்ளடக்கிய உடன்படிக்கை. 'இடைக்கால தன்னாட்சி நிர்வாக ஒழுங்குகள் பற்றிய கொள்கைகளின் பிரகடனம் - Declaration of Principles on Interim Self-Government Arrangements' (DOP) என்பது அதன் உள்ளடக்கம்.

அடிப்படையில் ஓர் இறுதித் தீர்வுக்கான உடன்படிக்கை அல்ல. அது பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான புறச்சூழலைத் தொடக்கி வைத்தது. முதன்மையாக மட்டுப்படுத்தப்பட்ட பாலஸ்தீனிய தன்னாட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கான ஒரு கட்டமைப்பு. அதே நேரத்தில் படிப்படியாக காசா மற்றும் மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேலியப் படைகளைத் திரும்பப் பெறுதல் என்பதையும் உள்ளடக்கியிருந்தது. அதாவது 1967-ல் ஆறுநாள் போரில், இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்த பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படைகளை வெளியேற்றுவதைக் குறிப்பதாகும். பாலஸ்தீனத் தரப்பும் இஸ்ரேலும்



ஒருவரையொருவர் அங்கீகரிப்பது உடன்படிக்கையின் முதல் அம்சம். அதாவது இஸ்ரேலின் தேச இருப்பினை (Israel's right to exist as a sovereign state) பாலஸ்தீன விடுதலை அமைப்பும், பாலஸ்தீன விடுதலை அமைப்பினைப் பாலஸ் தீன மக்களின் சட்டரீதியான பிரதிநிதிகளாக இஸ்ரேலும் அங் கீகரித்தல் என்பதாகும்.

1995-ல் ஒஸ்லோ உடன்படிக்கை -2, எகிப்தின் தாபா நகரிற் கைச்சாத்திடப்பட்டது. அது 'மேற்குக் கரை மற்றும் காசா பிராந்தியங்களுக்கான இடைக்கால தன்னாட்சி நிர்வாக ஒழுங்கு - Interim Agreement on the West Bank and the Gaza Strip' பற்றியதாகும். செப்ரெம்பர் 28, 1995-ல் வோஷிங்டனில் இஸ்-ரேலிய பிரதமர் Yitzhak Rabin, மற்றும் PLO தலைவர் யாசிர் அராபத் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், எகிப்து, ஜோர்டான் மற்றும் நோர்வே ஆகியவை முன்னிலையில் இக்கைச்சாத்திடல் இடம்பெற்றது. இந்த உடன்படிக்கை பாலஸ்தீனிய தேசிய தன்னாட்சி அதிகார சபையின் (Palestinian National Authority (PNA eller PA) உருவாக்கத்திற்கு அத்திவாரமிட்டது.

பாலஸ்தீனத் தன்னாட்சி நிர்வாகத்தினை (Palestinian National Authority, PA) அமைப்பது தொடர்பான உடன்பாடு எட் டப்பட்டது. இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன நிர்வாகத்திற்குமிடை யில் ஒரு பாதுகாப்பு ஏற்பாடும் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் இது மிக முக்கிய மான உடன்படிக்கையாகச் சர்வதேச ரீதியில் கணிக்கப்பட் டது. எதிர்பார்க்கவும்பட்டது. ஆனால் உடன்படிக்கை கைச் சாத்தான கையோடு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜோர்டான் பள்ளத்தாக்குகளில் இஸ்ரேலிய அரசாங்கம் குடி யேற்றங்களை மும்முரப்படுத்தியதைத் தனது பயணத்தின் போது கண்டதாக நோர்வேயிய ஊடகவியலாளரும் எழுத்தா ளருமான Odd Karsten Tveit அண்மையில் நினைவு கூர்ந்தி ருக்கின்றார். மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேல் குடியேற்றங் களை அகற்றப் போவதில்லை, ஒரு பாலஸ்தீனத் தனிநாடு உருவாகுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதைத் தான் அப்போதே உணர்ந்ததாகவும் கூறுகின்றார். அவர் அண்மையில் பாலஸ்தீனம் - இஸ்ரேலின் திருட்டு, எமது துரோகம்' என்ற புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.

ஒஸ்லோ உடன்பாட்டின்படி 1999-ல் இறுதித் தீர்வு எட்டப்பட்டி ருக்க வேண்டும். ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடங்கப் பட்டு 30 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் பாலஸ்தீனர் கள் மிகப்பெரிய அநீதிகளுக்கு முகம் கொடுக்கின்ற வர லாற்று இருளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஒஸ்லோ உடன்ப டிக்கைகள் தமக்கெதிரான ஒரு பொறியென்பதை யாசீர் அர பாத் 2002-இல் ஒருமுறை கூறியததாக பலஸ்தீன அரசியல் பிரதிநிதி ஒருவரை (Mustafa Bargouthi) மேற்கோள்காட்டி கடந்த செப்ரெம்பரில் நோர்வேஜிய Klassekampen நாளிதழ் ஒரு கட்டுரையிற் குறிப்பிட்டிருந்தது. அப்போது யாசீர் அர-பாத் மேற்குக் கரையின் ரமல்லாவில் இஸ்ரேலியப் படைக ளாற் சுற்றிவளைக்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டி ருந்தார்.

## உடன்படிக்கை மீதான விமர்சனங்கள்:

முகமட் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீனத் தன்னாட்சி நிர்வாகம் இருந்தாலும் நடைமுறையில் இஸ்ரேலே மேற்குக் கரையினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. ஒஸ்லோ உடன்படிக்கையானது ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை யினை A,B,C என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. A பகுதி மொத்த நிலப்பரப்பின் 18 வீதம். இது பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாகத்தின் கீழ் கொள்கையளவில் நிர்வகிக்கப் படுகின்றது. B பகுதி 22 வீதம். இது இஸ்ரேல் மற்றும் தன் னாட்சி நிர்வாகத்தின் கூட்டுக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின் றது. மீதமுள்ள 60 வீதமான C பகுதி ஒரு நிலைமாறு காலத் திற்குப் பின்னர் பாலஸ்தீனத் தன்னாட்சி நிர்வாகத்தின் கட் டுப்பாட்டிற்குள் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது ஒருபோதும் நிகழவே இல்லை.

ஒஸ்லோ உடன்படிக்கையில், பாலஸ்தீனத் தனியரசு பற் றியோ, சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான யூதக் குடியேற் றங்களைத் தடுப்பது தொடர்பாகவோ குறிப்பிடப்படவில்லை. அத்தோடு பாலஸ்தீனர்கள் தமது தாயகத் தலைநகராகக்



கருதும் ஜெருசலேம் குறித்தோ, இஸ்ரேல் நிறுவப்பட்டபோது வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புகின்ற உரிமை தொடர்பாகவும் உடன்படிக்கையிற் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அந்த நேரத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குள்ளும் முரண்பாடுகளும் பிளவுகளும் நிலவின. பாலஸ்தீனத்தைத் தளமாகக் கொண்டியங்கிய PLO-வினருக்கும் துனிசியாவில் தங்கியிருந்த தலைவர் யசீர் அரபாத் அவருக்கு நெருங்கியவர்களுக்குமிடையிலான முரண்பாடுகளின் விளைவாக யாசீர் அரபாத்தும் அவருக்கு நெருக்கமான பிரிவினரும் ஒஸ்லேவில் இரகசியப் பேச்சுக்களை நடத்திய சமவேளையில் மேற்குக் கரை காசாவைச் சேர்ந்த PLO-வினர் ஐ.நா மற்றும் அமெரிக்க அனுசரணையுடன் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகள் வோசிங்ரனில் இடம்பெற்றது. அவர்கள் குடியேற்றங்களை முற்றாக நிறுத்துமாறும் மேற்குக் கரை மற்றும் காசாவை உள்ளடக்கியதான பாலஸ்தீனத் தனியரசின் உருவாக்கத்தினைக் கோரியிருந்தனர்.

## திரைமறைவுப் பேச்சுகள்:

ஒஸ்லோவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றமை வோசிங்ரனில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட குழுவிற்குத் தெரியாது. ஆனால் இறுதியில் ஒஸ்லோப் பேச்சுவார்த்தையின் உடன்பாடுகளை இஸ்ரேல் தேர்ந்துகொண்டது. பலஸ்தீனத் தரப்பின் இரண்டு பிரிவுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களைப் பலவீனப்படுத்துவதென்பது அமெரிக்கா, நோர்வே, இஸ்ரேலின் ‘கூட்டு இராஜதந்திரம்’ என்றே பார்க்கவேண்டியுள்ளது. அல்லது கூட்டுச் சதி அல்லது பிரித்தாளும் சூழ்ச்சி எனவும் சொல்லலாம். 1990-ல் முதலாவது வளைகுடா யுத்தத்தில் யாசீர் அரபாத் சதாம் உசேன் பக்கம் நின்றதால் வளைகுடா நாடுகளின் நிதி ஆதரவை யாசீர் அரபாத் இழந்திருந்த தருணம் அது. அந்தத் தருணத்தில் யாசீர் அரபாத் தலைமையிலான ஒஸ்லோ பேச்சுவார்த்தைக் குழுவுடன் இணங்குவது ஒப்பீட்டளவில் குறைந்தளவு சமரசங்களுக்கு உடன்படுவதென்று இஸ்ரேல் கருதியது.

இந்தப் பின்னணியில் ஒஸ்லோ உடன்படிக்கை பாலஸ்தீன விடுதலையை எத்தகைய மோசமான சூழலுக்குள் இட்டுச் சென்றிருக்கின்றது என்பதையும் அது எப்படி ஒரு பொறியாகியது என்பதையும் புரிந்துகொள்ள முடியும். யூதக் குடியேற்றங்கள் அதிகரிக்கப்படவும் ஆக்கிரமிப்புத் தொடரவும் விரிவுபடுத்தப்படவும் அது வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது என்ற விமர்சனங்களும் பல மட்டங்களில் உள்ளன. இந்த மோசமான நிலைமையேற்பட்டமையில் முக்கிய பங்கு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. இம் முரண்பாட்டுக்கான தீர்வு இஸ்ரேலுக்கு அருகில் பலஸ்தீனத் தனியரசு அமைவதே என்று சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றபோதும், அதற்கு உரிய அடித்தளங்களை அமைப்பதற்கான எவ்விதச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. பாலஸ்தீனத் தனியரசை அமைப்பதற்கான அடித்தளங்களில் முதன்மையானவை மேற்குக் கரையின் குடியேற்றங்களை அகற்றுவது, குறிப்பாக குடியேற்றங்களை மேலதிகமாக அமைப்பதையேனும் நிறுத்துவது. பாலஸ்தீன நிலங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகளை வெளியேற்றுவது. குறைந்தபட்சம் மேலதிக நிலங்களை ஆக்கிரமிப்பதையேனும் நிறுத்துவது. இவற்றில் எவற்றையும் சர்வதேச சமூகம் நிறுத்தவில்லை. அதற்கான அழுத்தத்தினை இஸ்ரேல் மீது பிரயோகிக்கவில்லை. குறிப்பாக இஸ்ரேலின் போக்கினை அமெரிக்கா முண்டுகொடுத்தே வந்துள்ளது.

ஒஸ்லோ உடன்படிக்கை இஸ்ரேலின் நலன்களை முன்னிறுத்தியதென்பதை நன்கு அறிந்திருந்தது என நோர்வேஜிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் ‘சமாதான முன்னெடுப்புகளுக்கான அனுசரணை’ நோர்வேயின் முதன்மையான ‘ஏற்றுமதி உருப்படி’யாக ஆக்குவதில் நோர்வே மிகுந்த அக்கறை கொண்டிருந்தது என்கிறார் வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான நோர்வேஜியரயான Hilde Henriksen Waage. இவர் மத்திய கிழக்கு அரசியல் சார்ந்தும் ஒஸ்லோ உடன்படிக்கை சார்ந்த ஆய்வுகளையும் முன்னெடுத்தவராவார். முரண்பாட்டுத் தரப்புகளில் பலம் பொருந்திய தரப்பான இஸ்ரேலின் நிபந்தனைகளை நோர்வேயும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. தன் சமாதான முகத்தை உருவாக்குவதும் நிலைகொள்ளச் செய்வதும் முதன்மையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளின் போதான அணுகுமுறைகள் மீதான விமர்சனங்கள் ஒருபுறம் இருக்க, எட்டப்பட்ட உடன்பாடுகள் மீதான அரசியல் கடப்பாடுகளைப் பின்பற்றுவதில்லை என்ற விமர்சனங்களும் உள்ளன. அதாவது அனுசணையாளர் என்ற வகிபாகத்திற்குரிய பொறுப்புடனான கண்காணிப்பு, சுட்டிக்காட்டல், பொறுப்புக்கூறல் நிகழ்வதில்லை என்ற விமர்சனங்களும் உள்ளன.

## பின்–பனிப்போர்: அதிகமான சமாதான முன்னெடுப்புகள்:

பனிப்போரின் முடிவைத் தொடர்ந்து கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் எண்ணிக்கையில் அதிகமான சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கடந்த ஒரு தசாப்தமாக அவை குறைவடைந்துள்ளன. அதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. அமெரிக்காவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்குமிடையிலான மோதலின் முடிவு சமாதான முயற்சிகளை எளிதாக்கியது. வல்லரசுகளின் மாறுபட்ட நலன்கள், முரண்பாட்டுத் தரப்புகளுக்கிடையிலான சிக்கல்களின் தன்மையும் இரண்டுக்கு மேற்பட்ட தரப்புகள் தொடர்புபட்டிருக்கின்றமையும் பல்வேறு வல்லரசுகளின் நலன்கள் பனிப்போரின் போது இருந்ததைப் போலவே, சமாதான மத்தியஸ்தத்தையும் தீர்வுகளையும் கடினமாக்குவதிற் பங்களித்துள்ளன. அதாவது அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் மத்திய கிழக்கு வல்லரசுகளான ஈரான் மற்றும் சவூதி அரேபியா போன்றவற்றுக்கிடையிலான உறவுகளும் முரண்பாடுகளும் நலன்களினதும் விளைவுகள், பனிப்போரை ஒத்த போக்குகினைக் கொண்டுள்ளன. அப்புறநிலைகள் போர்களிலும் சமாதான முயற்சிகளிலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதைக் காணலாம். இது சமாதான உடன்படிக்கைகளை கடினமாக்கும் இரண்டாவது காரணியைத் தெளிவுபடுத்துகிறது. அதாவது முரண்பாட்டிற் தொடர்புபட்ட உள்ளக மற்றும் வெளியகத் தரப்புகளின் எண்ணிக்கை சார்ந்த விவகாரம் அதுவாகும். போரிடும் தரப்புகளும் அவர்களின் ஆதரவு சக்திகளும் வெவ்வேறு தீர்வுகளை விரும்புகிறார்கள். அனைத்துத் தரப்பும் இணங்கக்கூடிய தீர்வைக் கண்டடைவது கடினம். இதற்கான அண்மைய எடுத்துக்காட்டுகளாக சிரியா, ஈராக், உக்ரைன் மற்றும் யேமன் போன்ற முரண்பாடுகளைக் குறிப்பிடலாம். இங்கே ஒரு தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. அதேவேளை வெவ்வேறு நலன்களைக் கொண்டுள்ள இரண்டுக்கு மேற்பட்ட தரப்புகள் இணங்கக்கூடிய சமாதான உடன்படிக்கையை அடைவதும் இலகுவானதல்ல.

செப்ரெம்பர் 11-ன் விளைவுகளில் முதன்மையானதான 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' மற்றும் 'பயங்கரவாதிகள்' என்ற முத்திரைகள் அதிகளவில் ஆயுதமேந்திய போராட்ட அமைப்புகள் மீது பிரயோகிக்கப்பட்டன. இது முன்னர் விடுதலைப் போராட்ட அமைப்புகளாக அங்கீகாரத்தினையும் அடையாளத்தினையும் கொண்டிருந்த அமைப்புகள் மீதும் பாரபட்சமின்றிப் பிரயோகிக்கப்பட்டது. அரசுகளுக்கும் அவற்றின் படைகளுக்கும் எதிராக அரசியல் உரிமை கோரல்களோடு போராட்டத்தை முன்னெடுத்துப் போர்களை எதிர்கொண்டிருந்த அமைப்புகளும் பயங்கரவாதப் பட்டியலிற் சர்வதேச ரீதியிலும் வல்லரசுகளாலும் இணைக்கப்பட்டன. போராட்ட அமைப்புகளின் அரசியல் நோக்கங்களை மறுப்பது, முரண்பாட்டுத் தரப்புகளுக்கிடையிலான இடைவெளியை அதிகரிக்கத் துணைபோவதோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் வரைபாதையையும் தீர்வினையும் கடினமாக்குகின்றன.

## நோர்வேயின் அணுகுமுறைகள்:

நோர்வேயை ஒரு சமாதான அனுசரணையாளராக உலகின் முரண்பாட்டுத் தரப்புகள் ஏற்றுக் கொண்டாலும் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு சில வெளிப்படையான வரம்புகள் உள்ளன. சமாதான அனுசரணை நாடாக நோர்வேயின் கவர்ச்சிகரமான அம்சங்களில் ஒன்று நோர்வேக்கு வல்லரசு சார் நலன்கள் இல்லை. தவிர ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்பில் உறுப்பு நாடாக இல்லாமை கூட அதன் நடுநிலைமைத் தன்மைக்கு வலுச் சேர்க்கிறது. ஆனால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுகளைத் தாண்டி நோர்வே தனித்துவமாகவோ, நடுநிலையாகவோ செயற்படுவதில்லை என்பது வெள்ளிடைமலை. நோர்வேயில் ஆட்சிகள் மாறினாலும் வெளியுறவு அரசியலில் ஒரு நிலைகொள் தொடர்ச்சி நிலவுகின்றது. அந்த வகையில் எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும், அது வலது அல்லது இடதுசாரி எதுவாக இருந்தாலும் ஆட்சி மாற்றங்களுக்கு அப்பாற்பட்டு, சமாதான முன்னெடுப்புகள் தொடரப்படுவதுண்டு. இராணுவ வலுவை அழுத்தக் கருவியாக நோர்வே கையாள வாய்ப்பில்லையெனினும், நிதியுதவி மற்றும் முதலீடுகள் ஓர் அழுத்தக் கருவிக்குரிய வகிபாகத்தினைக் கொண்டுள்ளன. ஆனால் நடைமுறையில் அவை அதிகம் பயனளிப்பதில்லை.

## ஒஸ்லோ உடன்படிக்கைகள் மீதான விமர்சனங்கள்:

பாலஸ்தீனியர்களிடையே, ஒஸ்லோ உடன்படிக்கைகள் கலவையான வரவேற்பைப் பெற்றது. அதன் அணுகுமுறை மற்றும் உள்ளடக்கம் ஆகியன மீது கணிசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. யாசிர் அராபத் முழு அமைப்பையும் உள்ளடக்காமல் தன்னிச்சையாக உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்ததான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. 1948-ல் இஸ்ரேல் நிறுவப்பட்டபோது இழந்த பாலஸ்தீன நிலங்கள் மற்றும் யூதக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ளடங்கிய பாலஸ்தீனத் தாயகத்தின் வரலாற்று உரிமையை PLO தலைமை விட்டுக்கொடுத்துள்ளது என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. 1967-இல் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் குறித்தும் உடன்படிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் விமர்சிக்கப்பட்டது. பாலஸ்தீன விடுதலை அமைப்பின் உள்ளக மட்டங்களிலிருந்தும், ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போன்ற அமைப்புகளிடமிருந்தும் விமர்சனங்கள் எழுந்தன.

1993 – 1995-ன் ஒஸ்லோ உடன்படிக்கைகள், பாலஸ்தீன விடுதலையின் சரணடைதல் என்றுகூட சில மட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. படைவலுச் சமநிலையில்லாத சூழலில் பலவீனமான ஒரு தரப்பு, ஒரு பெரும் ஆக்கிரமிப்பு சக்தியிடம் சரணடைவதற்கு ஒப்பான உடன்படிக்கை அவை எனவும் சில மட்டங்களிற் கருதப்பட்டது. இஸ்ரேலின் இறைமையை பாலஸ்தீன விடுதலை அமைப்பு அங்கீகரிப்பதை முதன்மை நிபந்தனையாக உள்ளடக்கியது. ஆனால் உடன்படிக்கையின் ஒரு கூறாக வரலாற்று ரீதியான பாலஸ்தீன தாயக நிலப்பரப்பினைக் கொண்ட சுதந்திர பாலஸ்தீனத் தனியரசை

அமைப்பது-அங்கீகரிப்பது தொடர்பாகவோ, பாலஸ்தீனியர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ பிரஸ்தாபிக்கப்படவில்லை.

தற்போதைய சூழலில் பாலஸ்தீனத் தன்னாட்சி நிர்வாகம், ஓர் இஸ்ரேலின் துணைப் படைகள் போன்று இயங்குவதாகவும் பல தரப்புகளால் சித்தரிக்கப்பட்டு வருகின்றது. பெஞ்மின் நேதன்யாகு தலைமையிலான தீவிர வலதுசாரி இஸ்ரேல் அரசாங்கத்தின் போக்கிற்கு எதிரான கையறு நிலையிலேயே முகமட் அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன நிர்வாகம் உள்ளது. 2011-ல் யுனெஸ்கோ நிறுவனத்தில் உறுப்புரிமை பெற்றமை, 2012-ல் ஐ.நாவில் அவதானிப்பு நாடு என்ற அங்கீகாரத்தினைப் பெற்றமை, 2015-ல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அரசாக அங்கீகாரம் பெற்றமை உட்பட்ட நிகழ்வுகள் பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாக சபையின் அந்தஸ்தினை உயர்த்துவதில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

## இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு சக்தி:

இஸ்ரேலின் தற்போதைய அரசாங்கத்தின் 120 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 100 உறுப்பினர்கள் யூதக் குடியேற்றங்களை மையப்படுத்திய காலனியாதிக்கத்தை ஆதரிப்பதோடு, மேற்குக் கரையை முழுமையாக அல்லது அதன் பகுதிகளை வலிந்து இஸ்ரேலுடன் இணைப்பதையும் ஆதரிக்கின்றனர். இது இஸ்ரேலிய அரசாங்கம் எத்தகையை மோசமான ஆக்கிரமிப்பு, நிலப் பறிப்பு, ஒடுக்குமுறை அரசாங்கம் என்பதைப் பறைசாற்றுகின்றது. பாலஸ்தீனத் தனியரசை அமைப்பதற்கான முனைப்பில் தொடங்கப்பட்ட சமாதான உடன்படிக்கைகள் நடைமுறையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலிய அரசு தன் பிடியை இறுக்குவதற்கே வழிகோலியுள்ளது. அடிப்படையில் இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு சக்தி என்பதை அதன் வரலாற்றினூடு நிரூபிக்கப்படுகிறது. இஸ்ரேல் தேசம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அது ஐ.நா தீர்மானங்கள் ஒன்றைக்கூட மதிக்கவில்லை. சமகால நிலைமைகள் உணர்த்துகின்ற அப்பட்டமான உண்மை ஒன்று உள்ளது. அதாவது பாலஸ்தீன மக்களின் உரிமைகளை வழங்குவது இஸ்ரேலின் பாதுகாப்பிற்கும் இன்றியமையாதது என்பதே. அதனை இஸ்ரேல் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை. ஆனால் அதனைப் புரியவைக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவிற்கும் ஏனைய சர்வதேச சக்திகளுக்கும் உள்ளது.



**உசாத்துணை:**

- *Le Monde Diplomatique, November 2023*
- *Klassekampen (Class struggle), 13..September.2023*
- *https://www.nupi.no/ ( Norway: Peace efforts, Nr.12, 2018)*
- *https://snl.no/ (Oslo Agreements)*





rooban.s@thaiveedu.com



# நதியிலிருந்து கடலுக்கு

## அமெரிக்கா-ஹமாஸ்-இஸ்ரேல்

– ரதன்

அமெரிக்க இராணுவம் 178 நாடுகளில் நிலைகொண்டுள் ளன. 750 அமெரிக்க இராணுவத் தளங்கள் உலகெங்கும் உள்ளன. அமெரிக்க மக்களின் 6.4 ரில்லியன் டொலர்கள் இராணுவச் செலவிற்காகச் செலவழிக்கப்படுகின்றது. அமெ ரிக்காவின் வரி வருமானத்தில் பெரும் பகுதி (12 வீதம்) இரா ணுவத்திற்கே செலவாகின்றது. அமெரிக்கா தைவானை மையப்படுத்திப் பிலிப்பைன்ஸில் அதிக இராணுவத் தளங் களை அமைக்க விரும்பியது. பிலிப்பைன்ஸ் அரசாங்கம் மேலும் 4 இராணுவத் தளங்கள் அமைக்க அனுமதி வழங்கி யது. 1951-லிருந்து பிலிப்பைன்ஸ்க்கும் அமெரிக்காவிற்குமி டையில் பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளது.

அமெரிக்க இராணுவத் தளங்கள் மத்திய கிழக்கெங்கும் நிலைகொண்டுள்ளன. துருக்கி - 1,885 அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளனர். ஈராக் - 2,500, குவைத் - 13,500, பாரெ-யின் - 9,000, கட்டார் - 10,000, ஓமான் - 800, ஐக்கிய அரபு இராச்சியம் - 3,500, சவூதி அரேபியா - 2,700, ஜோர்டான் - 2,936, சிரியா - 900 இவற்றுடன் இஸ்ரேலிலும் எகிப்திலும் அமெரிக்கப் படைகள் தளம் அமைத்துத் தங்கியுள்ளன. சீபூத்தீ (Djibouti) கிழக்கு ஆபிரிக்க நாடு. யேமன் நாட்டை யும் சீபூத்தீயையும் செங்கடலே பிரிக்கின்றது. இதனால் அமெ ரிக்காவிற்கு இங்கு தளம் அமைக்கவேண்டிய அவசியம் இருந்தது. அத்துடன் சவூதி அரேபியாவிற்கும் இத்தளம் உத வியாகவிருக்கும். சவூதிக்கும் யேமனுக்கும் இடையில் சீரிய உறவில்லை.

இவற்றை விட இரண்டு போர்க் கப்பல்கள் மத்திய கிழக்கில் தரித்துள்ளன. இவற்றில் 7,500 இராணுவ வீரர்கள் தங்கியுள்ள னர். இக்கப்பல்களில் பல போர் விமானங்களும் உள்ளன. மற்றொரு கப்பல் மூன்று ஏவுகணையுடன் செங்கடலை நோக் கித் தரித்து நிற்கின்றது.

கட்டாரின் தென்மேற்கில் அமைந்துள்ள விமானத்தளம் Al Udeid Air Base மத்திய கிழக்கில் மிகப்பெரிய தளமாகும். இதே கட்டாரில், டோகாவில் ஹமாஸின் அரசியல் அலுவல கம் கடந்த பத்து வருடங்களாக இயங்கிவருகின்றது. அமெ ரிக்கா, கட்டார் ஹமாஸைத் தனது நாட்டிலிருந்து வெளியேற் றும் என்று நம்புகின்றது. அதே சமயம் மற்றைய மத்திய கிழக்கு நாடுகள் கட்டார், இஸ்ரேல் - ஹமாஸ் பிரச்சினைக்கு சமாதானம் செய்யும் என நம்புகின்றன.

கட்டாரின் மத்தியஸ்தத்தில், ஹமாஸ் பணயக் கைதிகளில் ஒரு பகுதியினரை விடுதலை செய்ய அனுமதித்தது. அதே சமயம் மாற்றீடாக இஸ்ரேலின் சிறைகளில் உள்ள பாலஸ்தீ னியரை விடுதலைச் செய்யக்கோரியுள்ளது. இக்கட்டுரை எழு திக்கொண்டிருக்கும் நாள், நவம்பர் 29, 2023, மாலை 3:07 மணி. போர் நிறுத்தம் செய்யப்பட்டு பணயக்கைதிகள் - கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. மொத்தமாக இந்த நேரம் வரை 81 பணயக் கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. மறுபுறத்தில் எகிப்தும் ஹமாசுடன் பேச்சு




வார்த்தை நடத்தியது. ஹமாஸ் கைப்பற்றிய பணயக் கைதிகளில் ரஷ்யா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்களுள் 21 தாய்லாந்து பிரசைகள், ஒரு பிலிப் பைன்ஸ் பிரசை, ஒரு ரஷ்ய பிரசையும் அடங்குவர். கட்டார், அமெரிக்கா, எகிப்து ஆகிய நாடுகள் ஹமாசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுள் ரஷ்யப் பிரசையை உள்ளடக்க வில்லை. எனினும் ஹமாஸ் ரஷ்ய பிரசையை விடுதலை செய் துள்ளது. பணயக்கைதிகளின் பேச்சுவார்த்தையில் கட்டாரின் பங்கே முக்கியமானது. மாற்றீடாக 180 பாலஸ்தீனிய கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட இஸ்ரேலியர்களுள் ஆர்ஜன்ரீனிய இஸ்ரேலியர், அமெரிக்க

இஸ்ரேலியர்களும் அடங்குவர்.

இன்னமும் 159 பணயக்கைதிகளை ஹமாஸ் தன்வசம் வைத்திருக்கின்றது.

இரண்டு மாத காலப் போரில் இது வரை 14,532 (60 நாட்களுள்) பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வெவ்வேறு அறிக்கைகளில் காசாவில் கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 40-50 வீதம் எனக் கூறுகின்றன. ஒக்ரோபர் 28 The Economist சஞ்சிகை இது வரை 23,947 கட்டடங்கள் குண்டு வீச்சால் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கின்றது. இது காசாவில் உள்ள கட்டடங்களின் 9.2 வீதமாகும். இந்த கட்டடங்களில் 225,270 காசா பிரசைகள் வசித்து வந்தனர்.

ஒக்ரோபர் 27 அமெரிக்கப் போர் விமானங்கள் கிழக்கு சிரியாவில் Boukamal mike அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியத்தை அழித்தன. இக்களஞ்சியத்தை ஈரானிய இஸ்லாமியப் புரட்சிப் பாதுகாப்புப் படைகள் (Iranian islamic revolutionary guard corps) பயன்படுத்துவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது. ஒக்ரோபர் ஏழு ஹமாஸின் தாக்குதலின் பின்னர் 32 தடவைகள் சிரியாவிலுள்ள அமெரிக்கப் படைகள் மற்றும் அமெரிக்க அலுவலகங்கள் மீது தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. நவம்பர் 8-ம் திகதி சிரியாவிலுள்ள மற்றொரு இராணுவக் களஞ்சியத்தின் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளது. நவம்பர் 2-ம் திகதியும் அமெரிக்கா, சிரியாவிலுள்ள ஈரான் சார்புப் படைகளின் பயிற்சி முகாம் மீதும் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படை அலுவலகங்கள் மீதும் 29 தடவைகள் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் அமெரிக்கா ஈராக்கிலுள்ள இஸ்லாமியப் படைகள் மீது இதுவரை தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. ஈராக்கில் Asaib Ahlal-Hag, Badr Brigades, Kateb Hezbollah, Hezbollah Brigades (லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா இராணுவத்துடன் தொடர்பற்றவை) போன்ற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் இயங்குகின்றன. அமெரிக்காவிற்கு ஈராக்கில் தளமமைத்துத் தங்குவது கேந்திர முக்கியம். அதனால் அமெரிக்கா தனது படைகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. ஜனவரி 2020-ல் அமெரிக்கா General Qassem Suleimani-ஐ கொலை செய்தது. சுலைமானி ஈரானின் Elite Quad's Force-இன் தலைவர். இவ்வமைப்பை ஈரான் ஆதரிக்கின்றது. ஈராக்கிலுள்ள தீவிரவாத அமைப்புகளையும் ஈரான் ஆதரிக்கின்றது. உதவியும் செய்கின்றது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் Antony J. Blinken ஈராக் பிரதமர் Mohammad Shia`al-Sudani-ஐ இம்மாத முற்பகுதியில் சந்தித்துள்ளார். இவரின் ஊடாக ஈரானுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார். ஈரான் அமெரிக்காவை accomplice to the Zionist crimes in Gaza எனக் கூறியுள்ளது. அத்துடன் காசாவில் இஸ்ரேலின் அத்துமீறிய தாக்குதல்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட பல்லாயிரம் பாலஸ்தீனியர்களின் மரணத்துக்கு அமெரிக்கா காரணம் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈரான் தற்போதைய இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு உலகளவில் எழுந்துள்ள எழுச்சியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் முனைகின்றது. அண்மைக் காலங்களில் ஈரானில் நடைபெற்ற கலாசாரப் புரட்சிப் போராட்டங்களை அமெரிக்காவும் மேற்கு நாடுகளுமே ஊக்குவித்தன என ஈரான் கருதுகின்றது. இப்பொழுது இஸ்ரேலின் தாக்குதல்களை அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஆதரிப்பதனால் அதனைத் தனக்குச் சாதகமாக்க முனைகின்றது.

இஸ்ரேலுக்கு ஆயுதங்களைக் கொடுக்க வேண்டாம் என உலக நாடுகளுக்கு ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து, கட்டாரிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்திலிருந்து இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கக்கூடாது என கட்டார் அமெரிக்க இராணுவத்தை எச்சரித்துள்ளது. மத்திய கிழக்கிலுள்ள மிகப் பெரிய அமெரிக்க இராணுவத் தளங்களில் ஒன்று கட்டார்.

செப்ரெம்பர் ஏழாம் நாள் தாக்குதல் ஆரம்பமாகிய அடுத்த நாளே அமெரிக்கா தனது மிகப்பெரிய ஆயுதக் கப்பலை மத்தியதரைக் கடலுக்கு அனுப்பியது. USS Gerald R. Ford கப்பலானது 75 விமானங்களைத் தாங்கக்கூடியது. ஐயாயிரம் வீரர்கள் தங்கக்கூடிய மிகப்பெரிய கப்பல். புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது. USS Dwight D. Eisenhower என்ற மற்றொரு அமெரிக்கக் கப்பல் நவம்பர் முற்பகுதியில் சுயஸ் கால்வாயைக் கடந்து செங்கடலுக்குள் சென்றது. இக் கப்பலையும் அமெரிக்கா அங்கே நிறுத்திவைத்துள்ளது. இக்கப்பலும் நவீன ஆயுதத் தளங்களைக் கொண்டது. இவற்றை விட Ohio-class நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றும் செங்கடலில் நிற்கின்றது. 154 Tomahawk missiles-ஐக் கொண்டுள்ளது இக்கப்பல். இவை இஸ்ரேல் மீது வேற்றுநாட்டு இராணுவங்கள் தாக்குதல் நடத்தினால் அவற்றை முறியடிக்கும். இராணுவ ஆய்வாளர்களின் கருத்தின் படி இக்கப்பல்கள் மிகப் பெரிய தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய வல்லமை கொண்டுள்ளன.

லெபனானை அண்டிய பிரதேசங்களில் ஹிஸ்புல்லா மேற்கொண்ட தாக்குதல்களால் இஸ்ரேல் பல இழப்புகளைச் சந்தித்துள்ளது. மேற்கின் பிரதான ஊடகங்கள் இச் செய்திகளை இருட்டடிப்புச் செய்கின்றன. ஹிஸ்புல்லாவின் செயலாளர் நாயகம் Hassan Nasrallah செங்கடல் மற்றும் மத்தியதரைக் கடலில் அமெரிக்கா அதிகரித்துள்ள கப்பற் படைகள் பற்றி these do not scare us, nor have they ever scared us என்றார். செங்கடல் சவூதி அரேபியாவிற்கும் ஆபிரிக்கக் கண்டத்துக்குமிடையில் அமைந்துள்ளது. இஸ்ரேல் அமைந்துள்ள Aqaba வளைகுடா செங்கடலில் கலக்கின்றது. மத்தியதரைக் கடல் காசாவின் வடக்கு எல்லையாகவுள்ளது. எனவே இவ்விரு கடல்களிலும் தங்கியுள்ள அமெரிக்கக் கப்பற் படைகள் இப்பகுதியில் அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. இவை இஸ்ரேலுக்கு மேலும் வலுவூட்டுகின்றன. ஹிஸ்புல்லா அமெரிக்கக் கடற்படை தங்களைப் பாதிக்காது என்று கூறினாலும் ஓர் அச்சம் கலந்த நிலைமையிலேயே உள்ளார்கள். ஹிஸ்புல்லா இராணுவம் லெபனானில் நிலை கொண்டுள்ளன. இஸ்ரேலுடனான நேரடிப் போர் என்பது லெபனானையும் பாதிக்கும். லெபனான் உள்ளக அரசியலில் ஹிஸ்புல்லா பற்றிய எதிர்மறைக் கருத்துகளும் உள்ளன. லெபனானில் பல்லாயிரம் பாலஸ்தீனிய அகதிகளும் வாழ்ந்துவருகின்றனர். பெய்ரூட்டில் உள்ளூர் வாசிகளுக்கும், பாலஸ்தீனியருக்குமிடையில் சுமுகமான உறவில்லை. அதிகரித்துள்ள வேலைவாய்ப்பின்மைக்குப் பாலஸ்தீனியரே காரணம் எனப் பெய்ரூட் உள்ளூர் வாசிகள் கருதுகின்றனர். இந்நி



லையில் ஹிஸ்புல்லா இதனையும் கருத்திற்கொள்கின்றது. சுமார் ஒன்றரை லட்சம் படைகளைக் கொண்ட ஹிஸ்புல்லா விற்குப் பாதுகாப்பான இடம் லெபனான். எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு அவசியமேற்பட்டால் மட்டுமே போரில் குதிக்கும் எனத் தெரிகின்றது.

ஈரான் ஆதரவுடன் சிரியா, ஈராக், லெபனான், யேமன் போன்ற நாடுகளில் இயங்கும் தீவிரவாதிகள் அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இதை யிட்டு அமெரிக்கா பல தடவைகள் ஈரானை எச்சரித்துள்ளது. சிரியாவில் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளது. இஸ் ரேல்-ஹமாஸ் போர் முடியும் வரை அமெரிக்கா ஈரான் மீது எந் தவித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடாது எனத் தெரி-கின்றது.

யேமனிலுள்ள Houthi தீவிரவாதிகளும் ஆங்காங்கே தாக்கு தல்களை நடத்தியுள்ளனர். இவர்கள் மீது drones தாக்குதல் களை அமெரிக்கா நடத்தியுள்ளது. Houthi தீவிரவாதிகள் அமெரிக்கப் போர் விமானம் ஒன்றை வீழ்த்தியுள்ளதாகக் கூறியுள்ளனர்.

கடந்த காலங்களில் அமெரிக்கா உலகெங்கும் பொருளாதார மற்றும் இராணுவக் கட்டமைப்புகளைத் தன்னகத்தே கொண் டியங்கி வந்தது. ஐரோப்பிய ஒன்றியம் வளர்ச்சிபெற்று, தனக் கான நாணயத்தை உருவாக்கியபோது, அது அமெரிக்க டொலரின் பலத்தைப் பரிசோதித்தது. ஐக்கிய இராச்சியத்தை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றி ஐரோப்பிய ஒன் றியத்தைப் பலவீனமாக்கியது. யுக்கிரெயின் போரானது ரசி யாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையில் விரிசல் களை ஏற்படுத்தியது. இயற்கை வாயு விநியோகத்தில் சிக் கல்களை ஏற்படுத்தியது. இவ்வாறு, அமெரிக்கா தனது பொருளாதாரப் பலத்துக்கும், இராணுவப் பலத்திற்கும் பாது காப்பின்மையை எங்கு உணருகின்றதோ அங்கெல்லாம் உடைவுகளை ஏற்படுத்தியது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலைப் பலப்படுத்த அங்கும் உடைவு களை ஏற்படுத்தியது. சவூதி அரேபியாவிற்கும் இஸ்ரேலுக்கு மிடையில் நட்பை உருவாக்கியது. எகிப்தை இஸ்ரேலுடன் நெருக்கமாக்கியது. மறுபக்கத்தில் ஈரானைத் தனிமைப்படுத் தியது. இப்படி, மத்திய கிழக்கில் ஒரு குழப்பமான சூழ்நி லையை உருவாக்குவதன் மூலம், மத்திய கிழக்கைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது.

இஸ்ரேலுக்குப் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டிய தேவை உள்ளது. மத்திய கிழக்கிலும், உலகத்திலும் இராணு வப் பலம்பொருந்திய நாடாகக் கருதப்படும், அல்லது கருத வைத்துள்ள இஸ்ரேல் இப்போரில் தோல்வியடைந்தால், இஸ் ரேலின் எதிரிகளுக்கு அது சாதகமாக அமையும். தற்சமயம் நட்புப் பாராட்டும் எகிப்து, இஸ்ரேலிடம் தனது நாட்டின் சில பகுதிகளை இழந்துள்ள சிரியா மற்றும் லெபனான் போன்ற நாடுகளும் இஸ்ரேலின் மீது தாக்குதல்களை மேற்கொள்ள லாம். இஸ்ரேலைச் சுற்றியுள்ள தீவிரவாதிகளும் மேற்குக் கரையிலுள்ள ஆயுத அமைப்புகளும் ஹமாசும் தாக்குதல் களை மேற்கொள்ளலாம். மத்திய கிழக்கு நாடுகளுடனான நட்பையும், வணிகத்தையும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இப்போரின் வெற்றி அவசியம்.

யசீர் அரபாத்தின் காலங்களில் இஸ்ரேலுக்கு ஹமாஸ் அவசி யமாகவிருந்தது. இப்பொழுது ஹமாசை அழிப்பது அல்லது இயங்கமுடியாமல் செய்வதற்குக் காசாவை முற்றாக அழிக்க வேண்டிய தேவை இஸ்ரேலுக்கு வலுவாகவேயுள்ளது.

ஹமாஸ் - இஸ்ரேல் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக் காலத்தில் மேற்குக்கரை அரசியல்வாதிகள் இப்போருக்கு எதிராகவும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் குரலெழுப்ப வேண்டிய அவசியமுள்ளது. இவர்கள் உலகரங்கில் பாலஸ்



தீன ஆதரவை முன்நிறுத்தத் தவறிவருகின்றார்கள். இவர்களது மௌனம் அல்லது தீவிரமின்மை ஆச்சரியப்படுத்துகின்றது.

பல இடங்களில், பாலஸ்தீனிய ஆதரவுக் குரலெழுப்பிய பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஹொலிவூட் நடிகைகள் பல கோடிகள் சம்பளத்தை இழந்துள்ளனர். இதில் ஆச்சரியம் என்னவென்றால், இவர்கள் இருவரும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் குரலெழுப்பியமை தங்களுக்கு மகிழ்ச்சியாகவுள்ளது என்றும், தங்களுக்கு ஏற்பட்ட இழப்பைவிட காசாவில் கொல்லப்பட்ட சிறுவர்களின் இழப்பு ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளனர். Melissa Barrera, Scream 7 படத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் மெக்சிக்கோவைச் சேர்ந்தவர். ஹொலிவூட்டில் பல படங்களில் நடித்துள்ளார். 77 வயதான அமெரிக்க நடிகை Susan Sarandon, நியுயோர்க்கில் தெரிவித்த பாலஸ்தீனிய ஆதரவுக் கருத்துகளுக்காக Dead Man Walking-லிருந்து நீக்கப்பட்டுள்ளார். ஹொலிவூட்டின் மிகப்பெரிய முதலீட்டாளர்கள் யூதர்கள்.

தொடர்ச்சியான பாலஸ்தீன ஆதரவுக் குரல்கள், வைத்தியசாலைகள் தாக்குதல்களுக்கு எதிரான குரல்கள் போன்றவை மேற்குலக அரசுகளைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, இஸ்ரேலிய இராணுவத்தின் நடவடிக்கை பாலஸ்தீன - இஸ்ரேல் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதுவரை சுமார் 5,600 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா அறிக்கைகளும், காசா சுகாதார அமைச்சும் தெரிவிக்கின்றன. காசாவைக் கைப்பற்றிய பின்னர், இஸ்ரேல் ஹமாசின் மீது நடவடிக்கை என்ற பெயரில் பாலஸ்தீனியரைக் கொல்லலாம் என மேற்கு அச்சப்படுகின்றது.

அமெரிக்கா இப்போரை முடிவுக்குக் கொண்டுவந்து, two state solution-ஐ அமுல்படுத்த விரும்புகின்றது. இல்லையேல் மத்திய கிழக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளும் அவ்வப்போது தாக்கப்படலாம்.

ஆர்மேனியா போன்று மூன்றாம், நான்காம் தலைமுறை பாலஸ்தீனியர்களும் தொடர்ந்து போராடுவார்கள். ஆனால் தற்போதைய இஸ்ரேல் அரசு வலதுசாரி அரசு. அது தனது மக்கள் நலனில் அக்கறை கொள்ளவில்லை. பாலஸ்தீனியரை ஒடுக்கி அல்லது வெளியேற்றி முழு மேற்குக்கரை, காசா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றுவதிலேயே குறியாகவுள்ளது. இது இஸ்ரேலுக்கு ஒரு போதும் நிம்மதியையும், சமாதானத்தையும் வழங்காது.

முதலாம் உலகப் போரிலிருந்து இன்றுவரை எந்தவொரு அரசியல் பிரச்சினையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவில்லை. ஒரு சில தேசிய இனப் பிரச்சினைகளுக்குச் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சூடான் பிரிவினை. அமெரிக்கா இதனைச் செய்தமைக்குச் சூடானில் சீனாவின் பொருளாதார உறவுகள் ஒரு காரணம். பேச்சுவார்த்தை என்பதே மேற்கு சாதகமாக இருக்கவேண்டும். அப்படித்தான் இருந்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டு வீசப்பட்டே போர் முடிவுக்கு வந்ததாக அமெரிக்கா இன்றுவரை பிரச்சாரப்படுத்துகின்றது. இந்த எதிர்த்தாக்குதல் முறையை அதிகளவு பாவித்த நாடு அமெரிக்காவாகும். இல்லையேல் மத்திய கிழக்கிலும் உலகெங்கும் இவ்வளவு அமெரிக்கப் படைகள் நிலைகொள்ளத் தேவையில்லை. இஸ்ரேலின் எதிர்த் தாக்குதலால் அழிக்கப்பட்ட மக்கள் தொகையும், வைத்தியசாலைகளும், சிறுவர்களும், கட்டடங்களும் ஹமாசின் எதிர்த்தாக்குதலை நியாயப்படுத்துகின்றன. ஹமாசுக்கு வேறு தேர்வுகள் இல்லை என்று மேற்கின் அரசியல் ஆய்வாளர்களே குறிப்பிட்டுள்ளார்கள். ஹமாசின் முதல்த் தாக்குதலை நியாயப்படுத்துவது கடினம். ஆனாலும் இஸ்ரேலுக்கு இப்பிரச்சினையைத் தீர்க்க எதிர்த் தாக்குதல் ஒரு வழிமுறையல்ல. இஸ்ரேலால் பேச்சுவார்த்தைகள் மூலம் தனக்குச் சாதகமாகவே தீர்வு காணமுடியும். இஸ்ரேலின் எதிர்த்தாக்குதலை அமெரிக்கா ஆதரித்து கப்பற்படையும் அனுப்பியது. இஸ்ரேலின் எதிர்த்தாக்குதலை உலக மக்கள் ஏற்க மறுக்கின்றார்கள். ஆனால் இஸ்ரேலுக்குத் தற்சமயம் வேறுவழியில்லை. போரை நிறுத்தினால் பிரதமரின் பதவி பறிபோகும். பல உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தற்போதைய வலதுசாரி இஸ்ரேல் அரசு சந்திக்கவேண்டிவரும்.

போரின் பின்னர் இஸ்ரேல் மிகப்பெரிய பொருளாதாரப் பிரச்சினையையும் சந்திக்கும். ஆனால் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் தற்சமயம் பிணை எடுப்பார்கள். எவ்வளவு காலத்திற்கு இது தொடரும்?

அமெரிக்க இளைஞர்கள் மத்தியில் தோன்றியுள்ள மாற்றங்கள், உலக நாடுகளில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக எழுந்துள்ள ஆதரவு, மத்திய கிழக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புப் போன்றன நாளை இஸ்ரேலுக்கு எதிராகத் திரும்பலாம். இவற்றை இஸ்ரேல் கருத்திற்கொள்வதாகத் தெரியவில்லை.

## Free Palestine:

உலகெங்கும் பாலஸ்தீனியத்துக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இஸ்ரேலின் தாக்குதல் குறிப்பாகக் காசா வைத்தியசாலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பாலஸ்தீன ஆதரவை அதிகரித்துள்ளது. மேற்கு நாடுகளின் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தொடர்ச்சியாகப் பாலஸ்தீன ஆதரவுக் குரலெழுப்பி வருகின்றனர். Harvard / Harris கருத்துக் கணிப்பின் பிரகாரம் 51 வீதமான அமெரிக்க மாணவர்கள் (18-24 வயதுக்குட்பட்டவர்கள்) பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். உலகெங்கும் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் வார இறுதி நாட்களில் பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களில் பங்குபற்றி வருகின்றனர்.

பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களில் முன்வைக்கப்படும் கோசங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. 'From the river to the Sea' - நதியிலிருந்து கடலுக்கு. நதி என்பது ஜோர்டான் நதியையும், கடல் என்பது மத்தியதரைக் கடலையும் குறிக்கும். மேற்குக் கரையின் ஒரு எல்லை ஜோர்டான் நதி. mike மத்தியதரைக் கடலுக்கு அருகில் அமைந்துள்ளது. இந்தக் கோசமானது இஸ்ரேலின் இருப்பைக் கேள்விக்குறியாக்குகின்றது.

பிரித்தானியத் தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் 'between the river and the sea' என்ற சுலோகத்தை முன்வைத்துப் பேசியமைக்காகக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். 'We will not rest until we have justice. Until all people, Israelis and Palestinians, between the river and the sea, can live in peaceful liberty.' இதுவே அவர் முன்வைத்த பேச்சு.

C.N.N-ல் அரசியல் ஆய்வாளராகவுள்ள Marc Lamont Hill, சி.என்.என்-ல் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவரும் மேற்கூறப்பட்ட சுலோகத்தை முன்வைத்துக் கருத்துத் தெரிவித்தமையே காரணம் என சி.என்.என் நிர்வாகம் தெரிவித்துள்ளது. ரெம்பில் பல்கலைக்கழகப் பேராசிரியரான இவர், 'இக்கோசம் இஸ்ரேலிய மக்களுக்கு எதிரானதல்ல. இஸ்ரேலிய - பாலஸ்தீனச் சமாதானத்தையே வலியுறுத்துகின்றது' என்று கருத்துத் தெரிவித்துள்ளார். யூத ஊடகங்களும், அரசியல்வாதிகளும் இக்கோசம் இஸ்ரேலின் இருப்பைக் கேள்விக்குறியாக்குகின்றது. இஸ்ரேலை வெளியேற்றும் குரல். அங்கிருந்து வெளியேற்றப்பட்டால் எங்கு யூதர்கள் செல்வார்கள் எனக் கேள்வியெழுப்புகின்றன.

1967 போரின் பின்னர் இஸ்ரேலிய ஊடக விளம்பரங்கள், இஸ்ரேலின் இருப்பை நிலைநாட்ட 'பாலஸ்தீனியர்கள் யூதர்களைக் கடலுக்குள் எறிய விரும்புகின்றார்கள்' என விளம்பரப்படுத்தின. ஆனால் மேற்குக்கரை அரசாங்கமோ, ஹமாசின் அரசியல் தலைவர்களோ இவ்வாறான கருத்துகளைத் தெரிவிக்கவில்லை.

2015 ஒக்ரோபர் 21-ம் திகதி நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை, இஸ்ரேலியப் பிரதமர் Benjamin Netanyahu குறிப்பிட்டதாக ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. பாலஸ்தீனியர்கள் Holocaust ஈர்க்கப்பட்டுள்ளார்கள். ஹிட்லருக்குப் பாலஸ்தீனியர்களே ஆலோசனை வழங்கியுள்ளார்கள் எனப் பேசியதாக அச்செய்தி தெரிவிக்கின்றது.

பாலஸ்தீனிய ஆதரவு ஊர்வலத்தில், மிச்சிக்கன் மாநில அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் நதியிலிருந்து கடலுக்கு என்ற சுலோகத்தைத் தாங்கிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவர் அமெரிக்கக் காங்கிரசில் தணிக்கைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். (House Censures Rashida Tlaib, Citing 'River to the Sea' Slogan) இவர் பாலஸ்தீனிய அமெரிக்கர். இவர் முன்னதாக இஸ்ரேலின் இனவெறி மனிதத்தை அழிக்கின்றது என்று தெரிவித்திருந்தார்.

செக் குடியரசு, சுலோகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும், சுலோகங்களைத் தடுக்கச் சட்டமியற்றவும் உள்ளது.

நதியிலிருந்து கடலுக்குச் சுலோகத்தை விட வேறு பல சுலோகங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில இவை.

Silence is Violence, I stand with Palestine, Enough is Enough - Resistance is the only answer, Stand with Palestine - End the occupation now, Save Gaza-Free Palestine.

தொடர்ச்சியான போராட்டங்கள் இஸ்ரேல் மீதான மேற்கின் ஆதரவுக் குரலை அசைத்தபோதும், இங்கிலாந்தில் புகையிரத நிலையங்களில் பாலஸ்தீனியக் கொடிகளைக் கட்டுவது போன்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. தற்சமயம் உடனடித்தேவை போரை நிறுத்தி, காசா மக்களைக் காப்பற்றுவதாகும். அதற்கு இப்போராட்டங்கள், ஊர்வலங்கள் வழிவகுத்தால் அதுவே இப்போராட்டங்களின் வெற்றியாகும். 'பாலஸ்தீனிய விடுதலை' போன்ற சுலோகங்கள் அரசியல்மயப்பட்டவை. அரபாத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் 1993-ல் two state solution-ஐ ஏற்றுக்கொண்டு அங்கு இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள்ளான பாலஸ்தீனிய அரசு இயங்குகின்றது. இன்று பல உலக நாடுகளும் அதுவே தீர்வு எனத் தெரிவிக்கின்றனர்.

'பிறீ பாலஸ்ரைன்' என்ற கோசமானது மேற்குக் கரையிலிருந்தும், காசாவிலிருந்தும் இஸ்ரேல் இராணுவத்தை வெளியேற்று என்பதேயாகும். மற்றையது குடியேற்றத் திட்டங்களை நிறுத்து என்பதாகும். ஆனால் இதனை இஸ்ரேலிய ஊடகங்கள் தங்கள் இருப்புக்கு எதிரானதாகப் பிரச்சாரம் செய்கின்றன.



rathan@thaiveedu.com

# அங்காதிபாதம் 400

## குகைத் திட்டம்

**- பால. சிவகடாட்சம்**

**திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936–ஆம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.**

### வச்சிரக் குகை:

***'பண்டித நூலிற் சொன்ன குகைத்திட்டம் பகரக் கோடி***
***கண்டிடு மிருப்புக் கிட்ட முமிக்கருக் காடைச் சாம்பர்***
***விண்டிடு கழுதை லத்தி வெவ்வேறு பலமி ரண்டாய்***
***நண்டுறு குழி மண்ணீரெண் பலமதாய் நாட்டி யாட்டே'***
***- 315***

மருத்துவ நூலோர் கூறிய குகை அமைப்பு பற்றிக் கூறுவோமானால் இரும்புக் கிட்டம் (இரும்புக் கறள்) மூவெருச்சாம்பர், உமிக்கரு, காடைச் சாம்பர், கழுதை லத்தி ஒவ்வொன்றும் இரண்டு பலம் (70 ப), நண்டு வாழும் சேற்றுமண் பதினாறு பலம் (290 ப) சேர்த்து ஆட்டவேண்டும்.

### பஞ்ச சுண்ணக் குகை:

***'ஆட்டியே கடுக்காய் தன்னை யவித்தநீர்***
***விட்டு மைபோல்***
***மாட்டியே குகையுஞ் சில்லும் வரிசையாய்ப்***
***பிடிப்ப தாகும்***
***தீட்டிய வைந்து சுண்ணக் குகையைக்கேள்***
***சிப்பி யண்டத்***
***தோட்டுட னத்தை நண்டு சங்கைந்து***
***மொக்கக் கூட்டே' - 316***

இதனுடன் கடுக்காய் அவித்த தண்ணீர்விட்டு மைபோல் அரைத்து அதைக்கொண்டு குகையும் சில்லுமூடியும் செய்ய வேண்டும். அடுத்து ஐந்து சுண்ணாம்புக் குகை பற்றிக் கேட்பாயாக. சிப்பி, முட்டைக்கோது, நத்தை, நண்டு, சங்கு என்னும் ஐந்தையும் எடுத்து,

***'ஒக்கவே சமனாய்க் கூட்டி யோதெருக் கம்பா லாட்டி***
***மிக்கவட் டாய்ப்பி டத்தில் வெந்துசுண்ணாம்ப தாகில்***
***குக்குடத் தண்ட வெள்ளை யெருக்கம்பால்***
***கொண்டு மைபோல்***
***சிக்கென வரைத்தெடுத்துக் குகையுடன்***
***சில்லுஞ் செய்யே' - 317***

அவை ஒவ்வொன்றும் சமபங்கு சேர்த்து எருக்கம்பால் விட்டரைத்து புடத்தில் வேகவைத்துச் சுண்ணாம்பாக ஆனதும் கோழிமுட்டை வெள்ளைக்கரு, எருக்கம்பால் விட்டு மை போல் அரைத்து எடுத்துக் குகை அடுப்பும் சில்லு மூடியும் செய்வாயாக.

### ஊத்துமுறை:

***'சில்லுடன் குகையில் வைத்துச் சரக்கெலாஞ்***
***செவ்வே நீற்று***
***மெல்லிய மருந்தி னூத்து முறையினை***
***விளம்பக் கேளாய்***
***சொல்லிய சரக்குக் கெல்லாந் துருத்தியொன்***
***றுருக்கி னத்திற்***
***கொல்லையிற் றுருத்தி ரண்டா முறுதியை***
***யோர்ந்தி டாயே' - 318***

சில்லுடன் கூடிய குகையில் வைத்துச் செம்மையாக நீறாக்கியபின் மருந்து ஊத்தும் முறை பற்றிக் கூறக் கேட்பாயாக. சொல்லப்பட்ட மருந்துச் சரக்கு எல்லாவற்றுக்கும் துருத்தி




ஒன்றாகும். உருக்கவேண்டிய பொருளாயின் பட்டறையில் இரண்டு துருத்தி தேவைப்படும். சரக்கின் வலுவை அறிந்து தீர்மானிக்கவேண்டும்.

***'ஓர்ந்திடாய் சத்து வர்க்கத் தூதிய துருத்தி நாலு***
***சேர்ந்திடிம் முறைய தாகச் செப்பினார் மருந்தின் பாகம்***
***சார்ந்தவைப் பசிதேள் வில்லுத் தையுருக் கினத்திற் காகும்***
***வார்ந்தெடு கால மாகு மாசிசித் திரையு மாமே' - 319***

சத்து வர்க்கத்தின் வலிமையைப் பொறுத்து ஊதவேண்டிய துருத்திகள் நான்காகும். இவ்வாறாக மருந்தின் செய்முறைகளைக் கூறிவைத்தார். உருக்குகின்ற வகைகளுக்கு ஏற்ற மாதங்கள் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை என்பனவாகும். அச்சில் வார்ப்பதற்கு உகந்த மாதங்கள் மாசியும், சித்திரையும் ஆகும்.

## குருமுடிக்குங் காலம்:

***'சித்திரை பங்கு னிக்குஞ் செறிந்திடு வைகா சிக்கும்***
***மெத்திய குருமுடிக்குங் காலமாய் விளம்பு வார்கள்***
***உத்தம மானி வாடி புரட்டையா வணியு மோதும்***
***சுத்தமாஞ் செந்ன ரங்கள் செய்திடத் தொடங்க லாமே' - 320***

குரு முடிப்புக்கு (இரசவாதம் செய்வதற்கு) சித்திரை, பங்குனி, வைகாசி மாதங்கள் சிறந்தவை எனக் கூறுவார்கள். சிறப்பான ஆடி, புரட்டாதி, ஆவணி மாதங்களில் சுத்தமான செந்தூரங்கள் செய்யத் தொடங்கலாம்.

***'தொடங்கிடுங் குளிகை யோடு மாத்திரை சொல்லும் வேனில்***
***தடம்படு குப்பி செய் நீர் தான்பனிக் கால மாகும்***
***வடம்படு மெண்ணெய் நெய்கள் வைப்பது கூதிர் காலம்***
***திடம்படு மருந்தி தெல்லாஞ் செய்திடு கால மாமே' - 321***

மருந்துகள் செய்யுங்காலம் பற்றிக் கூறுவோமாகில் குளிகை, மாத்திரை என்பன செய்வதற்குக் கோடை காலமும் குப்பியில் வைத்தெடுக்கும் நீர் தயாரிப்பதற்குப் பனிக்காலமும் எண்ணெய், நெய் என்பன தயாரிப்பதற்குக் குளிர்காலமும் பொருத்தமானவை.

## பத்தியம்:

***'காலுறு பிணியா ளர்க்குப் பத்தியங் கழறக் கேளாய்***
***நீலுறு கடன்மச் சத்தி னெய்த்தலி சுறாக்கி ளக்கன்***
***சீலுறு முரல்வி லாங்கு திரளிகட் டாமீன் வாளை***
***ஏலுறு மிவைநன் றாகு மியம்புமா மிசத்தைக் கேளே' - 322***

நோயாளர்க்கு உரிய பத்தியம் பற்றிக் கூறுவதைக் கேட்பாயாக. கடல் மீன்களுள் நெய்த்தலி, சுறா, கிளக்கன், முரல், விலாங்கு, திரளி, கட்டாமீன், வாளைமீன் இவை நோயாளருக்குச் சிறந்த பத்தியமாகும். அடுத்து நோயாளர் உண்ணக் கூடிய மாமிசம் பற்றிக் கூறக்கேட்பாய்.

*'கேளுமூர்க் குருவி காடை கிளத்திடு கானாங் கோழி*
*காளுடும் பொடுவெள் ளாடு கவுதாரி கோட்டா னுள்ளான்*
*கோழியின் முட்டை வெள்ளைக் கருவிவை கூட்டலாகும்*
*நீளிய முருங்கை தன்பூப் பிஞ்சிவை நேர்த்தி யாமே' - 323*

ஊர்க்குருவி, காடை, கானாங்கோழி, உடும்பு, வெள்ளாடு, கவுதாரி, கோட்டான், உள்ளான், கோழிமுட்டை வெள்ளைக் கரு இவற்றைப் பத்திய உணவாகக் கொள்ளலாம். இவற்று டன் கூடவே முருங்கைப் பூவும் பிஞ்சும் நேர்த்தியானவை.

*'நேர்த்தியாம் பொன்னாங் காணி நெருஞ்சியின் கீரை பூலா*
*வாய்த்தநா யுருவிக் கீரை வட்டுக்காய் சுண்டை யின் காய்*
*பூத்திடு பூவன் பிஞ்சு புகன்றிடு மத்திப் பிஞ்சு*
*காய்த்திடு முள்ளி லதைக் கனியொடு தூது மாமே' - 324*

இவற்றுடன் பொன்னாங்காணி, நெருஞ்சிக்கீரை, பூலா, நாயுரு விக்கீரை, வட்டுக்காய், சுண்டைக்காய், பூவன்பிஞ்சு, அத்திப் பிஞ்சு, முள்ளிப்பழமுடன் தூதுவளையாமே.

*'தூதுபத் திரிகாய் பிஞ்சு துளிர்பழம் பூந்தோ லாகும்*
*சீதமி லிஞ்சி நெல்லிக் கனிசிறு கீரை சீயா*
*ஓதிடு மிலையி சங்கி லுறு தளிர் நாவ லின்ன*
*வீதமாய்க் கொள்க வென்றே விளம்பினார் வியப்பாய்*
*மேலோர்' - 325*

தூதுவளை இலை, காய், பிஞ்சு, துளிர், பழம், பூந்தோல் மற் றும் இஞ்சி, நெல்லிக்கனி, சிறுகீரை, சீயா இலை, சங்கந்து ளிர், நாவல் இவற்றை அளவோடு உண்க என்று மேலோர்கள் கூறினார்கள்.

## அவபத்தியம்:

*'வியனுறு மருந்துக் கெல்லாம் வேண்டாத*
*பத்தி யங்கேள்*
*பயனுறு மவரை மொச்சை பருத்தபூ*
*சினிக்காய் தும்பை*
*துயரறு கடுகி னோடு வெண்காயந் துவரை தேங்காய்*
*தயிரிள நீர்பிட்டப்பஞ் சமைத்தகூழ் களிவி லக்கே' - 326*

மருந்துண்ணும் நோயாளருக்குப் பத்தியத்தை முறிக்கும் பொருத்தமில்லாத உணவு பற்றிக்கேள். அவரை மொச்சை, பெரும் பூசணிக்காய், தும்பை, கடுகு, வெங்காயம், துவரை, தேங்காய், தயிர், இளநீர், பிட்டு, அப்பம், சமைத்த கூழ், களி என்பவற்றைத் தவிர்க்கவேண்டும்.

*'விலக்கிடு கோழி பன்றி நெய்த்தமீன் வெள்ள ரிக்காய்*
*உலப்பில் செம்மறியாட்டுப்பா லுற்றிடு தயிர்மோர்*
*நெய்தான்*
*கலப்புறு மெண்ணெய் காட்டு மரைமேதி*
*கைப்பினிப்பு*
*நலப்புறு மாத ராசை புளிபுகை நல்ல பீர்க்கே' - 327*

பத்தியகாரர் தவிர்க்கவேண்டியவை கோழி, பன்றி, நெய்மீன், வெள்ளரிக்காய், செம்மறி ஆட்டின் பால் மற்றும் அதிலிருந்து பெறப்படும் தயிர், மோர், நெய், கலப்படம் செய்யப்பட்ட எண் ணெய், காட்டு மரை, எருமை, கைப்பு அல்லது இனிப்பு உடைய பண்டங்கள், பெண்ணாசை புளி புகையிலை மற்றும் பாற்பீர்க்கு,

*'பீர்க்கொடு மாங்காய் பாகல் புறத்தின் முட் பொதிப*
*லாக்காய்*
*ஏர்க்குறு வாழை யின்காய் பயற்றங்கா யெலுமிச்*
*சங்காய்*
*ஆர்க்கமாம் பசுவின் பாலோ டாவினெய்*
*புடோலு ழுந்து*
*வார்க்கனி முலையி னாளே மருந்தினுக் கிவைகள்*
*தள்ளே' - 328*

முற் கூறியவற்றுடன் வாழைக்காய், பயற்றங்காய் எலுமிச்சங் காய், பசுவின்பால், பசுநெய், புடோல், உழுந்து என்பவற்றை யும் கச்சணிந்த மார்பகங்களையுடையவளே! மருந்தெடுக் கும் போது இவற்றைத் தவிர்த்துவிடு.

*'தள்ளிடு சுரைக்காய் சேம்புத் தண்டுடன் கீரை யாகா*
*கொள்ளுடன் முயல்மான் றாராக் கொம்மடி காட்டு*
*மாங்காய்*
*வெள்ளையாங் கத்த ரிக்காய் விளவின் காய்*
*பறங்கிக் காயும்*
*எள்ளள வுட்கொண்டாலு மருந்தெலா மிழப்பர்*
*தாமே' - 329*

சுரைக்காயைத் தவிர்ப்பதுடன் சேப்பங்கிழங்கு கீரை என்பன வும் ஆகாது. கொள்ளு, முயல், மான், தாரா, கொம்மட்டிக் காய், காட்டுமாங்காய் வெள்ளைக் கத்தரிக்காய், விளாங் காய், பூசணிக்காய், (பறங்கிபூசணி) இவற்றுள் எள்ளளவு உட் கொண்டாலும் எடுக்கும் மருந்தின் பலன் எல்லாவற்றையும் இழந்துவிடுவர்.

## புளி உப்புக் கூட்ட:

*'இழப்பலா மருந்தி னுக்குப் புளியுப்பி னியல்பைக்*
*கேளாய்*
*பழப்புளி விதையைப் போக்கிப் பருத்திடு*
*மெட்டி தன்னைத்*
*துளைத்ததி னுள்ளாய் வைத்து மேற்சீராய்க்*
*கொண்டு மூடிக்*
*கிளத்து மண்டலத்தி னப்பாற் கொள் கவுப்*
*பியல்பைக் கேளே' - 330*

மருந்துண்பவர்கள் கறிகளுள் சேர்க்கக்கூடிய புளி, உப்பு என்பவற்றின் தன்மை பற்றிக் கேட்பாயாக. பழப்புளியின் உள்ளே இருக்கும் விதையை எடுத்துவிட்டு, பருமன் உடைய எட்டியில் துளையிட்டு அதனுள்ளே விதை போக்கிய புளியை வைத்து முறையாக மூடிவைத்து நாற்பது நாளின் பின்னர்

அதனை எடுத்து உணவில் சேர்த்துக்கொள்ளலாம். அடுத்து உப்புப் பற்றிக் கேட்பாயாக.

குறிப்பு: எட்டி ஒரு நச்சுமரம். இந்த மரத்தினுள் துளையிட்டுப் புளியை வைக்கும்போது எட்டியின் நஞ்சு புளியில் ஊறிவிடாதா? அப்போது புளியில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன என்பது பற்றியெல்லாம் ஆராய வேண்டியுள்ளது.

***‘உப்பினை யரைத்து நாளொன் றூதியே மேனிச் சாற்றில்***
***தப்பிலா தடுப்பி லேற்றி வறுத்தது தன்னைக் கூட்டச்***
***செப்பினா ரிசங்கு மல்லாற் செறிபசுப் பாலை விட்டு***
***வெப்புறச் சாம மொன்று வெந்திட வறுக்க லாமே’ - 331***

உப்பை அரைத்துக் குப்பைமேனிச் சாற்றில் ஒரு நாள் முழுவதும் ஊறவைத்துப் பின்னர் அதனை முறையாக அடுப்பில் ஏற்றி வறுத்த பின்னர் அதனுடன் சங்கங் குப்பி மற்றும் பசுப் பால் விட்டு ஒரு சாமம் (மூன்று மணி நேரம்) நன்கு வேக வறுத்திடவேண்டும்.

***‘வறுத்திடு முப்பு நீறாய் வந்திடு பருவந் தன்னில்***
***நிறுத்தியே யிறக்கி யாற்றி நேர்த்தியாய் வைத்துக் கொண்டு***
***மறுத்தவிர் கலைசேர் வெள்ளை மதிநிகர் முகமின் னாளே***
***திறுத்தியாய்க் கறிகளுக்குச் சேர்த்து நீ கொடுத்தி டாயே’ - 332***

வறுத்த உப்பு நீறாகி வரும்போது அதனை அடுப்பில் இருந்து இறக்கி ஆறியபின்னர் பக்குவமாய் எடுத்துவைத்துக் கொண்டு, வெண்மதிக்கு ஒப்பான முகத்தை உடையவளே! கறிகளுக்குச் சேர்ப்பாயாக.

***‘கொடுக்கும்பத் தியத்திற் கிந்தப் புளியுப்புக் கூட்ட லாகும்***
***அடுக்குநோ யெல்லா முண்ணு மருந்தினாலகன்று போகும்***
***தடுக்கரும் வேகத் தோடு சாரும்வெம் பிணிக ளெல்லாம்***
***விடுக்குநாட் பலனைச் சொல்வேன் விளங்குமேல லியன் மின்னாளே’ - 333***

நோயாளிக்குக் கொடுக்கும் பத்திய உணவில் இவ்வாறு பெறப்பட்ட புளியையும் உப்பையும் சேர்க்கலாம். தொடர்ந்து வரும் நோயெல்லாம் எடுக்கின்ற மருந்தினால் மாறிப்போகும். மெல்லியல்பு கொண்ட பெண்ணே! அடுத்து தடுக்கமுடியாத வேகத்துடன் வரும் கொடிய நோய்களெல்லாம் தீருகின்ற நாள், பலன் பற்றிக் கூறுவேன்.



Sivakadadcham@thaiveedu.com

வையம்

**வையம் இலக்கிய இதழும்**
**மலையகக் கலைப் பண்பாட்டு மன்றமும்**
இணைந்து நடத்திய

**மலையகம் 200**

**கட்டுரைப்போட்டி முடிவுகள்**

வையம் இலக்கிய மாத இதழும் மலையகக் கலைப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய "மலையகம் 200" கட்டுரைப் போட்டி மிகக் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டது. எனினும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்ட அனைத்துப் போட்டியாளர்களையும் வையம் மனதாரப் பாராட்டுகிறது. போட்டியில் பின்வரும் கட்டுரைகள் பரிசுக்குரியதாகத் தேர்வு செய்யப்பட்டு ஆசிரியர் குழு அறிவித்துள்ளது.



**முதல் பரிசு**
புலம்பெயர் (தமிழகம்) மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளும் தீர்வுகளும்
- எஸ்.இஸ்ட். ஜெய்சிங் (தமிழ்நாடு)



**இரண்டாம் பரிசு**
மலையக மக்களுக்கான கலை இலக்கியமும் இயங்குதளத்தின் தேவைகளும் சவால்களும்
- சிவ. ராஜேந்திரன் (மலையகம்)



**மூன்றாம் பரிசு**
தேசிய அடையாளமும் மலையகத் தமிழர்களின் எதிர்காலமும்
- முருகையா யோவான் (மலையகம்)

பெற்ற மூவரையும் வையம் இலக்கிய இதழ்க் குழுமமும் மலையகக் கலைப் பண்பாட்டு மன்றமும் மனதாரப் பாராட்டுகிறது. பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கும் விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

வாழ்த்துக்களுடன்
வையம் இதழ்க்குழு,
மலையகக் கலைப் பண்பாட்டு மையம்



# டோபமைன்

– நிரேஷ் ரட்ணம்

‘அம்மா எனக்கு யூனிவர்சிட்டி ஒப் ரொறன்ரோ (University of Toronto) கிடைச்சிட்டுது!’ தன் அட்மிஷன் கடிதத்தை கையில் ஏந்திய படி அம்மாவிடம் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள அறைக்குள் யாழ்னி நுழைந்தாள்.

‘உனக்கு கிடைக்கும்னு எனக்கு அப்பவே தெரியும். கமலா அப்பவே சொன்னா, லீலாவோட பையனுக்கு கிடைக்கலனு. அவன் படிப்புல தத்தி, அது வேற கதை. ஆனா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு, உனக்கு அட்மிஷன் கிடைத்தது’ என்று யாழ்னியின் அம்மா உற்சாகத்துடன் பதிலளித்தாள். யாழ்னியின் முகம் மகிழ்ச்சியில் பூரித்தது. சிரிப்பு காது வரை நீண்டது. அவளின் அம்மா தொடர்ந்தாள், நம்ம தாய் நாட்டை விட்டு என்ன அடிச்சு துரத்தும் போது, யுனிவர்சிட்டிக்கு போகணுங்கிற நிறைவேறாத கனவோடு இங்க வந்தேன். நம்ம குடும்பத்துல யாருமே யூனிவர்சிட்டிக்கு போக மாட்டாங்கன்னு நான் நினைச்சேன். நீயாச்சு போனியே’ என்று கூறி சமையலறைக்குச் சென்றாள்.

கனமான சட்டியில், மிதமான தீயில் ரவையை நறுமணம் வரும் வரை நிறம் மாற கவனமாக கிளறினாள். வறுத்த ரவையை ஒரு தட்டில் மாற்றி ஒருபுறம் வைத்துவிட்டு தோழி லீலாவுக்கு தொலைபேசியில் அழைத்தாள். அவள் அழைப்புக்கு பதில் வராத பொழுது அவள் முகம் சுருங்கியது. அதே சட்டியில், அவள் தண்ணீரைக் கொதிக்கவைத்து, அதில் குங்குமப்பூ கலந்த பாலை ஊற்றி துடிப்பான நிறம் வரும் வரை கொதிக்க விட்டாள். இம்முறை அவள் தோழி கமலாவுக்கு தொலைபேசியில் அழைத்தாள்.

‘எப்படி இருக்கடி? கதைச்சு கன நாளாச்சு. யாழ்னியின் அம்மா மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

‘இப்பதான் உனக்கு கால் பண்ண நினைச்சேன். அதுக்குள்ளே நீ அடிச்சிட்ட. நீ எப்படி இருக்க? நான் சுகமா இருக்கி றன்.’ என்று கமலா பதிலளிக்க, யாழ்னியின் அம்மா சூட்டை குறைத்து, வறுத்த ரவையை கொதிக்கும் நீரில் சேர்த்து, கட்டிகளைத் தவிர்க்க தொடர்ந்து கிளறினாள்.

‘நான் கேசரி கிண்டுறன். போன முறை ஒரு விசேடத்திற்குச் செஞ்சாயே...’ ரவை தண்ணீரை உறிஞ்சும் வரை கலக்கிக் கொண்டே புதிர் அளித்தாள்.

கமலா ஆர்வத்துடன், ‘ஆமாம், ரவை கேசரி. அங்க என்ன விசேஷம்?’

யாழ்னியின் அம்மா ஒரு மிருதுவான கலவையை உறுதி செய்ய தொடர்ந்து கிளறி, ‘யாழினிக்கு யூ ஒப் ரி-யில் (U of T) கிடைச்சிட்டது.’ என்று மகிழ்ச்சியான குரலில் பாலில் மலர்ந்த குங்குமப் பூவைப் போல் மகிழ்ச்சி பொங்க, யாழ்னியின் அம்மா பதிலளித்தாள்.

ஓ, அப்ப பலத்த விசேடம் தான். சந்தோஷமடி’ என்று கமலாவின் குரல் தணிய, லீலாவின் அழைப்பும் வந்தது.

‘எனக்கு இன்னொரு கால் வருது, நான் பிறகு எடுக்கிறன்’ என்று லீலாவின் அழைப்பிற்கு எதிர்பார்ப்புடன் மாறினாள். யாழ்னியின் அம்மா ரவை கலவையில் சர்க்கரையைச் சேர்த்து, சர்க்கரை உருகும் வரை கிளறி, கலவையை சிறிது திரவமாக்கினாள்.

‘நீ போன் அடிச்சிருக்க போல இருக்கு, என்ன விஷயம்?’ லீலா கேட்டாள்.

யாழ்னியின் அம்மா படிப்படியாக கலவையில் நெய் சேர்த்து கிளறினாள். நெய் உறிஞ்சப்பட்டு, கலவை மீண்டும் கெட்டியாகத் தொடங்க, அந்த கலவையில் ஏலக்காய் பொடியை சேர்த்து ஒரு சுவையான நறுமணமும் வரும் வரை கிளறினாள்.

‘ஆமாம், நான் கேசரி செய்யுறன். முதல்ல ஏலக்காயையா சர்க்கரையையா போடுறதுன்னு தெரியல அதான் அடிச்சேன்’ யாழ்னியின் அம்மா எதுவும் தெரியாததை போல் கேட்டாள். கேசரி அடிப்பிடிக்காமல் கிளறினாள்.

‘ஏலக்காய் கடைசியா சேர்க்கலாம். ஆனா என்ன விசேஷம்?’ லீலா ஆர்வமாக கேட்டாள்.

ஒரு சிறிய சட்டியில், யாழ்னியின் அம்மா கஜூ மற்றும் முந்திரி வத்தலை நெய்யில் பொன்னிறமாக மாறும் வரை வறுத்தாள்.

‘என் பொண்ணு, யாழ்னிக்கு, யூ ஒப் ரி (U of T) கிடைச்சிருக்கு, அத கொண்டாட வேண்டாமா. இப்ப தான் சின்ன பிள்ளையா பள்ளிக்கூடத்தில சேர்த்தது போல இருக்கு. இப்ப யூனிவர்சிட்டி போகப் போறா. அவ புத்திசாலி. கிடைக்கும்னு தெரியும். இருந்தாலும் லெட்டர கண்ல பார்த்ததும் ஒரு சந்தோஷம் தான்.’ என்று யாழ்னியின் பெருமையை கொண்டாடி

னாள்.

‘என்ர மூத்தவன் அங்க தான் படிக்கிறான்.’ என்று லீலா பெருமிதத்துடன் பதிலளித்தார்.

யாழ்னியின் அம்மாவின் முகம் சற்றுத் தாழ யாழ்னியும் சமையலறைக்குள் நுழைந்தாள். அம்மாவின் முகத்தில் இருந்த உற்சாகம் மறைந்தது. அவசரமாக, யாழ்னியின் அம்மா அழைப்பைத் துண்டித்து, கேசரி கலவையில் வறுத்த கஜூவும் முந்திரியும் விரைவாகச் சேர்த்து, கிளறி முடித்தாள்.

‘அம்மா, நான் எத்தன தடவை சொல்லுறது!, என் செய்திகளை உன் ஃப்ரெண்ட்ஸுக்கு ஷேர் பண்ணாதே! அதோட அவங்க எல்லாம் கண்ணூறு வைக்கிற கேஸ்!’ விரக்தியுடன் யாழ்னி எதிரொலித்தாள்.

## ஸ்கின்னர் பெட்டி:

1930-களில், உளவியலாளர் பி.எஃப். ஸ்கின்னர் ஒரு எலியை கண்காணிக்கப்படும் கூண்டில் வைத்து பரிசோதனை நடத்தினார். அக்கூண்டினுள் ஒரு நெம்புகோல் பொருத்தப்பட்டிருந்தது. எலி நெம்புகோலை அழுத்தினால், அதற்கு உணவு கிடைக்கும். விரைவாக நெம்புகோலை அழுத்தினால், விரைவாக உணவு கிடைக்கும் என்ற குறுக்கு வழியை அது அறிந்தது. அதன் மூலம் நெம்புகோல் அழுத்துவதை அதிகரித்தது. அவர் இந்த கூண்டை ‘ஸ்கின்னர் பெட்டி’ என்று அழைத்தார்.

1950-களின் பிற்பகுதியில், உளவியலாளர்கள் ஜேம்ஸ் ஓல்ட்ஸ் மற்றும் பீட்டர் மில்னர் ஆகியோர் ஸ்கின்னர் பெட்டியை மேம்படுத்தி இன்னும் ஒரு பரிசோதனையை நடத்தினர். இம்முறை எலிகளுக்கு உணவளிக்காமல், அதன் மூளையில் nucleus accumbens, அதாவது மூளையின் இன்ப மையத்தில் ஒரு மின்முனையை பொருத்தி, ஒவ்வொரு முறையும் அந்த எலி நெம்புகோலை அழுத்தும் பொழுது, அதன் மூளையில் மின்முனைகள் மூலம் நேரடியாக இன்ப மையத்தில் தூண்டுதலைப் பெறும்.

அந்த எலி தன் மூளையை தூண்டுவதற்காக நெம்புகோலை 7000 முறை வரை அழுத்தியுள்ளது. எந்த இயற்கை தூண்டுதலை விடவும் இதன் செயல்படுத்தல் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

அந்த பரிசோதனையைத் தொடர்ந்து, அடுத்தடுத்த பரிசோதனைகள் நடத்தப்பட்டன. எலிகள் பசியாக அல்லது தாகமாக இருந்த போதிலும் உணவையோ அல்லது தண்ணீரையோ தேடிச் செல்லாமல் nucleus accumbens-ல் இன்பத்தை தூண்டும் நெம்புகோலை மீண்டும் மீண்டும் அழுத்திக கொண்டே இருந்தது. ஆண் எலிகளோ இனப்பெருக்க காலத்தில் கூட பெண் எலிகளை விட நெம்புகோலையே அணுகியதாம். பெண் எலிகளும் தொடர்ந்து நெம்புகோலை அழுத்துவதற்காக புதிதாகப் பிறந்த தன் தன் எலிக் குஞ்சுகளுக்கு கூட பால் கொடுக்காமல் கைவிட்டதாம். சில எலிகள் ஒரு மணித்தியாலத்திற்கு 2000 தடவை என 24 மணி நேரமும் எந்த வேலையும் செய்யாமல் நெம்புகோலை அழுத்திக் கொண்டே இருந்ததாம். பட்டினியால் அவை இறப்பதைத் தடுக்க அவற்றை எந்திரத்திலிருந்து கழற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த நெம்புகோலை அழுத்துவது அவர்களின் முழு உலகமாக மாறியிருந்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, இவ்வித சோதனைகளின் பதில்: வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் பல அனுபவங்கள், நம் மூளையில் ஒரு சிறப்புப் பகுதியைச் செயல்படுத்துகின்றன. உளவியலாளர்கள் ஜேம்ஸ் ஓல்ட்ஸ் மற்றும் பீட்டர் மில்னர் ஆகியோரின் எலி பரிசோதனையில் தூண்டப்பட்டது போன்ற அதே நிகழ்வு. இது நிகழும்போது, நமது மூளை டோபமைன் என்ற ஹார்மோனை வெளியிடுகிறது, இது பெரும்பாலும் ‘மகிழ்ச்சியின் ஹார்மோன்’ என்று அழைக்கப்படுகிறது.

## டோபமைன்

டோபமைன் ஒரு நரம்பியக்கடத்தி, மூளையில் ஏற்படும் ஓர் இரசாயன உருவாக்கம். இது நமது மூளையின் வெகுமதி மற்றும் இன்ப அமைப்பைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. எளிமையான சொற்களில், டோபமைன் நம் மூளையில் ஒரு தூதுவர் போன்றது, நாம் விரும்பும் விஷயங்களைச் செய்யும்போது நம்மை இன்பமாக உணர வைக்கிறது. இது நமக்கு உற்சாகமாகவும், ஊக்கம் கொடுப்பதாகவும் உணர உதவுகிறது.

## மாற்றம்ச வெகுமதிகள் (Variable Rewards)

உங்கள் மூளை டோபமைனை உருவாக்க பல்வேறு வழிகளில் முயற்சிக்கும். மாற்றம்ச வெகுமதிகள் மூலம் சுரக்கும் டோபமைன் இதில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. மாற்றம்ச வெகுமதிகள் என்பவை நிச்சயமற்ற அல்லது கணிக்க முடியாத ஆச்சரியங்களையும் உள்ளடக்கியது. அவை உற்சாகத்தையும் எதிர்பார்ப்பையும் உருவாக்குதன் மூலம் டோபமைன் வெளியீட்டிற்கு வழிவகுக்கிறது.

நீங்கள் எதிர்பாராத பொழுது, உங்களுக்கு யாரேனும் பரிசு தந்திருக்கிறார்களா? அதை நீங்கள் திறக்கும்போது உங்கள் உடல் முழுவதும் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஓடியிருக்கும். அது டோபமைனின் வேலை. ஒரு தோட்டக்காரருக்கு, தான் வளர்த்த செடிகள் பூப்பதைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வு டோபமைன் வெளியீடே. ஒரு மாணவர், கடினமாகப் படித்து, எதிர்பார்த்த முடிவுகளை அடைந்து, இறுதியாக சான்றிதழைப் பெறும்போது ஒரு மின்சாரம் பாயுமே, அதுவும் டோபமைன். உற்சாகம், மகிழ்ச்சி, சாதனை போன்ற உணர்வுகளை அனுபவிக்கும் பொழுதில், உங்கள் மூளை உங்களுக்கு நன்றி சொல்லும் விதத்தில் டோபமைனை உங்கள் மூளையில் உள்ள சிறப்புப் பகுதியில் கசியச் செய்கிறது.

பயனர் அனுபவ வடிவமைப்பாளர், வடிவமைப்புகளில் மாற்றம்ச வெகுமதிகளைப் பயன்படுத்தி, உங்களை ஆட்டுவிக்க முடியும். இது எப்படி வேலை செய்கிறது?

நீங்கள் Instagram-இன் தேடல் (search) பகுதியில் இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களின் புகைப்படங்களும் செல்வாக்கு செலுத்துபவர்களின் (influencer) இடுகைகளும் உங்களுக்கு உற்சாகமூட்டக் கூடிய பிற சுவாரஸ்யமான உள்ளடக்கங்களும் கலவையாய் காணும் வகையில் தான் நாங்கள் அதன் படிமுறையை வடிவமைத்துள்ளோம். அழகான பயணப் படங்கள், சுவையான உணவுப் படங்கள், உங்கள் ஆர்வத்தைத் தூண்டும் கதை

கள் போன்றவற்றை காண்பீர்கள். கணிக்க முடியாத விஷயங்களும் முடிவிலித் தள்ளுதலும் (Infinite Scroll) உங்களை கட்டி வைத்து உங்கள் மூளையில் மீண்டும் மீண்டும் டோபமைனை வெளியிட வைக்கிறது.

TikTok எடுத்துக் கொள்ளுங்கள், 'உங்களுக்கான பக்கத்தை' 'For you page' பார்த்திருப்பீர்கள். பலவிதமான வீடியோக்களை உங்கள் வழியில் திட்டமிட்டு வடிவமைத்தோம். வேடிக்கையான குறு நகைச்சுவை நாடகங்கள், அருமையான நடனங்கள்-ஒவ்வொரு புதிய வீடியோவும் உங்களுக்கு கொஞ்சம் உச்சகட்டத்தை தருவதுபோல் வடிவமைத்தோம். ஒவ்வொரு தள்ளுதலும் (swipe) டோபமைனை தூண்டும் நோக்கத்துடன் வடிவமைப்பித்தோம்.

ட்விட்டரின் (இப்போது அது X என்று அழைக்கப்படுகிறது) காலவரிசையை எடுங்கள். செய்திகள், கருத்துகள் மற்றும் வேடிக்கையான ட்வீட்களின் கலவையுடன் நாங்கள் அதை வடிவமைத்துள்ளோம். எல்லா உள்ளடக்கங்களிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வழியில் வடிவமைத்துள்ளோம். உங்கள் மூளைக்கு டோபமைன் கொடுத்து ட்வீட்டுடன் ஐக்கியமாக்கிக் கொள்வோம்.

Snapchat-ன் ஸ்ட்ரீக் அம்சத்தை எப்போதாவது முயற்சித்தீர்களா? இது உங்கள் மூளையின் வெகுமதி அமைப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் உங்கள் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதன் மூலம், அதனை செயலில் வைத்திருப்பதைப் போல் வடிவமைத்துள்ளோம். வெகுமதிகள் கிடைக்குமா என்று தெரியாமல் இருப்பதன் மூலம் உங்களை சாகசத்தில் வைத்திருப்போம். இதன் மூலம் நீங்கள் தொடர்ந்து அரட்டை அடிக்க விரும்புவீர்கள்.

## உடனடி மனநிறைவு:

மூளை மகிழ்ச்சியின் ஹார்மோனை வெளியிட நீண்ட கால வெகுமதியாக இருக்க வேண்டியதில்லை. சின்னச் சின்ன மகிழ்ச்சிகள் மூலம் உடனடி மனநிறைவை அடையலாம். சிறு வெகுமதிகளைப் பெறுவதன் மூலமோ, நம் ஆசைகளை விரைவாக நிறைவேற்றுவதன் மூலமோ நாம் உடனடி மனநிறைவை அடைகிறோம்.

டோபமைன் உருவாக்கத்திற்கு நீண்ட கால வெகுமதி வேண்டியதில்லை. உடனடி திருப்தியிலும் டோபமைன் சுரக்கும். உங்களுக்குப் பிடித்த இனிப்பு உண்ணும் பொழுது உடனடியாக கிடைக்கும் இன்பம். மழையிலோ, மூடுபனியிலோ சூடான தேநீர் பருகும் பொழுதிலும் உடனடி திருப்தியை அளிப்பது டோபமைனே. ஒரு சிக்கலை வெற்றிகரமாகத் தீர்க்கும் போது, உங்களுள் ஏற்படும் உணர்ச்சி, டோபமைனுடன் இணைக்கப்பட்டதே. உங்களுக்குப் பிடித்தவர் உங்களை கட்டிப்பிடிக்கும் பொழுது வெளியாகும் உடனடி ஆறுதலுக்கு காரணம் டோபமைனே. டார்க் சாக்லேட் சாப்பிடுவது, புதிர்களைத் தீர்ப்பது, உடலுறவு கொள்வது, சிகரெட்டில் உள்ள நிகோடின், போன்ற சிறிய விஷயங்கள் கூட டோபமைனை வெளியிடும்.

இந்த டிஜிட்டல் உலகில் டோபமைன் வெளியீட்டைத் தூண்டுவதற்கு உடனடி மனநிறைவை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை உங்களால் அடையாளம் காண முடிகிறதா?

நீங்கள் ஆன்லைனில் ஒரு படத்தை போடுகிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். ஒவ்வொரு முறையும் உங்களுக்கு அறிவிப்பு வரும்போது, நீங்கள் நன்றாக உணருவீர்கள். இதற்கு உடனடி டோபமைனே காரணமாகும். யாராவது உங்களுக்கு comment, likes, அல்லது tag கொடுக்கும் பொழுது, உடனடி அறிவிப்புகளை உங்களுக்கு அனுப்புவோம். இந்த அறிவிப்புகள் உங்களை முக்கியமானதாகவும் உற்சாகமாகவும் உணரவைக்கும். இதன் மூலம் நீங்கள் உங்கள் தொலைபேசியை அடிக்கடி எடுத்துப் பார்ப்பீர்கள்.

ஃபேஸ்புக், யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற தளங்களில், நேரலை (live streaming) என்று ஒரு அருமையான விஷயம் உள்ளது. உங்களுக்கும் உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களுக்கும் இடையே உடனடி உரையாடலை வழங்குவதற்காக இதை வடிவமைத்துள்ளோம். நீங்கள் பகிர, அவர்கள் மறு நொடியில் பதில் அளிப்பார்கள். நீங்கள் நேருக்கு நேர் பேசுவது போன்ற வடிவில் வடிவமைத்துள்ளோம்.

வாட்ஸ்அப் மெசஞ்சரைப் பற்றி பேசலாம். நீங்கள் ஒரு செய்தியை அனுப்பும்போது, இரட்டை சரிபார்ப்பு குறியீட்டை காண்பீர்கள். இது உங்களுக்கு என்ன செய்கிறது என்று எப்போதாவது யோசித்தீர்களா? உங்கள் செய்தியை மற்றவர் பார்த்தாரா இல்லையா என்பது உடனடியாக உங்களுக்குத் தெரியும். அப்பொழுது நன்றாக உணர இது ஒரு தந்திர வழி. அந்த சரிபார்ப்பு குறியீட்டை பார்க்கும்போது உங்கள் மூளையில் டோபமைன் சிறிது கசியும். இதை உங்கள் மூளை தகவல் தொடர்பு வெற்றியாகவும் பதிலுக்கான எதிர்பார்ப்பு ஆர்வத்துடனும் தொடர்புபடுத்தும்படி வடிவமைத்துள்ளோம்.

டிண்டர் போன்ற டேட்டிங் அப்பை பற்றி அறிந்திருப்பீர்கள். நீங்கள் வலது புறமாக தள்ளி பொருத்தத்தை பெறும்போது, அழகான இதயம் அல்லது வேடிக்கையான அனிமேஷனைக் காண்பீர்கள். டோபமைனை இங்கே விளையாட வைத்திருக்கிறோம், இது உங்களுக்கு ஒரு நொடி மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் விரைவாகக் கொடுக்கிறது.

## சமூக அங்கீகாரம்:

மனிதர்களான நாம், சமூக ஏற்புகளை அதிகமாக விரும்புவோம், இதுவும் டோபமைன் வெளியீட்டை ஏற்படுத்துகிறது. மகிழ்ச்சியான உணர்வுகளையும் சமூக அங்கீகாரத்தையும், ஒப்புதலையும் குறிக்கும் விதமாகவும் டோபமைன் சுரக்கும்.

- நீங்கள் ஒரு அழகான ஆடையை அணிந்து செல்ல, உங்கள் தோற்றத்தை யாராவது பாராட்டினால், அது டோபமைன் வெளியீட்டைத் தூண்டும்.
- பொது மக்கள் முன்னிலையில் உரை நிகழ்த்துவது அல்லது கச்சேரி நடத்துவது போன்றவற்றில் பெறும் கைதட்டல் கூட டோபமைனை வெளிப்படுத்தும்.
- வேலையில் பதவி உயர்வு பெறுவதும், உங்கள் முயற்சிகளையும் திறமைகளையும் உறுதிப்படுத்துவதும், டோபமைன் வெளியீட்டிற்கு வழிவகுக்கும்.
- அன்புக்குரியவர்கள் உங்கள் மீது தங்கள் பாசத்தை வெளிப்படுத்தும்போதும் டோபமைன் சுரக்கும்.

சமூக அங்கீகாரத்தின் மூலம் நாங்கள் எப்படி உங்களை ஆட்டுவிக்குறோம் என்று பார்க்க முடிகிறதா?

சமூக ஊடகங்களின் ஆரம்பப் புள்ளியே சமூக அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்ஸ்டாகிராமிலோ பேஸ்புக்கிலோ, உங்கள் உற்சாகமான விடுமுறைப் படங்கள், சாதனைகள், நிகழ்வுகள் போன்றவற்றைப் போடுவீர்கள். அது சமூக அங்கீகாரங்களுக்கே. TikTok-ல் ஒரு நடனத்தை நீங்கள் பார்க்கிறீர்கள். நீங்களும் அதே நடனத்தை மீண்டும் குறும் படமாய் ஏத்துவீர்கள். இதுவும் சமூக அங்கீகாரங்களுக்கே.

உங்களுக்கு கேள்வி வரும் பொழுது என்ன செய்வீர்கள்? நீங்கள் Google-ஐக் கேட்பீர்கள். உங்கள் தேடல்கள் நீங்கள் எதிர்பார்த்த முடிவுக்கோ அல்லது உங்களுக்கு பயனுள்ள முடிவுகளுக்கோ இட்டுச் செல்லும் போது நீங்கள் சரிபார்க்கப்பட்டதாக உணர்வீர்கள்.

கூகுள் உங்களை அடிக்கடி திசைதிருப்பும் இடங்களில் Quora ஒன்று. Quora என்பது நீங்கள் எந்த வகையான கேள்விகளையும் வைக்கக்கூடிய இடமாகும். அதற்கு மற்றவர்கள் உங்களுக்குப் பதிலளிப்பார்கள். Quora-ல் உள்ள பெரும்பாலான கேள்விகளை நீங்கள் பார்த்தால், அவை சமூக அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டவையே. ‘நான் இதையும் இதையும் செய்தேன், நான் நல்லவனா? கெட்டவனா? போன்ற ‘நாயகன்’ கேள்விகளே. Quora மட்டுமல்ல, பெரும்பாலான பயனர் மன்றங்கள் சமூக அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டவைகளே.

சமூக ஊடகங்களில் மட்டுமல்ல, மனிதர்கள் தொடர்பு கொள்ளும் அனைத்து இணையப் பக்கங்களிலும் இதை நீங்கள் பார்க்கலாம்.

## இது எல்லாம் எப்படி ஒன்றிணைகிறது?

ஸ்கின்னரின் ஆரம்ப பரிசோதனையானது டோபமைன் வெளியீட்டுடன் தொடர்புடையது. எலிகளின் மூளை உணவுப் பரிசில் நெம்புகோலை அழுத்துவதன் மூலம் அதை மகிழ்ச்சிக்குரிய வழியென அறிந்து, அதை வலுவான பழக்கமாக்கியது.

ஓல்ட்ஸ் மற்றும் மில்னரின் பரிசோதனை எலிகளின் மூளையை நேரடியாகத் தூண்டியது. இதுவே டோபமைனைப் பற்றி நாம் அறிய ஊன்றுகோலாக இருந்தது. உணவு, இனப்பெருக்கம் போன்ற அடிப்படைத் தேவைகளின் இழப்பிலும் எலிகள் நெம்புகோலை அழுத்தின. இது டோபமைன் வெளியீட்டின் சக்திவாய்ந்த விளைவுகளை அடிக்கோடிட்டுக் காட்டியது. மூளையின் இன்ப மையமான நியூக்ளியஸ் அக்யூம்பென்ஸ் தூண்டப்படும்போது சுரக்கும் டோபமைனின் தீவிரத்தை எடுத்துக்காட்டியது.

இந்த நிகழ்வுகளில் மட்டுமில்லாமல் மனிதர்களின் மகிழ்ச்சிகரமான பல செயல்களுக்கு டோபமைனே காரணம். யாழ்னியின் அம்மாவின் செயல்களிலும் இதையே காணலாம்.

### டோபமைன் வெளியீடு:

யாழ்னியின் கூச்சலும் அவள் தாயின் உற்சாகமும் டோபமைனைத் தூண்டியது. யாழ்னிக்கு தன் சாதனை டோபமைனை சுரக்கச் செய்து மகிழ்ச்சியைத் தந்தது. யாழ்னியின் செய்தி அவள் அம்மாவிற்கும் அதையே தந்தது.

### மாற்றம்ச வெகுமதிகள்:

யாழ்னியின் கதை கணிக்கமுடியாத ஆச்சரியங்களின் போது மூளையில் சுரக்கும் டோபமைனை அடிப்படையாகக் கொண்டது. யாழ்னியின் அம்மாவின் நண்பர்களுடனான அரட்டை எதிர்பார்ப்பை அடிப்பபடியாகக் கொண்டது. லீலா பதில் சொல்லாததோ, கமலாவின் ஆர்வமோ அவரின் எதிர்ப்பார்ப்பை தூண்டும் நிலையை உருவாக்கியது. இந்த நிச்சயமற்ற எதிர்பார்ப்பை மூளை ஒரு மாற்றம்ச வெகுமதியாக பாவித்து டொபமைனை சுரக்கிறது.

### உடனடி மனநிறைவு:

யாழ்னியின் அம்மா தன் மகளின் செய்தியை பகிர லீலாவுக்கு அழைக்க, அவளும் அழைப்பை எடுக்காத பொழுதில் அம்மாவின் முகம் சுருங்கியது. கமலா அழைப்பை எடுக்கும் பொழுதிலும் மீண்டும் லீலா எடுக்கும் பொழுதிலும் அவள் முகம் பூரித்தது.

### சமூக அங்கீகாரம்:

தன் மகளின் சாதனையைப் பகிர்வதன் மூலம், யாழ்னியின் அம்மா சமூக அங்கீகாரத்தைத் தேடுகிறாள். யாழ்னியின் சாதனை அவளுக்கு மகிழ்ச்சி கொடுத்தாலும், அதை மற்றவர்களுடன் பகிரும் போதும் ஒப்பிட்டு பார்க்கும் போதும், அவளுக்கு மேன்மேலும் மகிழ்ச்சி கிடைத்தது. இவையனைத்திற்கும் காரணம் டோபமைனே.

### சமூக ஊடக ஒப்பீடு:

எப்படி சோசியல் மீடியாவில் பகிர்ந்து மற்றவர்களோடு ஒப்பீடு செய்கிறோமோ, அதேபோல் யாழ்னியின் அம்மா தன் மகளின் செய்தியை பகிர லீலாவிற்கு அழைத்தாள். லீலாவின் மகன் அதே யுனிவர்சிட்டிக்குப் போகிறான் என்ற செய்தி அவளை ஒப்பீடு செய்ய வைத்தது. பொறாமை போன்ற உணர்வை எழுப்பி, மேலும் கடின உழைப்பிட, அவளின் மூளை டோபமைனை வெளியேற்றியது.

### வெகுமதி எதிர்பார்ப்பு:

கேசரிக்குரிய பொருட்களை முன்கூட்டியே தயார் செய்து வைத்திருந்தாள். பொருட்களின் படிப்படியான சேர்க்கையும், கவனமான செயல்முறையும் உற்சாகத்தை வளர்ப்பதைப் பிரதிபலிக்கிறது. எதிர்பார்த்தபடி உணவு உருவானது, டோபமைன் வெளியீட்டிற்கு வழிவகுத்தது.

பயனர் அனுபவ வடிவமைப்பாளராகிய, நாங்கள், உங்கள் டோபமைன் வெளியீட்டை மேம்படுத்துகின்றேம். மாற்றம்ச வெகுமதிகள், உடனடி மனநிறைவு மற்றும் சமூக அங்கீகாரம் போன்றவற்றை வைத்து நீங்கள் அறியாமலேயே உங்களை ஆட்டுவிக்கிறோம்.



niresh.ratnam@thaiveedu.com



# விடுமுறைக்கால விளக்குகள் மின்செலவைக் கூட்டுமா?

– வேலா சுப்ரமணியம்

கிறிஸ்மஸ் காலம் அண்மிக்கின்றது. இரவானதும் தெரு வெங்கும் அலங்கார விளக்குகள் கண்களைப் பறிக்கின்றன. கடைகளில் வண்ண மின்சார விளக்குகளையும், அலங்கார விளக்குகளையும் வாங்குவதில் மக்கள் அதிக கவனம் செலுத்துவதையும் பார்க்கக் கூடியதாக உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர்கள் பல வண்ண நிறங்களில் தமது வெளிப்புற வீட்டை அலங்கார விளக்குகளால் அலங்கரித்து விட்டார்கள். நாமும் கொஞ்சமாவது செய்யவேண்டுமே என்ற ஆதங்கம் ஒருபுறம், இதற்கான மின்சாரச் செலவு அதிகமாக இருக்கப் போகிறதே என்ற ஏக்கம் மறுபுறம் பலருக்கும். எனவே அதுபற் றிச் சிறிது நோக்குவது பொருத்தமானது.

தற்போது வீட்டுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பாவிக்கக்கூடிய LED Light பல விதமான வடிவங்களில் பாவ னைக்கு வந்துள்ளன. அவற்றைக் கொள்வனவு செய்யும் போது விலை சற்று அதிகமாக இருந்தாலும் காலப்போக்கில் அடையப் போகும் பலன் கணிசமான அளவாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் LED-கள் 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக் கூடியவை மட்டுமன்று, பல மடங்கு காலம் நின்று நீடிக் கக் கூடியவை என்பதையும் மனதிற் கொள்ளவேண்டும். எனவே இவற்றை வாங்குகின்றபோது பெட்டிகளில் LED என்ற அடையாளம் இருக்கின்றதா? என்று பார்த்துக் கொள்வனவு செய்தல் மிக அவசியமானது. வீட்டில் இருக்கும் பழைய கிறிஸ்மஸ் விளக்குகள், வெளிப்புற விளக்குகள் என்பவற் றைப் பாவிப்பதை நிறுத்திப் புதிய LED விளக்குகள் வாங்குவ தில் கூடத் தப்பில்லை. காலப்போக்கில் அது இலாபகரமா கவே இருக்கும்.

நத்தார், புதுவருடக் காலங்களில் மின்சாரப் பாவனை அதிக மாக இருப்பது பொதுவானது, தவிர்க்க முடியாதது. ஆனால் அவற்றுக்கான செலவைக் கட்டுப்படுத்த மேலும் பல வழிகள் உள்ளன. இவற்றுள் Timers முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வெளிப்புற விளக்குகளைப் போடுவதும், நிறுத்துவதும் என் பது சிலருக்குப் பலத்த சுமையாக இருக்கின்றது. பலர் இவற்றை நிறுத்த மறந்து விடுவதால் விடிய விடிய வீட்டைச் சுற்றி வண்ண விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கும். காலையில் வேலைக்குப் போகும்போதே அவற்றைக் கண்டு நிறுத்துவதும் உண்டு. இந்த இடர்ப்பாடுகளில் இருந்து விடு பட வெளிப்புறத்திற்குரிய Timers பாவிப்பது மிகச் சிறந்த வழி. அவை தானாகவே குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு On ஆகிப் பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்கு Off ஆகி விடுவது





எமது சுமையை நீக்க உதவுகின்றன அல்லவா ? இரவு 6 மணியிலிருந்து அடுத்த நாள் காலை நாம் கண்டு நிறுத்தும் வரை விளக்குகள் எரிவதைவிட மாலை 6 மணி தொடக்கம் இரவு 10-11 மணிவரை எரிவது எவ்வளவு இலாபகரமானது என்பதை நான் மேலும் விளக்கமாகச் சொல்லவேண்டியதில்லை.

வெளிப்புறத்திற்கு மட்டுமன்றி வீட்டின் உட்புறப் பாவனைக்கும் பலவித வடிவங்களில் Timers விற்பனை செய்யப்படுகின்றன.

பொதுவாக Timers 24 மணித்தியாலச் சுழற்சி முறையைக் கொண்டவை. தினமும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு On ஆகி குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு Off ஆகும் விதத்தில் இவை தொழிற்படுவதால் வீட்டின் உட்பகுதியிலுள்ள அலங்கார விளக்குகள் மட்டுமன்றி மேசை விளக்குகள், இதர மின்சார உபகரணங்களுக்கும் இவற்றைப் பாவிக்க முடியும்.

## மின்குமிழ்கள்:

வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் மின்விளக்குகளைச் சற்றுக் கூர்ந்து கவனித்து எடுக்கும் சில நடவடிக்கைகள் மூலம் அதிகளவு மின்சாரத்தைச் சேமிக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு சராசரி வீட்டில் ஏறத்தாழ 40 மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றுள் பலவற்றைச் சாதாரண மின் குமிழ்களுக்குப் பதிலாக, LED மாற்றுவதன் மூலம் 85% மின்சாரத்தைச் சேமிக்க முடியும். அதாவது 15 watt சக்தியுள்ள LED குமிழ்கள் 100 watts சக்திக்கிணையான வெளிச்சத்தைத் தரவல்லன. வீட்டில் அதிகளவு பாவனையிலுள்ள மின்குமிழ்கள் யாவற்றையும் LED குமிழ்களுக்கு மாற்றுவது மிக இலாபகரமானது. LED குமிழ்கள் பல்வேறு வடிவங்களிலும், பல்வேறு அளவுகளிலும், மலிவான விலையிலும் பாவனைக்கு வந்துள்ளன. சிறிதளவு முதலீடு செய்தாலும் காலப் போக்கில் அதிகளவு பணத்தைச் சேமிக்க வாய்ப்பு உள்ளது.

## பின்வரும் வகையான LED மின்குமிழ்கள் சந்தைப் படுத்தப்படுகின்றன:

- Pot lights
- Three-way lights
- Ceiling lights and lamps
- Dimmable lights
- Outdoor lights and flood lights

வீடு நிறைய Pot Light-களைப் போட்டுவிட்டு அதற்கு LED குமிழ்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கும் புதிய வீட்டு உரிமையாளருக்கும் விமோசனம் வந்துவிட்டது. அவற்றுக்குரிய LED குமிழ்களும் விற்பனைக்குப் பல்வேறு தரத்தில் வந்துவிட்டன. விலை சற்று அதிகமானாலும் காலப்போக்கில் இலாபகரமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**குறிப்பு:** ஏற்கனவே Dimmer போடப்பட்டிருந்தால் அத்தகைய பொருத்துகளுக்கு CFL/LED குமிழ்களை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றினாலும் Dimmer தொழில்நுட்பத்தைப் பாவிக்காது அவற்றை முழு அளவுக்கும் (Full) விடுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் அத்தகைய Dimmer Switch அல்லது CFL/LED குமிழ்கள் அல்லது பொருத்துகள் எரிந்துவிடும் சந்தர்ப்பம் இருக்கின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.



velasubramaniam@thaiveedu.com

# பிள்ளைகளின் எதிர்காலப் படிப்புச் செலவு

– செந்தூரன் புனிதவேல்

*'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்'*

என்றார், ஐயன் வள்ளுவன் தனது எவது குறட்பாவில். இதுவே அனைத்துப் பெற்றோர்களதும் தணியாத தாகமாகும். அப் படி அவையத்து முந்தி இருக்கச் செய்வதற்கு இன்றியமையா தது நல்ல கல்வியறிவாகும்.

பிள்ளை பல்கலைக்கழகம் புகும்வரை இந்நாட்டில் இலவசக் கல்வியே. கல்லூரிப் படிப்பு முடித்து பல்கலைக்கழகம், தொழிற்கல்வி, தொழில் போன்றவற்றைக் கற்பதற்கு... அதா வது, பிள்ளைகளுடைய கனவையும் பெற்றோர்களுடைய ஆசையையும் நிறைவு செய்ய, பிள்ளைகளின் கல்விக்காக பெரும் தொகைப் பணம் செலவு செய்ய வேண்டிவரும்.

பெரும் தொகையான கனடிய இளையவர்களுக்கு Student Dept எனப்படும் மாணவக் கடன் ஒரு பெரும் தடைக்கல்லாக அமைகின்றது. அவர்களின் முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக் கும் இது தடையாக இருப்பதைக் காணலாம். கனடிய தேசிய அரசாங்கத்திற்கு கல்விக் கடனாக இளையவர்கள் 2020-ம் ஆண்டில் கொடுக்க வேண்டிய தொகை 22.3 பில்லியன் டொலர்களாகும். கனடாவில் கல்விக்கடனாக ஓர் இளையவர் குறைந்தது 28,000 டொலர்கள் கடனாகவும், தொழில் கல்வி தகமை பெறுபவர் 15,000 டொலர் அளவில் கடனாகவும் கொண்டுள்ளதைப் பொதுவாகக் காணக்கூடியதாயுள்ளது. இவற்றை வட்டியும் முதலுமாக மீளச் செலுத்துவதற்கு அண் ணளவாக 15 வருடங்கள் செலவாகின்றன. இளமைக் காலம் முழுவதும் கடன்பட்டார் நெஞ்சமாக கலங்கி, முதுமையில் தான் வாழத் தலைப்படுவார்கள்.

RESP எனப்படும் பட்டயப்படுத்திய கல்விச் சேமிப்புத் திட்டம் ஒரு சிறந்த சேமிப்பு வழியாகும். பிள்ளை 17 வயதாகும் வரை யில் சேமிப்பில் 20 வீதம் அரசாங்கத்தால் மீள்தரப்படும். இத் தொகை வருடம் ஒன்றிற்கு 2500 டொலர்களுக்கு மிஞ்சக் கூடாது. CESG எனும் கனடிய கல்வி சேமிப்புக் கொடுப்பனவு ஒரு குழந்தைக்கு 7,200 டொலர் வரைக் கொடுக்கும்.

எல்லாருடைய மனதிலும் எழும் ஒரு முக்கிய வினா, தற்போது எவ்வளவு பணத்தை பெற்றோர் சேமிக்க வேண்டும் என்பதே. அண்மைக் காலத்தில் CIBC வங்கியால் தயார் செய்யப்பட்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. கனடிய பிரஜைகளுக்கும் நிரந்தர வதிவாளர்களுக்கும் கற்கும் செலவு $2,500-ற்கும் $11,400-ற்கும் இடைப்பட்ட தொகையாகும். இந்த வித்தியா சத்திற்கு காரணம் கற்கும் கல்விக்கூடம் இடம்பெறும் மாகா ணம், கற்கும் பாடத்திட்டம் மற்றும் கல்வி மாற்றங்களைப் பொறுத்து மாறுபடும். நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் கற்கைச் செலவு 0.1% இருந்து 6.5% வரை நாடளாவிய முறையில் மாற்றப்படும்.

அவர்கள் முகம் கொடுக்க வேண்டி இருப்பது கல்விச் செல விற்கு மட்டுமல்ல. அதற்கும் மேலதிகமாக பின்வரும் செலவு களையும் எதிர்கொள்ள வேண்டிவரும்:

- கல்விக்கு வேண்டிய உபகரணங்கள் போன்றவை
- கற்கும் காலத்தின் வதிவிடச் செலவு
- உணவுச் செலவு
- பயணச் செலவுகள்
- ஏனைய செலவுகள்

### பிள்ளைகளின் கற்கும் செலவுக்காக பெற்றோர் செய்யவேண்டியது?

இது ஒரு பன்முகப்பட்ட செலவீனமாகையால் அதற்காக ஒன்- ராறியோ அரசாங்கத்தால் ஒரு கணியத்திட்டத்தை வகுத்துள் ளார்கள். இதற்கு தகுதியான ஒரு நிதி ஆலோசகரின் அறிவு ரையைப் பெறுவது சிறந்ததாகும்.

***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.***

வாழையடி வாழையாக வாழ்க வளமுடன்.



senthuran.p@thaiveedu.com



# நாம் பேரண்டத்தின் தனிக்காட்டு ராஜாக்கள் அல்லர்?

– சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்தப் பூமித் தாயின் பிள்ளைச் செல்வங்களான நாம் பிரபஞ்சத்தில் தனித்து விடப்பட்டவர்களா என்ற கேள்வி அடிக்கடி எம்மை ஊடறுத்துச் செல்வதனை மறுத்துவிட முடியாது. பேரண்டத்தின் எங்கோ ஒரு மூலையில் பல ஒளியாண்டுகளுக்கு அப்பாலோ அல்லது எட்டி விடும் தூரத்திலோ ஜீவராசிகள் வாழ வேண்டும் என்பதனை விஞ்ஞான ஆய்வாளர்கள் தர்க்கரீதியாக நிரூபணம் செய்யும் எத்தனிப்பில் என்றுமில்லா வீரியத்தைக் காண்பித்து வருகின்றனர். இந்தப் பூமிப்பந்து குறிப்பிட்ட காலத்தின் பின்னர் உயிர் வாழ்க்கைக்கு உசிதமானதாகுமா என்ற கேள்வி யதார்த்தமாகி வரும் நிலையில், மானுடர் வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்திய ஆய்வுகளில் முனைப்புக் காட்டி வருகின்றான். வேற்



றுக்கிரக வாசிகள் நிஜமா ? பூமி தவிர்ந்த கோள்களில் உயிர் வாழ முடியுமா ? எனப் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

பிரபஞ்சத்தின் வேறு ஓர் இடத்தில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்ற கேள்வியைத் தற்பொழுது வானியல் ஆய்வாளர்கள் எழுப்புவதில்லை. மாறாக வேற்று கிரகங்களில் வாழும் உயிரினங்களை நாம் எப்பொழுது கண்டுபிடிப்போம் என்ற அடிப்படையில் இந்தத் தேடல் மாற்றம் பெற்றுள்ளது.

எமது ஆயுட்காலத்திற்குள் குறிப்பாக இன்னும் சில ஆண்டுகளில் இந்தப் பேரண்டத்தின் எங்கோ ஒரு மூலையில் வாழும் உயிரினங்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அநேகமான ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

வியாழன் கிரகத்தில் ஆய்வு நடத்திவரும் தலைமை விஞ்ஞானி ஒருவர் வியாழனின் சந்திரன்களில் ஒன்றில் பனிப்படலம் காணப்படுவதாகவும் இவற்றில் உயிரினங்கள் வாழாமல் இருப்பது ஆச்சரியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி (JWST) வேற்றுக்கிரக வாசிகள் அல்லது ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியே காணப்படும் கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வது குறித்த சாதகமான அனுமானங்களைக் கண்டுபிடித்து வருகின்றது.

ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி பிரபஞ்சத்தின் வேறு இடங்களில் உயிரினங்கள் வாழக்கூடிய கோள்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றது. தற்பொழுது நடைமுறையிலுள்ள அல்லது ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான ஆய்வுகள் பிரபஞ்சத்தில் உயிரினங்களைக் கொண்ட வேறு கோள்களைக் கண்டுபிடிப்பதனை அடிடைப்படையாகக் கொண்ட தீவிர முனைப்புகளாகக் காணப்படுகின்றன.

விண்வெளி ஆய்வுத்துறையில் புதிய பரிமாணத்தை இந்த ஆய்வுகள் உருவாக்கியுள்ளதுடன், போட்டித் தன்மையையும் மேம்படுத்தியுள்ளது.

நாம் வாழும் இந்த உலகமானது, எண்ணிலடங்காத நட்சத்திரங்களையும் கோள்களையும் கொண்ட முடிவில்லாத பிரபஞ்சம் ஒன்றின் அங்கமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பேரண்டத்தின் புத்திசாதுரியமுடைய ஒரே உயிரினம் நாமாக மட்டும் இருக்கக்கூடிய வாய்ப்புக் கிடையாது என்பது பல்வேறு ஆய்வாளர்களின் திடமான நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

இந்தப் பிரபஞ்சத்தில் தனித்து வாழ்கின்றோமா அல்லது வேறு உயிரினங்கள் உள்ளனவா என்பது பற்றிக் கண்டறிவதற்கு அல்லது இந்தக் கேள்விக்கு விடைகாணும் தொழில்நுட்பமும் இயலுமையும் தற்பொழுது எம்மிடம் உண்டு என ஸ்கோட்லாந்தின் ராயல் நட்சத்திர ஆய்வாளர் பேராசிரியர் கெதரின் ஹேமன்ஸ் குறிப்பிடுகின்றார்.

### கோல்ட் லாக்ஸ் வலயம்:

விண்வெளித் தொலைகாட்டிகள் மூலம் தொலைதூரத்தில்

காணப்படும் ஞாயிற்றுத் தொகுதிகளின் கோள்கள் அவற்றின் வளிமண்டலங்களைக் கூட ஆய்வுக்கு உட்படுத்த முடியும்.

கடந்த செப்ரெம்பர் மாத ஆரம்ப காலத்தில் அவ்வாறான ஒரு கண்டுபிடிப்புப் பற்றிய ஒளிக்கீற்று பிரவாகித்தது. பூமிக்கு நிகரான சமுத்திரத் தொகுதியில் உண்டாக்கப்படும் வாயுவின் சமிக்ஞையாகக் கருதப்படக் கூடிய ஒரு சமிக்ஞை கண்டறியப்பட்டுள்ளது. இது சுமார் 120 ஒளி ஆண்டுகள் தூரத்தில் அமைந்துள்ள K2-18b எனப்படும் கோளின் வளிமண்டலத்தில் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கோள் கோல்ட் லொக்ஸ் வலயத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோல்ட் லொக்ஸ் வளையம் என்பது பூமிக்கு நிகரான அல்லது உயிர் வாழ்வதற்குப் பொருத்தமான நீர், வளி உள்ளிட்ட பகுதிகளைக் கொண்ட, அம்சங்களைக் கொண்ட கோள்களை உள்ளடக்கிய பகுதியாகும்.

நட்சத்திரத்திலிருந்து மிக அதிக தொலைவிலோ அருகாமையிலோ அன்றிக் குறிப்பிட்ட இடைவெளியில் அதிக உஷ்



ணமோ, அதிக குளிரோ இல்லாத கோள்களை இவ்வாறு அடையாளப்படுத்தி உள்ளனர்.

இந்தப் புதிய ஆய்வுத் தகவல்கள் உண்மையா அல்லது ஏற்கனவே இவை அழிந்துவிட்டனவா என்பது குறித்து இன்னும் ஓராண்டு காலத்தில் துல்லியமாகத் தகவல்களை வெளியிட முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வேற்றுக்கிரக வாசிகள் அல்லது பூமியைத் தவிர்ந்த வேறு கோள்களில் உயிரினங்களின் இருப்புத் தொடர்பிலான ஆய்வுகளில் அடிப்படை மாற்றத்தை இந்தத் தகவல்கள் கொண்டுவரும் எனக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் நட்சத்திரங்கள் தொடர்பான ஆய்வாளர் பேராசிரியர் நிக்கு மதுசுதன் தெரிவிக்கின்றார்.

நாம் ஆய்வு செய்யும் முதலாவது ஞாயிற்று கோள் தொகுதியிலேயே உயிரினங்களுக்கான அடையாளங்களைக் கண்டுபிடித்தால் பேரண்டத்தின் உயிரினங்கள் தொடர்பான பொதுவான விடயங்கள் அதிகளவில் காணப்படும் சாத்தியங்களை அது அதிகரிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.
இன்னும் பதினைந்து ஆண்டுகளில் பிரபஞ்சத்தில் வேறு பகுதிகளில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்பது தொடர்பிலான ஆய்வு முனைப்புகளில் பாரிய மாற்றத்தை உருவாக்கும் எனவும் பல்வேறு துல்லியமான எதிர்வு கூறல்களை வெளியிட முடியும் எனவும் பேராசிரியர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த K2-18b கோளில் உயிரினங்கள் இல்லையெனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வாறே பூமிக்கு நிகரான உயிரினங்கள் வாழக்கூடிய 10 கோள்கள் தொடர்பில் கோல்ட் லொக்ஸ் வலயத்தில் ஆய்வு நடத்த முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பூமிக்கு வெளியே உயிரினங்கள் வாழ்வது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஒரு கட்டமாக மட்டும் இந்த கோள் மண்டல ஆய்வு காணப்படுவதாகவும் பல்வேறு வழிகளில் பல்வேறு பரிணாமங்களில் இந்த ஆய்வுகள் விஞ்ஞானிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைகாட்டி எவ்வளவு பொருந்தியதாக இருந்தாலும் அவற்றிற்கும் சில வரையறைகள் காணப்படுகின்றன. பூமியின் விசாலத்தன்மை மற்றும் சூரியனுக்கும் கோளுக்கும் இடையிலான தூரம் போன்ற ஏதுக்களினால் பூமியில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியப்பாடு காணப்படலாம்.

எனினும் ஜேம்ஸ் வெப் தொலைகாட்டி தற்பொழுது ஆய்வுக்கு உட்படுத்தி வரும் K2-18b கோள் பூமியைக் காட்டிலும் எட்டு மடங்கு விசாலமானது.

இந்தக் கோள் உள்ளடங்கும் ஞாயிற்றுத் தொகுதியின் அருகாமையில் காணப்படும் கோள்கள் தொடர்பில் கண்டறிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. ஏனெனில் குறித்த கோள் மண்டலத்தின் அல்லது ஞாயிற்றுத் தொகுதியின் பிரகாசம் அருகாமையில் இருக்கின்ற கோள்களைப் பற்றி கண்டறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளைத் தவிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நாசா விண்வெளி ஆய்வு மையமானது ஹெபிடபெள் வேர்ல்ட்ஸ் ஒப்சர்வேடரி (Habitable Worlds Observatory - HabEx) எனப்படும் பூமியைத் தவிர வேறு கிரகங்களில் உயிரின வாழ்தன்மை தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும், 2030-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட உள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இது அதி நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஒரு செயல்முறையாக அமையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சூரிய கிரணங்களை ஊடறுத்துச் சென்று கோள்களை கண்டறிந்து அவற்றின் தன்மைகளை ஆய்வுக்கு உட்படுத்தக் கூடிய வகையிலான அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். பூமிக்கு நிகரான வளிமண்டலக் கட்டமைப்பைக் கொண்ட கோள்கள் காணப்படுவதனை உறுதிசெய்து அவற்றைக் கூடுதல் அளவில் ஆய்



வுக்கு உட்படுத்திச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதே தமது இலக்கு என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எமது வளிமண்டலத்திற்கு நிகரான வளிமண்டலங்களைக் கொண்ட கோள்கள் தொடர்பிலான மாதிரிகளை ஒப்பீடு செய்து ஆய்வுக்கு உட்படுத்தும் ஒரு முனைப்பாக இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சிலி பாலைவனத்தில் இருந்து தெளிவாக வானத்தைக் கண்காணிக்கக் கூடிய ஐரோப்பிய சதன் ஒப்சர்வெட்டரி எக்ஸ்ட்ரீம்லி லாட்ஜ் டெலஸ்கோப் (ESO) மிகவும் விசாலமான தொலைகாட்டியாகும். இந்தத் தொலைகாட்டி இந்தத் தசாப்தத்தின் இறுதிப் பகுதியின் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரையில் உருவாக்கப்பட்ட எந்த ஒரு தொலைகாட்டியிலும் இல்லாத அளவிற்கு இந்தத் தொலைகாட்டியின் விட்டம் 39 மீட்டர் அளவிலான அதி விசாலமான ஒரு கருவியாகும்.

இதன் மூலம் கோள்களின் வளிமண்டலங்கள் தொடர்பில் தெளிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

சில நூற்றாண்டுகளாக இரசாயன விஞ்ஞானிகளினால் பயன்படுத்தப்படும் ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கோள்களினால் வெளியிடப்படும் ஒளியைப் பயன்படுத்தி, அவற்றில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களை இனங்காண முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தொலைகாட்டிகள் நம்ப முடியாதளவு சக்தி வாய்ந்தவை என்றால் பிழையாகாது.

பல நூறு ஒளியாண்டுகளுக்கு அப்பால் தொலைவில் நட்சத்திரம் ஒன்றைச் சுற்றிச் சுழலும் கோள்மண்டலம் ஒன்றின் கோளினது வளிமண்டலத்தில், சிறிய ஒளிக்கீற்றினைப் பயன்படுத்தி இந்த ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிலர் தொலைதூரத்தில் இருக்கும் கோள் மண்டலங்களைக் கண்காணித்து ஆய்வுக்கு உட்படுத்துவதுடன், சிலரது ஆய்வுகள் எமது ஞாயிற்றுத் தொகுதிக்கு உட்பட்டதாக மட்டும் வரையறுக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியத்தன்மை கொண்ட பகுதியாக வியாழன் கோளின் பனிப் பாறைகளைக் கொண்ட யுரோப்பாச் சந்திரனைக் குறிப்பிட முடியும். புலிகளின் கோடுகளைப் போல் தென்படும் அழகிய சந்திரனாக யுரோப்பா கருதப்படுகின்றது. யுரோப்பாவில் பனிப்பாறைகளுடன் கடலும் இருப்பதாக அனுமாணிக்கப்படுகின்றது. இதனால் அதிகளவான நீராவி விண்வெளி நோக்கி வெளியிடப்படுகின்றது.

நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் கிலிப்பர் மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகவர் நிறுவனத்தின் ஜுபிட்ட ஐசி மூன்ஸ் எக்ஸ்ப்ளோரார் (ஜுஸ்) ஆகிய இரண்டு திட்டங்களும் 2030-ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட உள்ளதாத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2012-ம் ஆண்டு ஜுஸ் எனப்படும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வேற்றுக்கிரக உயிரினங்கள் தொடர்பிலான ஆய்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. வியாழன் கிரகத்தின் பனிப்பாறைகளைக் கொண்ட நிலவில் உயிர்கள் இல்லை என்றால் அது ஆச்சரியமானது என ஐரோப்பாவின் ஜுஸ் திட்டத்தின் பிரதான விஞ்ஞானி பேராசிரியர் மிஷல் டோகேட் தெரிவிக்கின்றார்.

நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் டிராகன் ஃபிலை என்னும் விண்கலம் சனிக்கிரகத்தின் ஒரு நிலவான டைட்டனில் தரையிறக்கப்பட்டது. டைட்டனில் கார்பன் வாயு செறிந்த இர

சாயனங்களைத் தன்னகத்தே கொண்ட செம்மஞ்சள் நிற மேகங்களிலான ஒரு கோளாகும். நீரைப் போன்று இந்த இர சாயனப் பதார்த்தங்களும் உயிர் வாழ்க்கைக்கு அவசியமான அங்கங்கள் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

செவ்வாய் கிரகத்தில் தற்பொழுது உயிரினங்கள் வாழ முடி யாத சூழ்நிலை காணப்பட்டாலும் அந்தக் கிரகத்தில் நிச்சய மாக வளிமண்டலம், சமுத்திரங்கள் என்பன காணப்பட்டதாக வும், அவை உயிர் வாழ்க்கைக்குத் தேவையானவை எனவும் சில காலங்களுக்கு முன்னர் இங்கே உயிர்கள் வாழ்ந்திருக் கக் கூடும் எனவும் நட்சத்திர உயிரியல் ஆய்வாளர்கள் நம் பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தின் பர்வியரன்ஸ் என்னும் விண்கலம் உயிரினங்கள் வாழக்கூடிய சில மாதிரிகளைத் திரட்டி இருந்தது. 2030-ம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட வுள்ள புதிய ஆய்வுகளில் இந்தப் பாறை வகைகளைப் பூமிக் குக் கொண்டு வந்து ஆய்வுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள் ளது. நீண்ட காலத்திற்கு முன்னதாக இந்தப் பாறை வகைக ளில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான தாதுக்கள் காணப்படு கின்றனவா என்பது குறித்து ஆய்வு முன்னெடுக்கப்பட உள்ளது.

## வேற்றுக்கிரக வாசிகள் நம்மைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றன?

சில ஆய்வாளர்கள் இதனை விஞ்ஞானப் பிரபந்தம் எனவும் இது நடக்க முடியாத விடயம் எனவும் தெரிவிக்கின்றனர். எனி னும் வேற்றுக்கிரகங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வான் அலைகளைக் கண்டறிவதற்காக Search for Extra Terrestrial Intelligence-Seti என்னும் நிறுவனமொன்று சில தசாப்தங்க ளாகவே இந்த வானொலி அலைகள் உள்ளிட்ட வித்தியாச மான தொடர்பாடுகள் குறித்த தகவல்களைத் திரட்டி வரு கின்றது.

இந்தப் பிரபஞ்சம் மிக விசாலமானது என்பதனால் ஒவ்வொரு நிறுவனங்களும் முன்னெடுத்த ஆய்வுகள் எழுமாறான அடிப் படையில் மேற்கொள்ளப்பட்டவை.

எனினும் ஜேம்ஸ் வெப் போன்ற தொலைகாட்டிகளின் ஊடாக வேற்றுக்கிரக வாசிகள் வாழ முடியுமா? வேறு கிரகங்களில் உயிர் வாழ்க்கை சாத்தியமா என்னும் கோணத்தில் அவ்வா றான கோள்களைக் கண்டறியும் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவ்வாறு வேற்றுக்கிரக வாசிகள் வாழக்கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு அவற்றை நோக்கிய ஆய்வுகளைத் தீவி ரப்படுத்துவதற்கு Search for Extra Terrestrial Intelligence-Seti போன்ற நிறுவனங்கள் உதவும் என ஆய்வாளர்கள் தெரி விக்கின்றனர். பொதுவான ஆய்வாக அல்லாது ஒரு குறிப் பிட்ட விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடு கைகளைக் கண்காணித்துப் பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு பகுதி யிலிருந்து எம்முடன் வேறு உயிர்கள் ஊடாட எத்தனிக்கின்ற னவா என்பது குறித்து ஆய்வுகளை நெறிப்படுத்தி மேம்ப டுத்த இந்த முயற்சி உதவும் என ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர்.

தாம் புதிய சக்தியுடன் செயல்படுவதாக பிரபஞ்சத்தில் வேறு உலகங்களில் உயிர் வாழ்க்கை சாத்தியமா என்பது குறித்து ஆய்வு நடத்திவரும் Search for Extra Terrestrial Intelli-gence-Seti நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நத்தாலி கப் ரோல் தெரிவிக்கின்றார்.

தமது நிறுவனத்தின் தொலைகாட்டிகள் நவீனமயப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தொலைதூரத்தில் காணப்படும் கிரகங்க ளில் இருந்து வெளியாகும் வலுவான லேசர் கதிர்க்கற்றைக ளைக் கண்டறிந்து தொடர்பாடல் சமிக்ஞைகளை ஆய்வுக் குட்படுத்தக் கூடிய கருவிகள் தற்பொழுது உண்டு என அவர் தெரிவிக்கின்றார்.

எனினும் தொலைதூரத்தில் இருக்கும் வளிமண்டலங்களிலி ருந்து கிடைக்கப்பெறும் இரசாயனத் தகவல், நிலவிற்கு அரு காமையில் பயணிக்கும் போது கிடைக்கப்பெறும் தகவல்கள், செவ்வாய் கிரகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பாறை போன்றவற்றின் தகவல்கள் உள்ளிட்ட அனைத்தும் ஆய் வுக்கு உட்படுத்தப்படும் எனக் கலாநிதி கப்ரோல் தெரிவிக் கின்றார்.

வேற்று கிரகங்களில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்பது தொடர்பிலான வானொலி அலைகள் ஊடான ஆய்வு சற்றே துல்லியமானது என அவர் தெரிவிக்கின்றார். எனினும் அது எந்தத் தருணத்தில் சரியான முடிவுகளை எட்டித்தரும் என் பது யாராலும் சொல்ல முடியாத விடயம் எனவும் எந்த நேரத் தில் வேண்டுமானாலும் அது நடைபெறலாம் எனவும் குறிப்பி டுகின்றார்.

30 ஆண்டுகளுக்கு முன்னால் கோள் தொகுதிகள் நட்சத்தி ரப் பாதையில் சுற்றிச் சுழன்றதாக எந்தவிதமான சாட்சியங்க ளும் கிடைக்கவில்லை. எமது ஞாயிற்றுத் தொகுதி போன்று வேறு ஒரு சூரியனைச் சுற்றிக் கோள்கள் சுழன்றதாகத் தக வல்கள் கிடையாது. தற்பொழுது முன்னொருபோதும் இல் லாத அளவிற்கு இவ்வாறான ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கோள் தொகுதிகள் பற்றிய தகவல்கள் விஞ்ஞானிகளினால் கண்டறியப்பட்டுள்ளது.

நமது வாழ்நாளில் நம்பமுடியாத ஓர் ஆய்வுக் கண்டுபிடிப்பிற் கான சகல நடவடிக்கைகளும் சரியான முறையில் நிலைப்ப டுத்தப்பட்டுள்ளதாக K2-18b கோள் குறித்த ஆய்வுக்குழு வின் உறுப்பினரான கார்டிப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி சுகஜீத் சர்க்கார் தெரிவிக்கின்றார்.

வேறு கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதாகக் கண்டுபிடித் தால் அது விஞ்ஞானப் புரட்சியாக மாறும் என்பதுடன், மனிதர் இந்தப் பேரண்டத்தை நோக்கும் கோணத்தில் அடிப்படை ரீதி யான மாற்றத்தை உருவாக்கும் என்பதே யதார்த்தமாகும்.



jeyaseelan.s@thaiveedu.com




1983-ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின் போது இலங்கையில் இருந்து பாதிக்கப்பட்ட பல தமிழ் குடும்பங்கள் நாட்டைவிட்டுப் புலம் பெயர்ந்திருந்தன. அப்படிப் புலம் பெயர்ந்தவர்களில், அதிகமானவர்களுக்குக் கனடா நாடு அடைக்கலம் கொடுத்திருந்தது. தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பல ஐரோப்பிய நாடுகளில் சுவிஸ் என்று சுருக்கமாகச் சொல்லப்படுகின்ற சுவிட்சர்லாந்தும் ஒன்றா



கும். தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது, மத்திய ஐரோப்பாவில் இருக்கும் சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் சென்றவர்களுக்குப் பொருளாதார வசதிகள் ஓரளவு சிறப்பாகக் கிடைத்தன என்றே சொல்ல வேண்டும். உலகின் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட இடங்களில் சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச்சும் ஒன்றாக அடங்குகின்றது.

எனது வெளிநாட்டுப் பயணங்களின் போது பல தடவை சுவிட்சர்லாந்து நாட்டு விமான நிலையத்தில் சிலமணி நேரம் தங்கிச் செல்லவேண்டி இருந்தது. அப்பொழுதெல்லாம் பணி நிமிர்த்தம் சென்றதால், வெளியே சென்று இடங்களைப் பார்க்க எனக்கு நேரம் போதுமானதாக இருக்கவில்லை. இம்முறை எப்படியும் சுவிட்சர்லாந்தில் தங்கிச் சில இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு, அதற்கான ஆயத்தங்களுடன் சென்றேன். குறுகிய காலம் மட்டும் தங்குவதானால் கனடாவிலிருந்து செல்லும் கனடியர்கள் விசா எடுக்கத் தேவையில்லை.

ரொறன்ரோவில் இருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து 4000 மைல்களுக்கு அப்பாலுள்ள சுவிஸ் நாட்டிற்கு விமானத்தில் செல்வதற்குச் சுமார் 8 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. சுவிட்சர்லாந்தின் தலைநகரமாக நடைமுறைப்படி பேர்ன் இருந்தாலும், அதிக சுற்றுலாப் பயணிகள் சூரிச் செல்வதையே விரும்புகின்றார்கள். 1948-ம் ஆண்டு கட்டப்பட்ட சூரிச் சர்வதேச விமான நிலையம் தான் சுவிட்சர்லாந்தில் பெரிய விமான நிலையமாகும். இந்த விமான நிலையத்தில் மூன்று ஓடுபாதைகள் இருக்கின்றன. சூரிச் ஏரியின் வடமேற்குப் பகுதியில் சூரிச் நகரம் இருக்கிறது. லிம்மாட், சிஹ்ல் என்ற இரண்டு ஆறுகள் இந்த நகரத்திற்கூடாக ஓடுகின்றன. பொ.ஆ.மு.(கி.மு) 58-ல் உரோமானியர்கள் இப்பகுதியைக் கைப்பற்றித் தமது இராணுவ அரணாகப் பயன்படுத்தினர். உரோமரின் வீழ்ச்சியின் பின் ஜெர்மனியின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1218-ம் ஆண்டு சூரிச் ஒரு ஏகாதிபத்திய சுதந்திர நகரமாக உருவெடுத்தது. 1798-ம் ஆண்டு நெப்போலியனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. சூரிச் 21-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மிகவும் சிறந்த நகரமாக மாறியிருக்கின்றது.

சூரிச்சுக்கு அடுத்ததாகப் பேர்ன் நிர்வாகத் தலைநகரமாகவும், லோசேன் அதன் நீதித்துறை மையமாகவும் செயற்படுகின்றன. ஆரே நதியால் சூழப்பட்ட பேர்ன் 12-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. 15-ம் நூற்றாண்டு வளைகூரை கொண்ட கட்டடங்கள் இங்கே இருக்கின்றன. சுமார் 135,000 மக்கள் இப்போது இங்கு வசிக்கிறார்கள். சூரிச், ஜெனிவா, பாசெல், லோசேன் ஆகிய நகரங்களுக்கு அடுத்த, கூடிய சனத்தொகை கொண்ட நகரமான பேர்ன் இருக்கின்றது.

இங்கேயுள்ள இன்னும் ஒரு நகரமான ஜெனிவா நகரத்தில் தான் உலகப் பிரச்சினைகளின் போது, சமாதான உடன்படிக்கைகள் பல ஏற்படுத்தப்பட்டன. ஈழத்தமிழரின் பிரச்சினைகளும் இங்கேயுள்ள இந்த ஜெனிவா நகரத்தில்தான் ஆண்டுதோறும் பேசப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பெட்டியைத்



ருப்பதால் வருடம் முழுவதும் இத்தகைய விளையாட்டுக ளுக்கு ஏற்றதாக சுவிஸ் இருக்கின்றது.

சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்டமைப்பை சிறிது பார்ப்போம். 1291-ம் ஆண்டு நிறுவப்பட்ட சுவிட்சர்லாந்து, 26 மாநிலங்க ளைக் கொண்ட கூட்டாட்சிக் குடியரசாக 1848-ம் ஆண்டிலி ருந்து இருக்கின்றது. டச்சு, பிரெஞ்சு, இத்தாலி, உரோம மொழிகள் ஆட்சி மொழியாக இருக்கின்றன. சுமார் 9 கோடி மக்கள் இங்கு வாழ்கிறார்கள். 63 வீதமானவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரியா, லீக்கின்ஸ்டைன் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டது. பிரபலமான ஆல்ப்ஸ் மலைத்தொடர் இங்கேதான் இருக்கின்றது. 15,490 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட சுவிஸ், பரப்பளவில் உலகநாடுக ளில் 136-வது இடத்தில் உள்ளது. இங்கே உள்ளூர் நாணய மான சுவிஸ் பிராங் பாவனையில் இருக்கின்றது. இங்கே யுள்ள மக்களில் பெரும்பான்மையான மக்கள் ஜெர்மன் மொழி பேசுபவர்களாக இருக்கின்றார்கள்.

சுவிட்சர்லாந்து அழகிய அல்ப்ஸ் மலைத் தொடர்களைக் கொண்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் நாடாக இருக்கின்றது. விலையுயர்ந்த கைக்கடிகாரங்களுக் கும், சாக்லேட்டுகளுக்கும் இது புகழ் பெற்றது. ஒரு காலத் தில் நேரத்தை அறிந்துகொள்ள கைக்கடிகாரங்களே உதவி யாக இருந்தன. குறிப்பாக வேலைக்குச் செல்லும் உயர்பதவி களில் இருந்தவர்களில் அனேகமானவர்கள் நேரத்தைக் கடைப்பிடிக்கக் கைக்கடிகாரம் அணிந்திருந்தனர். அதன் பின் ஹொங்கொங், சீனா போன்ற நாடுகளில் இருந்து மலி வான கடிகாரங்கள் கிடைத்தன. அதனால் அனேகமானவர் கள் கைக்கடிகாரத்தைப் பாவிக்கத் தொடங்கினார்கள். கைக் கடிகாரங்கள் மலிவாகப் பாவனைக்கு வந்ததால், சூரியனை யும் நட்சத்திரங்களையும் வைத்து இயற்கை முறையில் நேரத் தைக் கணித்த மனிதருக்கு, கைக்கடிகாரத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை வந்தது. செல்போன்கள் பாவனைக்கு வந்த தால் இப்போதுள்ள தலைமுறையினர் கைக்கடிகாரம் அணி வதை அனேகமாகத் தவிர்த்து விட்டனர். ஆனாலும் பல செல்வந்தர்கள் விலையுயர்ந்த சுவிஸ் கைக்கடிகாரங்களை வாங்குவதில் இப்பொழுதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தூக்கிக் கொண்டு பேச்சுவார்த்தை என்று சொல்லி நம்மவர் கள் போய்வருவது இங்கேதான். அதனால் ஜெனிவா நகரமும் பிரபலமானது. இதைவிடப் பல சர்வதேச நிறுவனங்களின் தலைமையகங்கள் இங்கேதான் இருக்கின்றன. சூரிச் மற்றும் ஜெனிவா நகரங்கள் பொருளாதார மையங்களாகவும் இருக் கின்றன. அதனால் உலகின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட நகரங்களாகவும் இவை இருக்கின்றன.

சுற்றுலாப் பயணம் என்று குறிப்பிடும் போது சுவிட்சர்லாந் தில் பல இடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக் கும் ஒவ்வொரு துறையில் ஆர்வமிருக்கலாம். குறிப்பாகக் குளிர்கால விளையாட்டுகளுக்கு மலையேற்றம், பனிச்சறுக் கல், மலைத்தொடரில் கேபிள்காரில் பயணம், குளிர்ந்த நீரில் நீச்சலடிப்பது, படகோட்டம் போன்ற துறைகளுக்கு இங்குள்ள ஆல்ப்ஸ் மலைப்பகுதி மிகவும் விசேடமாக இருக்கின்றது. ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் வருடம் முழுவதும் பனி உறைந்தி

சுவிட்சர்லாந்து பாற்பண்ணை, சொக்லேட், பட்டர், சுவிஸ் இராணுவக் கத்திகள் போன்றவற்றிக்குப் பிரபலமானது. பிரப லமான சாக்லேட் நிறுவனங்களான லிண்ட், டோப்லெரோன், மாக்ஸ் சாக்லேட்டியர் போன்றவை இங்கேதான் ஆரம்பிக்கப் பட்டன. பல்வேறு வகையான ருசிமிக்க பாலாடைக் கட்டிக ளும் சுவிஸில் கிடைக்கின்றது. சுவிஸ் பொண்ட்யூ (Swiss Fondue) என்பது இங்குள்ள விசேட உணவு வகையாகும். இதைவிட வங்கிகள், சுற்றுலாத்துறை போன்றவற்றிக்கும் சுவிஸ் பிரபலமானது. ஓகஸ்ட் மாதம் 1-ஆம் திகதியை அவர் களது தேசிய தினமாகக் கொண்டாடுகின்றார்கள்.

லூசெர்ன் நகரம் பனி மூடிய மலைகளுக்கு நடுவே, லூசெர்ன் என்ற ஏரிக்கரையில் அமைந்திருக்கின்றது. சூரிச் நகரத்திலி ருந்து தொடர்வண்டி மூலம்தான் பயணித்தேன். சுமார் 25 மைல்களுக்கு அப்பாலிருக்கும் லூசெர்ன் நகரத்திற்குத்



தொடர் வண்டியில் செல்ல ஒருமணி நேரம் எடுக்கிறது. தினமும் சராசரி 40 தொடர்வண்டிகள் அங்கிருந்து லூசெர்ன் நகரத்திற்குச் செல்கின்றன.அங்குள்ள தொடர்வண்டிகள் மிகவும் சிறந்த வசதிகளைக் கொண்டவையாக இருப்பதால் பிரயாணக் களைப்பே தெரியாது. லூசெர்ன் நகரம் 14-ம் நூற்றாண்டில் பிரபலமாக இருந்த பழைய நகரமாகும். சுமார் 82,000 மக்கள் இங்கே வசிக்கிறார்கள். ஆல்ட்ஸ்டாட்டை ரியஸ் ஆற்றின் குறுக்கே 1333-ம் ஆண்டு மரத்தால் கட்டப்பட்ட கபெல்ப்ரூக் பாலம் (Kapellbrücke) இந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்றது. இதைச் சப்பல் பாலம் என்றும் சொல்வார்கள். இந்தப் பாலத்தின் கூரையின் உட்பகுதியில் லூசெர்ன் நகரத்தின் வரலாற்றைக் குறிக்கும் அழகான ஓவியங்கள் பல வரையப்பட்டிருக்கின்றன. சுமார் 34 மீட்டர் உயரமான 1300-ம் ஆண்டு கட்டப்பட்ட எண்கோணக் கூரையைக் கொண்ட கோபுரம் ஒன்று பாலத்தின் கரையோரத்தில் தண்ணீருக்கு நடுவே இருக்கின்றது. இயற்கை விரும்பிகள், பனி சூழ்ந்த மலையில் மேகக்கூட்டங்கள் கொஞ்சி விளையாடுவதை ஏரிக் கரையில் உட்கார்ந்து பலமணி நேரம் ரசிக்கமுடியும்.

லூசெர்ன் நகரத்திற்குச் சென்றபோது, லயன் நினைவுச் சின்னத்தை அங்கு பார்க்க முடிந்தது. இதை லூசெர்னின் சிங்கம் என்றும் அழைக்கிறார்கள். இறக்கப் போகும் ஒரு சிங்கத்தின் கடைசி நேரம் போல இந்தச் சிற்பத்தின் வடிவமைப்பைப் பார்த்தபோது புரிந்துகொள்ள முடிந்தது. சிங்கத்தின் முகத்திலே மரணகளை தெரிந்தது. 1792-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது, பாரிஸில் உள்ள ‘டுயிலரீஸ்’ அரண்மனையைப் புரட்சியாளர்கள் தாக்கியபோது, அங்கு அரசருக்குப் பாதுகாப்பாக நின்ற சுவிஸ் காவலர்கள் படுகொலை செய்யப்பட்ட துன்பநிகழ்வை இது நினைவுகூருகின்றது. சுவிட்சர்லாந்தின் லூசெர்னின் நகரத்திலுள்ள ஒரு பாறையில் துக்ககரமான இந்த நினைவுச் சின்னம் புடைப்புச் சித்திர வடிவத்தில் அமைந்திருக்கின்றது. இந்த நினைவுச் சின்னத்தைப் பெர்டெல் தோர்வால்ட்ஸன் என்பவர் வடிவமைத்திருந்தார். அதற்குச் சிற்பக் கலைஞர் லூகாஸ் அஹார்னால் என்பவர் 1821-ம் ஆண்டு உருவ அமைப்புக் கொடுத்திருந்தார். இது சுவிட்சர்லாந்தின் மிகவும் பிரபலமான நினைவுச் சின்னங்களில் ஒன்றாகும், ஆண்டுதோறும் சுமார் 1.4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இதைப் பார்வையிடுகின்றனர். ‘ஒரு வெளிநாட்டு முடியாட்சிக்காகப் போராடித் தம்மை அர்ப்பணிக்கும் சுவிஸ் குடிமக்களைக் கௌரவிக்க ஒரு நினைவுச்சின்னம் கட்டப்பட வேண்டுமா ?’ என்றும் சில அரசியல்வாதிகள் அப்போது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர். இதே பெயரில் பிரட் தோருடைய நாவல் ஒன்றும் 2002-ம் ஆண்டு வெளிவந்திருந்தது.

ஐரோப்பாவில் மாணவிகளை இணைத்துக் கொண்ட முதலாவது பல்கலைக்கழகம் சூரிச் பல்கலைக்கழகம்தான். நோபல் பரிசுபெற்ற பலர் பிறந்த இடம் சூரிச்தான். கோட்பிரைட் கெல்லர், கொன்ராட் பெர்டினாண்ட் மேயர், மக்ஸ் பிரி (Gottfried Keller, Conrad Ferdinand Meyer, and Max Frisch.) போன்ற பிரபல எழுத்தாளர்கள் பிறந்ததும் இங்கேதான்.

சூரிச் நகரத்திலுள்ள தமிழ் மக்களின் ஒன்றுகூடல், நூல் வெளியீடுகள், புத்தகக் கண்காட்சி போன்றவை அவ்வப்போது இங்கே இடம்பெறுகின்றன. காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரி, ஐரோப்பா பழையமாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல் ஒன்றும் சமீபத்தில் 12-11-2023 சிறப்பாக இங்கு இடம் பெற்றிருந்தது.



kuruaravindan@thaiveedu.com



# தற்காலத் தமிழ்த் திரைப்படங்களில் இலக்கியத் தாக்கம்

– ஓவியர் ஜீவா

நமக்கு கிடைத்த கலைகளில் மிகப்புதிது திரைப்படக் கலை. ஒரு நூற்றாண்டை ஒட்டிய வயதுதான் அதற்கு. அதை ஒரு பெரும் வணிகமென்று கருதுகிறவர்கள்தான் அதிகம் என்றாலும், அது ஒரு கலை என்பதை மறுக்கவே முடியாது. இந்த கலைக்குள் வேறு கலைகளான எழுத்து, இசை, நடனம், நடிப்பு எல்லாமே அடக்கம். ஆக, பல கலைகளின் ஒரு தொகுப்பாக இதை கொள்ளலாம். என்றைக்கு திரைப்படங்கள் தோன்றியனவோ, அன்றிலிருந்து அவற்றுக்கு ஒரு கதை அல்ல content தேவைப்பட்டன. இயற்கையாக இலக்கியங்கள் வந்து நின்று துணை புரிந்தன. விவிலியம் மற்றும் கிறிஸ்த்துவ இலக்கியங்கள் பல திரைப்படங்களுக்கு கருப்பொருட்கள் தந்துவரும் காமதேனு. நம் வாழ்வின் மகத்தான திரைப்படங்களாக 'தி டென் கமாண்ட்மெண்ட்ஸ்,' 'பென்-ஹர்,' 'தி பைபிள்' போன்ற திரைப்படங்களுக்கு பைபிள் கருப்பொருளாக திகழ்ந்தது. கடல் பிரிந்து வழிவிடுவது, பரபரப்பான குதிரை ரதப் போட்டி போன்ற திரைப்படங்களுக்கே உரிய அற்புதக்காட்சிகள் பைபிளின் எழுத்துக்களை காட்சி விருந்தாக பெரும் திரையில் விரிந்தன!

ஷேஸ்பியரின் பெரும்பாலான நாடகங்கள், முதல் இரண்டாம் உலகப்போர் குறித்த ஏராளமான எழுத்துக்கள் திரைப்படங்களாக உயிர் பெற்றிருக்கின்றன. ஷேஸ்பியரின் ஒதெல்லோ, டேமிங் ஆப் தி ஷ்ரூ போன்ற படைப்புகள் எல்லாம் இந்திய மொழிகளில் கூட பல்வேறு வடிவங்கள் பெற்றிருக்கின்றன. கான் வித் தி விண்ட், டாக்டர் ஜிவாகோ, லாரன்ஸ் ஆப் அரே-பியா, பாப்பியான், சைலென்ஸ் ஆப் தி லேம்ப் என்று பிரம்மாண்ட படங்கள் தற்கால இலக்கியங்களில் இருந்துதான் எடுத்துக் கையாளப்பட்டன. மார்க் ட்வைன், பெர்னார்ட் ஷா, எர்னஸ்ட் ஹெமிங்வே, இர்விங் வாலஸ், இர்விங் ஸ்டோன், ஜெப்ரி ஆர்ச்சர், ஆலிஸ்டர் மக்ளின், இயான் பிளெமிங், ராபர்ட் லூட்லம் போன்ற பிரபல எழுத்தாளர்களின் புதினங்கள் எல்லாம் திரைப்படங்கள் ஆகி பெரும் வெற்றியை அடைந்திருக்கின்றன. மேலும் 'தி லார்டு ஆப் தி ரிங்ஸ்', 'பாரெஸ்ட் கம்ப்', 'ஷஷாங் ரிடெம்ப்ஷன்', 'தி காட்பாதர்', 'தி கலர் பர்ப்-பிள்' போன்ற அபாரமான திரைப்படங்களும் எழுத்தாளர்கள் ஆல் வடிக்கப்பட்டவையே.

தமிழத் திரையுலகம் ஆரம்பத்தில் இந்திப் படங்களைப் போலவே புராணக் கதைகளில் இருந்து சின்ன சின்ன கதைகளை தேர்ந்தெடுத்து திரைப்படங்கள் ஆக்கியது. ராமாயணமும் மஹாபாரதமும் இன்று வரை ஏராளமான தயாரிப்புகளுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கின்றன. தாதாசாஹிப் பால்கே இயக்கிய முதல் இந்திய திரைப்படமான ராஜா ஹரி சந்திரா ஒரு தூய்மையான புராணக்கதை! தென்னிந்திய சினிமா கிட்டத்தட்ட ஏககாலத்தில் முக்கிய நான்கு மொழிகளில் திரைப்படங்களை தயாரிக்கத் தொடங்கியது. அப்போது சென்னை அனைத்து மொழித் திரைப்படங்களுக்கும் தலைநகரமாக இருந்த காலம். தமிழ் திரையுலகம் 1918-ல் தயாரித்த முதல் மவுனப்படம் 'கீசக வதம்'. நடராஜ முதலியார் இயக்கியது. மஹாபாரதத்திலிருந்து பிய்த்து எடுக்கப்பட்ட ஒரு கதை. முதல் தமிழ் பேசும் படமாக வந்ததோ 'காளிதாஸ்'. பெரும் கவிஞன் காளிதாசனின் வாழ்க்கை குறித்த கற்பனைக் கதைகளிலிருந்து உருவானது.

தமிழ் பேசும் படங்கள் பெரும்பாலும் புராணக் கதைகளிலிருந்தே எடுத்து முதல் பத்து வருடங்களுக்கு மேலாக இயங்கின. சமூகப் படங்கள் உருவாகத் தொடங்கியபோது துப்பறியும் புதினங்களை தேடி எடுத்து படமாக்கினர். காப்பியங்கள் கூட திரைப்படங்களுக்கு கருவாகி இருக்கின்றன. வளையாபதி திரைப்படமாக வந்திருக்கிறது. சிலப்பதிகாரம் இரண்டு முறை 'கண்ணகி' என்ற பெயரிலும் 'பூம்புகார்' என்ற பெயரிலும் இளங்கோவன் மற்றும் கருணாநிதி எழுத்திலும் வெளிவந்திருக்கிறது. ஏ.ஆர். ரங்கராஜு எழுதிய 'சந்திரகாந்தா', எஸ்.எஸ். வாசன் எழுதிய 'சதி லீலாவதி', ஹிந்தி எழுத்தாளர் பிரேம்சந்த் எழுதிய 'சேவாசதனம்', கல்கி எழுதிய 'தியாக பூமி' போன்றவை ஆரம்பகால திரைப்படங்கள். நாற்பதுகளிலேயே, ஷேக்ஸ்பியர் எழுதிய 'மெர்சண்ட் ஆப் வெனிஸ்' நாடகத்திலிருந்து முக்கிய கதாபாத்திரமான வட்டிக் கடைக்காரன் ஷைலக் கதாபாத்திரத்தை முக்கியமாக வைத்து தமிழில் தயாரித்தனர். செருகளத்தூர் சாமா இந்த பாத்திரத்தில் பிரமாதமாக நடித்தார் என்று சொல்வார்கள். இன்னொரு ஷேக்ஸ்பியர் நாடகமான 'டிவெல்த் நைட்' கன்னியின் காதலி என்ற பெயரிலும் வெளிவந்தது. அலெக்ஸ்சாண்டர் டூமா எழுதிய முக்கியமான நாவல்களில் ஒன்றான 'தி மேன் இன் தி அயர்ன் மாஸ்க்' அப்படியே தமிழ்ப்படுத்தப்பட்டு 'பி.யு. சின்னப்பா நடிக்க 'உத்தமபுத்திரன் என்ற பெயரில் வெளியானது. தமிழில் வெளியான இரட்டை வேடப் படங்களில் இதுதான் முதல் திரைப்படம். பின்னர் பல ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் சிவாஜி கணேசனை வைத்து தயாரித்தனர். அவரது இன்னொரு புகழ் பெற்ற புதினமான 'கார்சிகன் பிரதர்ஸ்' இன்னொரு இரட்டை வேடப் படமாக 'அபூர்வ சகோதரர்கள்' என்ற பெயரில் எம்.கே. ராதா நடித்து வெளியானது. வழக்கம்போல இதற்கும் ஒரு மறு ஆக்கம் நிகழ்ந்து 'நீரும் நெருப்பும்' என்று

எம்ஜியார் நடித்து வெளியானது.

விக்டர் ஹியூகோவின் ‘லே மிசரபில்ஸ்’ நாவல், ‘ஏழை படும் பாடு’ என்று அந்தக் காலத்திலேயே வெளிவந்தது. நீண்ட காலம் கழித்து உருமாற்றப்பட்டு ஞான ஒளியாக வெளியானது. புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஆர்.கே. நாராயண். பின்னர் இவரது ‘கைடு’, ‘மால்குடி டேஸ்’ போன்ற புதினங்கள் எல்லாம் படமாகும் முன்னரேயே, நாற்பதுகளில் இவரது பிரபல புதினமான ‘மிஸ்டர் சம்பத்’ தமிழில் ‘மிஸ் மாலினி’ என்ற பெயரில் வெளியானது. பின்னர் பல ஆண்டுகளுக்கு பின் சோ நடிக்க, ‘மிஸ்டர் சம்பத்’ என்ற பெயரிலேயே வெளியானது. வடுவூர் துரைசாமி அய்யங்காரின் ‘திகம்பர சாமியார்’ அதே பெயரில் எம்.என். நம்பியாரின் நடிப்பில் வெளியானது.

இந்த நேரத்தில் தமிழகத்தின் பக்கத்து மாநிலமான கேரளாவின் திரைப்பட உலகம் எப்படி இருந்தது என்றும் பார்க்க வேண்டும். மலையாளத்தின் பெரும்பாலான இலக்கியவாதிகள் திரைத்துறையுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தனர். திரைத்துறையினரும் இலக்கிய வாசனை மிகுந்தவர்கள். தகழி சிவசங்கரன்பிள்ளையின் ‘ரண்டிடங்கழி’ என்ற புதினம் திரைப்படமாக வெளிவந்தது. வணிக திரைப்படங்களை உருவாக்கி வந்த மெர்ரிலாண்ட் சுப்பிரமணியம் இதன் இயக்குநர். பொதுமக்களுக்குள் நடைபெற்ற வர்க்கப் போராட்டத்தையும் ஏழை விவசாயிகளை சுரண்டிய நிலச்சுவான்தார்களையும் முக்கிய அம்சங்களாக வைக்கப்பட்டிருந்த நாவல். தகழியின் இன்னொரு புகழ்பெற்ற நாவல் ‘செம்மீன்’. பரிக்குட்டி, பழனி, கருத்தம்மா போன்ற பாத்திரங்களை அற்புதமான வண்ணப் படப்பிடிப்பில் திரையில் காட்டினார் இயக்குநர் ராமு காரியட். கேரள கடற்புற கிராமத்தில் நடக்கும் கதை, தமிழகத்திலும் நன்கு அறிமுகமானது. தகழியின் இந்த இலக்கியப் படைப்பை திரைக்காக மெருகேற்றியவர்கள் இயக்குநர் ராமு காரியட், இசையமைப்பாளர் சலீல் சவுத்திரி, ஒளிப்பதிவாளர் மார்கஸ் பார்ட்லே, படத்தொகுப்பாளர் பிரபல இந்தி இயக்குநர் ரிஷிகேஷ் முகர்ஜி, பாடலாசிரியர் வயலார் ராமவர்மா, மற்றும் நடிகர்கள் ஷீலா, சத்யன், மது. சிறந்த இந்தியத் திரைப்படத்திற்கான தங்கப் பதக்கத்தையும் இந்தத் திரைப்படம் பெற்றது. தகழியின் பல எழுத்துக்கள் திரைவடிவம் பெற்றுவிட்டன. சமீபத்தில் நான் பார்த்த ‘பயானகம்’ என்ற அருமையான திரைப்படம் கூட தகழி எழுதிய ‘கயறு’ புதினத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறிய பகுதியாகும்.

வைக்கம் முகம்மது பஷீர் எழுதிய ‘பார்கவி நிலையம்’ தொடங்கி ஏராளமான படைப்புக்கள் திரைப்பட வடிவங்கள் எடுத்தன. இவற்றில் ‘பார்கவி நிலையமும்’ ‘பால்யகால சகியும்’ இரண்டு முறை திரைப்பட வடிவங்கள் பெற்றன. அடூர் கோபாலகிருஷ்ணன் பஷீரின் ‘மதிலுகள்’ நாவலை அற்புதமான திரைப்படமாக படைத்தார். மம்முட்டி இளைஞர் பஷீ-ராக நடித்திருந்தார். எம்.டி. வாசுதேவன் நாயரின் பல படைப்புகள் திரைப்படமாகியிருக்கின்றன. அவரே சிலவற்றை இயக்கியிருக்கிறார். அதுவுமில்லாமல் பல திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனங்களை தனியாக எழுதியிருக்கிறார். எதிர்நாயகர்களின் கோணத்திலிருந்து அவர்கள் வாழ்க்கையை அணுகி, புதிய திரைக்கதைகளை படைப்பது அவர் பாணி. இந்த வரிசையில் ஒரு வடக்கன் வீர காதா, வைஷாலி, பெருந்தச்சன், போன்ற திரைப்படங்கள் இடம்பெறும். மலையாள சினிமாவின் இலக்கிய முகம் எம்டி என்று சொன்னால் மிகையில்லை!

தோப்பில் பாசி போன்ற இடதுசார்பு இலக்கியவாதிகள் தங்கள் பங்குக்கு எழுதிய ‘நிங்கள் என்ன கம்யூனிஸ்ட் ஆக்கி’, ‘மூலதனம்’, ‘துலாபாரம்’ போன்ற பல புரட்சிகர சிந்தனையுள்ள நாடகங்கள் KPAC குழுவினரால் மேடை ஏற்றப்



பட்டு, பின்னர் திரைப்படங்களாகவும் உருவெடுத்தன. பத்மராஜனின் பல சிறுகதைகளும் நாவல்களும் அவராலேயும், பரதன் போன்ற இயக்குநர்களாலும் திரையாக்கம் பெற்றன. மதுபால் ஒரு நடிகராகப் புகழ் பெற்றிருந்தாலும் ஒரு



எழுத்தாளராகவும் அறியப்பட்டவர். சில திரைப்படங்களையும் இயக்கியிருக்கிறார். அவற்றில் ஒழிமுறி என்ற திரைப்படம், தமிழின் புகழ் பெற்ற எழுத்தாளர் ஜெயமோகனால் எழுதப்பட்டது.

நவீன எழுத்தாளர்கள் பலருடைய ஆக்கங்கள் திரைப்படமாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கது அடூர் கோபாலகிருஷ்ணன் இயக்கிய 'விதேயன்'. பால் சக்கரியா எழுதிய 'பாஸ்கர பட்டேலரும் எண்டே ஜீவிதமும்' என்ற கதைதான் இது.

ஜெமினி வாசன் ஒரு பத்திரிகையாளராகவும், திரைப்பட தயாரிப்பாளராகவும் இருந்ததால் அவர் நடத்திய ஆனந்த விகடனில் ஒரு தொடர்கதை வெளியாகும்போதே அதை திரைப்படமாகவும் ஆக்கினார். கல்கி எழுதிய 'தியாக பூமி' இது. அதற்கு ஓவியங்களுக்கு பதில் திரைப்பட 'ஸ்டில்'களே இடம் பெற்றது அப்போது ஒரு புதுமையாக பேசப்பட்டது. பின்னர் கல்கியின் பல படைப்புகள் திரைப்படங்கள் ஆயின. 'கள்வனின் காதலி', 'பார்த்திபன் கனவு' போன்ற படங்கள் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஓவியர் மணியம் போன்றவர்கள் பங்கு கொண்டதால் பார்த்திபன் கனவு திரைப்படத்தின் ஆடை அலங்காரங்கள், அரங்க அமைப்புகள் அனைத்தும் அழகுற, கொஞ்சம் யதார்த்தத்திற்கு அருகில் இருந்தன. படத்தின் முக்கிய முடிச்சு படிப்பதில் மட்டுமே ஆர்வம் தரும், திரையில் அல்ல என்று இந்தத் திரைப்படம் நிரூபித்தது!. 'சிவகாமியின் சபதம்' கதையை எம்ஜியார் திரைப்படமாக எடுக்க ஆசைப்பட்டதாகவும், பத்மா சுப்பிரமணியம் அதில் நடிக்க மறுத்ததால் கைவிட்டதாகவும் ஒரு கர்ண பரம்பரை பேச்சுண்டு. கல்கியின் மாஸ்டர்பீஸ் என்று வர்ணிக்கப்படும் 'பொன்னியின் செல்வன்' பல ஆண்டுகளாக பலராலும் திரைப்படமாக்கும் முயற்சியில் இருந்தது. எம்ஜியார் இதற்காக திரைக்கதை எழுத இயக்குநர் மகேந்திரனை பணியமர்த்தினார். பல ஆண்டுகளுக்கு பின், திரைப்படங்கள் தொழில்நுட்ப வளர்ச்சியில் வேகம் கண்டவுடன், மணிரத்னம் இதை படமாக்கினார். இரண்டு பாகங்களாக வெளிவந்தது. வந்த வேகத்திலேயே மக்களால் மறக்கடிக்கப்பட்டது. எழுத்தில் இருந்த சுவை, படத்தில் இல்லை என்று கதையை படித்தவர்கள் சொன்னார்கள்!

மணிக்கொடி எழுத்தாளர் பி.எஸ். ராமையாவும், சாண்டில்யனும், அசோகமித்திரனும் திரையுலகில் பணிபுரிந்தவர்கள். ராமையா 'தன அமராவதி' போன்ற திரைப்படங்களை இயக்கியும் இருக்கிறார். சாண்டில்யன் 'போர்டர் கந்தன்' போன்ற படங்களுக்கு கதை வசனம் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய புதினமான 'ஜீவபூமி' சிவாஜி கணேசன் நடிப்பில் உருவாகி, பாதியில் நின்றுபோனது. புதுமைப்பித்தன் கூட சில காலம் தியாகராஜ பாகவதருக்காக எழுதிக்கொண்டிருந்தாராம். பாவேந்தர் என்று அழைக்கப்பட்ட பாரதிதாசன் கூட சில படங்களுக்கு எழுதியவர். அவர் பாடல்கள் கூட திரைப்படங்களில் பயன்பட்டிருக்கின்றன.

ஜெயகாந்தன் நம் சகாப்தத்தின் மகத்தான எழுத்தாளர். சிறு வயது முதல் கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களுடன் வளர்ந்தவர். அதனாலேயே நிறைய அயல்நாட்டு திரைப்படங்கள் குறித்து அறியவும் பார்க்கவும் சந்தர்ப்பங்கள் அமைத்துக் கொண்டவர். எழுத்தில் கோலோச்சிக்கொண்டிருந்த காலத்தில் 1960-இல் கூட்டுறவு முறையில் உருவான 'பாதை தெரியுது பார்' படத்தில் பணி புரிந்தார். முழுக்க முழுக்க கம்யூனிஸ்ட் தோழர்கள் உருவாக்கிய படம். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கே.சி.எஸ். அருணாச்சலம் போன்றவர்களுடன் ஜெயகாந்தனும் பாடல்கள் எழுதினர். அவர் எழுதிய 'தென்னங்கீற்று ஊஞ்சலிலே' என்ற பாடல் இவற்றில் பெரும் புகழ் பெற்றது. இசையமைத்ததும் ஒரு இயக்கத் தோழரான எம்.பி. ஸ்ரீனிவாசன்! இந்த பிள்ளையார் சுழி ஜெயகாந்தனை திரைப்பட இயக்கம் என்ற துறைக்கு இழுத்தது! அவருடைய புகழ் பெற்ற நாவலான 'உன்னைப்போல் ஒருவன்' 1965-ல் திரைக்கு வந்தது. முற்றிலும் புதுமுகங்கள் நடித்த, யதார்த்த முறையில் உருவாக்கப்பட்ட இந்தத் திரைப்படம் விருதுகளையும் வென்றது. 'யாருக்காக அழுதான்' என்ற இன்னொரு திரைப்படத்தையும் இயக்கிவிட்டு, நிறுத்திக்கொண்டார். ஆனால் அவரது எழுத்துப் படைப்புகள் பின்னர் திரைப்படங்களாக வெளிவரத் தொடங்கின.

பாதை தெரியுது பார் படத்தில் கதாநாயகனாக நடித்தவரும், ஜெயகாந்தனின் உதவி இயக்குநராக இருந்தவரும் ஆன கே. விஜயன் முதன் முதலாக இயக்கிய திரைப்படம் 'காவல் தெய்வம்'. ஜெயகாந்தனின் குறு நாவலை அடிப்படையாக வைத்து உருவானது. ஜனரஞ்சகமான குடும்பப் படங்களை எடுத்து புகழ் பெற்ற இயக்குநர் பீம்சிங் தன் பாணியை மாற்றி வேறு ஸ்டைலில் இயக்கிய திரைப்படம் ஜெயகாந்தன் எழுதிய 'சில நேரங்களில் சில மனிதர்கள்'. அதைத்தொடர்ந்து 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'கருணை உள்ளம்' என்று சில திரைப்படங்கள் தொடர்ந்தன. பின்னர் பீம்சிங்கின் மகன் எடிட்டர் லெனின் இயக்குநர் ஆன பின்பு ஜெயகாந்தனின் 'ஊருக்கு நூறு பேர்' நாவலை திரைப் படமாக எடுத்தார்.

இன்னொரு புகழ் பெற்ற எழுத்தாளர் அகிலன். இவருடைய 'பாவை விளக்கு' கதையை இயக்குநர் சோமு படமாக்கினார். திரைக்கதை வசனம் எழுதியவர் ஏ.பி. நாகராஜன். அவரே அகிலனின் இன்னொரு கதையை 'குலமகள் ராதை' என்ற பெயரில் இயக்கினார். எம்ஜியாரின் கடைசிப் படமான 'மதுரையை மீட்டிய சுந்தரபாண்டியன்' படத்தின் கதையும் அகிலனுடையதுதான். ஏ.பி. நாகராஜன் விகடனில் வெளியான 'தில்லானா மோகனாம்பாள்' கதையை திரைப்படமாக எடுத்தார். இது அவரது சாதனைப் பட்டியலில் ஒரு மணிமகுடம். அனைத்து தரப்பினரையும் கவர்ந்த ஒரு அற்புதத் திரைப்படமாக மலர்ந்தது. இதை எழுதிய கொத்தமங்கலம் சுப்புவின் இன்னொரு கதையான 'ராவ் பகதூர் சிங்காரம்' 'விளையாட்டுப் பிள்ளை' என்ற பெயரில் திரைக்கு வந்து படுதோல்வி கண்டது!

நாற்பதுகளின் இறுதி தொடங்கி திராவிட எழுத்தாளர்களின் பிரவேசம், தமிழகத்தை உலுக்கியது! அதுவரை திரைப்படங்களின் வசனநடை புராண பாணியில், நாதா சுவாமி என்றும், சில படங்களில் பிராமண பாணி தமிழிலும் வந்துகொண்டிருந்தது. வசனகர்த்தா இளங்கோவன் வருகை இந்த பாணிகளை புரட்டிப்போட்டது. பின்னர் வந்த அண்ணாதுரை, கருணாநிதி போன்றவர்கள், மொழியை அழகுபடுத்தி, அலங்காரமும் அடுக்கு மொழியும் சேர்த்து வழங்கினார்கள். அதை சிவாஜி கணேசன் போன்றவர்கள் பேசும்போது மக்களை மிகவும் கவர்ந்து, அந்த பாணிக்கு பெரும்பாலோர் ரசிகர்கள் ஆகிவிட்டனர். மக்கள் ஆதரவு அவர்களை தமிழகத்தில் அசைக்க முடியாத சக்தி ஆக்கியது. திராவிட திரைப்பட எழுத்தாளர்களில் சி.பி. சிற்றரசு, ஆசைத்தம்பி, முரசொலி மாறன், கண்ணதாசன், என்று தொடங்கி காளிமுத்து, வலம்புரி ஜான் வரை புகழோடு இருந்தனர்.

மகரிஷி, சுஜாதா, மணியன், போன்ற வார இதழ் எழுத்தாளர்களின் படைப்புகள் ஒரு காலகட்டத்தில் நிறைய வெளியாயின. லட்சுமி, சிவசங்கரி, அனுராதா ரமணன் போன்றவர்களும் இதில் அடக்கம்.

இயக்குநர் மகேந்திரனின் இயக்குநர் அவதாரம் தமிழ்த் திரையுலகில் பல மாற்றங்களை கொண்டு வந்தது என்று சொன்னால் மிகையல்ல! பிரபல கதை வசனகர்த்தாவாக திகழ்ந்த அவர், தன் முதல் படத்துக்காக தானே கதை எழுதவில்லை. வேறு கதைகளை நாடிச்சென்றார். உமாசந்திரனின் ஒரு கதையை தேர்ந்தெடுத்து படமாக்கத் துவங்கினார். 'முள்ளும் மலரும்' திரைக்கதை மூலக்கதையிலிருந்து விலகித்தான் இருந்தது. மகேந்திரன் வெகு சிறப்பாக இதை உருவாக்கினார். அடுத்த திரைப்படத்திற்கு அவர் தேர்ந்தெடுத்தது புதுமைப்பித்தனை. 'சிற்றன்னை' என்ற சிறுகதையை, முற்றிலும் வேறு விதமான டிரீட்மென்ட் தந்து, ஒரு அற்புதமான காவியத்தை உருவாக்கினார். மகேந்திரன் படைப்புகளில் உச்சம் 'உதிரிப்பூக்கள்' தான் என்று அடித்து சொல்லலாம். தமிழ்த் திரையுலகம் காணாத பாணியில் அமைந்தன திரைப்படமும் அதன் கதாபாத்திரங்களும். தன் மூன்றாவது படத்திற்காக பொன்னீலனின் 'உறவுகள்' குறு நாவலை தேர்ந்தெடுத்தார். 'பூட்டாத பூட்டுக்கள்' என்ற பெயரில் வந்த அந்த படம், குழப்பமான ஒரு திரைக்கதையினால் வெற்றி பெறவில்லை. பின்னர் வந்த மகேந்திரனின் திரைப்படங்களில் பெரிய எழுத்தாளர்களின் தாக்கம் பெரிதாக இல்லை!

தற்கால இயக்குநர்கள் பலர் சமகால இலக்கியங்களில் இருந்து படத்திற்கான கருக்களை தேடுகிறார்கள். நவீன எழுத்தாளர்களை திரைக்கதை வசனம் எழுத நியமிக்கிறார்கள். இன்று பெரும்பாலான உதவி இயக்குநர்கள் அடிப்படையில் சிறுகதை எழுத்தாளர்கள். இவர்களால் தமிழ் ரசனையில் பெரும் மாற்றங்கள் வருமா என்பது நம்புவதா வேண்டாமா என்றுதான் தெரியவில்லை.

நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' நாவலை 'சொல்ல மறந்த கதை' படமாக எடுத்தார் தங்கர் பச்சான். இத்தனைக்கும் அவரே ஒரு எழுத்தாளர். தன் கதைகள் பலவற்றை படமாக்கியவர். இயக்குநர் பாலா தன் 'பரதேசி' படத்திற்கு நாஞ்சில் நாடனின் ஒரு சிறுகதையை பாதி படத்திற்கு பயன்படுத்தி, நாஞ்சில் நாடனையே வசனமும் எழுத வைத்துவிட்டார். அவரது இன்னொரு சிறுகதை சமீபத்தில் 'மண்டேலா' என்ற பெயரில் வெளிவந்தது. எஸ். ராமகிருஷ்ணன் பல படங்களுக்கு வசனம் எழுதுகிறார். பூமணியின் வெக்கை, ஆட்டோ சந்திரனின் லாக் அப் போன்ற படைப்புகளை வெற்றிமாறன் 'அசுரன்', 'விசாரணை' என்ற பெயர்களில் படமாக்கினார். இவரது பெரும்பாலான படைப்புகள் எழுத்தாளர்களிடம் பெறப்பட்டவையே. ஜெயமோகன் சமீபத்திய திரைப்பட உலகில் தவிர்க்க முடியாத பெயராக விளங்குகிறார். சுஜாதா மறைவுக்கு பின் மணிரத்னம், ஷங்கர் போன்ற பிரம்மாண்ட இயக்குநர்களின் திரைப்படங்களில் பணி புரிகிறார்.

இலக்கியங்களை படிப்பது ஒரு தனியான அனுபவம். படிக்கும்போதே நமக்கு காட்சிகள் விரிகின்றன. கதாபாத்திரங்களுக்கான உருவங்கள் நம் கற்பனையிலேயே உருவாகின்றன. நமக்கான அரங்கங்களை நாமே சிருஷ்டித்துக்கொள்கிறோம். திரைப்படங்கள், நம் கற்பனைக் காட்சிகளுக்கு வேறு வடிவங்கள் தருகின்றன. இயக்குநர் முதல் அரங்க அமைப்பு உதவியாளர் வரை பலர் நமக்கான காட்சி வடிவங்களுக்காக உழைக்கின்றனர். திரைக்கதை மாற்றங்கள் நமக்கு அதிர்ச்சியை தரலாம். ஆனால் அவை இன்னொரு கலைஞர் நமக்கு தரும் இறுதி வடிவம். எப்படியிருந்தாலும் ரசிகருக்கு பெரும் தீனியை தரவல்லவை இந்த இரு கலை வடிவங்களும்!



jeeva@thaiveedu.com




# Killers Of The Flower Moon


– ரதன்

அமெரிக்காவில் அமெரிக்க அரசால் அங்கீகரிக்கப்பட்ட 574 ஆதிப் பழங்குடியினங்கள் உள்ளன. இவர்கள் தான் அமெரிக்காவின் முதற் குடிகள். (574 Tribal entities recognized by and eligible for funding and services from the Bureau of Indian Affairs (BIA) மெக்சிக்கன் அமெரிக்கப் பூர்வ குடிகளே அதிகளவு எண்ணிக்கையில் உள்ள முதற் குடிகளாவார்கள். இவர்களில் 548,959 மக்கள் தற்சமயம் வாழ்வதாகக் கூறப்படுகின்றது. இவர்களைவிட Navajo Nation, Cherokee Nation முதற் குடிகள் எண்ணிக்கையில் ஒரு லட்சத்துக்கு மேல் வாழ்கின்றனர். அமெரிக்கக் கண்டம் முழுவதும் வட, மத்திய, தெற்கு அமெரிக்கா முழுவதும், 'செவ்விந்தியர்' என முன்பு அழைக்கப்பட்ட முதற் குடிகளே வாழ்ந்து வந்தனர். ஐரோப்பாவிலிருந்து கொலம்பஸ் உட்பட்ட பலர் உலகைக் கொள்ளையடிக்க வந்து அமெரிக்கக் கண்டம் அனைத்தையும் கைப்பற்றிவிட்டனர். இந்த நிலத்தின் முதன்மையான மக்கள் இன்று ஓரங்கட்டப்பட்டு, பெரு, சிறு நகரங்களிலிருந்து தள்ளப்பட்டு சிறு, சிறு குழுக்களாக அமெரிக்கக் கண்டம் முழுவதும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் இன்றைய நிலை மிக மோசமானது.

கனடாவில் பல புதைகுழிகளிலிருந்து பூர்விக மக்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. Residential School திட்டத்தின் கீழ் பூர்விகக் குடிகளின் பிள்ளைகள் கட்டாயப்படுத்தப்பட்டு விடுதிப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்பப்பட்டனர். அங்கு இவர்களின் மதம், மொழி என்பன மாற்றப்பட்டன. அங்கு கல்வி கற்கச் சென்ற பல நூறு பிள்ளைகள் கொல்லப்பட்டனர். 1831-க்கும் 1996-க்கும் இடைப்பட்ட காலத்தில் 130 பாடசாலைகளில் ஆறாயிரம் பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் மேல் எனத் தெரிகின்றது. இந்தத் திட்டம் அமெரிக்காவிலிருந்தே கனடாவிற்குக் கொண்டுவரப்பட்டது. ரொறன்ரோவிலுள்ள 'றைசன் பல்கலைக்கழக'த்தின் பெயர் அண்மையில் மாற்றப்பட்டது. விடுதிப் பாடசாலைத் திட்டத்தின் பின்னாலுள்ள முக்கியமானவர் றைசன். இதனால் அவரது பெயரில் இருந்த பல்கலைக்கழகத்தின் பெயர் மாற்றப்பட்டது.

கனடாவிலுள்ள சுதந்திர வெளி அமெரிக்காவில் இல்லை. அதனால் அங்கு கொல்லப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தெரியாது. அது மட்டுமல்ல அங்கும் புதைகுழிகள் உள்ளன. அவற்றைப் பற்றி எந்த மனித உரிமைகள் அமைப்பும் கவலை கொள்ளவில்லை.

வட-அமெரிக்காவின் பல நகரங்கள், மாநிலங்கள், மாகாணங்கள் பூர்வ குடிகளின் பெயர்களையே கொண்டுள்ளன. Texas – from Taysha , Toronto: - 'tkaronto, Tennessee -from Tanasi , Ontario- onitariio, Manhattan – Menahatenk, Seattle - Si'ahl, Mississauga, Ottawa போன்ற பல பெயர்களைக் குறிப்பிடலாம். பல முதற் குடிகளின் பெயர்களைக் கொண்ட



நகரங்கள், பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலப் பெயர்களாகவும் மாற்றம் பெற்றுள்ளன.

Dhegihan Siouan மொழியில் அமைதியான நதி என்ற கருத்துக் கொண்ட பிரதேசம் பிரெஞ்ச் மொழியில் Osage நாடு என அழைக்கப்பட்டது. Dhegihan Siouan மொழிக் குடும்பத்தில் வேறு பல மொழிகளும் உள்ளன. இந்த மொழிக் குடும்பத்து முதற் குடிகள் மத்திய - மேற்கு அமெரிக்காவில் பொ.ஆ.மு.

700-ம் ஆண்டளவிலிருந்து வாழ்ந்து வருவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஒகாயோ, மிசிசிப்பி நதிகளை யண்டிய பிரதேசங்களில் இவர்கள் வாழ்ந்தனர். இவர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்கள். சுமார் ஆறரையடியிலிருந்து ஏழடிவரை உயரம் கொண்டவர்களாகவும், சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தைக் கொண்டவர்கள். இவர்கள் பின்னர் மிசூரி நதிக்கும், ரெட் நதிக்குமிடைப்பட்ட பகுதிகள் வரை செறிந்து வாழ்ந்தனர்.

ஏழாவது அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த அன்ரூ ஜக்சன் 1830-ல் (வைகாசி 28, 1830) Indian Removal Act (இந்தியர்களை அகற்றும் சட்டம்) கொண்டு வந்தார். இதே போன்ற சட்டம் கனடாவில் 1876-ல் கொண்டுவரப்பட்டது. அமெரிக்காவில் 1830-களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் சுமார் ஒன்றரை லட்சம் முதற் குடிகள், பல மில்லியன் ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வந்தனர். ஜோர்ஜியா, ரெனிசி, அலபாமா, வட-கரோலினா, புளோரிடா போன்ற சிறப்பான வளம் கொண்ட விவசாய நிலப் பிரதேசங்களிலேயே முதற் குடிகளின் விவசாய நிலங்களிருந்தன. இந்த நிலங்களை ஐரோப்பிய வெள்ளையருக்கு வழங்குவதற்காகவே இவர்களை அகற்றும் சட்டமியற்றப்பட்டது. இவர்களை Indian Territory-க்குள் குடியமர்த்தப்பட்டார்கள். இப்பிரதேசம் முதலில் வரையறுக்கப்படாமலிருந்தது. எனினும் பின்னர் இன்றைய ஒக்கலகோமா (Oklahoma) மாநிலத்துக்குக் குடியேற்றப்பட்டார்கள். பல முதற் குடி இனத்தவர்கள் எதிர்ப்புக்களைத் தெரிவிக்காமல் பல்லாயிரம் மைல்கள் நடந்து தமது புதிய பிரதேசத்துக்குப் புலம்பெயர்ந்தனர். இந்தக் கொடிய பயணத்தை Trail of Tears என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஒரு சில முதற் குடியினங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்து, அமெரிக்க அரசுப் படைகளுடன் சண்டையிட்டுள்ளார்கள்.

Osage நாட்டினரும் இந்தக் கட்டாயப் புலம்பெயர்வில் அகப்பட்டனர். இவர்களும் ஒக்கலகோமா மாநிலப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் எண்ணெய் வளமிருப்பது தெரியவந்தது. இவர்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்கான உரிமை இவர்களிடமேயிருந்தது. அதனால் எண்ணெய் வள நிலங்களைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட அமெரிக்கச் செல்வந்தர்கள், இவர்களுக்குக் குத்தகைப் பணத்தைக் கொடுத்து வந்தனர். இதனால் ஒசேஜ் மக்கள் செல்வந்தராகவிருந்தனர். 2011-ல் அமெரிக்க அரசு இவர்களுக்கு நட்டஈடு வழங்கியது. எதற்காக ? இவர்களது குத்தகைப் பணத்தை மோசடி செய்தமைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நட்டஈட்டை வழங்கியது.

ஒசேஜ் நாட்டினர் தமக்குச் சொந்தமான நிலத்தையே வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் வெள்ளை இனத்தவரால் ஏற்படுத்தப்பட்டது. மேற்கு ஒக்கலகோமாவிற்குத் தள்ளப்பட்டனர். அங்கு எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வெள்ளை அரசுக்கும் வணிகர்களுக்கும் ஒன்றும் செய்யமுடியாத நிலையில், அந்த நிலங்களிலிருந்து எண்ணெய் பெறுவதற்கு, நிலங்களுக்கான குத்தகைப் பணத்தையும், வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட வீதப் பங்கையும் (Royality) கொடுக்க வேண்டிவந்தது. ஒசேஜ் நாட்டினர் ஒவ்வொருவருக்கும் நிலங்களின் மீதான உரிமையிருந்தது. அதிலிருந்து பெறப்படும் வருமானத்தில் பங்கிருந்தது. இதனை Head Rights என்பார்கள். ஆனால் இந்த நிலத்தின் முழுமையான உரிமைகள் அமெரிக்க அரசுக்கே சொந்தமாகவிருந்தது. (Under the Osage Allotment Act of 1906, the mineral rights to the land were held in trust by the U.S. government, but mineral lease royalties were paid to the Osage). அப்போது அங்கிருந்த எண்ணெய்க் கிணறுகள் இன்றைய மதிப்பீட்டில் 400 மில்லியன் டொலர்களை ஒரு வருடத்துக்குப் பெற்றுக்கொடுத்தன. இன்றும் இந்த உரிமைகள் முதற் குடிகளின் வாரிசுகளுக்குச் செல்கின்றன. புளும்பேர்க் சஞ்சிகையின் படி இன்று இந்த உரிமைப் பணத்தைப் பெறும் 25 வீதமானவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், தேவாலயங்கள் போன்றவை.

இந்த புதிய எண்ணெய் வளத்தால் ஒசேஜ் மக்களின் வாழ்வில் பல மாற்றங்கள் இடம் பெற்றன. கூடாரங்களாகவிருந்த அவர்களது வீடுகள் மாளிகைகளாக மாறின. வீட்டுவேலை செய்வதற்கு வேலையாட்களிருந்தனர். வாகனங்களிருந்தன.

இதனைக் கைப்பற்ற வெள்ளையினத்தவர்கள் ஒரு புதுவித முறையைக் கையாண்டார்கள். முதற்குடிப் பெண்களை திருமணம் செய்து பின்னர் அவர்களது குடும்பத்தினரையும்,



மனைவியையும் கொலை செய்து விடுவார்கள் அல்லது கொஞ்சம், கொஞ்சமாக மருந்துக்குள் நஞ்சூட்டிக் கொலை செய்து விடுவார்கள். இதற்கு அப்போது அங்கிருந்த வெள்ளையின வைத்தியர்களும் உடந்தையாகவிருந்தார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் அக் குடும்ப அங்கத்தவர்களது உரிமைகளை இவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இதன் மூலம் மிகப் பெரியளவு செல்வங்களைச் சேர்த்தனர்.

அப்போதைய ஒசேஜ் நாட்டின் முதற் குடிகளின் தலைவர்கள், நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அவர்கள் சந்தேகப்படாதவகையிலேயே இக்கொலைகள் நடைபெற்றன.

1921 மே-யில் ஒசேஜ் பெண் அனா பிறவுன் ஒரு பள்ளத்தாக்கில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது ‘தலை உரிமை’ இவரது தாய்க்கு உரித்தாகின்றது. இரு மாதங்களின் பின்னர் இவரது தாய் லிசி மர்மமான முறையில் இறக்கின்றார். 1923 மாசி மாதம் லிசியின் மருமகன் தனது வாகனத்திலிருந்த போது சுட்டுக் கொல்லப்படுகின்றார். இது நடைபெற்று ஒரு மாதத்தின் பின்னர் அனாவின் சகோதரியும் அவரது கணவரும் கொல்லப்படுகின்றனர். இவர்கள் அனைவரது ‘தலை

உரிமை'-களும் லிசியின் மற்றொரு மகளும், அப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரேயொரு மகளுமான மோலிக்கு உரித்தாகின்றது. மோலியின் கணவர் Ernest Burkhart ஒரு வெள்ளையினத்தவர். ரெக்சாசிலிருந்து ஒக்லகோமாவிற்குப் புலம்பெயர்ந்துள்ளார். இவர் தனது மாமா William K. Hale சொற்படி வாழ்ந்து வருகின்றார். இவர் தன்னைக் கிங் என்றே அனைவரையும் அழைக்கச் சொல்வார். ஒரு அரசனைப் போலவே வாழ்ந்தும் வருகின்றார். அவரது சொற்படி ஏர்னஸ்ட் தனது மனைவி மோலிக்கு இன்சுலினுக்குள் நஞ்சினைக் கலந்து கொடுக்க முயற்சிக்கின்றார்.

மொத்தமாகச் சுமார் அறுபது ஒசேஜ்னர் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனினும் இதன் எண்ணிக்கை அதிகம் எனச் சுயாதீன ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பின்னர் எப்.பி.ஐ இக் கொலைகளை விசாரித்து ஏர்னஸ்ட்க்கும், William K. Hale-உம் வேறு சிலருக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன.

இதனை Killers of the Flower Moon என்ற பெயரில் நூலாக எழுதியுள்ளார் David Grann. டேவிட் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தாய் Putnam Penguin பதிப்பகத்தின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார். தந்தை புற்று நோய் வைத்திய நிபுணர். இவர் பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் படைப்பிலக்கியத்தில் முனைவர்ப் பட்டம் பெற்றுள்ளார். இவர் இதற்கு முன்பாகவும் சில நூல்களை எழுதியுள்ளார். ஒசேஜ் கொலைகளை ஆய்வு செய்தால் ஒரு சுவாரசியமான நூலாக வெளியிடலாமென நினைத்து இந்த நூலை எழுதியுள்ளார். ஆனாலும் இக்கொலைகள் பற்றிய முழுமையான பின்ணனியை இந்நூல் கொண்டுள்ளதாக இருக்கவில்லை. அவ்வாறான ஒரு நூலை மையமாகக் கொண்டு மார்ட்டின் சொகேசே திரைப்படம் எடுத்துள்ளார். நூலின் பெயரையே படத்துக்கும் சூட்டியுள்ளார்.

சொகேசேயின் பெற்றோர்கள் நடிகர்கள். இவரது தாய் முதன் முதலாக சொகேசியின் குறும்படங்களிலேயே நடித்தார். பின்னால் இவர் பல படங்களில் நடித்துள்ளார். இவரது பெற்றோர்கள் இத்தாலிய வம்சாவளியினர்.

சொகேசி நியுயோர்க் பல்கலைக்கழகத்தில் நெறியாள்கை மற்றும் திரைப்படத்துறையியலில் பட்டம் பெற்றுள்ளார். பின்னர் இவர் அதே பல்கலைக்கழகத்தில் திரைப்படத்துறையியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். ஒலிவர் ஸ்ரோன், ஜோனதன் கப்லன் ஆகிய இயக்குனர்கள் இவரது மாணவர்கள். 1968-ல் தனது முதலாவது படத்தை இயக்கினார். 1976-ல் இவரது டக்சி ரைவர் படம் கான் திரைப்பட விழாவில் palme விருதைப் பெற்றது. Palme ஒவ்வொரு வருடமும் கான் திரைப்பட விழாவில் திரையிடப்படும் படங்களில் மிகச்சிறந்த படத்துக்கு வழங்கப்படும் விருதாகும். 1988-ல் இவர் இயக்கிய படம் The Last Temptation of Christ. இப் படம் சர்ச்சைகளை உருவாக்கியது. இவர் மீது பலர் கொலை மிரட்டல்கள் செய்தனர். 2007-ல் இவர் ஒஸ்காரின் சிறந்த இயக்குனருக்கான விருதை The Departed படத்துக்காகப் பெற்றார். இப் படம் ஒஸ்காரின் சிறந்த பட விருதையும் பெற்றது. இவர் இத்தாலியச் சமூகத்தை மையமாக வைத்து மாபியா, கசினோ போன்ற படங்களையும் இயக்கியுள்ளார். அதே போல் வோல் ஸ்ரீட்-ஐ மையப்படுத்தி Wolf of Wall Street படத்தையும் இயக்கியுள்ளார்.

55 வருடங்களாகப் படங்களை இயக்கிவரும் சொகேசி இது வரை 27 படங்களை இயக்கியுள்ளார். அத்துடன் 17 விவரணத் திரைப்படங்களையும் இயக்கியுள்ளார். ஹொலிவூட்டின் ஒரு மிகக் குறிப்பிடத்தக்க இயக்குனர் சொகேசி.

சொகேசி David Grann-இன் நூலை ஒரு ஹொலிவூட் படமாகவே இயக்கியுள்ளார். நூலிலிருந்து பல மாற்றங்களைச் செய்துள்ளார் சொகேசி. மோலி தனது குடும்பத்தில் நடைபெற்ற கொலைகளை விசாரிக்குமாறு, வோசிங்டன் சென்று




அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்துக் கோரிக்கை விடுவதாகப் படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் மோலி வோசிங்டன் சென்றிருக்கலாம். ஆனால் ஜனாதிபதியைச் சந்தித்தமைக்கு எந்த ஆதாரமும் இல்லை என டேவிட் கிறான் தெரிவிக்கின்றார். மூலநூலும், படமும் முதற் குடிகளின் அரசினை ஒரு பலவீனமானதாகவே காட்டுகின்றார்கள். உண்மையில் முதற் குடிகளின் அரசுக்குத் தெளிவாகக் கொலையாளிகளைத் தெரியும். ஆனாலும் அவர்கள் தண்டனை வழங்க முடியாதவாறு அப்போதைய அமெரிக்க அரசு செய்து வைத்திருந்தது.

முதற் குடிகளின் நிலங்கள் முதலில் முதற் குடிகள் அனைவருக்கும் சொந்தமாகவேயிருந்தது. இதனை உடைத்துத் தனி நபர்களுக்கு நிலங்களைச் சொந்தமாக்கியது. இதுவே இந்த நிலங்களுக்கான தலையுரிமை தனி நபர்களுக்குரியதானது. இதனால் இலகுவாகக் கொள்ளையடிக்க முடிந்தது. 1887-ல் ஒசேஜ் மக்களுக்குச் சொந்தமாகவிருந்த நிலத்தில் மூன்றில் ஒரு பங்கையே 1934-ல் சொந்தமாகக் கொண்டிருந்தனர். அதாவது 47 வருடங்களில் 75 வீதமான நிலத்தை இழந்துள்ளனர்.

சொகேசி, செவ்வி ஒன்றில் குறிப்பிட்டவாறு ஒசேஜ் மக்கள் கொல்லப்பட்டதையும், எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதையுமே சொகேசி கவனம் செலுத்தியுள்ளார். இவர்கள் மீதான அரசியல் அழுத்தங்களையும், உரிமை பறிப்புகளையும், பின்னால் உள்ள நுண் அரசியல் மீதும் சொகேசி அக்க

றைகொள்ளவில்லை. கொலைகளின் சுவாரஸ்யத்தின் மீதான அக்கறையே சொகேசிக்கு இருந்தது. கொலைகளின் அரசிய லில் அவருக்கு அக்கறையிருக்கவில்லை.

அப்போதைய அமெரிக்க அரசு முதற் குடிகள் நிர்வாகத் திற மையற்றவர்கள், நிதி நிர்வாகத்தை முறையாகக் கையாளத் தெரியாதவர்கள் போன்ற கருதுகோள்களை அவர்கள் மீது திணித்தது. ஒரு உளவியல் யுத்தத்தையே நடத்தியது. ஒசேஜ் மக்கள் தங்களது கலாசாரம், பண்பாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள். பற்று மிகுந்தவர்கள். அவர்கள் மது அருந்து வதை விரும்புவதில்லை. இவற்றை உடைத்துவிட்டது அமெ ரிக்க அரசு. சொகேசியும் அமெரிக்க அரசின் கருதுகோ ளையே படத்திலும் வெளிப்படுத்துகின்றார். மோலிக்கும், ஏர் னஸ்ட்க்கும் இடையிலான காதல் கட்சிகளுக்கு அதிக நேரம் செலவிட்டுள்ளார். ஒசேஜ் நாட்டுத் தாய்மார்கள் முதலாம் உலகப் போரில் இறந்த தங்களது பிள்ளைகளை நினை வூட்டி ஒரு ஊர்வலம் வரும் காட்சி உள்ளது. இக் கொலைக ளுக்கும் இக் காட்சிக்கும் என்ன சம்பந்தம்? முதற் குடிகள் அமெரிக்க அரசினை முழுமையாக ஏற்றுக்கொண்டுவிட்டார் கள் என்பதன் பிரதிபலிப்பு இது.

இன்றும் வட-அமெரிக்காவில் தொடர்ச்சியாக முதற் குடிகள் தங்கள் நிலத்தின் மீதான உரிமைகளுக்கும், வளங்கள் மீதான கட்டுப்பாட்டுக்கும் போராடி வருகின்றார்கள். காணா மல் போகும் முதற் குடிப் பெண்கள், அவர்கள் மீதான கொலைகள் என நீதி கேட்டுப் போராடி வருகின்றார்கள். மேற்கூறிய காட்சி இவற்றை மூடி மறைக்கின்றது.

சொகேசியின் நீண்டகால நண்பரும், இவரது பல படங்களில் முக்கிய பாத்திரத்தில் நடித்தவருமான ரொபேட் William K. Hale-ஆகச் சிறப்பாக நடித்துள்ளார். ஏர்னஸ்டாக Leonardo DiCaprio நன்றாக நடித்துள்ளார். படத்தின் சிறப்பம்சம் முதற் குடி நடிகர்கள். படத்தில் பல பாத்திரங்களில் முதற் குடி நடி கர்களே நடித்துள்ளார்கள். மோலியாக Lily Gladstone அற்பு தமாக நடித்துள்ளார். இவரது உடல் மொழியும், முக பாவ னைகளும் மிகச் சிறப்பாகவுள்ளன. மோலியின் சகோதரி அனாவாக நடித்த மற்றொரு முதற் குடி நடிகை Cara Jade Myers. அனாவின் நண்பராக நடித்த கனடிய முதற் குடி நடி கர் William Belleau ஆகியோர் படத்திற்கு வலுச் சேர்த்துள்ள னர்.

சொகேசி கொலைகளின் கதையைச் சிறப்பாகப் படமாக்கி யுள்ளார். என்பது வயதிலும் அவர் படத்தைச் சிறப்பாக இயக் கியுள்ளார். ஒரு சிறந்த கதைசொல்லியாகச் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் பார்வையாளர்களுடன் பயணித்துள்ளார். ஆனால் ஒசேஜ் மக்களுடன் நின்று விடுகின்றார். முதற் குடி மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் வெவ்வேறு வடிவங்க ளில் கொலைகள் நடக்கின்றது. அவர்களது மதம், மொழி போன்றன அழிந்துவருகின்றன என்பது அவருக்குத் தெரியும். அப்படியிருந்தும் அதனை வெளிப்படுத்தவில்லை.

மோலி ஏர்னஸ்ட்டையை விவாகரத்துச் செய்த பின்னர் மீண் டும் திருமணம் செய்து கொள்கின்றார். இவரது இரண்டாவது திருமணம் அன்பு நிறைந்ததாக நூலாசிரியர் குறிப்பிடுகின் றார். இவர் தனது ஐம்பதாவது வயதில் மறைந்து விடுகின் றார். இவரது மரண அறிவித்தல் fairfox chief பத்திரிகையில் வெளியாகியது. 'Mrs.Mollie Cobb, 50 years of age passed away at 11 o'clock Wednesday night at her home. She had been ill for some time. She was a full-blood Osage' ஐம்பது வயதில் மோலி இறப்பதற்கு, இவருக்கு முன்னர் ஊட்டப்பட்ட நஞ்சே காரணம். இவரது கொலைக்கும், ஒசேஜ் மக்கள் கொலைக்கும் காரணமாகவிருந்து ஏர்னஸ்ட், William K. Hale ஆகியோருடன் மற்றைய வெள்ளை இனக் குற்றவாளிகளும் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுக்கு மரண தண்டனை வழங்குமாறு ஒசேஜ் நிர்வாகம் கேட்டபோதும், அதனை அமெ ரிக்க அரசு ஏற்கவில்லை.

டேவிட் கிறானின் நூலைப் படமாக்கும் பொழுது, சொகேசி பூர்விகக் குடிகளை அல்லது முதற் குடிகளை உருவகப்படுத் திய முறைக்கும் யதார்த்தத்துக்கும் பல முரண்பாடுகள் உள் ளன. டேவிட் கிறானின் நூலின் படி, அமெரிக்க உள்நாட்டு அமைச்சு, ஒரு முதற் குடிப் பிரசை, அவர் நிதியை முறையா கக் கையாளத் தெரியாதவர் என முத்திரை குத்தினால், ஒரு வெள்ளையினத்தவர் இவருக்கு நிதிப் பாதுகாவலராக நிய மிக்கப்படுவார். இந்த நிதிப் பாதுகாவலரின் அங்கீகாரப்ப டியே, முதற் குடிப் பிரசை தனது நிதியைச் செலவழிக்கலாம். ஒரு 'அரைப் பிரசை'யாகவே ஒசேஜ் பிரசைகளை அமெரிக்க அரசாங்கம் நடத்தியது. படத்தில் நிதிப் பாதுகாவலர் பாத்தி ரத்துக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை. படத்தைப் பார்க் கும் பொழுது ஒக்கலோகோமாவில் அப்போது வாழ்ந்த வெள் ளையின மக்கள் மீது கோபம் வந்தாலும், மறுபுறம் அதே அமெரிக்க அரசு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கிய போது, அவர்கள் மீது நம்பிக்கை துளிர்க்கின்றது. அவர்கள் மேன்மையானவர்கள் என எண்ணத் தோன்றுகின்றது. முதற் குடியரசால் வழங்க முடியாத நீதியை அவர்கள் வழங்கிவிட் டார்கள் என்ற எண்ணமும் தோற்றம் பெறுகின்றது. சொகேசி இங்கு அரசையும், மக்களையும் பிரித்தே தோற்றம் பெறச் செய்கின்றார். மக்களை குற்றவாளிகளாகவும், அரசினை நீதி யான அரசாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒசேஜ் மக்களின் மீதான கொலைகளின் சரித்திரத்தை மீள ஹொலிவூட் மக்கள் நினைப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங் கியுள்ளார். சொகேசி பைன் றிஜ் முதற் குடிக்கென ஒதுக்கப் பட்ட (Reservation) பகுதியில் சில நாட்கள் தங்கியிருந்த பொழுது, முதற் குடி மக்களின் வாழ்க்கை இவரைப் பாதித் தது. அதனைப் படத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இப்படம் முதற் குடிகள் மீதான ஒரு மனிதாபிமான உரையாடல் வெளியை ஏற்படுத்தியுள்ளது.

Sight and Sound-(October 2023) இதழுக்கு வழங்கிய செவ் வியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் 'We're all the killers.The European white comes in. Western civilisation comes in. We are the killers, and we have to understand that. We have to confront it in ourselves.' இங்கு நாங்கள் என்பது மக்கள், அரசல்ல. அதுவே ஆபத்தானது. இப் படம் ஒரு அரசியல் உரையாடல் வெளியை ஏற்படுத்தத் தவறி விட்டது.

Flower Moon என்பது மே மாத முழு நிலவு.



rathan@thaiveedu.com

# ஈழத் தமிழர்தம் நவீன நாடக வரலாற்றின் தனித்துவங்களைக் கண்டறிதல் (சில குறிப்புகள்)



- து. கௌரீஸ்வரன்

உலக நாடக அரங்க வரலாற்றில் ஈழத்துத் தமிழர்களின் நாடகத்திற்கெனத் தனித்துவமான பக்கங்கள் இருக்கின்றன. மேற்கு ஐரோப்பியக் காலனித்துவக் காலத்தின் பின்னரான வெவ்வேறுபட்ட சமூகப் பொருளாதார அரசியல் பண்பாட்டுப் பின்னணிகள் ஈழத்தின் தமிழர்தம் நாடக அரங்க மரபின் பல் வகைப் பரிமாணங்களுக்குக் காரணமாக இருந்துள்ளன. ஈழத்துத் தமிழர்களின் பண்பாடுகளில் கனதியான தாக்கங் களை இந்த நாடக அரங்க நடவடிக்கைகள் ஏற்படுத்தி வந் துள்ளன. இவற்றினையிட்டு நுண்ணளவில் ஆராய்ந்தறிய வேண்டிய தேவை இன்று உணரப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் ஈழத்துத் தமிழர்களின் நாடக அரங் கச் சூழலை அவதானிக்கின்றபோது மரபுவழி நாடகங்கள், நவீன நாடகங்கள் என இரு பெரும் பிரிவுகளாக அதனைப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது.

## உள்ளூர்க் கலை மரபுகள்:

இதிலே மரபுவழி நாடக அரங்க நடவடிக்கைகள் உள்ளூர் அரங்க மரபுகளாக உள்ளூர்களில் வாழும் மரபுவழிக் கலை ஞர்களால் சமுதாய அரங்கப் பண்புகளுடன் பரவலாகப் பயி லப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

போருக்குப்பிந்திய காலத்திலிருந்து நவீன தொழில்நுட்பத்து டன் கூடிய இலத்திரனியல் மற்றும் டிஜிற்றல் தொலைத் தொடர்பு வசதிகள் ஈழத்தின் பெருநகரங்களிலிருந்து சாதா ரண குக்கிராமங்கள் வரை ஆழமாக ஊடுருவியுள்ள நிலையி லும் உள்ளூர் மரபுவழி நாடக அரங்க நடவடிக்கைகள் மங்கி மறையாமல் வலுவான நிலையில் முன்னெடுக்கப்பட்டு வரு வது கவனத்திற்குரியதாகவுள்ளது. இதிலுங் குறிப்பாக இளந் தலைமுறையினர் இத்தகைய உள்ளூர் அரங்க நடவடிக்கை களில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதனைப் பார்க்கின்றோம். வருடா வருடம் பருவ காலங்களில் உள்ளூர்களில் நிகழ்த்தப் படும் அரங்க ஆற்றுகைகள் முகநூல்களிலும் மற்றும் இணைய ஊடகங்களிலும் நேரலையாக ஒலி ஒளி பரப்பப்படுவதனை யும் பார்க்கக் கிடைக்கின்றது. எடுத்துக்காட்டாக மட்டக்களப் பின் படுவான்கரையினைத் தளமாகக் கொண்டுள்ள மரபு வழிக் கலைக் கழகங்கள் தமது முகநூல் பக்கங்களில் ஒரு வருடத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட உள்ளூர் கூத்து அரங்கேற்றங்களை நிகழ்த்தும் தகவல்களையும் அதற்கான முன்னறிவிப்புகளையும், அவற்றின் காணொளிப் பதிவுகளை யும் பதிவிட்டு வருவதனைப் பார்க்க முடிகின்றது. இதேபோல் ஈழத்தின் வடக்கிலும், மலையகத்திலும் உள்ளூர் மரபுவழி நாடக அரங்க நடவடிக்கைகள் வருடாந்தம் தொய்வின்றிப் பர வலாகப் பயிலப்பட்டு வருவதனைப் பற்றிய செய்திகளைக் கேட்கவும் பார்க்கவும் முடிகின்றது.

இதேவேளை உள்ளூர்க் கலைமரபுகளைப் பெரும்பாலும் ஆக்கிரமித்துள்ள பிற்போக்கான இதிகாச புராணீகக் கதை யாடல்களிலிருந்து விடுவித்து தற்காலத்திற்குரிய பாடுபொரு ளுடன் கூடிய உள்ளூர்க் கலை மரபுகளாகச் சமூகப் பங்கு கொள் முறைமையூடாக மீளுருவாக்கஞ் செய்து காலத்திற் கேற்ப தகவமைக்கும் கவனத்திற்குரிய நடவடிக்கைகளும் சில குறிப்பிட்ட இடங்களில் ஆய்வுச் செயற்பாடுகளாக முன் னெடுக்கப்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய சூழலில் ஈழத்துத் தமிழர்தம் நாடக அரங்கப் போக்கினை அவதானிக்கின்ற போது ஒப்பீட்டளவில் உள் ளூர்க் கலைமரபுகள் அதிகளவில் வருடந்தோறும் முன்னெ டுக்கப்பட்டு வருவதனைக் காண்கின்றோம்.

இப் பின்புலத்தில் துரதிஸ்டவசமாக நகரங்களில் வாழ்பவர்க ளிடையே இத்தகைய உள்ளூர்க் கலை மரபுகளின் பயில்வு பற்றிய செய்திகளோ, அனுபவங்களோ எதுவுமின்றி, எழுந்த மானமாக உள்ளூர்க் கலைகள் அருகிவருகின்றன என்ற வாய்ப்பாடு பேசுபொருளாகியுள்ளதனையும் அவதானிக்க முடிகின்றது.



**நவீன நாடக அரங்க மரபு:**

தற்போதைய சூழலில் ஈழத்தின் நவீன நாடக அரங்க மரபு களை அவதானிக்கின்ற போது நாடக அரங்கின் மீதான ஆர் வத்தின் காரணமாக நாடக அரங்க நடவடிக்கைகளில் ஈடுபடு வோரும் அவர்கள் சார்ந்த நாடக மன்றங்களும், பெரும்பா லும் தொழில்முறையாக நாடக அரங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் அவர்கள் சார்ந்த அமைப்புகளும், நிதியுத வித் திட்டங்களையும் நன்கொடைகளையும் பெற்றும், பெற் றுக்கொள்ளாமலும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நாடக அரங்கக் கலையினைப் பயன்படுத்த முயலும் நபர் களும் அவர்கள் சார்ந்த மன்றங்களும், நாடக அரங்கினைக் கற்றல் கற்பித்தலாக மேற்கொள்வோரும் அவர்கள் சார்ந்த கல்வி நிறுவனங்களும், அமைப்புகளும் என்று வகைப்ப டுத்தி இனங்காணத்தக்க வகையில் நவீன நாடக அரங்க நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனைப் பார்க்க முடி கின்றது. மேற்படி நாடக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரில் சிலர் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவர்களாகவும், செல்வாக் குச் செலுத்துபவர்களாகவும் இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இதில் ஒருசில நபர்களும் அமைப்பினரும் உள் ளூர்களின் மரபுவழி நாடக அரங்க நடவடிக்கைகளிலும் ஈடு பட்டு வருவதனையும் பார்க்கின்றோம்.

ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் 1990-களின் பின்னரிலி ருந்து 2000-ம் ஆண்டுகளுக்குள் பிறந்த புதிய இளந் தலை முறையினரைச் சார்ந்தவர்கள் பலர் தற்போதைய சூழலில் கிழக்கு, மலையகம், வடக்கு எனத் தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மேற்படி வகையறாக்களுக்குள் இனங்காணத்தக்க விதத்தில் பரவலாக நவீன நாடக அரங்க ஆற்றுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர் களில் கணிசமானோர் நாடகமும், அரங்கியலும் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களாகவும், இவர்களுடன் சேர்ந்து இயங்குபவர்களாகவும் இருக்கின்றனர். பெரும்பாலும் தாம் கற்ற நவீன நாடக உத்திகளுடன் புதிய நாடகங்களை உரு வாக்கி இவர்கள் மேடையேற்றி வருகின்றார்கள். ஈழத்தின் வட புலத்திலும், மலையகத்திலும், கிழக்கிலும் இத்தகைய இளந் தலைமுறை நாடகர்களின் இயக்கம் நடைபெறுகின்றது. இவற் றுள் கணிசமான நாடகங்கள் இலங்கையரசின் கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் கலைக் கழகத்தினால் நடத்தப்ப டும் அரச நாடக விழாக்களை மையமாகக் கொண்டு தயாரிக் கப்பட்டு வருவதனையும் காண்கின்றோம். இத்தகைய நவீன நாடக மன்றங்கள் வருடாந்தம் நாடக விழாக்களை ஒழுங்க மைத்து நடத்திவரும் நிலைமைகளையும் பார்க்கின்றோம்.

மேற்படி சமகால ஈழத்தின் தமிழ் அரங்கு பற்றிய மேலோட்ட மான அறிமுகத்துடன் நாம் ஈழத்துத் தமிழ் நவீன நாடக அரங் கிற்கேயுரிய முக்கியமான பண்புகளைக் கவனத்திற் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக மேலெழுந்து நிற்கின்றது.

இந்தவகையில் நாம் நவீன நாடகங்களின் உருவாக்கம் அவற்றின் வரலாறுகள் சார்ந்து உலகம் தழுவித் - தமிழ்ச் சூழலில் பொதுவாகத் தேடிப்பார்க்கும் போது, மிகப்பெரும் பாலும் பெயர்பெற்ற தமிழ் நாடகங்களின் உருவாக்கங்களுக் குப் பின்னால் பெரும் நிதியுதவிகளும் நிகழ்ச்சித் திட்டங்க ளும் அனுசரனையாக இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. இதனால் தொழில் சார்ந்தும், ஆர்வங்காரணமா கவும் நாடக அரங்கில் தொழிற்பட்ட கலைஞர்களையும், நாட கத்துறை மாணவர்களையும் இணைத்துக்கொண்டு அத்த கைய பெரும் நாடகங்களின் தயாரிப்புகள் வெற்றிகரமாக

மேற்கொள்ளப்பட்டுள்ளமை பற்றி அறிந்து கொள்கின்றோம்.

இந்தப் புரிதலுடன் நின்று ஈழத்துத் தமிழர்தம் நவீன நாடக வரலாற்றினைப் பார்க்கும் போது ஈழத்துத் தமிழர்களின் நவீன நாடக அரங்க நடவடிக்கைகள் என்பவை எந்தவித நிதி அனுசரணைகளும் பெறாமல் அவற்றுக்காக எதிர்பார்த்திராமல், எந்தவித நிகழ்ச்சித் திட்டங்களின் அனுசரணைகளும் இன்றி உருவாக்கப்பட்டு வெற்றிபெற்று வந்துள்ளமை பற்றி அறிய முடிகின்றது. இக்கருத்தை ஈழத்தின் நாடகத்துறைப் பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்கள் கடந்த 12.07.2023-ந் திகதியன்று மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் நடன நாடகத்துறையில் நடைபெற்ற ஈழத்து நவீன நாடகப் போக்குகள் என்ற தலைப்பிலான உரையரங்கில் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் ஈழத்துத் தமிழர்தம் நாடகங்கள் பெரும்பாலும் அமெச்சூர் நாடகங்கள்தான் என்ற எழுந்தமானமான பொத்தம் பொதுவான முடிவுக்கு எவரும் வந்துவிடக்கூடாது, மாறாக நிகழ்ச்சித் திட்ட அனுசரணைகளோ, பெரும் நிதியுதவிகளோ, எதுவுமின்றித் தரம்வாய்ந்த நவீன நாடக அரங்க ஆற்றுகைகளை உருவாக்கிய வரலாறு ஈழத்துத் தமிழர்களுக்கு உரியது என்பதும், இது ஈழத்துத் தமிழர்தம் நவீன நாடக அரங்க மரபின் கவனத்திற்குரிய பண்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த மகத்தான நாடக உருவாக்கங்கள் ஈழத்துத் தமிழர்களின் வரலாற்றில் பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்ட சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டுச் சூழல்களின் போது நடைபெற்றுள்ளன என்பது விசேட கவனத்திற்குரியது. இதனை விஞ்ஞானபூர்வமாக மெய்ப்பிக்கும் வகையில் ஈழத்தில் படைக்கப்பட்டுள்ள நாடக எழுத்துருக்களும், நாடக ஆற்றுகைகளும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நடிகர்கள், எழுத்தாளர்கள், நெறியாளர்கள், துணைக் கலைஞர்கள், ரசிகர்கள் பற்றிய சான்றுகளும் ஆதாரங்களும் சாட்சியங்களாக இருக்கின்றன. இந்தப் பண்பை நாம் ஆராய்ந்து கற்க வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதும் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகி நிற்கின்றது.

இத்தோடு ஈழத்துத் தமிழர்களின் நவீன அரங்க மரபில் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் செல்நெறிகளும் அரங்கியலாளர்களால் முன்மொழியப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது மேற்கைரோப்பிய நவீன நாடகங்களின் பண்புகளை உள்வாங்கி ஈழத்துத் தமிழ்ச் சூழலுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற விதத்தில் நவீன நாடகங்களைப் படைத்த போக்கு, மேற்குலக சிறுவர் நாடகக் கருத்தியலை உள்வாங்கி ஈழத்துத் தமிழ்ச் சூழலுக்கேயுரிய சிறுவர் நாடக அரங்க மரபினைப் படைப்பாக்கஞ் செய்த விதம் மற்றும் களப்பயிற்சி முறைமையூடாக நாடக அரங்க ஆற்றுகைகளை உருவாக்கிய விதம், கல்வியியல் அரங்க மரபினைக் கண்டடைந்த முறைமை, பெண்ணிலைவாத நாடக அரங்கச் செயல்வாதத்தை உருவாக்கிய விதம், எழுத்துருவைப் பிரதானப்படுத்தாது ஆற்றுகையினை உருவாக்கி வளர்த்தெடுக்கும் அரங்கச் செயற்பாட்டு முறைமை, உள்ளூர் அரங்க மரபுகளின் ஆற்றுகை நுட்பங்களை உள்வாங்கிப் புதிய நவீன நாடகங்களைப் படைத்த விதம், களப்பயிற்சி அரங்கு, தெருவெளி அரங்குகளின் உருவாக்க முறைமைகள் என ஈழத்துத் தமிழ்நவீன நாடகத்தின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றியெல்லாம் கவனத்திற் கொள்ள வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

ஏனெனில் போர் முடிந்ததன் பின்னர் பெரும் நிதி அனுசரணைகளைப் பெற்றுக்கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களுடன் வடக்குக் கிழக்கிற்கு நாடகப் பயணங்களை மேற்கொண்டவர்கள் கடந்த மூன்று தசாப்தங்களில் தமிழர்தம் நாடக வரலாறு பின்தங்கியுள்ளது என்ற கருதுகோளை முன்மொழிந்தவாறு நாடகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற கோசத்துடன் தமது வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். இக்கருதுகோள் ஈழத்தின் கணிசமான இளந்தலைமுறையினரிடையே செல்வாக்குச் செலுத்துவதாகவும் அமைந்துவிட்ட பின்புலத்தில் மேற்படி கருதுகோள் தவறானது என்பதை நிரூபிக்கும் சான்றுகளும் ஆளுமைகளும் நம்மத்தியில் இருக்கும் போது அவற்றின் துணையுடன் நமது நவீன நாடக வரலாற்றின் பிரகாசமான தடங்களைக் கண்டறிய வேண்டியுள்ளது.

அதாவது உலகத்தரம் வாய்ந்த நாடகங்களை நெருக்கடிக் காலங்களில் எப்படி நம்மவர் உருவாக்கினர், அதற்குக் களம் அமைத்திருந்த பண்பாடு எத்தகையதாக இருந்தது, இத்தகைய நாடகர்கள் எதிர்கொண்ட சவால்கள் எத்தகையன, அவர்கள் எப்படிச் சவால்களை வெற்றி கொண்டார்கள் என்பதுபற்றியெல்லாம் நுண்ணளவுகளில் விரிவாக ஆராய வேண்டியது இன்றைய காலத்தில் மிகவும் தேவையாக இருக்கின்றது.

நம்மத்தியில் வரலாறுகளைக் கற்றல் என்பது வரலாற்றிலிருந்து கற்று அறிவைப்பெறுதலை, எண்ணக்கருக்களைக், கருத்தியல்களைக், கோட்பாடுகளை உருவாக்குவதை நோக்கியதாக அல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில வரலாற்று நிகழ்வுகளின் தகவல்களைப் பரீட்சை நோக்கில் மனப்பாடஞ் செய்து ஒப்புவிப்பதற்கு வழிப்படுத்துவதாகவே பெரும்பாலும் காணப்படுகின்றது ஈழத்துத் தமிழர்தம் நாடக வரலாறும் அவ்வாறே கற்பிக்கப்படுகின்றது. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாற்றுத் தகவல்களை ஒப்புவிப்பதிலிருந்து விடுவித்துப் பிரகாசமான வரலாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட தலைமுறையினர் முதுமை நிலையினை அண்மித்திருக்கின்ற இன்றைய சூழலில் அவர்களை அணுகி அவர்களுடைய கதைகளைப் பதிவு செய்து ஈழத்து நவீன நாடக வரலாற்றின் தனித்துவமான பக்கங்களை நிரூபிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்களையும் சான்றுகளையும் பொதுவெளியில் பகிர வேண்டியது ஈழத்துத் தமிழர்தம் நாடக அரங்க மரபில் பிரக்ஞையுடன் ஈடுபடும் ஒவ்வொருவரதும் கடமையாக இருக்கின்றது எனலாம்.



gowrieeswaran@thaiveedu.com

# நூற்றாண்டு விழாக் கண்ட பாலர் ஞானோதயச் சங்கம்

**- வே. விவேகானந்தன்**


வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள கட்டுவன், மயிலிட்டித் தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய முக்கிராமங்களினதும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும், மற்றும் கலை, கலாசார, சமய, உடல்நல மேம்பாடுகளுக்கும் முதுகெலும்பாக விளங்கிய பாலர் ஞானோதயச் சங்கத்தின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.


முதல் நாள் நிகழ்வின்போது, பாலர் ஞானோதயச் சங்கத்தின், பிரித்தானிய, சுவிற்சர்லாந்துக் கிளைகளின் நிதியுதவியுடன், கட்டுவனில் அமைக்கப்பட்ட, பாலர் ஞானோதயச் சங்கத்தின் பிரமாண்டமான கட்டடம் இந்தியத் துணைத்



தூதரக அதிகாரி திரு. மனோஜ்குமார் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. ந. பாலச்சந்திரன், பிரித்தானியக் கிளையின் தலைவர் திரு. க. கணேசநாதன், தெல்லிப்பளை பிரதேசசபை முன்னாள் தலைவர் திரு. சுகிர்தன், இந்தியத் துணைத் தூதுவர் திரு. மனோஜ்குமார், யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் திரு. நா. சண்முகலிங்கம், முன்னாள் கிராமசேவகர் திரு. க. கனகநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இவ்விழாவில் ஊர் மக்கள் உட்படப் பிரித்தானியா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா, ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் நிகழ்வு பாலர் ஞானோதயச் சங்கத் தலைவர் ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திரு. சிவசிறி அவர்கள் கலந்து கொண்டார். செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் தனது உரையில், போர்க்காலத்துக்கு முன்னர் முக்கிராமங்களினதும் கல்வி, கலை,




கலாசாரம், ஆன்மிகம், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளிலும் செழிப்புடன் விளங்கியதை நினைவு கூர்ந்தார்.

உரைகளைத் தொடர்ந்து, இன்றும் அம்மண்ணுக்கே உரிய தனித்துவமான கலை, கலாசார, பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து வரும் கலைஞர்களும், நூற்றாண்டு மண்டபத்தினை ஒரு வருடத்துக்குள் கட்டி முடிக்க அயராது உழைத்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர். கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. கட்டுவனூரின் தனித்துவம் மிக்க கலை வடிவமான வசந்தன் நாடகமும் சிறப்பாக மேடையேற்றப்பட்டது. அத்துடன், நூற்றாண்டு மலரும் 'எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்' என்னும் நூலும் வெளியிடப்பட்டன.

இரு நாள் நிகழ்ச்சிகளையும் சுவிற்சர்லாந்துப் பாலர் ஞானோதயச் சங்கக் கிளையின் செயலாளர் திருமதி. கமலினி ஸ்ரீதரன் அவர்களும், பிரித்தானியக் கிளையின் உறுப்பினர் கலாநிதி சங்கரப்பிள்ளை சிவானந்தா அவர்களும் சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருந்தனர்.



vivekananthan.v@thaiveedu.com

# மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தெய்வமாடற் சடங்கின் தனித்துவம்

## ஒரு மானுடவியற் பரீசீலனை

சந்திரசேகரன் சசிதரன்

### அறிமுகம்:

சடங்கு என்பது சமயத்தின் இன்றியமையாத ஓர் அம்சம். சடங்கு இன்றி சமய நம்பிக்கையின் இருப்பை கேள்விக்குள்ளாக்கி விடலாம். வேறு ஒரு வகையில் சடங்கானது மனித மனங்களில் உள்ளுறைந்து கிடக்கும் தெய்வீக ஆற்றல் தொடர்பான நம்பிக்கை வடிவங்களுக்குப் புறவயமான உயிர்ப்பினை வழங்குகின்றது. மற்றொரு வகையில் சடங்கானது ஆற்றல்மிக்க ஊடகமாகத் திகழ்கின்றது. எனவேதான் மானிடவியலாளர்கள் சடங்கினை மொழிக்கு ஒப்பிடுகின்றனர். சடங்கும் மொழியும் சமூக அமைவியத்துக்கு உந்துவிசையாக அமைகின்றன. இவற்றின் உந்து சக்தியானது, உள்ளார்ந்த நிலையில் மக்களிடம் ஒருங்கிசைவையும் இடைவினையையும் தூண்டுகின்றன. சடங்கானது ஊடகமாகத் தொழிற்படுகிறது என்றால் ஆஸ்மா, ஒலி, ஒளி அசைவுகள் காட்சிப் படிமங்கள், குறியீடுகள் என்பனவும் தொழிற்படுகின்றன.

எவ்வாறாயினும் இக்கட்டுரையின் பேசுபொருளான தெய்வமாடற்சடங்கென்பது தனக்கென உரித்தான தனித்துவமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. இலங்கையில் இந்து மரபும் வழிபாட்டு முறைகளும் நீண்டகாலமாக நிலவி வருகின்றமை தொடர்பான புலமைத்துவ ஆய்வுகளை பலரும் முன்னெடுத்து வருகினறனர். ஆனால், ஏனைய பாகங்களை விடவும் மட்டக்களப்பு வழிபாட்டு முறையானது தனித்துவமான பல அம்சங்களை உட்கொண்டுள்ளது.

- ஆகமம் சாராத வழிபாட்டு மரபு.
- சிறு தெய்வங்கள் முதன்மைப்படுத்தப்படல்.
- சமஸ்கிருத வழிபாட்டு மரபு பேசும் பெரும் எடுப்பிலான இறுக்கமான பூஜை, புனஸ்காரங்கள் மையப்படுத்தப்படாமை.
- தெய்வமாடுதல் முதலான மிக நீண்ட இடையறாத பாரம்பரியச் சடங்கு முறையில் ஊறித்திணைக்கும் பண்பு.
- அடியாருக்கும் தெய்வங்களுக்கும் இடையிலான இடைவெளியற்ற உள்ளார்ந்த பக்திப் பிணைப்பு.
- பத்ததி வழிபாட்டு மரபு, மந்திர ஏடுகள் என்பன முக்கியம் பெறுதல்.
- காவடி, கற்பூரச்சட்டி ஏற்றல், தீமிதிப்பு, கட்டுக்கூறுதல் முதலான அடியார் வாழ்வியலோடு பிணைந்த தனித்துவமான வழிபாட்டு முறைகள்.
- கல் வணக்கம், விருட்ச வணக்கம் ஆடம்பரமற்ற எளிமையான கொத்துப்பந்தல் வழிபாடு.

என்பன வழிபாட்டு இடங்களாக இன்றும் விளங்குகின்றமை சங்கத்தமிழர்களின் பண்டைய வழிபாட்டுமுறைமையை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவ்வாறு தனித்துவமான பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கின்ற மட்டக்களப்புப் பிராந்தியச் சமயச் சடங்கியல் வெளியினுள் தெய்வமாடல் சடங்கின் மானிடவியல் அம்சங்கள் இன்னும் ஆழமான புலமைத்துவ விசாரணையை நிற்கின்றன.

### மட்டக்களப்பில் தெய்வமாடற் சடங்கு:

குறித்த ஓர் இனக்குழுமத்துக்கு வேண்டாத சமூக நம்பிக்கைகள், உறவுப்பிணைப்புகள், ஐதீகங்கள், கரணங்களை அந்த இனக்குழுவானது தொடர்ச்சியான பேணலுக்கு உட்படுத்தாது என்பார். இதன்படி மட்டக்களப்புப் பிராந்தியத்தில் மிக நீண்டகாலமாக நிகழ்த்தப்பட்டு வரும் தெய்வமாடற் சடங்கு என்பதும் அதனது பண்பாட்டு ஓட்டத்துக்கும் தொடர்ச்சிக்கும் அவசியமான ஒன்றாகவே உணரப்படுவதனை நாம் மறுக்கவியலாது. தெய்வமாடற் சடங்கானது மட்டக்களப்பின் சமூக பண்பாட்டியல் அம்சங்களோடு இரண்டறக் கலந்துவிட்ட அம்சமாகவே நோக்கப்படுகிறது. இப் பிராந்தியத்தில் ஆண்டு தோறும் குறிப்பிட்ட காலகட்டத்தில் கதவு திறந்து சடங்கு இடம்பெறும் சந்தர்பத்தில் தெய்வமாடிக் கட்டுரைத்தலும் பாரம்பரியமாகவே இடம்பெற்று வருகின்ற சமய பண்பாட்டு மரபாக உள்ளது.

சடங்கு நிகழும் காலம் வரையிலும் சாதாரண மானிடர்களாக இருப்பார். தெய்வமாடும் நிலையில் ஒரு வகையான தெய்வீக அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவது ஏன் என்பது தவிர்க்கவியலாத மானிடவியல் வினாவாக அமைகிறது. மட்டக்களப்பின் சமய நிலையினை ஆய்வு செய்த உள்ளூர் ஆய்வாளர்களாக

கருதத்தக்க சி. மௌனகுரு (2003-2020), சு. சீவரெத்தினம் (2011), வ. இன்பமோகன் (2008) முதலானோர் மட்டக்களப் புக்கே உரித்தான தெய்வங்கள் என்றவாறு பகுத்து நோக்கு வர். எவ்வாறாயினும், இந்தப் பகுப்புத் தொடர்பான மேலும் விஞ்ஞான பூர்வமான விசாரணையும் இங்கே தேவையாகிறது.

கிராமிய பின்புல வாழ்வுடன் இணைந்த புராதன தெய்வங்க ளுள் கடல்நாச்சி அம்மன், வதனமார், உத்தியாக்கள், பெரிய தம்பிரான் முதலிய தெய்வத்தலங்களில் பாரம்பரியமான தெய்வமாகும் சடங்கானது பிரதான இடத்தை வகித்து வரு கின்றது. புராதன காலம் தொடக்கம் மட்டக்களப்பு பிராந்திய மானது விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு முதலான கைத்தொழில் முயற்சிகளுக்கு களமாக உள்ளது.

கடற்றொழிக்கு அதிபதியாக கடற்ராச்சியம்மனையும், கால் நடை வளர்த்துக்கு அதிபதியாக வதனமாரையும் இயற்கை மனிதர் உருவகப்படுத்தியதில் ஐயமில்லை. பின்பு, தெய்வங் களை, மனிதர்களைப் புனிதப்படுத்தி உருமாற்றி, நிலைமாற் றலுக்கு உள்ளாக்கி, அவர்களின் வாய்மொழியியல் நிமித்தம் வாழ்வியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முற்பட்டுள்ளனர் எனலாம். இத்தகைய முன் முயற்சியே மட்டக்களப்பில் தெய் வமாடற் சடங்கிற்கு விதையூன்றி இருக்கலாம்.

உத்தியாக்கள் என்பார் வடமொழி மரபில் 'பிதிரர்' என்போ ருக்கு நிகரானவர் ஆவார். தொடக்க காலத்தில் தெய்வம் ஆடுவோரை ஊடகமாகக் கொண்டு முன்னோரின் ஆவியா னது அவர்களில் வந்து இறங்கி, எதிர்காலம் பற்றியும் பிறர் எதிர்காலம் பற்றியும் எதிர்வு கூறும் மரபு காணப்பட்டிருக்க லாம். பண்பாட்டுப் பரவுகையின் வழியாக வெளியிலிருந்து வந்த தெய்வங்களான மாரியம்மன், பேச்சியம்மன், நாகதம்பி-ரான், நரசிம்மர், வீரபத்திரர், திரௌபதியம்மன், ஆஞ்சநேயர், காரியம்மன், பத்தினியம்மன், கம்பகாமாட்சி, புள்ளிக்காரன், சுடலைமாரி முதலான வெவ்வேறு தெய்வங்களின் மரபிலும் அவைகளை திருப்திப்படுத்தும் நோக்கில் தெய்வமாகும் சம யப்பண்பாடானது, இப்பிராந்தியத்தில் உருவானதாகக் கருத இடமுண்டு. தெய்வமாடும் சடங்கு பற்றிய ஆய்வுப் பார்வை யில், பயபக்தி, அதிபௌதிகவாத நம்பிக்கைகள், ஆவிநி லைப்பட்ட தொடர்பாடல் மானிட இயல்புக்கு அப்பாலான திறன்கள், அமானுஷ்ய தொடர்பு முதலானவை சமய மானிட வியல் தளத்தில் விரிவான பகுப்பாய்வுக்கு இடமளிக்கின்றன. தெய்வமாடல் சடங்குகளில் அதி பௌதீகவாத அம்சங்களும் முதன்மை பெறுகின்றன.

இச்சடங்கின் போது, அருள்நிலை உணர்ச்சி, உருவேறல், அடியார்களின் ஆழ்ந்த நம்பிக்கை, அவர்கள் இச்சடங்கோடு கொள்கின்ற தொடர்பாடல் முதலானவை சமயப்பண்பாட்டிய லின் குறிப்பிட்ட சடங்கு தொடர்பான தனித்துவமான தரிச னத்தை ஆய்வதற்குரிய உந்துதலை வழங்குகிறது என்று கூற லாம். தெய்வமாடற் சடங்கானது மனித சமுதாயக் கட்டமைப் பினுள் எப்போது தொடங்கியது என்பது பற்றி மானிடவியலா ளர்கள் வெவ்வேறு கருத்து நிலைகளை வெளிப்படுத்துகின்ற னர். இச் சடங்கின் தொடக்கப் பயில்வானது சைபீரியாவின் தோன்றியதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சைப்பிரி யப் பழங்குடியினர் மத்தியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தி லேயே நாட்டுப்புற மருத்துவர் அல்லது தெய்வீக நிலைப்பட்ட மருத்துவர் சமயச்சடங்குகளில் ஈடுபட்டிருப்பதாக ஆய்வுக்கு றிப்புகள் தெரிவிக்கின்றன (Winkelman, 1964). எவ்வாறாயி னும் திராவிட நிலைப்பட்ட சங்க இலக்கியங்களிலும் 'வேலன் வெறியாட்டு' எனும் பகுதியில் தெய்வமாடல் தொடர்பான பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளமையினை தமிழக ஆய்வாளர் கள் எடுத்துக்காட்டுவதும் இங்கே சிந்தனைக்குரியது.

## ஆய்வுப் பிரச்சினை:

மேலே நோக்கியவாறு பண்பாட்டு இருப்பியலில் தொடர்ச்சித் தன்மை மிக்க இச்சடங்கானது, இப்பிராந்தியத்தில் ஆகமம் சாராத வழிபாட்டு முறையில் தவிர்க்க முடியாத இடத்தினை வகிக்கிறது. 'கோயில்' என்பதை ஒரு சமூக வெளியாக (Social Space) எடுத்துக் கொண்டால் வெறுமனே ஒரு தெய்வீக சடங்கியல் நிலைப்பட்ட ஆற்றுகையாக மட்டும் இது நின்றுவி டுவதில்லை. இப்பிராந்திய மாந்தருடன் இச்சடங்கானது இடையறாத் தொடர்சியாக வருகிறது. மக்களின் மனதை வென்றெடுத்துள்ளது. இத்தகைய இடைவினையின் சமூக மானிடவியற் காரணிகளை இனங்காண்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக அமைகிறது. அத்துடன் சடங்கிலே பங்குபற் றும் சமூக மாந்தரின் உணர்வு மயமான நம்பிக்கை பற்றி விஞ் ஞான பூர்வமாக விசாரிப்பதும் சடங்கின் பண்பாட்டுத் தனித் துவத்தையும் சமநிலைப்பட்ட மானிடவியற் கோலங்களையும் பகுத்து ஆராய்வதும் ஆய்வுப்பிரச்சினையாக அமைகிறது.

## ஆய்வின் பிரதான நோக்கம்:

இனவரைபியல் நுட்பங்களின் ஊடாக நீண்டகாலமாக மட்டக் களப்புப் பிராந்தியத்தில் நிகழ்த்தப்படும் தெய்வமாடல் சடங் கின் தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களை, உய்த்தறிவ தும், இச்சடங்கின் சமூகப் பண்பாட்டுத் தொழிற்பாடுகளை நுண்மையாக பகுப்பாய்வு செய்வதுமே ஆய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

## துணை நோக்கங்கள்:

- இச் சடங்கின் சமுதாய மட்டத்திலான தொடர்ச்சித்தன் மைக்கான காரணங்களை கண்டறிதல்.
- தெய்வமாடுவோருக்கும், பங்குபற்றும் அடியாருக்கும் இடையிலான இடைவினையின் தன்மையை புரிந்து கொள் ளுதல்.
- இச்சடங்கின் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை மதீப் பீடு செய்தல்.

## மேலைத்தேயம் சார்ந்த இலக்கிய மீளாய்வு:

ஆய்வின் கருப்பொருள் தெய்வமாடற் சடங்கு என்பதாகவே உள்ளது. ஆனால், தொல்சீர் மானிடவியல் ஆய்வுகள், களப் பணி நிலையில் முன்னெடுக்கப்பட்ட காலம் தொடக்கம், சம காலம் வரை இப்பொருளில் மானிடவியல் ஆய்வுகள் மேலை

நாடுகளில் பல்கிப்பெருகி உள்ளன. அவை பௌதீகம், பண்பாடு, தொல்பொருளியல், மொழியியல் முதலான மானுடவியலின் பிரதான பகுப்புகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மருத்துவவியல், சமூக உளவியல், பெண்ணியம், கட்டமைப்பு வாதம், பின்நவீனத்துவம் பண்பாட்டுச்சூழலியல் வாதம் என்ற வகையிலான வெவ்வேறு மானிடவியல் புலங்களின் பார்வையிலும் இச்சடங்கு பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பதிவுசெய்வதற்கு உரியதாகிறது.

ஏலவே குறிப்பிட்டவாறு, தெய்வமாடற் சடங்கு பற்றிய முதலாவது மானிடவியல் பதிவை ஆவணப்படுத்தியவர் டீ. மலினாவ்ஸ்கி ஆவர். இதன் பின்னால், இத்துறைசார் ஆய்வில் மிங்கில்மனின் ஆய்வுகளும் அவதானங்களும் குறிப்பிடத்தக்கன. அவர்தான் தெய்வமாடற் சடங்கின் உள்ளார்ந்த மானிடவியற் கோலங்களையும், அது சமூகப்பண்பாட்டு அசை வியக்கங்களோடு கொண்டிருந்த தர்க்கரீதியான தொடர்புகளையும் தானும் தரிசித்து பிறரையும் தரிசிக்கச் செய்துள்ளார்.

அவரை விட uandleman(1967), La Barre(1970), Eliade(1975), Kandall (1985), Roges(1982), Lebra(1960), Kewis(1971), wateh(1982), Noel(1997), wallis(2003), Mictechell(2003), Levin(2010) முதலானோரின் ஆய்வுகளையும் இங்கு நாம் கோடிட்டுக் காட்டலாம்.

தொல்சீர் நிலையில் முன்னைய ஆய்வுகளில் தனித்துவத்தை பகுத்து நோக்கினால், மடோக்கஸ் என்பவர் (1923) தெய்வமாடற் சடங்கின் பரிணாம வளர்ச்சியையும், அதன் பண்புநிலைகளையும் சமூக மானிடவியல் பார்வையில் வைத்து ஆராய்ந்துள்ளார். இவரை அடுத்து, W. பார்க் (Park) என்பவர் வடக்கு அமெரிக்க பிராந்தியத்திலுள்ள பழங்குடிச் சமுதாயங்களிடையே வாழ்ந்து, உடனுறைந்து, உள்ளூர்த் தெய்வமாடலின் மரபுநிலைக் கோலங்களை பகுப்பாய்வு செய்துள்ளார். அதாவது இத்தகைய ஆய்வாளர்கள் பங்குபற்றி அவதானித்தலுக்கு முதன்மை வழங்கியுள்ளனர். அத்துடன் R.U. லொவி (R.U. Lowie) என்பவரின் ஆய்வும் குறிப்பிடத்தக்கது. இவர்தான் 'Washp' எனப்படும் பழங்குடியினரின் தெய்வமாடல் சடங்கியல் அம்சங்களை முதன்முதலாக ஓரளவுக்கு இனக்குழு வரைபியலாக (Ethnogrphy) ஆவணப்படுத்தியுள்ளார்.

S.P. நடேல் (Nadel) என்னும் மானிடவியலாளர் (1946) 'ரேடிய' மலைத்தொடர் பிரதேசப் பழங்குடி சமுதாயத்தினர் மத்தியில் நிலவிய தெய்வமாடல் சடங்கில் சடங்கு சார் வன்மமானது புலப்படுத்தப்பட்டமையினை வெளிப்படுத்தியுள்ளார். எட்வேர்ட் ஹார்ப்பர் என்பவர் (1957) தென்னிந்தியாவிற்கு களப்பணி மேற்கொண்டு, குறிப்பிட்ட காலம் அங்கேயே தங்கிருந்து கிராமியக் கோயில்களில் தெய்வமாடற் சடங்கு நுட்பங்களை நன்கு அவதானித்து தமது முடிவுகளை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலக்கிய மீளாய்வு:

அறுபதுகளில், இச்சடங்கு பற்றி முன்னெடுக்கப்பட்ட ஒட்டுமொத்த மானிடவியல் ஆய்வுகள் தொடர்பிலும் விரிவானதும் ஆழமானதும், அதே வேளை நடுநிலைத்தன்மையான பார்வையை வழங்கியவராக M. Elide எனும் அறிஞர் விளங்குகிறார். N. Fairehin என்னும் புலமையாளர் சற்று வித்தியாசமாக, ஆசிய நாடான யப்பானில் நிலவும் இச்சடங்கின் சில தனித்துவமான பண்புக்கூறுகள் பற்றிய தகவல்களை திரட்டி தருகிறார்.

மேற்குறிப்பிட்டவர்கள் சமய மானிடவியல் பண்பாட்டியல் முதலான தளத்தில்தான் அதிகம் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர். ஆனால், சில்வர்மேன் (Silverman) என்னும் ஆய்வாளரோ தெய்வமாடுவோர் தாம் தமது பண்பாட்டு வழியில் நம்புகிற தெய்வீக ஆற்றல் என்பது அடிப்படையில் உளவியல் காரணிகளோடுதான் தொடர்புபட்டது என்று நிரூபணம் செய்ய முற்படுகிறார். (1967).

வெறும் சடங்காட்டம் என்பதற்கப்பால் உணர்வை இழத்தல், உணர்வு கடத்தப்படுதல், இயல் கடந்த சக்திகளின் உணர்வின் ஊடகமாக ஒரு புனிதமானவரின் உடல் தொழிற்படுதல், மனோபாவங்களில் மாறுதல் ஏற்படுதல் முதலான புதிய விடயங்களையும் W.W. Sargant என்னும் அறிஞர் பேசியுள்ளமை இக்குறிப்பிட்ட ஆய்வுப்பாதையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அதாவது தெய்வமாடல் சடங்கின் வழியாக மனித உடலிலும், உணர்விலும் பல்வேறு பரிமாண மாற்றங்கள் இடம்பெறுவதாக அவர் கூறுகின்றார்.(1973) தெய்வமாடற் சடங்கில் ஒரு வகையான சமய நிலைப்பட்டதும் உளநிலைப் பட்டதுமான 'சூழ்ச்சி' இடம் பெறுவதாகவும் குறித்து உள்ளூர்ச் சமுதாய அங்கத்தவர் இதனை ஏற்றுக்கொள்ளவதாக அன்றேல் ஏற்றக்கொள்ளத் தூண்டப்படுவதாக Warner (1986) கூறுகிறார். இக்கருத்தியல் ஆய்வுப் பிரதேசச் சூழலுக்கும் சிலசமயம் பொருந்திப் போவதாக அமைகிறது. Jane Atkunsoh - இத்தகைய சடங்குசார் ஆற்றுகைச் செயற்பாடுகள் ஊடாக, நோய்கள் தீர்க்கப்படும் நுட்பமான அம்சங்களை தனது களப்பணி ஊடாக Lewis (1989) எடுத்துக்காட்டினார். எனினும் இப்பணி தீர்த்தல் விவகாரம் பற்றி மானிடவியலாளர்களிடையில் ஒருமித்த கருத்து இல்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

தெய்வம் ஆடும் சடங்கை முதன்மைப்படுத்தாமல் அதனை நிகழ்த்தி வைக்கும் தெய்வம் ஆடுபவர் யார், அவரின் சமூக வகிபாவங்கள் யாவை என்பன பற்றியெல்லாம் றோஜர் (Roger) விரிவாகப் பகுப்பாய்வு செய்துள்ளார்(1989). அதாவது தெய்வமாடுவோரின் சமூக இடையூடாட்டம் விரிவாக ஆராயப்படுக்ன்றது.

Peter Garder என்பவர் நாடோடி இனக்குழுக்களின் (Nomadic people) தெய்வமாடற் சடங்கின் தனிச்சிறப்பு பற்றிய தகவல்களை விளக்கமாகத் தொகுத்துள்ளார். உலகின் இந்து தேசமாக கருதப்படும் நேபாளப் பிராந்தியத்தில் இடம்பெறும் இச்சடங்கின் முழுமையான அவதானக் குறிப்புரைகள் இனக்குழுவரைபியல் ஊடாக Grogory Maskariene எனும் ஆய்வறிவாளர் பகிர்ந்து கொண்டுள்ளார். மீளவும் Winkelman இச்சடங்கின் நுட்பங்களையும், மரபுகளையும் இயற்கைச் சுற்றாட



லுடன் இணைந்தவாறு பகுப்பாய்வு செய்துள்ளார் (2000). கிறிஸ்தவ உலகுக்கும் அப்பால் யூத இன மரபில் இச்சடங்கானது மந்திரங்களோடும் தொடர்பு பட்டிருப்பது பற்றி Glein kller என்பவர் விரிவாக விளக்குகின்றார் (2003).

Clerk peter முதலானோர் தொகுத்த நூலில், ஆசியப் பிரதேசத்தில் நிலவும் தெய்வமாடற் சடங்கின் தன்மை பற்றிய மிக விரிவான ஆய்வுத்தொகுப்பாக அமைகிறது. இதில் சைபீரியா, சீனா, கொரியா உள்ளிட்ட தேசங்களின் பழங்குடி சமுதாயங்களில் இடம்பெறும் இச்சடங்கின் பண்பாட்டுக் கோலங்களின் ஒருமைத்தன்மையும் வேறுபாடுகளும் ஒருசேர ஆராயப்பட்டுள்ளன.

விமர்சனப்பாங்கில் பழங்குடிச்சமுதாய பண்பாடு பற்றியும் இச்சடங்கு பற்றி மாறி வரும் மேலையத்தேத்தவரின் கருத்துருவாக்கம் பற்றியுமான விமர்சனப்பார்வையை A. Znamenski முன்வைத்தமையை நாம் எமது கவனத்தில் குறிக்க வேண்டும் (2007). Dobois என்பாரின் ஆய்வில் தெய்வமாடல் பற்றிய சமகால ஆய்வுகளில் இடம்பெறும் புலமைத்துவ அரசியல் பற்றிய விவாதம் இடம்பெறுகிறது (2017). அதாவது வெறும் சடங்கிற்கு அப்பால் இச்சடங்கின் பின்னால் உள்ள அரசியற் காரணிகளும் ஆராய்படுகின்றன.

## இலங்கை மட்டத்திலான ஆய்வுகள்:

இலங்கையில் கிராமிய நிலைப்பட்ட சைவ மரபினுள் ஆண்டுக்கொரு தடவை கதவு திறந்து, தெய்வமாடி, கட்டுக்கூறும் இச் சடங்கின் வரலாறு மிக நீண்டது. ஆனால், துரதிஷ்டவசமாக இதற்கு நிகரான பௌத்த மரபு நிலைப்பட்ட சடங்குகள் பற்றிய விரிவான புலமைத்துவ (மானிடவியல், சமூகவியல், சமூக-உளவியல்தளம்) ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இதன்படி சில்வா என்பார் சிங்கள பாரம்பரியத்தில் முதன்மை பெறும் பாலி சடங்குகள் பற்றிய ஆய்விற்கு ஓர் அறிமுகம் வழங்குகிறார். பேராசிரியர் கணநாத் ஒபேசேகரா, பத்தினித் தெய்வ வழிபாடு பற்றிய தன் ஆய்வினை (1964) கிழக்கிழங்கையில் விரிவாக முன்னெடுத்த நிலையில், கண்ணகி அம்மன் கோயிலில் இடம் பெறும் தெய்வமாடற் சடங்கினை பற்றி விபரிக்கத் தவறவில்லை. சிங்கள பாரம்பரியத்தில் இன்று வரை முதன்மை பெறும் 'தொவில்' சடங்கின் மானிடவியல் பின்புலத்தை ஆனந்த அபேசேகர ஆய்வு செய்துள்ளார்(1999). சிங்கள பௌத்த பாரம்பரியத்தில், இந்து மத மரபின் செல்வாக்கினால் உள்ளீர்க்கபட்ட, நவக்கிரக வழிபாட்டு சடங்கில் உலகமயமாக்கல் ஏற்படுத்திய தாக்கம் பற்றிய விரிவான மானிடவியல் மதிப்பீட்டை பிறேமகுமார டீ சில்வாவின் ஆய்வேடு தருகிறது (2000).

தமிழகத்தை எடுத்துக்கொண்டால், மானிடவியல் நிலைப்பட்ட முதலாவது இனவரைபியலை நமக்கு தொகுத்து வழங்கியவர் தேஸ்டன் எட்கர் ஆவார். பின்பு நவீன ஆய்வுகள் என்று எடுத்துக்கொண்டால், ஆறு. இராமநாதன் என்பவரால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் தமிழக நிலைப்பட்ட சிறுதெய்வ வழிபாட்டு முறை பற்றிய தரவுகள் கிடைக்கின்றன (1991). தமிழக நாட்டு புறச்சடங்குகள், சாதாரண மனித உறவுகளை ஒருங்கிணைக்கும் பாங்கினை இ. முத்தையாவின் ஆய்வு வெளிப்படுத்துகிறது(1996).

இவர்களை விட, தமிழ்நிலைப்பட்ட சடங்கியல் மானிடவியல் கோலங்களை கோட்பாட்டு வெளிச்சம் பாய்ச்சி, பிரயோக நிலையோடும் தொடர்புபடுத்தி ஆழமான பல ஆய்வுகளை பக்தவத்சல பாரதி ஆய்வு செய்துள்ளார். நாட்டார் திருவிழாவின் அமைப்பியல்(1993), தமிழர் மானிடவியல் (2002) என்பன குறிப்பிடத்தக்கன. தெய்வமாடற் சடங்கின் மூலவேர்

களை நாம் வழமைபோல ஐரோப்பிய நிலை நின்று ஏன் சைபீரியாவில் தேடவேண்டும். உண்மையில் அதற்கான அடிச்சுவடுகள் சங்க இலக்கிய வெளியில் 'வேலன் வெறியாட்'டாக புலப்படுவதையும், தமிழரின் நாட்டுப்புற வாழ்வியலில் இச்சடங்கு ஒரு வகையான சமய வன்ம உணர்வின் மடைமாற்றமாக தொழிற்படுதல் பற்றியும் அவர் முன்வைக்கும் புலமைத்துவ விவாதங்கள் ஆழ அகலமானது.

## ஆய்வுப்பிரதேச நிலைப்பட்ட முன்னோடி ஆய்வுகள்:

ஆய்வுப்பிரதேசமாக அமைவது மட்டக்களப்புப் பிராந்தியமே ஆகும். இப்பிரதேசத்தின் தொல்வரலாறு, நிர்வாக முறைமை, பண்பாட்டு அம்சங்கள், சமயவாழ்வு பற்றிய ஓரளவு பருமட்டான ஆரம்ப ஆய்வாக S.O. கனகரெத்தினத்தின் 'Monograph of Batticaloa' (1923) அமைகிறது என்பது ஆய்வாளரின் அபிப்பிராயமாகும். இதற்கும் அப்பால், F.C.X. நடராஜாவின் 'மட்டக்களப்பு மான்மியம்', வீ.சீ. கந்தையாவின் 'மட்டக்களப்புத் தமிழகம்' என்பன ஒரு சில அடிப்படைத் தகவல்களையே தருகின்றன. 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும்' இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை சா.இ. கமலநாதன், கமலா கமலநாதன் இருவரும் மீள்பதிப்பு செய்துள்ளனர். மட்டக்களப்பின் சில கோயில் வரலாறுகள் க. தங்கேஸ்வரியினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. க. மகேஸ்வரலிங்கம் மட்டக்களப்பின் சிறு தெய்வ வழிபாடு பற்றிய பருமட்டான தகவல்களை தொகுத்துள்ளார் (1996).

வ. இன்பமோகன் கிழக்கிலங்கைச் சடங்குகளை அழகியல் தளத்தில் வைத்தே நோக்கியுள்ளார். இவர்களைவிட சி. மௌனகுரு மிக அண்மையில்(2020) கிரானில் அமைந்துள்ள குமார தெய்வத் தலத்தின் தனித்துவமான சமய பண்பாட்டு அம்சங்களை சிறு கட்டுரையாக வரைந்துள்ளார். இதனோடு மண்டூர் முருகன் கோயில், ஆரையம்பதி கந்தசாமிகோயில், புன்னைச்சோலை காளியம்மன் கோயில் முதலானவை பற்றியும் வெளிநாட்டு, உள்நாட்டு, ஆய்வாளர்களால் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேராசிசியர் என். சண்முகலிங்கன் புன்னைச்சோலை காளி கோயில் சடங்கினை காட்சிப்புல மானுடவியல் நுட்பத்தின் ஊடாக ஆவணப்படுத்தியுள்ளார். தொகுத்த நிலையில் சி. சீவரத்தினம், து. கௌரீஸ்வரன், சொ. பிரசாத், ச. சந்திரசேகரம், ச. தில்லைநாதன், க. சண்முகலிங்கம், த. கோபாலரத்தினம், கு. சண்முகம் முதலானோர் மட்டக்களப்பின் சமய வாழ்வியல் பற்றிய ஆய்வுகளை தமது புலப்பதிவுகளாக ஆங்காங்கே பதிவு செய்து வருகின்றனர். எவ்வாறாயினும் ஏலவே குறிப்பிட்டவாறு, தெய்வமாடல் சடங்கின் சமூகக் கோலங்கள், உளவியல் தன்மைகள், புனைவியல் வாதம், அதிபௌதீக வாதம், இச்சடங்கின் இருப்பு, தொடர்ச்சித்தன்மை இவற்றை மானிடவியல் தளத்தில் புலமைத்துவ அறத்துடன் ஆழமாவும் விரிவாகவும் நெறிமுறையாக இற்றைவரை ஆய்வுக்குட்படுத்தப்படாமை 'அறிவுசார் இடைவெளியாகவே' உணரப்படுகிறது.

## துணை நோக்கங்கள்:

- இச்சடங்கின் சமூதாய மட்டத்திலான தொடர்ச்சித் தன்மைக்கான காரணங்களைக் கண்டறிதல்
- தெய்வமாடுவோருக்கும், பங்குபற்றும் அடியாருக்கும் இடையிலான இடைவினைத் தன்மையை புரிந்து கொள்ளுதல்.
- இச்சடங்கின் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பீடு செய்தல்.

## ஆய்வுசார் இடைவெளி:

ஏந்தவொரு துறையிலும் ஆய்வுகள் புதிய அறிவை உருவாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அத்தகைய ஆய்வுகளின் ஊடாக நேர்நிலையான சமூக மாற்றம் சமுதாய மட்டத்திலான அபிவிருத்தி துறைசார் புலமைத்துவ உலகுக்கான அறிவாளி என்பனவும் எதிர்பார்க்கப்டுகின்றன. மட்டக்களப்புப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பின் சமயநிலை தொடர்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தரவுகளின் தொகுப்புக்களே வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. குறிப்பாக சடங்கியல், ஆசாரம், ஆற்றுகையியல், மொழியியல் தழுவிய சில ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் தெய்வமாடல் சடங்கினை தனித்துருகியும் எந்தவொரு ஆய்வும் மானிடவியல் தளத்தில் முன்னெடுக்கப்படவில்லை. எனவே, இந்த ஆய்வானது இப்பெருண்பான்மையில் நிலவுகிற அறிவுசார் இடைவெளியினை ஓரளவு நிரவல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆய்வின் முறையியல்:

அடிப்படையில் இது இனவரைபியல் ஆய்வாகும். அதற்கேற்பவே ஆய்வின் முறைகளும், முறையியலும் திட்டமிடப்பட்டன. தெய்வமாடுவோர் ஒரு வகையில் பாரம்பரியத்தன்மையும், சிறப்பு தேர்ச்சியும் படைத்தவர்கள் என்பதனால் அவர்களை ஆய்வுச் செயன்முறைக்கு உட்படுத்துவதற்கு நோக்க மாதிரி முறை பிரயோகிக்கப்பட்டது. இத்துடன் பங்குபற்றி அவதானித்தல் முறைக்கு பிரதான இடம் வழங்கப்பட்டது. அரைப்பாகம் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் முறை குழுமக் கலந்துரையாடல் முறை சார்பான நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டன. இதனைவிட தெய்வமாடுதலோடு ஆட்டமுறைகள், சடங்குகள், அடியாரின் ஈடுபாடு உருமாறல், வேறுபட்ட ஒலிக்குறிகள் முதலானவற்றுக்கு மையமான ஒரு ஸ்தானம் இருப்பதனால் காட்சிப்புலம் சார்ந்த மானிடவியல் தரவு சேகரிப்பு நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டன.

## ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்:

பங்குபற்றி அவதானிக்கப்பட்ட ஆய்வு என்ற நிலைநின்றும் இனவரைபியல் ஆய்வின் அடிப்படையில் அமைந்தது என்ற வகையிலும் ஆய்வின் பெறுபேறுகள் பின்வருமாறு முன்வைக்கப்படுகின்றன.

## ஆய்வுப் பிரதேசத்தின் தனித்துவ பண்புகள்:

இந்த ஆய்வு முழுமையும் புன்னைச்சோலை காளி அம்மன் கோயிலையே மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் இத்தலமானது மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. ஆகாமம் சாராத வகையிலேயே பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மரபு ரீதியில் மந்திர அறிவும், பூசையை நடத்தும் பாரம்பரிய அறிவும் மிக்க ஒருவர் தலைமைப் பூசாரியாக காணப்படுகிறார். அவருக்கு உதவியாட்களும் உள்ளனர். ஆலயமானது வர்ணப் பூச்சுகள், சிற்ப வேலைப்பாடுகளுடன் கட்டடமாக அமைந்துள்ளது. ஆனால், கோயிலின் உள்மண்டபமானது மண்தரையாகவே விடப்பட்டுள்ளது. மக்களுக்கும் தெய்வங்களுக்கும் இடையிலான இடைவினையும் உறவும் நம்பிக்கையின் பிணைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகவே அமைந்துள்ளது.

## தெய்வமாடும் சடங்கு:

இந்த ஆலயம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து தெய்வம் ஆடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எல்லாமாக ஐந்து நாள் சடங்குகள் இடம்பெறுகின்றன. இந்த ஐந்து தினங்களுமே தெய்வமாடும் சடங்கு விரிவான வகையில் முன்னெடுக்கப்படுகிறது. இச்சடங்கு ஒரு நாளில் இருவேளையிலும் நிகழ்த்தப்படுவது. மற்றையது மாலை ஐந்து மணி தொடக்கம் இரவுப்பொழுது வரையிலும் நீண்டு செல்வதாகும். இச்சடங்குகளிலே தெய்வமாடுதலைப் பார்க்கவும் அவை கட்டுக் கூறுவதைத் கேட்கவும் மக்கள் பலரும் கூட்டமாகத் திரள்வதையும் அவதானிக்க முடிகிறது. இது ஒரு வகையில் பிரான்சிய சமூகவியலாளரும் சமயத்தின் மூலவேர்களை ஆழமான வகையில் ஆய்வு செய்தவருமான எமீல் டேர்க்கிமின் கருத்தைப் புலப்படுத்தி நிற்கிறது.

எளிமையான எந்தவொரு சமய நம்பிக்கையும் உயிர்வாழ்வதற்குச் சடங்குகள் அவசியம். சமய நம்பிக்கை, வணக்க மரபு, புனிதமான சமயச்சடங்குகள் தொடர்பில் எவரும் கேள்விக்குட்படுத்த இயலாது. புராதன சமயச்சடங்குகள் சில புதிர்த் தன்மையைக் கொண்டிருக்கின்ற போதிலும் அவை மக்கள் மீது ஆழமாகச் செலுத்தும் செல்வாக்கினை நாம் மறுக்க முடியாது. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியின் செயல் வடிவமே சடங்கு என்று கருதலாம் என்பது டேர்க்கிமின் (Emile-durkhime) கருத்து வெளிப்பாடு. (டோர்கின்: 1912 : 16-24) இந்த உண்மையினை நாம் மட்டக்களப்பில் தெய்வமாடற் சடங்கு முறையிலும் அவதானிக்க முடியும்.

## தெய்வமாடலின் அடிப்படை அம்சங்கள்:

வித்தை (Magic), விஞ்ஞானம் (Science), சடங்கு (Rituals) இவை மூன்று எண்ணக்கருக்களையும் மானிடவியலாளர்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளனர். தெய்வமாடுவோர்கூட தாம் வானத்துக்கும் பாதாளத்துக்கும் இடையில் அலைக்கழிக்கப்படுவதாக தெரிவித்து உள்ளனர். அப்படியானால் தெய்வமாடுவோர் ஏதாவது ஒரு வகையில் சாதாரண மாந்தருக்கு புரியாத வகையில் அமானுஷ்யமான வித்தைகளை நிகழ்த்துகின்றனரா என்றும் சில ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். வித்தை (Magic) என்ற சொல்லை மர்மமான ஓர் உலகையும் நாம் எதிர்பார்க்காத சாத்தியப்பாடுகளையும் வெளிப்படுத்தும் ஒரு விடயமாக தென்படுகிறது. ஒரு வகையில் நாம் புராதன கால மனிதரின் பேராசைகளையும் அவர்களது அறிவு நுட்பத்தையும் அது எதுவாக இருப்பினும் அறிந்து தெரிய முற்படுவது பயன்மிக்கதாகவும் இருக்கும். பகுதியளவில் வித்தை என்பது ஒவ்வொருவரிலும் ஏதோ ஒரு வடிவில் மறைந்துள்ள ஆற்றல்களை வியத்தகு இயல் கடந்த சக்தியை மறையாமல் நீடித்த நிலைக்கு அற்புதத்தை மனவெளியில் உருவாக்கி நம்பிக்கையூட்டும் இந்த இயல்கடந்த பகுத்தறிவு சாராத நம்பிக்கையின் தொடர்ச்சி தான் இப்பிராந்தியத்தில் ஆடப்படும் தெய்வமாடற் சடங்கின் அடிப்படை அம்சமாகவும் காணப்படுகிறது. அதுவே இச்சடங்கினை காலவோட்டத்தில் மருவி மறைந்து விடாமல் காத்தும் வருகிறது எனலாம்.

வித்தைக் கலையில் 'மந்திர உட்சாடனத்துக்கு' ஒரு கணிசமான இடமுள்ளது. சக்தி வாய்ந்த ஊடகமாக அது தொழிற்படுகிறது. ஏனையோரை அது கட்டுப்படுத்துகிறது, கவர்கிறது, மந்திர வார்த்தைகளை உட்சாடனம் செய்து கவர்ச்சி ஏற்படுத்துவது என்பதன் மூலம், தெய்வம் ஆடுவர் இங்கு மகா சாம்ரத்தியம் வாய்ந்தவர்களாக கணிக்கப்படுகின்றனர். ஆனால் அது ஒரு குறுகிய நேரத்தையே தனது எல்லையாகக் கொண்டிருப்பதும் நோக்கத்தக்கது. இங்கே தெய்வமாடுதலின் போது மொழியானது கவிதை வடிவிலும் சொற்களாகவும், ஆற்றல் மிக்கனவாகவும் வசீயமுட்டுவனவாகவும் மருட்சியூட்டுவனவாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

## தெய்வமாடுவோரின் தோற்றப்பாடு, ஆட்டமுறைமை:

அதிகாலைப்பூசையின் போது தலைமைப்பூசாரியின் வகிபாகம் மிகவும் பிரதானமானது. தெய்வம் ஆடுவோர் பெருமளவுக்கு பெண் தெய்வத்தை (அம்மன்) உருவகிக்கும் வகையில் வர்ணப்பட்டுச்சேலைகளை அணிந்துள்ளனர். அவர்கள் நீராடப்பட்டு அவர்களின் காதுகளில் மந்திர உட்சாடனம் செய்விக்கப்படுகிறது.

ஆய்வு அவதானிப்பின் போது 6 ஆண் தெய்வங்களும் 1 பெண் தெய்வமும் சடங்கிலே ஈடுபட்டனர். தெய்வங்கள் அனைத்துமே நீராடப்பட்டு வேப்பிலைக் கொத்தினை கையில் ஏந்தியதும் அவர்களின் உடலில் ஒரு வகையான நடுக்கம் ஏற்படுகிறது. மெல்லிய அதிர்வாகத் தொடங்கும் அந்த நடுக்கமானது நேரம் செல்லச் செல்ல அதன் கதியும், துரிதமும் அதிகரிக்கிறது. அத்துடன் ஆட்டமுறைமையில் ஒரு வகையான தாளத்தட்டையும் அவதானிக்க முடிகிறது. இதன் அழகியல் அம்சம் தனியே ஆராயப்படவேண்டியது. தெய்வமாடுவோரின் ஆட்டமுறைமைக்கு ஏற்ப உடுக்கை இசைக்கப்படுகிறது.

## கட்டுக்கூறுதலும், மக்கள் நம்பிக்கை மரபும்:

கிராமிய சமயத்தை நெறிப்படுத்தும் சில நம்பிக்கை ஓட்டங்களை நாம் முடிந்த முடிபாக வரையறுக்க இயலாது. தெய்வமாடுவோர் கூடி நிற்கும் அடியார்களில் ஒருவர் மீது தண்ணீரைத் தெளித்து அருகே அழைத்து அவர்களோடு உரையாடுகின்றனர். அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை விசாரிக்கின்றனர் தீர்வுரைக்கின்றனர். எவ்வாறாயினும் தெய்வமாடுவோரின் சொல்லாடல் அல்லது மொழிப்பிரயமானது புரிந்து கொள்வதற்கு சிரமமாக உள்ளது.

எடுத்துக்காட்டு: குஞ்சனன்(ஆண்பிள்ளை), பூமரம் (பெண் பிள்ளை). இத்தகைய சொல்வழக்காறுகள் எவ்வாறு உருவாகின என்பதற்குப் புலமைத்துவமான தெளிவான வியாக்கியானத்தையும் பெறமுடியாதுள்ளது. இதனைவிட எத்தகைய தெய்வமுன்றலில் இச்சடங்கானது நிகழ்த்தப்படுகிறது என்பதையும் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

- நரசிங்கர்
- பத்தினி அம்மன்
- பிரத்தியங்கராதேவி
- நாகதம்பிரான்
- பத்தினியம்மன்
- ஆஞ்சநேயர்
- பேச்சியம்மன்
- நீலயமடாதை அம்மன்
- முல தெய்வமான காளியம்மன்

இவற்றுள் பிரத்தியங்கரா தேவிக்கு பெண்தெய்வம் மட்டுமே ஆடுவதும், மகப்பேறு இல்லாத தம்பதியினருக்கு மருந்து அளிப்பதும் அதனால் பலர் பயனடைந்திருப்பதும் சிறப்பான அம்சமாகவே உள்ளது. ஒவ்வொரு தெய்வமுன்றிலும் நிகழ்த்தப்படுகின்ற சடங்கிலே குறுகிய வேறுபாடுகள் அவதானிக்க முடிகிறது.

## மானிடவியலாளர்களின் சிந்தனைகள்:

மனிதர் அல்லது மனித சமூகமானது தன்னைத்தானே வழிபட முற்பட்டதன் விளைவே சமயம் என்பார் டேர்க்கீம். இயற்கை பிரபஞ்சத்தில் வாழ்வியலை நிகழ்த்த முற்பட்ட மாந்தருக்கு விடை தெரியாத வினாக்களுக்கு விடையாகின்ற ஒன்றாகவும் நாம் இந்த தெய்வமாடற் சடங்கினைக் கருதலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிந்திய காலகட்டத்திலேயே சடங்கியலை விஞ்ஞான பூர்வமாகக் கற்கின்ற முயற்சியானது மானிடவியல் தளத்தில் ஒரு வகையான தொழிற்பாட்டுவாதம் அதற்கு மலினோங்ஸ்லி முதலியோர் செழுமை சேர்த்தனர்.

அது சமயத்தை புறவயமாக நின்று கற்றுக்கொள்ள முற்பட்டது. சடங்குமுறைமை, விசேட உடை, பாடல், மந்திரங்கள், நடனம், இசைக்கருவிகளை இனக்குழு நிலையில் வைத்து ஆய்வு செய்தது. குறியீடுகளின் நுண்பொருளையும் கலந்துரையாட முற்பட்டது. இந்த இடத்தில் (Victor Turnor) விக்டர் டேர்னரின் ஆய்வுகளும் சிந்திக்கத்தக்கனவாக உள்ளன. அவர் Nedumbu இன மக்களின் ஒருவகையான சடங்கு பற்றி ஆய்வு செய்து, அதன் வழியாக சடங்குகளின் பண்பு நடத்தைக்கோலங்கள், நம்பிக்கை முறைமைகள் பற்றி விரிவான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அடையாளங்கள், பௌதிகப்பொருட்கள், நடவடிக்கைகள், சொற்கள், சைகை மொழிகள், ஒலிக்குறிப்புகள், நிகழ்வுகள் இவை பற்றிய புலப்பதிவுகளையும் தன் ஆய்வில் எடுத்துரைத்துள்ளார். சடங்கென்பது ஒழுங்கமைக்கப்பட்டதும் தொடர்வரிசையுமான நிகழ்வென்பது அவரது கருதுகோள். அதனை நாம் இங்கு நிகழ்த்தப்படும் தெய்வமாடற் சடங்கிலும் பிரதியீடு செய்யலாம்.

## அடியார்களின் எதிர்பார்ப்புகள்:

ஆய்வுச் செயன்முறையின் போது பங்குபற்றலின் அடியாக இச்சடங்கினை ஊடகமாகக் கொண்டு அடியார்கள் வெவ்வேறு எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளமை புலனாகிறது.

- நாட்பட்ட அல்லது தீராத நோய்களைத் தீர்த்துக் கொள்ளுதல்.
- தமது தொழில் முயற்சிகளில் மேம்பாடு அடைதல்.
- கருவளம் வேண்டி நிற்றல்.
- அமானுஷ்யமான அல்லது பித்துநிலை சார்பான நோய்க் குறிகளில் இருந்து விடுதலை பெறுதல்.
- எதிரிகளின் தொல்லையிலிருந்து மீளுதல்.
- கடன்தொல்லை, வறுமை நீங்கப்பெறுதல்.
- மனஅமைதி, வாழ்க்கையில் சுபீட்சம் அடைதல்.
- சூனியம் போன்ற தொல்லையிலிருந்து விடுபடுதல்.

## முடிவுரை:

சமயம், சடங்கு பற்றிய மானிடவியலில் தெய்வமாடற் சடங்கு தொடர்பான ஆய்வும் முதன்மை பெறுவதாகும் கிராமியச் சமயத்துடன் இணைந்த நிலையில் மட்டக்களப்புக்கு உரித்தான ஆகமம் சாராத வழிபாட்டு முறைமையினுள் இச்சடங்கு மிக நீண்டதொரு தொடர்ச்சித் தன்மையினையும் பண்பாட்டு அசைவியக்கத்தையும் புலப்படுத்தி நிற்கிறது. பாரம்பரியமாகவே தெய்வம் ஆடுவோர் குடும்ப மரபின் ஊடாக இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சடங்கு நிகழாத காலக்கட்டத்தில் சாதாரண மானிடராக நிற்பவர்கள் தெய்வமாகும் நிகழ்வினுள் பங்குபற்றும் போதில் அவர்களின் பிரதிமையும் சமூக மதிப்பீடும் தெய்வீக அந்தஸ்துக்கு உயர்ந்து விடுகிறது. அவர்களின் உடலை ஊடாகமாகக் கொண்டு தெய்வமானது உள்ளுரைந்து வாக்குக்கூறுவதாக நம்பப்படுகிறது. இது பிரபஞ்ச சக்தியுடனான ஒரு வகை ஆற்றல் எனலாம்.

டைலார், மலினோங்ஸ்கி, டேர்க்கீம், லாங், பிமறஸர், ஹோமன்ஸ், ஹோவல்டாய், மிஸ்கில்மன், குளுக்மன் முதலான பல்வேறு ஆய்வாளர்களின் மானிடவியல் தழுவிய கோட்பாட்டுச் சிந்தனைகளும் இங்கே ஓரளவு இணைந்து செல்கின்றன. இத்தகைய சடங்கின் உண்மைத்தன்மை, விஞ்ஞான நிரூபணத்தன்மை பற்றிய கேள்விகளும் எழாமல் இல்லை. எவ்வாறாயினும் மட்டக்களப்பு பிராந்தியத்துக்கே உரித்தான பத்ததி வழிபாடும் சமஸ்கிருத மயமாகாத நிலையும் உள்ளூர்ப் பண்பாட்டுப் பேணலின் பற்றுறுதியும் ஒருவகையான பயபக்தியும் மாந்தரின் தொய்வடையாத நம்பிக்கையின் உறுதிப்பாடும் இச்சடங்கின் தொடர்ச்சிக்கு வழியமைக்கின்றன.

இது ஓர் ஆரம்பநிலை ஆய்வு முயற்சி ஆகும். இன்னும் தேடவும் பதிவுசெய்யவும் பல அம்சங்கள் தொக்கியுள்ளன என்று கூறிக்கொள்ளலாம்.



sasitharan.chandrasekaran@thaiveedu.com



# கிளிநொச்சி மண் ஈந்த தீரன்
# ஞானப்பிரகாசம் ஞானராஜா

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் எழுபதிலிருந்து எண்பது வரையான பத்து ஆண்டுகள் மிக முதன்மையானது எனக் கருதலாம்.

1970-ம் ஆண்டு இலங்கையின் ஆட்சிபீடம் ஏறிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசு, தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிங்கள வர்களுக்கும் அதிகாரச் செறிவுமிக்க ஆட்சியையே வழங்கி யது. இந்த அரசுக்கு எதிராகச் சிங்கள மக்கள் மேற்கொண்ட பொதுவுடமைச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சேகுவேரா புரட்சி இலங்கை வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இது தோல்வியில் முடிந்திருந்தாலும் மக் களிடையே புதியதொரு சிந்தனைத்தளத்தைத் தோற்றுவித்தி ருந்தது.

இலங்கை அரசு 72-ம் ஆண்டில் இலங்கையைப் பௌத்த சிங்களக் குடியரசு நாடாக அறிவித்தது. இந்த அறிவிப்பு இலங்கை முற்றிலும் சிங்களப் பௌத்தர்களுக்கு உரியது என்பதையும் ஏனையோர் இரண்டாம் தர குடிமக்களே என்ப தையும் மறைமுகமாக வெளிப்படுத்தியது.

இதே காலப்பகுதிகளில் தமிழர்கள் மீதான பல்வேறு ஒடுக்கு முறைகளை இந்த அரசு மேற்கொண்டது. இதே காலகட்டத் தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் என்னும் இன விகிதாசார உயர்கல்வி முறை பெருமளவு தமிழ் மாணவர்க ளைப் பாதித்தது. இதனால் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய கணிசமான தமிழ் மாணவர்கள் உயர்கல்வியை இழந்திருந்த னர்.

இலங்கை அரசின் பேரினவாத நடவடிக்கைகளை எதிர்த்து, அன்றைய தமிழரசுக்கட்சித் தலைவராக இருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

தொடர்ந்து தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் பிறரும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்கின்ற புது அரசியல் தளத்தை உருவாக்கின. இலங்கை அரசுக்கு



எதிரான தமிழர்களின் ஒன்றிணைந்த இயக்க நிலை தமிழர்க ளுக்கு ஊக்கத்தையும் போராட்ட குணத்தையும் ஏற்படுத்தி யது.

72-ம் ஆண்டின் பின்னர், குறிப்பாகத் தரப்படுத்தல் என்னும் கல்விமுறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், தமிழ் இளைஞர்களின் திரட்சி நிலை ஆங்காங்கே அவதானிக்கப் பட்டது. இத்தகைய திரட்சிநிலையின் ஒரு முகமே சிவகுமாரா-னின் முயற்சியும் எழுச்சியும். இவ்வாறானதொரு காலகட்டத் தில் கிளிநொச்சியிலும் ஓர் இளைஞர் அணி திரட்சி கொண் டது. அந்த அணியில் முக்கியமான ஒருவராகக் கருதப்பட்ட வர் தான் திரு. ஞானப்பிரகாசம் ஞானராஜா. பரந்தன், குமரபு ரத்தில் வாழ்ந்த தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளரான ஞானப்பிரகாசம் அவர்களின் மூத்த மகன் திரு. ஞானராசா.

இனம் சார்ந்த அரசியல் செயற்பாடுகளில் இளவயதிலிருந்தே ஈடுபாடு கொண்டவராக இருந்தார். 70-களின் பின்னர் இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்புச் செயற்பாடுக ளில் எல்லோரையும் போலவே வெறுப்புக் கொண்ட இவர் இளைஞர்களோடு இணைந்து பல வழிகளிலும் செயற்பட் டார். தெற்கில் ஏற்பட்ட சேகுவேரா புரட்சி இந்த இளைஞர்க ளுக்கு ஒரு உந்துசக்தியாக இருந்திருக்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒரு தளத்தில் செயற்படத் தொடங்கியபோது இத்தகைய தமிழ் இளைஞர் அணிகள் எங்கும் வலிமையுற்றன. கிளி நொச்சி மாவட்டத்திலும் ஞானராஜா, இவருடைய தம்பி, ராஜன் எனப்பட்ட ஞானசேகரம் போன்றோர் வலுவான தலை மைகளாகத் திகழ்ந்தனர். இவர்களுடைய பல துணிச்சலான செயற்பாடுகளே இளைஞர்கள் ஒன்று திரளக் காரணமாகவும் இருந்தது.

துடிப்பு மிக்க இந்த இளைஞர் அணிகள் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை அவ்வப்போது முன்னெடுத்தன. தொடர்ச்சியான இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக அவ்வேளை முன்னின்று போராடிய இளைஞர்களான மாவை சேனாதிராஜா, காசி ஆனந்தன் உள்ளிட்ட 45 பேரை இலங்கை அரசு கைது செய்தது. இதை எதிர்த்து மாவட்டங் கள் தோறும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில், நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற போராட்டத் தில் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி, ஞானராஜா, பாவை. ஜெயபாலன் போன்றோர் கைதாகி சிறை யில் அடைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட் பாளருக்கு எதிராகக் களம் இறக்கப்பட்ட ஆளுங்கட்சி வேட் பாளரும் அவருடைய ஆதரவாளர்களும் அரசு அதிகாரத் தைப் பயன்படுத்திப் பல்வேறு வன்முறைக் களங்களை கிளி நொச்சியில் உருவாக்கினர். இதை எதிர்த்தும் அவர்களை அடக்கியும் மக்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளைப் போக்கிய வர்களுள் இளைஞர்களின் பங்கு முக்கியமானது. இதில் ஞானராஜா மிகவும் குறிப்பிடத்தக்கவர். எதற்கும் பயப்படாத இவருடைய சுபாவம் எங்கும் இவரை முன்னரங்கில் நிற்க வைக்கும்.

ஆளுங்கட்சி ஆதரவைக் கொண்ட காவல்துறை, எது எங்கு நடந்தாலும் ஞானராஜாவை கைது செய்து சிறையில் அடைப் பதையே வழமையாகக் கொண்டிருந்தது. 5, 6 நாட்கள் கிளி நொச்சிக் காவல்நிலையத்தில் அடைக்கப்படுவதும் அங்கி ருந்து மீளும்போது நேராக மருத்துவமனைக்குச் சென்று அடி காயங்களுக்கு மருத்துவம் பார்ப்பதுவும் வழமையான தொன்று.

வடகிழக்கில் தமிழரின் ஒருங்கிணைந்த ஆதரவுடன் 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றி பெற் றது. கிளிநொச்சியில் திரு. ஆனந்தசங்கரி நாடாளுமன்ற உறுப்பினராக, அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறு வதற்கு அரும்பாடுபட்டவர்கள் இளைஞர் அணியினரே. கிரா மங்கள்தோறும் கூட்டங்களை ஒழுங்குசெய்து பேச்சாளர்க ளைப் பேச வைத்து, இனவிடுதலை சார்ந்த விழிப்புணர்வை ஊட்டியதில் திரு. ஞானராஜாவுக்குப் பெரும்பங்கு உண்டு.

விளையாட்டுத்துறையில் பெரும் ஈடுபாடு கொண்ட இவர் ‘ஜங்பேர்ட்ஸ்’ என்கின்ற விளையாட்டுக் கழகத்தை உரு வாக்கி, இளைஞர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபட வழி காட்டினார். கிளிநொச்சி நகரத்தில் புகழ்பெற்ற விளையாட் டுக் கழகமாக இது திகழ்ந்தது.

1977 தெற்கில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலைகளிலிருந்து தப்பிய தமிழர்கள் வடக்கு நோக்கிச் சென்றனர். அவர்களுள் கணிசமானோர் கிளிநொச்சியைச் சென்றடைந்த போது அவர்களை வரவேற்று உடனடி உதவி களை வழங்கியவர்கள் இந்த இளைஞர் அணியினரே. கிளி நொச்சியில் அமைக்கப்பட்ட 12 முகாம்களில் ஒரு முகாமை திரு. ஞானராஜா பொறுப்பேற்று நடத்தினார். நேர்மையும், வாக்குத் தவறாத போக்கும், உண்மையும், கண்டிப்பும் மிக்க ஞானராஜா அந்த முகாமை மிகத் திறமாக நடத்தினார் என உடனிருந்தோர் தெரிவித்திருக்கின்றனர். அவ்வாறு அகதிக ளாய் வந்தோர் ஆங்காங்கே குடியேறுவதற்கும், நிலைபெறுவ தற்குமான பல்வேறு உதவிகளை இவர் முன்நின்று செய்தி ருக்கின்றார்.

1977 தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் படுதோல்வி அடைந்த எதிரணியினர், அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட் டார். குறிப்பாக இளைஞர் அணி மீது பல்வேறு குற்றங்க ளைச் சுமத்திக் காவல்துறையினரை ஏவிவிட்டார். அனுராத புர விசேட குற்றப்பிரிவால் சந்தேகக் கைதிகளாகக் கைது செய்யப்பட்டு 40 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டவர்க ளுள் திரு. ஞானராஜா அவர்களும் ஒருவர்.

இதுபோன்ற சிறை வாழ்க்கை திரு. ஞானராஜாவை மட்டு மல்ல, பல இளைஞர்களை ஆயுதவழிப் போராட்டத் திசைக் குத் திருப்பியது என்பதே வரலாற்று உண்மை.

1979, 80-களில் மருத்துவர் ராஜசேகரம், டேவிட் ஐயா போன் றோரது முனைப்பில் வன்னிக் காடுகளில் தமிழர்கள் குடியேற் றப்பட்டனர். இந்தச் செயற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களும் பங்கேற்று, காடுகளைத் துப்பரவு செய்து குடில்கள் கட்ட உதவினர். இப்பணியிலும் திரு. ஞானராஜா வும் பங்காற்றினார்.

ஆயுதப் போராட்ட விடுதலைச் செயற்பாடுகளில் தன்னை

இணைத்துக் கொண்ட ஞானராஜா அவர்கள் இலங்கையில் ஏற்பட்ட இறுக்கமான போர்ச்சூழல் காரணமாகவும் இலங்கை அரசின் கடுமையான அடக்குமுறைகளாலும் தமிழகம் சென்று வாழத் தொடங்கினார்.

சமூகச் செயற்பாடுகளோடு ஒன்றி இயங்கிய அவர் தமிழகத் திலும் தன்னுடைய தம்பி ராஜனோடு சேர்ந்து பல்வேறு சமூ கச் செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இவ்வாறு தமிழகத்துக்குப் பெயர்ந்தோர் பலர் வெளிநாடுக ளில் குடியேறியிருந்தனர். அவ்வாறான வாய்ப்புகள் அவ ருக்கு இருந்தும் அவர் பிற நாடுகளுக்குச் செல்ல விரும்பாது தமிழகத்திலேயே தங்கித் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார்.

இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்றோர் பலர் தமிழக மெங்கும் பல முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். முகாம்க ளிலுள்ள சிறு பிள்ளைகளை அழைத்துச் சென்று பெங்கரில் ஓர் கல்வி நிலையத்தை உருவாக்கி அவர்களுக்குக் கல் வியை ஊட்டும் செயற்பாடுகளில் இவர்கள் பெரும் பங்காற்றி னார். இதன் வழியே நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தங்கு தடையற்ற கல்வியைப் பெற்றுச் சிறந்தனர். இங்கு பயின்ற பல மாணவர்கள் இன்று தொழிற்துறைகளில் சிறந்து விளங்கு வதைக் காணலாம். இப்பணி இன்றளவிலும் திரு. ஞானராஜா, திரு. ராஜன் போன்றோர் ஆற்றிய சிறந்த பணியாகக் கருதப்ப டுகிறது.

எழுபதுகளின் தொடக்கத்திலேயே சமூக அரசியல் செயற்பா டுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட ஞான- ராஜா, இடையே பல இடர்கள் ஏற்பட்டபோதும் தளர்ந்து போகாது தன் சகோதரரான ராஜன் அவர்களின் அனைத்துப் பணிகளுக்கும் இறுதிவரை துணையாக நின்றார்.

திரு. ஞானராஜா அவர்கள் கடந்த மாதம் சென்னையில் மறைந்தபோது, உலகின் பல திசைகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் குவிந்திருந்தன. அவரால் நன்மை பெற்றோர், அவருடைய பணிகளின் சிறப்புகளை உணர்ந்தோர் எனப் பலரும் தங்கள் இரங்கல்களைத் தெரிவித்திருந்தனர். திரு. ஆனந்தசங்கரி அவர்கள் நீண்ட, உருக்கமான இரங்கல் செய் தியினை அனுப்பியிருந்தமையையும் இங்கு குறிப்பிடலாம்.

தான் சார்ந்து நின்ற தளத்தைவிட்டு இறுதிவரை விலகிச் செல்லாதவராகவும் தனக்குத் தரப்பட்ட பணிகளை, உடல் நலங்குன்றும்வரை தளர்வின்றிச் செய்தவராகவும் வாழ்ந்த திரு. ஞானராஜா பலர் உள்ளத்திலும் நிலைத்து நிற்பார்.

திரு. ஞானப்பிரகாசம் ஞானராஜா கிளிநொச்சி மாவட்ட வர லாற்றில் நிச்சயம் பதிவு செய்யப்பட்டவராகவே இருப்பார். 1970 முதல் 1980 வரையான பத்து ஆண்டுகளே கிளிநொச்சி யின் பொற்காலம் எனக் கருதலாம். அக்காலத்தில் கோலோச்சிய ஞானராஜா உள்ளிட்ட இளைஞர் அணி கிளி நொச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. போற்றுதற்குரியது.





# றொறன்றோவில் ‘நினைவு நல்லது’

மூத்த தமிழ் ஒலி, ஒளி ஊடகர் P. விக்னேஸ்வரன் அவர்களின் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான ஊடக அனுபவங்களை விபரிக்கும் ‘நினைவு நல்லது’ நூல் அறிமுகம், நவம்பர் மாதம் 4-ம் திகதி, சனிக்கிழமை ஸ்காபரோ - கொமாண்டர் பார்க் மண்டபத்தில் நடைபெற்றது.

சரியாக நான்கு முப்பதுக்கு நிகழ்ச்சியை ஆரம்பிக்கும் போதே அனேகமானவர்கள் மண்டபத்திற்கு வந்துவிட்டார்கள். றொறன்றோவில் தமிழ் ஊடக, நாடக, கலை இலக்கிய வட்டத்தில் நன்கு அறியப்பட்ட துஷி ஞானப்பிரகாசம் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கி, தனக்கேயுரிய பாணியில் ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான, அளவான தொனியில் அறிமுகங்களைச் செய்து நிகழ்ச்சியை நடத்திச்சென்றார்.

நிகழ்ச்சி செல்வி. க்ருதி கொட்வினின் தமிழ் வாழ்த்து மற்றும் கனடிய தேசிய கீதத்துடன் ஆரம்பமாகியது. க்ருதியின் தாயார் அருட்செல்வியும் தந்தையார் கொட்வினும் றொறன்றோ தமிழ் ஒலிபரப்புத்துறையில் பணியாற்றியவர்கள்.

தலைவர் துஷி ஞானப்பிரகாசம் அன்றைய நிகழ்வு பற்றிய அறிமுகத்தையும் வரவேற்புரையையும் வழங்கி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

முதல் நிகழ்ச்சியாக ‘நினைவு நல்லது’ நூல் யாழ். பல்கலைக் கழகத்தின் ஊடகக் கற்கைநெறிப் பிரிவினரால் ஓகஸ்ட் மாதம் 29-ம் திகதி அறிமுகம் செய்துவைக்கப்பட்டபோது, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கி நடத்திவைத்த யாழ். பல்கலைக்கழகக் கலைத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் வழங்கியிருந்த சிறப்பான உரையின் ஒளிப்பதிவு, றொறன்ரோ நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்தவர்களுக்குக் காட்டப்பட்டது. இருபது நிமிடங்களுக்கு நீடித்த அந்த உரை, நூல் பற்றிய சிறந்த அறிமுகத்தை அவையோருக்கு வழங்கியது.

தொடர்ந்து றொறன்ரோவில் இயங்கும் ஏழு ஊடகவியலாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

றொறன்ரோவில் முதன்முதலாக 1987-ம் ஆண்டு, ‘தமிழ்ச் சோலை’ வானொலி நிகழ்ச்சியை ஆரம்பித்தவர்களில் ஒருவரான பா. சிறீஸ்கந்தன் வாழ்த்துரை வழங்க தொடர்ந்து, 1991-ஆம் ஆண்டு, றொறன்ரோவில் ‘தேமதுரம்’ வானொலி நிகழ்ச்சியையும் தேமதுரம் வீடியோ சஞ்சிகையையும் ஆரம்பித்த பரம். ஜி. என்று அறியப்படும் பி. ஞானேஸ்வரன் வாழ்த்துரை வழங்கினார். வாழ்த்துரை வழங்கிய பி. ஞானேஸ்வரன் அவரது அண்ணியும் நூலாசிரியரின் துணைவியாருமாகிய சிவ



சக்தி விக்னேஸ்வரனை, நினைவு நல்லது நூலுருவாக்கத்தில் அவர் வகித்த முக்கிய பங்குக்காகப் பாராட்டி கௌரவித்தார். அவரையடுத்து, இலங்கையில் பத்திரிகைத் துறையிலும் பின்னர் வானொலியிலும் பணியாற்றிவிட்டு றொறன்ரோவிலும் நீண்டகாலமாக ‘தமிழர் தகவல்’ சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து இயங்கிக்கொண்டிருக்கும் எஸ். திருச்செல்வம் வாழ்த்துரை வழங்கினார். அடுத்து, இலங்கையில் தமிழ் இலக்கியப் பரப்பில் செயற்பட்டு, றொறன்ரோ வந்த பின்னர் இங்கு பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு, ‘உதயன்’ பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டே கலை

இலக்கிய, சமூக செயற்பாடுகளில் தொடர்ந்து இயங்கும் என். லோகேந்திரலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து, நடேஸ்வராக் கல்லூரியில் படித்தவரும் மொன்றியல், ரொறன்ரோ நகரங்களில் நீண்டகாலம் தமிழ் ஒலிபரப்புத் துறையில் ஈடுபட்டவரும் 'ஈஸ்ட் எஃப்.எம்.' என்ற பல்கலாசார வானொலிச் சேவையின் அதிபராக விளங்குபவருமான நடா ராஜ்குமார் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்றவரும் இப்போது ரொறன்ரோவில் தமிழ் என்ரர்ரெயின்மென்ற் தொலைக்காட்சி (Tamil Entertainment Television) சேவையின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாகிய ராஜி அரசரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக, 'தாய்வீடு' பத்திரிகையின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் ஒருவரும் ரொறன்ரோ தமிழ் ஊடகப் பரப்பில் இயங்கிக்கொண்டிருப்பவருமான கந்தசாமி கங்காதரன் நினைவு நல்லது தொடரை ஆறு வருடங்களாக வெளியிட்ட தாய்வீடு பத்திரிகையின் சார்பில் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த வாழ்த்துரைகளைத் தொடர்ந்து, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் நூலாசிரியரையும் அவரது துணைவியாரையும் வாழ்த்தி கௌரவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தலைவர் துஷி ஞானப்பிரகாசம் தனது தலைமையுரையை ஆற்றினார். அவரது உரை சுருக்கமாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது.

தொடர்ந்து, 'நினைவு நல்லது' நூலை உருவாக்குவதில், நூல் வடிவமைப்புக் கலைஞராகத் தனது பணியை மிகச் சிறப்பாகச்செய்த எஸ். அமுதீசன் அவர்கள் சபையோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, அவர்களின் பலத்த கரகோசத்துக்கு மத்தியில் நினைவுச் சின்னமொன்றை வழங்கி கௌரவிக்கப்பட்டார். பொதுவாகவே நூல் வெளியீட்டில் யாருமே கண்டுகொள்ளாத, ஆனால் மிக முக்கியமான பங்களிப்பை



வழங்குபவர்கள் நூல் வடிவமைப்புக் கலைஞர்கள். இந்நிகழ்வு ஒரு முன்னுதாரணமாக இருந்தது.

வரைகலை வடிவமைப்புக் கலைஞர் அமுதீசனைப் பாராட்டியதைத் தொடர்ந்து ஆய்வுரை இடம்பெற்றது.

கனடியத் தமிழ் மக்களின் மத்தியில் ஓர் ஒலி, ஒளி ஊடகராக நன்கு அறியப்படும் உதயன் எஸ். பிள்ளை, எந்தப் பணியை மேற்கொண்டாலும் அதை மிகச்சிறப்பாக ஆற்றுவதைத் தன் இயல்பாகக் கொண்டிருப்பதற்கேற்பத் தனது ஆய்வுரைப்





பணியை ஆற்றினார். அந்தப் பெரிய நூலில் உள்ளவற்றில் முக்கியமான சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, மிகச் சிறப்பாகத் தனது ஆய்வுரையை வழங்கினார் உதயன் எஸ். பிள்ளை.

ஆய்வுரையை அடுத்து, இலங்கையின் மற்றுமொரு பிரதான தமிழ் ஊடகர் கௌரவிக்கப்பட்டார். இந்த கௌரவம் நினைவு கூரலாக அமைந்தது. தமிழ் ஊடகப்பரப்பிலே இலங்கையிலும் தொடர்ந்து கனடாவிலும் இயங்கி, தமிழ் நேயர்களுக்கு



நன்கு அறிமுகமான காலஞ்சென்ற கமலா தம்பிராஜா அவர்களின் ஊடகச் சேவைகளை நினைவு கூர்ந்து, ஐந்து நிமிடக் காணொலி சபையோருக்குக் காட்டப்பட்டது. அந்தக் காணொளிக்கான அறிவிப்பை எம்மத்தியில் வாழும் மற்று மொரு புகழ்பெற்ற வானொலி, தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளரான மூத்த ஊடகவியலாளர் மனோகரி சதாசிவம் அவர்கள் வழங்கியிருந்தார்.

காணொலியின் முடிவில் ரொறன்ரோவில் வசிக்கும் கமலா தம்பிராஜா அவர்களின் நெருங்கிய உறவினரான எஸ். ராஜ்குமார் அவர்களும் கமலா தம்பிராஜாவின் சகோதரரின் மகளாகிய ஷெரோன் மகேந்திரனும் 'நினைவு நல்லது' நூலைப் பெற்றுக்கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது. நன்றியுரையையடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. நூலாசிரியரின் சிறிய தாயார் திருமதி. கனகாம்பிகை சுப்ரமணியம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தகசேவையின் மூத்த அறிவிப்பாளர் நாகலிங்கம், ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களை ரொறன்ரோவில் ஆரம்பித்த காலத்தில் முன்னின்று உழைத்த வைரமுத்து சொர்ணலிங்கம், மருத்துவர் வி. சாந்தகுமார், செல்லத்துரை பிரபாகரன், மோகன் நடராஜா, குமரன் சிவபாதசுந்தரம், வி. ஜெயராமன் ஆகியோருக்கும் ஈழத்து மெல்லிசைப் பாடல்களைத் தயாரிக்க ஆரம்பித்த இசையமைப்பாளர்களில் ஒருவரும் ரொறன்ரோவில் வானொலி, தொலைக்காட்சி சேவைகளை ஆரம்பித்து நடத்தியவருமான எம்.பி. கோணேஸ், 'விளம்பரம்' பத்திரிகையின் ஆசிரியர் திருமதி. ராஜா மகேந்திரன், பேராசிரியர் பொன். பாலசுந்தரம், முனைவர் பார்வதி கந்தசாமி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைப் பிரிவின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி, இலங்கை வானொலியின் மூத்த அறிவிப்பாளரும் தயாரிப்பாளருமாகிய எஸ். நடராஜா அவர்களின் புதல்வியும் ரொறன்ரோவின் முன்னணி நடன ஆசிரியையுமான நிரோதினி பரராஜசிங்கம் மற்றும் எஸ். ஸ்கந்தராஜன் ஆகியோருக்கு சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டதோடு, அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்தவர்களுக்கு நூலாசிரியர் பிரதிகளை வழங்கினார்.

மண்டபம் நிறைந்த ஆதரவாளர்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்ற, 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா பிரதிகள் வழங்கலோடு இனிதே நிறைவுபெற்றது.





# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்


வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


ஆதி சிலம்பம்
தற்காப்புக் கலைக் கூடம்
மன-அழுத்தம் நீங்கி, உடல்நலம்,
வலிமை, ஞாபகத்திறன்,
கவனத்திறன், தன்னம்பிக்கை பெற
தமிழர் பாரம்பரியக் கலையான
சிலம்பம்(கம்பு) பயில
தொடர்பு கொள்ளவும்.
சிலம்பத்துடன் யோகக்கலையும் கற்பிக்கப்படும்
வலிமை
உறுதி
தெளிவு
ஒழுக்கம்
Aathi Silambam
Martial Arts Academy
416-556-6130
210 Silver star blvd., Unit #850
Scarborough, ON, M1V 5J9
aathisilambam.com


சிந்தனைக் களம்
(இசை, நடனம்)
இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.
Zoom ID: 833 5062 2591 Passcode: 605 384
09 டிசம்பர் 2023 (சனிக்கிழமை) 8:00pm-10:30pm (கனடா- ரொறன்ரோ)
(இலங்கை, இந்தியா - 10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை 6:30am-9:00am
(சிட்னி - 10 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை 12:00pm-2:30pm)
உரைத்தொடர் - 35
உரைப் பொருள்
'திருவாசகத்தில் மகளிர் ஆடல் - பாடல்'
உரையாளர்கள்
முனைவர் ராம. கௌசல்யா - திருமதி மதுவந்தி பத்ரி
(Retired Principal, Tamil Nadu
Govt Music College, Thiruvaiyaru)
(Vocalist performer, Teacher,
Culture host,Special educator)


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 15 டிசம்பர் (வெள்ளிக்கிழமை 2023 )
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி ( கனடா ரொறன்ரோ )
நாள் : 16 டிசம்பர் ( சனிக்கிழமை 2023 )
நேரம் : காலை 1:00 – 3:00 மணி ( இலண்டன் )
காலை 6:30 – 8:30 மணி (இலங்கை, இந்திய )
பிற்பகல் 12:00 – 2:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )
"கம்பனைப் புரிந்துகொள்ளுதல்"
உரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
Zoom ID: 84777257162 Passcode: 554268

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272






- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது

Amazon HEALTHCARE.COM

416-264-8787
www.4162648787.com

2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8





HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell
Your Home
call me 24-7





Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com



With best compliments from

ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

Bus: 416.750.8118
www.gnanamsstudios.com

2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)





Digitally Redefined

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# நவ உலகின் அறிவுப்பெருக்கில் நிமிர்ந்து நிற்க வழியமைக்கும் வாசிப்புப் பண்பாடு

– அகமட் பிஸ்தாமி

21-ஆம் நூற்றாண்டில் வெற்றிகரமாகத் தன் வாழ்வை மாற் றத் துடிக்கும் ஒருவர் சகல விதமான அறிவியல்சார் சவால்களுக்கும் முகங்கொடுத்து நின்று நிலைத்துத் தாக்குப் பிடிக்க வேண்டுமாயின் அவரிடம் வாசிப்புப்பழக்கம் கட்டாயம் இருக்க வேண்டும். அது பாடசாலை மாணவர்க ளுக்கு மட்டுமன்றி சகல துறையினருக்கும் கட்டாயம். வாழ்நாள் நீடித்த life long education நிலையான கல்வியை அடைய வேண்டுமாயின் வாசித்தே ஆக வேண்டும். இதுவரை பொழுது போக் காகக் கருதப்பட்டு வந்த வாசிப்பு, சமகா லத்தில் ஒரு திற னாக மாறியுள்ளது. வாசிப்பை வெறுமனே விரும்பியவர்கள் அதனை வெறுங்கலையாக கருதிய காலம் முடிந்துள்ளது. அது கட்டாயமாகக் கற்றுக்கொள்ளவும் பற் றுக்கொள்ளவும் வேண்டிய வளர்ச்சியடையும் துறையாக மாறி யுள்ளது. வாசிப்புக்கு வழிகாட்டும் துறையாக நூலக விஞ்ஞானம் library science வளர்ச்சி கண்டுள்ளது. அது சார்ந்த கற்கைகள் நீண்ட பாடநெறிகள் உருவாகியுள்ளன. கலாநிதி கற்கை வரை அது அகல விரிகின்றது.

அறிவு சார்ந்து தன்னைத் தொடர்ந்தும் இற்றைப்படுத்திக் கொள்ளும் நபர்கள் மட்டுமே அறிவுலகில் புத்திஜீவிகளாக இருக்க முடியும். அதனால் ஒவ்வொருவரும் தாம் சார்ந்த துறையில் நின்று நிலைக்கவும் நிமிர்ந்து நிற்கவும் வாசித்தே யாக வேண்டும். தமது துறை சார்ந்து நின்று இற்றைப்படுத்து updation புதுமைகளைப் படைக்க வேண்டும். அதுவே துறை சார்ந்த ஆக்க மலர்ச்சியாகவும் creativity புத்தாக்கமாகவும் innovation கருதப்படும்.

வாசிப்பு என்பது ஒரே நேரத்தில் அத்தியாவசியத் திறனாக அமைகிறது. essential skill வாசிப்பற்று நிற்பதும் வாசிக்க மறுப்பதும் வாழ மறுப்பதாகும். 'ஒரு புத்தகம் ஒரு மனிதருக்கு சமன்' என ஆங்கிலக் கவிஞர் மில்டன் கூறுகிறார்.

உலக வரலாற்றில் தனக்கெனத் தனியிடம் பிடித்த நூற்றாண் டாக இருபத்தோராம் நூற்றாண்டை அடையாளப்படுத்தி விட லாம். காரணம் முன்னெப்போதும் இல்லாத அளவு அறிவுப் பெருவெளியில் பலத்த மாற்றங்கள் இந்த நூற்றாண்டில் தான் நிகழ்ந்து சாதனை படைத்தன. மனித குல மேம்பாடும், நீட்சி யும் இந்த நூற்றாண்டில் என்றுமில்லாதவாறு பலரதும் கவன யீர்ப்பைப் பெற்றுள்ளமையும் குறிப்பிட்டே ஆகவேண்டிய ஒரு விடயம். மனித குல முன்னேற்றம் தற்போது அறிவில் தான் தங்கியுள்ளது. மட்டுமன்றி, உந்துசக்தியாகவும் ஊக்கியாக வும் தொழிற்படுகிறது.

21-ம் நூற்றாண்டு knowledge based era - அறிவு மைய நூற் றாண்டாகப் பரிணமித்துள்ளது. அடையாளம் காணப்பட்டுள் ளது. அறிவும் தகவலும் எண்ணற்ற வகையிலும் எல்லையற்ற விதத்திலும் பெருகி பிரவாகித்து ஊற்றெடுத்து வெடித்துச் சிதறுகின்றன. அறிவு புதிது புதிதாக உருவாக்கப்பட்டு வடிவ மைக்கப்படுகிறது. புத்தம்புதுச் சித்தாந்தங்கள், கோட்பாடு கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இன்னும் சில கட்டுடைக்கப்ப டுகின்றன. விமர்சிக்கப்படுகின்றன. இன்னும் சில இருந்த இடம் தெரியாமல் முகவரி தொலைத்துக் காலாவதியாகி விடு கின்றன. இன்னும் பல சிந்தனைகள் மீளுருவாக்கம் பெற்று, புது வடிவம் பெற்று, மனித வாழ்வை வளமூட்டி விடுகின்றன. பிராந்தியச் சிந்திப்பிலிருந்து விடுபட்டு உலகளாவிய சிந்திப் பின் தீவிர பரவலாக்கத்தில் மிகவேகமாக ஓடியாக வேண்டிய கடப்பாடு கொண்டவராக மனிதர் வாழ்கின்றனர். இணையம் இத்தனைக்குமான வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. national citizen நிலையில் இருந்து global citizen எனும் உயர்ந்த இடத்துக்கு வாசிப்பு அவர்களை நிலைமாற்றம் செய்கிறது.

அறிவார்ந்த அடிப்படையில் தான் அனைத்தும் கட்டியெழுப் பப்படுகின்றன. ஆளப்படுகின்றன. அறிவு மையப்பட்டதாக, அறிவை மையப்படுத்தியதாக அனைத்தும் தம்மை ஆக்கிக் கொண்டுள்ளன. அறிவற்ற பூச்சியங்களால் அறிவார்ந்த தளத்தில் இயங்கமுடியாதபடி அனைத்தையுமே அறிவு ஆட் கொண்டுள்ளது. கல்விசார் உயர் நிறுவனங்கள் கூடத் தம்மை இன்னுமின்னும் அறிவு மையப்படுத்தியுள்ளன. பழமைசார் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு புதியனவற்றை உள்வாங்கி யாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் தான் நிமிடத் துக்கு நிமிடம் பத்திரிகைகளும். புதினங்களும், ஆய்வுகளும், சஞ்சிகைகளும், நூல்களும், அனைத்து வகையான அச்சுக ளும் இணையத்தில் அடிக்கடி தரவேற்றப்படுகின்றன. நிமிடத் துக்கு நிமிடம் அறிவு மாற்றம் காண்கின்றது.

அறிவுப் பிரவாகத்தின் வேகம் முன்னெப்போதும் இல்லாத ளவு இரட்டிப்பாகப் பெருக்கெடுத்து வருகிறது. மனித ஆயுள் இத்துணை அறிவுத் தொகுதிகள் குறித்த குறைந்தபட்ச அறிமுகத்தையாவது பெற முடியாத அளவு இவை அதிக மாக உள்ளன. அறிவு உருவாக்கப்படும் அதே நேரத்தில், வேகத்தின் கதியில் இணைய வாயிலாகப் பரிமாற்றப்பட்டு



பரிவர்த்தனை நிகழ்ந்து பரவலாக்கப்படுகிறது. தொடர்பாடலை மிகவுமே இலகுபடுத்தி எளிமைப்படுத்தியுள்ள தொழில்நுட்பம் 21-ம் நூற்றாண்டு மனிதருக்கு வாசிப்பையும் இலகுபடுத்தியுள்ளது. இந்நிலையில் நாம் எமது ஊடகங்களை இன்னுமின்னும் செறிவாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். இணைய வசதிகளைப் பயன்படுத்தி வாசிக்கும் பண்பாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறுகிய கால ஆயுளைப் பயன்தரும் வகையில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு வசதிகள் கிடைத்தும் வாசிப்பை விட்டும் தொலைதூரம் நகர்ந்தவர்களாக வாழ்ந்து கேளிக்கைக்கும், வினோதத்துக்கும் மாத்திரம் இணையத்தைப் பாவிப்பவர்களாக நாம் மாறக்கூடாது.

இவை குறித்தும் நாம் எதிர்கால தலைமுறையால் நிச்சயம் விசாரிக்கப்படுவோம். எதுவுமே இல்லாத நிலையில் எமது முன்னையோர் எத்தனை விடயங்களை எழுதிப் பாதுகாத்தார்கள். பயன்படுத்தினார்கள் என்பது இந்த நூற்றாண்டில் வாழும் அனைவரும் சிந்திக்க வேண்டிய அம்சமாகும்.

வாசிப்பின் அவசியம், முக்கியம் குறித்து இன்று பட்டிதொட்டி முதல் பல்கலைகழகங்கள் வரை பேசுகின்றன. வாசிப்பு ஏன் அருகி வருகின்றது? அதனைப் பரவலாக்க, அதிகரிக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? இந்தளவு தூரம் இன்றைய இளம் தலைமுறை வாசிப்பை விட்டும் விலகி விரண்டோடுவதற்கு வழியமைத்துள்ள சமூக ஊடகப் பாவனை வழியாகவே, அதனை எப்படி ஜனரஞ்சகப்படுத்தலாம் என்பன குறித்துப் பலரும் அலசி ஆராய்கின்றனர்.

பாடசாலை மாணவர்களிடம் அவதானம் இல்லை. பாடத்தில் சிந்தனையைக் குவியப்படுத்த முடியாதபடி சிந்தனைச் சீர்குலைவும் அவதானமின்மையும் அவர்களைப் பாடாய்ப்படுத்துகின்றன. வாசிப்பையே தனித்த ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டிய அளவுக்கு நிலைமை எல்லை மீறியுள்ளது. வாசித்தலைக் கற்றுக்கொடுக்கத்தான் வேண்டும். 'reading must be caught not to taught' எனும் நிலை மாறியுள்ளது.

வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் பணியை முடுக்கிவிட வேண்டிய கடப்பாடு மேலெழுந்துள்ளது. வீட்டுச் சூழலில் ஆரம்பித்துப் பாடசாலைச் சமூக நிலையங்கள், சமய நிலையங்கள் வரை அது நீடிக்க வேண்டும். வாசித்தல் எனும் சிக்கலான செயற்பாடு நிறுவனமயப்பட வேண்டும். அதன்பாலுள்ள அத்தியாவசியத் தேவை மீளவும் சகல தரப்பாலும் வலியுறுத்தப்பட வேண்டும். இயல்பான ஒன்றாக மாற வேண்டும். இல்லாத பட்சத்தில் செயற்கை நுண்ணறிவு எனும் புதிய அம்சம் மேலோங்கிச் சிந்தனையைப் பிரயோகிக்காத ஒரு தலைமுறையாகப் புதிய தலைமுறை மாறும். வாசிப்பின்பாலான ஈடுபாடு இயல்பாக வர வேண்டுமாயின் தொழில்நுட்பம் எந்த அசுர வேகத்தில் ராட்சத வளர்ச்சி கண்டாலும் கையில் புத்தகத்தை எடுத்து அமைதியான சூழலில் அமர்ந்து நின்று நிதானித்து ரசித்து வாசித்து கலந்துரையாடிக் கருத்துப்பரிமாறி விமர்சித்து புதிய கருத்துக்களை உருவாக்கும் அழகிய அறிவார்ந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதுவே மானுட விழுமியங்களும் மனிதாபிமானமும் தொடர்ந்தும் வேர்விட வழியமைக்கும். அத்தகைய ஒரு சூழலை நோக்கி நகர்வோம்.



bisthamy.ahamed@thaiveedu.com


# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

## மலையகத்தின் ‘இறப்பர்’ வாழ்வியலையும் கவிதைகளாக யாத்தல் வேண்டும்

**– மல்லியப்புசந்தி திலகர்**

**39**

மலையக இலக்கியத்தில் தேயிலையும் அது சார்ந்த வாழ்வியலும், பாடுபொருளாகக் கையாளப்பட்ட அளவுக்கு இறப்பர் பால் வெட்டும் தொழிலும் அது சார்ந்த வாழ்வியலும் பார்க்கப்படவில்லை எனும் குறைபாடு நிலவுகின்றது. இது இன்று மலையகத் தேசியத்தை நிறுவுவதில் உள்ள சவாலாக




வும் அமைந்துள்ளது. இலங்கையின் இறப்பர் தோட்டங்களில் வாழும் தமிழ் மக்கள் மலையகத் தேசியத்துக்குள் இருந்து விலகிச்செல்லும் போக்கு வேகமாக நிகழ்ந்து வருவது ஒரு சவாலாகவே உருவெடுத்துள்ளது. மலையகம் எனும் சொற்றொடரை வளர்த்தெடுப்பதில் முன்னின்ற மலையக இலக்கியமே இந்தக் குறைபாட்டை உடையதாகவுள்ளமையை ஏற்றுக்கொண்டுள்ள எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், அதற்கு அங்கிருந்து படைப்பாளிகளின் வருகையில் உள்ள குறையே காரணம் என்றார். இறப்பர் தோட்டத்தில் இருந்துதான் இறப்பர் சார்ந்த இலக்கியம் எழுத வேண்டும், தேயிலை சார்ந்தோர் அதை எழுதினால் அது கற்பனையாக மாத்திரமே அமையும் எனும் நியாயமான கருத்தையும் வலியுறுத்தினார் (கட்டுரையாளருடனான உரையாடலின் போது).

அந்த வகையில் மத்துகமையூர் ஜோதி, இறப்பர் தோட்டப் பகுதியை வாழிடமாகக் கொண்டவராக அந்த வாழ்வியல் பக்கத்தை ஒரு கவிதையாக எழுதியுள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. மலையகத்தில் கவிதைக்கான சிறப்புச் சிறு சஞ்சிகையாக வெளிவந்த ‘வடம்’ இரண்டாவது இதழில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த மத்துகமையூர் ஜோதி என்ற எஸ். இரத்னஜோதி எழுதிய ‘சாதாரண மனிதனாய்’ எனும் கவிதை, இறப்பர்த் தோட்ட வாழ்வியலை மலையக இலக்கியமாக வார்க்கின்ற கவிதையாக முக்கியத்துவம் பெறுகிறது. 1965-ல் ஈழக்குமார் எழுதிய ‘கத்தி பட்ட இறப்பர் மரச் சுரப்பைப் போல...’ என்ற உவமான வரிகளுக்குப் பின்னர் மத்துகமையூர் ஜோதி எழுதிய இந்த வரிகளையே மலையகத்தில் ரப்பர் வாழ்வியல் சார்ந்து வெளிவந்த கவிதையாகக் கொள்ள முடியும்.

***‘பால் வாளியைத்***
***தூக்கியே உன்***
***பழுத்துப்போன கைகள்***
***கத்தி பிடித்தே***
***கறைபட்ட உன் விரல்கள்...***

***உன் வச்சிரமெடுத்த உடம்பும்***
***வரிசைப்பட்ட அடையாளங்களும் - எம்***
***ஒவ்வொரு வாழ்நாளையும்***
***சுட்டிச் செல்கின்றது...***

***அன்புத் தந்தையே***
***எத்தனை ஜென்மம் எடுத்தாலும்***
***நீயே!***
***என் தந்தையாய்***
***உனக்கே நான் மகனாய்***
***பிறக்க வேண்டும்...’***

என நிறைவு பெறுகிறது. ஜோதி-யின் கவிதை. இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் தேயிலை சார் படைப்புகளில் தாய் (பெண்) முதன்மைப்படுத்தப்படுகின்ற அதே வேளை இறப்பர் சார் படைப்பில் தந்தை (ஆண்) முதன்மைப்படுத்தப்படுகின்றமையாகும். எனினும் மத்துகமையூர் ஜோதி போன்றவர்களிடமிருந்து தொடர்ச்சியாக இறப்பர் வாழ்வியல் சார் படைப்புகள் வெளிவராமை வருத்தமளிக்கின்ற செய்தியாகவே அமைகின்றது.

2005 சிந்தனை வட்டம் வெளியீடாக 'மலைச்சுவடு' எனும் தொகுப்பைத் தந்தவர் மாரிமுத்து சிவகுமார். இவர் இரத்தினபுரி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் நுவரேலியா மாவட்டம் ஹட்டனில் பலகாலம் வாழ்ந்ததனால், இரத்தினபுரியில் இறப்பர் இருந்தாலும் தேயிலை வாழ்வியலையே இவரது கவிதைகளில் பரவலாகப் பதிவு பெற்றுள்ளது. பரவலாகப் பத்திரிகைகளில் எழுதிவரும் இவர் இப்போதும் உயிர்ப்புடன் இயங்கிவரும் கவிஞராக அடையாளம் காணப்படக்கூடியவர்.

'மழையில் நனையும் வானம்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கவிதை இவ்வாறு அமைகிறது.

*'மலை*
*தீபாவளி மலிவு விற்பனைக்காகப் பூத்திருந்தது.*
*வானத்தின் கையை இறுகப் பிடித்தப்படி*
*தேயிலைக் கன்று பலூன் விற்பவனைத்*
*திரும்பித் திரும்பிப் பார்த்தப்படி நகர்ந்தது.*

*தேயிலைக் கன்றின் ஆவலறியாத வானம்*
*விரைவாக மளிகைக் கடையொன்றிற்குள் நுழைந்து,*
*தீபாவளிக்குத் தேவையான அத்தியாவசியப்*
*பொருட் களை*
*ஒவ்வொன்றாக விலைகளைக்*
*கேட்டுக் கேட்டுப் பட்டியலிட்டது.*

*வாசலில் அழுதபடி நின்றிருந்த தேயிலைக்*
*கன் றினை*
*மீண்டும் கையில் பிடித்தபடி,*
*மளிகைக் கடை முதலாளியிடம்*
*அவசரமாகத் திரும்புவதாகவும்*
*அப்பொருட்களைத் தயார் செய்யுமாறும்*
*பரிந்துரைத்து விட்டு வெளியே விரைந்தது.*

*வானத்தின் நீலம் தேயிலைக் கன்றின் ஆசை*
*உணரா மல்*
*தனக்குக் கிடைத்த தீபாவளி முற்பணத்திலிருந்து*
*தன் இயக்கத்தினைத் துரிதமாக்குவதாக நினைத்து*
*தேயிலைக் கன்றினைப் பாதையோரத்தில்*
*நிறுத்திவிட்டு*
*சாராயக் கடைக்குள் நுழைந்தது.*


*சற்றில்...,*
*இயற்கை கோபத்தால் திணறியது*
*வானத்தின் மீது தன் ஆத்திரத்தைக் கக்கியது.*
*வானம் அந்த மழையில் நனையத் தொடங்கியது,*
*மழை அடைமழையானது.*

*நகரமெங்கும் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கத்*
*தன் கை நழுவிய தேயிலைக் கன்று*
*மழைக்கு ஒதுங்கி நின்ற பலூன் விற்பவனைப்*
*பார்த்தபடி*
*அந்த வெள்ளத்தில் மிதக்கலானது.*

*அங்கே...*
*அங்கு பெய்யும் மழைப் போலவே*
*வானம் பீறிட்டு கதறியது.*
*ஏன் குறியீடாய் நிறைவு பெறுகிறது.'*

இவரது கவிதை இலங்கையில் மெட்டமைக்கப்பட்ட மெல்லிசைப் பாடல்களாகவும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'அப்புறமென்ன' எனும் தலைப்பில் கவிதைத் தொகுதியைத் தந்தவர் கவிஞர் 'குறிஞ்சி இளந்தென்றல்'. 2006-ல் 'கட்டாந்




தரை' (கனிதா வெளியீடு) எனும் தொகுப்போடு 'கனிவுமதி'-யாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர். புஷ்பராஜ்

எனும் இவரது இயற்பெயரால் யாரும் அறியாத இவரைக் கனி வுமதி எனும் புனைப்பெயரில் பரவலாக அறியப்படும் கவிஞ ராக, ஓவியராகத் திகழ்பவர். சி. பன்னீர்செல்வம், மு.சி. கந்-தையா, மலைத்தம்பி (ஐசக்) போன்ற காத்திரமான கவிஞர் கள் பிறந்த கண்டி மாவட்டம் மடுல்கலப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் தற்போது தலைநகரைத் தளமாகக் கொண்டு இயங்கினாலும் தனது பூர்விக இடமான மலையகத்தை மறக் காமல் நேசிக்கின்ற மனது அவருடையது. 'எனது தாய் நில மான மலையகத்தில் உழைக்கின்ற தொழிலாளர்கள், அவர் தம் வாழ்க்கை அவர்களின் சுகதுக்கங்கள், வறுமைகள், எதிர் பார்ப்புகள் என அனைத்திலும், பின்னிப்பிணைந்தவரின் ஏக் கத்தின் வெளிப்பாடுதான் இந்தக் 'கட்டாந்தரை' என்று தனது கட்டாந்தரைக் கவிதையை அறிமுகம் செய்கிறார் கவிஞர் கனிவுமதி.

'கேள்வி' எனும் தலைப்பில் கனிவுமதியின் கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

***'போனமுறை***
***மேட்டுலயத்தில்***
***இந்த முறை***
***எங்கள் தோட்டத்தில்***
***அடுத்த முறை எங்கேயோ***
***களவு மட்டும்***
***குறைந்த பாடில்லை***
***களவு போன வீடு***
***கருமாதி வீடாக***
***காட்சியளிக்கிறது***

***பறிகொடுத்தவன்***
***பூசாரியைத் தேடி அலைகிறான்***
***குறிபார்க்கும் பூசாரியோ***
***களவெடுத்தவன்***
***ஊர் எல்லையை***
***தாண்டிவிட்டானென்று***
***அடித்துக் கூறினான்***
***எல்லை காக்கும்***
***தெய்வங்கள்***
***என்ன செய்துகொண்டிருக்கின்றன?'***

1990-களின் பாடசாலைக் காலத்தில் இருந்தே இலக்கியத்து றையில் தலைகாட்டி 2000 ஆண்டுகளில் பத்திரிகைகள் ஊட கங்கள் (வானொலி) ஊடாகத் தனது கவிதைகளைத் தந்த வர் கட்டுரையாளர் திலகர் (திலகராஜா). மலையகத் தொழி லாளிகளின் சம்பள உயர்வின் பெயரில் 1998 முதல் எழுதப் பட்டுவந்த 'கூட்டு ஒப்பந்தம்' மற்றும் அதன் பொருட்டு எழுந்த 2001-ம் ஆண்டு மல்லியப்புசந்தி எனும் இடத்தில் இடம் பெற்ற சத்தியாகிரகத்தை விமர்சிக்கும் வகையில் எழுதிய 'மல்லியப்புசந்தி' (2001-ம் ஆண்டு புதிய பண்பாட்டு அமைப் பின் 'நாடோடிகள்' இதழில் பிரசுரமானது) எனும் கவிதையை மகுடமாகக் கொண்டு பாக்யா பதிப்பக வெளியீடாக 2007-ம் ஆண்டு 'மல்லியப்புசந்தி' எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டார். தொகுப்புக்கான பின்னுரையை 'நினைவில் நிற்கும் கவிதைகள்' எனும் தலைப்பில் பேராசிரியர் கார்த்தி-கேசு சிவத்தம்பி எழுதியுள்ளார். அதில் 'திலகராஜாவின் கவி தைகள் மூலம் ஒன்று நன்றாகப் புரிகிறது. லயத்து வாழ்க்கை என்பது பிற்கால மேல் நோக்கிய அசைவியக்கத்துக்கான முகவரியல்ல. அந்தத் தளத்தில் திலகராஜாவின் கால்கள் நிலையாகவே உள்ளன. ஆனால் அவரது வளர்ச்சி அவருக் குப் பல புதிய வெளிகளை அறிமுகம் செய்துள்ளது. இன் றைய நிலையில் திலகராஜாவின் ஆளுமைச்சேர்வின் உடன் பாட்டு நிலையின் வெளிப்பாடாகும்' எனக் குறிப்பிடுகின்றார். இலக்கியப் பரப்பில் இவர் இப்போது 'மல்லியப்புசந்தி' தில கர் (கட்டுரையாளர்) எனப் பரவலாக அடையாளப்படுத்தப்ப டுகிறார்.


2007-ல் வெளிவந்த இன்னுமொரு கவிதைத் தொகுப்பு 'மானு டமும் மணிக்கவிதைகளும்'. பூண்டுலோயா மணிசேகரன் எழுதிய கவிதைகள் 'சிந்தாமணி' பத்திரிகையில் பரவலாக வெளிவந்தவை. இந்தக் கவிதைநூல் 'சுவிட்சர்லாந்தில்' வெளியீடு செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும். இவரது சகோ தரர் மலையகத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுவிட்சர்லாந் தில் வாழ்ந்துவருகிறார். இந்த வாய்ப்பு மணிசேகரன் எனும் மலையகக் கவிஞரின் கவிதைநூல் அங்கு வெளிவரக் காரண மாகியது. மலையக மக்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக் குச் சென்றாலும் அவர்களது பின்புலம் மலையகமாக இருக் கின்ற பட்சத்தில் அங்கிருந்து மலையகப் படைப்புகள் வரும் வாய்ப்புகள் உண்டு. 'மணிசேகரனின் கவிதைகள் கருத்துக ளின் களமாய் நாளைய எதிர்காலத்தின் நிஜமாய் விரிந்து நிற் பதை அவதானிக்கிறேன்' என வியப்புரை எழுதியுள்ளார் சுவிட்சர்லாந்ததில் வாழும் இலங்கைத் தமிழரான 'கல்லாறு' சதீஸ்.

2010-ம் ஆண்டு 'தழலாடி வீதி' (அட்டாளைச்சேனை ஆசிரி யர் கலாசாலை - கலை கலாசார மன்றம் வெளியீடு) எனும் தலைப்பில் கந்தையா கணேஷமூர்த்தி தொகுப்பாக வெளி யிட்டார். நம்பொடை வெதமுல்லையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு ஆசிரியர். இவரின் கவிதைகள் ஏற்கனவே வடம் கவிதை இதழில் வெளிவந்துள்ளன. இவரது இந்தத் தொகுதி 2010-ம் ஆண்டுக்குரிய கவிதைக்கான தேசிய சாகித்ய விருதினையும், கொடகே கவிதைக்கான விருதையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. மலையக இளைய தலைமு றைக் கவிஞர்களுக்கு உத்வேகம் அளித்த விடயமாக இது அமைந்தது. கவிதைகள் பலவற்றுக்கு அவர் இட்டிருக்கும் தலைப்புகளே அழகிய கவிதைகளாகத் திகழ்கின்றன என மதிப்புரையில் குறிப்பிடுகின்றார் மலையகக் கவிஞர் சு. முர ளிதரன்.

பண்டாரவளைப் பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றும் பிர பாகரன் 'எரிச்சல்' மற்றும், 'சிறுதுளி' ஆகிய தொகுதிகளையும் இதே சமகாலத்தில் வெளியிட்டுள்ளார். மலையகம் அதன் அரசியல் குறித்த ஆதங்கங்களைப் பதிவு செய்யும் படைப்பு களாகவே சிறுதுளிப் பிரபாவின் கவிதைகள் அமைகின்றன. இதே பதுளை மாவட்டத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் எஸ்.பி. பாலமுருகன் குறிப்பிடத்தக்க கவிஞராகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். கொடகே வெளியீட்டு நிறுவனம்

நடத்திய கவிதைக் கையெழுத்துப் பிரதிப் போட்டியில் இவரது பிரதி தேசிய ரீதியாக முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011-ம் ஆண்டு புதிய மலையகம் வெளியீடாக வந்த தொகுப்பு கிருஷ்ணபிரியனின் 'வேரின் பிரசவங்கள்'. 'மக்களின் விடுதலைக்காகப் போராடும் மனிதர்கள் கூடச் சிறையிலடைக்கப்பட்டிருக்கும்போதே சுதந்திரத்தின் மகத்துவத்




தைச் சொந்த அனுபவமாகப் பெறுகின்றனர். அவ்வேளைகளில் அவர்களின் போராட்டம் எழுத்துகளாக வெளிப்படுகின்றன. இங்குள்ள அதிகமான கவிதைகள் சிறைக்கூண்டுக்குள் பிரசவமாகியவை' என அணிந்துரையில் இ. தம்பையா குறிப்பிடுகின்றார். மக்களுக்கான கவிதையில் உருவமும், உள்ளடக்கமும் முக்கியமானவை என்பதையும் அழகியல் எவ்வாறு அமையும் என்பதையும் கவிஞர் கிருஷ்ணபிரியன் நன்கு தெரிந்து வைத்துள்ளார் என்பதற்கு அவரது கவிதைகள் சான்று கூறுகின்றன என வாழ்த்துரையில் குறிப்பிடுகின்றார் கவிஞர். சி. சிவசேகரம்.

இவரது 'அடங்க மாட்டோம்' எனும் கவிதை இவ்வாறு அமைகிறது.

*'நீண்ட மௌனத்திற்காய்*
*ஆயத்தப்படச் சொல்கிறாய்.*

*உண்மைகளை உரத்துக் கத்தியதும்*
*ஓயாது கோஷமிட்டதும்*
*போதுமெனக் கூறி,*
*வெறித்தனங்களாலானதொரு ஈட்டியைக்*
*குரல்வளையில் பாய்ச்சப் பார்க்கிறாய்.*

*உனக்கு முதுசமாய் கிடைத்த*
*முகாம்களிலெல்லாம்*
*எமை அடைத்து நிரப்புகிறாய்*
*சிலுவைகளைத் தந்தாய்*
*நாம் சுமப்பதற்காய்,*
*முட்கிரீடங்களை அணிவித்தாய்*
*எமக்கு பரிசாய்.*

*நெற்றி வழியே இறங்கி*
*உடலெங்கும் உறைந்த*
*குருதித்துளிகளை மணந்துபார்*
*உழைப்பின் வாசம் வீசும்.*

*வரலாறு சுமந்த*
*தோளின் தினவு இன்னும்*
*குறையவேயில்லை.*
*ஒடுக்கல்களை எதிர்த்து நடந்த*
*கால்களின் தினவு இன்னும்*
*குறையவேயில்லை.*

*மறித்து மறித்து பார்த்தாய்*
*உடைத்துக் கொண்டு வந்தோம்*
*அடைத்து வைத்தும் என்ன*
*அடங்கியா போவோம்?'*

கவிஞர் கிருஷ்ணபிரியன் உள்ளிட்ட ஆறு இளைஞர்கள் தலவாக்கலையில் அமைக்கப்பட்ட மேல்கொத்மலைத் திட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளின் நீட்சியாகக் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த நாட்களில் இந்தக் கவிதைகள் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆதலால் மறுப்பின் மீதான கைதுகள், தடுத்து வைப்பு, காணாமல் போதல், சித்திரவதைகள் மீதான கோபமாக இவரது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன.

அண்மையில் சிங்கள முற்போக்குக் கவிஞர்களுடன் இணைந்து 'கொக்டெயில்' எனும் சிங்களக் கவிதைத் தொகுப்பு வெளிவந்தபோது அதற்குச் சமாந்தரமாக வெளிவந்த 'அந்நியமாக்கப்பட்ட நிலத்தின் நாட்குறிப்பு' எனும் தொகுதியின் தொகுப்பாசிரியராகவும் செயற்பட்டுள்ளார்.

(தொடரும்)



thilagar@thaiveedu.com

# ஒலி - ஒளி ஊடகரின் ‘நினைவு நல்லது’

– உதயன் S. பிள்ளை

மூத்த வானொலி-தொலைக்காட்சி ஊடகர் P. விக்னேஸ்வரன் அவர்களின் 50 ஆண்டுகால ஊடகத்துறை அனுபவப் பகிர்வாகவும், சுயசரிதமாகவும் படைக்கப்பட்டுள்ள ‘நினைவு நல்லது’ என்ற நூல், ஒரு வரலாற்றுத் தரவுப் பெட்டகத்திற்கு நிகரானது.

964 பக்கங்களைக் கொண்ட இந்நூல் அதன் நிறையில் மட்டுமல்ல, அதன் உள்ளடக்கத்திலும் அதீத கனம் கொண்டது. ஊடகத்துறையை உளமாறத் துதிப்போருக்கு, இப்புத்தகத்தைத் தொடுகிறபொழுதே ஓர் உபதேச நூலொன்றைத் தொடுகின்ற உணர்வைக் கொடுக்கும். தொடர்ந்து படிக்கின்ற போது, ஈழத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த வானொலி-தொலைக்காட்சி ஊடகத்துறையின் பெருமைகள் பற்றியும், அதனால் செதுக்கப்பட்ட விக்னேஸ்வரன் என்ற ஊடக ஆளுமை குறித்தும், வியப்போடு கூடிய மரியாதையை அதிகரிக்கும்.

இக்கட்டுரை பிரசுரிக்கப்படும் கனடாவைத் தளமாகக் கொண்ட ‘தாய் வீடு’ பத்திரிகையில், ஆறு ஆண்டுகளாகத் தொடராக எழுதப்பட்ட தனது ஊடகத்துறை சார்ந்த அனுபவப் பகிர்வை, ஓர் ஆண்டுகால நூலாக்கப் பணிகளின் பின்னர், ஒரு தரம்மிக்க படைப்பாக வாசகர்களுக்கு நூலாசிரியர் வழங்கியுள்ளார்.

இந்நூல் ஊடகத்துறையை இலட்சியமாகக் கொண்டவர்கள், ஒலி-ஒளி ஊடகத்துறையைத் தெரிவுசெய்ய நினைப்பவர்கள், ஊடகத்துறையைத் தொழிற்தரம் மிக்கதாகப் பேண நினைப்பவர்களுக்கான ஒரு சிறந்த ஆவணத் தொகுப்பு. குறிப்பாக நிலத்திலும் புலம்பெயர் தேசத்திலும், அரைநூற்றாண்டுகால தமிழ் ஒலி-ஒளிபரப்புப் பாரம்பரியம், ஈழத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், ஒரு இனக்குழுமம் சுமந்துநின்ற வலிகள், அந்த வலிகள் பிரசவித்த வேதனைகள், அந்த வேதனைகளின் விளைவுகளால் புலம்பெயர் தேசத்தில் வீறுகொண்டெழுந்த சமூகத்தின் எழுச்சிப் படிநிலைகள் என்று அனைத்துப் பக்கங்களையும் நூலாசிரியர் பக்குவமாகப் பதிந்துள்ளார்.

இந்நூல் ஊடகக் கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாகவும், வரலாற்றுப் பொக்கிஷமாகவும் விளங்கும் என்றுணர்ந்த காரணத்தினால், அதன் முதலாவது வெளியீட்டை யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடமே பொறுப்பெடுத்து நடத்தியுள்ளமை, இந்நூலின் பெறுமதியைப் பறைசாற்றும். மேலும், யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறைப் பாடவிதானங்களில் ஒன்றாக இந்நூலைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி. சிவசுப்பிரமணியம் ரகுராம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை, இப்படைப்புக்குக் கிடைத்துள்ள அளப்பரிய அங்கீகாரமாகக் கொள்ளலாம்.

மேலும், P. விக்னேஸ்வரன் அவர்களின் அனுபவப் பகிர்வின் நினைவு மீட்டல் என்பது, அவர் பாலகனாக இருந்த காலம் முதல் விடலைப்பருவக் காலங்களையும் உள்ளடக்கியிருப்பதால், கனவுகளைச் சுமந்த ஓர் இளைஞரின் ஆளுமை விருத்தியின் வளர்ச்சிப் படிநிலைகள் குறித்த சரிதம், படிப்போருக்கும், சாதிக்கத் துடிப்போருக்கும் ஒரு வாழ்க்கைப் பாடமாக அமையக்கூடிய படிப்பினைகளை உள்ளடக்கியுள்ளது.

விக்னேஸ்வரன் அவர்களின் அனுபவப் பகிர்வை, தனியாக ஊடகத்துறையோடு மட்டும் தொடர்புபடுத்தி மட்டுப்படுத்தி விட முடியாது. தன் வாழ்வின் ஒவ்வொரு அடிகளையும் மிகவும் நிதானமாகவும், பக்குவமாகவும் எடுத்து வைத்த அவருடைய தடங்களின் பதிவுகள் நிலத்திலும் புலம்பெயர் தேசத்திலும் வாழுகின்ற ஒவ்வொரு ஈழத் தமிழருக்கும் ஏதோவொரு வகையில் பிணைப்பை ஏற்படுத்துவதோடு, அவர்கள் கடந்து வந்த வாழ்வியலின் பக்கங்களை உணர்வு ரீதியாகத் தொட்டும் மீட்டும் செல்கின்றன.

அமைப்புசார் கட்டமைப்புக்கூடாகவோ, அல்லது நிறுவனமயப்பட்ட செயற்திட்டங்களுக்கூடாகவோ கூட இலகுவில் சாத்தியபடுத்த முடியாத, ஒரு இனம் சார்ந்த வரலாற்று ஆவணப் படைப்பை, தன்னுடைய வரலாற்றுத் தடங்களோடு பிணைத்துத் துல்லியமான தரவுகளோடு கூடியதாக ஒரு தனிநபராக நூலாசிரியர் உருவாக்கியுள்ளார்.

நூலாசரியரும், ஒலி-ஒளி ஊடக ஆளுமையுமான P. விக்னேஸ்வரன் அவர்களின் கீழ், ரொறன்ரோவைத் தளமாகக் கொண்டியங்கும் TVI தொலைக்காட்சி மற்றும் CMR பல்கலாசார வானொலி ஆகியவற்றில் பணியாற்றியவன் என்ற போதி

லும், என்னுள் ஆக்கத்தை விளைவித்த ஊடகத்துறை ஆசான்களில் ஒருவராக அவர் விளங்கியபோதிலும், அவர் பற்றி இதுவரையில் புரிந்துகொள்ளப்படாத பக்கங்களை, தனது எழுத்துத் தூரிகை கொண்டு அழகிய ஓவியமாகக் காட் சிப்படுத்தியுள்ளார்.

நூலாசிரியர் தனக்கு நினைவு தெரிந்த நாள் முதல், எவ்வாறு தன் வாழ்வை இரசித்துள்ளார்?, தான் சார்ந்த உலகை எவ் வாறு உற்று நோக்கியுள்ளார்?, தன் வாழ்வின் ஒவ்வொரு நொடிகளையும் எவ்வாறு அனுபவித்து வாழ்ந்துள்ளார்? தன் சாதனைப்படிகளை எவ்வாறு செதுக்கியுள்ளார்? என்பதனை இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயங்களும் வியக்கவைக்கும் வகையில் வெளிப்படுத்தியுள்ளன.

தான் தடம்பதித்த ஊடகத்துறையை எந்த அளவுக்கு நூலாசி ரியர் நேசித்திருக்கிறார் என்பதையும், எந்த அளவுக்கு அத



னைத் தனது சுவாசமாகக் கொண்டு அவர் வாழ்ந்திருக்கிறார் என்பதையும், தனது வாழ்வை சாட்சியமாகக் கொண்டு தன் எழுத்துகளால் நம்முன் சமர்ப்பித்துள்ளார். மேலும், ஊடகத் துறை வாழ்வு என்பது எவ்வளவு அர்ப்பணிப்பு மிக்கது என்ப தையும், அதன் ஊடான பயணம் எவ்வாறான சகிப்பு மற்றும் தியாகங்களைச் சுமந்தது என்பதையும், தன்னுடையதும், தன் துறை சார்ந்தவர்களினதும் அனுபவங்களின் ஊடாக, சமகா லத் தலைமுறையினருக்கும், எதிர்காலத் தலைமுறையின ருக்கும் புரியவைக்கும் வகையில் ஆதாரங்களை அடுக்கி யுள்ளார்.

இலங்கையின் தேசிய வானொலியில் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) 19 வயதில் உதவித் தயாரிப்பாளராகப் பணியில் இணைந்துகொண்ட P. விக்னேஸ்வரன், 34 வயதில் இலங்கையின் தேசிய தொலைக்காட்சி (ரூபவாஹினி) தொடங் கப்பட்டபோது, அதன் முதலாவது தமிழ்ப் பிரிவுப் பொறுப்பா ளராக நியமனம்பெறும் அளவுக்கு ஒரு சாதனையாளர். நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, அறிவிப்பாளராக, செய்தி வாசிப் பவராக, நாடகத் தயாரிப்பாளராக, தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராக என்று ஒலி-ஒளிபரப்புத்து றையில் அவருடைய பரிணாம வளர்ச்சி, கடின உழைப்பினா லும், அவருடைய தனித் திறமையாலும் சாத்தியப்பட்டவை.

மேலும், 1991-ல் கனடாவிற்குப் புலம்பெயர்ந்த பின்னர், பல பகுதிநேரத் தமிழ் வானொலிகளுக்கு ஆலோசகராகவும், நிகழ்ச்சி வழங்குனராகவும் தனது பங்களிப்பை வழங்கிய விக்னேஸ்வரன், 2000-ம் ஆண்டு TVI எனும் முதலாவது 24 மணிநேரத் தமிழ்த் தெலைக்காட்சி தோற்றம் பெற்றபோதும், 2004-ம் ஆண்டு, தமிழர் நிர்வாகத்தில், CMR எனும் 24 மணி நேரப் பல்கலாசாரப் பண்பலை (12 மணிநேரத் தமிழ் ஒலிப ரப்பு) தோற்றம் பெற்றபோதும், உரிய பயிற்சிகளை வழங்கி, நிகழ்ச்சி நிர்வாகக் கட்டமைப்புகளை உருவாக்கி நெறிப்ப டுத்துவதிலும் தன்னுடைய அளப்பரிய சேவைகளை ஆற்றிய ஒருவர். இவ்வாறு 50 ஆண்டுகளுக்கும் அதிகமான அவரு டைய ஊடகத்துறைப் பயணம் எவ்வாறு சாத்தியப்பட்டது என் பது குறித்தும், அப்பயணத்தின் சாதனைகள், சோதனைகள் என்று அத்தனை அனுபவங்களையும் வாக்குமூலமாக அவர் பதிந்துள்ளார்.

பொதுவில் ஓர் இறுக்கமான மனிதராகத் தோற்றமளிக்கும் P. விக்னேஸ்வரன், அதிகம் உணர்வுகளை வெளிக்காட்டும் இயல்பற்றவர். 'Man of few words' என்று கூறும் அளவிற்கு வார்த்தைச் சிக்கனம் மிக்கவராகவும், மிகவும் அவதானமாகச் சொற்களை அளந்து பேசும் இயல்பினையும் கொண்ட ஒரு வர். அவருடைய அதிகபட்ச உணர்வு வெளிப்பாடு, அவ்வப் பொழுது புன்முறுவலாகவும், மெல்லிய சிரிப்பாகவும் வெளிப் படும். கோபத்தை அவருடைய குரலின் கடுமை அவ்வப்பொ ழுது காட்டிக்கொடுக்கும். ஆனால், தன்னைச்சுற்றி நடப்ப வற்றை அவர் மிகவும் ஊன்றி அவதானிக்கின்றார் என்ப தனை உணர்ந்துகொள்ள முடியும். அவரிடம் இருந்து இலகு வில் பாராட்டைப் பெற்றுவிட முடியாது. ஆயினும், ஒவ்வொரு வர் குறித்தும் அவர் ஒரு கணிப்பு வைத்துள்ளார் என்பதை யும், அவரவருக்குரிய புள்ளிகளை மறைத்துவைத்துள்ளார் என்பதனையும் நம்மால் உணர முடிந்தது. அவருடைய அவ் வாறான கணிப்புகள் மற்றும் புள்ளிகளின் அறுவடையை இந் நூலின் சொற்களும், வசனங்களும் உள்ளத்தின் சாட்சியங்க ளாக மனம் திறந்து பேசியுள்ளன.

எனினும், இந்நூல் சாமானிய வாசிப்பாளர்களையும் கவர்ந்தி ழுக்கும் ஓர் இலக்கியப் படைப்பு அல்ல. மிகைப்படுத்தல்கள் அற்ற, தரவுகளையும், அனுபவங்களையும், காலத்தடங்களை யும் ஆதாரமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. மிக வும் கவனமாகத் தெரிவுசெய்யப்பட்ட வார்த்தைகள் ஊடாக, கண்ணியமாகவும், நேர்மையாகவும், கறுப்பு-வெள்ளையாக இந்நூலை விக்னேஸ்வரன் வடித்துள்ளார். இருப்பினும், தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களையும், அனுபவித்து வாழ்ந்த ஒருவர் என்பதால், அவருடைய வரலாற்றுக் காட்சிப்படுத்த லின் விபரிப்புகள் இலக்கியப் படைப்புக்களுக்கு நிகரான சுவையை இயல்பாகவே பெற்றுவிடுகின்றன. சுருங்கக் கூறின்,

காலக்கடிகாரத்தின் ஊடாக வாசகரைக் கடந்த காலத்துக்கு அவர் அழைத்துச் செல்கிறார். அவரோடு நிழலாக அவர் காட்டும் உலகை நாம் காணச்சென்ற பிரம்மையை, அவரு டைய வர்ணிப்பின் வலிமை நம் மனத்திரையில் ஏற்படுத்திவி டுகிறது.

இந்நூலில் தான் பதிக்கின்ற விடயங்கள், எவ்விதக் கலப்பட மும் இல்லாத, நூற்றுக்கு நூறு சதவிகிதம் உண்மைத்தரவுக ளைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தரவுக ளையும் ஆதாரங்களையும் தேடித்திரட்டி, அவற்றை ஆவ ணக் கோவைகளாக விக்னேஸ்வரன் பதிந்துள்ளார். தன்னு டைய வெற்றிகள் சாதனைகளில் கூட, சிறுதுளி சந்தேகமும் படிப்போருக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக, தான் பாட சாலைக் காலங்களில் பெற்ற சான்றிதழ்கள், நற்சான்றுக் கடி தங்கள், அவற்றோடு தொடர்புடைய ஒளிப்படங்கள் என்று தன்னிடமுள்ள ஆதாரங்கள் அனைத்தையும் இந்நூலுடன் இணைத்துள்ளார்.

மேலும், தொழில்முறை ரீதியில் அவருடைய படிநிலை வளர்ச் சிகளின்போது கிடைத்த அங்கீகாரங்கள், பதவி உயர்வுகள்,

**இன்று ஈழத்தில்**
**பல இளையவர்கள் மத்தியில்,**
**வட்டார வழக்குகள்கூட**
**வழக்கிழந்து,**
**சென்னைத் தமிழ்ப் பயன்பாடே,**
**அன்றாட உரையாடல்களில்**
**தாக்கம் செலுத்துகின்ற நிலை,**
**ஈழத்தமிழர்கள் படிப்படியாக**
**சுயமிழந்து வருவதை**
**அம்பலப்படுத்துகிறது.**

நிர்வாக மட்டத்திலான முக்கியமான தொடர்பாடற் கடிதங்கள் உட்பட்ட பிரதிகளையும் இணைத்துள்ளார். இதில் வியப்புக் குரியது என்னவெனில், இலங்கை வானொலியில் பணியாற் றும்போது, தன்னுடைய தவறுகள் காரணமாக நிர்வாகத்தால் கண்டிக்கப்பட்டமைக்கான சான்றுகள் மற்றும் அபராதங்க ளைச் செலுத்திய காரணங்கள் என்று அனைத்தையுமே இந் நூலின் நம்பகத்தன்மைக்கு வலிமை சேர்க்கும் வகையில் அவர் சமர்ப்பித்துள்ளார். பொதுவாக இவ்வாறான சுயசரிதங் கள் எழுதப்படுகின்றபோது, சுய தம்பட்டங்களையே முதன் மைப்படுத்தி, தமக்கு இழுக்கைத் தருகின்ற விடயங்களை மறைத்துவிடுவதே பொதுவிதி. ஆனால், அவ்வாறான பொது விதியை விக்னேஸ்வரன் இந்நூலில் உடைத்துள்ளார்.


பொதுவாகவே கலைத்துறை, ஊடகத்துறை என்று வருகின்ற போது, போட்டிகளும், பொறாமைகளும், சூழ்ச்சிகளும் அதிக மாகவே நர்த்தனமாடும். நட்புடனும், அக்கறையுடனும் இருப் பவர்கள் என்று நாம் கருதுவோர் கூட, சில வேளைகளில் நமக்கு விரோதமான போக்கை வெளிப்படுத்துவார்கள். அதி லும் குறிப்பாக, விக்னேஸ்வரன் போன்ற உண்மை, நேர்மை, அறம், தொழிற்தரம், ஒழுக்கம், நேரமுகாமைத்துவம் என்று இறுகப் பற்றிக்கொள்கின்ற மனிதர்களின் முதுகிற்குப் பின் னால் எப்பொழுதுமே ஈட்டிகள் பாய்வதற்குத் தயாராகவே இருக்கும். எனவே, இவற்றையெல்லாம் தாண்டி, இத்துறை யில் வெற்றிபெறுவதும், அங்கீகரிக்கப்படுவதும், நிலைத்து நிற்பதும் இமாலய சாதனைக்கு ஒப்பானது. இருப்பினும், வர லாற்றுப்பதிவு என்று வருகின்றபோது, தொழில்முறையில் சம காலத்தில் தன்னோடு பணிசெய்தவர்கள், தன்னை வழிநடத் தியவர்கள், துறைசார்ந்த போட்டியாளர்கள் என்று அனைவரு டைய திறமைகளையும் தரம்தாழ்த்தாமல், அவர்களின் குறை களைக்கூட கண்ணியமான சொல்லாடல்கள் ஊடாக தொழிற் தரத்தை மைய்யமாகக்கொண்டு ஊடகத்துறைக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பையும், நேர்த்திகளையும் நேர்மையுடன் பதிவுசெய்துள்ளார்.

குறிப்பாக, மறைந்தவர்கள் குறித்த உண்மைகளை மறைத்து விட்டால், அந்த உண்மைகள் நிரந்தரமாகவே உறைந்துவி டும். ஆனால், மறைந்தவர்கள் குறித்தோ அல்லது இன்றும் நம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்போர் குறித்தோ எதுவித அகங்காரமும் இல்லாமல், ஊடக அறத்தின் வழிநின்று விக் னேஸ்வரன் தனது மிதிப்பீடுகளைப் பதிவுசெய்துள்ளார். உதாரணமாக, மூத்த அறிவிப்பாளர் KS. ராஜா அவர்கள் குறித்தும், அவருடைய அறியப்படாத பக்கங்கள் குறித்தும் பல தரவுகளைப் பகிர்ந்துள்ளார். கே.எஸ். ராஜா என்ற ஆளுமை தனக்கான புகழை வணிக நோக்கில் முதன்மைப்ப டுத்தியிருந்தால், அவருடைய தளமும், வளமும் மிகுந்த பெறு மானம் மிக்கதாக மாறியிருக்கும் என்பதையும், அப்படி இருந் தும் கே.ஏஸ். ராஜா அவ்வாறு சந்தர்ப்பங்களைப் பயன்படுத் தவில்லை என்பதையும் காரணங்களோடு விக்னேஸ்வரன் விளக்கியுள்ளார். இவ்வாறு பலருடைய வரலாற்றுப் பக்கங்க ளின் சிறப்புகளையும், தனது விருப்பு-வெறுப்புகளுக்கு அப் பாற்பட்டு, தரமும்-தரவும் மிக்கதாகக் கணிப்பீடுகளை அவர் செய்துள்ளார்.

விக்னேஸ்வரன் அவர்களின் இளமைக்காலம் அவருடைய வயதை ஒத்தவர்களில் இருந்து பல விடயங்களில் வேறுபட்டி ருக்கிறது. பின்னாட்களில், ஒரு சிறந்த ஆளுமையாக உரு வெடுப்பதற்கான அடித்தளங்களை அவருடைய அர்ப்பணிப் புமிக்க பயிற்சிகள் வழங்கிவிட்டன என்றே கருதமுடிகிறது. அவர் விபரித்துள்ள இளமைக்கால பயிற்சிகளும், முயற்சிக ளும் எதிர்கால சந்ததிக்கு ஒரு சிறந்த வாழ்க்கைப் பாடமா கும். தேகத்தை உறுதிசெய்ய அவர் மேற்கொண்ட கடுமை யான பயிற்சிகள் வியக்க வைக்கின்றன. அதிகாலைப் பொழு தில் கடற்கரை முதல், சுடுகாடு வரையான 1 km தூரத்தை 10 தடவைகள் சுற்றிவருதல், கிடங்கு வெட்டிப் பாய்ச்சல் பயிற்சி செய்தல் என்று அவருடைய வெறிகொண்ட பயிற்சி அவருக்கான அறுவடைகளை அள்ளிக்கொடுத்தது.

சிறுவயதில் எல்லோரும் விளையாட்டாகப் பொழுதைக்கடத்த

நினைக்கும் வயதில், அவர் விளையாட்டையே முதன்மை விருப்பாகக் கொண்டு, கடுமையான பயிற்சிகள் ஊடாக போட்டிகளில் வென்று சாதனைகளைப் புரிந்துள்ளார். இது அவருக்குப் பாடசாலை மட்டங்களிலும், கிராமிய மற்றும் மாவட்ட மட்டங்களிலும், மிகச் சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றுகொடுத்தது. மிகத் தீவிரமான விளையாட்டு வீரராக அவர் விளங்கியதால், அவரது உடலும், உள்ளமும் சிறுவயதிலேயே உறுதி பெற்றன. ஒருவருடைய உழைப்புக்குரிய அறுவடையும் அங்கீகாரமும் கிடைக்கின்றபோது, அது ஒருவகையில் போதையாக உருவெடுத்துவிடும். அவ்வாறே விக்னேஸ்வரன் விடயத்திலும், அவருக்குக் கிடைத்த வெற்றிகள் அவரை நிரந்தரமாகவே ஒரு கடுமையான பயிற்சியாளராகவும், முயற்சியாளராகவும் மாற்றிவிட்டன.




மேலும், அவர் விளையாட்டில் தீவிர கவனம் செலுத்திய சமகாலத்தில், வாசிப்பு, பேச்சு, சிறுகதை எழுத்து, நடிப்பு ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு காண்பித்து, அவற்றிலும் சான்றிதழ்களைப் பெற்று, தனது வயதை ஒத்தவர்கள் மத்தியில் தனித்துவமான அங்கீகாரத்தையும், அடையாளத்தையும் மாணவப் பருவத்திலேயே விக்னேஸ்வரன் பெற்றுவிட்டார். ஒரு கட்டத்தில் நாடகத்தின் மீதான அவரது ஈர்ப்பு அதிகரித்து, பின்னாட்களில் தொழில்முறை ரீதியில் நாடக எழுத்தாளராகவும், தயாரிப்பாளராகவும் உருவெடுத்து, இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்த பெருமைக்குரியவராகவும் அவரைச் சாதனையாளராக்கியது.

விக்னேஸ்வரனின் இளமைக்காலம் குறித்து இக்கட்டுரையில் கவனம் செலுத்துவதற்குக் காரணம், சிறுவயதிலேயே சரியான மேற்பார்வையும், வழிகாட்டலும் கிடைத்துவிட்டால், சாதனையாளர்களை உருவாக்கிவிடலாம் என்பதற்கான சான்றாக, விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்க்கைச் சரிதம் நம் சமூகத்திற்கு ஒரு சிறந்த ஆதாரம். அவருடைய கதை ஆரம்பிக்கும் 70 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம், இன்று நாம் தொலைத்துவிட்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய கட்டமைப்பு மரபுகளின் செழிப்பைக் கண்முன் கொண்டுவருகிறது. நான்-எனது என்றில்லாமல், நாம்-நமது என்று அரவணைப்பும், அக்கறையும் நிறைந்து வாழ்ந்த சமூகம் நம்முடையது. இன்றைய நவீனத்துவமும், புலம்பெயர்வும், பொருளீட்டலுக்கான முன்னுரிமையும், நம்முடைய பந்தபாச வாழ்க்கை முறைகளையும், சமூக ஐக்கியத்தையும் வெகுவாகவே சிதைத்துவிட்டன.

இந்நிலையில், ஒரு தனிமனிதரை சிறுவயதில் இருந்தே செதுக்குவதில் ஒரு காலத்தில் சொந்த-பந்தங்களும், சமூகமும் எவ்வாறு பங்காற்றின என்பதனை விக்னேஸ்வரனின் பதிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இது ஒருவகையில் சமூகக் கட்டமைப்பின் வரலாற்றுத் தடயங்களை நமக்கு மீள நினைவூட்டுகின்றன. தன்னுடைய வளர்ச்சியில், பெற்றோருக்கு அப்பால், தன்னுடைய தாய் மாமனும், சிறிய தாயும், அம்மம்மாவும் எவ்வாறு பங்காற்றினர் என்பதை சம்பவங்களுக்கூடாக விபரிக்கிறார். தாய் மாமனிடம் வாங்கிய பூவரசம் தடி அடியின் அனுபவம் முதல் கண்டிப்பும், ஒழுக்கமும் எவ்வாறு தனது வாழ்வை நேர்வழிப்படுத்தியது என்பதை மனதைத் தொடுகிற வகையில் சித்தரித்துள்ளார். மேலும், நண்பர்களும், ஆசிரியர்களும், அயலவர்களும் என்று சமூக அக்கறை கொண்ட சமூகக் கட்டமைப்பின் சிறப்புகளை தன் அனுபவங்களினூடாகப் பகிர்ந்துள்ளார். இவ்வாறான சமூக வாழ்க்கை முறைகளின் கதைகளை எதிர்கால சந்ததி, இது போன்ற பதிவுகள் ஊடாக மட்டுமே அறிந்துகொள்ள முடியும் என்பதே சமகாலத்தின் கசப்பான உண்மை.

சிறுவயது முதலே தான் இலக்குவைத்த விடயங்களுக்காகக் கடுமையாக உழைப்பது விக்னேஸ்வரனின் இயல்பு என்றபோதிலும், மிக நேர்த்தியான திட்டமிடல்கள் ஊடாகவும், கணிப்புகள் ஊடாகவும், நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள் ஊடாகவும் தனது இலக்குகளை அவர் எட்டியுள்ளார். ஆனால், ஊடகப்பயணம் என்பது அவருடைய இலக்குகளில் ஒன்றாக வரையறுக்கப்படவில்லை. எனினும், குடும்பச் சூழல் காரணமாக உயர்தரம் படிக்கும்போதே, ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற மூன்று துறைகளில் ஒன்றைத் தேர்வு செய்ய முனைந்து, சந்தர்ப்ப வசத்தாலும், அவருடைய இளமைக்கால சாதனைகள், திறமைகள் காரணமாகவும், இலங்கை வானொலியில் இணைந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அதுவே அவரது இலட்சியப் பாதையாகப் பின்னர் அவருடைய வாழ்வோடு ஒட்டிக்கொண்டது. அதன் விளைவு, ஈழத்தமிழ் உலகு ஓர் ஊடக ஆளுமையைப் பிரசவித்தது. ஒலிபரப்பும், ஒளிபரப்பும் P. விக்னேஸ்வரனைக் கண்டங்கள் கடந்தும் தத்தெடுத்துக் கொண்டன.

அவருடைய ஊடக வாழ்வில் ஒவ்வொரு நொடிப்பொழுதுகளையும் எவ்வாறு இரசித்தார், நேசித்தார், சவால்களை எதிர்கொண்டார், சூழ்ச்சிகளையும், சூதுவாதுகளையும் கடந்து சென்றார், சாதனைப் படிகளை எட்டிப்பிடித்தார் என்பதனை இந்த நூலின் பல அத்தியாயங்கள் ஊடாகவும் அனுபவப் பாடம் ஊடாகவும் விக்னேஸ்வரன் விளக்கியுள்ளார். முன்னரே குறிப்பிட்டதுபோல, ஊடக வாழ்க்கை என்பது அர்ப்ப

ணிப்பு மிக்கது. அதனை அதற்கேயுரிய மரியாதையுடன் கற்றுக்கொண்டால், அது உங்களை ஆட்கொண்டுவிடும். பணிவும், பக்தியும், உழைப்பும், பயிற்சியும், தேடலும் இருக்குமாயின் இத்துறையில் தனிமுத்திரை பதிக்கலாம். அவ்வாறே, விக்னேஸ்வரனின் ஊடகப்பயணம் விதையில் இருந்து விருட்சமானது. தன்னை வழிநடத்தியவர்களிடமிருந்து ஒலி-ஒளி ஊடக மரபுகளையும், ஒலிபரப்பு இலக்கணத்தையும் விக்னேஸ்வரன் முறைப்படி கற்றுக்கொண்டார்.

தயாரிப்பாளருக்கான பயிற்சிகள், அறிவிப்பாளருக்கான பயிற்சிகள், செய்தி வாசிப்பாளருக்கான பயிற்சிகள், ஒலிப்பதிவுகளுக்கான பயிற்சிகள், நிகழ்ச்சிகளுக்கான பிரதியாக்கப் பயிற்சிகள், நாடக நெறியாள்கைக்கான பயிற்சிகள், ஒளியமைப்புப் பயிற்சிகள், வானொலி-தொலைக்காட்சி நிர்வாக நெறிமுறைகளுக்கான பயிற்சிகள் என்று அனைத்தையும் ஆதி முதல் அந்தம் வரை அவர் கற்றுக்கொண்டார்.

அதன்காரணமாகவே, இள வயதிலேயே ஒரு தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார்.

இதன்விளைவாக, ஈழத் தமிழர்களுக்கான தொழில்முறை ஊடகக்கட்டமைப்புகளை புலத்தில் உருவாக்கும் பணிகள் வேகம்பெற்ற காலத்தில், கனடாவில் TVI தொலைக்காட்சி (2000) மற்றும் CMR பல் கலாசாரப் பண்பலை (2004) ஊடகங்கள் உருவாக்கப்பட்டபோது, அவருடைய புலமைத்துவம் நிகழ்ச்சி நிர்வாகக் கட்டமைப்புகளைத் தொழிற்தரம் மிக்கதாக மேம்படுத்தின.

அதேபோன்று, தமிழர் தாயகத்தில் தமிழருக்கான தேசியத் தொலைக்காட்சி உருவாக்கப் பணிகள் மேம்படுத்தப்பட்டபோது, அங்கும் அவருடைய நேரடிப் பிரசன்னமும், ஆலோசனைகளும் அப்பணிகளுக்கு வலுச்சேர்த்தன. ஆகவே, தொழிற்தரம் மிக்க தமிழர்களுக்கான தேசிய ஊடகக் கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளில் விக்னேஸ்வரனின் சேவையும், வழிகாட்டலும், பங்களிப்பும் அளப்பரியது.

1990-களின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் தோற்றம் பெற்ற தனியார் வானொலிகள் தமிழின் செழுமைக்கு இழிவை ஏற்படுத்தி, அதன் சுயத்தை, அதன் சிறப்பை அழிக்க முற்பட்டவேளையில், ஏறத்தாள சமகாலத்தில் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் நிழல் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும், தமிழருக்கான தரம்மிக்க ஊடகத் தேவைகள் அதிகரித்து, மரபுவழி ஊடக உருவாக்கங்கள் பெருக்கம் கண்டன. அவற்றில், கனடாவில் உருவாக்கம் பெற்ற கணிசமான வானொலிகளின் வளர்ச்சியில் விக்னேஸ்வரனின் பங்களிப்பு போற்றுதலுக்குரியது. எனினும், 2009-ம் ஆண்டுக்குப் பின்னரான நிலமைகள் நம்முடைய தொழிற்தரம் மிக்க ஊடகக் கட்டுமானங்களைக் கணிசமாகத் தகர்த்துவிட்டதாகவே கருதமுடிகிறது. இன்று தென்னிந்திய ஊடகங்களுக்குப் போட்டியாக, தமிழ் மொழியைப் பணயம் வைத்து புதுமைகள் செய்ய ஊடகங்கள் துணிந்துவிட்டன. இந்நிலை, நமக்கு ஏன் மொழி ?, நமக்கு ஏன் அடையாளம் ?, நமக்கு ஏன் கலாசாரம் ? என்ற கேள்விகளை எழுப்புகின்றன.

மறுபுறத்தில், நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் ஊடகத்துறையின் கதவுகளை அகலத் திறந்து குடிசைக் கைத்தொழில்களாக அவை உருவெடுத்துவிட்ட நிலையில், எவ்வித தகுதியோ ? தகைமையோ ? அற்றவர்களும், சமூக ஊடகம் என்ற நவீன தொழில்நுட்ப வசதிகொண்டு, ஊடகவியலாளர்கள் என்ற சுயபிரகடனங்களோடு வலம்வருகின்ற காலம் மலிந்துவிட்டது.

இந்நிலை, நம் ஊடகத்துறைக்கு மிகப்பெரும் நலிவை மட்டுமல்ல, அபகீர்த்தியையும் ஏற்படுத்திவருகின்றன. இவ்வாறான மாற்றம் உலகியல் சார்ந்த விளைவு என்றபோதிலும், உரிமைக்காகவும், நீதிக்காகவும், வாழ்தலுக்காகவும் தொடர்ந்து போராடிவரக்கூடிய ஒரு சிறிய இனக் குழுமத்திற்கு, சர்வதேச நியமங்களுக்கேற்ப, ஆக்கத்தைத் தரக்கூடிய, பக்கபலமாக விளங்கக்கூடிய வீரியம் மிக்க ஆயுதமான ஊடகத்துறையை மீண்டும் தொழிற்தரம் மிக்கதாகவும், மொழிச் செழுமையைப் பிரதானமாகக் கொண்டவையாகவும் கட்டியெழுப்பவேண்டிய தேவை ஒரு வரலாற்றுக் கடமையாகும்.

ஆனால், சமகாலத்தில் வணிகமே பிரதானம் என்ற வேட்கையில் சமூகம் ஓடிக்கொண்டிருக்கையில், ஊடக அறம் குறித்தோ ? அதனது தரம் குறித்தோ அக்கறைப்படாத சமூகக் கட்டமைப்பு உருவாகிவருகிறது. ஏதோ, பொழுதைக் கழிப்போம், பொழுதை களிப்போடு கடப்போம் என்ற மனநிலையே சமூகத்தில் மேலாங்கியிருக்கிறது. விக்னேஸ்வரன் குறிப்பிடுவதுபோல, ஒரு காலத்தில் மக்களுக்கான ஊடகங்கள் இருந்த நிலைமாறி, தற்போது மக்களின் ஊடகங்கள் பெருகிவிட்டநிலையில், மக்களுக்கே ஊடகங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நம் சமூகத்துக்குப் பயன்தரும் நவீன மாற்றங்களோடு கூடிய தேர்ந்த ஊடக மரபுகளைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், சமகாலத்தில் Smartphone பயனராகவோ ? அல்லது அதனை ஒரு படைப்பாக்கக் கருவியாகவோ ? வரித்துக்கொண்டோர் அனைவரும், இந்நூலைப் படிப்பது அவசியம் என்று கருதுகிறேன்.

ஊடகச் சீரழிவு என்பது நவயுகத்தின் பொதுவிதி என்று நாம் புறக்கணித்துவிட முடியாது. அதனுடைய கட்டற்ற சிதைவுகளைத் தடுப்பதற்கான கடிவாளங்களை நாம் உடனடியாகப் போட்டாகவேண்டும். நாம் நமது செழுமைமிகு அடையாளச் சிதைவுகளை உரிய நேரத்தில் தடுக்காமல் தொலைத்துவிட்டு இன்று அழுதுகொண்டிருப்பவர்கள். இவ்வாறுதான் இற்றைக்குக் கால்நூற்றாண்டுக்கு முன்னர், தனியார் பண்பலைகள் தென்-இலங்கையில் கோலோச்சத் தொடங்கியபோது, நம் பெருமைமிகு ஒலிபரப்புப் பாரம்பரியம் சிதைக்கப்பட்டு, நம் செழுமைத் தமிழ் சீரழிக்கப்பட்டது. தமிழை இலகுபடுத்துகிறோம் எனக் கூறிக்கொண்டு, வட்டார வழக்கு என்றும், பேச்சுத் தமிழ் என்றும் புதுமை புகுத்தி, பாரம்பரிய தமிழ் ஒலிபரப்பு மரபை இழிவுபடுத்தினர். விளைவு, நாம் உயர்வாகப் போற்றிய, ஈழத் தமிழ் ஒலிபரப்புக்கெனத் தனி முத்திரை பதித்த, ‘சீர்தமிழை’ நம் கண்முன்னே தனியார் பண்பலைகள் துகிலுரிந்தன. ஆயினும், விரல்விட்டு எண்ணகூடிய ஒரு சிலர் செழுமையான தமிழ் ஒலிபரப்புப் பாரம்பரியத்தைப் பேண முற்பட்டபோதிலும், அவ்வாறானவர்கள் ஒலிபரப்பு அரங்கில்

இருந்து படிப்படியாக அகன்றனர் அல்லது அகற்றப்பட்டனர் என்பது வரலாறு.

அதன் அடுத்த பரிணாமமாக, ஈழத்தமிழர்களின் மொழிவழக்கும், மொழிவளமும் சுயம் இழந்து, 'சென்னைத் தமிழ்' எனும் 'பண்ணித் தமிழ்' வானொலிகளில் கோலோச்சுகின்றன. இதைத்தான் மக்கள் விரும்புகின்றார்கள் என்று போலிக் கற்பிதம் செய்துகொண்டு, நான் முந்தி நீ முந்தியென்று, சென்னை வானொலிகளின் பிரசவங்களை ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் நாம் கண்ணீருடன் சகிக்கும் நிலமை மோசமடைந்து வருகிறது.

இவ்வாறான விஷ விதைப்புகளுக்கு மத்தியில், சுயபொறுப்பின் பிரகாரமும், சுயஒழுக்கத்தின் அடிப்படையிலும், நம் பாரம்பரிய செழுமைத் தமிழ் ஒலிபரப்பு மரபைப் பேண முனைவோர் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில், நம் தாய்மொழியும், அதன் செழுமையும், நமக்கே அந்நியமாகத் தோன்றும் நிலை, திட்டமிட்டே விதைக்கப்பட்டுள்ளது. இன்று ஈழத்தில் பல இளையவர்கள் மத்தியில், வட்டார வழக்குகள் கூட வழக்கிழந்து, சென்னைத் தமிழ்ப் பயன்பாடே, அன்றாட உரையாடல்களில் தாக்கம் செலுத்துகின்ற நிலை, ஈழத்தமிழர்கள் படிப்படியாக சுயமிழந்து வருவதை அம்பலப்படுத்துகிறது. எனவே, தரம்மிக்க ஊடகப் படைப்புகளை அங்கீகரிப்பது, தரமற்ற ஊடகப் படைப்புகளை நிராகரிப்பது என்ற புலமைத்தளத்தில் நின்று மக்கள் சிந்திக்கும் புரிதலைப் பெறுவதற்கு, இவ்வாறான புத்தகங்களைச் சாமானிய மக்களும் படித்தல் சமூகப்பொறுப்பும் கூட.

சமகாலத்தில், ஊடகத்துறைசார்ந்து கற்றோருக்கும், முறையான பயிற்சிகளைப் பெற்றோருக்கும் வாய்ப்புகளற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், தடி எடுத்தவன் எல்லாம் சண்டைக்காரன் என்பதுபோல, Smartphone வைத்திருப்போர் எல்லாம் ஊடகக்காரர் என்ற 'கோமாளி' வித்தைக்காரர்களின் எண்ணிகை புற்றீசல்கள் போலப் பெருகிவிட்டன. பொழுதுபோக்குகள், கேளிக்கைகள், கொண்டாட்டங்கள், விழாக்கள், விநோதங்கள் சார்ந்த பதிவுகளை, படைப்புகளை வழங்குவோர் தம்மைத் தாமே ஊடகவியலாளர்கள் என்று தம்பட்டம் அடிக்கின்ற இழிநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தரத்தையும், தரமற்றவைகளையும் பகுத்தறிய முடியாத சமூகக் கட்டமைப்பை, சமூக ஊடகங்கள் ஏற்படுத்திவிட்டன. மேலும், மரபுசார் ஒலி-ஒளிபரப்பு ஊடகங்களில் பலவும், கேளிக்கை-விநோத-பொழுதுபோக்கு அம்சங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. அநேகமான வானொலி நிலையங்களில் ஒலிபரப்புக் கருவிகளை இயக்குவதே (Console Operation) அறிவிப்பாளர்களின் அடிப்படைத் தகைமையாகக் கருத்திற்கொள்ளப்படுகிறது. மொழித்தகைமை, மொழிச்செழுமை, பொதுஅறிவு, அரசியல்-சமூக-நடப்பு விவகார ஞானம் குறித்த திறன் தேர்வுகளை வானொலிகள் புறக்கணித்து வருகின்றன. பாடல்களை ஒலிபரப்புதல், விளம்பரங்களை ஒலிபரப்புதல், தரப்படும் அறிவித்தல்களை சென்னைத் தமிழிலோ அல்லது வாயில்வருகிற தமிழிலோ ஒப்புவித்தல், சினிமாத் தகவல்கள் மற்றும் கிசுகிசுக்களால் வானலைகளை நிரப்புதல், நேயர்களுடன் கண்டதையும் உரையாடுதல் என்பனவே அறிவிப்பாளருக்குப் போதுமானவை என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை என்பது, ஒருகாலத்தில் ஒலிபரப்பில் கோலோச்சிய ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சாபம் என்றே எண்ணத் தோன்றுகிறது. முக்கித்தக்கிக் குரலை வளைத்து நெளித்து தம்மைச் சென்னையின் சிங்காரர்களாகவும், சிங்காரிகளாகவும் காண்பிக்க, சமகாலத்து ஈழத்தமிழ் அறிவிப்பாளர்கள் பலரும் படும்பாட்டைச் சகிக்கமுடியவில்லை. தம் சுயமிழந்து, சொந்த நடை மறந்து அன்னநடை பயில்கின்றனர் நம் ஈழத்து அறிவிப்பாளர்கள்.

எனவே, இன்று ஊடக மரபுகள், தகைமைகள், நெறிமுறைகள் என்பன குறித்த புரிதல்களை மேம்படுத்துவதற்கு, விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' போன்ற நூல்களின் தேவை அவசியம். ஆனால், அவ்வாறான பல படைப்புகளுக்கு நிகரான படைப்பைத் தனது ஒரு நூலின் மூலம் விக்னேஸ்வரன் பூர்த்தி செய்துள்ளார். இதற்குமேல், ஈழத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த, ஈழத் தமிழர்கள் கோலோச்சிய வானொலி ஊடகத்துறை குறித்தும், அதனுடைய துணைப் பிரிவான தொலைகாட்சி ஊடகத்துறை குறித்தும் இவ்வளவு துல்லியமான வரலாற்றுத் தரவுகளை யாரும் தந்துவிடமுடியும் என்று நான் கருதவில்லை.

ஒரு காலக் கடிகாரமாக நின்று, நிலம் முதல் புலம்பெயர் தேசம் வரை ஈழத்தமிழ் ஊடகப் பரப்பின் வரலாறுகளையும், அதனோடு தொடர்புபட்டவர்களின் பங்களிப்புகளையும் உள்ளடக்கிய வரலாற்றை 7 ஆண்டுகால அர்ப்பணிப்புமிக்க பணியின் மூலம், ஒரு ஆவணப் படைப்பாக விக்னேஸ்வரன் நம் சமூகத்திற்குப் பரிசளித்துள்ளார். ஆண்டுகள் செல்லச் செல்ல இந்நூலின் தேவையும், பெறுமதியும் அதிகரித்தே செல்லும். ஈழத் தமிழர்களின் ஒலி-ஒளி ஊடக வரலாற்றை ஆய்வுக்குட்படுத்த விரும்புவோர், அறிந்துகொள்ள முனைவோர் அனைவரும் இந்நூலைத் தவிர்த்துவிட்டு தம் தேடல்களுக்கான விடைகளைத் தேட முடியாது.

இந்நூல் சுயமரியாதை மீது அதீத அக்கறை கொண்ட ஓர் ஊடகரின் சுயசரிதம் என்ற போதிலும், சுயமரியாதை வேண்டி நிற்கின்ற சமூகத்துடன் கூடவே பயணித்து, அவர்களின் கதைகளையும் தன்னுள் அடக்கியுள்ள தரவுப்பெட்டகம்.

நாம் மொழியை நேசித்தவர்கள். அந்த மொழியைக் கவசமாகக்கொண்டு, குதிரைகளாக வாழ்ந்தவர்கள். இன்று கழுதைகளாக உருமாறி வருகிறோம். இந்த இழிநிலை மாற்றத்தைத் தடுக்கச் சமூகமாகச் சிந்திப்போம். அவ்வாறான சிந்திப்பின் தூண்டுதலுக்கும், ஆக்கம் தரும் ஊடக மரபுகளை மீட்டெடுக்கவும் இந்நூல் ஒரு முதல் விதை என்று நம்புவோம்.

இந்த நூல் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், நூலகங்களிலும், தமிழை நேசிக்கும் ஒவ்வொரு தமிழரின் இல்லங்களிலும் இருக்கவேண்டியது மட்டுமல்ல படிக்கப்படவேண்டியது என்பதே எனது விருப்பமும் கூட.

இந்நூலை ஆக்கிய P. விக்னேஸ்வரனுக்கு ஒரு மாணவனாக மீண்டும் எனது மனமார்ந்த நன்றி.




uthayan.s.pillai@thaiveedu.com

# பொ. கருணாகரமூர்த்தி

## ஜேர்மனிய வாழ்வியலின் அசலான எழுத்து

மு. நித்தியானந்தன்



எண்பதுகளில் ஈழத்திலிருந்து புகலிடம்தேடி மக்கள் குடி பெயர்ந்தபோது, அதற்கெதிராக மிகக் கடூரமான கண்டனங் கள் ஈழத்திலிருந்து எழுந்தன. புகலிடச் சமூகத்தின் இருப்பு அதன் உற்பவத்திலேயே நிராகரணத்திற்குள்ளானது. புதுவை இரத்தினதுரை புலம்பெயர்ந்து சென்றவர்களுக்கு எதிராக அறம் பாடிய கவிதையைப் பின்னாளில் அவரே முற்றாக நிரா கரித்து விட்டாலும், புலப்பெயர்வு என்பதே இழிவானதாகக் கருதப்பட்ட நிலைக்கு அது கட்டியம் கூறியது.

'பிரச்சினைக்குப் பயந்து, பிறந்த நாட்டையும் வாழ்ந்த வீட் டையும் இனசனங்களையும் விட்டுப் பிறதேசம் ஓடும் காகக் கூட்டத்தைப் பற்றி நினைத்தால் நான் அடிக்கடி பச்சாத்தா பப்படுவதுண்டு' என்று டொமினிக் ஜீவா எழுதினார்.

'புலம்பெயர் எழுத்தாளர்களே! எங்கள் அவலங்களை உங் கள் இருப்புக்காகப் பயன்படுத்தாதீர்கள்' என்று செங்கை-ஆழியான் பிரகடனம் செய்தார்.

எண்பதில் தொகை தொகையாக ஈழத் தமிழர்கள் லண்டனில் வந்து குவிந்தபோது, ஏற்கெனவே பிரித்தானியக் குடிகளாக உலா வந்த தமிழ்ப் பெருங்குடிகள், புதிதாக வந்திறங்கிய தமிழர்களை இழிவாக நோக்கினர்.

பிரான்சில் அகதி அந்தஸ்து பெற்றிருந்த கி.பி. அரவிந்தன் தனது அகதி அந்தஸ்தைத் துறக்க விரும்பியிருந்தார்.

ஈழத்திலிருந்து ஐரோப்பியச் சுற்றுலாவிற்கு வந்த எழுத்தாளர் கள், தங்களுக்குக் களத்தில் வேலை இருக்கிறது என்றும் தாங்கள் இங்கே நிற்கமுடியாது என்றும் கூறிச் சென்றனர். கனடா சென்ற ஈழத்து அரசியல் அவதானி ஒருவர் புலம்பெயர் சமூகம் என்ன செய்ய வேண்டும் என்று நல்லுரை நல்கிய பின் னர், தனது தாயகக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவ தற்கென மறுநாளே தான் ஈழம் செல்லவிருப்பதாக மேடை யில் அறிவிப்புச் செய்தார்.

வெவ்வேறு வடிவங்களில் அகதி வாழ்வை இழித்தும், நிராக ரித்தும் எழும் குரல்களே இவை. ஆனால், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இன்று உலக அரங்கில் வலிமை மிக்க சமூகமாக வேர் பிடித்துள்ளது. இலங்கையில் ஒருபோதுமே கால் பதித் திராத ஈழத்தமிழ்ச் சமூகத்தின் இரண்டாம், மூன்றாம் தலைமு றையினர் உருவாகியுள்ளனர். தங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர், தங்கள் தந்தையின் மொழி பேசுபவர் என்று அந் தப் பிள்ளைகள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' என்ற தேவாரத்தை ஆங்கிலத்தில் எழுதிவைத்துப் பாடும் தலைமுறை இது.

லண்டனில் ஒரு பஸ் தரிப்பிடத்தில் இணுவிலுக்குப் போவ தற்காக நின்று கொண்டிருந்த ஒரு முதியவரை அடையாளங் கண்டு, அவரைப் பத்திரமாக அவரது வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார் ஒரு சமானியன்.

தனது மண்ணிலேயே வேரூன்றியவர் ஆழ்ந்து வேரோடிய ஆலமரத்தைப் போன்றவர். அந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்த தும் அவர் தூசியாகிப்போகிறார். Exile என்பது எந்தத் திணைக்குள்ளும் அடங்காது. தங்கள் அரசியல் எல்லைக் குள் யாரும் வந்துவிடாமல், அரசு ஆயிரம் எல்லைத் தடுப்பு களைப் போட்டிருக்கும் நிலையில், அதனை மீறி அந்த நாட் டிற்குள் நுழைந்திருக்கும் கிரிமினல்தான் ஓர் அகதியானவர்.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து, வெளிநாடுகளில் அகதிகளா கப் பயணிக்கும் அவலங்கள் நம் நினவடுக்குகளில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றன. அந்தத் துயரவலிகளைச் சுமந்தவர்கள் அவற்றைப் பதிவு செய்யாமலே போய்விட்டார் கள். அகதி வாழ்வினை, முள்ளிவாய்க்கால் அவலங்களைப் புகைப்படங்களில் பார்த்துக் கவிதை எழுதிக் கொண்டிருப்ப வர்கள் பெருகிவிட்டனர்.

நான்கு தசாப்தங்களுக்கு மேல் ஜெர்மனியில் வாழ்ந்து, பெர்

லின் வாழ்வின் ஒவ்வொரு அடுக்கினையும் அனுபவித்த றிந்து, பொ. கருணாகரமூர்த்தி தந்திருக்கும் 'பெர்லின் இரவு கள்' அவர் புகலிட இலக்கியத்திற்குத் தந்திருக்கும் அருங் கொடையாகும்.

1973-லேயே ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியின் மாணவர் தமிழ் அவையின் 'புதுவை' மலரில் தனது 'ஏழை' என்ற சிறுகதைக்





கூடாகக் கால் பதித்தாராயினும், சீரிய எழுத்துலகில் அறியப் பட்ட எழுத்தாளராக மூன்று தசாப்தங்களைக் கடந்திருக்கி றார். தமிழகத்தில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்களின் அணிக்குள் முன்வரிசையில் இருப்பவர் கருணாகரமூர்த்தி. இவரின் புனைவுகளை, எழுத்துகளைக் கடந்து தமிழில் புக லிட இலக்கியம் பற்றிப் பேசுவதற்கில்லை. புகலிட எழுத்து கள் பெரிதும் முளைவிடாத காலப்பகுதியிலிருந்து, 'கலை ஞன்' சிறுகதையிலிருந்து, 'அகதி உருவாகும் நேரம்' என்ற நாவலுக்கூடாக அவருடைய எழுத்துகளைத் தொடர்ந்து வாசித்து வருபவன் என்ற வகையில், அவரின் கதை சொல் லும் ஆற்றலையும் எழுத்து வளத்தையும் கண்டு வியந்திருக் கிறேன். அவரின் புனைவாற்றலுக்குச் சிறந்த சாட்சியமாக 'பாய்மரத்தில் ஒரு பறவை' என்ற இந்தத் தொகுப்பு அமைந்தி ருக்கிறது.

'பாய்மரத்தில் ஒரு பறவை' என்ற தலைப்புச் சிறுகதை இத் தொகுப்பின் நீண்ட சிறுகதை. விடுதலைப்புலி இயக்கத்திலி ருந்த சுதாஸ் என்ற இயக்கப் போராளி, ராகினி என்ற சக இயக்கப் பெண் போராளியிடம் ஈர்ப்புக்கொண்ட நிலையில், அவள் வீரச் சாவடைந்தபோது, மனஞ்சோர்ந்து, களநிலையி லும் தளர்ந்து போய், பெற்றோரின் பெரும் முயற்சியில் கட்டா ரில் கட்டடத் தொழிலில் உதவியாளனாகச் சென்றடைகிறான். கட்டாரில் டோஹோவிலிருந்து, பாக்தாத், குர்திஸ்தான், எர் பில், டுஹோக், இஸ்தான்புல், துருக்கி-கிரீஸ் எல்லை, கிரேக் கத்தின் கொஸ் தீவு, எஜினா, கஸ்டோரியா, வோலா, அதென்ஸ், மேசிடோனியா, செர்பியா, ஹங்கேரி, புடாபெஸ்ட், ஜேர்மனி என்று பத்து நாடுகளையாவது சுதாஸ் தனது நண்பர்களுடன் கடந்து சென்று இறுதியில் ஜெர்மனியில் அகதி அந்தஸ்து கோரும் நீண்ட பயணம் இது. இதனைப் பயணம் என்ற சொல் லுக்குள் அடக்கலாமா? என்பதும் கேள்விதான். பஸ்ஸில், காரில், ட்ரக்கில், படகில், கால்நடையில் அயராது தொடரும் பயணம். உயிரைப் பணயம் வைக்கும் பயணம். இலக்குத் தெரியாத பயணம். வதை. வலி. பசி, பட்டினி. தூக்கமின்மை. காசின்மை. கையில் ஒரு கடவுச் சீட்டும் இல்லை. விசா என்ற கேள்வி எழுவதே இல்லை. ஒவ்வொரு எல்லையிலும் காத்தி ருக்கும், சுற்றிவளைக்கும் காவற்படையினர். கைவிலங்கிட் டுக் கைது. சில சமயங்களில் 6 மாதச் சிறை. மைல்கணக்கில் நடைபயணம். மொழி தெரியாத உலகிற்குள் மாறி மாறிப் பய ணம். புவியியல் நில வரைபடத்தை விரித்துவைத்துப் பார்த் தாலும் கிரகிக்க முடியாத நெடுவழிப் பயணம். உலக வரைப டத்தில் ஆறுகள், மலைகள், கடற்கரைகள், பெருஞ் சுவர்கள், நகர்கள் என்று பௌதிக எல்லைகளிட்டு, முள்வேலிகள், ஆயுதந் தாங்கிய காவற்படை, தடைமுகாம், சோதனைச் சாவ டிகள் என்று காவல் அரண்கள் அமைக்கப்பட்ட நாடுகளுக் குள் நுழைகிறார்கள்.

இன்று தேசங்களின் எல்லைகள் மாற்றமுற்று வருகின்றன. பௌதிக எல்லைகள் கொண்ட, மாறாத, மூடுண்ட, அயல் பிராந்தியங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும் அரண்களுடன் கூடிய எல்லைகளாக அவற்றை நாம் இன்று காண்பதற்கில்லை. எல்லை என்றால் எது? என்று நாம் கேட்ப தற்கில்லை. சமூக ரீதியில் எல்லைகள் எவ்வாறு கட்டமைக் கப்படுகின்றன? என்பதே சரியான கேள்விகளாக அமையும் என்கிறார்கள் எல்லைகள் பற்றிய ஆய்வறிஞர்கள். எல்லை கள் என்பன வரைபடங்களிலும் அட்லஸிலும் பொறிக்கப் பட்ட, உறைந்துபோன வெறும் எல்லைக்கோடுகளாக அல் லாமல், நிலைமாறும் வலயங்களாக மாறிவருகின்றன. கருத் துகளும், மனிதர்களும், பண்டங்களும், மூலதனமும் எளிதாக நுழையவல்லனவாக எல்லைகள் நெகிழ்ந்துள்ளன. 'எல்லை களற்ற உலகம்' என்ற கண்ணோட்டம் வலுப்பெற்று வருகிறது. அதே நேரம் இன மோதல்கள் வன்முறைக் கிளர்ச்சிகளாக வெடித்து தனித்தனி தேசங்களாக புதிய தேசங்களும் எல் லைகளும் உலக வரைபடத்தில் தோற்றம் காட்டுகின்றன. எல்

லைகள் சிதைவதும் புதிய எல்லைகள் உருப்பெறுவதும் (Debordering and Rebordering) இன்றைய தேச எல்லைகளின் நிர்ணயத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன.

'பாய்மரத்தில் ஒரு பறவை' என்ற கதையில் சுதாஸ் மத்திய கிழக்கிலிருந்து துருக்கி, கிரீஸ், செர்பியா என்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கூடாக, பத்து நாடுகளையாவது எந்தப் பயண ஆவணமுமில்லாமல் பயணிக்கிறான். பெரும்பாலான தமிழ் அகதிகள் விமான வழிப் பயணத்தில் தங்கள் பயணத்தை ஆரம்பித்திருந்தாலும், தரைப் பயணத்தில் பெருங்



கஷ்டத்திற்கூடாகவே தங்கள் இலக்கினை அடைந்திருக்கிறார்கள். தமிழ் அகதிகளில் பலர் தங்களின் நீண்ட வழிப் பயணத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். கடல்வழிப் பயணத்தில் கப்பல் கவிழ்ந்து கணக்கற்ற தமிழ் அகதிகள் மரணித்துள்ளனர்.

ஐரோப்பியக் கரையை அடைய தமிழ் அகதிகள் பட்டிருக்கும் பாட்டின் ஒரு பகுதியினை 'ஒரு பாய்மரத்துப் பறவை' ஒரு case study ஆகவே தந்திருக்கிறது. எண்பதுகளில் புலம்பெயர்ந்தவர்கள் அவற்றிற்கான பணத்தைத் திரட்டவும், பயண ஏஜென்சிகளை அணுகவும் போலிக் கடவுச் சீட்டுகளைத் தயாரிக்கவும், போலி விசாக்களை உருவாக்கவும் உலகின் வெவ்வேறு விமான நிலையங்களைத் தேர்ந்து பயணிக்கவும் மேற்கொண்டிருக்கும் புலம்பெயர் பயண அனுபவங்கள் புகலிட சரித்திரத்தில் இன்றும் முழுமைப்படுத்தப்படாத அத்தியாயங்கள் ஆகும்.

கருணாகரமூர்த்தி தனது கதை நிகழ்வில் நிலத்தோற்றத்தை மிகத்துல்லியமாக, விஸ்தாரமாக விபரிப்பவர். ஒரு தேவாலயத்தை, பெருங் கட்டடத்தை, ஒரு சிலையை விபரிப்பதாயின் நேரமெடுத்து அவை குறித்த தகவல்களை, விபரங்களைத் தேடித் தொகுத்துக் கொள்பவர். அவற்றிற்கான உழைப்பை நல்கத் தயங்காதவர்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள 12 சிறுகதைகளில் சரிபாதிக்கு மேலான கதைகள் இலங்கையையும் தமிழகத்தையும் களமாகக் கொண்டவை. புலம்பெயர் இலக்கியம் புலம்பல் இலக்கியம் என்று எள்ளி நகையாடப்பட்ட நிலை இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. புலம்பெயர் இலக்கியம் புலம்பலையும், தாய்நாட்டைப் பிரிந்து வந்த ஆற்றாமையையும் கழிவிரக்கத்தையும் கொண்டே சுழன்று வருவதாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. உலகெங்கும் எழுந்துள்ள புலம்பெயர் எழுத்துகளில் தாயகத்தைப் பற்றிய ஏக்கம், தாய்நாட்டிற்குத் திரும்பும் தாகம் என்பன மீண்டும் மீண்டும் எதிரொலித்தே வந்திருக்கின்றன. ஆங்கில எழுத்தாளர் அம்பலவாணர் சிவானந்தன் அறுபது ஆண்டு காலம் இங்கிலாந்தில் வாழ்ந்த போதிலும், நிறவெறிக்கு எதிராகப் போராடிவந்த ஒருவராக அங்கீகாரம் பெற்ற நிலையிலும் அவர் எழுதிய When Memory Dies என்ற நாவல் நூறாண்டு கால இலங்கை வாழ்வைக் களமாகக் கொண்டதுதான். மைக்கல் ஒந்தாஜி தனது பிறந்த நாடான இலங்கையை விட்டு நீங்கி எழுபது ஆண்டுகள் புலம்பெயர்ந்து வாழ்ந்தும் அவரது Anil's Ghost என்ற நாவல் இலங்கை மண்ணையே களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த எழுத்தாளன் காலியான பெருங்காய டப்பாவைப் போன்றவன். டப்பாவில் பெருங்காயம் காலியாகிப்போனாலும், டப்பாவிலிருந்து பெருங்காய மணம் நீங்குவதில்லை. தனது தாய்நாட்டை விட்டு அவன் வெளியேறிவிட்டாலும், அவன் தனது எண்ணத்தில், சிந்தனையில், நினைவில் தனது தாயகத்தைச் சுமந்து திரிகிறான். அவன் நினைவிலிருந்து தாயக மண்ணை யாராலும் சுலபமாகத் தூக்கி எறிய முடிவதில்லை.

நீர்வேலிச் சந்தியில் நாலுமுழ வேட்டியும் நீளக்கை சேர்ட்டும் துவரம் பருப்பளவில் சந்தனப் பொட்டுமாய் 'மெட்டாய்' புறப்படும் ரத்தினம் எனப்படும் 'பச்சைமட்டையரை' அவரால் எப்படி நினைவிலிருந்து தூக்கி எறிந்துவிட முடியும்? யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிராமச் சந்தியிலும் திறமை மிக்க ஒரு மெக்கானிக் இருந்துகொண்டே வந்திருக்கிறார். 'பச்சைமட்டையர்' என்ற இந்தக் கதை வெளியானபோது, அந்தக் கதாபாத்திரத்தை நினைவுகூர்ந்து அந்த ஊர்க்காரர்கள் பதிவிட்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

யாழ்ப்பாணம் ராணி தியேட்டருக்கருகில் ரப்பர் செருப்புகளை இழுத்துத் தேய்த்தபடி சென்று கொண்டிருக்கும் பெயர் தெரியாத மனிதர், அனுராதபுரத்தில் தன் மரியாதையைக் காப்பாற்றியதை நினைவுகூரும் 'பெயர் தெரியாத மனிதர்' என்ற

சிறுகதை நினைவடுக்கில் உறைந்துபோயிருக்கும் நன்றியுணர்வின் ஒரு மின்னல்பொறி போன்ற தருணத்தைக் கல்வெட்டில் பொறித்திருக்கிறது.

எண்பது வயதான மனோகரன் மாஸ்டர், 'எனது கடைசி மூச்சு நான் வாழ்ந்த சூழலிலேயே நிற்கவேணும்' என்று சொல்லி, ஜெர்மனியிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவிலை ஒட்டி இருக்கும் வீட்டிலே போயிறங்குவது இயல்புதானென்றாலும், இரண்டுவாரம் கழித்து அவரது மகனும் மருமகளும் ஜெர்மனியிலிருந்து நீங்கி, மட்டுவிலில் வந்திறங்குவதாக, 'அப்பாவின் நிமித்தம்' கதையை முடித்திருப்பது கதையின் போக்கிற்கு ஒரு திடீர்த் திருப்பத்தைத் தந்திருந்தாலும், புலம்பெயர்ந்து மேலை நாடுகளுக்கு வந்துவிட்ட அகதிகள் மீண்டும் தங்கள் சொந்த நாட்டை நோக்கித் திரும்புவது அரிய நிகழ்வு. தமிழர்கள் என்றில்லை, புலம்பெயர்ந்துவிட்ட அகதிகள் சமூகம் அனைத்திற்கும் அது பொருந்தும். தமிழகத்தின் சுப்பர்சிங்கர் இசை நிகழ்ச்சிகளில் 'பனைமரத் துக்காடே, தேன்சிட்டுக்கூடே' என்று கனடாவிலிருந்து ஒரு மூன்று நிமிடம் கண்ணீர் மல்கிப் பாடுபவர்கள், ஊரில் போய் ஒரு வாரம்கூட நிற்கமாட்டார்கள்.

'தனிமைக்குள் நீந்தும் ஓங்கில்' கதை செலா என்ற சுற்றுலாப் பிரியன் ஜெர்மனியிலிருந்து மன்னார் விடத்தல் தீவில் குருசு என்ற மீனவரின் குடிசையில் ஐக்கியமாகி, குருசுவின் இளவயது விதவைத் தங்கை அமேலியாவுடன் திருமண பந்தத்தில் இணைவதாய் முடிகிறது. மன்னார் பிராந்தியத்தின் கத்தோலிக்க மீனவ வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளை இக்கதையில் கலாபூர்வமாகக் கொண்டுவருவதில் கருணாகரமூர்த்தி வெற்றி கண்டிருக்கிறார். புதிய வண்ணச் சேர்க்கைகளை தனது சிறுகதையில் கருணாகரமூர்த்தி அள்ளித் தெளித்திருக்கிறார். செலா என்ற ஜெர்மானியனின் வரவு அந்த மீனவக் குழுமத்தின் மத்தியில் ஏற்படுத்தும் சலனங்கள், எதிர்பார்த்திராத சம்பவங்கள், புதிய மாற்றங்களை பாரம்பரிய சமூகம் ஏற்றுக்கொள்வதில் கிளைக்கும் பிரச்சினைகள் என்று புதிய வலயங்களுக்குள் கதையை நகர்த்துவதில் தனது கூர்மையான எழுத்து வன்மையை நிரூபித்திருக்கிறார். முன்னென்றும் நிகழ்ந்திராத செயற்பாடுகள், தன்பாட்டில் சுரத்தில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் சிறு சமூகமொன்றில் ஊடுருவும் போது அது எவ்வளவு தூரம் மாற்றத்திற்குச் செவி சாய்க்கிறது என்பதற்கு இந்தக் கதை நல்ல சாட்சியம்.

'உணர்வோடு விளையாடும் பறவைகள்' என்ற சிறுகதை ஒரு ஜெர்மானியப் பெண்ணிற்கும் ஜெர்மனியில் வதியும் இலங்கை ஆணுக்கும் இடையிலான பால்மை (sexuality) பற்றிப்பேசும் கதை. பால்மை என்பது ஒருவரின் பாலியல் நடத்தை, கவர்ச்சி, விருப்புகள், விருப்பின்மைகள், உணர்வு முடிச்சுகள், தேர்வுகள் என்பன குறித்தன. அது நிலைபேறுடையது அன்று. Sexuality can be fluid. பால்மை நெகிழ்ந்து கொடுப்பது. வலிமை மிக்க உணர்வுகளின் குவிமையம் போன்றது. பால்மை உலகு திண்ணிய, வலுவான உணர்ச்சிகளின் களம். பூகம்பமாய் பேரதிர்ச்சிகளை எழுப்பவல்ல களம். வெவ்வேறு வகைப்பட்ட தேவைகள், ஆசைகள், மன எழுச்சிகள் ஆகியவற்றைக் கடத்தி நிற்கும் வாருக்கு நிகரானது. காதல், காமம், கோபம், மிருதுத்தனம், வலிந்து தாக்கும் வன்மை, நெருக்கம், துணிவுச் செயற்பாடு, மனோரதியம், சூறையாட்டம், இன்பநுகர்வு, மனத்துயர், பிறிதொரு ஆளுமைக்குள் நாட்டாண்மை காட்டும் வீரியம், அதிகாரம் போன்ற உணர்வுகளின் மின்னோட்டம்.

இந்தப் பால்மை உணர்வு மிகச் சிக்கலானது. இருவருக்கிடையில் அரும்பும் காதலில், காமத்தில் பொதிந்திருக்கும் சாரம் அத்துணை எளிதில் புரிதலுக்கு வசப்படுவதில்லை. மிலன் குந்தேராவின் 'The hitchhiking Game' என்ற கதையில் தங்கள் விடுமுறையைக் களிக்கச் செல்லும் இளங் காதலர்கள், தாங்கள் பூணும் அன்னியர்கள் என்ற பாவனைக் கற்பனை, அந்த இரவு அவர்களிடம் எந்த நெருக்கத்தையும் ஏற்படுத்த முடியாமல் உதிர்வதைக் காண்கிறோம்.

கருணாகரமூர்த்தியின் 'உணர்வோடு விளையாடும் பறவைகள்' என்ற கதையில் ஹன்னா என்ற ஜெர்மானியப் பெண்மணிக்கும் அவரின் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கும் 'வெளிநாட்டு ஆணாக' ஜீவன் என்பவருக்கும் இடையிலான பால்மை விசாரமே இந்தக் கதையின் நாதம். DHL விநியோகச் சிற்றுந்துகளில் பொதிகளை விநியோகம் செய்து வருபவர் ஜீவன். வியாபார நிமித்தமாக பெர்லின் வரும் வணிகர்களுக்கு வியாபாரம் தொடர்பான அனைத்து ஒழுங்குகளையும் வழங்கும் ஆலோசனைக் குழுமத்தில் பணியாற்றும் சாதுரியம் கொண்டவள் ஹன்னா.

ஹன்னாவும் ஜீவனும் பகிர்ந்து வாழும் 'அருமையறிந்து பராமரிக்கப்பட்ட மனையின் இருவருக்கும் பொதுவான பிரதான வெளிவாசலுக்கு செதுக்கல் சித்திரங்களுடனான மரக்கதவு. அதுவே Rolls Royce இன் கதவுகளைப் போல ஓசையின்றி மிருதுவாகத் திறந்து சாத்தும். அதன் திறப்புகள் நம்மிருவரிடமும் இருந்தன' என்று தன்மையில் கதை நகர்கிறது. அவர்களின் பால்மை உணர்வின் குறியீடு போன்று, ஓசையின்றி திறந்து சாத்தும் கதவும் அவற்றின் திறப்புகள் இருவரிடமுமே இருப்பதுவும் சூசகமாகச் சொல்லப்படுகிறது. அவரவருக்கு அவரவர் வாழ்வியல் தோரணைகள். ஹன்னாவிற்கு விருந்தினர் என்று பெரிதாக யாருமில்லை. ஒரே குளிர்பதனப்பெட்டியை இருவரும் பகிர்ந்து கொள்ளும் அளவு நெருக்கம் கூடுகிறது. உணவுகளை இருவரும் ஆளுக்கு ஆள் பரிமாறிக் கொள்ளுகிறார்கள்.

ஹன்னா வாசிக்கும் அனைத்து மாதர் சஞ்சிகைகளுமே சராசரிப் பெண்கள் வாசிக்கும் கவர்ச்சிக் குறிப்புகள், நவீன அழகுப்பாணி, அலங்காரங்கள், சமையல் குறிப்புகள் தாங்கிய சஞ்சிகைகள்தான். சீரிய பெண்ணியக் கருத்துகள் கொண்ட சஞ்சிகைகள் அவளின் வாசிப்புப் பரப்பில் இல்லை என்று தெரிகிறது.

'திருமணம் பற்றி என்ன நினைக்கிறாய் ?' என்ற ஜீவனின் கேள்விக்கு, 'திருமணம், குறிப்பாகப் பெண்களுக்கு நல்லதென்று நினைக்கிறேன்' என்று ஹன்னா பதிலளிக்கிறாள்.

‘ஏன் ஆண்களைவிடப் பெண்களுக்குத் திருமணம் நல்ல தென்கிறாய் ?’ என்ற ஜீவனின் கேள்விக்கு ஹன்னா பதிலளிப் பதில்லை.

‘திருமணம் என்பது பெண்களின் இயல்பான வாழ்விடம்’ என்ற மரபார்ந்த கருத்தியலைக் கொண்டவளாக ஹன்னா திகழ்கி றாள். ‘சமகாலத் திருமணம் என்ற மண்டபத்தில், பெண்க ளைக் கீழ்மைப்படுத்தும் தீய ஆவிகள் அச்சுறுத்தி வருகின் றன’ என்கிறார் பால்மை ஆய்வாளர் ஒருவர்.

இன்றும் திருமணச் சந்தையில் பெண் குறைந்த மதிப்புடைய பண்டமாகவும் விரைவில் பழுதாகிவிடக் கூடிய ஒரு பொருளா கவுமே கணிக்கப்படுகிறாள். திருமணத்தை முடித்துக்கொள்ள ஒரு பெண், ஆணைவிட மிக அதிக பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டியவளாகிறாள். நடைமுறையில் ஆணாதிக் கம் சார்ந்த அனைத்திற்கும் அவள் தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டியுள்ளது.

‘ஏன் திருமணம் ஆண்களைவிடப் பெண்களுக்கு நல்லதென் கிறாய் ?’ என்ற ஜீவனின் கேள்விக்கு, அவள் ‘குட்நைட்’ சொல் லிவிட்டு, லேசான உலாஞ்சலுடன் படுக்கையறைக்குள் புகுந்து விடுகிறாள்.

ஒருமுறை ஹன்னாவிற்கு காய்ச்சல் கண்டபோது, உடல் வெப்பத்தைக் குறைக்க, ‘இலேசாக அணைத்து முத்தமிடுவ தால் எவருக்கும் பெரிய சேதாரம் வந்திடாது, மெஸ்யூ’ என்று ஜீவனிடம் கேட்கிறாள் ஹன்னா. இந்த உத்தரவாதத்தின் பின், அவள் கேட்டதை ஜீவன் நல்கியிருப்பார் என்பது வெளியாகச் சொல்லப்படாவிட்டாலும், நல்கியிருப்பார் என்று பொருள் கொள்வதில் தவறிராது. மறுநாள், அவளுக்காக வைன், கோதுமை மா போன்ற பொருட்களை அங்காடியிலிருந்து ஜீவன் வாங்கி வந்தபோது, ‘வாவ்... இதையெல்லாம் நீ என் னைக் கட்டிக்கிட்ட பின்ன பண்ணலாமே’ என்று ஹன்னா சொல்லும்போது பால்மை சார்ந்து அவர்களிடம் பரஸ்பரம் நெருக்கமான உறவு முகிழ்ப்பது தெரிகிறது. அதே சமயம், ஒரு நாள் ஹன்னா யாரோ ஒருவனின் அணைப்போடு டிரா மில் ஏறிப்போவதை ஜீவன் பார்க்கிறான்.

இந்நிலையில், ‘ஜீவன் எதுக்கப்பா கல்யாணங் கட்டிறான்... அதுதானே நிரந்தரமாய் mistress ஒருத்தியை வைத்திருக்கி றானே’ என்று நட்புக் குழுவுக்குள் பேச்சு அடிபடுகிறது. ‘நீ கூத்தியோடு குடியிருக்கிறியாமே’, ‘உனக்கு யாரும் பெண் தர மாட்டார்கள்’ என்று நெருக்கமான நண்பர்கள் கவலைப்படுகி றார்கள்.

ஹன்னா - ஜீவன் பால்மை உறவை, ஈழத் தமிழர் கண்ணோட் டத்தில் அலசும் ஒரு பார்வையும் இக்கதையில் வெளிப்படுகி றது. கூத்தி வைத்திருத்தல், பெண் தரமறுத்தல் போன்ற விவ காரங்கள் தமிழரின் பால்மை சிந்தனையில் கட்டமைக்கப்படு கின்றன. ஜெர்மானியருக்கு இதில் எந்த அர்த்தமும் இல்லை. பால்மை என்பது வரலாற்று, சமூகக் கட்டமைப்பு என்று பால்மை அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

‘வாழ்க்கை முழுவதும் மறந்து போகாதபடி அத்தனை பிணக் குகளையும் பிரச்சினைகளையும் அவளாகத் தந்து கொண்டி ருப்பாள், கவனம்’ என்று பெண்கள் பற்றி தத்துவக் கவிஞர் ஷினிசி சூஸுகியின் வரிகள் அபாய அறிவிப்புப் போல ஜீவ னின் நினைவில் வருகின்றன. இன்றைய பால்மை ஆய்வுக ளில், பெண்களே ஆண்கள் அள்ளி வழங்குகின்ற பிணக்குக ளில், பிரச்சினைகளில் அமிழ்ந்து துயருறுகிறார்கள் என்று தெரிய வருகிறது.

இக்கதை முடிவில், ஹன்னா தனக்கும் லியோனுக்குமான பதி வுத் திருமணத்திற்கு கல்யாண சாட்சியாக ஜீவனைக் கேட்கி றாள்.

ஜீவனின் உணர்வோடு விளையாடிச் சென்ற பறவையாக ஹன்னா உருவகம் பெறுகிறாள்.

கருணாகரமூர்த்தியின் புனைவுகளில் வெளிப்படும் பால்மை விசாரம் தனித்த, விரிந்த ஆய்வுக்குரியது.

‘கவிதைகளைச் சுமந்து திரிபவள்’ என்ற சிறுகதை கருணாகா ரமூர்த்தியின் கற்பனை வளத்திற்கும் இலக்கிய மென்னுணர் வுக்கும் புனைவு வெளிப்பாட்டுத் திறனுக்கும் வலுச் சேர்க்கும் கதையாகும்.

பெர்லினில் வழமையாகக் கூடும் ஞாயிறு அங்காடிக்குச் செல்லும் அவர், நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்ணுடன் சம்பாஷிக்கிறார். எதிர்பாராத மனிதர்கள். அவர்களின் கவி யுள்ளம். வாழ்வின் அபூர்வ தருணங்கள். கலைஞன் அந்தக் கணங்களை சாசுவதமாக்கி, அதிகாரபூர்வமாக அதனைக் கலையாகச் செதுக்கித் தருகிறான். ஓர் எழுத்தாளன் கதை மாந்தர்களைத் தனக்கேயான வடிவியலில், தனது பரந்த வட் டத்தில், முக்கோணக் கட்டமைப்பில், சதுரப் பரப்பில், தனக் குச் சாத்தியமான விதங்களில் எல்லாம் வார்க்கிறார். கதையை லாவகமாக வளர்த்துச் செல்லும் கலை கருணாகரமூர்த்திக் குக் கைவந்திருக்கிறது. அவர் வார்த்த கதைகள் நூறைத் தொடவிருக்கிறது. புகலிட எழுத்தாளர்களில் இயல்பாகக் கதை சொல்லும் ஆற்றல் இவரிடம் உச்சம் பெறுகிறது. புதிய தளங்களை, புத்தம் புதிதான அனுபவங்களை நமக்குக் கொண்டு சேர்க்கிறார். முன்னென்றும் பார்த்திராத, கேட்டிராத வாழ்வியலைப் படைக்கும் வேணவா அவரில் குடிகொண்டி ருக்கிறது. வாழ்வின் வலிகள், போதையூட்டும் வாழ்வின் சில தருணங்கள், வெவ்வேறு வாழ்வுத் துண்டங்கள் அவரின் கதைகளில் பொலிவோடு விகசிக்கின்றன.

புகலிட இலக்கியத்தில், ஜேர்மனிய வாழ்வியலில் தமிழரின் ஊடாட்டத்தை நுணுக்கமாகப் பதித்திருக்கும் கருணாகர மூர்த்தியின் எழுத்து தனித்துவம் கொண்டது. கருணாகரமூர்த் தியின் எழுத்துகள் இல்லையானால், ஐரோப்பியப் புகலிட வாழ்வு பற்றிய நமது புரிதல் பூரணமற்றதாகவே இருந்திருக் கும். புகலிட இலக்கியத்தில் சாதனை செய்த எழுத்தாளர்கள் பட்டியலில் கருணாகரமூர்த்தி முன்வரி
சையில் நிலைபெறுகி றார்.



nithiyananthan.m@thaiveedu.com



# எக்காலத்துக்கும் பொருந்தும் ஒரு நாடகம்

## துஷி ஞானப்பிரகாசம்

1980-ஆம் ஆண்டு இளவாலை புனித என்றியரசர் கல்லூரியிலே மாணவர் விடுதியில் தங்கிப் படித்துவந்த மாணவர்களால் ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டது. அப்போது எனக்குப் பத்து வயது. அச்சுவேலி புனித திரேசாள் பாடசாலையிலே 5-ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். இருந்தபோதும், அந்த நாடகத்தைப் பார்க்கவென எனது அம்மா என்னையும் என் இரு சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு, அச்சுவேலியில் இருந்து தட்டிவானில் ஏறி இளவாலைக்குச் சென்றார். காரணம் எனது இரண்டு அண்ணன்கள் அந்த நாடகத்தில் நடிகர்களாக இருந்தார்கள்.

மேடையிலே நான் பார்த்த அந்த நாடகம் என்னை மிகவும் பிரமிப்புக்குள்ளாக்கியது. நான் முதன் முதலாகப் பார்த்த தொழின்முறை நேர்த்தியுடன் மேடையேற்றப்பட்ட நாடகமாக அது அமைந்திருந்தமை, அந்த நாடகம் என்னைக் கவர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணம் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன். ஆசிரியர் அமரர் P.A.C ஆனந்தராஜா அவர்களின் வழிநடத்தலில் அவரின் மூத்த மாணவர்கள் பலர் இணைந்து மேடையேற்றி, என்னை மிகவும் கவர்ந்த அந்த நாடகம் 'ஐயா லெக்சன் கேட்கிறார்'. அந்த மேடையேற்றத்திலே எனது அண்ணன் மகேந்திரன் ஞானப்பிரகாசம் வெள்ளைக் கொடிக்காரனாகவும், எனது இன்னொரு அண்ணன், பெரியப்பாவின் மகன், சங்கர் செல்லர் ஐயாவாகவும் நடித்திருந்தார்கள்.

அந்த நாடகத்தை நான் அன்று ஒரேயொரு முறை பார்த்ததோடு சரி. இருந்தபோதும், நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளைக் கடந்தும் அந்த நாடகத்தின் பல காட்சிகளும், பாத்திரங்களும், ஏன் வசனங்களும்கூட, இன்றும் என் நினைவில் இருக்கின்றன. அதற்கான மேலதிக காரணங்களாக நான் கருதுவன அந்த நாடகத்தில் இளையோடிய அங்கதச் சுவையும், ஒரு பத்து வயதுச் சிறுவனே புரிந்துகொள்ளக்கூடிய வகையில், நாடகத்தின் கருத்துத் தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்துச் சொல்லப்பட்ட விதமும் ஆகும்.


மாவை நித்தியானந்தன் எழுதிய இந்த 'ஐயா லெக்சன் கேட்கிறார்' நாடகத்தின் பனுவல் குமரன் புத்தக இல்லத்தால் தனி நூலாக இவ்வாண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதைப் படித்தபோது இந்த நாடகம் பற்றிய எனது பிரமிப்பு இன்னும் அதிகரித்தது. காரணம் பத்து வயதில் பார்த்தபோது எனக்குப் புரியாத பல விடயங்கள், நாடகத்தின் பல உள்ளடுக்குகள், எனக்கு இப்போது புரிகின்றன.

உலகம் தட்டையானது என்றும் சூரியனே பூமியைச் சுற்றிவருகிறது என்றும் இரண்டு முக்கிய கொள்கைகளை முன்வைத்து ஐயா தேர்தலில் குதிக்கிறார். அவரைச் சுற்றியுள்ள சில வலிமையுடையவர்கள், தமது தனிப்பட்ட ஆதாயத்திற்காக அவரை ஆதரிக்கிறார்கள். அடிமட்டத் தொண்டர்கள் அவர் சொல்வதை உண்மையென்று நம்பியே ஆதரிக்கிறார்கள். எதிர்த்தரப்பிலே உலகம் உருண்டையே என உறுதியுடன் கூறும் அருளப்பு இருக்கிறார். இதை வைத்து நாடகாசிரியர் அருளப்புவின் பக்கம் என்று நாம் தீர்ப்பு வழங்க முடியாது. ஏனென்றால் அருளப்புவின் தொண்டர்களில் ஒருவரான வெள்ளைக்கொடிக்காரனும் உலகம் உருண்டையென்றே நம்புகிறார். அந்த நம்பிக்கையின் அடிப்படையாக வெள்ளைக்கொடிக்காரர் வழங்கும் காரணங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று 'எங்களுடைய அருளப்பர் அப்படித்தான் சொல்லுறார்' என்பது. இதன் மூலம் வேறெந்தத் தன்னாய்வோ, தேடலோ இன்றி, இரண்டு தரப்பிலுமே தொண்டர்களும் வாக்காளர்களும் தலைவர்களின் பரப்புரையிலும், வாக்குறுதிகளிலும்



அள்ளுண்டு அரசியல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதை நாடகாசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

தனது நம்பிக்கையின் அடிப்படையாக வெள்ளைக்கொடிக்காரர் முன்வைக்கும் இன்னொரு காரணம் இன்னமும் முக்கியமானது. அந்தக் காரணம் 'முன்றாம் வகுப்புப் புத்தகத்தில போட்டிருக்கிறான் உலகம் உருண்டையென்று' என்பது. எழுதியிருப்பதில் தாம் படிப்பவை எல்லாவற்றையுமேயும், சொல்லப்படுவதில் தாம் கேட்பவை எல்லாவற்றையுமேயும் உண்




மையென்று உறுதியாக நம்பி அதற்கு எதிர்வினையாற்றும் அரசியற் பெரும்பிணி இந்தச் சமூக ஊடக யுகத்தில்தான் பெரும் ஆபத்தாக எம்மைப் பீடித்திருக்கிறது. இருந்தபோதும், அதன் ஆரம்ப அறிகுறிகளை 1973-லேயே இனங்கண்டு எழுதி வைத்த நாடக ஆசிரியர் மாவை நித்தியானந்தனின் தீர்க்கதரிசனம் வியப்பூட்டுகிறது.

இது போலவே, தேர்தலில் வெற்றி பெற்றால் பாடப்புத்தகங்களெல்லாம் 'உலகம் தட்டாயானது' என மாற்றி எழுதப்படும் என்ற ஐயாவின் தேர்தல் வாக்குறுதி தமிழர்களின் வரலாறு இலங்கையின் பாடப் புத்தகங்களில் திரித்து எழுதப்படுவதையும், கறுப்பின அடிமைத்துவம் பற்றிய வரலாறு அமெரிக்காவின் பாடப்புத்தகங்களில் இருந்து திட்டமிட்ட முறையிலே அகற்றப்பட்டு வருவதையும், தமிழ் மன்னர்களின் வரலாறு இந்திய பாடப்புத்தகங்களில் தோன்றாமலேயே போனதையும், பூர்வ குடிகளுக்கெதிரான கனடாவின் வரலாற்று வன்கொடுமைகள் கனடிய அரசின் சார்பு நிலையிலிருந்தே குழந்தைகளுக்குப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதையும் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

எனது பத்து வயதில் இந்த நாடகத்தைப் பார்த்தபோது, உலகம் தட்டையானது என்ற ஐயாவின் வாதத்தை நகைச்சுவை என்று எண்ணிச் சிரித்த நான், இன்று விஞ்ஞானத்தில் வளர்சியடைந்துவிட்டதாக நாம் கருதும் வட அமெரிக்காவிலேகூட உலகம் தட்டையானது என நம்புவர்கள் flat earthers என்கின்ற ஒரு இயக்கமாக அரசியற் பலம்பெற்று வருவதையும், அவர்களின் வாக்குகளுக்காக ஐயா போலவே பல மேற்குலகத் தலைவர்கள் அரசியலாடுவதையும் பார்க்கும்போது எனது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி அச்சம் எழுகிறது.

ஐயாவின் தேர்தல் அரசியலை ஆதரிக்கும் முக்கிய அமைப்பின் பெயராக 'மெய்ஞான மன்றம்' என்பதை நாடகாசிரியர் தெரிவுசெய்ததையும் நான் குறியீடாகவே பார்க்கிறேன். சமகாலத்திலே, இந்தியாவில் இந்துத்துவமும், இலங்கையில் பௌத்தமும், அமெரிக்காவிலே கிறீஸ்துவமும், மத்திய கிழக்கிலே இஸ்லாமும் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி அவர்களை ஒருவருக்கொருவர் எதிராளிகளாக ஆக்கி அதில் அரசியல் ஆதாயம் தேடும் ஐயாக்களின் ஆயுதமாக ஆகியுள்ளதைக் காண்கிறோம். ஐயாவின் தேர்தல் கொள்கைகளைக் கவனித்தாலும், அவற்றால் வாக்காளர்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பது தெளிவாகும். உலகம் தட்டையானால் என்ன உருண்டையானால் என்ன, அரிசிக்கும் பருப்புக்கும் அன்றாடம் அல்லாடும் மக்களின் வாழ்வில் மாற்றம் எதுவும் நிகழப் போவதில்லை. ஆனால், அந்த விவாதம் அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பப் பயன்படுகிறது. இன்றும் இதேபோன்ற உத்திகளே அரசியல்வாதிகளால் எடுத்தாளப்படுவதைப் பார்க்கிறோம்.

'50 ஆண்டுகளுக்கு முன்னர் இதை நான் எழுதியபோது, 50 ஆண்டுகள் கழித்தும் அதே நிலைதான் இருக்குமென நான் எண்ணிப் பார்த்ததில்லை' எனத் தனது முன்னுரையிலே வேதனையுடன் குறிப்பிடுகிறார் நாடகாசிரியர் மாவை நித்தியானந்தன். உண்மையில், இந்தப்போக்கை 1973-லேயே தெளிவாக உணர்ந்திருந்தும் அந்தப் போக்கை நிறுத்த மட்டுமல்ல, அதன் வளர்ச்சியின் வீரியத்தைக் தடுக்கக்கூட எம்மால் எதையுமே செய்ய முடியவில்லை என்பது நித்தியானந்தனுக்கு மட்டுமல்ல, சமகாலத்திலே வாழும் எம் எல்லோருக்கும் ஏற்பட்ட தோல்விதான். எனினும், ஒரு நாடகாரிசியராக இது மாவை நித்தியானந்தனுக்கு வெற்றியே. ஏனெனில், காலங்கள் கடந்தும் வாழும் படைப்புகளை உருவாக்குவதே ஒவ்வொரு படைப்பாளியினதும் கனவு. 1973-ல் எழுதப்பெற்ற ஐயா லெக்சன் கேட்கிறார் என்ற இந்த நாடகப் பனுவல் ஐம்பது ஆண்டு கடந்து இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது. இப்போதைய அரசியல் நிலவரங்களை நோட்டமிட்டால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் கடந்து 2073-லும் பொருத்தமாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

அரிஸ்டோஃபனிஸ் என்ற கிரேக்க நாடகாசிரியரின் 'ஓர்னதீஸ்' என்ற நாடகம் கிறீஸ்துவுக்குமுன் 414-ம் ஆண்டிலே ஏதன்சின் டயோனீசியா நகரிலே முதன்முதலாக மேடையேற்றப்பட்டதாக வரலாறு இருக்கிறது. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் கடந்தும், அந்த நாடகத்தின் ஆங்கில மொழியாக்கம் 'த பேர்ட்ஸ்' (The Birds) என்ற பெயரிலே இப்பொழுதும் பரவ

லாக உலகெங்கும் மேடையேற்றப்பட்டு வருகிறது. ஏதன்சிலிருந்து வெளியேறும் இரண்டு மனிதர்கள், தற்செயலாக பறவைகளின் உலகத்திற்குள் நுழைகிறார்கள். அவ்வேளையில், தமது கடவுளர்களின் வருகையை எதிர்பார்த்திருக்கும் பறவைகள், தோற்றத்தில் தம்மைவிட மாறுபட்டிருக்கும் இந்த மனிதர்கள் இருவரும்தான் தாம் எதிர்பார்த்திருக்கும் தமது கடவுளர்கள் என நம்பத் தலைப்படுகின்றன. அந்த நம்பிக்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அந்தப் பறவைகளைத் தமக்கென ஒரு தனி இராட்சியத்தை நிறுவத் தூண்டி, அந்த இராட்சியத்தின் தலைவர்களாகத் தம்மை தாமே வரித்துக்கொள்கிறார்கள் ஏதென்சிலிருந்து துரத்தப்பட்ட இந்த மனிதர்கள். இதுதான் அரிஸ்டோஃபனிஸின் ஓர்னதீஸ் நாடகத்தின் சுருக்கம்.

நான் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்துவரும் கனடா நாட்டில், ஒவ்வொரு தேர்தல் சுற்றிலும், தீவிர வலது சாரிக் கொள்கைகளையுடைய அரசியல்வாதிகள் தாம்தான் உழைக்கும் வர்க்கத்தின் பாதுகாவலர்கள் எனப் பரப்புரை செய்து, அவர்களை நம்பவைத்து, அவர்களின் வாக்குகளைப் பெற்று, தேர்தலில் வெற்றிபெறும்போதும் அரிஸ்டோஃபனிஸின் பறவைகளை ஏமாற்றிய இரண்டு ஏதன்ஸ் மனிதர்களும் என் நினைவில் வருவார்கள். அதுபோலவே, ஒவ்வொரு தேர்தல் சுற்றிலும், வெவ்வேறு வேட்பாளர்களால் நட்டு வைக்கப்பட்ட பரப்புரைப் பதாகைகள் சிதைக்கப்பட்டன என்ற செய்திகளும், குற்றச்சாட்டுகளும் வெளிவரும்போது பூவரச மரத்திலே தமது கொடியைக் கட்டுவதா அல்லது வேப்ப மரத்திலே தமது கொடியைக் கட்டுவதா என்பதிலே ஆரம்பித்து கத்திக்குத்துவரை தமது சர்ச்சையை நீடித்த மாவை நித்தியானத்தனின் மஞ்சட் கொடிக்காரனும் வெள்ளைக் கொடிக்காரனும் என் நினைவில் வருவார்கள்.

1973-ம் ஆண்டிலே, இப்போது இலங்கையின் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் என அறியப்படும் அப்போதைய கட்டுபத்தை பல்கலைக்கழகத்தினரால் முதன் முதலாக தில்லைக் கூத்தன் அவர்களின் நெறியாள்கையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்திலே மேடையேற்றப்பட்ட 'ஐயா லெக்சன் கேட்கிறார்' நாடகத்தின் பனுவல், 1979-ல் யாழ் பல்கலைக்கழக மாணவர் மன்றம் வெளியிட்ட 'ஆறு நாடகங்கள்' தொகுப்பில் இடம்பெற்றிருந்தது. அக் காலகட்டத்தில் 'ஐயா லெக்சன் கேட்கிறார்' நாடகம் அரசியல் அறிவூட்டலுக்கான ஆயுதமாய் முற்போக்கு அமைப்புகளால் பல்வேறு முறைகளில் மேடையேற்றவும் பட்டுள்ளது.

இப்போது, இந்தப் பனுவல் தனிப் பதிப்பாக குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டிருப்பதென்பது இந்தப் பனுவலின் தொடர்ந்த வாசிப்புக்கு உதவும் என்பதோடு, மேலதிக மேடையேற்றங்களுக்கும் வழிகோலும் என நம்பலாம். அந்த மேடையேற்றங்கள் தற்காலத்துக்கும், எக்காலத்திற்கும் ஒப்புடையதாய் இருக்கும் என்பதே அரசியலில் வாக்காளர்களாக எமது தோல்வியும், அரங்கியலில் நாடகாசிரியராக மாவை நித்தியானந்தன் அவர்களின்
வெற்றியும் ஆகும்.



dushy.gnanapragasam@thaiveedu.com






# தடை செய்யப்பட்ட செவ்வியல் நூலும் இரண்டு தேவதாசிகளும்

– ச. சத்தியதேவன்

2011-ஆம் ஆண்டு பென்குயின் புக்ஸ் 'The Appeasement of Radhika' என்ற தெலுங்கு மொழி செவ்வியல் இலக்கிய நூல் ஒன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட்டது. அதன் வழியாக 250 ஆண்டுகள் கழித்து உலகில் ஒரு பெண்ணால் எழுதப்பட்ட முதல் சிருங்கார ரச மதன நூலை முழுமையாக வாசகர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு அந்நூல் பிரிட்டிஷ் அரசால் ஆபாச இலக்கியமென்று தடைசெய்யப்பட்டது. அதனால் இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட முதல் நூலாகவும், பிராந்திய மொழி செவ்வியல் இலக்கிய நூலாகவும் அது மாறியது. 1887-ம் ஆண்டு முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டபோது பதிப்பாசிரியரால் அதன் ஆசிரியர் பற்றிய தகவல்கள் அடங்கிய அந்நூலின் முன்னுரையான 'பீடிகை'யும் பல வரிகளும் நீக்கப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டே மூல மொழியில் வெளியிடப்பட்டது. 1907-ம் ஆண்டு அந்த தணிக்கைக்குட்பட்ட பிரதி மீளச்சு செய்யப்பட்டது. 1910-ம் ஆண்டு செல்வத்திலும் புகழிலும் சிறந்திருந்த கலைஞரும் அறிஞருமான ஒரு தேவதாசிப் பெண், பெருமுயற்சி எடுத்து சுவையும் சிறப்பும் மிக்க அந்த நூலை முழுமையாக செம்பதிப்பாக பதிப்பித்தார்.

'தரங்கெட்ட விலைமகளால் எழுதப்பட்ட'தென அந்நூல் குறித்து தெலுங்கு இலக்கிய உலகில் விவாதங்கள் ஏற்பட்டது. 'மனித மனங்களைக் கறைப்படுத்துவதில் இத்தகைய மோசமான புத்தகங்கள் மேலதிக வலிமைமிக்கவையாகவும், செயல்திறன் நிரம்பியவையாகவும் அமைந்த முகவர்களாக, தார்மீக அறநெறிகளைக் களங்கப்படுத்துவதில் முன்நிற்பவையாக உள்ளன. இத்தகைய புத்தகங்கள் சமூகத்தை விட்டுத் துடைத்தெறியப்பட்டால் மட்டுமே தார்மீகப் பண்பு சமூகத்தில் உயிர் பிழைத்திருக்கும்' என திறமையும் செல்வாக்கும் புகழும்கொண்ட இலக்கியவாதிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு எதிர்க்கப்பட்டதால், அந்நூலின் அச்சிடப்பட்ட பிரதிகள் முழுவதையும் கைப்பற்றி அழிக்குமாறு 1911-இல் பிரிட்டிஷ் அரசு ஆணை பிறப்பித்தது. அந்நூலை அச்சிடவும் விநியோகிக்கவும் தடையுத்தரவு போட்டது.

அந்நூலை எழுதியவர் விஜயநகர வைணவ ராஜகுரு பரம்பரை சமய குருவான 'திருமலா தாத்தாச்சாரியாரி'ன் மரபுவழி வந்த 'வீரராகவ சுவாமி'களின் சீடர். 'பரதக் கலையிலும், பாவ, அபிநயங்களிலும் வல்லவராக விளங்கிய வேலாயுதம் என்பவரின் குமாரரான 'முத்துக் குமரனி'ன் மாணவி, லலித கலைகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றவர், 'பௌர்ணமி நிலவென்று கூறத்தக்க முகமும், வாக்கு வன்மையும், பெருந்தனையும், அழகான மெல்லிடையும், ஆபரணங்கள் நிறைந்த





தேகமும் கொண்டு, எல்லோராலும் மெச்சப்படுபவர். அழகு முகத்திற்கேற்ற இனிய சொற்களும், சொற்களுக்கேற்ற கருணையுள்ளமும், அதற்கேற்றவாறு கழிவிரக்கம் கொண்ட பார்வையும் கொண்டவர்.

பேரறிஞர்களால் பாராட்டுகளும், செல்வமும் அளிக்கப்பட்ட

வள். காப்பியங்கள் அர்ப்பணிக்கப்பட்டவள். வால்மீகி, பராசரரின் அன்புக்குமாரரான வியாசர், காளிதாசர் போன்ற வடமொழி இலக்கிய மேதைகளையும், நன்னய்ய திக்கன்னா, நாசன ஸோமண்ண, ஸ்ரீநாதர், பாஸ்கரர், பீமகவி போன்ற தெலுங்கு மொழிப் பெருங் கவிஞர்களையும் நன்கு கற்றறிந்தவர். இசை, நடனம், கவிதை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் சிறந்த புலமையும் பன்மொழி அறிவு கொண்டிருந்தவர். தமிழ் வைணவ பக்தி இலக்கியமான ஆண்டாளின் ‘திருப்பாவை’யை தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்தவர். தெலுங்கு கவிதை உலகிற்கு 7 வரிகள் கொண்ட வசனங்களாலான ‘ஸப்தபதம்’ எனும் புதுவகை இலக்கிய வகையை இயற்றி அறிமுகப்படுத்தியவர். அவர் ‘முத்துப்பழனி’.

முத்துப்பழனி பொ.ஆ.பி. 1730 முதல் 1763 வரை தஞ்சையை ஆண்ட மராட்டிய அரசரான பிரதாப சிம்மரின் அரசவைக் கணிகை. பிரதாப சிம்மரின் போகபத்தினி. அரசவையில் பெரும் செல்வாக்கு கொண்டிருந்த இளம் தேவதாசி. அவ




ரால் இயற்றப்பட்டு அவருக்கு அழியாப் புகழைத் தந்த தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியமான அந்த நூல் ‘ராதிகா ஸாந்த்வனமு’ (ராதிகா சாந்தமானாள்).

ராதிகா ஸாந்த்வனமு இயற்றப்பட்ட காலம் தொடர்பில் விவாதங்கள் உள்ள போதிலும் முத்துப்பழனி அவரது 18-ற்கும் 24-ற்கும் இடைப்பட்ட இளம் வயதில் இதை இயற்றினார் என்பதில் பெரும்பாலும் உடன்பாடு உள்ளது. முத்துப்பழனியின் வாழ்வு காலம் தொடர்பிலும் இரு பதிவுகள் உள்ளன. ஒன்று 1730-1763. மற்றையது, ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் உள்ளபடி 1730 -1790 ஆகும். இரு பதிவுகளும் முத்துப்பழனியின் பிறப்பை 1730 எனக் குறிக்கின்றது, அதற்கமைய ராதிகா சாந்த்வனமு 1750-இற்கு ஓரிரு ஆண்டுகள் முன் பின்னாக உருவாக்கப்பட்டிருக்கலாம்.

மத்திய காலத்தின் கடைக்கூறுகளில் கவின்களினதும் கலைஞர்களினும் மையமாக தென்னிந்தியா மாறத் தொடங்கியது. சுல்தானியர் மற்றும் மொகலாயர் ஆட்சிக் காலங்களில் வட இந்தியாவிலும் தக்காணப் பகுதியிலும் தேவதாசி முறைமை அதன் நிறுவனப் பொலிவை இழந்தது. தேவதாசிகள் அரசவைக் கணிகைகளாகவும் விலை மாதுக்களாவும் நிலைமாறிய காலம் என்பதால் நாயக்கர் காலத்தை தேவதாசி முறையின் வீழ்ச்சிக் காலமாக D. சதாசிவம் குறிப்பார். ஆயினும் கவின்கலைகளையும் கலைஞர்களையும் அதன் எல்லாவகையான சீரழிவுகளோடும் பேணும் புரவலராக விஜநகரப் பேரரசு மாறியிருந்தது. விஜயநகரப் பேரரசின் சிதைவோடு கவின்கலைகளின் புரவலராக தென்னிந்திய அரசுகள் மாறின. ஆதலால் அக்காலத்தில் கவின்கலைச் செயற்பாட்டை மேற்கொண்டவர்களின் மைய இடமாக தென்னிந்தியா விளங்கியது. கவின்கலைகளில் குறிப்பாக இசை மற்றும் நடனங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக மரபாக தேவதாசிகளே இருந்தனர் என்பதை நாம் மறத்தலாகாது.

சோழப் பேரரசு காலத்திலிருந்தே தஞ்சையில் தேவதாசிகள் முக்கிய அங்கம் வகிப்பவர்களாக இருந்தார்கள். அரசனையும் இறைவனையும் சமநிலைப்படுத்திய கோ-இல் கருத்தியல் உறுதிபெற்ற காலத்திலேயே தேவதாசிகள் ‘இராஜதாசிகளாக’ மாறும் நிலை இருந்ததை நாம் நோக்க வேண்டும். தேவதாசி, இராஜதாசி இரண்டும் சமநிலை அந்தஸ்த்திற்குரியதாக இருந்தது. இறைவனின் திரு உலாக்களிலும் கோயில் சடங்குளிலும் தேவதாசிகளுக்கு முக்கியத்துவமும் கடமையும் இருந்தது போலவே, அரசனின் உலாக்களிலும் அரசவை சம்பிரதாயங்களிலும் தேவதாசிகளுக்கு இடமும் கடமையும் இருந்தது. சமூகத்தின் திருமணங்கள் மற்றும் ஏனைய விழாக்களில் ஓர் அங்கமாக அவர்கள் விருப்புடன் ஏற்கப்பட்டு சமூக கலாசார அமைப்பில் முக்கிய இடத்திலிருந்தனர். ‘அரசியல் அதிகாரத்தின் கலாசாரக் குறியீடாக தேவதாசிகள் மாறியதை’ செல்வி திருச்சந்திரன் சுட்டிக்காட்டுவார். தமிழகத்தின் கடைசி ஆட்சியாளர்களான நாயக்க, மராட்டிய தஞ்சை மன்னர்களின் அரசவையில் தேவதாசிகள் பாரம்பரியப் பெருமையாக சிறந்த முறையில் ஆதரிக்கப்பட்டனர். ‘அரசவை கணிகைகளாக’ அரசவையின் உறுப்பாக அவர்கள் ஆனார்கள்.

இந்திய சமூகத்தில் பொது வெளிக்கும் கல்வி கலைகளில் தேர்ச்சி பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்ட பெண்களாக தேவதாசிகளே நவீனத்துவ காலம்வரை இருந்தார்கள். அவர்களின் இயங்குதலுக்கு பன்மொழி அறிவும் படிப்பும் தேவையானதாக இருந்தது. அத்துடன் கவின்கலைகளை மேதமையுடன் கையாள்வதற்கு சமஸ்கிருத மற்றும் தென்னிந்திய மொழி செவ்வியல் இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப்பும் அவற்றில் சிறந்த அறிஞர்கள் கலைஞர்களின் தொடர்பும் தேவதாசிகளுக்கு ஏற்பட்டது. இதனால் புகழும் சிறப்பும் மிக்க அறிஞர்களின் மாணவர்களாகவும் சீடர்களாகவும் ஆகும் வாய்ப்பு அவர்களில் சிலருக்கு உண்டானது. இதன் வழி கலைத் தேர்ச்

சியும், வசீகரமும் கொண்டிருந்த பெண்களான தேவதாசிகள், புத்திசாலித்தனமும் புலமையும் கொண்டவர்களாக சமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளின் இலக்கியங்களோடு ஊடாடத் தொடங்கினர். அவ்வாறானவர்கள் பாடல்கள், கவிதைகள் என்பவற்றோடு நவரச காவியங்களையும் எழுதினார்கள். சிலர் இலக்கியங்களை மூல மொழியிலிருந்து ஏனைய மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தார்கள். பல்வேறு இசைக் கருவிகளை மீட்டுவதுடன் பாடல்களையும் கவிதைகளையும் இயற்றினார்கள்.

சமூகத்தின் மதிப்பை பெற்ற அரசவைக் கணிகைகள் ஏராளமான நிலம், அடிமைகள் மற்றும் பணம் ஆகியவற்றைக் உடமையாக்கிக் கொள்ளும் உரித்தையும் கொண்டிருந்தனர். தமக்குப் பின் அச்சொத்துக்களை அவர்களின் சந்ததிக்கு வழங்கவும், தம் சந்ததிகளாக வாரிசுகளை தத்தெடுத்து



கொள்ளவும் உரிமை கொண்டிருந்தார்கள். அவர்களின் செல்வமும் செல்வாக்கும் வளர்ந்தவுடன், தொண்டு பணிகள் செய்ததுடன் கலைகளின் புரவலராகவும் மாறினர். அவர்களில் மிகவும் பிரபலமானவர்கள் அரசரின் ‘போகபத்தினியாக’ அரசவையில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தஞ்சை மராட்டிய மன்னராக பிரதாப சிம்மனின் அரசவையில் ‘அனைத்து வித்தைகளிலும் அவ்வாறான மிக அறியப்பட்ட அரசவைக் கணிகையாக இருந்தவர் ‘தஞ்சை நாயகி’.

தஞ்சை மராட்டிய மன்னரான பிராதப சிம்மரின் ஆட்சி அரண்மனை சதிகளும், குடிமக்களின் கலகங்கள் என்பவற்றுடன் தொடர்ச்சியான போர்களும் நிரம்பியது. இருப்பினும், அவர் கலைஞர்கள் மற்றும் புலவர்களின் புரவலராக விளங்கினார். சிறந்த அறிவாளியான அவர் ‘கிருஷ்ண மஞ்சரி’, ‘உமா சம்ஹிதா’ மற்றும் ‘பாரிஜாத நாடகம்’ போன்ற மராத்தி படைப்புகளையும் எழுதியவர். ‘அனைத்து வித்தைகளிலும் ஈடுகூற முடியாத பெருந்திறமையும், பேரழகும், அரச மூதாட்டியான ராஜ மாதவே வியக்குமாறு எல்லாருடைய மதிப்புக்கு பாத்திரமாகவும், பிரதாப சிம்மரின் போகபத்தினியாகவும்’ இருந்த தஞ்சை நாயகிக்கு தனக்குப் பின்னரான வாரிசுக்கான ஆசை உண்டாக, ‘சூத்திர சாதியில்த் தோன்றிய அய்யாவய்யா - செங்காவி’ தம்பதிகளின் மகனான ‘முத்தியாலு’ என்பவரைத் தத்தெடுத்து வளர்க்கிறார் தஞ்சை நாயகி.


முத்தியாலு பருவ வயதடைந்தவுடன், ‘ராமாம்பாபுரம் என்ற அந்தணர் குடியிருப்புடன், பெரியதொரு சிவாலயம் அமைத்து சிவலிங்கப் பிரதிட்டை செய்ததுடன், அக்கோயிலுக்கு நந்தவனம், பூந்தோட்டங்கள் மற்றும் தடாகங்களும் அமைத்து நாள் தோறும் குறைவிலாது பூசைகள் நடக்க ஏற்பாடுகள் செய்தவரும், ராமேசுவரம் செல்லும் யாத்திரிகர்களுக்கு தினந்தோறும் அன்னம் பாலிக்க வேண்டி, கந்தர்வக் கோட்டையில் சத்திரமொன்றை நிறுவியவரும், பேரழுகும் நற்குணங்களும் நிரம்பிய ‘ராமாமணி’ என்ற தேவதாசியை உறவினர்கள் போற்ற முத்தியாலுவுக்கு திருமணம் செய்து வைக்கிறார்’.

முத்தியாலு ராமாமணி தம்பதியினருக்கு ‘சாரதா தேவியின் அருளால் ஸாகித்திய வித்தையில் பெருந்திறமை படைத்தவளாகவும், திருமாளின் கிருபை நிறைந்தவளாகவும் அழகு மிக்க பெண் மகவு பிறக்கிறது. அக்கால தேவதாசிகளுக்கு ஊர்ப் பெயர்களைச் சூட்டுவது ஒரு மரபாக இருந்தது. எனவே அக் குழந்தைக்கு தென்னகத்தின் சிறப்பு மிக்க முருகனின் ஆலயம் அமைந்திருக்கும் ஊர்ப் பெயரான ‘பழனி’ என்ற பெயரிடப்பட்டது. வழமையான மரபுப்படி தந்தையின் பெயரின் முன்னொட்டும் சேர்த்து ‘முத்துப்பழனி’ என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். சிறு வயது முத்துப்பழனியை தன்னுடையே வளர்த்த தஞ்சை நாயகி, தன்னுடைய திறமைகளை சொல்லிக்கொடுத்ததுடன் சிறந்த அறிஞர்களிடம் முத்துப்பழனி கல்வி கற்கவும் வசதி செய்கிறார்.

பெருந்திறமையும், பேரறிவும், பேரழகும், நற்குணங்களும் கொண்டு வளர்கிறாள் முத்துப்பழனி. பருவமடைவதற்கு முன்பே அவளுடைய கலைத் திறமைகள் வெளிப்பட்டன. சிருங்கார ரசத்தின் அனைத்து அம்சங்களையும் நன்கு அறிந்த முத்துப்பழனி பருவ பதின்ம வயதை அடைந்ததும், தனக்கு பிறகு அரசவை கணிகையாக அவளை நியமித்து, பிரதாப சிம்மனின் போகபத்தினியாகவும் ஆக்குகிறார் தஞ்சை நாயகி.

தந்தைவழிப் பாட்டி மற்றும் தாய்வழி ஆகிய இருமரபு வழிகளிலும் திறமையும் செல்வாக்கும் கொண்ட குடும்பத்தில் பிறந்து தஞ்சை அரண்மனையின் செல்வாக்கு மிக்க பாட்டியிடம் கல்வி நலங்களில் சிறந்தவளாக வளர்க்கப்பட்ட முத்துப்பழனியால் எழுதப்பட்ட தெலுங்கு இலக்கியத்தின் முதல் கலகக் குரலாகக் கருதப்படும் ‘ராதிகா ஸாந்த்வனமு’ (ராதிகா சாந்தமானாள்) என்பது கண்ணனுக்கும் (கிருஷ்ணர்) ராதிகாவுக்கும் (ராதை) இடையே நிகழ்ந்த பிணக்கையும் பிரியங்களையும் சொல்லுகின்ற சிருங்கார பிரபந்தமெனப்படும் ‘இறையன்பின் இன்ப ஊடலையும் கூடலையும் பேசுகின்ற’ ஒரு மரபான சிற்றின்ப காவியமாகும். கிருஷ்ணரின் இளம் மனைவியான இலாவின் கதையையும் இது கூறுவதால் ‘இலா தேவியமு’ என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. 4 அதிகாரங்களில் 584 வசன-பாக்களை கொண்ட ராதிகா ஸாந்த்வனமு இனிமையும், புதுமையும், புலமையும் நிறைந்த சிருங்கார சிற்றின்ப இலக்கியம் என அறிஞர்களால் புகழப்படுவது.

(தொடரும்...



sathiyathevan.s@thaiveedu.com

# மொழிபெயர்ப்புக் கவிதையும் வாசகர் பார்வையும்

– மைதிலி தயாநிதி

மொழிபெயர்ப்புகள் பற்றியும், குறிப்பாகக் கவிதை எவ்வாறு மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என்பது பற்றியும் பல புலமைசார் கருத்துகள் உள்ளன எனினும், மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகள் எவ்வாறு படிக்கப்படுகின்றன, இரசிக்கப்படுகின்றன, மதிப்பீடு செய்யப்படுகின்றன என்பது மொழிபெயர்ப்புத் தொடர்பான கோட்பாட்டு நூல்களில் மிக அரிதாகவே காணப்படுகிறது. மொழிபெயர்ப்பு எதுவாக இருந்தாலும், அது எதிர்காலத்திற்காக, கண்ணுக்குத் தெரியாத வாசகர்களுக்காகச் செய்யப்படுகிறது. எனவே, மொழிபெயர்க்கப்பட்ட கவிதையானது எவ்வாறு வாசகர்களால் புரிந்து கொள்ளப்படுகிறது, மதிப்பீடு செய்யப்படுகிறது என்பது பேசப்பட வேண்டிய விடயமாகும்.




மொழிபெயர்ப்புப் பிரதி ஒன்று புனைவாகவோ அல்லது அபுனைவாகவோ (non-fiction) இருக்கலாம்; உரைநடையிலோ, அல்லது கவிதை வடிவிலோ இருக்கலாம். அது வாசகர்களினால் 'நல்ல மொழிபெயர்ப்பு' என்று ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இரண்டு பிரதான அடிப்படைகள் தேவை. ஒன்று வாசகர் தங்கு தடையின்றி வாசிக்கக் கூடிய, சரளமான நடையில் மொழிபெயர்ப்பு அமைதல் வேண்டும். இரண்டாவது, இலக்கு மொழியின் இயல்பிற்கும், இலக்கணத்திற்கும், வழக்கிற்கும் இயைபுடையதாய் மொழி, சொற்தெரிவு என்பன அமைதல் வேண்டும். மொத்தத்தில் அது மொழிபெயர்ப்புப் பிரதி என்ற தோற்றத்தை வாசகருக்கு அளிக்கக்கூடாது. இது பொதுவாக எல்லா மொழிபெயர்ப்புப் பிரதிகளுக்கும் பொருந்தும்.

அடுத்து, மொழிபெயர்ப்புக் கவிதையினை எவ்வாறு வாசகர்கள் அணுகுகின்றனர் என்று பார்ப்போம். மொழிபெயர்ப்புக் கவிதையை இரண்டு விதமாக ஒருவர் வாசிக்கலாம். முதலாவது அணுகுமுறை, அதைத் தன்னிறைவான கவிதையாகக் கருதி வாசித்தல் (Reading the translated poem as self-contained / reading the poem as a standalone work). அதாவது மூலப்பிரதியின் துணையின்றிக் கவிதையை வாசித்தல். இவ்வாறு வாசிப்பவர் அக்கவிதை இலக்கு மொழியில் எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் கவனத்திற் கொண்டு இலக்கு மொழியின் அழகியல், இலக்கணம், வழக்கு, சொற்தேர்வு முதலானவற்றின் அடிப்படையில் மட்டும் அக்கவிதையை மதிப்பீடு செய்வர். பொதுவாக, இவ்வாறே மொழிபெயர்ப்புக் கவிதை வாசிக்கப்பட்டு, மதிப்பிடப்படுகிறது. வாசகர்கள் தாம் வாசிப்பன குறித்த மதிப்பீட்டை எப்பொழுதும் செய்து கொண்டே இருக்கின்றார்கள். ஆதலால் மதிப்பீடு என்பது விமர்சகர்களால் மட்டும் செய்யப்படவேண்டியது என்ற கருத்துப் புறக்கணிக்கப்பட வேண்டியது.

இரண்டாவது அணுகுமுறை மொழிபெயர்ப்புக் கவிதையை மூலத்துடன் ஒப்பிட்டு வாசித்தல். இது எல்லோருக்கும் சாத்தியமானதொன்றன்று. எனினும் இவ்வாறு செய்வதன் மூலம் மொழிபெயர்ப்புச் சிக்கல்களையும், சவால்களையும் வாசகர் விரிவாக அறிந்து கொள்ளலாம். அத்துடன், மூலக் கவிதையின் சாராம்சமும் உணர்வும் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக மொழிபெயர்ப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் மதிப்பிடலாம். சுருங்கக் கூறின், இரண்டு அணுகுமுறைகளுமே சிறப்பானவையே. எனினும், எதை வாசகர் தேர்ந்தெடுக்கின்றார் என்பது அவரின் விருப்பம், நோக்கம், மூலமொழி அறிவின் அளவு, மூலக் கவிதையை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் முதலானவற்றில் தங்கியுள்ளது.

இனி, இந்த இரு அணுகுமுறைகள் மூலமாகவும் மொழிபெயர்ப்புக் கவிதை ஒன்றினை வாசித்து, அதனைப் பகுப்பாய்வு செய்ய முயல்வோம். கலை, இலக்கிய, அரசியல் பண்பாட்டு இதழான இலக்கிய வெளியின் இதழ் 5 (ஜுலை-டிசம்பர் 2023)

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளமை குறிப்பி டத்தக்கது. இதன் 60-ம் பக்கத்தில் செ. இராஜேஸ்வரி என்பவ ரால் மொழிபெயர்க்கப்பட்ட 'அவன் கடவுளுக்கு நிகரானவன்' என்ற கவிதையையே பகுப்பாய்வுக்கு எடுக்கிறோம். இக்கவி



தையை எழுதியவர் Sappho எனும் கிரேக்கப் பெண் கவிஞர். இக்கவிதை ஒருபாலின ஈர்ப்புக் கவிதையாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. இச்செய்தியை மனதிற் கொண்டு கவி தையை வாசிக்கலாம். William Carol Williams, Anne Carson, A.S. Kline முதலான பலர் இதனை ஆங்கிலத்தில் மொழிபெ யர்த்துள்ளனர், இராஜேஸ்வரி வில்லியம் கார்லோஸ் வில்லி யம் என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்பையே தேர்ந்தெ டுத்து மொழிபெயர்த்துள்ளார். அத் தமிழ் மொழிபெயர்ப்பு வருமாறு:

***அவன் கடவுளுக்கு நிகரானவன்***<br>
***முக முகமாக அமர்ந்து***<br>
***என் இனிமையான பேச்சையும்***<br>
***அழகான சிரிப்பையும்***<br>
***ரசித்தான்***<br>
***இதுதான்***<br>
***என் மார்பைக் கலவரப்படுத்தியது***<br>
***உன்னைப் பார்த்த மாத்திரத்தில்***<br>
***என் குரல் குழறியது***<br>
***என் நாக்கு முறிந்தது***<br>
***நேரடியாக***<br>
***ஒரு மென்மையான நெருப்பு***<br>
***என் கால்களுக்குள் ஓடியது***<br>
***கண்கள் இருண்டன***<br>
***காதுக்குள் இடி முழக்கம்***

***வியர்வை ஆறாய்ப் பெருகிவர***<br>
***நடுக்கம் என்னைக் கீழே வீழ்த்த***<br>
***காய்ந்த புல்லைக் காட்டிலும்***<br>
***நான் வெளிறிப் போக***<br>
***ஏறத்தாழ***<br>
***சாவதைப் போல் ஒரு உணர்வு***

இக் கவிதையின் மூன்றாம் வரியான 'என் இனிமையான பேச் சையும்' என்பது 'உன் இனிமையான பேச்சையும் என்றிருக்க வேண்டும். இது கணினியில் கவிதையைப் பதிவிடும்போது நேர்ந்த தவறாக இருத்தல் வேண்டும். இந்தத் தவறு வாசகர்க ளுக்கு நிச்சயமாகக் குழப்பத்தை ஏற்படுத்தும். சரிபார்த்தல் அல்லது proof reading என்ற செயற்பாட்டின் முக்கியத்துவத் தினை இத்தகைய தவறுகள்தாம் எமக்கு உணர்த்தி நிற்பவை.

## முதலாவது அணுகுமுறை: தன்னிறைவான கவி தையாகக் கருதி வாசித்தல்:

இந்த மொழிபெயர்ப்புக் கவிதையை வாசிக்கும்போது, நெரு டலை ஏற்படுத்துவனவாய்ச் சில சொற்பிரயோகங்கள் அமைந்திருந்தன. அவற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

- வரி 2: 'முக முகமாக அமர்ந்து/ உன் இனிமையான பேச் சையும்/ அழகான சிரிப்பையும்/ ரசித்தான்' என்ற வரிகளில் இடம்பெறும் 'முக முகமாக அமர்ந்து' எனும் வழக்குத் தமி ழில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

- வரி 7: 'என் மார்பைக் கலவரப்படுத்தியது' என்ற வரியும் சற்று அசாதாரணமானது என்றே எனக்குப் பட்டது. 'மார்பு' என்ற சொல்லைப் பொதுவாக பௌதிக ரீதியான உடற் கூறு ஒன்றினைச் சுட்டவே நாம் பயன்படுத்தி வருகிறோம். எடுத்துக்காட்டாக, 'மார்போடு கட்டி அணைத்தேன்', 'அவன் மார்பில் சாய்ந்தேன்', 'அவருக்குத் திடீரென்று மார்புவலி வந் தது'. மார்பு என்ற சொல் 'உணர்ச்சிகளின் இருப்பிடம்' எனும் கருத்தைப் பொதுவாகத் தந்து நிற்பதில்லை ஆயி னும்,

***வார்த்தை தவறிவிட்டாய் -அடி கண்ணம்மா***<br>
***மார்பு துடிக்குதடி***

என்று பாரதி பாடும்பொழுது மார்பை உணர்ச்சிகளின் இருப் பிடமாகக் கருதியே பாடியுள்ளான் என்பது தெளிவு. எனினும் இங்கு ஒலிநயத்திற்காகவே 'மார்பு' என்ற சொல்லைப் பாரதி பயன்படுத்தினான் எனக் கொள்ளவும் இடமுண்டு. அதாவது, அவ்வரியிலுள்ள வார்த்தை - மார்பு என்பனவற்றைச் சீர் எது கையாகக் கொள்ளலாம். ஆனால் தமிழ் யாப்பிலக்கண விதி களுக்கு உட்படாத இக்கவிதை மொழிபெயர்ப்பில் 'மார்பு' என்ற சொல்லைத் தவிர்த்துப் பிறிதொரு சொல்லை இட்டிருக் கலாம் என அபிப்பிராயப்படுகிறேன்.

- வரி 10: ‘என் நாக்கு முறிந்தது’ என்ற பிரயோகமும் தமிழ் மொழி மரபிற்கு இயைந்து வாராத ஒன்று. ‘என் எலும்பு முறிந்து விட்டது’ என்று சொல்வோம். ஆனால், ‘என் நாக்கு முறிந்து விட்டது’ என்று சொல்வதில்லை.

- வரி 12-13: ‘நேரடியாக/ ஒரு மென்மையான நெருப்பு/ என் கால்களுக்குள் ஓடியது’ என்ற வரியும் எனக்குச் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தியது. தான் நேசிக்கும் பெண்ணைக் கண்ட அனுபவத்தினை நுட்பமாக வெளிப்படுத்தும் வரிகளுள் ஒன்றான இதில் கால்கள் ஏன் குறிப்பிடப்படுகின்றன? கால்களின் முக்கியத்துவம் என்ன? என்ற கேள்விகள் எழுந்தன. இணையத்தில் காணப்படும் சுதர்சனின் ‘கண்ணில் பற்றிய தீ/ உடலெங்கும் பரவி/ எனை சூறையாடியது’ எனும் கவிதை வரிகளுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மொழிபெயர்ப்பின் போதாமையை உணரக்கூடியதாக இருந்தது.

சுருங்கச் சொல்லின், தமிழ் மொழி வழக்குகளை, மரபுசார் சொல்லாடல்களை இக்கவிதை முழுமையாகக் கையாண்டுள்ளது என்று சொல்லவியலாது எனினும், தான் விரும்பும் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தே ஒருவருக்கு உண்டாகும் உணர்ச்சிகளின் தீவிரத்துவத்தையும், வேகத்தையும், ஆழத்தையும் வாசகர்களுக்கு உணர்த்துவதில் இம் மொழிபெயர்ப்புக் கவிதை வெற்றி பெற்றுள்ளது என்றே சொல்ல வேண்டும். குறிப்பாக, அதன் இறுதிப் பகுதி:

***வியர்வை ஆறாய்ப் பெருகிவர***
***நடுக்கம் என்னைக் கீழே வீழ்த்த***
***காய்ந்த புல்லைக் காட்டிலும்***
***நான் வெளிறிப் போக***
***ஏறத்தாழ***
***சாவதைப் போல் ஒரு உணர்வு***

இவ்வரிகள் அருமையாக அமைந்துள்ளன.

## இரண்டாவது அணுகுமுறை: மூலத்துடன் ஒப்பிட்டு வாசித்தல்:

இனி, இரண்டாவது அணுகுமுறையைப் பயன்படுத்தி, அதாவது, இந்த மொழிபெயர்ப்புக் கவிதையை அதன் மூலத்துடன் ஒப்பிட்டு, ஆராயலாம். மூலக்கவிதை கிரேக்க மொழியில் உள்ளது ஆகையால், மொழிபெயர்ப்பாளர் பயன்படுத்திய William Carol Williams என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்பு வருமாறு:

***That man is peer of the gods, who***
***face to face sits listening***
***to your sweet speech and lovely***
***laughter.***

***It is this that rouses a tumult***
***in my breast. At mere sight of you***
***my voice falters, my tongue***
***is broken.***

***Straightway, a delicate fire runs in***
***my limbs; my eyes***
***are blinded and my ears***
***thunder.***

***Sweat pours out: a trembling hunts***
***me down. I grow***
***paler than grass and lack little***
***of dying.***

கவிதையின் முதலாவது வரியை எடுத்துக்கொள்வோம்: ‘That man is peer of the gods’. இது ‘அவன் கடவுளுக்கு நிகரானவன்’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலோட்டமாகப் பார்க்கும்போது, இவ்வரி பிழையற்றது போலத் தோன்றினும், இம்மொழிபெயர்ப்பில் இரண்டு பிரச்சினைகள் உண்டு. முதலாவதாக, கிரேக்கக் கடவுளர் பலர் இருக்க, gods என்ற சொல் ஒருமையில் ‘கடவுள்’ என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ‘கடவுளருக்கு அல்லது தேவர்களுக்கு நிகரானவன்’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பின், கிரேக்கப் புராணவியல் குறித்த தேடலைச் சில வாசகர் மனத்திலாவது இக்கவிதை உருவாக்கியிருக்கக் கூடும். ‘கடவுள்’ என்ற பதம் யூத மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் எனும் சமயங்களின் தனி ஒரு கடவுட் கோட்பாட்டை நினைவுறுத்துகின்றது. இவற்றுக்குக் காலத்தால் முந்திய கிரேக்கப் புராணவியலில் பல கடவுளர்கள் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. முக்கியமான கிரேக்க பண்பாட்டுக் கூறொன்றைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யாது இக் கவிதை தவிர்த்து விடுகின்றது.

அடுத்து, That man என்ற சொல் ‘அவன்’ எனும் சுட்டுப் பெயராக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எப்பொழுது நாம் சுட்டுப் பெயரைப் பயன்படுத்துகிறோம் என்பதை ஆராய வேண்டும். கவிதையில், மையப் பாத்திரத்தை / நபரைக் குறிக்கச் சுட்டுப் பெயர்கள் பயன்படுத்தப்படுதலுண்டு. உதாரணமாக, சுகுமாரனின் ‘அவன் எழுதும்போது’ என்ற கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம்.

***அவனுக்கும் எனக்கும் நடுவில்***
***வருடங்களின் தொலைவு- எனினும்***
***புத்தகத்தின் முதற்பக்கத்துக்கும்***
***இரண்டாம் பக்கத்துக்கும்***
***இடைப்பட்ட நெருக்கம்***

***அவன் காற்று***
***விசிறி நான்***

என்று அக்கவிதை தொடர்ந்து செல்கிறது. இக்கவிதை ‘அவனை’ மட்டுமே பற்றியது என்பதால் ‘அவன்’ என்ற சுட்டுப் பெயர் இங்கு மிக்க வலிமை உடையதாகிறது. ஆனால், ‘அவன் கடவுளுக்கு நிகரானவன்’ எனும் மொழிபெயர்ப்புக் கவிதையில், கவிதை ‘அவனைப்’ பற்றியதன்று. அதனாற்றான் ‘அவன்’ என்ற சுட்டுப் பெயரின் பயன்பாடு இங்கு பொருத்தமற்றது. மேலும், குறிப்பிடப்படும் நபர்/ பொருள் ஏற் கனவே அறியப்பட்ட சந்தர்ப்பத்திற்றான் சுட்டுப் பெயர்களை (இவன் / உவன் / அவன்) பொதுவாக நாம்

பயன்படுத்துவதுண்டு. கவிதையில் குறிப்பிடப்படும் நபர் பற்றி ஏற்கனவே ஒன்றும் தெரிவிக்கப்படாததால் 'அவன்' என்ற ஆண்பாற் சுட் டானது பொருத்தமற்றது என்றே கொள் ளவேண்டும். மேலும், ஆங்கிலக் கவிதையில் That man என்ற பிரயோகம் ஏனைய ஆடவரிலிருந்து அந்த ஆடவனைப் பிரித்து, தெளிவாகக் குறித்துக்காட்டி, அழுத்தம் அளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ள தையும் கவனிக்க வேண்டும். ஆதலால், நேரடி மொழிபெ யர்ப்பு - அம்மனிதன் - என்பது, கூடப் பொருத்த மாக இருந் திருக்கும்.

ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஏற்கனவே குறிப்பிடப்பட்ட நெருடலான விடயங்கள், தமிழ் மொழி வழக்கு, மரபு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளாது செய்யப் பட்ட சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பின் விளைவுகளோ என எண்ணக் கிடக்கின்றது., கவிதையின் இரண்டாம் வரியில் உள்ள Face to face என்பதே 'முகமுகமாக' என்று மொழிபெ யர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. அது போன்று, 6-ம் வரியிலுள்ள ' breast' என்பது 'மார்பு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில இலக்கியத்தில் breast என்பதை உணர்ச்சிகளின் இருப்பிடமாகவும் கொள்வார்கள் (எடுத்துக்காட்டு: 'The battle roared in front-a sound calculated to arouse the sublimest emotions in the breast of the soldier'). தமிழில் மார்பு என்பதை அவ்வாறு கருதுவது குறைவு என்று ஏற்கனவே பார்த்தோம். மேலும், 7-ம் 8-ம் வரிகளில் காணப்படும் 'My tongue is broken' எனும் வாக்கியத்தைப் பார்க்கும்போது, 'என் நாக்கு முறிந்தது' என்பது சொல் மொழிபெயர்ப்பாக அமையக் காணலாம். 'உன்னைக் கண்டதும் என்னால் பேசமு டியவில்லை; எனக்குப் பேச்சே எழவில்லை என்பதையே 'My tongue is broken' என்ற வாக்கியம் வெளிப்படுத்துகிறது. 'பேச முடியாமல் நாக்கு ஒட்டிக்கொண்டது' என்று சொல்லும் வழக்கம் தமிழில் உண்டு. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகு தியை நோக்கலாம்: 'தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவள் மேலிருந்த போர்வையை விலக்கினான். அப்படியே உறைந்து போனான். நாக்கு ஒட்டிக்கொண்டது. வாய் வறண்டு போனது. 'நீநீ...' என்று குழறினான். குடந்தை ச. இராமசாமி, 'சிலை அழகி')

அடுத்து, ஆங்கிலக் கவிதையின் 9-ம் 10-ம் வரிகளை எடுத் துக் கொள்வோம்: Straightway, a delicate fire runs in/ my limbs. இது தமிழில், 'நேரடியாக/ ஒரு மென்மையான நெருப்பு/ என் கால்களுக்குள் ஓடியது' என்று மொழிபெயர்க்கப்பட்டுள் ளது என்பதை ஏற்கனவே கவனித்தோம். 'Limbs' என்ற சொல் ஆங்கிலத்தில் கை, கால்கள் இரண்டையும் குறிக்குமெனி னும், இலக்கியத்தில் உடம்பையும் குறிப்பதுண்டு. எடுத்துக் காட்டாக, ஷேக்ஸ்பியரின் கவிதை ஒன்றைப் (Sonnet 27) பார்க்கலாம்: 'Weary with toil, I haste me to my bed, The dear repose for limbs with travel tired' - இங்கு படுக்கையை நாடுபவர் தம் கை கால்களுக்கு ஓய்வு அளிக்கவே என்று கொள்வதினும் பார்க்கத் தமது உடலுக்கு ஓய்வளிக்க என்று கொள்வதே பொருத்தம். எனவே, இத் தமிழ் மொழிபெயர்ப் புக் கவிதையிலும் தீவிர உணர்ச்சி (மென் நெருப்பு) உடல் முழுவதும் வியாபித்தது என்று கூறுவது, காதலியைக் கண்ட வருக்குக் கிட்டிய பூரணமான அனுபவத்தின் விவரிப்பாக விளங்கும். இவ்வாறு பொருள் கொள்ளும்போது 9-ம் வரித் தொடக்கத்திலிருக்கும் Straightway என்பதை 'நேரடியாக' என மொழிபெயர்த்தல் பொருந்தாது.

இறுதியாக, ஆங்கில மொழிபெயர்ப்பு நிகழ்காலத்திலிருக்க, அதனை அடிப்படையாகக் கொண்டெழுந்த தமிழ் மொழிபெ யர்ப்பு இறந்த காலத்தில் இருக்கின்றமைக்கும் என்ன கார ணம் என்பது புரியவில்லை. பொதுவாகத் தீவிர உணர்ச்சி களை வெளிப்படுத்த நிகழ்காலத்தைப் பயன்படுத்துதல் பொருத்தமானது. காதலனையோ, காதலியையோ பார்க்கும் போது நெஞ்சில் எழும் எண்ண அலைகளையும் உணர்ச்சிக ளையும் நிகழ்காலத்தில் கூறுவதன் மூலம் கவிஞர்கள் உட னடி உணர்ச்சித் தீவிரத்தின் உணர்வை வாசகரிடத்து உரு வாக்க முடியும். நிகழ்காலத்தின் உடனடித் தன்மையானது வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிகளுடனும், உயிரோட்டமான சித்திரிப்புடனும் வாசகரை நேரடியாக இணைக்க உதவுகி றது. இது ஏறத்தாழ நேர்முக வர்ணனை கேட்பது போன்றது. வாசகரையும் கவியனுபவத்தில் பங்குகொள்ள வைக்கிறது. அத்துடன், காதல் முதலான விடயங்கள் காலத்தைக் கடந்து நிற்பவை. குறிப்பிட்ட காலத்துக்கு, அல்லது தருணங்கட்கு மட்டும் உரியவை என்று இவ்வுணர்வுகளை மட்டுப்படுத்த இயலாது. எனவே, நிகழ்காலத்தில் கவிதை அமைதல் அது பேசும் விடயமும், உணர்ச்சிகளும், உணர்வுகளும் எக்காலத் திற்கும் பொருத்தமானவை என்ற கருத்தை சூசகமாக வலியு றுத்துகிறது. எனவே, தமிழ் மொழிபெயர்ப்பும் நிகழ்காலத்தில் அமைந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்புக் கவிதைப் பகுப்பாய்வானது இரு வேறு விதமாகச் செய்யப்பட்டது. முத லாவதாக, மொழிபெயர்ப்புக் கவிதையைத் தன்னிறைவுடைய தாய்ப் பார்த்து, அதன் குறை, நிறைகள் மதிப்பிடப்பட்டன. அடுத்து, தமிழ் மொழிபெயர்ப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புடன் அது ஒப்பிடப்பட்டு ஆராயப்பட் டது. மொழிபெயர்ப்புக் கவிதையைத் தன்னிறைவுடைய தொன்றாகப் பார்த்தவிடத்து, வாசகருக்கு எழக்கூடிய மரபு சாரா மொழிப் பிரயோகங்களே பிரச்சினைகளாக முன்வைக் கப்பட்டன. ஆனால் ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்க் கும்போது, எத்தகைய மொழிமாற்றம் தமிழிற் செய்யப்பட்டுள் ளது என்பது குறித்த கூடுதலான புரிதல் உண்டானது. தமிழ் மொழிபெயர்ப்பில் மரபு சாரா மொழிப்பிரயோகங்கள் இடம் பெற்றமைக்கு முக்கிய காரணமாகச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன், மூலத்தை அனுசரித்துப் போகாத, இலகுவாக நியாயப்படுத்த முடியாத மாற்றங்களும் தமிழ் மொழிபெயர்ப் பில் செய்யப்பட்டுள்ளன என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது, gods எனும் பதம் ஒருமையில் மொழிபெ யர்க்கப்பட்டமை, மூல ஆங்கில மொழிபெயர்ப்பு நிகழ்காலத் திலிருக்க இறந்த காலத்தில் கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்தமை என்பவற்றைத் தான் நான் இங்கு குறிப்பிடுகி றேன்.



maithilithayanithy@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# தாமரைச்செல்வியைக் கொண்டாடுதல் என்பது...

– யசோதா பத்மநாதன்

தாமரைச்செல்வியைக் கொண்டாடுதல் என்பது, வன்னியைக் கொண்டாடுதல்; அதன் வாழ்வியலைக் கொண்டாடுதல்; மண்ணை, மண்ணின் மகிமையைக் கொண்டாடுதல்; அதன் மேல் கட்டமைக்கப்பட்டிருக்கும் வீடுகளை, குடிசைகளை, அக் குடியிருப்புகளில் வாழும் சமான்ய மக்களை, மேலும் அங்குள்ள மரங்களை, செடிகொடிகளை, வயல்களை, வெளிகளை, காடுகளை, கழனிகள், பறவைகள், கால்நடைகளை, காடுகளில் உலவும் விலங்கினங்கள், வீட்டுப் பிராணிகள் என அனைத்தையும் கொண்டாடுதல் என்று அர்த்தம் பெறும்.

வன்னி பிரதேசம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. அவை முல்லையும் மருதமும் கலந்த நிலம். அங்கு சேவலுக்குப் போட்டி



யாக மயில்களும் அகவும். காட்டோரம் மான்கள் சுயாதீன மாய் திரியும். பகல் பொழுதில் மாடு மேய்த்து, மாலை நேர மம்மல் பொழுதுகளில் யானை விரட்டும் சிறுவர்களுக்கும் குரங்குகளுக்கும் நெளிப்புக் காட்டி, குண்டுமணிகளோடு சுள்ளிகள் பொறுக்கும் சிறுமிகளுக்கும் பாலைப் பழங்களை யும் வீரைப் பழங்களையும் காட்டு மரங்களே நல்கும். காட்டுத் தேனும் தேக்கு மரமும் நிறைந்த முல்லை நிலத்தில், எருதுக ளோடு கூடவே மேயச் செல்லும் கறவை மாடுகளுக்குக் குளங்களில் தண்ணீர் எப்போதும் குறையாதிருக்கும். அங்கு துள்ளி விழும் விரால் மீன்களோடு சிறுவர்கள் குதித்து நீச்சல டிக்க, வயலுக்குப் பாயும் வாய்க்கால் தண்ணீரில் புலுனிக் கூட்டம் குளித்து சிறகுலர்த்தும்,

சிட்டுக் குருவிகள் கூடுகட்டிக் குடியிருக்கும் ஏழைக் குடியான வரின் பொட்டல் விழுந்த கிடுகுக் குடிசைகளில் ஈதல் அறம் நிறைந்து கிடக்க, ஒற்றை ஒழுங்கையால் அச்சமற்று நடந்து போவாள் பள்ளி செல்லும் பிள்ளை.

இத்தகையதான இந்த மண் குறித்த அடையாளங்கள் வடக்கு வாழ் தமிழ் மக்களின் மண்ணமைப்பில் இருந்து வேறுபட் டவை. அந்த சுண்ணாம்புக் கற்களும், செம்மண்ணுமான நிலத்தில் கல் வீடுகளும் கிடுகு வேலிகளும் பனைமரக் காடு களும் கம்பீரமாய் உயர்ந்து நிற்கும். புகையிலைத் தோட்டங் களும், வெற்றிலைக் கொழுந்துகளும் கிணற்றுப் பாசனமும் மண்ணின் மகிமை பேசும். கல்விக்கும், கட்டுப்பாட்டுக்கும், கடின உழைப்புக்கும், சிக்கன வாழ்வுக்கும், விடுதலை வேட் கைக்கும் பெயர்போன வடக்கின் சாயலிலிருந்தும்கூட வன்னி பெருமளவில் வேறுபடும்.

அதே நேரம் பௌர்ணமிக் காலங்களில் மீன்கள் பாடும் தேன் நாடாகப் புகழப்படுவது கிழக்கு. அங்கு வாழும் தமிழ் மக்க ளின் நாட்டார் பாடல்களோடும் வடமோடி தென்மோடிக் கூத் துகளோடும் தயிரோடு பழம் பிசைந்து; இசைபோலும் மொழி பேசி; விருந்தோம்பி மகிழ்ந்திருக்கும் கிழக்குவாழ் மக்களின் அன்றாட இயல்பிலிருந்தும்கூட வன்னி வேறுபடும். இந்து, கிறீஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதங்களை அனுசரிக்கும் மக்கள் அங்கு ஒன்றுகூடி அருகருகாகவும் சுமூகமாகவும் வாழும் மாண்பினைக் கொண்டிருக்கிறார்கள். அந்த நெய்தல் நில சமூக சாயலிலிருந்தும்கூட கூட வன்னி முற்றிலுமாக வேறுபட்டது.

அந்த வரிசையில் மலையகத் தமிழ் மக்களை நினைத்துப் பார்க்கிறேன்! இலங்கையின் மத்திய மாகாணத்தில் மலையும் மலைசார்ந்த குறிஞ்சிப் பிரதேசங்களில் மலையகத் தமிழர் கள் வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்வியலோ இன்னும் ஒரு படி வேறானது. துயர் நிறைந்தது. தேயிலை இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாக குளிருக்கும் கடிக்கும் அட்டைகளுக்கும் ஈடுகொடுத்து அன்றாடம் கடினமாக உழைத்து இன்றும் லயம் களில் வாழும் அவர்கள் வாழ்வின் துயரங்கள் எழுத்தில் வடிக்க வொண்ணாதது!

நாம் தமிழர்களாக அவர்களை மொழியாலும் வாழ்வாலும் 'கவனியாது' விட்டுவிட்ட குறையை காலமகள் தமிழர்களுக்கு ஒரு நாள் உரத்த மொழியில் எடுத்துச் சொல்லக்கூடும்.

இவர்களோடு, இஸ்லாமியத் தமிழ், கொழும்புத் தமிழ், மற் றும் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் தமிழியங்களுமாக இருக்கும் அத்தனை சிறு சிறு நீரோடைகளும் தமிழ் என்ற பொதுவான பெரு நதியில் அதனதன் பண்பு நலன்களோடும் தனித்துவ தன்மைகளோ டும் சமத்துவமாக, தயக்கமேதுமற்ற தமக்கேயான பெருமிதத் தோடும் இணக்கப்பாட்டோடும் ஒன்றுகலக்கும் போது தான் ஈழத்தமிழுக்கான முழுமையான இலக்கியமும் அதற்கான இலக்கிய முழுமையும் கிட்டும் என்று நம்புகிறேன். அவ்வாறு

நடந்தால் அது ஒரு பெரும் வண்ணமயமான வெளிச்சத்தை நம் தமிழுக்கு பாய்ச்சும் என்பது நிச்சயம்.

அது நிற்க,

இந்த வகையில் புவியியல் ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாக வும் தனக்கென தனி அடையாளங்கள் கொண்ட வன்னி மண்ணை அதன் அத்தனை சாயல்களோடும் மண் வாசம் மாறாமல் பதிவு செய்தவை தாமரைச்செல்வியின் கதைகள். காலம் இயல்பாக நமக்கு அவரைப் பெற்றுத் தந்திருக்கிறது.

இன்றய தொழில்நுட்ப யுகத்தில் நின்று கொண்டு 70-களின் வாழ்வியலை கற்பனை பண்ணுவதுகூட இன்றுள்ள இளம் சந் ததியினருக்குக் கடினமாக இருக்கக் கூடும். 70-களில் தொலைக்காட்சிகளோ, தொலைபேசிகளோ இருக்க வில்லை. போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லை. வன்னிப் பிரதேசங்களுக்கு மின்சார வசதிகூட அதிகம் பேரிடம் இருந் திருக்கவில்லை. இருந்த ஒரே ஒரு பொழுதுபோக்கு சாதனம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்து தமிழ் சேவையும், ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் தடைசெய்யப்பட்ட தென்னிந் திய சஞ்சிகைகளின் முடக்கத்தால் எழுச்சி பெற்ற வீரகேசரிப் பிரசுரங்களும் பத்திரிகைகள் மற்றும் இலக்கிய சஞ்சிகைக ளும் தான்.

இன்று நாம் பெண் விடுதலை பற்றி நிறையப் பேசுகிறோம்; நிறைய மாறி இருக்கிறோம்; இப்போதும் மாறி வருகிறோம்; இனியும் மாற்றங்கள் வரும் என்று நம்பலாம். ஆனால் தாம ரைச்செல்வி வாழ்ந்த ஆரம்ப காலச் சூழலில் ஒரு விவசாய வாழ்க்கைச் சுமைகள் கொண்ட ஒரு பின்புலத்தில் இள வய தில் திருமணமாகிய பின்பும்; இரு பெண் பிள்ளைகளுக்கு தாயாகிய பின்பும்; ஏறும் சுமைகளுக்கு மத்தியிலும் அவரது கதைப் புலங்கள் மண்ணின் பதிவுகளாக அதன் அச்சொட் டான இயல்பை பதிவாக்கி இருக்கின்றன என்பது எத்தனை பெரிய சாதனை!

ஆண்களால் இலக்கிய உலகில் கால் பதிக்க இருக்கும் வாய்ப்பு வசதிகளுக்கும் ஒரு பெண்ணாகக் குடும்ப சுமைக ளைச் சுகமாகச் சுமந்து கொண்டு, விவசாய வயல்வெளி வேலைகளுக்கும் உதவிக் கொண்டு, பிள்ளைகளை, அவர்க ளின் தேவைகளை, படிப்புகளையும் கண்காணித்துக் கொண்டு மூத்த சகோதரியாக தன் தம்பி தங்கைகளையும் கவனித்துக் கொண்டு, இலக்கிய உலகில் தொடர்ச்சியாக வலம் வருவது என்பது அத்தனை சாமான்ய விடயம் அல்ல. இவற்றை எல்லாம் சுமந்த படி சுமார் 50 ஆண்டுகளாக வன் னியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரிய பணியை பெண்மை நலம் மாறாமல் அவர் அநாயாசமாக செய்து வந்திருக்கிறார்.

அந்த இலக்கிய வடிவங்களில் தெரிவது எல்லாம் வன்னியின் பண்பு நலம்.

அவை வன்னிப் பகுதியின் வயல் வெளிகளைப் போல தமிழ் இலக்கியப் பரப்பில் வன்னி மண்ணுக்கான இலக்கிய அறுவ டையாக பரந்து பொலிந்திருக்கின்றன. தனது கட்டுக்கோப் பான சிந்தனைகளின் ஊடே கண்ணியமும் அக்கறையும் பொறுப்புணர்வும் மீதுர, வன்னியின் வாழ்வை இலக்கிய மாக்கி இருப்பவை அவரது எழுத்துகள். அவர் வன்னி இலக் கிய வடிவத்திற்கு ஆன்மாவாகவும் உடலாகவும் ஒருருவம் கொடுத்திருக்கிறார். எளிய வாழ்வுக்குரித்தான அம் மக்களை இலக்கியப் பல்லக்கில் ஏற்றி வைத்தவை அவரது எழுத்துக் கள். தனித்துவமான வன்னியின் சாயலை தமிழ் இலக்கியத் துக்குக் கொண்டு வந்தவை அவர் கை பிடித்த பேனா. அவை தனித்துவமான ஈழத்து இலக்கியக் கருப் பொருளுக்குக் கட்டி யம் கூறி நிற்கின்றன.

நிலத்தினடியில் ஆழ வேரூன்றி, உயர எழுந்து, விழுது பரப்பி, ஊரே இருந்து போக நிழல் தந்து, சாப்பிட்ட உண வினை அசைபோட்டபடி இளைப்பாறும் ஊர் மாடுகளுக்கு



அதன் அடிமடியிலே இடம் கொடுத்து, பல பறவைகள் சந்ததி சந்ததியாகக் கூடுகட்டி வாழ கிளை தந்து, அவ் ஊர் மக்க ளின் சுக துக்கங்களையும், இரகசியங்களையும், புறணிகளை யும், காதல் சல்லாபங்களையும், சண்டை சச்சரவுகளையும், அழுகைகளையும், உவகைகளையும் பார்த்தபடி ஊர் நடுவே உயர்ந்து நிற்கும் ஒரு பேராலமரம் போலும் அவர் அந்த மண் ணின் விழுமிய சாட்சியாக இருக்கிறார். அவரது படைப்புகள்

அவற்றை வழிமொழிந்து நிற்கின்றன.

வன்னி மண்ணின் அமைதிக் காலங்களில் அதன் எழிலையும் அதன் தனித்துவத்தையும் செவ்வனே அவர் பதிவு செய்திருக் கிறார். அதே மாதிரி வன்னி மண் போர்களைச் சந்தித்த போர் காலங்களின் போதும்; பின்னர் இடம்பெயர்ந்து, சரண் புகுந்த, வடதமிழ் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த போதும்; போராளிகளின் பாசறையாக; இலங்கை, இந்திய இராணுவம் புகுந்துவிட முடியாத பேரரணாக, அது விளங்கிய போதும்; அதன் முகத்தையும் சமூகத்திற்கு அவர் தன் எழுத்துகக ளால் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

பின்னர் அவலங்கள் நிகழ்ந்த போதும், இழப்புகள் சம்ப வித்த போதும் தோல்விகளைக் கண்டபோதும் மண் கொண்ட மாற்றங்கள் அவர் கதைகளில் அப்படியே பதிவாகி இருக் கின்றன. இடம்பெயர்ந்த போது இடப்பெயர்வின் வலிகளைப் பதிவு செய்திருக்கிறார். புலம்பெயர்ந்த பிறகு புலத்தின் தன் மைகளையும் அவர் பதிவு செய்திருக்கிறார். சுமைகளில் இருந்து உயிர்வாசம் வரையான அவரது படைப்புகள் அதற் குச் சாட்சி.

இந்த சந்தர்ப்பத்தில் காட்டாறு எழுதிய செங்கையாழியானை யும் நிலக்கிளி எழுதிய பாலமனோகரனையும் ஒரு தடவை நினைத்துக் கொள்கிறேன். தாமரைச்செல்வியின் முதலாவது நாவலான சுமைகளோடு வைத்தெண்ணத்தக்க அவை வன்னி யின் வாழ்வை பிரதிநிதித்துவப்படுத்துவன. வன்னியைத் தமிழ் இலக்கியப் பரப்பில் தத்ரூபமாக தூக்கி நிறுத்தியவை அவை!

தாமரைச்செல்வி என்பவர் தனி ஒருவரல்ல; அவர் வன்னிக் கான இலக்கியப் பிரதிநிதி. வ.ஐ.ச. ஜெயபாலன் 1968-ல் எழு திய கவிதை ஒன்றில் வன்னியை இப்படிப் பதிவு செய்வார். ‘நம்பிக்கை’ என்ற தலைப்பில் வெளிவந்த அக்கவிதை, இவ் வாறு நகர்கிறது.

***‘துணைபிரிந்த குயில் ஒன்றின்***
***சோகம் போல்***
***மெல்லமெல்லக் கசிகிறது***
***ஆற்று வெள்ளம்.***
***காற்றாடும் நாணலிடை***
***மூச்சுத் திணறி***
***முக்குளிக்கும் வரால் மீன்கள்.***
***ஒரு கோடை காலத்து மாலைப் பொழுது அது!***

***என்னருகே***
***வெம் மணலில்***
***ஆலம் பழக் கோதும்***
***ஐந்தாறு சிறு வித்தும்***
***காய்ந்து கிடக்கக் காண்கிறேன்.***
***என்றாலும்***
***எங்கோ வெகு தொலைவில்***
***இனிய குரல் எடுத்து***
***மாரிதனைப் பாடுகிறான்***
***வன்னிச் சிறான் ஒருவன்.’***

என்று அந்தக் கவிதை வன்னியின் எதிர்காலத்தை நம்பிக்கை யோடு பாடும். அந்த நம்பிக்கையாக, மாரிதனைப் பாடிய வன்னிச் சிறானாக, 70-களில் வன்னி இலக்கியத்திற்குக் கிடைத்தவர் தாமரைச்செல்வி.

தாமரைச்செல்வி தந்தவைகள் கதைகள் தான் என்ற போதும், அதன் கருவில் எப்போதும் ஒட்டி நிற்பவை உண்மைகள்; மண் வாசம் மாறா மெய்மைகள். பொய்யான ஒன்றை அவர் ஒருபோதும் புனையவில்லை. புகழுக்காகவும், பிரபலத்துக் காகவும், பாராட்டுகளுக்காகவும் அவர் கதைகள் ஒருபோதும் மண்டியிட்டதில்லை. சலுகைகள் அவர் பேனாவைச் சரியச் செய்ததில்லை. புகழ் அவரைப் போதை கொள்ளச் செய்த தில்லை. எப்போதும் சமூகப் பொறுப்போடும் மண்மீதான நேசிப்போடும், ஆத்மார்த்தமான உண்மையோடும் ஒருவித அமைதியோடும் நிதானத்தோடும் பயணிப்பவை அவரது கதைகள். அவரும் தான்.

வன்னி என்ற பெரும் பரப்பின் ஆத்துமமும் தாமரைச்செல்வி யின் ஆத்துமமும் ஒன்று கலக்கும் இடமும் அது தான். அவர் ஒரு காலகட்டத்து வன்னியின் ‘காலம்’.

ஒரு தடவை, அவரோடு உரையாடக் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றில் ‘உங்கள் கதைகளில் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிகளில் பல தசாப்தங்களாகக் குடியி ருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் வந்து போகிறார்கள். ஏன் நீங்கள் அவர்களை உங்கள் கதைகளுக்குப் பிரதான கருப்பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை? அது ஒரு பெரிய வெற்றிடமாக இருக்கிறதே! என்று கேட்டபோது, அதற்கு அவர், ‘அது உண்மை தான்; இந்த விடயம் பரந்த அளவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அவர்களுடைய வாழ்வும் வலிகளும் பத்திரமாகவும் பவித்திரத்தோடும் கையாளப்பட வேண்டியவை. எனக்கு அவர்களின் மலையக வாழ்வு பற்றியும் இங்கு இடம் பெயர்ந் ததன் பின்னணி பற்றியும் அதிகம் தெரியாது. தெரியாததை என்னால் சொல்ல முடியாது; சொல்லக் கூடாது. ஆனால் அவர்கள் என் கதைகளில் எப்போதும் ‘அவர்களாகவே’ வந் துபோவார்கள்’; என்றார்.

அது தான் தாமரைச்செல்வி.

அகத்தியரின் கமண்டலத்தில் இருந்து பெருகிய காவேரியாக அவரது பேனா மை வன்னியை செழுமைப்படுத்தி, மகிமைப் படுத்தியிருக்கிறது. வயல் நீளத்திற்கும் நீண்டு செல்லும் காலத்தின் நீட்சியில்; அந்த எழுத்தின் பாதையில்; அவர் வன் னியின் ‘காலத்தைச்’ சுமந்தபடி ‘வன்னியாச்சியாக’ நடந்து சென்றிருக்கிறார். அந்த நடமாட்டம் தென்பகுதிக்கு வந்து சரிந்த பூமியை நிமிர்த்திய அகத்தியரின் நடமாட்டம் போல் வது.

அவரைக் கொண்டாடுதல் என்பது
வன்னியைக் கொண்டாடுதல்.



yasotha.pathmanathan@thaiveedu.com



# எங்கள் கிராமத்தின் அடையாளம் தாமரைச்செல்வி

- சாள்ஸ் குணநாயகம்

ஈழத்து இலக்கிய பரப்பிலும், தமிழகம், புகலிடம் மற்றும் தமிழர் வாழ் நிலங்களில் எல்லாம் தன் எழுத்துப் பணியால் புகழ் பெற்ற சாதனைப் பெண்ணான தாமரைச்செல்வி என்கிற திருமதி. ரதிதேவி கந்தசாமி அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எழுதிக்கொண்டிருப்பவர். அவரது எழுத்துக்கான பொன்விழாவை நாம் கொண்டாடுவது என்பது அவரது இலக்கியப் படைப்புகளின் பன்முகத்தன்மைகளை, அவர் காட்டும் வன்னிக் கிராமங்களை, கதாபாத்திரங்களை, அழகியலை, அவரது மனித நேசத்தை, அவரின் அறத்தை என விரித்துக் கொண்டே போகலாம். பச்சை வயல் கனவின் வன்னியாச்சியாக உயிர்வாசம் தரும் அவரின் எழுத்துக்கள் எம்மையும் வசப்படுத்தி வைத்திருப்பது உண்மையே.

எங்கள் அழகிய பரந்தன் சந்திக் கிராமமான குமரபுரத்துக்கும் அதனைச் சுற்றிய பிரதேசத்துக்கும் எழுத்து, கதாபாத்திரங்கள், கருப்பொருள் என்று அடையாளம் தந்தவர் சகோதரி தாமரைச்செல்வி.

அவரது ஐம்பது ஆண்டு எழுத்தூழியத்தின் ஆரம்ப காலமான எழுபதுகளின் முற்பகுதியில் அவரோடு அறிமுகமாகவும் அவரது ஆலோசனைகள் பெறவும் எனக்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. அவை பற்றியதான சிறுகுறிப்பொன்றினை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கிளிநொச்சியில் பரந்தன் என்ற அந்த சந்திக்கிராமம் தன்னை முன்னேற்றிக்கொள்ள புதிய சமூக அக்கறைகளும் அரசியல், இலக்கிய வாசிப்புக்கான எண்ணங்களும் கல்வி, விளையாட்டு, சமத்துவம் போன்றவற்றை எடுத்து செல்லும் நோக்கோடு 'பரந்தன் இளைஞர் வட்டம்' என்ற ஓர் அணி உருவாக்கப்பட்ட காலகட்டம் அது. அவ்வுருவாக்கத்தில் நானும் என்னோடொத்த நண்பர்கள் பலரும் இணைந்திருந்தோம். அதில் குறிப்பாக தாமரைச்செல்வியின் சகோதரர் ஒருவரும் இணைந்திருந்தார்.

'பரந்தன் இளைஞர் வட்டம்' தன்முனைப்போடு செயற்பட எத்தனித்த காலச்சூழலில் தாமரைச்செல்வியும் வானொலி, சஞ்சிகை பத்திரிகைகளுக்கு தன் ஆக்கங்களை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார். அக் காலப்பகுதியில் நாமும் ஒரு நூலகத்தை அமைத்து செயற்பட்டதுடன் கலை, இலக்கிய பணிகளுக்காக ஒரு செயற்பாட்டு பிரிவையும், மாதாந்த கலை நிகழ்வாக 'பௌர்ணமி விழாவையும்' தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தோம். அது மட்டுமன்றி புதிய சினிமாக்களுக்கான காட்சிகளும் கலந்துரையாடல்களும் நாடகப் பயிற்சிகள், எழுத்தாக்க முயற்சிகள் என ஆரம்பித்தபோது தாமரைச்செல்வி



மற்றும் அவரது கணவர் திரு. கந்தசாமி அவர்களுடனான கருத்துப் பரிமாற்றங்களும் ஆலோசனைகளும் பெற்றுக் கொண்டோம். அந்த நினைவுகள் எனக்கு பசுமையாக உள்ளது.

எழுபதுகளின் முற்பகுதியில் தாமரைச்செல்வி அவர்கள் 'சூரியகாந்தி' என்ற கையெழுத்து சஞ்சிகை ஒன்றை உருவாக்கி நடத்தினார். அவருடைய எழுத்துகளும் அவர் வரைந்த ஓவியங்களும் அதில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

'சூரியகாந்தி' கையெழுத்து சஞ்சிகையானது குமரபுரத்தில் அமைந்துள்ள இந்து மகாவித்தியால மண்டபத்தில் நடைபெற்ற 'பௌர்ணமி விழா'வில் அன்றைய பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கிளி. உதவி அரச அதிபர் திரு. சுப்பிரமணியம் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அங்கு அது பற்றியதான சிறப்புரை ஒன்றையும் அவர் வழங்கியிருந்தார்.

'சூரியகாந்தி' இதழுக்கு குமரபுரத்திலிருந்து தாமரைச்செல்வியுடன், சாள்ஸ் குணநாயகம், பரந்தன் கலைப்புஷ்பா, ஆசிரியை தயா, பூநகர் கவிப்பிரியா ஆகியோர் ஆக்கங்களை எழுதியிருந்தனர்.

'தினபதி' என்ற இலங்கை செய்தித்தாள் கையெழுத்து சஞ்சிகைகளுக்கான போட்டி ஒன்றை நடத்தியது. அதற்காக தாமரைச்செல்வி அவர்கள் 'சூரியகாந்தி' சிறப்பிதழை தயாரிக்க, அதனை 'பரந்தன் இளைஞர் வட்டம்' வெளியீடாக அப்போட்டிக்கு அனுப்பிவைத்தோம். போட்டி முடிவுகள் வருவதற்கு முன்னதாகவே 'தினபதி', 'சிந்தாமணி' நாளிதழ்கள் நின்றுவிட்டன.

அவரால் பரந்தன் இளைஞர் வட்டத்துக்காக எழுதப்பட்ட 'சிறிதாய் வளரும் சின்னக் கிராமம், சிந்திக்க வைப்போம் அது எங்கள் இதயம்' என்ற மேற்கோள், எம் நெஞ்சங்களை நிறைத்து எப்போதும் எம்மை செயற்பட தூண்டும் கோட்பாடாக மிளிர்கிறது. 'பரந்தன் இளைஞர் வட்டமும்' கடந்த ஐம்பது ஆண்டுகளாக தன் பணிகளை செய்து கொண்டே நடைபோடுகிறது.

அவரது எழுத்துகளின் பெரு வீச்சால் அவர் வாழும் போதே மதிப்பளிக்கப்படுவதும் அவரது 'பொன்விழா' ஆண்டை மிகச் சிறப்பாக கொண்டாடுவதும் எமக்கெல்லாம் ஆனந்தம்.

அவரது எழுத்துக்கள் எம் கிராமமான குமரபுரத்துக்கும், வன்னி மண்ணுக்கும் பெரிய அடையாளம் தந்துள்ளது. அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது எமக்கும் பெருமையே.


தாமரைச் செல்வியின் எழுத்துக்குள் உள்ள அறம், மனிதநேயம், அவர் தலைமைதாங்கும் அவரது குடும்பத்தார் அனைவரிடமும் விரிந்து வியாபித்து நிற்பதனால் எங்கள் சிறிய கிராமமும் பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

எழுத்தூழியத்தில் 'பொன் விழா' காணும் சகோதரி தாமரைச் செல்வி எல்லா நலனும் வளமும் பெற்று வாழ வாழத்தி வணங்குகின்றேன்.



charles.g@thaiveedu.com














# வாசகர் வாசகங்கள்...



### மிகைப்படுத்தல் இல்லாத எளிமையான எழுத்துநடை

- கி. தவரூபன்,
கனடா

எழுத்தாளர் தாமரைச்செல்வி அக்காவின் 'பச்சைவயல் கனவு' தான் அவர்களது படைப்பில் நான் வாசித்த முதல் நாவல். சுவாசித்து முடித்தபின் என்னுள்ளே தோன்றிய அதிர்வு இத்தனை வருடங்களாகியும் என்னால் உணரமுடிகின்றது. அற்புதமான மிகைப்படுத்தல் இல்லாத ஜனரஞ்சகமான ஓர் எளிமையான எழுத்துநடை. மண்ணும் அதன் வாசமும் படிந்த எம் மக்களின் வாழ்வியலையும் யதார்த்தங்களையும் ஒருவித மிகைப்படுத்தலும் இல்லாமல் கொட்டிச் சென்றிருக்கிறார்.

அவர் கதைகளை வாசிக்கும்போது நானே அக்கதையில் வாழ்ந்தவனாக உணர்கிறேன். சிறுகதையாகட்டும் இல்லை நாவலாகட்டும் போரின் வடுக்களையும் வலிகளையும் எம் மக்கள் அடைந்த அவலங்களையும் வேதனைகளையும் வாசிப்பவரின் மனதில் பதித்த எழுத்தாளர்களில் முதன்மையானவராக இருக்கின்றார். அக்காவின் எழுத்துப்பணி பொன்விழா தாண்டி மென்மேலும் தொடர்ந்து பதிப்பில் வராத 163 சிறுகதைகளையும் மற்றைய நாவல்களையும் எதிர்பார்த்து காத்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருவனாக இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.



நிஜமானது
உங்கள் வரிகள்...

நிமிர்ந்து எழுந்ததும்
சரிந்து வீழ்ந்ததும்
மீண்டும் எழ முயற்
சிப்பதுமான வாழ்வு
எங்களுக்கானது.




### உளவளத் துணையாளர்களுக்குக் கற்பிக்க உதவிய கதை

- திருமதி. கோகிலா மகேந்திரன்,
யாழ்ப்பாணம்

மனிதர்களின் நல்ல பக்கம் எமது கண்களுக்குத் தெரிவதில்லை. இது உளவியல் கற்கைகளில் முக்கியமான ஒரு விடயம். மற்றவர்களின் குறைகள் எமது கண்களுக்குத் தெரிகிற அளவுக்கு இலகுவாக அவர்களின் நல்லியல்புகள் புலப்படுவதில்லை. பார்வை மாற்றும் (reframing) என்கிற ஒரு சீரமியத் திறனாக இவ்விடயத்தை நாங்கள் உளவளத் துணையாளர்களுக்குக் கற்பிப்போம். இந்தக் கருப்பொருளை எடுத்து மிக எளிதாகப் போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போகிறது தாமரைச்செல்வியின் 'பார்வை' என்ற சிறுகதை. இக்கதையை வாசித்துப் பாருங்கள் என்று கருத்தரங்குகளிலும் உளவளத்துணை வகுப்புகளிலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

எப்போதுமே அடிநிலை மக்களின் வாழ்க்கை யதார்த்தத்தை, ஒரு அநுபவ நோக்கிலிருந்து, அகக் காட்சித் தரிசனம் மிகத் தெளிவாக வரக்கூடிய மாதிரிச் சொல்வதே தாமரைச் செல்வியின் பலம் என்று நான் நினைக்கிறேன். இப்படி எழுதும்போது பெரும்பான்மை வாசகர்களின் உணர்வை அது தொற்றிக்கொள்கிறது. இத்தன்மையான எழுத்து நடை ஜனரஞ்சக ரீதியில் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. அந்த வெற்றியைத் தன் ஆக்க இலக்கியங்களின் மூலம் பெற்று இலக்கிய வாழ்வில் பொன்விழாக் காணும் ரதியை வாழ்த்துவதில் மகிழ்கிறேன்.



### கவனத்தைக் கவரும் தாமரைச்செல்வியின் பாத்திரங்கள்

- ஆழியாள்,
அவுஸ்திரேலியா

தாமரைச்செல்வியின் புனைவிலக்கிய உலகத்தின் திரட்சி மையமாக பொதுவாக இரண்டு விடயங்களைக் கூறலாம். ஒன்று வன்னி நிலத்தினதும், யாழ்ப்பாண நிலத்தினதும் சமகாலத்து வரலாறும் குறிப்பாக நமது மக்கள் கூட்டத்தின் வாழ்வியல் முறைமைகளும், அவர்கள் வாழ்வை எதிர்கொண்ட விதங்களும் பதிவாகியிருப்பதுடன் கடும் போர்ச் சூழலிலும், பெரும் இடப்பெயர்வுகளிலும், புலப்பெயர்விலும் அவர்கள் அன்றாட வாழ்வுக்கு எப்படி முகங்கொடுத்தார்கள் என்பதும் பதிவாகி இருக்கின்றன.

தாமரைச்செல்வியின் கதைமாந்தரைப் பொறுத்த வரையில் புறச் சூழற் காரணிகள் இயல்பு வாழ்க்கையை சின்னா பின்னமாக்கினாலும், அவற்றை மீறித் தம் நாளாந்த வாழ்வை வாழ்ந்து கழித்துவிடத் துணிகிறார்கள். அவர்களில் பலர் தன்னுடைய வாழ்க்கையையும், தன்னைச் சார்ந்தவர்களினது வாழ்க்கையையும் ஏதாவது ஒருவழியில் முன் நகர்த்தவே விழைகிறார்கள். எல்லோரும் வாழ்க்கைப் படிகளை தாண்டி விட வேண்டுமென்றும், வாழ்ந்து விட வேண்டு மென்றும் விரும்புகிறார்கள். சூழ்நிலை அழுத்தங்களால் வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் மட்டுப் படுத்தப்பட்ட, எத்தனையோ லட்சோப லட்சம் தமிழ் மக்களின் வாழ்க்கைகளைப் பிரதிபலிப்பதாய் இருப்பதனால் தாமரைச் செல்வியின் பாத்திரங்கள் நம் எல்லோருடைய கவனத்தையும் வேண்டி நிற்கின்றன.



### எழுத்துகள் மூலம் ஓர் இலக்கியக்காரராக முகிழ்கின்றார்

- பேராசிரியர் மௌனகுரு,
மட்டக்களப்பு

ஈழத்து இலக்கிய உலகில் பல கோட்பாட்டு வாதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவை பற்றி தாமரைச்செல்வி அறிந்திருப்பார். இந்தக் கோட்பாடுகள் எதற்குள்ளும் சிக்கிக் கொள்ளாது அவர் வாழ்க்கையை யதார்த்தமாகப் பார்த்தார். அவரின் பார்வையில் போலி இருக்கவில்லை. நேர்மை இருந்தது. உண்மை இருந்தது. எளிமை இருந்தது. அவர் எளிமையான மக்களோடு வாழ்ந்தார். அவர் அந்த மக்களின் வாழ்க்கையைப் பார்த்தார். அவற்றையே தன் எழுத்துக்களிலும் கொண்டு வந்தார். போரைப் பற்றிச் சொல்லாமல் போருக்குள் மக்கள் பட்ட அவஸ்தைகளைச் சொன்னார். இலக்கியத்தின் அடித்தளம் அதுதான். சம்பவங்கள், சம்பவங்களின் அடியாக எழுகின்ற உணர்வுகள்தான் இலக்கியத்திலோ நாடகத்திலோ பிரதானம் பெறும். அந்த வகையிலே தனது எழுத்துகள் மூலம் அவர் ஓர் இலக்கியக் காரராக முகிழ்கின்றார். தாமரைச்செல்விக்கு எனது பாராட்டும் வாழ்த்துகளும்.

# வாசகர் வாசகங்கள்...



## பார்வையாளராக இருந்து உருப்பெற்றவையல்ல அவரது படைப்புகள்



- எட்வேட் மரியதாசன்,
அவுஸ்திரேலியா.

வன்னி மண்ணின் இலக்கியச் சோலையில் எழுத்துலக வாழ்வில் பொன்விழாவை நிறைவு செய்திருக்கும் வன்னி மண்ணின் புகழ்பூத்த எழுத்தாளர்களில் ஒருவராகிய தாமரைச்செல்வி அவர்களை அவுஸ்திரேலிய சமூக வானொலி வானமுதம் சார்பாகவும், வன்னி மண்ணில் அவருடைய காலத்தில் வேறு தளத்தில் பயணித்தவர்களில் ஒருவனாகவும் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தாமரைச்செல்வி அவர்களின் படைப்புகள் வெறுமனே பார்வையாளராக இருந்து உருப்பெற்றவையல்ல. மக்களோடு மக்களாக வாழ்ந்து வன்னிப் பிரதேசத்தின் தனித்துவமான பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றையும், போர்மேகம் எம் மண்ணைச் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் மக்களோடு மக்களாக அனுபவித்த துன்பங்களையும் உள்ளடங்கலாக படைக்கப்பட்டிருக்கிறது.

அவருடைய படைப்புக்கள் தேவை நிறைந்த வன்னி மண்ணில் பல்வேறு தளங்களில் பயணித்தவர்களை இனம் கண்டு ஊக்குவித்து மக்கள் மனங்களை வெல்வதற்கு ஊன்றுகோலாக அமைந்தது என்றால் மிகையாகாது.

தாமரைச்செல்வி அவர்கள் தொடர்ந்தும் நல்ல பயனுள்ள படைப்புக்களை மண்ணிற்கும் மக்களுக்கும் வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## பெயர்வுற்ற வாழ்வுக்குள்ளும் தளரா எழுத்துப் பணி



- திருமதி. இளவரசி இரஞ்சிதன்,
பிரிஸ்பேன்.

சிறு வயதிலிருந்தே அம்மா எழுதுவதைப் பார்த்துக்கொண்டே வந்திருக்கிறேன். எங்களுடையது ஒரு கூட்டுக் குடும்பம். வீட்டில் நிறைய வேலைகள் இருக்கும். அம்மாதான் அத்தனையையும் பொறுப்பாக பார்த்துக்கொள்வார். அத்தனை வேலைச் சுமைகளுக்கும் இடையே வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் எப்படியாவது நேரத்தையும் ஒதுக்கிக் கொள்வார். அதுவும் பல வருடங்களாக இடப்பெயர்வு வாழ்க்கைதான் வாழ்ந்திருந்தோம். வீடு வாசல் விட்டு வெவ்வேறு இடங்களில் வாழ நேர்ந்திருக்கிறது. பல கஷ்டங்களையும் அலைச்சல்களையும் தந்த காலங்கள் அவை. நெருக்கடி மிகுந்த அந்த நாட்களிலும் கூட அவர் வாசிப்பதையும் எழுதுவதையும் கைவிடவில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் தான் வாழ்ந்த சூழலை பதிவு செய்துகொண்டு வந்திருக்கிறார். இந்த ஐம்பது வருடங்களிலும் அவர் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டேதான் வந்திருக்கிறார். எழுத்து என்பது அவர் விரும்பிச் செய்யும் பணி. அப்பாவும் அதை எப்போதும் ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார். அதனால் புறச்சூழலின் எந்த தாக்கமும் தன் எழுத்தைத் தடை செய்யாமல் அம்மா பார்த்துக் கொள்வார். அவரின் எழுத்துப் பணி இன்னமும் தொடர வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம். அதில் எங்களுக்கும் மகிழ்ச்சியே.

## ஈழம் தந்த பெண் எழுத்தாளர் தாமரைச்செல்வி



- ஊடறு றஞ்சி,
சுவிற்சர்லாந்து

ஈழம் தந்த எமது பெண் எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்களின் 50' ஆண்டு இலக்கியப் பயணத்திற்கு என் தலைசாய்ந்த வாழ்த்துக்கள்.

தாமரைச்செல்வி அவர்களின் கதைகளில் என் மனதை அழுத்திய கதைகள் இருந்தாலும் 'வன்னியாச்சி' மற்றும் 'மழைக்கால இரவு' என்பன என் மனதை பிழிந்த கதைகள். 'சொந்த மண்ணிலேயே இருப்பிடம் இழந்து, அகதிகளாகிக் குண்டுகளின் அதிர்வும் கந்தக நெடியும் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில், பதற்றத்தோடும் பசி பட்டினியோடும் பதுங்கு குழிகளின் பக்கத் துணையோடும் வாழ்ந்திருந்தவர்கள் நடுவே, தாமரைச்செல்வி அவர்களும் ஒருத்தியாக வாழ்ந்து கொண்டுதான் இந்தக் கதைகளை எழுதியுள்ளார் என்பதும், கிளிநொச்சி மண்ணின் அடையாளத்தை, அந்த மண்ணின் மூச்சுக்காற்றை, எமக்கும் எமது அடுத்த தலைமுறைக்கும் யதார்த்த சாட்சியங்களின் கதைகளாக எழுத்துருவில் தந்த ஈழத்து பெண் எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்களுக்கு என் வாழ்த்துகளும் அன்பும்.

## நான்கு தசாப்தங்கள் தொடர்ச்சி மிக்க இலக்கியத் தொடர்பு



- ஆ. இரத்தினவேலோன்
புலோலியூர்

ஈழத்துப் புனைகதைஞர்களில் ஐந்தாம் தலைமுறை எழுத்தாளர்கள் என வகைப்படுத்துகையில் தாமரைச்செல்வியின் பெயருடனேயே பெரும்பாலும் எம் பெருவிரல் மடிகின்றது. எமது நாட்டைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்களுள் சர்வதேச ரீதியில் அதீத கவனம் பெற்றவராகத் திகழ்பவரும் இவரே.
நாவல் இலக்கியத்தில் கணிசமானதும், கனதியானதுமான பங்களிப்புச் செய்தவர்கள் என்ற வகையிலும் தாமரைச் செல்வியின் பெயரேயே விதந்துரைக்க வேண்டியுள்ளது.

தாமரைச் செல்வியுடனான எனது இலக்கியத் தொடர்பு நான்கு தசாப்தங்கள் தொன்மை மிக்கது. ஆயினும் குடும்ப நண்பர்களாக அது பரிணமித்தது கடந்த இருபது ஆண்டுகளுள் தான். நான் அவரை நேரில் சந்தித்தது அவரது புதல்விகள் இருவரும் யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ கற்கையினை மேற்கொள்வதற்காக குடும்பமாக அவர்கள் யாழ் நகரில் தங்கியிருந்த வேளையில் தான். அன்றிலிருந்து இந்த நிமிடம் வரை ஒரு உடன் பிறந்த மூத்த சகோதரியாக நின்று பழகிவரும் அவரது உயர்ந்த பண்பு உண்மையில் என்னை வியக்க வைப்பது. அவரது கருணை உள்ளமே அவரது இலக்கிய வெற்றியையும் தனிப்பட்ட வாழ்வின் வெற்றியையும் இந்தளவிற்கு இலகுவாக்கியிருக்கிறதோ என நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு!

# வாசகர் வாசகங்கள்...




## மொழியால் ஆசீர்வதிக்கப்பட்டவர்

- பொன்னையா விவேகானந்தன்,
கனடா

தொடர்ச்சியான இலக்கியப் பணியில் 50 ஆண்டுகால இருப்பு பலருக்கும் எளிதானதல்ல. அன்பிற்குரிய சகோதரி தாமரைச்செல்வி, எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே 'எழுதுதல்' என்ற சிந்தனைத்தளத்திலிருந்து விடுபட்டவராகத் தெரியவில்லை. வாய்த்தவொரு மானுட வாழ்வோடு, படைப்புத் தொடர்ச்சியையும் சமாந்தரக் கோட்டில் பேணிச் செல்லுதல் சிலருக்கு மட்டுமே வாய்க்கின்ற வரம். இத்தனை பேராற்றல் இவருக்கு வாய்த்திருக்கின்றதெனில் இவர் மொழியால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்றே நான் கருதுவேன்.

ஒரு படைப்பாளியைக் கட்டமைப்பதில் வாழ்கின்ற சூழல் பெரும்பங்கு வகிக்கின்றது. எமது விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கும் சகோதரியின் எழுத்துப் பணிக்கும் ஏறக்குறைய காலவளவு ஒன்றுதான். தான் அனுபவித்த, உணர்ந்த வாழ்வியற்களங்களின் ஊடாக, அரை நூற்றாண்டு கால ஈழத் தமிழர் வாழ்வியலை ஆவணப்படுத்தியிருக்கின்றார் என்றே நான் கூறுவேன். சகோதரியின் கதை மாந்தர்கள் ஆற்றோட்டத்தில் அலைக்கழியும் நாணல் போல, சூழல் மாற்றங்களால் உந்தப்பட்டு திசையெங்கும் எறியப்பட்டவர்களாக, சதாரண மானுடர்களாக இருப்பார்கள். இத்தகைய யதார்த்த நிலையை இவர் படைப்புகளில் பெரிதும் காணலாம். இதுவே இவருடைய படைப்புகள் வரலாற்று ஆவணங்களாகவும் போற்றவல்லவை எனக் கருதத் தூண்டுகின்றது.


'எழுதுதல்' என்பது சிந்தனையோட்டத்தின் தொடர் நிலை. வல்லமை கொண்டிருக்கும் இறுதிக்கணம் வரை சகோதரி எழுதவேண்டும் என்பதே எமது பெருவிருப்பு. ஆற்றியவைக்கும் ஆற்ற இருப்பவைகளுக்கும் எமது வாழ்த்துகளும் பாராட்டுகளும்.



## தெய்வத்தின் மீதான நேசத்துக்கு நிகரானது என் அன்பு

- திருமதி. குணாளினி தயானந்தன்
இலண்டன்

எழுத்தாளர் தாமரைச்செல்வியிடம் நான் கொண்ட அன்பு ஒரு தெய்வத்தின் மீதான தீரா நேசத்துக்கு நிகரானது. அவரது எழுத்துகள் அன்பும் கனிவும் கருணையும் மானுட கரிசனமும் ததும்பி ஊறும் கலைத்துவ ஊற்றுக்கள். வகிடு எடுத்து வளைந்து செல்லும் நதியின் லாவகமும் உறுத்தாது நகரும் தென்றலின் மென்மையும் வாய்ந்தவை. ஆனால், துயரம் கடத்துகையில் உச்சிமலைப் பாறாங்கல்லாக எமது இதயத்தில் விழுந்து, ஊரின் மாரிக் கிணறு போலக் கண் ததும்பச் செய்யும் பராக்கிரமம் மிக்கவை. எமது தாய்த் தேசத்தின் வனப்பை, குருதியை, கண்ணீரை, மகோன்னத தியாகங்களை தமக்குள் பொத்தி வைத்துக் காப்பவை. வருங்கால தமிழ் சந்ததி அவற்றிலிருந்து வரலாற்றை உள்ளது உள்ளபடி பிரித்தெடுக்கும் என்பது உறுதி. பெருவளை பொங்க அவர் வாழ வேண்டும் என உருகுகின்றது என் மனது.




## வன்னியின் வாழ்வைப் பதியவைத்த பதிவுகள்

- தாட்சாயணி
யாழ்ப்பாணம்

தாமரைச்செல்வியின் பச்சை வயல்கனவு நாவல் வன்னியின் விவசாய வாழ்வியலைப் பசுமை சொட்டப் பேசுகின்ற அதே நேரம், போர் அங்குள்ள மக்களின் வாழ்க்கையை எவ்வாறு சிதைத்துப் போட்டது என்பதையும் ஒரு சேரப் பதிவு செய்கிறது. கிளிநொச்சியில் மக்கள் குடியமர்ந்த ஆரம்ப காலங்களில் அவர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்த பாம்பு, யானை, நுளம்பு போன்ற உயிரினங்களை காலப் போக்கில் அவர்கள் வெற்றி கண்ட நிலையில், விவசாயப் பொருளாதாரத்தில் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்திய இயற்கையின் வெள்ள அனர்த்தத்தையும், போர் நெருக்கடியையும் இந்நாவல் கலாபூர்வமாக வெளிப்படுத்துகிறது. நிலவியல், பல்லின சமத்துவம், கிராமிய வழக்காறுகள் என்பன இனிய எளிய மொழியோட்டத்தில் அற்புதமாகப் பின்னப்பட்டிருக்கின்றன. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு இன முரண்பாடுகள் முளை விட்ட முக்கிய சம்பவங்களைத் தொட்டுக் காட்டிய வகையில் போர் வரலாற்றுப் புதினமொன்றாகவும் இந்நாவல் அமைகிறது.






## பிரமிக்க வைக்கும் பெருவளர்ச்சி

- மண்டூர் அசோகா
இலங்கை

எழுத்து என்பது ஒரு வரம். அந்த எழுத்தை வசப்படுத்தி தனக்கும், தான் வாழும் சமூகத்துக்கும் தன் தாய்மொழிக்கும் பயன் தரும் வகையில் கையாளுவதென்பது மாபெரும் வரம். அது தாமரைச்செல்விக்கு வாய்த்திருக்கிறது. தனக்கு வரமாகக் கிடைத்த அந்த எழுத்தாற்றலை அவர் தக்க வகையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். தாமரைச் செல்விக்கும் எனக்குமான நட்பு ஏறத்தாள நாற்பது ஆண்டுகளைக் கடந்து ஐம்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எழுபதுகளில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகள் பல எழுத்தாளர்களை வளர்த்து விடும் பணியுடன் நல்ல நட்புகளை இணைத்துவிடும் பணியையும் செய்திருக்கிறது.

அந்த வகையில் எனக்குக் கிடைத்த நட்புத்தான் தாமரைச்செல்வி. இத்தனை ஆண்டுகளிலும் அவரது வளர்ச்சி என்னைப் பிரமிக்க வைத்திருக்கிறது. தலை சிறந்த எழுத்தாளராய், ஓவியராய், குடும்பத் தலைவியாய் வாழும் தாமரைச்செல்வியின் நட்புக் கிடைத்ததில் பெருமிதம் கொள்கிறேன். என் அன்புத் தோழிக்கு இனிய வாழ்த்துகள்.



## நான் பெரிதும் மதிக்கும் எழுத்தாளுமை

- ஆசி கந்தராஜா,
அவுஸ்திரேலியா

இன்றைய ஈழத்து எழுத்துலகில் நான் பெரிதும் மதிக்கும் எழுத்தாளுமைகளில் மிகமுக்கியமானவர் தாமரைச்செல்வி. அவர் எழுதிய "பச்சை வயல் கனவு" நாவல் மூலமே அவர் எனக்கு அறிமுகமானார். அதைத் தொடர்ந்து அவரது ஆக்கங்கள் அனைத்தையும் நான் தேடி வாசித்துள்ளேன். அவரது படைப்புக்களில் உச்சமென நான் இன்றும் நினைப்பது "பசி" என்ற தலைப்பில் அவர் எழுதிய சிறுகதை. அது தமிழக அரசின் பாடப் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது. எமக்கு மிகவும் நெருங்கிய ஒருவர் இலகுவான மொழியில், அலுப்புத்தட்டாத வகையில் கதை சொல்வதுபோல, அவரது எழுத்துக்கள் இருக்கும். தான் வாழ்ந்த போர்க்காலச் சூழல், அதனால் ஏற்பட்ட அவலங்கள், அழிவுகள் என்பனவற்றை அவரது எழுத்துக்கள் உணர்வுபூர்வமாகவும் யதார்த்தமாகவும் சொல்கின்றன. தாமரைச்செல்வி இயல்பாகவே நல்லனவற்றையே நினைக்கவும் பார்க்கவும் விரும்புபவர். அதனால் அவரது எழுத்துக்களும் அப்படியே அமைந்துவிடுகிறது.



# தாமரைச்செல்வியின் புனைவுலகு வரலாற்றின் அடையாளமும் வரலாற்றை உருவாக்கும் திறனும் கொண்டது

- கருணாகரன்

சமூக இயக்கத்தையும் அதன் வழியே மனிதர்களின் வாழ்க்கையையும் அவர்களுடைய அவாவுதல்களையும் எழுதியளிப்பதில் புனைவெழுத்துகளுக்கு எப்போதும் முதல்நிலை இடமுண்டு. இதனால்தான் வரலாற்றின் அடையாளமாகவும் வரலாற்றை உருவாக்கும் திறன் கொண்டதாகவும் இலக்கியம் சிறப்பிடத்தைப் பெறுகிறது. இந்த வகையில் ராஜ் கௌதமனின் ‘சிலுவைராஜ் சரித்திர’த்தை ஏறக்குறைய வரலாற்றின் அடையாளமாகக் கொள்ளலாம். மாக்ஸிம் கோர்க்கியின் ‘தாய்’, வரலாற்றை உருவாக்கும் திறன் கொண்ட புனைவெனலாம்.

தாமரைச்செல்வியின் எழுத்துகள் இவை இரண்டையும் ஊடுபாவாகக் கொண்டவை. வரலாற்று நிகழ்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டதாகவும் அதற்கு அப்பால், புதியதொரு வாழ்க்கையை, வரலாற்றை அவாவுவதாகவும் கொண்டவை. இதில் உள்ளோடியிருப்பது தாமரைச்செல்வியின் சமூக நோக்கும் மானுடத் தன்மையுமாகும். இதற்காக அவர், சமூக இயக்கத்தையும் அந்தச் சமூக இயக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள், அவற்றுடன் இணைந்திருக்கும் மனிதர்கள், இவையெல்லாவற்றையும் இயக்கமுறவைக்கும் அதிகாரக் கட்டமைப்பு போன்றவைகளையும் எடுத்தாள்கிறார்.

இப்படி எடுத்தாள முற்படும்போது அவற்றின் மீது ஒளி பாய்ச்சப்படுகிறது. இந்த ஒளி பாய்ச்சுதல்தான் புனைவெழுத்தில், இலக்கியத்தில், கலையில் முக்கியமானதாகும். இந்த ஒளி பாய்ச்சலைச் செய்வதில் தான் ஒவ்வொரு படைப்பாளியின், எழுத்தாளரின், கலைஞரின் ஆளுமையும் சிறப்பும் துலங்கும், வேறுபடும். இதுவே கலைக்கான உயிர்நாடியின் முக்கியமான இழை. எந்தெந்த இடத்தில் எந்த அளவில் எத்தகைய ஒளியைப் பாய்ச்சுவது? எங்கே இருளை அல்லது நிழலைப் படர விடுவது? என்பதாக இதிருக்கும். ஏறக்குறைய ஓர் ஒளிப்படக் கலைஞரின் (Photographer) திறனுக்கு நிகரானது இது. இதில் குறைகள் நேர்ந்தால் அந்த எழுத்து, இலக்கியப் பிரதியாகத் தேற முடியாமல் போய்விடும்.

தாமரைச்செல்வி (1973 - 2023) ஐம்பது ஆண்டுகளாகப் புனைவெழுத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் எழுத்தாளர், படைப்பாளி என்ற வகையில் அவரிடம் ஒரு தேர்ச்சியும் நேர்த்தியும் உருவாகியுள்ளது. அதை அவர் தன்னுடைய சிறப்படையாளமாகவும் உருவாக்கி வைத்திருக்கிறார். கதைக்கான கருவைத் தேர்வது, கதைக் களத்தை உருவாக்குவது, கதாபாத்திரங்களை வடிவமைப்பது, அவர்களை இயக்கமுற வைப்பதில் அவருடைய தன்மை அல்லது அவருடைய முறைமை, விதம், இவற்றை வெளிப்படுத்துவதற்கான வடிவம், அதற்கான மொழிதல் முறைமை, மொழி என எல்லாவற்றையும் தன்னடையாளத்தோடு தொடர்புறுத்தி வைத்திருக்கிறார்.

இதனால் அவருடைய எந்தக் கதைகளைப் படித்தாலும் அது தாமரைச்செல்வியின் கதைகள் என்று அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். பொருளில், பாத்திரங்களில், களத்தில் வேறுபாடுகளிருந்தாலும் வடிவத்திலும் சொல்முறையிலும் நோக்கிலும் இவைபோன்ற தனித்தன்மைகளின் அடையாளத்திலும் எப்போதும் தாமரைச்செல்வியின் கதைகளாகவே அவை இருக்கின்றன.

படைப்பாக்கச் செய்முறையில் இது சரியானதா? புதுமைகளை, பரிசோதனைகளை, பரீட்சார்த்தங்களை படைப்பாளிகள் நிகழ்த்த வேண்டியதில்லையா? அதாவது மீறல்களை அவர்கள் செய்ய வேண்டும் அல்லவா? என்று இலக்கிய வாசகர்களும் விமர்சகர்களும் கேள்வி எழுப்பலாம். இலக்கியத்திலும் அதற்கான விமர்சனத்திலும் இந்தக் கேள்விக்கான இடமுண்டு. புத்தாக்கத்தின் வழியே, பரிசோதனைகளின் ஊடே முன்னேறிச் செல்லுதல்தான் படைப்பாளியின் அடையாளமும் வளர்ச்சியுமாகும். படைப்பின் வளர்ச்சியும் கூட. இதை மறுப்பதற்கில்லை. சமூக வளர்ச்சி, கால வளர்ச்சி என்பவற்றோடிணைந்து தன்னையும் தன்னுடைய வெளிப்பாடுகளையும் வளர்ச்சியடையச் செய்வது என இதிருக்கும். இத்தகைய படைப்பாளிகள் தங்களை வெவ்வேறு விதமாக விரிவாக்கிச் செல்வர். உலகளாவிய உதாரணங்கள் நிறைய இதற்குண்டு. தமிழிலும் ஏராளம் பேருண்டு. வெவ்வேறு விதமாக எழுதிக் காட்டுவது. வெவ்வேறு தளங்களின் வழியே தாவிச் செல்வது என.

ஆனால், அதைக் கடந்ததாக, தங்களுடைய அடையாளங்களைப் பேணிக்கொண்டே காலத்தினூடும் சமூக வெளியிலும் பயணிப்போரும் உண்டு. ஈழச் சூழலில் இதற்கு செழிப்பான உதாரணங்களாக வ.ஐ.ச. ஜெயபாலனையும் சு. வில்வரெத்தினத்தையும் அடையாளம் காணமுடியும். ஏன் சோலைக்கிளியும் கூடத்தான். இவர்களுடைய எந்தக் கவிதைகளிலும் அவரவரின் அடையாளத்தைக் காண முடியும். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் ஜெயபாலனின் இன்றைய கவிதையில் கூட அவருடைய நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய நிழலைக் காணலாம். சொல்முறையிலும் மொழியிலும் இது

துலங்கித் தெரியும். சட்டநாதனின் கதைகளிலும் இதுவுண்டு. தமிழகத்தில் ஜெயமோகனின் அண்மைக்காலக் கதைகள் (கடந்த பத்து ஆண்டுகாலக் கதைகள்) பெருமளவும் இந்த லயத்துக்குரியனவாகியுள்ளன. முன்னர் அவர் வெவ்வேறு வடிவங்களிலும் வெவ்வேறு விதமான மொழிதல்களிலும் தன்னுடைய கதைகளை நிகழ்த்திக்கொண்டிருந்தார். இப்பொழுது அவற்றை விடுத்து, கதைகளைச் சொல்வதில்தான் கூடிய கரிசனையை எடுத்திருக்கிறார். தாமரைச்செல்வியிடமும் இந்தத் தன்மை, தாகமே அதிகமுண்டு. தன்னுடைய கதைகளைச் (இங்கே தன்னுடைய கதைகளை என விளிப்பது படைப்பாளியின் சொந்தக்கதைகளை, சுய விவரணையை என்று அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம்) சொல்லி விடுவதிலேயே கூடுதலான அக்கறையும் ஆர்வமும் முன்னிற்கின்றன. ஆகவே, இத்தகைய இரு வழி அல்லது இரு நிலை எழுத்தாளர்களே பெரும்பாலும் நம்மைச் சுற்றியுள்ளனர்.

தாமரைச்செல்வியின் வழி, தன்னுடைய காலத்தையும் தான் விரும்புகின்ற காலத்தையும் இணைத்து ஒரு புதிய வெளியை உருவாக்குதிலேயே அமைகிறது. மேலோட்டமாகப் பார்த்தால் அவருடைய கதைகள் அனைத்தும் அவர் வாழ்கின்ற காலத்தையும் களத்தையும் மையப்படுத்தியதாக அல்லது பிரதிபலிப்பதாகத் தோன்றும். ஆனால், அதைக்கடந்து சற்று ஆழமாக நோக்கினால் அல்லது உள்ளுணர்ந்தால், அவர் அதற்கும் அப்பால் சென்று தான் காண விரும்பும் காலமொன்றையும் சொல்லிச் செல்கிறார் என்பதைக் காணமுடியும், உணரமுடியும். அப்படியென்றால், அவர் காணவிரும்பும் காலம் அல்லது உலகம் எது ? என்ற கேள்வி எழலாம். நிச்சயமாக.

முதலில் அவர் பயணிக்கின்ற காலவெளி எதுவெனப் பார்க்க வேண்டும். தான் வாழ்கின்ற, தன்னவர்கள் என அவரறிந்தவர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற காலவெளியே அவருடைய முதற் தேர்வு. இந்தத் தேர்வில் இயங்குகின்ற மனிதர்களின் வழியே தான் காண விரும்புகின்ற, மாற்றான காலவெளியொன்றை மெல்ல அடையாளம் காட்ட முனைகிறார். இலக்கியத்தில் இது இயல்பாக உள்ள ஒரு விசயம்தான். இலட்சியவாதம் என இதைச் சொல்வதுண்டு. கம்பனிடத்திலும் இது இருந்தது. மு.தளையசிங்கத்திடத்திலும் இதைக் காணலாம். சுந்தர ராமசாமி, டொமினிக் ஜீவா போன்றோரிடத்திலும் இதுவுண்டு. இந்த இலட்சியவாதம் சற்று தூக்கலாக இருந்தால் அது கலையின் இழைகளை மீறி அரசியலாகத் துருத்தத் தொடங்கி விடும். கறியில் உப்பின் சுவை கூடினால் எப்படியிருக்குமோ அதைப்போல.

தாமரைச்செல்வி, தன்னுடைய காலத்தின் வழியே பயணித்து, தான் விரும்பும் அந்தக் காலமொன்றை உருவாக்கும்போது அது நம்மை நாமே பரிசீலிக்கக் கோருவதாக இருக்கிறது. அவருடைய கதைகளில் முன்னிறுத்தப்படும் சம்பவங்கள், களம், பாத்திரங்கள், அவை எதிர்கொள்ளும் நெருக்கடிகள், அவற்றின் உணர்ச்சிகள் இவையெல்லாவற்றுக்கும் நீங்கள் சாட்சியமாகவும் பொறுப்பாளிகளாகவும் உள்ளீர்கள். உங்கள் முன்னே, உங்கள் மையத்தில்தான் இவையெல்லாம் நிகழ்கின்றன. ஆகவே இதற்கான பொறுப்பை ஏற்கவும் சொல்லவும் வேண்டியவர்களாகின்றீர்கள் என்று மெல்ல வலியுறுத்தி விடுகிறார். இந்தப் பொறுப்புணர்த்தல் நம்மை மெல்ல இயக்கமுற வைக்கிறது. நமக்குள் நிகழத் தொடங்கும் அறம் பற்றிய தூண்டல்கள் அவர் கோருகின்ற, காணுகின்ற புதிய காலமாகவும் உலகமாகவும் உள்ளது.

இதற்குதாரணமாக அவருடைய இரண்டு நாவல்களை இங்கே குறிப்பிடலாம். ஒன்று, அவர் இறுதியாக எழுதிய உயிர்வாசம். இதில் சொந்த நிலத்திலிருந்து (ஈழத்திலிருக்க முடியாமல் வெளியேறி) அகதியாகப் படகில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் மனிதர்களின் அவலநிலை வெளிப்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்ல, ஆப்கானிஸ்தானிலிருந்து, ஈரானிலிருந்து, பலஸ்தீனத்திலிருந்தெல்லாம் மனிதர்கள் அகதிகளாகிச் செல்கிறார்கள். இன்னொரு நிலத்தில் வேரூன்றத் துடிக்கிறார்கள். அதற்காகக் கனவு காண்கிறார்கள். அந்த நம்பிக்கையோடு செல்கிறார்கள். ஆனால் அது எளிதானதல்ல. இதன் தொடர்ச்சியாக அவுஸ்திரேலியாவில் சந்திக்கும் அகதி நெருக்கடியும் பேசப்படுகிறது.

இதன் வழியே அவர் காண விரும்புவது அல்லது நமக்குக் காட்ட விரும்புவது உலகமெங்கும் உள்ள அகதி நிலை என்பது மிக மிகக் கொடுமையானது. அவலம் நிறைந்தது. இவ்வளவு வளர்ச்சியடைந்த இந்த உலகத்துக்குச் சற்றும் பொருத்தமானதல்ல. நாடுகள், சட்டங்கள் என்பவை எல்லாம் மனிதர்களையும் அவர்களுடைய வாழ்க்கையையும் புரிந்து கொள்ள






வும் ஏற்றுக் கொள்ளவும் தவறுகின்றன என்பதை. இங்கே நாடுகள், அவற்றின் அரசுகள், அவற்றின் சட்டங்கள் எல்லாம் வேறொன்றல்ல, அது நம்முடையதுதான். மக்களாட்சி என்ற அடிப்படையில் (ஜனநாயகத்தின் பேரால்) நாமே வாக்க ளித்து உருவாக்கியவைதான். ஆகவே இதற்கு நாம்தான் பொறுப்பாளிகள். எனவே இதெல்லாம் இல்லாத அல்லது இதைக் கடந்த அவலமற்ற ஒரு வாழ்க்கைப் பரப்பும் மனிதச் சூழலும் உலகமெங்கும் நிலவ வேண்டும் என்பதாக. இது தான் தாமரைச்செல்வி காண விரும்பும் உலகம்.

இதிலென்ன புதுமை உள்ளது? எல்லா இலக்கியப் படைப் பின் உள்ளோட்டமும் இதுதானே என்று நீங்கள் வாதிடலாம். இருக்கலாம். ஆனால், அதைச் சொல்லும், வெளிப்படுத்தும் தன்மையில் வேறுபாடுகளுண்டல்லவா!

இன்னொரு உதாரணம், அவருடைய இன்னொரு நாவலான பச்சை வயல்க னவு. நீர்வளம், நில வசதி குறைந்த இடத்திலி ருந்து (யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து) இன்னொரு நிலத்தைத் தேடி, நீரைத் தேடிச் செல்லும் மனிதர் கள், அங்கே (வன்னியில்) மிகச் சிரமப்பட்டு ஒரு பச்சைவயற் பரப்பை, புதிய வாழ்க்கைப் பரப்பை உருவாக்குகிறார்கள். அந்தப் பரப்பிலிருந்து கொண்டு அடுத்த கட்ட வாழ்க்கைக் கான கனவை, பச்சைவயற்கனவைக் காண்கிறார்கள்.

ஆனால், அதற்கிடையில் - அடுத்த தலைமுறைக்கிடையில் போர் வந்து விடுகிறது. அந்தப் போர் எல்லாவற்றையும் அழித்து விடுகிறது. ஒரு மக்கள் திரளின் உழைப்பும் நம்பிக் கையும் கனவும் எப்படிச் சிதைக்கப்படுகிறது என்று காட்டப்ப டுவதுடன் இது முடிந்து விடவில்லை. அப்படிக் காட்டப்படுவ தன் ஊடாக இந்தப் போரை உருவாக்கிய, அதற்குக் காரண மான, அதில் ஈடுபடுகின்ற குற்றவாளிகள் மீது குற்றம் சாட்டப் படுகிறது. அதனோடு விட்டிருந்தால், அதொரு குற்றம் சாட் டப்படும் பிரதியாகச் சாதாரணமாக முடிந்துவிடும். தாமரைச் செல்வியின் நோக்கம் அதுவல்ல. ஒரு தேசத்தின் மனிதர்கள் அந்தத் தேசத்தின் முழுமையான ஆதரவோ உதவியோ இல் லாமல் மிகக் குறைந்த ஆதாரங்களுடன் மிகக் கூடிய உழைப்பைச் செலுத்தி தமக்கான வாழ்களத்தையும் வாழ்க் கையையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். கடல் வழியே சென்று காடுகளை வெட்டிக் களனியாக்கி, வாழ்வை உரு வாக்கியவர்கள். அதை அங்கீகரிப்பதற்குப் பதிலாக, அந்த மனிதர்களைக் கொண்டாடுவதற்குப் பதிலாக, அவர்கள் இன, மத, பேதமற்ற மனிதர்களாக வாழும் நிலையை மறுத லித்து, அறமற்ற ஆதிக்க அரசியல் எப்படி அவர்களை அழிக்க முனைகிறது என்று சொல்லி உலகத்தின் முன்னே அறச் சீற்றத்தை முன்வைக்கிறார்.

இதன் மூலம் இத்தகைய நிலையை நாம் மறுதலித்துப் புதிய தொரு உலகத்தை, புதிய உலகத்துக்கான தெரிவுகளைச் செய்ய வேண்டும் என்று உணர்த்துகிறார். இல்லையென்றால் அனைத்துமே பாழ் என்கிறார். இதைச் சொல்லாமற் சொல்லி விடுகிறார். இதுதான் தாமரைச்செல்வியின் புனைவின் பண்பு. அவருடைய அனைத்துப் புனைவிலும் இந்தப் பண்பைக் காணமுடியும். எளிய மொழியில், சாதாரணர்களின் கதை களை, மிக ஆழமாக, வலிமையோடு சொல்லும் பண்பு.

இப்படி நோக்கும்போதுதான் தாமரைச்செல்வியின் எழுத்துக ளின் பெறுமானத்தையும் அவை உண்டாக்கும் அடையாளத் தையும் நாம் கண்டுகொள்ள முடியும். இல்லையென்றால் வெறும் காலப் பதிவுகளாகவோ, டயறிக் குறிப்புகளாகவோ தான் சுருக்கிப் பார்க்க நேரிடும். அது தாமரைச்செல்விக்கு மட்டுமல்ல, இலக்கியத்தின் அடிப்படைக்கும் இழைக்கப்ப டும் அநீதியுமாகும்.

சமூக இயக்கத்தையும் அதன் வழியே மனிதர்களின் வாழ்க் கையையும் அதன் மேன்மையையும் புரிந்து கொள்வதற்கான வாசல்களைத் திறந்து கொண்டேயிருக்கும் எழுத்துகளுக்கு வரலாற்றில் எப்போதும் சிறப்பிடமுண்டு. அந்த இடத்தை தாமரைச்செல்வியின் புனைவுகள் எப்போதும் கொண்டிருக்கும்.



karunagaran@thaiveedu.com



# அகம் என்பதே எழுத்தானவர்

**- ரஞ்ஜனி சுப்ரமணியம்**

வன்னி மண்ணின் வற்றாத வளங்களில் ஒன்றென 'எழுத்தரசி' தாமரைச்செல்வி அவர்களின் இலக்கியப் படைப்புகளைக் கூறலாம். தமது வாழ்நாளின் ஐம்பது ஆண்டுகளை இலக்கியத்திற்காக அர்ப்பணித்த பொன்விழா நாயகி இவர்.

எளிமையும் உண்மையும் மனிதாபிமானமும் நிறைந்த யதார்த்த எழுத்துகளே இவரது முத்திரை. பாத்திர வார்ப்புகள், வாசகருக்கு அந்நியர்களோ மிகையாக வலிந்து திணிக்கப்பட்டவர்களோ அல்லர். மானுட மனதின் நிறைவான அம்சங்களை மட்டும் தன் எழுத்தில் கொண்டு வருவதை இலட்சியமாகவே கொண்டவர். இந்த நல்லியல்புகளை அவரால் எவ்வாறு தன் கதைகளில் கொண்டுவர முடிகிறது என வாசகருக்கு வியப்பு மேலிடல் இயல்பானது. அண்மையில் எழுத்தாளரது இலக்கிய வாழ்வின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா உரையொன்றில், இல்லற இணையாகவும் இலக்கியத் துணையாகவும் பயணிக்கும் அவரது அன்புக் கணவர் திரு. சி. கந்தசாமி அவர்களின் வார்த்தைகள் இதற்கு சான்று பகரும்.

'தாமரைச்செல்வி வேறு, அவர் படைக்கும் இலக்கியம் வேறு அல்ல. அவருடைய வாழ்க்கைக்கும் எழுத்துக்கும் வேறுபாடு என்பதே இல்லை. எழுதுவதைப் போலதான் வாழ்வார். அவருடைய படைப்புகளின் அடிநாதமாக அமைந்த கருணை, கொடை என்பன பரம்பரை வழி கடத்தப்பட்டு இயல்பில் ஊறி நின்று, படைக்கும் இலக்கியத்திலும் முன்னிலை பெறுகிறது. ஐம்பது வருட இலக்கிய வாழ்வில், முப்பது வருடங்களைத் துயர் சூழ்ந்த யுத்தகாலத்தில் கழித்தவர். போர் சார்ந்த களமும், பாதிக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் பாத்திர வார்ப்புகளும் இவரது எழுத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்கின்றன. விடாமுயற்சியும் உறுதியும் மிக்கவரான தாமரைச்செல்வி வீடுதான் உலகம் என வாழும் சிறந்த குடும்பத் தலைவியும் ஆவார்'.

மற்றுமோர் எழுத்தாளரான சார்ல்ஸ் குணநாயகம் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்: 'தமது சொந்த இடமான கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் ஈறாக வன்னிப் பிரதேசம் எங்கும், வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மக்களினதும், மாணவரினதும் மேம்பாட்டுக்காக, தமது மூன்றாவது தலைமுறையினரையும் இணைத்துக் கொண்டு தாமரைச்செல்வி அவர்களது குடும்பத்தினர் ஆற்றி வரும் சமூகநேய நற்பணிகள் அளப்பரியவை'.

இவ்வாறான நல்லியல்புகளினால், யுத்தத்தில் பாதிப்படைந்த மனிதர்களின் துயரங்களை முப்பரிமாணத்தில் காணவைக்கும் எழுத்து வலிமையை தாமரைச்செல்வி அவர்கள் இயல்பாகவே கொண்டிருக்கிறார் என்பதை உணர முடியும். அகதிகளாய் இடம்பெயர்ந்தோர், புலம்பெயர்ந்தோர், கொலையுண்டோர், காணாமல் ஆக்கப்பட்டோர், உடல் அவையங்களை



இழந்தோர், உறவுகளை இழந்தோர், புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் வாழ்வியல் போராட்டங்கள் பற்றிய எண்ணில டங்காத கதைகள் அவர் உள்ளத்தில் இருந்து பொங்கிப் பிர வாகித்துக் கொண்டே இருக்கின்றன. தமிழ் போராளி இயக் கங்கள் மேலான மென்கோணமும் அவரது படைப்புகளில் சிற் றொளிக் கீற்றுகளாக பிரகாசிப்பதை இனம் காணலாம்.

இவ்விடத்தில், நவீன இலக்கியவாதிகளால் ஒரு எதிர்க்க ருத்து முன்வைக்கப்படலாம். ஈழத்து எழுத்தாளர்கள் யுத்த அவலங்களையே தொடர்ந்து எழுதுவதைத் தவிர்த்து, இதன் பின்விளைவுகளான புலம்பெயர்வு மற்றும் கலாசார எதிர் கொள்ளல்கள் முதலான பன்முக இரசனை தரும் கதைக ளைப் படைக்கலாமே என்பதாக.

ஆனால், யுத்தகளத்தில் வாழ்ந்து அதன் அவலங்களின் நேரடி சாட்சியான ஒருவரின் மனதில் அந்த வடு தரும் வலியை அகற்றுவது சிரமம். அத்துடன் அந்த துன்பியல் வர லாற்றை, இனிவரும் சமூகம் தமது நினைவுப் புலத்தில் இருந்து அழித்து விடவோ பேரினவாதம் மறைத்து விடவோ கூடாது என்பது அவரது எழுத்துகளை நியாயப்படுத்தும் வலு வான காரணி. மறப்பதில் வல்லவர்கள் நாம். இலக்கியப் பாய்ச்சல்கள் என்ற பெயரில் சாதாரண வாசகருக்கு அந்நிய மாகாமல், இவரின் படைப்புகள் மெய்யுறு புனைவுகளாகவே தொடரட்டும்.

இன்று புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் தாம- ரைச்செல்வி அவர்கள், 'சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு' எனும் சிறுகதைத் தொகுப்பில் அவுஸ்திரேலியா, லண்டன் முதலான நாடுகளைக் களமாகக் கொண்ட சில கதைகளை யும் இணைத்திருக்கிறார். 'பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவு தல்' என்பது முக்கிய கருப்பொருளாக அங்கும் நிலைகொள் கிறது. அதே சமயம் புலம்பெயர்ந்தாலும், சம்பிரதாய வேலிக ளைக் கடக்காத நம்மவர்களின் மனநிலையினைச் சாடும் சில கதைகளில், ஆண் பெண் உறவில் சிக்கலான அகவுணர்வு களை வெளிக்காட்டும் தன்மையுடைய கதை மாந்தரினையும் நம்முன் உலவ விடுகிறார்.

இவரது எழுத்துத் தரும் பயன் என்ன என்பதை ஆழ்ந்து நோக்கினால், தான் பிறந்து வளர்ந்த மண்ணினதும் மக்களின தும் சரித்திரத்தை எதிர்காலத்திற்காகவும் சர்வதேசத்திற்காக வும் ஆவணமாக்குவது முதன்மைக் காரணியாக அமையும். வன்னி மண்ணில் காடாக இருந்த கிளிநொச்சி பரந்தன் குமர புரம் பிரதேசங்களை, பசுமை மிகுந்த நெல் வயல்களாக மாற் றிய விவசாயப் பரம்பரையின் பாரம்பரியத்தை, இலக்கியத் தின் மூலம் வெளிக்கொண்டு வந்தவர். பல தசாப்தங்களாக தொடர்ந்த யுத்த சூழலையும் பேரழிவுகளையும் தன் எழுத்தி னூடாக தரிசிக்க வைத்தவர். தாம் வாழ்ந்த மண்ணின் பசுமை யைப் பறி கொடுத்தவர்களை, பச்சை வயலின் கனவுகளைக் காணவைத்தவர்.

போர்ச் சூழல் ஒன்றின் பக்க அதிர்வுகளான புலம்பெயர்வின் நடைமுறைச் சிக்கல்களை உணரவைத்தவர். அகதியாய் கட லில் செல்லாதவர்களுக்கு உயிரின் வாசத்தை நுகர வைத்த வர். புலம்பெயர்ந்து வாழ்வோர் தமது உறவுகளுக்கு எவ்வாறு உதவலாம் என்னும் வழி கூறியதுடன், அருட்டுணர்வும் அறிவி முமியங்களும் பெறவைத்தவர். வறுமை நிலையில் உள்ளோ ரும், மற்றவருக்கு உதவும் செவ்விய மனம் பெறலாம் என



அறியவைத்தவர்.

வென்றாலும் தோற்றாலும் இத்தனைக்கும் ஊடாகப் பயணிக்கும் கண்ணியமான காதல் உணர்வையும், பிரிந்துழல்வின் வலியினையும் புரிய வைத்தவர். இயல்பாக உரையாடும் கதைமாந்தர் மூலமாக பிரதேச வழக்கினை நிலைநிறுத்தியவர். கருவையும், களத்தையும், கதைமாந்தரையும் தனது படைப்பு மொழியினால் நிஜமாக்கி, வாசகரை எழுத்தால் ஈர்த்துக்கொண்டவர். சுருங்கக் கூறின் உணர்வுகளால் உருவாக்கப்பட்ட மானுடத்தின் திறப்பே இவரது இலக்கியப் படைப்புகளில் நிலைகொள்கிறது எனக் கூறலாம்.

பதினான்கு கதைகளைக் கொண்டிருக்கும் 'சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு' என்னும் தொகுப்பின் சில கதைகள், வறுமையின் பெருந்துயர் சூழ்ந்திருக்கும் நிலையிலும் மற்றவரின் வலியறிந்து உதவும் பெரும் மானுடப் பண்பினைக் கூறி நிற்கின்றன. 'சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு' 'இருட்டின் நிறம் வெள்ளை' 'வாழ்தல் என்பது' ஆகியன. யுத்தத்தில் பெற்றோரைப் பறிகொடுத்து வாழும் பேரப்பிள்ளைகளை வளர்க்கப் பாடுபடும் வறுமை நிலை கொண்ட சின்னாசிக் கிழவனும், வன்புணர்வுக்கு உள்ளாகிக் கொலை செய்யப்பட்ட சகோதரியையும் ஏனைய குடும்பத்தவரையும் இழந்து கொடும் நினைவுகளோடு வாழும் கண் தெரியாத இளைஞனும், இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு உச்சம் பெற்றிருந்த போது தன் துன்பம் மறந்து சக தொழிலாளிக்கு உதவும் ஆட்டோ ஓட்டுனரும் பெருநேசத்துக்கு உரியவர்கள்.

சமூகத்தின் அந்தஸ்து பேதங்களால் பிரிந்த காதலர்களது வலி கூறும் கதைகள் இரண்டு. காதல் தோல்வியுற்ற பின் நேசித்தவர்களின் அவல நிலையினை அறிய நேராதிருப்பதும் ஒரு வரமெனவே நினைத்துக் கலங்க வைக்கும் எழுத்து. சில கதைகள் யுத்தத்தின் பாதிப்புகளால் பிரிந்து வாழும் தம்பதிகளின் வலிகளையும், அதனால் இல்லறம் சந்திக்கும் போராட்டங்களையும் கூறுகின்றன.

புலம் பெயரும் நம்மவர்கள் பலர் தமது தாயகத்தின் கலாசார வேலிகளை இறுகப்பற்றி வாழ்வதால், அடுத்த தலைமுறையினர் எதிர்கொள்ளும் மனச் சிக்கல்களைக் கூறுவது 'எதிர்பார்ப்பு' என்னும் கதை. திருமண பந்தத்தில் ஒரு ஆணின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய, பெண்ணானவள் தன் இயல்புகளை மாற்றிக் கொள்ளுதல் அவசியம்தானா என்றோர் கேள்வி இங்கு எழுப்பப்படுகிறது.

மண வாழ்வில் ஒரு ஆணும் பெண்ணும் புரிந்துணர்வின் அடிப்படையில் இணைந்த பின், வாழ்தலும் பிரிதலும் அவரவர் உரிமை சார்ந்தது. ஆனால் எந்த நிலையிலும் திருமண பந்தத்தால் தோன்றிய குழந்தையின் மனம் சிதைக்கப்படுதல் கூடாது எனும் கருப்பொருளைக் கூறுவது 'மழை வரும் காலம்'. இக்கதையில் தாய்மையும் உண்மையும் நிறைந்த ஆணின் மனம் வெளிக்காட்டப்படுவது மனதுக்கு இதமானது. உதாரணமானது.

குரல் உயர்த்தல் இன்றியும், அதி மேதாவித்தனமான ஆணாதிக்கம் இன்றும் தொடர்வதை 'மௌனயுத்தம்' கூறுகிறது. மனித மனச் சிக்கல்களை நூலிழை பிரிப்பது போன்ற நுட்பத்துடன் எழுதப்பட்ட இக்கதையில், பிரிந்து சென்று மீண்டும் வீடு திரும்பும் மனைவியை 'வாரும்' என கணவன் அழைக்கும் ஒரு சொல்லில், பெண்ணின் துணையின்றி வாழ முடியாத ஆணாதிக்கக் கோட்டையின் சரிவினையும் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்.

'காணாமல் ஆக்கப்பட்டோர்' என்ற சொல்லின் உள்ளிருக்கும் வலிகளும் உணர்வுப் போராட்டங்களும், சிக்கலான வடிவம் பெற்று வந்த கதை 'யாரொடு நோவோம் ?'

விதவையா சுமங்கலியா என்னும் இரட்டை மனவாழ்வினைப் பெண்கள் அனுபவித்தல் கொடுமை. ஆண் துணையின்றி குழந்தைகளுடன் வாழும் பெண்ணுக்குரிய பெரும் சிக்கல்களாவன, பாதுகாப்பும் பொருளாதாரமும். இந்நிலையில் இன்னொரு ஆணைத் திருமணம் செய்த பெண், காணாமல் ஆக்கப்பட்ட கணவன் மீண்டு வந்தால் என்ன செய்ய வேண்டும் ?

ஏற்றுக் கொள்ளக் கூடிய, மிகச் சாமர்த்தியமான நகர்வினைக் கொண்ட இக்கதை போரின் அவலங்களை மட்டுமன்றி மனிதாபிமானத்தின் பல கோணங்களையும் இனங்காட்டி நிற்கின்றது. அப்பெண்ணின் மனக் குரலாக வெளிப்படும் கீழ்காணும் வசனங்கள், படைப்பாளியானவர் கதை நாயகியின் மனநிலையைத் தனதாகவே உணர்ந்திருப்பதைக் கூறுகிறது.

'அவன் எதிர் பார்க்கிறானோ ஓடி வந்து கட்டிப் பிடித்து அழுவேன் என்று...'

'மனம் நிம்மதியாய் இருந்தது. ஆனாலும் ஏனோ கத்தி அழ வேண்டும் போலவும் இருந்தது'.

மிகுந்த மன இறுக்கத்தையும் உருக்கத்தையும் ஒருங்கே தரவல்ல இக்கட்டானதோர் சூழ்நிலையினை, இவ்வசனங்கள் வாசகர் மனதிலும் சொற்சித்திரமாக வரைந்தன என்பது நிஜம்.

ஆனால், இக்கதை வேறோர் சாத்தியமான கோணத்தில் சில கேள்விகளை மனதில் எழுப்பியது. மறு திருமணம் செய்த ஒரு ஆண், காணாமல் ஆக்கப்பட்ட மனைவி மீண்டு வந்தால், வந்தவரையும் ஏற்றுக் கொண்டு வாழுதலை நம் சமூகம் நியாயம் செய்யும். ஒரு பெண் அவ்வாறு வாழ்வதை மகாபாரதம் படித்த எமது சமூகம் ஏற்றுக் கொள்ளுமா ?

இவ்வாறான வினாக்களையும் விடைகளையும் ஒருங்கே தரவல்ல எழுத்து வல்லபம் கொண்டவரான தாமரைச்செல்வி அவர்களின் இச்சிறுகதைத் தொகுப்பும் அதற்கொரு சான்றாக அமையும்.

தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு மென்மேலும் அணி சேர்க்க, அவர்தம் வாழ்வில் நலமும் வளமும் சிறந்தோங்க வேண்டும் என்பது அனைவரினதும் பெருவிருப்பாகும். நிறைவான வாசிப்பு அனுபவங்களைத் தொடர்ந்து தரும் வன்னியின் சாதனை நாயகிக்கு இனிய வாழ்த்துகள்.

ரஞ்ஜனி சுப்ரமணியம்
Ranjini Subramaniam
கொழும்பு

ranjini.subramaniam@thaiveedu.com





# தாமரைச்செல்வியின் கதைகள்
## தமிழ் வாழ்வியல் குறித்த ஓர் இலக்கியச் சாட்சியம்

– இந்திரன்

ஈழத்தின் புனைகதை உலகப் பரப்பிற்குள் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒலித்து வரும் தாமரைச்செல்வியின் பெண் குரல் முக்கியமானது. இக்குரல், கண்ணாடியில் தன் பிம்பத்தைத் தானே தன் அலகால் குத்திக் கொண்டிருக்கும் சிட்டுக்குருவியைப் போல நடந்து கொள்வதாக எனக்குத் தெரிவது வழக்கம்.

ஈழத்து மண்ணின் போர்க்கால வாழ்க்கையானாலும், ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் வாழ்க்கையானாலும் எளிய முறையில் அன்றாட வாழ்க்கையை விசாரித்தபடி கதைசொல்லிச் செல்பவை இவரது சிறுகதைகள்.

தற்போது ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த போதிலும் இவரது குரல் கிளிநொச்சிப் பிரதேசத்தின் ஒரு பெண்ணின் பார்வையில் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு இலக்கிய சாட்சியம்தான். 25 ஆண்டு கால ஈழத்தின் உள்நாட்டுப் போர் மற்றும் ஆஸ்திரேலியாவின் புலம்பெயர் வாழ்வு ஆகியவற்றை சுற்றிச் சுழல்கின்றன இச்சிறுகதைகள்.

20 வயதில் வீரகேசரி இதழில் வெளிவந்த ஒரு சிறுகதையின் மூலமாக தமிழ் எழுத்து உலகத்திற்குள் நுழைந்த தாமரைச் செல்வி 200-க்கும் மேற்பட்ட சிறுகதைகள் 07 நாவல்கள் மூன்று குறு நாவல்கள் என்று ஏராளமாகப் பங்களித்திருக்கிறார். இன்றைக்கும் தொடர்ந்து எழுதி வருகிறார் என்பது பாராட்டுக்குரியது. ஆயினும் தமிழ்நாட்டு எல்லைக்குள் இவரது சிறுகதைகள் அதிகமாக விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ‘வன்னியாச்சி’ என 37 கதைகளைக் கொண்ட ஒரு நூலை காலச்சுவடு வெளியிட்டுள்ளது. புதிதாக வெளிவரவுள்ள தாமரைச்செல்வியின் ‘சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு’ என்ற சிறுகதைத் தொகுதியைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ‘எதிர் வெளியீடு’ வெளியிடவுள்ளது. இதன் மூலமாகத் தமிழ்நாட்டு வாசகர்கள் மேலும் நுணுகி வாசிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நினைக்கிறேன்.

‘சின்னாசிக் கிழவனின் செங்காரிப் பசு’ என்ற இச்சிறுகதைத் தொகுதியின் கதை சொல்லும் முறைகள் வாசகரை அன்னியோன்யமாகவும், எளிமையாகவும் அணுகும் அதே நேரத்தில், உள்முகமாகத் தொட்டுப் பேசுபவையாகவும் இருப்பது இச்சிறுகதைகளின் சிறப்பு.

இரவில் நிலா வெளிச்சத்தில் அமர்ந்து கொண்டு மடியில் படுத்திருக்கும் பிள்ளைக்குத் தன் வாழ்க்கைக் கதைகளை மனோலயப்படி சொல்லும் தொனியில் எளிமையாகப் பேசும் இச்சிறுகதைகள், பதைபதைக்கும் பல தருணங்களை மிக எளிமையாக நம்முடன் பகிர்ந்து கொண்டு விடுகின்றன.

சின்னாசிக் கிழவனின் தொலைந்து போன பசுவைத் தேடி அலையும் ஒரு எளிய விவசாயியின் பதட்டமும் இறுதியில்



கன்று ஈன்று நிற்கும் பசுவைக் கண்ட பிறகு ஏற்படும் மனநிலையும் மிக நுட்பமாகக் கதையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவரது சிறுகதைகள் பல குறும்படங்களாக வெளிவந்துள்ளன. தமிழின் மிக முக்கியமான சினிமா இயக்குனரான ‘முள்ளும் மலரும்’ மகேந்திரன் ‘இடைவெளி’ என்ற இவருடைய கதையை 1996 எனக் குறும்படமாக மாற்றியுள்ளார். இன்னொரு கதையான ‘பாதணி’ ஜான் மகேந்திரனால் அதே பெயரில் குறும்படமாக்கப்பட்டுள்ளது. இவரது சிறுகதைகள் குறும்படங்களாக மாற்றப்படுவதற்கு காரணம் இவரது கதை சொல்லுதலில் திரைப்படமாக எடுப்பதற்கு ஏற்ற விவரணைகள் எளிமையாக இடம் பெறுவது தான்.

‘சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு’ என்ற சிறுகதைத் தொகுதியில் இருக்கும் சிறுகதைகள், ஆமி உள்நாட்டுச் சனங்களை சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டு போவது




பற்றியும், கஞ்சி கொடுக்கும் கொட்டிலில் ஷெல் வந்து விழு வதைப் பற்றியும், வீதியில் செல்லும் ஆமிக்காரன் 'தண்ணி வேண்டும்' என்று கேட்கும் போது அதை எப்படி எதிர்கொள் வது என்று தெரியாமல் திகைக்கும் மனிதர்களைப் பற்றியும் 'மிகை நாடகத் தன்மை' அற்று, தன் கதைகளில் பேசிச் செல் லும் போது மிக எளிதாக உணர்ச்சிகளைக் கடத்திவிடுகிறார்.

தாமரைச்செல்வியின் கதைகளைப் படித்துக் கொண்டு போகிறபோது ஈழத்தில் நிகழ்ந்த 25 ஆண்டு கால உள்நாட் டுப் போர் தனிமனித வாழ்க்கையை உருத்தெரியாமல் குலைத்துப் போட்டு விட்டதை, ஒரு உள் மனுஷியாக இருந்து கொண்டு பேசும் வலியை உணர முடிகிறது. போர்க்கால நெருக்கடிகள் ஒரு உள் மனிதராக மட்டுமே வாழ்ந்து கொண் டிருந்த தமிழர்களை அவர்களுக்குத் தொடர்பு இல்லாத ஒரு புதிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் உல கத்தை நோக்கி, கழுத்தைப் பிடித்துத் தள்ளி, தமிழரை நவீ னப்படுத்தி விடுவதை நாம் உணர முடிகிறது. தமிழரின் வாழ்க்கை நவீன மயப்படுத்தப்பட்டதால் அவர்களது இலக்கி யப் படைப்புகளும் புதிய திசைகளை நோக்கி பயணப்படுப வையாக அமைய நேர்கிறது.

தாமரைச்செல்வியின் இந்த கதைகள் ஜேர்மன் மொழியிலோ, பிரஞ்சு மொழியிலோ, ஆங்கில மொழியிலோ, சீன மொழி யிலோ மொழிபெயர்க்கப்படுமானால் அவை பிற நாட்டு இலக்கியங்கள் எத்தகைய மாற்றங்களை அடைந்தனவோ அத்தகைய மாற்றங்களை ஈழத்துத் தமிழ்ப் படைப்புகளும் அடைந்துள்ளன என்பதை உலகிற்குக் காட்டுவனவாக அமையும்.

தமிழில் படைப்பிலக்கியத்தின் புதிய எல்லைகளை புலம் பெயர் இலக்கியங்கள்தான் நிறுவப் போகின்றன என்று ஈழத்து முன்னோடி எழுத்தாளர் எஸ்.பொ அடிக்கடி என்னிடம் சொன்னது நினைவுக்கு வருகிறது.

ஈழத்து மண்ணில் பிறந்த ஒரு பெண், 50 ஆண்டு காலமாக தங்களது வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களை கதைகளாக தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்ததன் மூல மாக ஒரு மாபெரும் சமூகச் செயல்பாட்டில் ஈடுபட்டு இருக்கி றார்.

இச்சிறுகதைகளின் மூலமாக ஈழத்தின் விவசாய சமூகத்தில் பிறந்த ஒரு பெண்ணின் பார்வையில் தமிழ்ச் சமூகம் அடைந்து வரும் நவீன மாற்றங்கள் இலக்கியப் படைப்புக ளாக ஆவணப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் தாம ரைச்செல்வி தனது சிறுகதைகள் மூலம் தமிழ் வாழ்வியல் குறித்த ஓர் இலக்கிய சாட்சியத்தை உருவாக்கி இருக்கிறார்.

ஈழத்து சமூக வாழ்க்கையிலும், தனிமனித வாழ்க்கையிலும் அரசியல் நெருக்கடிகளின் காரணமாக ஏற்படும் அந்தரங்க சவால்கள் மிக நுட்பமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை மானுட குலத்தின் மிக முக்கியமான ஆவணங்களாகத் திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.



indran@thaiveedu.com

# தாமரைச்செல்வியின் ஓவியங்களுட் சில...



எழுதித்தீராப் பேனாவின் அரை நூற்றாண்டு



# அங்கிருந்த துயர வாழ்வுதான் என் எழுத்துகளாக வெளிவந்தது...
## - தாமரைச்செல்வி

நேர்காணல் : சேகர் தம்பிராஜா

இயற்கையின் எழிலும் வயல்வெளிகளும் குருவிகள் பறவைகளின் பாட்டுச் சத்தங்களையும் கடந்து இரு வேறு கண்டங்களில் இருந்து இருவேறு நேர - காலநிலை இடைவெளிகளில் இருந்து பேசிக்கொள்கிறோம்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் வானொலிக்கு 'இசையும் கதையும்' நிகழ்ச்சிக்கு எழுதவேண்டும் என தொடங்கிய ஆசையானது இன்று ஐம்பது வருடங்கள் கழித்து இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பல நாவல்களையும் எழுதி முடித்து இன்றும் எழுதிக்கொண்டிருக்க வைத்திருப்பது என்பது தாமரைச்செல்வி என்கிற படைப்பாளியின் படைப்புகளில் இருக்கின்ற யதார்த்த தன்மை. உங்கள் எழுத்துக்கள் ஏதோவொரு வகையில் எமது சொந்தங்களின் கதையாகவோ அன்றி எமது சுற்றத்தின் வாழ்வியலையோ, முப்பதாண்டுப் போரையும் அது தந்த வலியையும் பதிவு செய்ததாகவோ இருந்து வந்துள்ளது. கடின சொல்லாடலோ படிமங்களோ ஏதும் இன்றி இலகு மொழியில் அந்த வட்டாரம் அல்லது அந்த இடத்தில் பேசிக்கொள்ளும் மொழி வழக்கைப் பயன்படுத்தி படைப்பை வாசகர்களிடம் சேர்க்கும் வித்தை தெரிந்தவர் நீங்கள்.

அதனாற்தான் உங்களது படைப்புகள் பலவற்றிற்கு வாசகர்கள் விருதுகளையும் தாண்டி சாஹித்ய மண்டல, இலக்கிய அமைப்புகள், மாகாண விருதுகள் போன்ற நிறுவன விருதுகளையும் பெற்றுள்ளன. மேலாக பல கதைகள் குறும்படங்களாக தயாரிக்கப்பட்டும் உள்ளன.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் குமரபுரம் கிராமத்தில் சுப்பிரமணியம் இராசம்மா இணையரின் தலைமகளாக பிறந்த ரதிதேவி என்கிற தாமரைச்செல்வி அவர்கள் தனது இளம் பராயத்தில் இருந்தே எழுதி வருபவர். தாமரைச் செல்வி என்கிற பெயரானது அவரது படைப்புகளால் பேசப்பட்டு வந்துள்ளது. ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான தாமரைச்செல்வி என்கிற ரதியக்காவை அல்லது பெரியக்காவை தாய்வீடு இதழுக்காக நேர்காணல் செய்யக்கிடைத்தது பெருமகிழ்சியே.

அந்த மகிழ்ச்சியுடன்

- **உங்களுடனான நேர்காணலை உங்களோடு அறிமுகமான நேரத்தில் இருந்து தொடங்கலாம் என இருக்கிறேன். இன்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர், முன்பின் தெரியாதவர்களாக நாம் அறிமுகமான பொழுது நீங்கள் பயன்படுத்திய சொல்லாடல்களை உங்கள் படைப்புகளிலும் காணலாம். உதாரணமாக 'இரன் அப்பன்', 'நிண்டு சாப்பிட்டிட்டுப் போவன்' போன்ற சொல்லாடல்கள் பயன்படுத்துவதன் மூலம் வாசகர்களை படைப்போடு ஒன்றிக்க வைக்க முடியும் என்பது உங்கள் நோக்கமா?**

எமக்குரிய இயல்பு என்று ஒன்று இருக்கும். அதை நடைமுறை வாழ்க்கையில் நாம் பின் பற்றி வாழ்வோம். அது எம்மை அறியாமல் எம் எழுத்துகளிலும் பிரதிபலிக்கும். என்னுடைய இயல்பு என் பாத்திரங்களிலும் படிந்து கொள்வது தவிர்க்க முடியாத ஒன்று. எனது இயல்பு என் பெற்றோரிடமிருந்து எனக்கு வந்தது என்றுதான் சொல்ல முடியும். என் தந்தை அனைவர் மீதும் அன்பு செலுத்துபவர். ஏழை பணக்காரன் என்று வித்தியாசம் பார்க்க மாட்டார். சகமனிதர்களை நேசிப்பது என்பதை அவரைப் பார்த்துத்தான் நான் கற்றுக் கொண்டேன். என் கதைகளில் வரும் பாத்திரங்களில் அநேகம் பேர் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்பவர்கள். அன்றாடம் உழைத்துப் பிழைப்பவர்கள். அவர்களைப் பற்றி ஒரு மென்மைக் கோணத்திலேயே எழுத வருகிறது. மற்றும்படி இப்படி எழுதினால்த்தான் வாசகர்களை ஒன்ற வைக்கமுடியும் என்று நினைத்து எழுதுவதில்லை. அது இயல்பாய் வருவது.

- **உங்கள் படைப்புகளின் முடிவுகளை வாசகர்களே தீர்மானிக்கும்படி விட்டிருப்பீர்கள். ஒரு மழைக்கால இரவு கதையின் முடிவில் 'அந்த இடத்தில ஒரு கட்டில்லாத கிணறு இருந்ததென்று ஊரவை சொன்னது...'. அவை வாசகர்களையும் முடிவை நோக்கி சிந்திக்க வைக்கும் என்று நம்புகிறீர்களா?**

தனது எல்லாப் படைப்புகளுக்கும் எழுத்தாளர் தீர்வு சொல்லி விடுவதில்லை. அதை மட்டுமே நோக்கமாகக் கொண்டும் எழுதுவதில்லை. சமூகத்தில் நடப்பவற்றை பதிவு செய்வதே எழுத்தாளரின் விருப்பாக இருக்கும். இதுதான் பிரச்சினை,

இப்படித்தான் நடக்கிறது என்று அடையாளம் காட்டுவதாகவே எனது அநேகமான கதைகள் இருக்கின்றன. அதன் விளைவுகளையும் முடிவுகளையும் வாசகர்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்.


நீங்கள் குறிப்பிட்ட ஒரு மழைக்கால இரவு ஒரு முக்கியமான காலகட்டப் பதிவு. 1995-ல் நடந்த வலிகாம இடப்பெயர்வின் வலியைப் பேசும் கதை. ஒரு இரவில் ஐந்து லட்சம் மக்கள் மழை, குளிர் பாராமல் நாவற்குழி பாலம் கடந்து வந்த துயர வரலாறு அது. எறிகணைகளின் அச்சுறுத்தல்களுக்கு நடுவே மக்களோடு மக்களாய் இடம் பெயர்ந்து வந்திருந்த தன் மனைவியையும் குழந்தையையும் பரிதவிப்போடு தேடித் திரியும் ஒரு கணவனின் கதை. இறுதியில் மழை நேர இருளுக்குள் விளிம்பில்லாத கிணற்றுக்குள் அவன் மனைவியும் குழந்தையும் விழுந்து இறந்து போயிருப்பார்கள். அது வாசகர்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் கணவன் அதை அறியமாட்டான். அவன் காலம் முழுவதும் தேடிக் கொண்டே இருக்கப் போகிறான். இந்த நிலை வாசகர்களுக்கு அதிக பாதிப்பையும் வலியையும் தரும். அந்த கணவனின் மீது எல்லையற்ற அனுதாபத்தையும் இரக்கத்தையும் தோற்றுவிக்கும். இப்படியான நிலையில் எத்தனை பேர் அலைவுற்றிருப்பார்கள் என்ற வேதனை முன்நிற்கும். அந்த உணர்வை வாசகர்களுக்கு இக் கதை கொடுத்திருக்கும் என்றே நம்புகிறேன்.















- **ஒரு படைப்பாளி சிறந்த படிப்பாளராக இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். உங்கள் வாசிப்பு அனுபவம் பற்றிக் கூறுங்கள். உங்கள் ஆரம்பகால வாசிப்பில் உங்கள் தெரிவாக எவை எவை இருந்தன?**

ஒன்பது பத்து வயதிலிருந்தே வாசிக்கத் தொடங்கியிருந்தேன். வாசிக்கும் ஆர்வம் அந்த சின்ன வயதிலிருந்தே எப்படி வந்தது என்று தெரியவில்லை. சகுந்தலை சரிதை, வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகள், அம்புலிமாமா போன்றவையோடுதான் ஆரம்பித்தேன். அந்த நாட்களில் தெரிவு செய்து வாசிக்கும் அளவுக்கு பக்குவம் இருந்ததில்லை. எல்லாக் கதைகளுமே நல்லதாக இருக்கும். இந்த இந்தக் கதைகள்தான் நல்ல கதைகள் என்ற புரிதலும் இருக்காது. அதனால் கிடைத்தவைகள் எல்லாவற்றையும் வாசிப்பேன். அரச கதைகள் வாசிப்பதில் பெரு விருப்பம் இருந்தது. அரண்மனை, மாடமாளிகைகள், அரசர்கள், அரசிகள், அவர்களின் வீரம் மிக்க வாழ்க்கை என்று விரிந்த உலகம் ஈர்ப்பைத் தந்தது. அந்த வாசிப்பு நல்லதொரு அனுபவத்தைத் தந்தது. பிறகு அதிலிருந்து யதார்த்த வாசிப்புக்கு வந்தபோது லஷ்மி, சிவசங்கரியோடு ஆரம்பித்தேன். ஈழத்தில் இளங்கீரனின் எழுத்துகள்தான் முதலில் அறிமுகமானது. அதன் பிறகு தொடர்ச்சியாக ஈழத்து எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கினேன். வீரகேசரி பிரசுரங்களாய் வந்த அத்தனை நாவல்களும் படித்திருக்கிறேன். என் வாசிப்பில் மொழிபெயர்ப்பு நாவல்களும் இடம் பிடித்தன. தாய் நாவலில் தொடங்கி காண்டேகரின் பல மொழிபெயர்ப்பு நாவல்கள் வாசித்திருக்கிறேன். அவை இன்னொரு விதமான அனுபவத்தைத் தந்தது. நாம் அறியாத பிரதேசங்களுக்குப் போய் அறியாத மக்களோடு வாழ்ந்தது போன்ற அனுபவம் அது. வாசிப்பு என்பது அதுதானே. மற்றவர்களின் வாழ்வனுபவங்களை எங்களுக்கானதாகவும் மாற்றுவது. தெரிவு என்று இல்லாமலேயே கிடைத்த எல்லாவற்றையும் வாசித்திருக்கிறேன் என்றுதான் சொல்ல முடியும்.




**▸ ஈழத்து இலக்கியங்கள் போரின் அவலங்கள் பற்றி மட்டுமே பேசுகின்றன. அதைத் தாண்டிய மற்றைய விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படுவதில்லை என்ற விமர்சனங்கள் எழுகின்றனவே. அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அப்படி ஒரு விமர்சனம் இப்போது பரவலாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. முப்பது ஆண்டுகள் போருக்குள் பல இழப்புகளின் மத்தியில் வாழ்ந்த மக்கள் அவைகளை சுலபமாக மறந்து போக மாட்டார்கள். போரின் பின்னால்கூட அந்த வேதனைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. வாழ்வோடு போராடிய மக்களின் துயர் முழுவதுமாக எழுதப்பட்டு விட்டனவா என்ற கேள்வியும் முன்நிற்கிறது அல்லவா. ஒவ்வொருவரிடமும் எத்தனை எத்தனை கதைகள் இருக்கும். அவைகளைப் பதிவு செய்து வைப்பதும் ஒரு படைப்பாளியின் கடமைதான். இப்போதுள்ள வாழ்க்கை நிலையில் கூட கடந்து போன போர்க் காலத்தின் சுவடுகள்தான் பதிந்து போயிருக்கின்றன. அதன் விளைவுகளை இன்னமும் மக்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். போருக்குள் வாழாதவர்கள் கூட தமது உறவினர், ஊரவர் இழப்புக்களை எழுதிக் கடக்கத்தான் நினைக்கிறார்கள். மேற்படி விமர்சனத்தை முன்வைப்பவர்கள் மிக சிறு பகுதியினரே. அது அவர்களின் கருத்து. ஆனால் எதை எதை எழுத வேண்டும் என்று படைப்பாளிதான் தீர்மானிக்கிறார். அது நிலைத்து நிற்குமா நிற்காதா என்பதை காலம் தீர்மானிக்கும்.

**▸ போர்க்காலத்திலும் சரி போருக்குப் பிந்திய காலத்திலும் சரி பெண்கள் எதிர் கொண்ட பிரச்சினைகள் என்று எவைகளைக் கூறுவீர்கள்? அவற்றை எப்படி அவர்கள் சமாளித்தார்கள் ?**

எக்காலத்திலும் ஒரு குடும்பத்தைப் பொறுத்தவரை அதிக பொறுப்புக்களை சுமப்பவர்களாக பெண்களே இருக்கிறார்கள். விடிந்தால் இருளும் வரை நடக்கும் அத்தனை விஷயங்களுக்கும் முகம் கொடுப்பவள் பெண்தான். கணவன்மார் இருக்கும் குடும்பங்களில் கூட ஒரு பெண்ணே குடும்பத்தை வழி நடத்துபவளாக இருக்கிறாள். போர்க் காலம் இன்னும் அதிக துயரங்களைத் தந்த காலமாக இருந்தது. ஆண்களுமே வெளியே சென்று உழைக்க முடியாத சூழலில் அன்றாட உணவுக்கு வழி செய்வதே பெண்களுக்கான முதன்மைப் பிரச்சினையாக இருந்தது. கஞ்சி காய்ச்சியேனும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை பெண்களின் கைகளிலேயே விழுந்திருந்தது. அந்த நாட்களில் என்னைச் சுற்றியிருந்த பல பெண்களைப் பார்த்திருக்கிறேன். வீடு வாசல் இழப்பு, இடப்பெயர்வு, போன்ற நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம். படிப்பு குறைந்த பெண்கள் கூட தங்கள் தைரியத்தைக் கைவிடாமல் ஏதேனும் ஒரு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள். தையல் வேலை செய்தோ, வசதியானவர்கள் வீட்டில் போய் சமையல் வேலை செய்தோ, சந்தைகளில் சிறு வியாபாரம் செய்தோ வருவாய் பெற்று குழந்தைகளை வளர்த்திருக்கிறார்கள். எது வந்தாலும் சமாளிக்கலாம் என்ற தைரியத்தை சூழல் அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. போருக்குப் பின்னரான காலங்களிலும் அந்த தைரியமே அவர்களின் வாழ்வை தொடர்ந்து வழி நடத்தியது. கணவன்மாரை இழந்த பெண்

கள் அடுத்தவரை சார்ந்து இருக்கும் நிலை இல்லாமல் தாமே தனித்து நின்று வாழ்வை எதிர்கொள்கிறார்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையை இறுகப் பற்றிக்கொண்டு போராடுகிறார்கள். அப்படி பல பெண்களை சமகாலத்தில் நம்மால் பார்க்க முடிகிறது.

**▸ உங்கள் நூல்களை ஒரு பதிப்பகம் அன்றி காலத்துக்குக் காலம் பல்வேறு பதிப்பகங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. ஈழத்து இலக்கிய உலகில் பதிப்பகங்களின் பங்கு அன்றும் இன்றும் எந்த நிலையில் இருந்திருக்கின்றன?**

எனது முதலாவது நாவலான சுமைகள் வீரகேசரிப் பிரசுரமாக வந்தது. அந்த நாட்களில் வீரகேசரிப் பிரசுரங்களுக்கு வாசகர் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பு இருந்தது. பல எழுத்தாளர்களின் நாவல்களை வீரகேசரி தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது. அந்தந்தக் கால சூழலைப் பேசிய அந்நூல்கள் பெறுமதி மிக்க ஆவணங்களாக இன்றைக்கும் பேசப்படுகின்றன. எனது விண்ணில் அல்ல விடிவெள்ளி, தாகம், வேள்வித்தீ மூன்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள திரு. டேவிற் லிகோரி அவர்களின் மீரா வெளியீடு மூலம் வெளிவந்தது. அப்போது மீரா வெளியீடுகளும் வாசகர்களின் கவனத்தைப் பெற்றிருந்தன. அன்றைய போர்ச் சூழலில் பொருளாதாரத் தடைகள் மத்தியில் அச்சடிக்கும் காகிதங்கள் கிடைக்காத போதுகூட கொப்பித் தாள்களில் அச்சடித்து வெளிட்டு வந்திருக்கிறார். மீரா வெளியீடுகள் ஒவ்வொன்றையும் நெருக்கடி காலத்து ஆவணங்களாக பார்க்கமுடிகிறது. 1988-ம் ஆண்டு செங்கை ஆழியானின் மழைக்காலம் நாவலிலிருந்து தொடங்கி வருடத்துக்கு நான்கு நூல் என்ற வகையில் தொண்ணூற்றியாறு வரை கிட்டத்தட்ட முப்பது நூல்களுக்கு மேல் வெளியிட்டிருந்தது. இது எத்தனை பெரிய சாதனை. இலக்கியத்தின் மீதான அதீத நேசிப்பு அவரை இத்தனையையும் செய்ய வைத்திருக்கிறது. ஈழத்து இலக்கியத்துக்கு இத்தனை பங்களிப்பு செய்த டேவிற் லிகோரி அவர்களுக்கு இலக்கிய உலகம் போதிய அங்கீகாரம் கொடுக்கவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

எனது வீதியெல்லாம் தோரணம், வன்னியாச்சி இரண்டு நூல்களையும் ஆ. இரத்தினவேலோனின் கொழும்பு மீரா பதிப்பகம் வெளியிட்டது. மீரா பதிப்பகமும் தொடர்ச்சியாக பல நூல்களை பதிப்பித்து வெளியிட்டிருந்தது. 1998 மே மாதம் புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின் புதிய பயணம் நூலுடன் தொடங்கி 2014 மே மாதம் சமரபாகு சீனா உதயகுமாரின் சித்திரா ரீச்சர் நூல் வரை மொத்தம் 104 நூல்களைப் பதிப்பித்து சாதனை புரிந்தது. பல இளம் எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டு கவனம் பெற வைத்தது.

ஒரு மழைக்கால இரவு சிறுகதைத் தொகுப்பை தேசிய கலை இலக்கியப் பேரவையும் எங்கள் சொந்தப் பதிப்பகமான சுப்ரம் பிரசுராலயமும் இணைந்து வெளியிட்டது. சுப்ரம் பிரசுராலயம் மூலம் அழுவதற்கு நேரமில்லை, பச்சை வயல் கனவு, உயிர்வாசம் ஆகிய மூன்றும் வெளிவந்தது. எக்காலத்திலும் எழுத்தாளருக்கு தன் எழுத்துக்களை நூலாக்கி வெளியிடுவதில் பெரும் சிரமமே இருந்திருக்கிறது. சில எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களை தாமே அச்சிட்டு வெளியிட்டு நட்டப்பட்ட வரலாறு நிறைய இருக்கிறது. அதே நேரம் சில பதிப்பகங்கள் லாப நட்டம் பார்க்காமல் எழுத்தாளர்களுக்கு ஆதரவாக பதிப்பித்துக் கொடுத்ததும் நடந்திருக்கிறது.

மல்லிகைப்பந்தல், ஞானம் வெளியீடு, குமரன் புத்தக இல்லம், பூபாலசிங்கம் புத்தகசாலை, சேம மடு பொத்தகசாலை, கொடகே நிறுவனம், போன்றவை நிறைய நூல்களை வெளிக்கொணர்ந்திருந்தன. செங்கை ஆழியானின் கமலம் பதிப்பகமும் கணிசமான நூல்களை வெளியீடு செய்தன. இன்றைய காலகட்டத்தில் மைக்கேல் கொலினின் மகுடம், க. பரணிதரனின் ஜீவநதி, வசீகரனின் எங்கட புத்தகங்கள் ஆகிய பதிப்பகங்கள் தொடர்ச்சியாக நூல்களை பதிப்பித்து வெளியிட்டு வருகின்றன. இப்போது வெளியீட்டுத் துறையில் ஒரு ஆரோக்கியமான சூழலைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. வேறு பதிப்பகங்களும் இருக்கக்கூடும். என் பார்வைக்கு எட்டியவை பற்றியே கூறுகிறேன்.

**▸ உங்கள் முதல் நாவல் சுமைகள். கடைசியாக வந்த நாவல் உயிர்வாசம். இரண்டுக்கும் இடையே நாற்பது ஆண்டுகளுக்கு மேலான இடைவெளி இருக்கிறது. இந்த கால இடைவெளி அனுபவம் சார்ந்து உங்களுக்குள் என்ன உணர்வைத் தந்திருக்கிறது ?**

நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் எழுதிய நாவல் சுமைகள். 1977-ல் வீரகேசரிப் பிரசுரமாக அது வெளிவரும் போது எனது வயது இருபத்திநாலு. என் ஆரம்ப நிலையில் அனுபவமும் ஆற்றலும் அதிக அளவில் இல்லாத போதும் நான் நன்கு அறிந்த சூழல், பழகிய மனிதர்கள், பரிச்சயமான வாழ்க்கை முறை என்று சில சாதகமான அம்சங்கள் இருந்தபடியால் ஓரளவு என்னால் இயல்பாக எழுத முடிந்தது. இன்றைக்கு சுமைகள் நாவலை வாசிக்கும் போது இன்னமும் நன்றாக எழுதியிருக்கலாமோ என்று தோன்றும். அன்றைய தருணம் அப்படித்தான் எழுத முடிந்திருக்கிறது. உயிர்வாசம் வேறு விதமான அனுபவத்தை தந்தது. புதிய களத்தை பதிவு செய்த நாவல் இது. மிகுந்த கவனத்துடன் எழுதவேண்டியிருந்தது. அதற்கு என் நாற்பது வருட கால அனுபவம் நாவலை செம்மைப்படுத்தி எழுத எனக்கு கைகொடுத்திருந்தது. இரண்டு நாவல்களுக்கும் இடையே ஐந்து நாவல்களை எழுதியிருந்தேன். எங்களுக்கான அனுபவங்கள் எழுதும் தன்மையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றே நம்புகின்றேன். என் எழுத்தின் வழி நானும் அதை உணர்கிறேன். வாசகர்களும் அதையே உணர்வார்கள் என்றும் நம்புகிறேன்.

**▸ யுத்தம் தின்ற பூமி என்ற சொற்றொடருக்குப் பின்னால் உள்ள வலிகளை பல படைப்புகளில் தந்திருக்கிறீர்கள். அந்த உணர்வை எப்படி உள்வாங்கியிருந்தீர்கள்?**

யுத்தம் தின்ற பூமி என்ற சொற்றொடரின் பின்னால் எத்தனை வலி உண்டு என்று அங்கு வாழ்ந்தவர்களுக்குத் தெரியும். முப்பது வருட போர்க்கால வாழ்வு. எங்கள் பிரதேசம் உழைக்கும் மக்களைக் கொண்டது. ஊருக்கே உணவளிக்கும் விவசாயிகள் வாழும் பிரதேசம். அவர்களையே பசி பட்டினியோடு அலைய வைத்தது. நானும் அந்த மண்ணில் அந்த மக்களோடு ஒருத்தியாகத்தான் வாழ்ந்திருந்தேன். வீடு வாசல் விட்டு இடம் பெயர்ந்து ஓடுவதும் ஊர் ஊராக ஏதிலிகளாக அலைவதும் இராணுவம் எரித்துவிட்டுப் போன வீடுகளுக்கு மறுபடி திரும்புவதுமாக அன்றைய வாழ்க்கை இருந்

தது. ஏராளம் துயரக் கதைகளை உள்ளடக்கிய பூமி அது. நான் காண நேர்ந்தவை, பிறர் சொல்லக் கேட்டு அறிந்தவை என்று அங்கிருந்த துயர வாழ்வுதான் என் எழுத்துகளாக வெளி ஸ்ரீவந்தன. எழுத்தில் இறக்கி வைத்து ஆற்றுப்படுத்திக் கொண்ட நேரங்களாக அவை இருந்தன. நானுமே அனுப வித்து உள் வாங்கிய அனுபவங்கள் அவை.

► **வன்னி மண்ணின் வாழ்வியலையும் இடப்பெயர்வின் துயரங்களையும் மக்கள் அலைக்கழிக்கப்பட்ட வேத னைகளையும் உங்கள் கதைகள் தொடர்ச்சியாக பதிவு செய்து கொண்டே வந்திருக்கின்றன. இடப்பெயர் வுக் காலங்களிலும் இலக்கியத்தோடு இணைந்தி ருந்த அனுபவங்கள் பற்றிக் கூறுங்கள் ?**

ஆனையிறவிலிருந்து இராணுவம் முன்னேறி வரும்போது வீடு வாசல் விட்டு தூர இடங்களுக்கு சென்று தங்குவோம். இராணுவம் திரும்ப தமது முகாமுக்கு போன பின் வீடுக ளுக்கு திரும்பி வருவோம். அநேகமான காலங்கள் இப்படித் தான் நடந்திருக்கிறது. ஆனால் 1996 ஜூன் மாதத்திலிருந்து நீண்ட ஒரு இடப்பெயர்வு ஏற்பட்டது. கிளிநொச்சி நகரத்திலி ருந்து முற்றாக மக்கள் எல்லோரும் வெளியேறி ஆறு வருடங் கள் வெவ்வேறு இடங்களில் வசிக்க நேர்ந்தது. அப்போது நாங்கள் அக்கராயனில் உள்ள ஸ்கந்தபுரம் என்னும் கிராமத் தில் உறவினர் வீட்டுக் காணியில் கொட்டில் போட்டுக் கொண்டு இருந்தோம். யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் பல எழுத்தாளர்கள் வன்னிக்கு வந்திருந்தார்கள். நிறைய எழுத் தாளர்கள், பல இலக்கிய ஆர்வலர்கள் அக்கராயனிலும் வந்து இருந்தார்கள். வந்தவர்கள் வாசகர் வட்டம் என்ற அமைப்புத் தொடங்கி இலக்கியம் பேசும் களத்தை உருவாக் கினார்கள். காலச்சுவடு, மூன்றாவது மனிதன், சரிநிகர் போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகளை ஆளுக்கு ஒன்றாக எடுப்பித்து ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொடுத்து வாசிப் போம். மாதம் ஒரு தடவை யாராவது ஒருவர் வீட்டு முற்றத்தில் ஒன்று கூடி வாசிப்பு அனுபவங்களை பகிர்ந்து கொள்வோம். இருப்பதற்கு கதிரைகள் கூட கிடையாது. மரச் சட்டங்களி னால் அமைக்கப்பட்ட இருக்கைகளிலும் மரக்குற்றிகளிலும் அமர்ந்து இலக்கியம் பேசுவோம். கிடுகுகளினால் வேயப்பட்ட கொட்டில்களில் மின்பிறப்பாக்கிகளின் உதவியுடன் நல்ல திரைப்படங்கள் பார்ப்போம். சத்தியஜித்ரே, மிருணாள் சென், பாரதிராஜா, படங்களோடு அகிரா குரோசாவாவின் குறும்ப டங்கள், எல்லாம் பார்த்திருக்கிறோம். பார்த்து முடிய படங் கள் பற்றிய கலந்துரையாடல்கள் நடக்கும். இவை தவிர பல எழுத்தாளர்களுடைய நூல் வெளியீடுகளும் நடந்திருக்கின் றன. என்னுடைய ஒரு மழைக்கால இரவு, அழுவதற்கு நேர மில்லை சிறுகதைத் தொகுப்புகளின் வெளியீட்டு விழா அங் குதான் சிறு கொட்டிலில் நடந்தது. அதிகம் நாம் அலைவுற்ற நாட்களும் அவைதான். அதிகம் நான் எழுதிய நாட்களும் அவைதான். இருபது சிறுகதைகள், இரண்டு நாவல்கள் என்று எழுதிய காலங்கள் அவை. போர் சூழ்ந்த நிலத்தில் உயி ருக்கு உத்தரவாதமற்ற பொழுதுகளில் இலக்கியத்தோடு இணைந்திருந்த நினைவுகள் மறக்க முடியாதவை.

► **இன்றைய இலக்கியச் சூழலில் புதிது புதிதாக உத்தி முறைகள், உருவாக்கத்தன்மை என்று நவீனத்துவம் சார்ந்து எழுதப்படும் படைப்புக்களைப் பார்க்கிறோம். இந்தப் புதிய இலக்கியப் போக்கு குறித்து உங்கள் பார்வை என்ன? உங்கள் படைப்புகளில் எவ்வளவு தூரம் இவற்றை உள்வாங்கியிருக்கிறீர்கள்?**

கால மாற்றத்தில் ஏற்படும் சிந்தனைகள் பதிய களங்களை அறிமுகப்படுத்தும். இன்றைய இலக்கியம் புதிய உத்திகளு டனும் புதிய சொற்றொடர்களுடனும் வித்தியாசமான பார்வை யில் வெளி வருவதைப் பார்க்கிறோம். முந்திய தலைமுறையி னருடன் ஒப்பிடும் போது இன்றைய தலைமுறையினர் எம் மண்ணின் படைப்புக்களை மட்டுமின்றி உலக இலக்கியங்க ளையும் அதிகம் வாசிப்பவர்களாக இருக்கிறார்கள். இந்த பரந்த வாசிப்பு பல வாசல்களைத் திறந்து விடுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி வாசகர்களை பல களங்களுக்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்கிறது. அந்த வாசிப்பனு பவம் எழுத்துகளிலும் பிரதிபலிக்கவே செய்யும். இப்போது



எழுதும் பலரின் எழுத்துகள் இரசனையான வாசிப்புக்கு ஏற்றதாகவே இருக்கிறது. சமூகத்திற்கான நன்மைகளை ஏற்படுத்தும் படைப்புக்களாக அவை இருந்தால், அவற்றை நாம் வரவேற்கலாம். காலத்தோடு நிகழும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. பல இளம் எழுத்தாளர்கள் நம்பிக்கை தருபவர்களாக இருப்பது மகிழ்வுக்குரியது.

என்னுடைய எழுத்துகள் மிகவும் எளிமையானவை. ஆரம்ப நாட்களிலிருந்து இன்றுவரை அதே எளிமையான நடையில் தான் எழுதி வருகிறேன். என் வாசிப்பு அனுபவமும் என் எழுத்து அனுபவமும் என் எழுத்து நடையை சிறிதேனும் செம்மைப்படுத்தியிருக்கக்கூடும். எனது எளிமையான கதை சொல்லலை விரும்பி வாசிக்கும் இளம் தலைமுறையினரும் இருக்கிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சி தரும் விஷயமே.

▸ **ஈழ இலக்கியச் சூழலில் ஒவ்வொரு கால கட்டத்திலும் பல்வேறு இலக்கிய அமைப்புகள் தமக்கென சில கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஓர் அமைப்புடன் இணைந்து நீங்கள் செயல்பட்டிருக்கிறீர்களா?**

நான் எழுத ஆரம்பித்த காலங்களிலிருந்து பல்வேறு இலக்கிய அமைப்புகள் இயங்கி வந்தது பற்றி அறிந்திருக்கின்றேன். அவைகளின் செயற்பாடுகள் பற்றிய செய்திகளையும் பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றேன். ஆயினும் அவைகளுடனான அறிமுகத்தை நான் ஏற்படுத்திக் கொண்டதில்லை. அப்படி செய்ய வேண்டும் என்று தோன்றவும் இல்லை. எங்கள் ஊரிலோ உறவிலோ எழுத்தாளர்கள் என்று யாரும் இருந்ததில்லை. வெளியுலகுடன் அதிக அளவு தொடர்புகளையும் நான் வைத்துக் கொண்டதில்லை. என் சூழ்நிலை அதற்கு காரணமாக இருந்திருக்கலாம். வீட்டுக்குள் இருந்தபடியே எழுத்தில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தேன். 'எந்த அமைப்புகளுடனும் சாராமல் சுயமாக தனித்து இருந்து தாமரைச்செல்வி எழுதி வந்திருக்கிறார். அதனால் அவரின் எழுத்துக்கள் விமர்சகர் பார்வையில் கவனம் பெறச் சில காலம் தாமதமானது. ஆனாலும் அவர் அது பற்றிக் கவலைப்படாமல் தன் எழுத்துப் பணியை தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்' என்று ஒரு விமர்சகரின் பதிவு அன்று வந்திருந்தது. அதை எனக்கான பாராட்டாகவே எடுத்துக் கொண்டு தொடர்ந்து எழுதி வந்திருக்கிறேன்.

▸ **விமர்சனங்கள் என்பது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டுமேயன்றி ஏப்பம் விடுவதாக இருக்கக்கூடாது என கூறுவார்கள். உங்கள் படைப்புகள் மீதான விமர்சனகளை எப்படி எதிர் கொள்கிறீர்கள்?**

ஒன்றை எழுதும்வரைதான் அது எழுதியவருக்குச் சொந்தமானது. வெளிவந்த பின் அது வாசகருக்கானது. ஒவ்வொரு வாசகருக்குள்ளும் விமர்சகரும் இருப்பார்கள். ஒரு படைப்பை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பார்வை இருக்கும். உணரும் விதத்திலும் வித்தியாசம் இருக்கும். எனது கதைகளுக்கு எதிர்மறை விமர்சனங்கள் ஒருபோதும் வந்ததில்லை. மாறாக இன்னும் செம்மைப்படுத்தி எழுதியிருக்கலாம், சொல்ல வந்த விஷயத்தை இன்னும் அழுத்தமாக பதிவு செய்திருக்கலாம் என்று ஓரிரண்டு தடவை சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்பட்டவைகளை நான் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அவர்களின் கருத்து இன்னமும் செம்மைப்படுத்தி எழுத எனக்கு ஊக்கமாய் அமைந்திருக்கிறது. மற்றும்படி எனது எழுத்துகளுக்கு அன்றிலிருந்து இன்றுவரை நல்ல விமர்சனங்களே கிடைத்து வருகின்றன. தாமரைச்செல்வியின் எழுத்துக்கள் எளிமையானவை. ஆனால் வலிமை மிகுந்தவை என்ற பார்வையே பலரிடம் இருக்கிறது. இந்த கருத்தை பல விமர்சகர்களும் வாசகர்களும் பதிவு செய்திருக்கிறார்கள்.

▸ **இலக்கியப் பணியில் ஐம்பது வருடங்களை நிறைவு செய்திருக்கிறீர்கள். இந்த பயணத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்? இப்போது உங்கள் இலக்கியச் செயற்பாடு என்னவாக இருக்கிறது ?**

என் ஐம்பது வருட இலக்கியப் பயணத்தை இன்றைக்கு நினைத்துப் பார்க்கும் போது வியப்பையும் மகிழ்வையுமே தருகிறது. எங்களுடையது ஒரு விவசாயக் குடும்பம். குடும்பத்தில் மூத்த பெண் என்ற வகையில் எனக்கு வேலைச் சுமைகள் அதிகம். வீட்டில் பெரும் சமையல் இருக்கும். அதைச் செய்து கொண்டேதான் வாசிக்கவும் எழுதவும் நேரத்தைத் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. முப்பது வருட போர்க்கால வாழ்வில் எத்தனையோ நெருக்கடிகள், இடப்பெயர்வுகள், அலைக்கழிப்புகள் என்று வந்த போதும் தொடர்ந்து எழுதி வந்ததென்பது பெரிய விஷயமாகத்தான் எனக்கே தோன்றுகிறது. என் பெற்றோர், கணவர், சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள் என்று எல்லோருமே ஒவ்வொரு காலகட்டத்திலும் என்னோடு இணைந்து நின்று என்னை எழுதவைத்தார்கள். நெருக்கடி மிகுந்த காலங்களில் எல்லாம் எனது வேலைச் சுமைகளை தங்கள் தோள்களிலும் பகிர்ந்து கொண்டு எழுத எனக்கு நேரம் ஒதுக்கித் தந்தார்கள். என் கணவருக்கும் இலக்கியத்தில் ஈடுபாடு உண்டு. நிறைய வாசிப்பார். எழுபதுகளில் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு சிறுகதைகள், கவிதைகள் எழுதியிருக்கிறார். எனது எழுத்தின் ஆர்வத்தை அவரால் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. அவரது ஆதரவு எனக்கு கூடுதல் பலத்தைத் தந்திருக்கிறது. என் எழுத்துப் பணிக்கு என் மொத்தக் குடும்பத்தவரின் ஆதரவு கிடைத்ததால்த்தான் என்னால் தொடர்ந்து எழுத முடிந்திருக்கிறது என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போதைய செயற்பாடு என்றால், இந்த வருடமும் இரண்டு சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். இரண்டாயிரத்து ஒன்பதிலிருந்து இந்த வருடம் வரை எழுதிய சிறுகதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதினான்கு சிறுகதைகளைக் கொண்ட ஒரு சிறுகதைத் தொகுப்பாக, சின்னாசிக் கிழவனின் செங்காரிப்பசு என்ற தொகுப்பு எதிர் வெளியீடாக இம்மாதம் வெளிவருகிறது. இது எனது பன்னிரண்டாவது நூலாகும். இனிமேலும் எனது எழுத்துப்பணி தொடரும் என்றே நம்புகிறேன்.

என் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நன்றி. வணக்கம்.



sekar.thambyrajah@thaiveedu.com



எழுதித்தீராப் பேனாவின் அரை நூற்றாண்டு

# வன்னியாச்சி தாமரைச்செல்வி, கங்காரு நாட்டின் படகு மனிதர்களை நோக்கி நகர்ந்த கதை!

- லெ. முருகபூபதி

தாமரைச்செல்வியின் முதல் நாவல் சுமைகள் வீரகேசரி பிரசுரமாக வெளியானபோது, அவருக்கு 24 வயதுதான்! இந்த சுமைகள் நாவலுக்கு பின்னாலும் ஒரு கதை இருக்கிறது. அதனைப் பின்னர் சொல்கின்றேன்.

1970-களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் கூட்டணி அமைத்து அரசாங்கம் அமைத்தபொழுது, இந்தியாவிலிருந்து புற்றீசலாக வந்து குவிந்த தரமற்ற வணிக இதழ்கள் மீது கட்டுப்பாடு வந்ததை வீரகேசரி நிறுவனம்தான் தக்கமுறையில் பயன்படுத்திக்கொண்டு வீரகேசரி பிரசுரங்களை வெளியிட்டது.

முதலில் திருகோணமலையிலிருந்து எழுதிக்கொண்டிருந்த நா. பாலேஸ்வரியின் 'பூஜைக்கு வந்த மலர்' வெளியானது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் முன்னணி எழுத்தாளர்கள் பலரின் நாவல்கள் வீரகேசரி பிரசுரமாக வந்தன. செங்கை ஆழியான், டானியல், அ. பாலமனோகரன், தெணியான், அருள். சுப்பிரமணியம், செ. கதிர்காமநாதன், வ.அ. இராசரத்தினம், யாழ்நங்கை, செம்பியன் செல்வன், தெளிவத்தை ஜோசப்... இவ்வாறு சுமார் 60-ற்கும் மேற்பட்ட படைப்பாளிகளின் நாவல்கள் வெளியாகின.

இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் மலையகத்தில் முன்னர் வாழ்ந்த கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை நாவலும் வெளியிடப்பட்டது. இந்த வரிசையில் நான் பார்த்த நாவல் தாமரைச்செல்வி எழுதியிருந்த சுமைகள்.

நான் எழுதத்தொடங்கிய 1972-ம் ஆண்டு காலத்தில் பல புதிய படைப்பாளிகள் தோன்றினர். அவர்களில் சில பெண் படைப்பாளிகள், இலங்கை வானொலியில் இசையும் கதையும் எழுதிக்கொண்டிருந்தார்கள். மாலை வேளைகளில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில், சில கதைகளை தாமரைச்செல்வி எழுதியிருந்தார். கதைக்குப் பொருத்தமான சில சினிமா பாடல்களும் ஒலிக்கும். இந்த நிகழ்ச்சிக்கு அக்கால கட்டத்தில் சிறந்த வரவேற்பிருந்தது. நேயர்களின் கடிதங்களிலிருந்து அந்த வரவேற்பை தெரிந்துகொள்ள முடியும்.

ஆனால், சினிமா பாடல்களுடன் அச்சிறுகதைகள் ஒலிபரப்பப்பட்டதால் அவற்றின் தரம் குறைந்துவிடுகிறதோ...? என்றும் நான் எண்ணியதனால், இசையும் கதையும் நிகழ்ச்சியில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆயினும் பல எழுத்தாளர்கள், குறிப்பாக பெண்கள் பலர் இலக்கியத்துறைக்கு அறிமுகமானார்கள். அவர்களில் குறிப்பிடத்தகுந்த ஒருவர் தாமரைச்செல்வி. காரணம் அவர் இசையும் கதையும் நிகழ்ச்சிக்கு எழுத ஆரம்பித்து சுமார் ஒரு வருட காலத்திலேயே அதிலிருந்து மீண்டுவிட்டார்.

இவருடைய முதல் சிறுகதை ஒரு கோபுரம் சரிகிறது வீரகேசரியில் வெளியானபொழுது, 1974-ம் ஆண்டு பிறந்துவிட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளியான இதழ்களில் தாமரைச்செல்வியின் சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின.

ஆனந்தவிகடன், குங்குமம், மங்கை, இதயம் பேசுகிறது முதலான தமிழக இதழ்களிலும், இலங்கையில் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், தினக்குரல், மல்லிகை, சிரித்திரன், சுடர், வெளிச்சம், நாற்று, ஞானம், மாணிக்கம், கலாவல்லி, களம், தாரகை, ஆதாரம், கிருதயுகம், விளக்கு, அமிர்தகங்கை, பெண்ணின்குரல், தாயகம், வளையோசை, மாருதம், ஜீவநதி, யாழ்மதி, நுட்பம் ஆகியனவற்றிலும் இவரது படைப்புகளை காண முடிந்தது. அத்துடன் பரீஸ் ஈழநாடு, பரீஸ் ஈழமுரசு, எரிமலை, களத்தில், நடு, மெல்பன் எதிரொலி, தாய்வீடு, ஊடறு, வணக்கம் லண்டன், அக்கினிக்குஞ்சு, (அவுஸ்திரேலியா) முதலானவற்றிலும் எழுதி எழுதி ஓயாத கரம் தாமரைச்செல்வியுடையது.

இவ்வாறு கடந்த ஐந்து தசாப்த காலமாக எழுதிக்கொண்டிருக்கும் தாமரைச்செல்வியை அமைதியான சாதனையாளர் என்றுதான் குறிப்பிட விரும்புகின்றேன். கவிதை, சிறுகதை, நாவல், குறுநாவல் எழுதியிருக்கும் இவர், ஓவியத் துறையிலும் ஈடுபாடுள்ளவர். சில இதழ்களில் இவர் எழுதிய கதைகளுக்கு இவரே ஓவியமும் வரைந்திருப்பார்.

இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள். மூன்று குறுநாவல்கள். ஏழு நாவல்கள்.

அந்தப் பட்டியலையும் இங்கு தருகின்றேன்:

சுமைகள் (நாவல்) 1977, விண்ணில் அல்ல விடிவெள்ளி (நாவல்) 1992. தாகம் (நாவல்) 1993, வேள்வித்தீ (குறுநாவல்) 1994, ஒரு மழைக்கால இரவு (சிறுகதைகள்) 1998, அழுவதற்கு நேரமில்லை (சிறுகதைகள்) 2002, வீதியெல்லாம் தோரணங்கள் (நாவல்) 2003, பச்சை வயல் கனவு (நாவல்) 2004, வன்னி

யாச்சி (சிறுகதைகள்) 2005.

ஒரு மழைக்கால இரவு, அழுவதற்கு நேரமில்லை, வன்னியாச்சி - மூன்று நூல்களிலும் வந்த 37 கதைகளையும் சேர்த்து 'வன்னியாச்சி' (2018). உயிர்வாசம் (நாவல்) 2019.

இருபதிற்கும் மேற்பட்ட சிறுகதைகள், பல இலக்கியப் போட்டி களில் பரிசு பெற்றுள்ளன.

அத்துடன் தமது நூல்களுக்கு அரச மற்றும் அமைப்புகளின் விருதுகளும் தங்கப் பதக்கமும் பெற்றிருப்பவர். அந்த விப ரங்களே தனியான ஒரு பட்டியல்.

அவருடைய சிறுகதைகள், நாவல்களில் வன்னி மண்ணின் மணம் கமழும். பிரதேச இலக்கியத்தில் வன்னி மண்ணின் மகிமையை எழுதிய படைப்பாளிகளின் வரிசையில் இவருக் கும் தனியிடம் இருக்கிறது.

தமிழகத்தில் கரிசல் இலக்கியம் என அழைக்கப்படும் விவ சாய மக்களின் ஆத்மாவை பிரதிபலிக்கும் ஏராளமான சிறுக தைகள், நாவல்கள் படித்திருக்கின்றோம். அவற்றுக்கு ஈடான ஈழத்து தமிழ் விவசாய மக்களின் குரலை தமது படைப்புக ளில் ஒலிக்கச் செய்தவர்கள், செங்கை ஆழியான், பாலம- னோகரன், தாமரைச்செல்வி ஆகியோர். இவர்களுக்குப் பின் னர் தோன்றிய புதிய தலைமுறை வன்னிப் பிரதேச எழுத்தா ளர்கள் பலர் அம்மக்களின் வாழ்வை இலக்கியமாக்கி வரு கின்றனர். அவர்கள் பற்றியும் ஒரு பட்டியல் இருக்கிறது.

சுயமாக தமது துறைகளில் முன்னேறி சாதனை புரிந்து தமது ஆளுமைப் பண்பை காண்பித்த ஆண்கள் குறித்து ஆங்கி லத்தில் Self-made man என்பார்கள். தாமரைச்செல்வியின் வாழ்வையும் பணிகளையும் பார்த்தால் அவரை ஒரு Self-made woman என்றுதான் சொல்ல வேண்டும்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே மாணவர் இலக்கிய மன்றத்திற்கு நாடகங்கள் எழுதிக் கொடுத்திருக்கும் இவர், பின்னர் இலங்கை வானொலிக்கு இசையும் கதையும் எழுதி னார். அதிலிருந்து மீண்டு வந்து இலங்கைப் பத்திரிகைகள், இலக்கிய இதழ்கள், தமிழக இதழ்களில் எழுதினார். ஆயி னும், ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்திருக்கும் இவருக்கு பரந்தன் குமரபுரத்திற்கு அப்பால் வெளியுலகம் தெரியாம லேயே வானொலி, பத்திரிகைகள், இதழ்கள் என்று அறிமுக மாகிவிட்டார்.

தமது ஆரம்பக் கல்வியை பரந்தன் இந்து மகாவித்தியால யத்திலும், பின்னர் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் தொடர்ந்திருக்கும் இவர், இலக்கியப் பிரதிகளை எழுதத் தொடங்கிய காலகட்டத்தில் வீரகேசரி பிரசுரங்கள் வெளியா கத் தொடங்கிவிட்டன.

தமது முதல் நாவலுக்கு தீக்குளிப்பு என்ற தலைப்பிட்டு அதன் மூலப்பிரதியை வீரகேசரி அலுவலகத்திற்கு தபாலில் அனுப்பி வைத்துள்ளார். வீரகேசரியின் Administrative officer ஆகவும் வீரகேசரி பிரசுரங்களின் பதிப்பாளராகவும் பணியாற்றிய (அமரர்) பாலச்சந்திரன் இலக்கிய ஆர்வம் மிக் கவர். தாமரைச்செல்வியின் முதல் நாவலான தீக்குளிப்பை படித்த பாலசந்திரன் வளர்ந்து வரும் ஒரு பெண் படைப்பா ளியின் ஆற்றலை இனங்கண்டு, அதில் மேலும் செம்மைப்ப டுத்துவதற்கான தேவை இருப்பதை தெரிந்துகொண்டு பரந்த னில் வசித்த தாமரைச்செல்விக்கு கடிதம் எழுதி வசதிப்படும் பொழுது கொழும்பில் வீரகேசரி அலுவலகம் வந்து சந்திக்கு மாறு கோரியிருந்தார்.

அந்தக் கடிதம் தாமரைச்செல்விக்கு ஊக்க மாத்திரைதான். ஒரு பெரிய நிறுவனத்திடமிருந்து வந்துள்ள அழைப்பை ஏற் றுக்கொண்டு, தமது தந்தையாருடன் வீரகேசரி அலுவலகம் வந்திருக்கிறார். ஆனால், இச் சந்தர்ப்பத்திலும் நான் அவரை பார்க்கவில்லை. அச்சமயம் நான் நீர்கொழும்பு பிரதேச நிரு பராக இருந்தேன்.



தீக்குளிப்பு நாவல் தொடர்பாக தம்மைச் சந்திக்க வந்த தாமரைச்செல்வியிடம் ஒரு நாவல் எவ்வாறு அமைய வேண்டும், வாசகர்களை ஆர்வமுடன் படிக்கத்தூண்டும் அம்சங்கள் யாவை முதலான சில ஆலோசனைகளை தமது நீண்ட கால வாசிப்பு அனுபவத்திலிருந்து பாலச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

சுயமாக சிறுகதைகள், கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த இவருக்கு அந்த சந்திப்பு வித்தியாசமான அனுபவம்தான். தன்னை எவ்வாறு இலக்கியத் துறையில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை தாம் அன்றைய அந்தச் சந்திப்பில் பெற்றுக்கொண்டதாக பின்னாளில் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் 2001 முதல் தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்தி வருகின்றோம். 2002-ம் ஆண்டு சிட்னியில் நடந்தபொழுது அங்கு வதியும் இலக்கியவாதி செல்வி. யசோதா பத்மநாதன் எனக்கு தாமரைச்செல்வியின் தங்கை கௌரியை அறிமுகப்படுத்தினார். அந்த அறிமுகத்தினால் சில வருடங்களின் பின்னர் தாமரைச்செல்வியின் மற்றுமொரு நாவலான பச்சைவயல்கனவு படிக்கக் கிடைத்தது.

அதனை மெல்பனில் 2006-ம் ஆண்டு நடந்த ஆறாவது எழுத்தாளர் விழாவில் விமர்சன அரங்கில் இணைத்துக்கொண்டோம். இவ்வாறெல்லாம் தாமரைச்செல்வியின் படைப்புகள் எனக்கு அறிமுகமானபோதிலும் அவரை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் 2013-ம் ஆண்டளவில்தான் சிட்னியில் அந்த வருடத்தின் கோடை காலத்தில் கிடைத்தது.

ஈழத்து இலக்கியத்தில் தலித் மக்களின் ஆத்மா, மற்றும் மீனவ மக்களின் கடல் சார்ந்த வாழ்வு, மலையக மக்களின் துயரம் கப்பிய நாடற்ற ஏக்கம், கிழக்கிலும் தென்னிலங்கையிலும் முஸ்லிம்களின் பண்பாட்டுக் கோலங்கள் என்பன சித்திரிக்கப்பட்ட பல படைப்புகளையும் படித்து, அவற்றை எழுதியிருப்பவர்களையும் சந்தித்திருந்தாலும், கிளிநொச்சி, பரந்தன் முதலான பிரதேசங்களில் தீப்பெட்டிக்கும் எரிபொருளுக்கும் உப்பு, சீனி, தேயிலைக்கும் மாத்திரம் கடைகளை நம்பியிருந்த மக்கள், பருவ மழையையும் மண்ணையும் நம்பி வாழ்ந்தவர்கள்.

பின்னாளில் அந்த வன்னி பெருநிலப்பரப்பில் மழைமேகம் மறைந்து, நெருப்பும் கந்தகமும்தான் சீறிப்பாய்ந்தது. தாமரைச்செல்வியின் போர்க்காலக் கதைகள் மக்களின் வலியை பேசியவை. இடப்பெயர்வை சித்திரித்தவை.

கிளிநொச்சி போர்க் காலத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்திருந்ததை அறிவோம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இடம்பெயர்ந்து... இடம்பெயர்ந்து ஓடிய மக்கள் திரளில் தாமரைச்செல்வியின் குடும்பமும் இணைந்திருந்தது. அந்தப் போர் அவலச் சூழலிலும் அவர் இலக்கிய பிரதிகள் படித்தார், எழுதினார். தற்காலிக குடிசைகள் அமைத்து அங்கிருந்து ஜெனரேட்டரின் உதவியுடன் பாரதி படத்தை பார்த்தையும் அகிரா குரேசேவாவின் படங்களை ரசித்ததையும், ஸ்கந்தபுரம் என்ற பிரதேசத்துக்கு அப்பால் காட்டுப் பகுதியில் கொட்டில்கள் அமைத்து வன்னிப் பிரதேச இலக்கியவாதிகளுடன் கலந்துரையாடியதையும் அவுஸ்திரேலியாவுக்கு அவர் வந்த பின்னரே என்னிடம் நினைவு கூர்ந்தார்.

நெருக்கடி மிக்க போர்க்காலச் சூழலிலும் காலச்சுவடு, மூன்றாவது மனிதன், சரிநிகர் முதலான கையில் கிடைக்கும் இதழ்கள், நூல்கள் பற்றியெல்லாம் இலக்கிய நண்பர்கள் மத்தியில் கலந்துரையாடியிருக்கிறார். இயற்கையுடன் இணைந்து காட்டுப் பிரதேசத்தில் இலக்கிய சந்திப்புகள் நடத்தியதையும் நினைவுபடுத்தினார்.

தாமரைச்செல்வியின் கணவரும் எழுத்தாளர்தான். சிறுகதைகள் எழுதியிருப்பவர். எனினும் அவர் குடும்பத் தலைவனாக வீட்டையும் குடும்பத்தையும் கவனித்தார். மனைவியோ குடும்பத்தையும் கவனித்து இலக்கியத்திலும் தனது ஆளுமையை பதிவு செய்தார்.

இந்த இலக்கிய தம்பதியரின் இரண்டு பெண் செல்வங்களும் அவுஸ்திரேலியாவில் மருத்துவர்களாக பணியாற்றுகின்றனர்.

தாமரைச்செல்வியின் சில படைப்புகள் குறும்படங்களாக வெளியாகியிருக்கின்றன. வன்னிக்கு வந்துள்ள இயக்குநர் ‘முள்ளும் மலரும்’ மகேந்திரன் இவருடைய இடைவெளி என்ற சிறு கதையை ‘1996’ என்ற பெயரில் குறும்படமாக்கியுள்ளார். அத்துடன் மகேந்திரனின் மகன் ஜோன் மகேந்திரன் இவருடைய மற்றும் ஒரு சிறுகதையான பாதணியை குறும்படமாக எடுத்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த இமையவரம்பன், தாமரைச்செல்வியின் பசி என்ற சிறுகதையை குறும்படமாக்கியிருக்கிறார். இப்படம் லண்டனில் நடந்த விம்பம் குறும்பட விழாவில் காண்பிக்கப்பட்டு பார்வையாளர் விருது கிடைத்திருக்கிறது. இவை தவிர மேலும் இவருடைய சில சிறுகதைகள் குறும்படங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பத்தியின் தொடக்கத்தில் தாமரைச்செல்வியை ஆளுமைமிக்க சாதனையாளர் என்று குறிப்பிட்டதற்கான காரணங்களை இங்கே பதிவு செய்கின்றேன்.

- ஒரு மழைக்கால இரவு, சிறுகதைகள் (வடக்கு கிழக்கு மாகாண சபையின் 1998-ம் ஆண்டிற்குரிய விருது)
- விண்ணில் அல்ல விடிவெள்ளி (யாழ். இலக்கியப் பேரவையின் பரிசு)
- தாகம் - நாவல் (கொழும்பு சுதந்திர இலக்கிய அமைப்பின் சிறந்த நாவல் விருது மற்றும் யாழ். இலக்கியப் பேரவையின் பரிசு)
- வேள்வித்தீ - குறுநாவல் (முரசொலி பத்திரிகையின் முதல் பரிசு)
- வீதியெல்லாம் தோரணங்கள் - நாவல் (வடமாகாண சபையின் விருது மற்றும் இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுப் போட்டியில் இரண்டாம் பரிசு)
- பச்சை வயல் கனவு - நாவல் (இலங்கை அரச சாகித்திய விருது மற்றும் யாழ். இலக்கியப் பேரவையின் விருது)

இவை தவிர வட கிழக்கு ஆளுனர் விருதும் வேறும் சில பிரதேச அமைப்புகளின் இலக்கியத்திற்கான விருதுகளும் பெற்றவர்.

சில சிறுகதைகள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மல்லிகை 2002 மார்ச் மாத இதழில் தாமரைச்செல்வி அட்டைப்பட அதிதியாக கௌரவிக்கப்பட்டுள்ளார். க. இரத்தினசிங்கம் என்பவர் இவர் பற்றி எழுதியிருக்கும் கட்டுரையில், 1982-ம் ஆண்டு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விளையாட்டு அரங்கில் நடந்த கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம் எழுதிய முத்துக்குவியல் நூல் வெளியீட்டு விழாவில் அந்த நூலின் அட்டையை வரைந்திருக்கும் தாமரைச்செல்விக்கு பரிசும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டதாக பதிவு செய்கிறார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி எழுதியதுடன் நின்று விடாமல், போர் தந்த பரிசுகளான பெற்றவர்களை இழந்த குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் இவர் உதவி வருகிறார். இந்தப் பணியில் இவருடைய கணவரும் சகோதரர்களும் பிள்ளைகளும் பக்கத்துணையாக விளங்குகிறார்கள்.

இவ்வளவு பெருமைகளும் பெற்றுள்ள தாமரைச்செல்வியிடத்தே நிரந்தரமாக தங்கிவிட்ட சோகம் பற்றியும் இங்கு மிகுந்த மனவலியுடன் பதிவுசெய்கின்றேன். போரின் தாக்கம் வன்னி பெருநிலப்பரப்பில் உயிர்களை மாத்திரம் பறிக்கவில்லை. அந்தப் பிரதேசத்து இலக்கியவாதிகளின் சேகரிப்பிலிருந்த பெறுமதியான நூல்களும் இதழ்களும் எரிந்து சாம்பராகியுள்ளன. தாமரைச்செல்வியும் தனது இலக்கிய படைப்புகளுக்கு பெற்ற நற்சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொருட்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் இழந்துள்ளார்.

ரதிதேவி என்ற இயற்பெயர் கொண்ட இவர் வன்னி நிலத்தின் குளங்களில்  மலரும் தாமரைகளை தினம் தினம் ரசித்தமையின் பலன்தான் ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு தாமரைச் செல்வி கிடைத்தார் என்றும் நான் நினைத்திருக்கின்றேன்.

தாமரைச்செல்வியின் எளிமையான இயல்புகள் போற்றத்தக்கவை. அதிர்ந்து பேசத் தெரியாதவர். விவசாய மக்களினதும் போர்க்காலத்தில் இடம்பெயர்ந்தவர்களினதும் வாழ்வை அருகிருந்து பார்த்து, அவரவர் இயல்புகளுடனேயே உயிர்ப்புடன் படைப்பிலக்கியமாக்கியவர் இந்த வன்னியாச்சி.

இலங்கையின் தமிழ் மொழிக்கான பதினோராம் ஆண்டுக்கான பாடத்தில் இவரது இன்னொரு பக்கம் சிறுகதை இடம் பெற்றுள்ளது.

ஓவியம் வரைவதிலும் ஆர்வமுள்ள தாமரைச்செல்வி, வீரகேசரி, தினகரன், சுடர், ஈழநாடு, ஜீவநதி, ஞானம், தழிழ்நாட்டில் குங்குமம் ஆகியனவற்றில் வெளியான சிறுகதைகளுக்கும் ஓவியம் வரைந்திருப்பவர்.

எண்பதாம் ஆண்டளவில் சூரியகாந்தி என்ற கையெழுத்து சஞ்சிகை நடத்தியிருப்பவர். ஆறு இதழ்களை வெளியிட்டிருக்கிறார்.

இவரது ஐந்து சிறுகதைகளை சில இலக்கிய ஆளுமைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். விபரம் வருமாறு:

- இடைவெளி - The Gap (பேராசிரியர் சி. சிவசேகரம்)
- வாழ்க்கை - Life (பேராசிரியர் சி. சிவசேகரம்)
- பாதை - The Rugged path (ஏ.ஜே. கனகரட்ணா)
- முகமற்றவர்கள் - Faceless People ( எஸ். இராஜசிங்கம்)
- எங்கேயும் எப்போதும் - The Inevitable (கே. எஸ். சிவகுமாரன்)

மூன்று சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

- ஒரு மழைக்கால இரவு (ஜெயசித்ரா)
- வன்னியாச்சி (அனுராதா. ஜெயசிங்க)
- வாழ்க்கை (பேராசிரியர் பியசீலி. விஜயமான)

ஓட்டம் என்ற சிறுகதையை ஜெர்மன் மொழியில் எல்வின். மாசிலாமணி மொழிக்கு வரவாக்கியுள்ளார்.

இத்தனை சாதனைக்குமுரிய தாமரைச்செல்வி, கடல் கடந்து அவுஸ்திரேலியா வந்த படகு மனிதர்கள் பற்றிய ஐநூறு பக்கங்களுக்கும் மேல் விரியும் உயிர்வாசம் நாவலை எழுதி இலங்கையில் தேசிய சாகித்திய விருதும் பெற்றவர்.

போர் நெருக்கடியின் அச்சுறுத்தல், காணாமலாக்கப்படுதல், உடைமைகளை இழந்து இடம்பெயர்ந்து ஓடித் திரிந்த அவலங்கள், பொருளாதார நெருக்கடிகள், எதிர்காலம் குறித்து பெருமூச்சுகளுடன் வாழும் உடன் பிறந்த சகோதரிகள், அவர்களுக்காக தரப்படவேண்டிய சீதனப் பணத்தை உழைத்து தேடுவதற்காக வந்த இளையோரின் கனவுகள்... இவ்வாறு எத்தனையோ காரணங்களினால், இக்கரையிலும் பசுமையிருக்கும் என நம்பி அக்கரையிலிருந்து உயிரைப் பணயம் வைத்து படகுகளில் ஆழ்கடலை ஊடறுத்து வந்தவர்களதும், இடை வழியில் சமுத்திரத் தாயுடன் சங்கமித்தவர்களினதும் கதைகளை பேசுகிறது தாமரைச்செல்வியின் உயிர்வாசம் நாவல்.

அகதிக் கோரிக்கை, நிராகரிக்கப்பட்டு, நாடுகடத்தப்படுபவர்களின் சோகத்தையும் சித்திரிக்கிறது.

படகுகளில் இலங்கையிலிருந்து மட்டுமல்ல, லெபனான், சிரியா, ஈரான், ஈராக், வியட்நாம், மலேஷியா, இந்தியா, இந்தோனேஷியா முதலான நாடுகளிலிருந்தும் வந்திருப்பவர்களைப் பற்றியும் உயிர்வாசம் பேசுவதனால், இந்நாவலுக்கு சர்வதேச பார்வையும் கிட்டுகிறது.

எமது அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் கடந்த செப்ரெம்பர் மாதம், சிட்னியில் நடத்திய 23-வது தமிழ் எழுத்தாளர் விழாவில் தாமரைச்செல்விக்கு வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருது வழங்கி,
பாராட்டிக் கௌரவித்தோம்.



murugaboopathi@thaiveedu.com



# இலக்கியவாழ்வில் பொன்விழாக் காணும் தாமரைச்செல்வி அவர்களின் 'எழுத்தும் வாழ்வும்'

- சந்திரா ரவிந்திரன்

தாமரைச்செல்வி என்ற பெயர் இலக்கிய உலகில் எனக்கு முதன் முதலில் அறிமுகமானது... எண்பதுகளில்!

ஈழத்துப் பத்திரிகைகளில் வரும் அவரது சிறுகதைகளினூடாகவே அவரின் படைப்பாற்றலை அறியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நான் வட இந்து மகளிர் கல்லூரியில் அப்பொழுது 'ஏ லெவல்' வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். பாடப் புத்தகங்களை விட நாவல்களும், சிறுகதைகளும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தான் அப்பொழுது என் வாசிப்புத் தாகத்திற்கு தீனி போட்டுக்கொண்டிருந்தன. நான் எழுத ஆரம்பித்ததும், இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்ததும் அப்போது தான். அந்த எண்பதுகளின் ஆரம்பத்தில் தான் தாமரைச்செல்வி அவர்களுடைய பல படைப்புகளை வாசிக்கும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது.

வீரகேசரிப் பத்திரிகை, தினகரன் பத்திரிகைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாராவது ஒருவரது சிறுகதை பிரசுரமாகும். அதேவேளை யாழ்ப்பாணத்தில் டொமினிக் ஜீவா அவர்களின் மல்லிகை சஞ்சிகை, சிவஞானசுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டுக்கொண்டிருந்த சிரித்திரன் சஞ்சிகை, எனப் பல பத்திரிகைகளினூடாக வெளிவரும் படைப்புகள், ஈழத்தமிழ் இலக்கிய உலகின் முக்கியமான பல படைப்பாளிகளை எமக்கு அடையாளம் காட்டிக்கொண்டிருந்தன என்றால் மிகையில்லை. இவற்றில் தாமரைச்செல்வி அவர்களுடைய சிறுகதைகள் பிரசுரமாகும் போது ஒரு கட்டத்தில் நான் அவற்றை ஆர்வத்துடன் தேடி வாசித்திருக்கிறேன்.

அப்பொழுது யாழ்ப்பாணத்திலே வந்துகொண்டிருந்த வேறும் சில முக்கிய இதழ்களான சுடர், வெளிச்சம், நாற்று, ஞானம், மாணிக்கம், அமிர்தகங்கை, களம், கலாவல்லி, தாரகை, விளக்கு, ஆதாரம், கிருதயுகம், பெண்ணின்குரல், தாயகம், வளையோசை, மாருதம், ஜீவநதி, நுடபம், யாழ்மதி போன்ற சஞ்சிகைகள் தவிர, வேறும் பல சிற்றிதழ்கள் உட்பட, வாரா வாரம் வெளிவரும் பத்திரிகைகளான தினக்குரல், சிந்தாமணி, ஈழநாடு, ஈழமுரசு போன்ற பத்திரிகைகளிலும் அவரது சிறுகதைகள் பிரசுரமாகிக்கொண்டிருந்தன.

ஆனால் ஈழத்துப் பத்திரிகைகளுக்கும் அப்பால், கடல் கடந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஆனந்தவிகடன், குங்குமம், மங்கை போன்ற இதழ்களிலும் இவரது சிறுகதைகள் வெளியாகியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயம்.

அந்தக் காலத்தில், உங்கள் பொழுதுபோக்கு என்னவென்று ஒருவரைக் கேட்டால் 'புத்தகங்கள் வாசிப்பது, வானொலி கேட்பது' என்று தான் அநேகம் பேர் சொல்வார்கள். ஏனென்றால் அப்போது அவை தவிர வேறு பொழுதுபோக்கு சாதனங்கள் சாதாரண மக்களிடையே பயன்பாட்டில் அதிகம் இருக்கவில்லை. திரைப்படங்கள் கூட எப்போதாவது தியேட்டருக்குப் போய் பார்க்கிற அளவில் தான் இருந்திருப்பார்கள். அதுவும் அதற்கான வசதிகளுள்ள சிலருக்கே அந்த சந்தர்ப்பமும் இருந்திருக்கிறது.

தொலைக்காட்சியோ, கைத்தொலைபேசியோ, கணினியோ அல்லது இணையவழிப் பயன்பாடுகளோ பொதுசனம் மத்தியில் வந்து சேராத ஒரு காலம். இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டதே 1979-ம் ஆண்டளவில் தான்! இருந்தாலும், அது பொதுசனம் மத்தியில் முழுமையாகப் பயன்பாட்டிற்கு வருவதற்கு அதைவிட அதிக காலம் பிடித்திருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் புத்தகங்கள், வானொலி ஆகியவற்றை நாம் பொழுதுபோக்கு ஊடகங்கள் என்று சொன்னாலும், 70, 80-களிலெல்லாம் எங்களில் அநேகருக்கு, அதாவது ஈழத்தமிழ் சமூகத்தினருக்கு வானொலியோ, பத்திரிகைகளோ, வெறும் பொழுதுபோக்கு ஊடகங்களாக மட்டும் இருக்கவில்லை. அவை பல துறைகள் சார்ந்து பல வழிகளில் எங்களை வளர்த்துக்கொள்வதற்கான வழிகாட்டும் ஊடகங்களாகவும் தான் இருந்திருக்கின்றன.

இதனை நானிங்கு சொல்வதற்கான முக்கிய காரணம் என்னவென்றால், தாமரைச்செல்வி அவர்கள் 1973-ல் எழுத ஆரம்பித்ததே நான் குறிப்பிட்ட இந்த ஊடகங்களில் ஒன்றான இலங்கை வானொலி வாயிலாகத் தான்! அவருக்கு எழுத வேண்டுமென்ற ஆர்வத்தை, அவர் அறியாமலே இலங்கை வானொலி தான் முதலில் அவருக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை வானொலி என்றால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவை நிகழ்ச்சிகளைத் தான் குறிப்பாகச் சொல்கிறேன்.

இலங்கை வானொலியில் அப்பொழுது ஒலிபரப்பாகிக்

கொண்டிருந்த பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, இசையும் கதையும், விமர்சகர் விருப்பம் போன்ற நிகழ்ச்சிகள் அக்காலத்தில், திறமை மிக்க பலர் எழுத்துலகிற்குள் தைரியமாக வருவதற்குரிய ஒரு உந்துசக்தியை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றன. எழுதவேண்டுமெனும் ஆர்வம், அவா உள்ளவர்களுக்கு, இலங்கை வானொலியின் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் பெருந்தூண்டுகோலாக இருந்து, அவர்களுக்கான ஆரம்பக் களத்தை அமைத்துக்கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையில்லை. அதற்குக் காரணம், அந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல, அந்த நிகழ்ச்சிகளுக்குக் குரல் வழங்கிய பல கலைஞர்களும் தாமறியாமலே இத்தகைய புதிய படைப்பாளிகள் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

அதற்குப் பின்னர் தான் 1974-ல் தாமரைச்செல்வி அவர்களுடைய முதற் சிறுகதையான 'ஒரு கோபுரம் சரிகிறது' என்ற சிறுகதை 'வீரகேசரி' பத்திரிகையிலே பிரசுரமாகிறது. இந்தச் சிறுகதை மூலம் தான் அவர் ஈழத்து இலக்கிய உலகிற்குள் பத்திரிகை வாயிலாக, முறையாகக் கால் பதித்திருக்கிறார் என்று சொல்லலாம்.

எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்களின் சொந்தப் பெயர் ரதிதேவி. அவர் சில சிறுகதைகளை 'ரதிதேவி சுப்ரமணியம்' என்ற பெயரிலும் ஆரம்ப காலங்களில் எழுதியிருக்கிறார்.

ஆனால் தாமரைச்செல்வி என்ற புனைபெயரை அவர் எப்போது தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்? ஏன் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்? அதற்கு ஏதோவொரு காரணம் நிச்சயம் இருக்குமல்லவா?

அவருடைய படைப்புகளை, 'தாமரைச்செல்வி' என்ற பெயரில் பார்க்கும் போது அதுதான் அவருடைய சொந்தப் பெயர் என்று பலரும் நினைத்திருக்கக் கூடும். நானும் ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால் அது புனைபெயர் என்று அறிந்த பிற்பாடு தான் அதுபற்றி அறியவேண்டுமெனும் ஆவல் எனக்குள் ஏற்பட்டது. நான் அவரிடம் அண்மையில் தான் அதுபற்றி கேட்டிருந்தேன். அதற்கு அவர் தந்த பதிலும் சுவாரஸ்யமாகத்தான் இருந்தது.

இலக்கிய உலகில் புனைபெயரில் அறியப்பட்ட பல படைப்பாளிகள் இருக்கிறார்கள்.

உதாரணமாக: மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் சொந்தப் பெயர் சுப்பிரமணியன். எழுத்தாளர் அசோகமித்ரனின் சொந்தப் பெயர் ஜகதீச தியாகராஜன். எழுத்தாளர் அம்பையின் சொந்தப் பெயர் சி.எஸ். லக்ஷ்மி. எழுத்தாளர் புதுமைப்பித்தனின் சொந்தப் பெயர் விருத்தாசலம். எழுத்தாளர் பிரபஞ்சனின் சொந்தப் பெயர் எஸ். வைத்திலிங்கம். எழுத்தாளர் நாஞ்சில்நாடனின் சொந்தப் பெயர் க. சுப்ரமணியம். எழுத்தாளர் செங்கையாழியானின் சொந்தப் பெயர் க. குணராசா. எழுத்தாளர் தெணியானின் சொந்தப் பெயர் கந்தையா நடேசு. எழுத்தாளர் குந்தவையின் சொந்தப் பெயர் சடாட்சர-தேவி. எழுத்தாளர் குறமகளின் சொந்தப் பெயர் வள்ளிநாயகி ராமலிங்கம். எழுத்தாளர் யாழ்நங்கையின் சொந்தப் பெயர் அன்னலக்ஷ்மி ராசதுரை.

இவ்வாறு மேலும் பல படைப்பாளிகள் புனைபெயர்களில் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அதே புனை பெயர்களிலேயே அறிமுகமாகி படைப்புகள் ரீதியாக வெற்றிகள் பலவும் கண்டிருக்கிறார்கள். இந்த வரிசையில் தான் தாமரைச்செல்வி அவர்களும் இலக்கிய உலகில் அறிமுகமாகி, இற்றைவரை தனக்கான ஒரு தனியிடத்தை பிடித்து, நிலையாகப் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

தாமரைச்செல்வி அவர்கள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி(Jaffna Hindu Ladies College)யில் 'பிரெப்' படிக்கும் போது என்று சொன்னார். அப்போது 'பிரெப்' என்று சொல்வது பத்தாம் வகுப்பிற்கு நுழைவதற்கு முதல் உள்ள வகுப்பு. அது ஒன்பதாம் வகுப்பு.

அவர் 'பிரெப்' படிக்கும் போது 69 அல்லது 70-ம் ஆண்டாக இருந்திருக்குமென்று நினைக்கிறேன். அப்போது அவர் கற்றுக்கொண்டிருந்த பாடசாலை நூலகத்திலிருந்து 'நந்தவனம்' என்றொரு நாவலை எடுத்துச்சென்று வாசித்திருக்கிறார். அவர் அந்த நாவலை பாடசாலை நூலகத்திலிருந்து எடுத்துச் செல்வதை சொல்லும் போது, அதுவே ஒரு கதையாகத் தான் இருக்கும். ஒன்பதாம் வகுப்பில் பாடசாலை நூலகத்திலிருந்து நாவல்களை எடுத்துச்சென்று வாசிப்பதற்கு அனுமதி இருக்காது. அது வழமை. அப்படியொரு சூழலில் தான் அந்த நூலை எடுத்துச்சென்று அவர் வாசித்திருக்கிறார். அந்த நாவலில் வரும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தின் பெயர் தான் 'தாமரைச்செல்வி'.

அவருக்கு அந்தப் பாத்திரம் ஏனோ பிடித்திருக்கிறது. அதனால் அந்த நாவலை வாசிக்கும் போதே அவர் நினைத்துவிட்டார், தான் கதை எழுதுவதென்றால் 'தாமரைச்செல்வி' என்ற புனை பெயரில் தான் எழுதவேண்டுமென்று.

அப்பொழுது அவருக்கு பதினைந்து அல்லது பதினாறு வயதாகத் தான் இருந்திருக்கும். பதினைந்து அல்லது பதினாறு என்பது ஒரு குழப்பமான மனநிலையை ஏற்படுத்தும் முக்கியமான பருவம்!

ஒரு சிறுவன் என்றாலும் சரி, ஒரு சிறுமி என்றாலும் சரி... அவரவர் வாழ்க்கை முறை, குடும்பப் பின்னணி, சுற்றுச்சூழல்... இவற்றைப் பொறுத்து, அவரவர் சிந்தனைக்கேற்ப, திசைமாறிப் போகிற தருணங்கள் அந்த வயதுகளில் தான் ஏற்படுகிறது! தனக்குரிய சரியான பாதையெது என்று தீர்மானிக்க முடியாத ஒருவித குழப்பமான மனநிலைகள் ஏற்படுகிற வயசு அது! மனம் அப்போது யாருடைய சொல்லையும் இலகுவாகக் கேட்காது. அந்த வயதுகளில் பலர், தமக்குப் பிடித்தமான விடயங்களில் துணிச்சலோடு களமிறங்கி விடுவார்கள். அதில் வெற்றி பெற்று ராஜநடை போடுகிறவர்களும் உண்டு. தோல்வி கண்டு தடுமாறி சிதறிப்போனவர்களும் இருக்கிறார்கள்.

தாமரைச்செல்வி அவர்கள் இதில் முதல் ரகம் என்று சொல்லலாம். தான் தேர்ந்தெடுத்த, தனக்குப் பிடித்தமான அந்த எழுத்துத் துறையில் வெற்றி பெற்று, தனக்கான ஒரு நிலையான இடத்தை இலக்கிய உலகில் பிடித்துக்கொண்டிருப்பவர் அவர்.

தாமரைச்செல்வி அவர்கள் தனது படைப்புகளினூடாக இன்று பல்மொழி இலக்கியப் பரப்பிலும் அறியப்படுகி

றாரென் றால், அதற்கு முக்கிய காரணம் அவரின் வாழ்வனுபவங்களும், அவற்றைத் தனது எழுத்தினூடாக வெற்றிகரமாக வெளிக்கொண்டு வந்திருக்கும் அவரது எழுத்தாளுமையும் தான் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

பார்ப்பவர் கண்களுக்கு அவரது அமைதியான உருவமும், மென்மையான பேச்சும், சாந்தமான சுபாவமும், அழகான புன்னகையும் மட்டும் தான் தெரியும். அதற்கும் அப்பால் அவரிடமிருக்குமந்தத் தன்னம்பிக்கையும், பொறுமையும், சக மனிதர்கள் மீதான நேசிப்பும், சமூகத்தின் மீதான இரக்கமும், கலைகளின் மீதான பற்றுதலும், மனஉறுதியும், செயற்திறனும் அவருக்குள் எந்தளவிற்கு இருக்கிறது என்பதனை அவரின் படைப்புகள் எமக்குத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

அவரின் சொந்த மண்ணான, அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த, அந்தக் குமரபுரம் என்ற ஊருக்கு அவரின் படைப்புகளிற்கான ஏராளம் கருக்களையும், கருமாந்தர்களையும் அள்ளிக்கொடுத்த பெருமை இருக்கிறது. அந்த ஊரும், அந்த வாழ்வும் அவரின் படைப்புகளின் ஆழத்தைப் பெருக்கி, அவற்றை உச்சத்திற்குக் கொண்டு செல்வதற்கு, அவரறியாமலே உதவியிருக்கின்றன என்று சொல்லலாம். இவற்றின் வழியாக, அவரிடம் இருந்த, அந்தத் தேடலும், அவர் சார்ந்த சமூகத்தை நோக்கிய, அவரது நுட்பமான கவனிப்பும், இயல்பாகவே அவருக்கிருக்கும் பொறுமையும், நிதானமும், துன்பப்படும் மனிதர்கள் மீதான இரக்க உணர்வும், அதனோடு சேர்ந்த அவரது படைப்பாற்றலும்... இவை தான் அவரின் படைப்புகளுக்கான வெற்றியின் அடிநாதங்களாகும். அவரின் ஒவ்வொரு சிறுகதைகளையும், ஒவ்வொரு நாவலையும் எடுத்து நுட்பமாகக் கவனித்தால் இவற்றை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இதுவரையில் 200-ற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் நாவல்களையும் அவர் எழுதியிருக்கிறார். அவை பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன.

இவரின் பல சிறுகதைகள் சிறுகதைத் தொகுப்புகளாக வெளிவந்திருக்கின்றன.

அவற்றில் முதற் சிறுகதைத் தொகுப்பு 'ஒரு மழைக்கால இரவு'. இந்நூல் 1998-ல் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்டிருக்கிறது-

'ஒரு மழைக்கால இரவு':

இது இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுப்பு. இந்தத் தொகுப்பிலே... 1983-ம் ஆண்டிலிருந்து 1997-ம் ஆண்டு வரை உதிரிகளாக பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த பெரும்பாலான அவருடைய சிறுகதைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

1983-ற்கும் 1997-ற்கும் இடைப்பட்ட காலத்தில், அவரால் எழுதப்பட்டு வெளியான கதைகள் இந்தத் தொகுப்பிலே இடம் பெற்றிருக்கிறதென்றால், இந்தத் தொகுப்பு ஈழத்து இலக்கியப் படைப்புலகில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நூலாக இருக்குமென்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

ஈழத்தில், தமிழ் மக்களுக்கெதிரான பாரிய இனக்கலவரம் ஒன்று நடைபெற்றது 1983-ம் ஆண்டு யூலை மாதம்! அதனை இந்த உலகமே அறிந்திருக்கும். அரசின் ஆதரவோடு சிங்களக் காடையர்களால் நடத்தபட்ட அந்தக் கொடிய இனக்கலவரத்திற்கு முன்னரும் இரண்டு இனக்கலவரங்கள் நடந்தன.

அவை 1957, 1977-ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் தென்னிலங்கையில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களுக்கெதிரான கலவரங்கள்! அப்போதும் தமிழர்கள் பல இன்னல்களை, உயிர் இழப்புகளை சந்தித்திருந்தார்கள்.

இருந்தாலும், பாரிய உயிரிழப்புகளையும், பொருள் அழிவுகளையும் ஒன்றாக, தமிழ் மக்கள் சந்தித்துக்கொண்ட மிகப்பெரிய நாடளாவிய ரீதியில் நிகழ்ந்த இனக்கலவரம் என்று சொன்னால், அது 1983-ல் தமிழர்களுக்கெதிராக நடைபெற்ற கலவரம்! அதனால் தான் 1983 யூலை மாதத்தை 'கறுப்பு யூலை' எனப் பெயரிட்டு இலங்கைத் தமிழ் மக்கள் இன்றும் அந்த நாட்களை துக்க நாட்களாக அனுஷ்டித்து வருகிறார்கள்.

இக்காலப்பகுதி, எமது உரிமைகளுக்காகவும், எமக்கான சுதந்திரத்துக்காகவும் எமது விடுதலைக்காகவும் தமிழ் இளைஞர்களின் ஆயதமேந்திய போராடம் விரிவடைந்த காலம்.

ஈழத்தமிழர்களின் அழிக்க முடியாத, வடுக்கள் நிறைந்த, துயரங்கள் வலிகள் மிக்க, ஒரு வீர வரலாறு இந்தப் போராட்டங்களின் பின்னால் இருக்கிறது!

தமிழர்களின் ஈழம் என்ற நாடு எப்படி இலங்கை என்றும், பின்னர் அது லங்கா என்றும் மாறியது என்பதற்கும் வரலாற்றில் நிறைய கதைகளும் சூட்சுமங்களும் இருக்கின்றன.

அது தொடர்பாக ஒரேயொரு உதாரணத்தை இங்கு குறிப்பிடலாமென்று நினைக்கிறேன்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான 'பட்டினப்பாலை'யில் ஈழம் தொடர்பாக ஒரு பாடல் வருகிறது.

***'தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்***
***கங்கை வாரியும் காவிரிப் பயனும்***
***ஈழத்து உணவும் கானகத்து ஆக்கமும்'***

என்று சில வரிகள் வரும்.

அவை மட்டுமல்ல சங்க இலக்கியங்களில் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றில் ஈழத்துப் பூதந்தேவனார் எனும் புலவர் ஏழு பாடல்கள் பாடியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அதுபோல், 7-ம், 8-ம் நூற்றாண்டுகளில் திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் சிவன் ஆலயங்களை நோக்கி 'ஈழத்துப் பதிகங்கள்' பாடியிருக்கிறார்கள் என்று நாயன்மார் திருத்தல வரலாறுகளும் எமக்குச் சான்று பகர்கின்றன. அங்கே 'லங்காப் பதிகங்கள் பாடியிருக்கின்றார்' என்று குறிப்பிடப்படவில்லை.

இந்த ஈழ விடுதலைப் போராட்டங்கள் ஆரம்பித்ததன் பின்னரான வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்வு என்பது சாதாரண வாழ்வு அல்ல. அந்தப் போர்க்கால வாழ்வு என்பது



ஒரு வரியில் சொல்லிவிட்டுப் போகக்கூடிய அல்லது ஒரு சம்பவத்தை சொல்லிவிட்டுப் போகக்கூடிய ஒரு கதை அல்ல. அது ஒரு தனி வரலாறு! 1983-லிருந்து 2009-ம் ஆண்டு வரையான ஈழத்தமிழ் மக்களின் வாழ்வு என்பது வீரமும், துயரமும், வலிகளும் நிறைந்த காலத்தால் அழித்துவிட முடியாத ஒரு வரலாறு!

தாமரைச்செல்வி அவர்கள் இந்த போராட்ட காலத்தில் ஈழ மண்ணில், தனது சொந்த ஊரான பரந்தன், குமரபுரம் என்ற கிராமத்திலே வாழ்ந்துகொண்டிருந்த ஒரு பெண்! இவரது படைப்புகளை வாசிக்கும் முன்னர் நாம் தெரிந்துகொண்டிருக்க வேண்டிய முக்கியமான விசயம் அது.

அவர் வாழ்ந்து கொண்டிருந்த அந்தக் காலத்தின் ஒவ்வொரு மணித்துளிகளையும் சுயமாகத் தரிசித்தவர். அவர் தனது ஐம்புலன்களாலும் உள்வாங்கிய விடயங்களை, உணர்வுபூர்வமாக எழுத்தில் வடித்துவிடுகிற ஆற்றலும், சக்தியும், திறமையும் அவரின் எழுதுகோலுக்கு இருந்திருக்கிறது. எனவே அவை காத்திரமான சிறந்த படைப்புகளாக உருவாகியிருக்கின்றன.

அந்த வகையில், ‘ஒரு மழைக்கால இரவு’ என்ற அவருடைய முதலாவது சிறுகதைத் தொகுப்பு, அவர் வாழ்ந்துகொண்டிருந்த அந்தக் காலத்தை, அவரது வாழ்க்கைச் சூழலை, ஒரு சமூகத்தின் சந்தோசங்களை, துயரங்களை, கஷ்டங்களை அடையாளம் காட்டும் படைப்புகளாக அமைந்திருக்கின்றன என்றால் அது மிகையில்லை.

அந்தத் தொகுப்பில் தாமரைச்செல்வி அவர்கள் தனது என்னுரை என்ற பகுதியில் ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்லியிருப்பார். அதை நான் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். அவர் கூறியிருப்பது இது தான்:-

*‘எமது மண்ணின் நிகழ்வுகளை ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாகும். அப்போது தான் இந்த மக்களின் உண்மையான பிரச்சினைகளையும், பல வருடங்களாகவே பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழும் மக்களின் உணர்வுகளையும், மற்றைய மக்களும் நாளைய சந்ததியினரும் அறிந்து கொள்ளமுடியும். சொந்த மண்ணிலேயே இருப்பிடம் இழந்து, அகதியாகி, குண்டுகளின் அதிர்வும், கந்தக நெடியும் ஒருபுறம் துரத்த, உயிருக்கு உத்தரவாதமற்ற இந்த நிலையில், பதுங்கு குழியின் பக்கத்துணையுடன் வாழ்கின்ற மக்களின் நடுவே, நானும் ஒருத்தியாக வாழ்ந்துகொண்டு தான் இச்சிறுகதைத் தொகுதியை தொகுக்க முனைகிறேன்...’*



பார்த்தீர்களானால், அந்தத் தொகுப்பில் அவருடைய 'என்னு ரை'யே அந்தக் காலத்தைக் கட்டியம் கூறி நிற்கிறது. அப்படி யானால் உள்ளேயிருக்கும் அவரது சிறுகதைகள், அக்காலத் தில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழ் மக்களின், அந்தப் போர்க் கால வாழ்வை, எந்தளவு ஆழத்திற்குச் சென்று உள்வாங்கி, எழுத்துக்களாக அவற்றை வெளிக்கொண்டு வந்திருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

1998-ல் வந்த அவரது முதற் சிறுகதைத் தொகுப்பைத் தொடர்ந்து, 2002-ல் 'அழுவதற்கு நேரமில்லை' என்ற அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்திருக்கிறது.

2017-ல் 'வன்னியாச்சி' என்ற அவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு வந்திருக்கிறது.

எனவே, இதுவரையில் அவரது மூன்று சிறுகதைத் தொகுப்பு கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனாலும், தொகுப்பில் இடம்பெறாதவையுடன் சேர்த்து, இது வரையில் 200-ற்கும் மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியி ருக்கிறார் என்பதும் இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கது.

அவருடைய பல படைப்புகள், போர்க் காலங்களில் அழிந்து, எரிந்து இல்லாமல் போய்விட்ட சம்பவங்கள் பல அவர் சொல் லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது ஈழத்தில் பல படைப்பாளி களுக்கும் ஏற்பட்டிருக்கும் மிகத்துயரமான அனுபவம் தான்! தமிழ்மக்களுக்கு இதுவொன்றும் புதிய அனுபவம் அல்ல. குறிப்பாக, 1981ல், தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாக இருந்த, தமிழ் வரலாற்று ஆவணங்கள், நூல்கள் என தமிழர்களின் பொக்கிஷமாகத் திகழ்ந்த, யாழ் நூலகத் தையே சிங்களப் பொலீஸ், இராணுவக் காடையர்கள் எரித் துச் சாம்பராக்கிய கொடிய நிகழ்வுகள் எமது வரலாற்றில் அழித்துவிட முடியாதவை! அதனை யாரும் மறந்து விடமுடி யாது. அழிந்து போன ஈழத்தமிழ் படைப்புகள் என்பது எமது நினைவுகளில் அழிக்க முடியாதவை!

மேலும், தாமரைச்செல்வி அவர்களுடைய படைப்புகளில், 1994-ல் 'வேள்வித் தீ' என்ற குறுநாவல் வெளிவந்திருக்கிறது.

இவற்றைத் தவிர...

- 1977-ல் 'சுமைகள்',
- 1992-ல் 'விண்ணில் அல்ல விடிவெள்ளி',
- 1993-ல் 'தாகம்',
- 2003-ல் 'வீதியெல்லாம் தோரணங்கள்',
- 2004-ல் 'பச்சை வயல் கனவு',
- 2019-ல் 'உயிர் வாசம்'

என ஆறு நாவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இவற்றில் அவரது முதலாவது நாவல், அவரது 23-வது வய தில் வெளிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் வெளியான 'உயிர் வாசம்' என்ற நாவல், அவரது 66-வது வய தில் வெளிவந்திருக்கிறது. இந்த 'உயிர்வாசம்' நாவலை அவர் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து வந்த பின்னர் எழுதியி ருக்கிறார் என்பதும் இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்த நாவலை எழுதும் போது அவருக்கிருந்த சவால்களை அவர் எப்படிக் கடந்து வந்தார் என்பதை ஒரு தடவை என் னோடு பேசும்போது சொல்லக் கேட்டிருக்கிறேன்.

வன்னி மண்ணின் சிற்றூர் ஒன்றில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு சாதாரண பெண் படைப்பாளி, அவுஸ்திரேலிய நாட்டிற் குக் குடிபெயர்ந்து வந்து, அந்த மண்ணின் களத்தைப்

பகைப்புலமாக்கி, ஒரு நாவலை எழுதுவதென்பது இலேசான காரியமல்ல. முற்றிலும் புதிய ஒரு நிலம், புதிய மனிதர்கள், புதிய கலாசாரம், புதிய மொழி என முன்னெப்போதும் அனுபவத்தில் இருந்திராத, புதியதொரு கதைக்களத்தில் பாத்திரங்களை நடமாடச் செய்வது என்பது சாதாரண விடயமில்லை. அது ஒரு பெரிய சவால்! மிகுந்த கவனத்துடன் களமிறங்கி, அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

மேலைநாட்டுக் கலாசாரத்தை, மனிதர்களை, அந்த மண்ணை பகைப்புலமாகக் கொண்ட பல கதைகளை ஈழத்து எழுத்தாளர்கள் ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள். அது மறுப்பதிற்கில்லை. உதாரணமாக, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், அ. முத்துலிங்கம் போன்ற சிலர் அந்நிய நாட்டு வாழ்வியலை, கலாசாரத்தை, அனுபவங்களை மையமாக வைத்து, பல படைப்புகளை எமக்குத் தந்திருக்கிறார்கள். அவற்றில் பல அவர்களது சுய தரிசனங்களின் பிரதிபலிப்பாக இருப்பதையும் நாம் காணலாம்.

இங்கு தாமரைச்செல்வியின் ‘உயிர்வாசம்’ நாவல் என்பது ஈழத்தில், வன்னி மண்ணிலிருந்து போரிலே சிக்குண்டு, அதிலிருந்து மயிரிழையில் தப்பி, படகு மூலம் எண்ணற்ற கனவுகளை சுமந்துகொண்டு அவுஸ்ரேலியாவுக்கு வந்துசேரும் மனிதர்களின் கஷ்டங்கள், வலிகள், உயிரிழப்புகள் என அந்த மனிதர்களின் வாழ்வை சொல்கிறது. அந்த மனிதர்களின் கதையோடு 500 பக்கங்கள் வரை நகர்கிறது.

இந்த வகையிலே எழுபது எண்பதுகளில், இலங்கையில் எழுதிக்கொண்டிருந்த பல பெண் எழுத்தாளர்களில், விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பவர்கள்.

ஈழத்தில் குறமகள், யாழ்நங்கை, குந்தவை, கோகிலா மகேந்திரன், ஜனகமகள் சிவஞானம், மண்டூர் அசோகா... இந்த வரிசையில் எண்பதுகளில் வேறும் சில இளம்பெண் படைப்பாளிகள் இணைந்துகொண்டார்கள். இவர்களில் பலர் குறிப்பிட்ட காலங்களில் மெல்ல மெல்லக் காணாமலேயும் போயிருக்கிறார்கள்.

அதற்குக் காரணம் ஈழத் தமிழ் சமூகத்தினரிடையே இருக்கும் பெண்களுக்கான சில கட்டுப்பாடுகள், குடும்பச் சுமைகள், கலாசாரச் சிக்கல்கள் என. இவை தவிர, முக்கியமாகத் தமிழ் இனத்தின் மீதான வன்முறைகள், போர்க் கெடுபிடிகள், அதன் விளைவாக, அமைதியற்ற வாழ்வு, மரணம் என 1983-ல் ஆரம்பித்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட போர்ச் சூழல், எல்லோரையுமே புரட்டிப்போட்டிருந்தது. அப்போது எழுதுவதற்கு நிறைய விடயங்கள் இருந்தன. பேசுவதற்கு நிறைய தேவைகள் இருந்தன. ஆனாலும் எழுத்தையும் குரலையும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் அங்கே பறிபோயிருந்தன.

தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள், துயரங்களை துணிந்து எழுத்தில் வெளியே கொண்டு வருபவர்கள் அரச கூலிப்படைகளால் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். எத்தனையோ தமிழ் நிருபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் மாற்றியக்கத்தினரால், இனந்தெரியாதோரால், இராணுவ ஒட்டுக்குழுக்களால் கொல்லப்பட்ட கதைகள் எமது மண்ணில் நிறைய இருக்கிறது.

இத்தகைய ஒரு சூழலில், இவையெல்லாவற்றையும் கடந்து, இற்றை வரை தொடர்ந்து 50 வருடங்களாக சிறுகதைகள், நாவல்கள் என எழுதிக்கொண்டேயிருக்கும் ஒரு இலங்கைத் தமிழ் பெண் எழுத்தாளர் என்றால் தாமரைச்செல்வி அவர்களை என்னால் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இருக்கிறது.

அதற்கு ஒரு முக்கியமான காரணமும் இருக்கிறது. தாமரைச் செல்வி அவர்கள் எப்போதும் சாதாரண மக்களோடு மக்களாக, அவர்களில் ஒருவராக இருந்து, அந்த மக்களின் அவலங்களை உள்வாங்கி, தன் படைப்புகளை முன்வைத்துக் கொண்டிருந்தார். அவர் போர்க்களத்திற்குள் தன் கண்களைக் கொண்டு சென்று ஆராயவில்லை. அதுபற்றித் தேடவில்லை. தன்னைச் சுற்றியிருக்கும் எளிய மனிதர்களின் வாழ்வியலை, அவர்களின் சந்தோசங்களை, துயரங்களை, ஏக்கங்களை என... அவர் சுயமாக தரிசித்தவற்றைத் தன் எழுத்துகளில் கொண்டுவந்தார்.

ஒரு போராளியின் போராட்ட வாழ்வை அவர் எழுதவில்லை. அவர்களின் குடும்ப வாழ்வை எழுதினார். போராட்டத்தை அதற்கு வெளியே நின்று, மக்களோடு மக்களாக நின்று நோக்கியதால், அவரின் கதைகள் அனைத்திலும் போரின் தாக்கங்கள் ஏற்படுத்திய வலிகள், இழப்புகள் தான் அதிகம் பேசப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

தாமரைச்செல்வி அவர்கள் வாழ்ந்த, கிளிநொச்சி, பரந்தன் என்ற இடத்தில் குமரபுரம் என்ற கிராமத்தில் இருக்கும் நெல் வயல்களும், அந்த மண்ணின் மணமும், நெற்கதிர்களின் வாசனையும் அவரது கதைகளில் எப்போதும் மணம் வீசிக் கொண்டேயிருக்கும்.

அவருடைய படைப்புகளில் நான் பார்த்த இன்னுமொரு நுட்பமான அம்சம், ஆண் பாத்திரங்களை வெகு லாவகமாக தன் படைப்புகளில் உலாவ விட்டிருப்பார். எத்தனை ஆண் பாத்திரங்களானாலும் அவர்களை தன் கட்டுக்குள் வைத்து நகர விட்டிருப்பார். அதில் வரும் ஆண் பாத்திரங்கள் தன்மையில் பேசுவதாக பல கதைகளை எழுதியிருக்கிறார்.

ஒரு பெண் படைப்பாளிக்கு ஒரு ஆண் பாத்திரத்தை வெகு தத்ரூபமாகப் புரிந்துகொண்டு, அப் பாத்திரம் தன்மையில் கதைசொல்வதாக அந்தக் கதையை நகர்த்துவதென்பது அத்தனை எளிதான விடயமில்லை. அதற்கு ஆண்களின் மனதை நன்கு தெரிந்தும் புரிந்தும் வைத்திருக்க வேண்டும். ஆனால் தாமரைச்செல்விக்கு, அது கைவந்த கலை என்பதை நான் அவரின் பல படைப்புகளினூடாக அவதானித்திருக்கிறேன். வெகு தைரியமாக, ஆண் கதாபாத்திரங்களினூடாக, தனது கதைகளை அழகாக எடுத்துச் சென்றிருப்பார். அது அவருக்கேயுரிய ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்று நான் கருதுகிறேன்.

இந்த வகையில், பெண் மனதின் இரகசியமான பக்கங்களை ஒரு ஆண் படைப்பாளியான தி. ஜானகிராமன் வெகு துணிச்சலோடு தைரியமாக பல நாவல்களில் எழுதியிருப்பார். அதற்கு முக்கிய உதாரணமாக ஜானகிராமனின் ‘மரப்பசு’வை சொல்லலாம்.

அதற்கு ஈடான துணிச்சலை தாமரைச்செல்வியின் ஆண் பாத்திரப் படைப்புகளில் நாம் காணலாம்.

இதற்கு, அவரது குடும்ப அமைப்பு முக்கியமானதாக இருக்க லாம் என்று நான் நினைக்கிறேன். அவரின் தாய் தந்தைய ருக்கு 11 பிள்ளைகள். அவர்களில் மூவர் ஆண்கள். மிகுதி எட்டுப்பேரும் பெண்கள். தாமரைச்செல்வி அவர்கள் குடும் பத்தில் மூத்தபிள்ளை. அதிலும் பெண். அவர்களது குடும்பம் ஒரு விவசாயக் குடும்பம். நெல், வயல், தோட்டம், துரவு, 100 பசுமாடுகள் கொண்ட மாட்டுப் பண்ணை என அவர் வாழ்ந்த சூழலும், அவரது குடும்பத்தில் அவருக்குக் கீழேயிருந்த பத்து சகோதர சகோதரிகளுடனான அவரது வாழ்வும், அவ ருக்கு அத்தனை அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது. அவர் குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதனால் அவர் வகித்த பா கம் ஒரு தாய்க்கு இணையாக இருந்திருக்கிறது. அதனால் அவரது கதைகளில் வரும் ஆண் பாத்திரங்கள் அத்தனை தத்ரூபமாக அமைந்திருக்கிறார்கள்!

அவர் எத்தகைய ஒரு சூழலுக்குள் இருந்து கொண்டு இத் தனை படைப்புகளை எழுதியிருக்கிறார் என்று பிரமிக்க வைக்கும் சம்பவங்கள் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரது வீட்டில் பெருஞ்சமையல் நடக்காத நாட்களே கிடை யாது. ஒரு தடவை ஈரோஸ் பாலகுமார் அவர்கள் கவிஞர் கரு ணாகரன் அவர்களிடம் சொல்லியனுப்பியிருந்தாராம் 'சமை யல் எல்லாரும் செய்யலாம், ஆனால் கதைகள் எல்லாராலும் படைக்க முடியாது என்று அவளிடம் போய் சொல்லு' என்று. அதனை அகப்பையும் கையுமாக நின்றுகொண்டிருந்த தாம ரைச்செல்வி அவர்களிடம் கருணாகரன் அவர்கள் வந்து சொன்னதாக கேள்விப்பட்டிருக்கிறேன். இது ஒன்று போதும் அவர் எத்தகைய ஒரு சூழலிற்குள் இருந்துகொண்டு இத் தனை படைப்புகளையும் உருவாக்கியிருக்கிறார் என்று.

மேலும், தாமரைச்செல்வி அவர்களின் சில படைப்புகள் வேற்று மொழியிலும் வந்திருக்கின்றன என்பது எல்லோருக் கும் தெரிந்திருக்குமோ தெரியாது.

சில கதைகள் குறும்படங்களாகவும் வந்திருக்கின்றன.

பல கதைகளுக்கு விருதுகள் கிடைத்திருக்கின்றன. அவை பற்றி நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவருடைய ஐந்து சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெ யர்க்கப்பட்டுள்ளன.

அவற்றில் 'பாதை' என்ற சிறுகதை ஏ. ஜே. கனகரத்னா அவர் களாரலும் 'இடைவெளி' என்ற சிறுகதையும், 'வாழ்க்கை' என்ற சிறுகதையும் பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்களால் 'The Gab' 'The Life' என்ற பெயர்களிலும் 'முகமற்றவர்கள்' என்ற சிறுகதை 'Faceless People' என்ற தலைப்பில் பெ. இரா ஜசிங்கம் அவர்களாலும் 'எங்கேயும் எப்போதும்' என்ற சிறு கதை 'The Invitable' என்ற தலைப்பில் கே.எஸ். சிவகுமாரன் அவர்களாலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் இவரது மூன்று சிறுகதைகள் சிங்களத்திலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

'ஒரு மழைக்கால இரவு' என்ற சிறுகதை திருமதி. ஜெயச்சித் திரா அவர்களாலும் 'வன்னியாச்சி' என்ற சிறுகதை திருமதி. பெ. அநுராதா ஜெயசிங்க அவர்களாலும், 'வாழ்க்கை' என்ற சிறுகதை பேராசிரியர் பியசீலி விஜயமான அவர்களாலும் சிங் களத்திலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

மேலும், இவரது 'ஓட்டம்' என்ற சிறுகதை எல்வின் மாசிலா- மணி அவர்களால் ஜெர்மன் மொழியிலே மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இவற்றை விட, இவரது 'பசி' என்ற சிறுகதை தமிழ்நாட்டைச் சேர்ந்த இமயவர்மன் அவர்களாலும் 'இடைவெளி' என்ற சிறு கதை சினிமா இயக்குனர் 'உதிரிப்பூக்கள் புகழ் மகேந்திரன்' அவர்களாலும் 'பாதணி' என்ற சிறுகதை ஜான் மகேந்திரன் அவர்களாலும் 'சாம்பல் மேடு' என்ற சிறுகதை திரு. திலகன் அவர்களாலும் குறும்படமாக்கப்பட்டிருக்கிறது.

இவற்றை விட, இவரது பல நாவல்கள் பல விருதுகளைப் பெற்றிருக்கின்றன.

குறிப்பாக 2004-ம் ஆண்டில் வெளிவந்த இவரது 'பச்சை வயல் கனவு' என்ற நாவல் இலங்கை தேசிய சாகித்திய மண் டல விருதையும், யாழ் இலக்கிய விருதையும் பெற்றிருக்கி றது.

இவர் அண்மையில் எழுதிய 'உயிர்வாசம்' என்ற நாவல் தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் வழங்கிய சிறந்த நாவல் விருதினை பெற்றிருக்கிறது.

இவை தவிர, ஒரு மழைக்கால இரவு (சிறுகதைத் தொகுப்பு), வீதியெல்லாம் தோரணங்கள் (நாவல்), தாகம் (நாவல்), வேள் வித் தீ (குறுநாவல்) ஆகியவையும் விருதுகளைப் பெற்றிருக் கின்றன.

தாமரைச்செல்வி அவர்களது 50 வருடகால இலக்கிய வாழ் வில், அவரது படைப்புகளினூடாக, அவருக்குக் கிடைத்த பெறுமதிமிக்க கௌரவங்கள் பல.

- 2000-இல் அக்கராயன் மகளிர் அபிவிருத்தி நிலைய 'சாத னைப் பெண்மணி விருது.
- 2001-ல் வட-கிழக்கு மாகாணசபையின் ஆளுநர் விருது.
- 2002-ல் கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் 'இலக்கியமணி' பட் டம், தங்கப் பதக்கம்.
- 2003-ல் கொழும்பு கலை இலக்கியக் கழக விருது.
- 2010-ல் தமிழ்நாடு சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது.
- 2011-ல் ஒளிச்சுடர் விருது.
- 2012-ல் தமிழியல் விருது.
- 2015-ல் யாழ் மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியம் வழங் கிய இலக்கியத்திற்கான கௌரவ விருது.

என ஏராளம் விருதுகளை இவரது படைப்புகள் இவருக்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றன.

இவை தவிர, இவருடைய இரண்டு சிறுகதைகள் பாடத்திட்டத் தில் சேர்க்கப்பட்டுள்ளன. 'இன்னொரு பக்கம்' என்ற சிறு

கதை இலங்கை கல்வியமைச்சின் தமிழ் மொழிக்கான பதினோராம் ஆண்டின் பாடத்திட்டத்திலும், 'பசி' என்ற சிறுகதை தமிழ்நாடு கல்வியமைச்சின் பதினொராம் ஆண்டுப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட்ட இவரது சிறுகதைகளைப் பற்றிச் சொல்வதானால், அவற்றில் சொல்லப்படுகிற செய்தியைத் தவிர, அதனைச் சொல்லுகிற விதமும் அவ்வளவு சிறப்பாக இருக்கும். அவற்றை வாசிக்கும் போது இன்னுமொரு படைப்பாளியும் அதிலிருந்து கற்றுக்கொள்வதற்கு இன்னும் ஏதோ இருப்பது போலத் தோன்றும்.

அவரது கதையோட்டத்திலிருக்கும் சமநிலையான வேகம், ஒவ்வொரு பாத்திரங்களின் மீதும் கதையாளி வைத்திருக்கும் கனிவான பார்வை, சாதாரணமாக நாம் கண்டுகொள்ளத் தவறியிருக்கும் நுட்பமான பக்கங்கள் என அதனை வாசித்து முடித்தவுடன் மனதிற்குள் ஏற்படும் மெல்லிய அதிர்வை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இந்த விடயத்தை இத்தனை தெளிவாக அருமையாக வெளிக்கொண்டு வரலாமா என்று அவை இன்னுமொரு படைப்பாளியை நினைக்க வைக்கும்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தாமரைச்செல்வியின் கதைகள் பற்றிக்கூறும் போது...

'மொடேர்ன் ஆர்ட்டை பார்ப்போருக்கு அதனை மிகச் சுலபமாக வரைந்து விடலாம் போலத் தோன்றும். ஆனால் நாம் நினைப்பதைப் போல அதனை அத்தனை இலகுவாக வரைந்துவிட முடியாது. ஏனெனில் அது உச்சமான படைப்பாற்றலின் வெளிப்பாடு என்பதைனை நாம் வரையத் தொடங்கும் போதே உணர்ந்து கொள்வோம்...' என்று சொன்னதாக கவிஞர் கருணாகரன் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பார். அது எத்தனை உண்மையானது என்பது அவரின் கதைகளை வாசிப்போருக்கு நிச்சயம் புரிந்திருக்கும்.

ஏனெனில் தாமரைச்செல்வியின் கதை மொழி மிகவும் எளிமையானவை. மிகச்சாதாரண பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அது அமைந்திருக்கும். அவருடைய கதைகளிலிருக்கும் உண்மைத் தன்மை, மனித வாழ்வியலோடு இரண்டறக் கலந்துவிடும் தன்மை கொண்டவை!

அவருடைய கதைகளில் பொய்மையும் அதீத புனைவுகளும் காணப்படுவதில்லை. அவருடைய கதைகள் வாசிக்கும் போது எமக்குக் கிடைக்கும் அனுபவம் என்பது கதைப் படிமங்கள். காட்சிகளாக விரிந்து செல்வதை, ரிதம் பிசகாமல் ஓடும் ஒரு நதியின் வழியே மிதந்து சென்று தரிசிப்பது போல் இருக்கும்.

அவரது எழுத்து நடைக்கு ஒப்பாக, மலையாளக் கதைகள் சில இருக்கின்றன என்றும் அவை திரைக்கதைக்குரிய கட்டமைப்பையும், கதைகூறும் முறைமையையும் கொண்டுள்ளதாகவும் திரைப்பட இயக்குனர் மகேந்திரன் அவர்கள் குறிப்பிட்டிருப்பார்.

தாமரைச்செல்வி பற்றி இன்னுமொரு விடயம் சொல்ல வேண்டும். அவர் எழுத்தாளர் மட்டுமல்ல ஓர் ஓவியரும் கூட. அவர் ஆரம்ப காலத்தில் எழுதிய சிறுகதைகளுக்கு அவரே ஓவியமும் வரைந்து கொடுத்திருக்கிறார். பல சஞ்சிகைகளிலும் ஒரு சில பத்திரிகைகளிலும் அவை பிரசுரமாகியிருக்கின்றன என்று அறிகிறேன். அவை தவிர பாடசாலைக் காலங்களில் அவர் மாணவர்களுக்காக நாடகப் பிரதிகளை எழுதியிருக்கிறார்.

மேலும் அவர் வாழ்ந்த ஊரில் இளைஞர்கள் சிலர் சேர்ந்து 'இளைஞர் வட்டம்' என்ற ஒரு அமைப்பை ஆரம்பித்திருந்த நேரம், இவரிடம் வந்து, அதற்கான ஒரு வாசகம் எழுதித்தரும் படி கேட்டிருக்கிறார்கள். அதற்காக அவரும் ஒரு வாசகம் எழுதிக் கொடுத்திருந்தார்.

***'சிறப்பாய் வளரும் சின்னக் கிராமம்***
***சிந்திக்க வைப்போம் அது எங்கள் இதயம்'***

இது தான் அவர் எழுதிக்கொடுத்த அந்த வரிகள்.

தாமரைச்செல்வி அவர்கள் வெறுமனே கதைகளை எழுதிக் கொண்டிருக்கும் ஒரு எழுத்தாளர் அல்ல. அவர் மனிதர்களை நேசிப்பவர். கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருந்த தனது ஊர் மக்களின் வாழ்வை செழுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல நற்காரியங்களை இன்றைக்கும் செய்துகொண்டிருப்பவர்.

அவரின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் அவரின் குடும்பத்தினர், சகோதரர்கள், திருமணத்தின் பின்னர் அவரை விடாது எழுதுவதற்கு உறுதுணையாக இருந்த அவரது கணவர் திரு. கந்தசாமி அவர்கள், (அவரும் ஒருகாலத்தில் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்தவர்) அவரின் இரண்டு பெண் பிள்ளைகள் என எல்லோரும் அவரின் எழுத்தை ஊக்குவிப்பவர்களாகவே இதுவரையில் இருந்திருக்கிறார்கள். இதனை மிகுந்த மனநிறைவோடு ஒரு தருணத்தில் தாமரைச்செல்வி அவர்கள் என்னோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்கள் பற்றி சொல்வதற்கு இதற்கு மேலும் இருக்கின்றது.

தொடர்ந்து, தாமரைச்செல்வி அவர்களின் படைப்புகள் வெளிவர வேண்டும். அவரின் இலக்கியப் பணி 50 வருடங்களோடு நின்றுவிட வேண்டியதில்லை. எழுதத் தோன்றும் போதெல்லாம் தாமரைச்செல்வி அக்கா எழுத வேண்டும். அவரின் அற்புதப் படையல் தொடரட்டும்! அவர் நிறைந்த ஆரோக்கியத்தோடும், நிறைந்த மனநிறைவோடும் பல்லாண்டுகள் வாழ்ந்து, அவர் மனதிற்கு அமைதி தரும் எல்லா விடயங்களோடும், எழுத்துப் பணியையும் தொடர வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.



chandra.ravindran@thaiveedu.com

# நிழல்



**– தாமரைச்செல்வி**

அம்மா குரல் உயர்த்தி கதறினாள். வந்திருந்த அத்தனை பெண்களின் அழுகை ஒலியையும் மீறிக்கொண்டு அம்மாவின் குரல் தனியாகக் கேட்டது. அந்த சின்ன விறாந்தையிலும் முற்றத்திலும் ஊரே கூடியிருந்தது. காலை வெயில் விறாந்தையின் பாதி இடம் வரை பரவியிருந்தது. விறாந்தை நடுவே போடப்பட்டிருந்த வாங்கின் மீது வைத்த பெட்டிக்குள் கண் மூடி ஆதவன் படுத்திருந்தான்.

‘ஐயோ ராசா... ஏனப்பன் இப்பிடிச் செய்தாய்... எங்களை விட்

டிட்டுப் போக உனக்கு எப்படியடா மனசு வந்தது... என்ர கட வுளே...'

அம்மாவின் அழுகைக்கு யாராலும் அணைபோட முடிய வில்லை. அமுதா அருகே அமர்ந்து அம்மாவின் தோளை அணைத்துக் கொண்டாள். அவள் அணைப்பை உணரும் போதெல்லாம் அம்மா வெடித்துக் கொண்டு அழுதாள். அவ ளும் அம்மாவும் தனித்துப் போய் நிற்கும் நிலையை தோற்று வித்துப் போன பிள்ளையை நினைத்து கண்ணீர் கொட்டிக் கொண்டேயிருந்தது. அவள் ஆதவனின் முகத்தைப் பார்த் தாள். இருபத்துமூன்று வயசுக்கு குழந்தை முகம் மாறாமல் இருந்தான்.

பதினைந்து வயது வரை அம்மாவின் மடியிலேயே படுத்து வளர்ந்த பிள்ளை. அவர்களின் அனைத்து எதிர்பார்ப்புகளும் அவனைச் சுற்றியே இருந்தது. இவனால் தான் இந்தக் குடும் பத்தின் கஷ்டங்கள் தீரப்போகிறது... இவனால் தான் சந்தோ ஷங்கள் கிடைக்கப் போகிறது...

எத்தனை எத்தனை நம்பிக்கைகள்...

அத்தனை நம்பிக்கைகளையும் ஒரு நொடியில் சிதறடித்து விட்டுப் போய்விட்டான்.

பக்கத்தில் இருந்த வாணிச் சித்தி தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

'கம்பஸில படிச்சு பெரிய ஆளாய் வருவாய் எண்டு பார்த்துக் கொண்டிருக்க இப்பிடி செய்திட்டியேடா... பழிச் சொல்லு தாங்காமல் இப்பிடி ஒரு முடிவை எடுத்திட்டியே அப்பன்... நீ ஒரு நாளும் பிழை செய்யமாட்டாய். நாங்கள் உன்னை நம்பி றம். பிறகு ஏன் இப்பிடி செய்தாயடா... அம்மாவையும் அக்கா வையும் நினைச்சுப் பார்க்காமல் விட்டிட்டியே... ஐயோ... தாங்க முடியுதில்லை...'

சித்தியின் அழுகையில் மட்டுமில்லை ஊர் பெண்களின் அழு கையிலும் பொய்மை இல்லை. மனம்நொந்து விடும் கண்ணீர் ஒரு அப்பாவி இளைஞனுக்கானது.

'மிதிச்ச புல்லு சாகாது. அப்பிடிப்பட்ட அப்பிராணிப் பெடி யன். அவனைப்போய் போதை மருந்து பாவிச்சவன் எண்டு சொல்லிப் போட்டாங்களே... பாவியள்.'

என்ற புலம்பல்தான் எல்லோர் வாயிலிருந்தும் வந்து கொண் டிருந்தது.

அமுதா வெள்ளைத் துணிக்குள் புதைந்து போயிருந்த ஆத வனின் முகத்தைப் பார்த்தாள். தற்கொலை செய்யும் துணிவு எப்படி இவனுக்கு வந்தது. அவ்வளவு தூரம் மனசு உடைந்து போனானா... தற்கொலை செய்யப்போகும் அந்த கடைசி நேரத் தருணம் என்னென்ன நினைத்திருப்பான்... சத்தம் வரா மல் அழுதிருப்பான்... மனதுக்குள் சுக்கு நூறாய் நொறுங்கியி ருப்பான்... அந்த உணர்வு அவனுக்குள் எத்தனை துன் பத்தை கொடுத்திருக்கும்.

ஐயோ... என்ர அப்பன்...

கண்ணீர் அடக்க மாட்டாமல் பொங்கிக்கொண்டு வந்தது.

அதிர்ந்து பேசத் தெரியாதவன். சொல்வதையெல்லாம் தலை யசைத்து கேட்டுக் கொள்பவன். அம்மாவும் அக்காவுமே உல கம் என்று வாழ்ந்திருப்பவன். எப்படி ஒரு கணத்தில் தற் கொலை செய்யும் முடிவை எடுத்திருப்பான்...

அப்பா இல்லாத குடும்பம். இரு குழந்தைகளை கை விட்டுப் போன அப்பா. இதுவரை எங்கே என்று தெரியாது. இருக்கி றாரா இல்லையா என்பதும் தெரியாது. அம்மாதான் ஓடி ஓடி எல்லா வேலைகளையும் செய்து அவர்களை வளர்த்து ஆளாக்கினாள். அமுதாவுக்கு படிப்பு அவ்வளவாக வர வில்லை. வீட்டு நிலைமை அவளை படிப்பை விட்டு உழைப் பைத் தேட வைத்தது.

ஆதவனுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தபோது அவன் படிப்புத் தேவைக்காக புடவைக் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். சித்தப்பா தெரிந்தவர் மூலம் கதைத்து அந்த வேலையை எடுத்துத் தந்தார். காலை ஒன் பது மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை நின்றபடியே வேலை செய்ய வேண்டும். கால் வலியோடு சைக்கிள் ஓடி வீடு வந்து சேர்வதற்குள் களைத்து விடுவாள். அம்மாவின் சுமைகளை பகிர்ந்து கொள்ள முடிந்ததில் அந்த களைப் பெல்லாம் பெரிதாகத் தெரிந்ததில்லை. அந்த வருமானம் வீட் டின் கஷ்டங்களை ஓரளவு போக்கியது. ஆதவனையும் படிக்க வைக்க முடிந்தது. அம்மாவின் கனவு ஆதவன் படித்து ஒரு நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என்பது. அதற் காக தங்களை வருத்தி அவனுக்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக் கொண்டார்கள்.

இதோ இன்னும் ஒரு வருடம் படித்தால் பட்டதாரியாக வந்து விடுவான். நல்ல வேலை தேடிக்கொண்டு அவர்களை நன்றா கப் பார்த்துக் கொள்வான் என்ற எதிர்பார்ப்பு ஒரு காலை நேரத்தில் கனவாக கலைந்துவிட்டது.

ஒரு வாரமாகவே பிரச்சினைகள் நடந்து கொண்டிருந்தன. போதைப்பொருள் வைத்திருந்ததாகவும் பாவித்ததாகவும் சில மாணவர்களை விசாரணைக்கு உள்ளாக்கியிருந்தார் கள். அவர்களில் ஆதவனும் ஒருவன் என்று தகவல் வந்ததும் பதறியடித்துக் கொண்டு அம்மாவையும் கூட்டிக் கொண்டு அமுதா போனாள். அறைக்குள் அமர்ந்திருந்த ஆதவன் யன் னலுக்கு வெளியே அவர்களைக் கண்டதும் வெடித்துக் கொண்டு அழுதான். அவனுக்கு கிட்ட போக முடியவில்லை. யாரிடம் விசாரிப்பது என்றும் தெரியவில்லை. அதன் பிறகு அவனை பார்க்க முடியவில்லை. விசாரிக்க எங்கேயோ கொண்டு போனதாக சொன்னார்கள்.

அம்மா அழுது கொண்டேயிருந்தாள். அவளைத் தேற்றுவதே பெரும்பாடாய் இருந்தது. சித்தப்பாதான் எங்கெங்கோ அலைந்து திரிந்தார். நான்காம் நாள் பொழுதுபடும் நேரம் சித்தப்பா ஆதவனைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தார்.

'விசாரித்து விட்டு போகச் சொல்லி விட்டார்கள். கூப்பிடும் போது வரச் சொன்னார்கள்'. என்றார் சித்தப்பா. ஆதவன் அம் மாவின் மடியில் விழுந்து அழுதான்.

‘அழாதையப்பன். நீ பிழை செய்ய மாட்டாய் எண்டு தெரியும்.’

‘நான் அந்தப் பெடியளோட நிண்டனான் தான். ஆனா நான் பாவிக்கேலை. எனக்கு பயமாக் கிடக்கு. வெளியில எல்லாருக்கும் கதை போயிட்டுது. அவமானமாக் கிடக்கு.’

முகம் பொத்தி அழுதவனைத் தேற்ற முடியாமல் அம்மாவும் அவளும் கலங்கிப் போய் நின்றார்கள்.

‘உன்னைப் பற்றித் தெரிஞ்சவை அப்பிடி பிழையாய் கதைக்க மாட்டினம். நீ மனதைப் போட்டுக் குழப்பாதை...’

சித்தப்பாவும் சித்தியும் ஆறுதல் சொன்னார்கள்.

ஆதவன் இடிந்து போய் அமர்ந்திருந்தான். சாப்பிடு என்றால் கூட கண்களிலிருந்து கரகரவென்று நீர் வழியத் தொடங்கிவிடும்.

‘விசாரிச்சுப் போட்டு உன்னில பிழை இல்லை எண்டு சொல்லிவிட்டிட்டினம்தானே. பிறகு ஏன் கவலைப்படுறாய். இப்பிடி எத்தனையோ பிரச்சினைகள் வரும், போகும். உதையெல்லாம் பெரிசாய் எடுத்துக்கொள்ளாத, விடு.

அமுதா ஆதரவாகச் சொன்னாள். அவன் தோளை அணைத்துக்கொண்டாள்.

‘உன்னை நாங்கள் நம்பிறம். இந்த ஊரும் நம்புது. பிறகு மற்றவையைப் பற்றி நீ ஏன் கவலைப்படுறாய்’.

தலையை குனிந்தபடி அமர்ந்திருந்தவனை கவலையோடு பார்த்தாள்.

‘அந்தப் பெடியளோட நீ ஏன் பழகினனி’.

‘இல்லை... சேர்ந்து படிக்கிற பெடியள் எண்டுதான்...’

‘சரி. ஆனால் அவங்கள் சரியில்லை... போதை மருந்து பாவிக்கிறவங்கள் எண்டு தெரிஞ்சால் நீ விலகியிருக்கலாமே’

அவன் பேசாமல் இருந்தான்.

‘சரி... சரி. விடு. போனது போகட்டும். இனி படிப்பில கவனத்தை வை. அழாதையடா... எழும்பு’.

இரவு சாப்பிடாமலே அழுது கொண்டு படுத்துவிட்டான். அம்மாதான் பதறிக்கொண்டேயிருந்தாள்.

‘விடம்மா. கொஞ்சம் அவன் மனம் தேறட்டும். சரியாய் நொந்து போனான். படுத்து எழும்பட்டும்.’

இரவு அம்மாவின் இருமல் சத்தம் வெகு நேரம் கேட்டுக்கொண்டிருந்தது. அமுதாவும் விழித்துக் கொண்டேதான் படுத்திருந்தாள். தம்பியின் நிலை கவலையைத் தந்தது. சத்தமற்ற இரவு அமைதியை தருவதற்குப் பதிலாக சஞ்சலத்தையே தந்தது. இந்தப் பழி தரும் உணர்விலிருந்து அவன் மீண்டுவிட வேண்டும். இன்னும் அவனுடன் ஆதரவாக பேசி அவனை சரிப்படுத்த வேண்டும். உறக்கத்துக்கும் விழிப்புக்குமான போராட்டத்தில் விடிந்தது தெரியவில்லை.

அம்மா போட்ட கூப்பாட்டில் பதறியடித்து எழுந்து ஓடினாள். பின்பக்கம் நின்ற மாமரக் கிளையில் ஆதவன் தூக்குப் போட்டு தொங்கிய காட்சி கண்களில் அறைந்தது. அவர்கள் அலறிய அலறலில் அக்கம் பக்கத்து சனங்கள் ஓடி வந்தார்கள்.

காலாகாலத்துக்கும் அந்தக் காட்சி நினைவில் இருந்து மறையப்போவதில்லை. மாமரத்தைப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சம் பதறப்போகிறது. எவ்வளவு தூரம் மனம் நொந்திருந்தால் இப்படி ஒரு முடிவை எடுத்திருப்பான்... அவனைத் தனிமையில் படுக்கவிட்டது எவ்வளவு பெரிய தவறு...

அமுதாவால் தாள முடியவில்லை. அம்மாவின் கதறலை அடக்க முடியவில்லை. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதே அவளுக்குப் புரியவில்லை. விக்கித்திப் போய் அமர்ந்திருந்தாள்.

சித்தப்பா, சித்தியின் குரல்கள் கனவில் கேட்பது போல உணர்ந்தாள். என்ன செய்கிறார்கள்... என்ன பேசுகிறார்கள்... ஒன்றையும் உணர முடியவில்லை.

காவல்துறை விசாரணை என்று வந்து நின்ற போது திக்கென்றது.

‘தற்கொலை செய்யுமுன் கடிதம் ஏதும் எழுதி வைத்தானா... பார்த்தீர்களா...’ என்றார்கள்.

பார்க்கத் தோன்றவில்லை. கண்ணில் ஏதும் பட்டதாகவும் நினைவினில் இல்லை.

அமுதா பதட்டத்தோடு ஒதுங்கி நின்றாள்...

அவர்களோடு சேர்ந்து சித்தப்பாவும் நின்று தேடினார். ஆதவன் படுத்திருந்த அறையில் நிலத்தில் விரிக்கப்பட்ட பாயும் போர்வையும் அப்படியே இருந்தது. பக்கத்தில் அவன் படிக்கும் மேசை, அவன் பாவித்த சிறிய அலுமாரி, சுவரில் தொங்கும் அவனது உடுப்புகள்.

எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டினார்கள்.

கடிதம் என்று எதுவும் அகப்படவில்லை.

அவர்கள் போனதும் சித்தப்பா நொந்த குரலில் கேட்டார்.

‘இரவு என்ன பிள்ளை நடந்தது. அவன் என்ன கதைச்சவன்.’

அமுதாவுக்கு குரல் அடைத்துக் கொண்டது.

‘கவலையாய் இருந்தான் சித்தப்பா. நீ எதுக்கும் கவலைப்படாத எண்டுதான் சொன்னனான்.

சாப்பிடாமல் படுத்திட்டான். விடிய பார்க்கிறம். இப்பிடி செய்து போட்டான்’ என்று சொல்லிக்கொண்டே வந்தவள்... முகத்தைப் பொத்திக் கொண்டு ஓவென்று அழுதாள்.

‘ராத்திரியும் சாப்பிடேலை... என்ர பிள்ளை பசிச்ச வயித்தோட போயிட்டானே... நான் இனி என்ன செய்வன்.’

சித்தியின் தோளில் கிடந்து அம்மா கதறினாள்.

ஒவ்வொரு அலுவலையும் சித்தப்பாவும் ஊர் ஆட்களும் நின்று செய்தார்கள். விறாந்தை நடுவே பெட்டிக்குள் எந்த சலனமும் இன்றி ஆதவன் படுத்திருந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆதவன் அவர்களை விட்டுப் போய்விடுவான். அவன் இல்லாத வெறுமையை இந்த வீடு எப்படி தாங்கப் போகிறது. இனி வரும் நாட்கள் அவர்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

அவன் உலவிய முற்றம், படுத்துறங்கிய அறை, அமர்ந்து சாப்பிட்ட அடுக்களை, உயிரை மாய்த்த மாமரம்... இவையெல்லாம் துயரத்தின் சாட்சிகளாக அமையப் போகின்றனவே...

என்ர கடவுளே...

அடி வயிற்றுக்குள் எதுவோ புரண்டு புரண்டு அடங்கியது. நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. அவன் இப்படிச் செய்வான் என்று கொஞ்சமும் யோசிக்காமல் விட்டமே என்று தன்னையே நொந்து கொண்டாள். நடு இரவில் ஒரு தடவை அவனை போய் பார்த்திருக்கலாமே என்று மனம் தத்தளித்துக் கொண்டேயிருந்தது. குற்ற உணர்வில் ஒடுங்கிப் போனாள்.

எல்லா இடங்களிலிருந்தும் விஷயம் கேள்விப்பட்டு தெரிந்தவர், உறவினர் என்று வந்து கொண்டே இருந்தார்கள். பெண்கள் அம்மாவையும் அவளையும் கட்டிக் கொண்டு அழுதார்கள். துக்கம் இன்னும் பொங்கிப் பெருகியது.

அமுதா அம்மாவின் அருகிலேயே அசையாமல் அமர்ந்திருந்தாள். விறாந்தையின் வெளி வாசலில் நின்றபடி சித்தப்பா சூழ்ந்திருந்த பெண்களுக்குள் யாரையோ தேடிக் கொண்டிருந்தார்.

சித்தி திரும்பி ‘அமுதா சித்தப்பா உன்னை ஒருக்கா வரட்டாம். போய் என்னெண்டு கேள்.’ என்றாள்.

அமுதா எழுந்து அமர்ந்திருந்த பெண்களை விலக்கி நடந்து வாசலுக்குப் போனாள். கால்கள் தொய்ந்து விழுந்து விடுவோமோ என்று பயந்து கொண்டே போனாள். முற்றத்தின் ஓரத்துக்குப் போய் ‘என்ன சித்தப்பா’ என்று கேட்டாள்.

‘மாத்தின காசு ஏதும் இருக்கே பிள்ளை. ஒரு இருநூறு ரூபா இப்ப தேவையாக் கிடக்கு’.

‘இருக்கும் எண்டு நினைக்கிறன் சித்தப்பா. பொறுங்கோ பார்த்துக் கொண்டு வாறன்’.

அவள் திரும்பி விறாந்தை கடந்து அறைக்குள் போனாள். சித்தப்பாதான் எல்லா செலவுகளையும் பார்த்துப் பார்த்து செய்கிறார். காசு கணக்கு பற்றி எதுவும் பேசவில்லை. பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு அவர் கேட்ட காசு இருந்திட வேணும். இம்மாத சம்பளக்காசில் அம்மாவிடம் கொடுத்தது போக சில்லறையாக ஏதும் இருக்கக்கூடும்.

அறை மூலையில் மேஜை மீது இருந்த கைப்பையை எடுத்து திறந்தாள். உட்பக்கம் பையுக்குள் கைவிட்டுத் துளாவி சில தாள்களை எடுத்தாள். இருநூற்றி இருபது ரூபா இருந்தது. இரண்டு நூறு ரூபா தாள்களை எடுத்துக் கொண்டு மிகுதியை உள்ளே வைத்தாள். அப்போதுதான் கவனித்தாள். கைப்பையின் உட்புறமாக நான்காக மடிக்கப்பட்ட வெள்ளைக் காகிதம் ஒன்று கண்ணில்பட்டது.

பகீரென்றது. பதட்டத்துடன் எடுத்து விரித்தாள்.

அமுதனின் கையெழுத்து. அவசர எழுத்தில் கிறுக்கலாய் தெரிந்தது.

அக்கா... என்னை எந்தப் பிழையும் செய்யமாட்டன் எண்டு எல்லாரும் நம்புகிறீர்கள். அதைக் கேட்கும் போதெல்லாம் என் மனம் குற்ற உணர்வில் தவித்துப் போகிறது. நான் பயத்தில பொய் சொல்லியிட்டன். அது என்னை உறுத்திக் கொண்டேயிருக்கிறது. உண்மை வெளிவரும் போது நீங்கள் துடித்துப் போய்விடுவீர்கள். அந்த நிலையை என்னால் நினைத்துப் பார்க்க முடியேலை. உனதும் அம்மாவினதும் முகத்தில் எப்படி விழிப்பேன். தெரியாமல் பிழை செய்து போட்டன். என்னை மன்னிச்சுக்கொள் அக்கா... அம்மாவைக் கவனமாய் பார்த்துக்கொள்... ஆதவன்.

அமுதா ஒரு கணம் உறைந்து போய் நின்றாள். அந்த எழுத்துக்களில் ஈரம் பட்டுக் காய்ந்திருந்தது. அழுது கொண்டே எழுதியிருக்கிறான்.

என்ர அப்பன்... மனம் பெருங்குரலில் ஓலமிட்டது.

‘அமுதா...’

அறைக்கு வெளியே சித்தியின் குரல் கேட்டது.

கண்களை துடைத்துக் கொண்டாள்.

மெல்ல வெளியே வந்தாள். முற்றத்தில் இறங்கி சித்தப்பாவிடம் காசைக் கொடுத்தாள்.

அப்போதுதான் உள்ளே நுழைந்த மனோகரி மாமி...

‘ஐயோ... அப்பிராணிப் பெடியனில இல்லாத பொல்லாத பழியைப் போட்டால் அது என்னெண்டு தாங்கும். பிழை செய்யிற பிள்ளையே இது. பாவம். மனம் நொந்து இப்பிடி செய்து போட்டுது... ஏன் அமுதா... அவன் ஏதும் கடிதம் கிடிதம் எழுதி வைச்சவனே... பார்த்தனீங்களே...’

என்று அழும் குரலில் கேட்டாள்.

‘இல்லை மாமி... அவன் ஒண்டும் எழுதி வைக்கேலை’.

அமுதாவும் அழுது கொண்டே சொல்லி விட்டு உள்ளே போனாள்.



thamaraichelvi@thaiveedu.com




காடுகள் ஏழ்மையை அழிக்கவல்லன. ஆனால், அவை பணப்பேய்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. மக்களிடமிருந்து அந்நியமாக்கப்பட்டு ஒட்டச் சுரண்டப்படுகின்றன. இந்தக் கட்டுக்கடங்கா வனச்சுரண்டல் இன்று இப்பேரண்டத்தையே அழிவின் விளிம்பிற்குத் தள்ளிக்கொண்டிருக்கிறது. சாதாரண மக்களையும் ஏழ்மைப் பாதாளத்திற்குள் வீழ்த்திக் கொண்டிருக்கிறது. அந்த ஏழ்மை வாழ்வு வறிய மக்களையும் வனாந்திரங்களை அழிக்க வற்புறுத்துகின்றது. இவ்வாறுதான் ஹெய்ட்டியின் (Haiti) வனாந்திரங்களும் கரிக்கட்டையாக்கப் படுகின்றன. அந்தக் கரிக்கட்டையின் கிறுக்கல்களின் தடத்தின் வழிதான் நாம் செல்லப்போகிறோம்.

ஹெய்ட்டி, வடக்கே அத்திலாந்திக் பெருங்கடலாலும், தெற்கே மேற்கிந்தியத் தீவுகளாலும், கிழக்கே டொமினிகன் குடியரசாலும் சூழப்பட்டுள்ளது. ஹெய்ட்டியும் டொமினிக்கன் குடியரசும் இணைந்த கரீபியன் கடலில் அமைந்துள்ள தீவைதான் ஸ்பானியோலா என்று குறிப்பிடுகின்றனர். கரீபியன் கடலில் கியூபாவிற்கு அடுத்த இரண்டாவது பெரிய தீவு ஸ்பானியோலா ஆகும். 1492-ம் ஆண்டு கிறிஸ்டோபஸ் கொலம்பஸ் இத்தீவை வந்தடைந்தான். அவன் ஸ்பெயினின் முதலாவது செழிப்பான காலனியைத் இத்தீவில் தொடங்கினான். இத்தீவு ஸ்பெயினின் குட்டித்தீவு (La Isla Hispaniola - Little Island of Spain) என்று அழைக்கப்பட்டது. ஆனால் கொலம்பஸ் இத்தீவுக்குள் புகுவதற்கு முன்பே இங்கு டைனோ (Taino) மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கொலம்பஸ் முதன்முதலில் அடியெடுத்து வைத்த பஹமாஸ் தீவில் (The Bahamas) அவன் எதிர்பார்த்தப்படி தங்கமும் வெள்ளியும் கிடைக்கவில்லை. அதனால் அந்த தீவில் பல நூறு வருடங்களாக வாழ்ந்துவந்த பூர்வகுடிகளை சிறைப்பிடித்து ஸ்பெயினுக்கு அடிமை வணிகம் செய்ததுடன், பழங்குடி பெண்களை பாலியல் அடிமைகளாகவும் விற்றுவிட்டான். அதற்கடுத்திருந்த ஸ்பானியோலா தீவில் பன்றியைப் போல நிலத்தைக் கிளறி தங்கத்தை தேடியலைந்தபோது ஹெய்ட்டியில் மிகச் சிறிய அளவிலான தங்கச் சுரங்கம் இருப்பதை அறிந்துகொண்டான். அங்குள்ள தங்கத்தை அள்ளிவர டைனோ பூர்வக்குடிகளை வலுக்கட்டாயமாக தங்கவேட்டையில் ஈடுபடுத்தினான்.

தங்கத்தை கொண்டுவராதவர்களின் கைகள் வெட்டப்பட்டு பல ஆயிரக்கணக்கானோர் இறந்துபோயினர். தன் பெயரைக் கேட்டாலே தீவில் உள்ளவர்கள் அலறி நடுங்க வேண்டும் என்பதற்காக ஆயிரக்கணக்கானோரின் காதுகளை வெட்டியெறிந்தான். இறுதியில் கரீபியன் தீவு மக்கள் கப்பம் கொடுப்பதை நிறுத்திவிட்டனர். ஏனெனில், அவர்கள் உலகில் இருந்து மறைந்துகொண்டிருந்தனர். நீரில் பாதியளவு உடல் மூழ்கிய நிலையில் தங்கம் கலந்த மண்ணைச் சலிக்கிற உயிருக்கு ஆபத்தான வேலையில், அல்லது தோண்டக் கூடாத ஆழத்தை தாண்டி நிலத்தை தோண்டுதல், ஸ்பெயின் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட மிகக் கடினமான உபகரணங்களைக் கையாள்தல் என அவர்கள் முழுமையாக தங்கச் சுரங்கங்களில் வைத்து அழிக்கப்பட்டனர். ஹெய்ட்டியின் மக்களில் பலர் தங்களை அடிமைப்படுத்திய வெள்ளையர் தம் மீது திணித்த தமது விதியை பற்றி யூகிக்கத் தொடங்கினர். அவர்கள் தங்கள் குழந்தைகளை கொன்றனர். கூட்டமாக தற்கொலை செய்துகொண்டனர். இந்த ஆன்டிலியன் பேரழிவை 16-ம் நூற்றாண்டின் மத்தியக் கால வரலாற்றறிஞர் ஃபெர்ணான்டஸ் த ஓவியெடோ இவ்வாறு வியாக்கியானம் செய்துள்ளார், 'ஒரு மாற்று வேண்டி அவர்களில் பலர், வேலைக்குப் பதிலாக விஷம் குடித்தனர், தங்கள் சொந்தக் கரங்களாலேயே தங்களைத் தாங்களே தூக்கிலிட்டுக் கொண்டனர்.'

கொலம்பஸ் தங்கத்தையும் வெள்ளியையும் முதன்மையாக குறிவைத்தே தனது படையை நகர்த்தினான். ஆயினும், அவனது இரண்டாவது கடற்பயணத்தின் போது கரும்பின் வேர்களை கேனரி தீவுகளில் (Canary Islands) இருந்து கொண்டு வந்து இப்போது டொமினிக்கன் குடியரசு எனப்படும் இடத்தில் நட்டான். அது விரைவாக வளர்ந்ததைக் கண்டு அவன் மகிழ்ந்தான். ஏனெனில், ஐரோப்பியர்களுக்கு சர்க்கரை (Sugar) எளிதில் கிடைக்காத பொருளாகவிருந்தது. இராணிகளின் வரதட்சணையில் அதற்கு இடம் இருந்தது. மருந்துக் கடைகளில் கிராம் அளவில் நிறுத்து விற்கப்பட்டது. அப்பேர்பட்ட வெள்ளைத் தங்கத்தை பிரசவித்த இப் பணப்பயிர் கரீபி

யன் தீவுகளில் செழிப்பாக வளர்ந்தது. ஹெய்ட்டியும் கரும்பு விளைவதற்கு பொருத்தமான நிலப்பகுதியாகவிருந்தது.

ஸ்பெயின் 1697-ல் ஹிஸ்பானியோலா தீவின் மேற்கை அதாவது, மூன்றில் ஒரு பகுதியை பிரான்ஸுக்கு விட்டுகொடுத்தது. அச்சமயம் அப்பகுதி புக்கானியர்களின் (Buccaneers) கட்டுப்பாட்டில் இருந்தது. 17 மற்றும் 18-ம் நூற்றாண்டுகளில் கரீபியன் கடலில் ஆதிக்கம் செலுத்திய இலவச மாலுமிகளாக இவர்கள் அறியப்படுகின்றனர். இவர்களை Privateers என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் அது தவறானது. Privateers என்பவர்கள் அரை இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கங்களால் நியமிக்கப்பட்ட நபர்கள். அவர்கள் தனியாருக்குச் சொந்தமான ஆயுதம் தாங்கிய கப்பல்களில் பயணம் செய்வார்கள், வணிகக் கப்பல்களைக் கொள்ளையடிப்பார்கள் மற்றும் போட்டி நாட்டுக்கு சொந்தமான குடியிருப்புகளை கொள்ளையடிப்பார்கள். 1572-ம் ஆண்டில் முதலாம் எலிசபெத்தால் தனியாருக்கு ஆணையம் வழங்கப்பட்ட பின்னர், அமெரிக்காவில் உள்ள ஸ்பானிய குடியேற்றங்களை கொள்ளையடித்து இவர்கள் தங்களுக்கான அதிஸ்டத்தை தேடினர். இவர்கள் Pirates எனப்படும் கரீபியன் கடற்கொள்ளையர்களும் அல்லர். புக்கனீர் என்ற சொல் கரீபியன் மற்றும் மத்திய அமெரிக்காவின் பசிபிக் கடற்கரைக்குக் குறிப்பிடப்பட்டது. இச்சொல் பிரஞ்சு பூக்கனில் (boucan) இருந்து பெறப்பட்டது, இது இறைச்சியை புகைப்பதற்கான கிரில் ஆகும். 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கு ஹிஸ்பானியோலாவில் வாழ்ந்த பிரெஞ்சு காட்டு விளையாட்டு வேட்டைக்காரர்களுக்கு இப்பெயர் முதலில் பயன்படுத்தப்பட்டது. அதன்வழி உருவானவர்களே புக்கானியர்கள் ஆகும். அவர்கள் வாய்ப்பு கிடைக்கும்போது கடற்கொள்ளையையும் செய்தனர். இவர்களின் முதன்மை எதிரி ஸ்பெயின். அதனால், தொடக்கத்தில் பிரான்ஸின் ஆதரவு இவர்களுக்கு கிடைத்தது. 1625-ம் ஆண்டு முதன்முதலில் இவர்களால் வடக்கு ஹிஸ்பானியோலா நிறுவப்பட்டது.

ஸ்பெயின் தீவின் மேற்குப் பகுதியை பிரான்ஸுக்கு கொடுத்த பின்னர், பிரெஞ்சு அதிகாரிகள் தீவின் புக்கானியர் செயற்பாட்டை அடக்கி விவசாய வளர்ச்சியில் கவனம் செலுத்தினர். விரைவில் பிரான்ஸ் சாகஸக்காரர்கள் அந்தக் காலனிப் பூமியில் குடியேறத் தொடங்கினர். பிரான்ஸின் இக் காலனிப் பகுதி செயிண்ட் - டோமிங்யூ (Saint-Domingue) என மறுபெயரிடப்பட்டது. இதுதான் தற்போதைய ஹெய்ட்டி. இந்தப் பிரெஞ்சுக் காலனியின் சதுப்புநிலக் கடற்கரை சமவெளிகளில் உலகின் சிறந்த கரும்பு நாட்டப்பட்டன. ஹெய்ட்டியின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகள் மனித எறும்பு புற்றுகளாக மாறின. பூர்வகுடிகளின் எண்ணிக்கை குறைந்து வந்ததால் உழைக்கும் கரங்களை பிரான்ஸியர்கள் ஆபிரிக்க கண்டத்தில் இருந்து கொண்டுவந்தனர். பிரான்ஸ் காலனித்துவ ஆட்சியின் கீழ் ஏறக்குறைய 8 இலட்சம் அடிமைகள் கொண்டுவரப்பட்டனர். அத்திலாந்திக் சமுத்திரத்தின் அடிமை வியாபாரத்தில் மூன்றில் ஒரு பங்கை பிரான்ஸியர்கள் வசப்படுத்தியிருந்தனர். ஹெய்ட்டியில் சர்க்கரை மற்றும் கோப்பி உற்பத்தி கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது.

ஹெய்ட்டியின் விரைவான காடழிப்பு இந்தக் காலனித்துவ காலத்தில்தான் தொடங்கியது. சிறை பிடிக்கப்பட்ட ஆப்பிரிக்கர்களின் அடிமைத்தனத்தால் இது எளிதாக்கப்பட்டது. 1730-





இல் கோப்பி அறிமுகப்படுத்தப்பட்டபோது காடழிப்பு தீவிரமடைந்தது. மலையக காடுகள் அழிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், காலனியின் நிலத்தில் கால்வாசி பகுதி கோப்பியின் கீழ் இருந்தது. கோப்பி, இண்டிகோ, புகையிலை, மசாலா பொருட்கள், இறப்பர் மற்றும் கரும்பு ஆகியவற்றின் வரிசைகளுக்கு இடையே தோட்ட ஒற்றைப் பயிர்ச்செய்கை முறையால் மண்ணின் சத்துக்கள் தீர ஆரம்பித்தது. மண் அரிக்கவும் செய்தது.

இந்த அழிவை பற்றி கார்ல் மார்க்ஸ், 'கனவான்களே கோப்பியும் சர்க்கரையும் உற்பத்தி செய்வது மேற்கிந்திய நாடுகளின்

இயற்கையான விதி என நீங்கள் நம்புகிறீர்கள். வணிகம் பற்றி அலட்டி கொள்ளாத இயற்கை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை அங்கே கரும்பையோ அல்லது கோப்பிச் செடிக ளையோ நடவில்லை' என்றார்.

ஹெய்ட்டியின் கரும்பு உற்பத்திக்கு கருப்பு அடிமைகளின் கரங்கள் பிரான்ஸியர்களுக்கு நிறைய நிறையத் தேவைப்பட் டதால், 1786-ல் 27,000 அடிமைகள் கொண்டுவரப்பட்டனர். அதற்கடுத்த வருடத்தில் 40,000 பேர் கொண்டுவரப்பட்டனர். 1791-ல் அங்கு புரட்சி வெடித்தது. 1791-ம் ஆண்டில் ஜார்ஜஸ் பியாசோ மற்றும் ஜீன் - பிரான்கோயிஸ் தலைமையிலான கறுப்பின அடிமைகளின் கிளர்ச்சிப் படையில் டூசைன்ட் லூவெர்ச்சர் ஒரு தளபதியாக உருவெடுத்தார். அடிமைகளை அவர் விடுதலையை நோக்கி வழிநடத்தினார். அதன்படி, காலனியில் அடைக்கப்பட்ட மக்கள் வடக்கு பகுதியின் கட் டுப்பாட்டை எடுத்துக்கொண்டனர். இது பிரான்ஸுக்கு எதி ரான போராக வெடித்தது. 1804-ம் ஆண்டுக்குள் கருப்பு அடி மைகள் பிரான்ஸை தோற்கடித்து சுதந்திரத்தை நிறுவி அந்த மண்ணுக்கு ஹெய்ட்டி என்று பெயரிட்டனர். இது அடிமைக ளின் புரட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட முதலாவது நாடா கும். ஹெய்ட்டி முதலாவது கருப்பின குடியரசாக விடிந்தது. அத்துடன் இது இலத்தீன் அமெரிக்காவில் விடுதலையை அறிவித்த முதலாவது நாடும் ஆகும். 1804, ஜனவரி முதலாம்



திகதி ஹெய்ட்டி தனது விடுதலையை உலகுக்கு உரக்கச் சொன்னது. இந்தப் புரட்சி பிரெஞ்சு புரட்சியுடன் இணைந்தே நடந்தேறியது. கிளர்ச்சி செய்த அடிமைகள் பிரான்ஸின் இரா ணுவத்தை கடலை நோக்கி கொண்டு செல்கையில் நெருப் பும் சண்டைகளும் தொடர்ந்தன. அந்தப் போராட்டம் காரண மாக இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. வழமைக்கு மாறாக அன்றுதான் ஹெய்ட்டியில் இருந்து குறைவான சர்க்க ரையையும் அதிகளவான பிரான்ஸியர்களையும் ஏற்றிக் கொண்டு கப்பல்கள் புறப்பட்டன.

போராட்டக்காரர்களின் நெருப்பில் அன்று கரும்புத் தோப்புக ளும் பற்றியெரிந்தன. 1803 நவம்பர் காலப்பகுதியில் அந்தக் காலனியின் பெரும்பகுதி சாம்பலும் சிதிலங்களுமாக ஆனது. நாடு செயலிழந்தது. மேலும் நூற்றாண்டின் இறுதியில் உற்பத்தி ஏறக்குறைய இல்லையென்றே ஆனது. ஹெய்ட் டிய கருப்பு அடிமைகளின் விடுதலை தவிர்க்க முடியா தென்று ஆனபோது பிரான்ஸ் அந்நாட்டிற்கு பொருளாதார தடையை விதித்தது. பிரான்ஸின் அழுத்தத்திற்கு மதிப்ப ளித்து ஐக்கிய அமெரிக்கா 1806-ல் ஹெய்ட்டியுடன் வர்த் தகம் செய்வதை தடை செய்தது.

1825-ம் ஆண்டு பிரான்ஸ் ஹெய்ட்டியின் இறையாண்மைக்கு ஈடாக தமக்கான காப்பீட்டுப் பணத்தை கேட்டது. ஜெனரல் ஜீன் - பியர் போயர் (Jean-Pierre Boyer) தனது பதவிக் காலத்தின் முடிவில், காலனியின் இழப்புக்கான இழப்பீடாக 150 மில்லியன் பிராங்குகளை (பின்னர் 60 மில்லியன் பிராங் குகளாகக் குறைக்கப்பட்டது) பிரான்ஸுக்குப் பணம் செலுத் துவதாக பேரம் பேசினார். மாற்றாக, பிரான்ஸ் ஹெய்ட்டி குடிய ரசை அங்கீகரித்து வர்த்தக உறவுகளை மீட்டெடுத்தது. இந்த இழப்பீடு ஹெய்ட்டியின் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க உதவியது என்றாலும், அது எதிர்கால சந்ததியினரின் மீது அதிக எடை கொண்ட மூச்சைத் திணறடிக்கும் பொருளாதார சுமையை சுமத்தியது. சீர்திருத்தவாத முலாட்டோக்களின் சதி யால் 1843-ல் போயர் தூக்கியெறியப்படும் வரை அவர் பதவி யில் இருந்தார். பெப்ரவரி 1844-இல், டொமினிகன் தேசியவா திகளின் குழு சாண்டோ டொமிங்கோவில் உள்ள ஹெய்ட்டிய காரிஸனைத் தாக்கி சுதந்திரத்தை அறிவித்தது. 1814 - 1821-இல் ஹெய்ட்டி ஸ்பானியர்களிடம் இருந்து இப்பகுதியை வென்றிருந்தது. இப்பகுதியே 1844-ம் ஆண்டு பெப்ரவரி 27-ம் திகதி பீட்ரோ சந்தானா தலைமையில் டொமினிக்கன் குடிய ரசாக மலர்ந்தது. எனி னும்,1861 முதல் 1865 வரை மீண்டும் ஸ்பானியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1865-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16-ம் திகதி ஸ்பெய்னிடம் இருந்து முற்றாக விடுதலை பெற்று டொமினிக்கன் குடியரசு சுதந்திர அரசாகத் திகழ்ந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்காவின் தலையீடு அதிகமா கவே காணப்பட்டது. அதைப்போலவே, ஹெய்ட்டியி லிலும் அமெரிக்காவின் தலையீடு வரம்பு மீறியிருந்தது.

பிரான்ஸின் காப்பீட்டுத் தொகையை செலுத்த 19-ம் நூற் றாண்டு முழுவதும் மரங்களை ஏற்றுமதி செய்ய ஹெய்ட்டி அரசாங்கம் கட்டாயப்படுத்தப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, அசல் தொகையையும் வட்டியையும் காட்டு மரங் கள் மூலமாகவே செலுத்த வேண்டியிருந்தது. பெல்லாண்டே மற்றும் ஒகானரின் கூற்றுப்படி, ஹெய்ட்டியின் காடழிப்பு என் பது மஹோகனி மற்றும் பிற விலையுயர்ந்த மரங்களின் வர்த் தகத்தின் விளைவாக நிகழ்ந்தது. ஹெய்ட்டியின் மக்கள் கட்ட வேண்டியிருந்த காப்பீட்டு பணம் என்பது அவர்களுக்கு எதி ரான இராணுவ நடவடிக்கைகளின் இரத்தக் களரியில் இருந்த தப்பிய சுதந்திர ஹெய்ட்டியர்களின் கழுத்தை சுற்றி கட்டிய அரவை கல்லாக இருந்தது. இந்தவிடத்தில் வீழ்ந்த நாடு பின் னர் மீளவேயில்லை. இன்று லத்தீன் அமெரிக்காவிலேயே மிக வும் ஏழ்மையான நாடாக அதுவிருக்கிறது.

1915-ல் ஹெய்ட்டியில் அமெரிக்க ஆக்கிரமிப்பு இடம் பெற்றது. ஜனாதிபதி வில்ப்ரூன் குய்லூம் சாமின் (Vilbrun Guillaume Sam) படுகொலையை காரணம் காட்டியே அமெரிக்கா நுழைந்தது. 1915-ல் அமெரிக்க இராணுவம் ஹெய்ட்டியில் வந்து தங்கியது. அமெரிக்க கடற்படையினர் நாட்டின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றினர், ஹெய்ட்டிய இராணு வத்தைக் கலைத்து முலாட்டோவைச் சேர்ந்த பிலிப் சுத்ரே

டார்டிகுனேவ்வை (Phillippe Sudre Dartiguenave) ஜனாதிபதியாக நியமித்தனர். முலோட்டோ என்பது ஆபிரிக்க - ஐரோப்பிய வம்சாவளியை குறிக்கும். இதன்போது அமெரிக்க அரசாங்கத்தின் மானியத்துடன் அமெரிக்காவிலிருந்து அரிசி இறக்குமதிகளுக்கான கட்டணங்களை நீக்கிய ஓர் வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திட்டது. அது ஹெய்ட்டியின் சொந்த அரிசி உற்பத்தியாளர்களை திவாலாக்கி, பின்னர் அந்நாடு சுயமாக தனக்கான உணவை உற்பத்தி செய்ய முடியாத வாறு செய்துள்ளது.

1916-ம் ஆண்டில், அமெரிக்கா அண்டை நாடான டொமினிகன் குடியரசில் தலையிட்டபோது முழு ஹிஸ்பானியோலா தீவுக்கும் தனது ஆக்கிரமிப்பை விரிவுபடுத்தியது. ஏறக்குறைய இரண்டு தசாப்த கால ஆக்கிரமிப்பின் போது, அமெரிக்கா ஹெய்ட்டிய அரசியலமைப்பை திருத்தியது. 1930-ல், அமெரிக்கா ஹெய்ட்டியை சுதந்திரமான தேர்தல்களை மீண்டும் தொடங்க அனுமதித்தது. அதன்பின் அமெரிக்காவின் பொம்மைகள் தலைமை அதிகாரத்திற்கு வந்து தலையாட்டியது. ஹெய்ட்டி அமெரிக்காவின் ஆதிகத்தின் கீழ் இருந்த போது 1920 - 1930 காலப்பகுதியில் கரிக்கட்டை (charcoal) உற்பத்தி வியாபாரம் உருப்பெற்றது. இக்காலப்பகுதியில் வந்த ஹெய்ட்டி இலக்கியத்தில் கரிக்கட்டை உற்பத்தி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 1940-50-களில் காடு இழப்பு துரிதப்படுத்தப்பட்டது. சனத்தொகை அதிகரிப்பு, புதிய நகரங்களின் தோற்றம் இதில் செல்வாக்கு செலுத்திய போதிலும், இரண்டாம் உலகப் போரின் போது முன்னெடுக்கப்பட்ட ஹெய்ட்டியன் - அமெரிக்கன் திட்டமும் இதில் முதன்மையாகவிருந்தது. இத்திட்டத்தின்படி, ஜெர்மி எனும் பிரதேசத்திற்கு அருகே மில்லியன் கணக்கான காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு இறப்பர் கன்றுகள் நடப்பட்டன. யுத்தத்திற்கு பின்னரே உற்பத்தி பெறப்பட்டதால் அத்திட்டம் நிதிப் பலன்களையும் தரவில்லை.

1957-ல் பிரான்சுவா டுவாலியர் (François Duvalier) சந்தேகத்திற்கிடமான வகையில் ஜனாதிபதி தேர்தலில் பெரிய வெற்றியை பெற்றார். இவர் சாதாரண கறுப்பின குடும்பத்தில் இருந்து வந்தவர் என்றாலும், அவரது 14 வருட ஆட்சிக் காலப்பகுதியில் தனது மக்களை கவனிப்பதற்கு பதில் அவர்களை அடக்குவதற்கே கவனம் செலுத்தினார். டொமினிக்கன் குடியரசு எல்லை புறத்தில் இருந்த காட்டினை மொட்டையடித்தார். பாதுகாப்பு காரணங்களுக்காகவும் காவல்துறையின் கட்டுப்பாட்டுக்காகவும் என கதை சொன்னார். தற்போது ஹெய்ட்டியில் மரங்கள் இல்லாததற்கான முதன்மைக் காரணமாகவும் இது சொல்லப்படுகிறது. டுவாலியர் ஆட்சியின் ஆண்டுகளில் தொடங்கிய பேரழிவு, 1957 முதல் 1986 வரையிலான தந்தை முதல் மகன் வரையிலான சர்வாதிகாரிகள், அமெரிக்க நிறுவனங்களின் நலனுக்காக மரங்களை வெட்டினார்கள். இக்காலப்பகுதியில் மர ஏற்றுமதியும் கரிக்கட்டை வியாபாரமும் உச்சம் தொட்டது. ஹெய்ட்டியில் காடழிப்பும் கரிக்கட்டை பற்றிய கதையும் அரசியல் நலன்களுக்கு சேவை செய்வதால் அது தொடர்கிறது. டொமினிக்கன் இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் அமெரிக்கா ஹெய்ட்டியின் எல்லையில் இலாபகரமான கரிக்கட்டை வியாபாரத்தை முன்னெடுத்து வருகிறது. கரிக்கட்டையை உற்பத்தி செய்ய ஹெய்ட்டிய தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தக் கரிக்கட்டையின் பெரும்தொகை புவரட்டோ ரிக்கோ (Puerto Rico) மற்றும் அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதிகளுக்குச் செல்கிறது. சில மதிப்பீடுகளின்படி, 2014-ம் ஆண்டு ஒரு வாரத்திற்கு டொமினிக்கன் ஹெய்ட்டி ஊடாக 115 டொன் கரிக்கட்டைகள் சட்டவிரோதமாக கடத்தப்பட்டிருக்கின்றன. வாரத்திற்கு குறைந்தது கரிக்கட்டை ஏற்றிய 10 ட்ரக் வண்டிகள் நகர்ந்திருக்கின்றன. இந்த மதிப்பீடுகள் முழுமையடையாத கணக்கெடுப்புகளின் அடிப்படையிலானவை. டொமினிகன் குடியரசு ஹெய்ட்டியன் காடழிப்பின் புதிய எல்லையாகவிருக்கிறது. காடழிப்பு இப்போது டொமினிக்கன் பகுதிக்குள் நுழை கிறது. கரிக்கட்டைக்காக காடுகள் அழிக்கப்படுவதை டொமினிக்கன் குடியரசு கட்டுப்படுத்தியுள்ள போதிலும், ஹெய்ட்டியர்கள் கரிக்கட்டை உற்பத்திக்காக தனது உயிரை பணயம் வைக்கவும் தயாராக இருக்கும் நிலையே இருக்கிறது.

15-ம் நூற்றாண்டில் கிறிஸ்டோபர் கொலம்பஸ் மற்றும் ஸ்பானியர்களால் காலனித்துவப்படுத்தப்பட்ட இந்த தீவு, தென்னை, மஹோகனி, மா, புளி ஆகிய மரங்களின் பன்முகத்தன்மையுடன் 80% காடுகளால் மூடப்பட்டிருந்தது. தற்போது ஹெய்ட்டி சுற்றுச்சூழல் வீழ்ச்சியின் விளிம்பில் உள்ளது. அதன் முதன்மையான காடுகள் 1920-களில் 60% ஆக இருந்து இன்று 2%-க்கும் குறைவாக உள்ளது. ஹெய்ட்டி மூன்று நூற்றாண்டுகளுக்கும் குறைவான காலத்தில் 98% காடுகளை இழந்துவிட்டது. 'கடந்த காலத்தில் பைன் காடுகள் 32,000 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டிருந்தன, இப்போது எங்களிடம் 6,000 ஹெக்டேர் காடுகள் எஞ்சியுள்ளன' என்று ஜெனல் டெரிலஸ் வருந்துகிறார். இந்த மரப்பிசின் விமான தயாரிப்பில் பயன்படுகிறது. ஹெய்ட்டி காடழிப்பு பல்லுயிர் பெருக்கத்தையும் அச்சுறுத்துகிறது. இங்கு இதுவரை அறியப்பட்ட 500 இனங்கள் வாழ்கின்றன. அதில், 16.2 சதவீதம் இந்நாட்டிற்கே உரியன. 15.6 சதவீதமான உயிரினங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இதில் 12 வகையான பறவைகள், 28 வகையான தாவரங்கள், 46 வகையான நீர்வாழ் உயிரினங்கள், 15 வகையான மீன்கள் மற்றும் 10 வகையான ஊர்வன மற்றும் பாலூட்டிகள் அழியும் அபாயத்தில் உள்ளன. 'ஹெய்ட்டியின் காடுகள் நம்பமுடியாத பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிக்கின்றன' என்று ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சுற்றுச்சூழல் திட்டத்தின் கரீபியன் அலுவலகத்தின் இயக்குநர் ஹெய்ல்மேன் கூறுகிறார்.

டெம்பிள் பல்கலைக்கழக விஞ்ஞானி பிளேயர் ஹெட்ஜஸின் புதிய ஆராய்ச்சியில், ஹெய்ட்டி உலகின் வேறு எந்த நாட்டையும் விட அதன் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தை இழப்பதற்கு அண்மித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவர் பல தசாப்தங்களாக ஹெய்ட்டியின் மழைக்காடுகளில் புதிய மற்றும் அரிதான உயிரினங்களைப் பற்றி ஆய்வு செய்தவர். அந்த உயிரினங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருந்த போதிலும், தனது சமீபத்திய ஆய்வின் முடிவுகளால் தான் அதிர்ச்சியடைந்ததாக பதிவு செய்திருக்கிறார். ஹெய்ட்டி ஏறக்குறைய எல்லா கன்னிக் காடுகளையும் இழந்துவிட்டதாகவும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். காடழிப்பு காரணமாக, 2035-ம் ஆண்டளவில் ஹெய்ட்டியின் பாதிக்கும் மேற்பட்ட இனங்கள் அழிந்துவிடும் என்றும் மதிப்பிட்டுள்ளார். 'ஹெய்ட்டி வெகுஜன அழிவின் நடுவில் உள்ளது, மேலும் இது ஏற்கனவே ஏராளமான உயிரினங்களை இழந்துவிட்டது, ஏனெனில் தனித்துவமான உயிரினங்கள் இருக்கும் முழு பகுதிகளும் இப்போது

இல்லை.' என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

ஹெய்ட்டியில் சரிவுகளை நிலைப்படுத்த மரங்கள் இல்லாமல், வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் கீழே வாழும் மக்கள் பெரும் ஆபத்தில் உள்ளனர். மரங்களின் வேர்கள் இல்லாமல், ஆண்டுதோறும் 36 மில்லியன் டன்கள் (15,000 ஏக்கர்) மதிப்புமிக்க மேல் மண் கழுவப்பட்டு, ஈரநிலங்களையும் திட்டுகளையும் அடைக்கிறது. அரிப்பினால் அணைகள், நீர்ப்பாசன அமைப்புகள், சாலைகள் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்ற பிற உற்பத்தி உள்கட்டமைப்புகள் சேதமடைகின்றன. மண் அரிப்பு நிலத்தின் உற்பத்தித் திறனைக் குறைக்கிறது, வறட்சியை மோசமாக்குகிறது. மேலும் இறுதியில் பாலைவனமாவதற்கு வழிவகுக்கிறது, இவை எல்லாம் மீதமுள்ள நிலம் மற்றும் மரங்களின் மீது அழுத்தத்தை அதிகரிக்கின்றன. காடுகளை அழிப்பதால் கிணறுகள் வறண்டு போவதால் தண்ணீர் பற்றாக்குறை மோசமாகி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். காடழிப்பு மனிதரையும் காவுவாங்கிக் கொண்டிருக்கிறது.

வணிக விவசாயம் மற்றும் தொழில்துறை மரச் சுரண்டலின் நலனுக்காக பண்டைய காடுகளை அழித்தல் பெரும் காடழிப்பு மரத் தொழிலால் ஏற்படும் அழிவு மற்றும் லாபத்தின் மோகத்துடன் தொடர்புடையது. அமெரிக்க அரசாங்கம் மற்றும் அமெரிக்க பண முதலைகளின் தலையீடு, ஊழல்மிக்க ஆட்சியாளர்களால் ஹெய்ட்டிக் காடுகள் அழிக்கப்படுவதற்கு மேலதிகமாக ஹெய்ட்டி மக்களும் வதைக்கப்படுகின்றனர். அதனால் 10.6 மில்லியன் மக்களின் தீவிர வறுமையின் விளைவாகவும் ஹெய்ட்டி காடுகள் அழிகின்றன. இம்மக்கள் சம்பளத்துக்காகவும், உணவு உற்பத்திக்காகவும் விறகுக்காகவும் மரங்களை வெட்டி சாய்க்கின்றனர். தேசிய எரிசக்தி கொள்கை இல்லாத நிலையில் கரி எரிபொருளாக செயல்படுகிறது, அழிக்கப்பட்ட காடு விவசாய நிலங்களால் மாற்றப்படுகிறது. எரிவாயு சிலிண்டர்களை விலைக்கு வாங்கி பயன்படுத்துமளவில் மக்கள் இல்லை. அவர்கள் பட்டினியால் உழல்கின்றனர்.

யுனிசெஃப் அறிக்கையின்படி, ஹெய்ட்டியில் நாட்டில் 49 இலட்சம் மக்கள் ஒவ்வொரு நாளும் உணவுக்காகப் போராடுகின்றனர். 1,15,000-க்கும் அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர். மக்களை கண்டுகொள்ளாத ஆட்சியாலும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலாலும் அடாவடித்தனத்தாலும் ஹெய்ட்டி மக்கள் உயிருக்குப் போராடி வருகின்றனர்.

இவ்வாறு மக்கள் வாழமுடியாது தவிப்பதற்கு அங்கு நிலவும் பொருளாதார நெருக்கடி பிரதான காரணமாகவிருக்கிறது. ஆனால், ஆட்சியாளர்களும் மேல்தட்டு வர்க்கத்தினரும் சுகபோக வாழ்க்கையையே அனுபவிக்கின்றனர். இலஞ்சம் வாங்கும் நாடுகள் பட்டியலில் ஹெய்ட்டி 157-வது இடத்தில் இருக்கிறது. மொத்த சனத்தொகையில் 80 சதவீதமானவர்கள் ஏழைகள். 10 சதவீதமான குழந்தைகள் 5 வயதுக்கு முன்பே இறந்துவிடுகின்றன. அநாதைகளின் எண்ணிக்கை அதிகமாகவிருக்கிறது. ஏறக்குறைய 30,000 குழந்தைகள் அநாதைகளாகவிருக்கிறார்கள். வாங்கும் சம்பளத்தில் 60 சதவீதம் உணவுக்கே செலவாகிறது. பலரும் ஒருவேளை உணவை மட்டுமே உண்கின்றனர்.

ஹெய்ட்டியில் மஞ்சள் களிமண்ணால் ஆன ரொட்டியை சாப்பாடு மாதிரி தின்று தமது பசியைத் தற்காலிகமாக இம்மக்கள் தடுத்துக் கொண்டிருக்கின்றனர். அந்தக் களிமண் பிஸ்கட் கூட தற்போது விலை ஏறிவிட்டதாம். பிரின்ஸ் துறைமுக (Port-au-Prince) நகரில் ஊர்வலமாகச் சென்ற ஹெய்ட்டி நகர மக்கள் ஜனாதிபதி மாளிகையின் முன் 'எங்களுக்குப் பசிக்கிறது' என்று கோஷம் போட்டு கலவரம் செய்த சம்பவங்கள் கூட பதிவாகியுள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் கியூபாவும் பாரிய பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கியது. அத்தருணத்தில் கியூபாவின் ஒருசிலர் சோஷலிசத்தை முடிவுறுத்த வேண்டுமென பிரேரணை முன்வைத்தார்கள். இதன்போது பிடல் கஸ்ட்றோ இவ்வாறு வலியுறுத்தினார். 'கியூபாவில் சோஷலிசம் முற்றுப்பெறுவதன் மூலமாக கியூபா சுவிர்சலாந்தாக மாறமாட்டாது. அது ஹெய்ட்டியின் நிலைமையையே அடையும்.' ஏகாதிபத்திய சக்திகள் ஹெய்ட்டியை இன்று அந்த இடத்திற்குத்தான் தள்ளியிருக்கின்றன. பிரெஞ்சுக்காரர்களை விரட்டிய நெருப்பில் இருந்து பிறந்த ஹெய்ட்டி இன்று அதே நெருப்பால் பஸ்பமாகிக்கொண்டிருக்கிறது. ஹெய்ட்டி காடுகள் கரிக்கட்டைகளாகவும் ஹெய்ட்டி மக்கள் பிணத்தோல் மனிதர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர். எமது எதிர்பார்ப்பு மீண்டும் அந்த நெருப்பில் இருந்து ஹெய்ட்டி பீனிக்ஸாய் உயிர்பெற்று வரவேண்டும் என்பதேயாகும். ஹெய்ட்டி உயிர்பிழைக்க ஊழல் ஆட்சிக்கு முடிவுகட்டி, வறுமையை வென்று, பசியில்லாத நாடாக மாறி காடுகளையும் பாதுகாக்க வேண்டும்.


உசாத்துணை:

- Open Veins of Latin America by Eduardo Galeano
- Geography and Overview of Haiti Information About the Caribbean Island Nation By Amanda Briney
- https://www.nationsonline.org/oneworld/History/Haiti-history.htm#:~ :textஸ்ரீThe%20resumption%20of%20war%20in,by%20people%20of%20African%20descent.
- Pirates, Privateers, Corsairs, Buccaneers: What's the Difference ? - Written and fact-checked by The Editors of Encyclopædia Britannica
- The Struggle to Conserve Threatened Forests in Haiti - earth.org
- https://www.green.earth/blog/haitis-deforestation-causes-consequences-and-solutions
- In Haiti, communities take aim at deforestation - https://www.unep.org/news-and-stories/story/haiti-communities-take-aim-deforestation
- Temple scientist documents deforestation, mass extinction in Haiti ByMarie Cusick
- The charcoal war by Jake Kheel
- Les damnés de la forêt : ces Haï tiens contraints d'abattre des arbres pour survivre - https://www.geo.fr/environnement
- Haï ti : faire reculer la pauvreté tout en faisant progresser la forêt
- உலகமயமாகும் பஞ்சம் – கீற்று
- உணவுக்காகப் போராடும் ஹெய்ட்டி நாட்டு மக்கள்! - செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்





sathees.selvarajah@thaiveedu.com

# சோழ வல்லவன் படையெடுப்பு

## ஈழமும் சோழமும்

### வி. துலாஞ்சனன்

6

இலங்கையில் இராசராச சோழனின் படையெடுப்பு நிகழ்ந்தது பொ.ஆ.பி 992 அல்லது 993 என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு முன்பு இலங்கையில் தென்றல் வீச, தேனும் பாலும் ஓடிக்கொண்டிருந்தன என்று கொள்ள முடியாது. இராசராச சோழனின் படையெடுப்புக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான்காம் மகிந்தன் (956 – 972) காலத்தில் ஊர்காவற்றுறையில் நிகழ்ந்த போரில் ஒரு 'தமிழ்' படையெடுப்பு தோற்கடிக்கப்பட்டதை சிங்கள நூல்கள் பாடுகின்றன. சூளவம்சமே, இலங்கைக்குப் படையெடுத்த வல்லப அரசனை மகிந்தனின் படைகள் வென்றதை பெருமையாகக் குறிப்பிடுகிறது.

இரண்டாம் பராந்தகச் சோழனின் ஆட்சியின் ஏழாம் ஆண்டில் (பொ.ஆ.பி 964) பராந்தகனின் மருமகனான கொடும்பாளூர் சிறிய வேளாரும் அவனது மைத்துனனான வாணர் குல அரசனும் இலங்கை மீது படையெடுத்து மாண்டதை சில சோழக் கல்வெட்டுகள் பாடுவதால் வல்லவ அரையன் போர் தொடுத்ததாக சூளவம்சம் சொல்வது உண்மை என்றாகிறது. தமிழ்ப் பகைவரால் சூழ்ந்த பகையிருளை தான் நீக்கியதாக மகிந்தன் அதே 964-ல் பொறித்த தன் அபயகிரிக் கல்வெட்டொன்றில் பெருமையாகக் குறிப்பிடுவதன் மூலம் இதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

நான்காம் மகிந்தனின் மறைவுக்குப் பின்னர் அனுரைக்கு அரசனாக தன் பன்னிரண்டு வயதில் ஆட்சிபீடம் ஏறுகிறான் ஐந்தாம் சேனன் (972 - 982). அவன் நான்காம் மகிந்தனுக்கு கலிங்க அரசி ஒருத்தியிடம் பிறந்த மகன். சேனன் தன் தம்பி உதயனை துணையரசனாகப் பட்டம் சூட்டினான். மகிந்தன் காலத்தில் சேனாதிபதியாக இருந்த, இன்னொரு சேனனே ஐந்தாம் சேனனுக்கும் படைத்தலைவனாக விளங்கினான்.

அப்போது மீண்டும் ஒரு சோழப் படையெடுப்புக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்திருந்தது. ஐந்தாம் சேனனின் வயதையும் நாட்டின் நிலைமையையும் கருத்தில் கொண்டு படைத்தலைவன் சேனன் நாட்டின் எல்லைப் பகுதியில் (பெரும்பாலும் மாந்தையில்) முகாமிட்டு தங்கியிருந்தான்.

ஆனால் அனுரையில் இன்னொரு அசம்பாவிதம் நடைபெற்றுவிட்டது. சேனாதிபதி சேனனின் தம்பியான மாமல்லன் என்பவன், இளம் கைம்பெண்ணாக இருந்த ஐந்தாம் சேனனின் தாய் கலிங்க அரசியோடு தவறாக நடந்துகொண்டான். பாலகனாக இருந்த ஐந்தாம் சேனன் அந்தப் பழியை மன்னிக்கத் தயாராக இருக்கவில்லை. மாமல்லன் சிரங்கொய்து கொல்லப்பட்டான். படைத்தலைவனும் அவன் செயலுக்கு உடந்தை என்று நம்பிய அரசன், சேனனை நீக்கி, உதயன் என்பவனை புதிய படைத்தலைவனாக நியமித்தான்.

தம்பி கொல்லப்பட்டதையும் தன் இடத்தில் வேறொருவன் நியமிக்கப்பட்டதும் படைத்தலைவன் சேனனை சீற்றம் கொள்ளச் செய்தது. அவன் பெரும்படையுடன் அனுரைக்குத் திரும்பினான். அனுரையில் தங்கியிருந்த படையும் பழைய படைத்தலைவனுக்கே ஆதரவளித்ததால் மன்னனுக்கு ஒன்றும் செய்ய முடியாது போயிற்று. அவன் தன் புதிய சேனாதிபதியோடு உரோகணத்துக்குப் பின்வாங்கினான். ஆனால் நடந்த சம்பவத்துக்கு மூலகாரணமான அவன் தாய் கலிங்க அரசி, அவனை விட்டு நீங்கி ஏனைய அரச குடும்பத்தினரை அழைத்துக்கொண்டு படைத்தலைவன் தரப்பில் இணைந்துகொண்டாள்.

படைத்தலைவன் சேனன் அனுரையைக் கைப்பற்றி தமிழ்ப் படைகளிடம் ஒப்படைத்துவிட்டு கலிங்க அரசி முதலியோரோடு பொலனறுவையில் தங்கியிருந்தான். அவனுக்கெதிராக ஐந்தாம் சேனன் உரோகணத்துச் சிங்களவர்களைப் படைதிரட்டி அனுப்பினான். ஆனால் அப்படை தமிழ்ப் படைகளின் ஆதரவைப் பெற்றிருந்த படைத்தலைவன் சேனனால் தோற்கடிக்கப்பட்டது. அரசனுக்கு வேறு வழியெதுவும் இருக்கவில்லை என்பதால் அவன் படைத்தலைவனோடு உடன்படிக்கையொன்று மேற்கொண்டு சமாதானமாகி பொலனறுவைக்குத் திரும்பி மீளவும் அரசனானான்.

இரண்டு சேனர்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் தெளிவான விபரத்தை சூளவம்சம் நமக்குச் சொல்லவில்லை. ஆனால் தமிழ்க் கூலிப்படைகளின் தொல்லை தாங்காமல்

மக்கள் இடம்பெயர்ந்து உரோகணம் சென்று மன்னனிடம் முறையிட்டதாலேயே அவன் படைத்தலைவனுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டான் என்கின்றது அது. இங்கு குறிப்பிடப்படும் தமிழ்க் கூலிப்படைகள் திசையாயிரத்து ஐநூற்றுவர் முதலிய வணிக கணங்களின் வீரர்கள் ஆகலாம். ஐந்தாம் சேனனோடு முரண்பட்ட காலத்தில் படைத்தலைவன் 95,000 தமிழர்களை இலங்கைக்கு அழைத்து வந்ததாக பிற்கால சிங்கள இலக்கியங்கள் பாடுகின்றன.

சோழர் அனுராதபுரத்தைக் கைவிட்டு பொலனறுவையை இலங்கைத் தலைநகராக்கினர் என்பது பொதுக் கருத்து. அவ்வாறல்ல, அதற்கு முன்பே சிங்கள அரசர் பொலனறுவையைத் தலைநகராக்கி விட்டிருந்தனர் என்பதற்குச் சான்று இந்தச் சூளவம்சக் குறிப்பு. ஐந்தாம் சேனன், படைத்தலைவன் சேனனின் மகளை மணந்து காசியப்பன் எனும் மகனைப் பெற்றான். ஆனால் மகனைப் பெற்ற கையோடு மிதமிஞ்சிய அந்தப்புர வாழ்க்கைக்கும் குடிக்கும் அடிமையானான். வெறும் இருபத்திரண்டு வயதில் அவன் உலகை நீத்தான்.

ஐந்தான் சேனனுக்குப் பின் அவன் தம்பி உதயன் ‘ஐந்தாம் மகிந்தன்’ என்ற பெயரில் அரசுக்கட்டில் ஏறினான் (982 - `1029). ஆனால் அவனது பலவீனமான ஆட்சியில் அரசுக்கு வரி கொடுக்க மக்கள் மறுத்துவிட்டார்கள். அனுரையிலும் புதிதாகக் குடியேறிய ‘அயல்நாட்டவர்களே’ அதிகரித்துக் கொண்டிருந்தார்கள். வரி கிடைக்காமல் சம்பளம் கொடுக்கப்படாததால் அரசனின் படையிலிருந்த கேரள வீரர்கள், கலகம் செய்தார்கள். அப்போது ஐந்தாம் மகிந்தன் இரகசிய சுரங்கம் வழியே உரோகணத்துக்குத் தப்பியோடிவிட்டான்.


ஐந்தாம் மகிந்தன் உரோகணத்தின் ‘சீதுபர்வதகாமம்’ எனுமிடத்தில் அரண்மனை அமைத்து ஆண்டு வந்தான். அவன் தன் அண்ணனின் இளங் கைம்பெண் அரசியையே மணந்து கொண்டபோதும், அவள் சில நாள்களிலேயே இறந்துவிட, அவளுக்குப் பிறந்த தன் அண்ணன் மகளை மறுமணம் செய்துகொண்டான்.

அண்ணன் மகளை, பெறாமகளை அரசன் மணந்து கொண்டானா? அது தவறில்லையா?

இந்த இடத்தில் நம் சோழப் பயணத்தை நிறுத்தி கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.

தமிழரைப் போலவே சிங்களவருக்கும் மைத்துனர் உறவு முக்கியமானது. மாமன் மகளை, அத்தை மகனை திருமணம் செய்யும் வழக்கமும் சிங்களவரிடம் அவதானிக்கப்பட்டிருக்கிறது. மைத்துனன் - மைத்துனியை சிங்களத்தில் ‘மசினா - நேனா’ என்று அழைப்பார்கள். அப்பாவின் சகோதரர் முறையானோரும், அம்மாவின் சகோதரி முறையானோரும் முறையே தந்தை, தாயின் இடத்தில் தான் வைத்துப் பார்க்கப்படுவார்கள். அவர்களது பிள்ளைகளுக்கும் உடன்பிறவா சகோதரர்களாகத் தான் கருதப்படுகிறார்கள்.

ஆனால் முந்தைய சிங்கள அரசர்களிடம் இந்த அதிர்ச்சியூட்டும் வழக்கம் ஒன்று நிலவிவந்தது. ஆட்சிச் சிக்கல்களைச் சமாளிக்க மன்னர்கள் தங்கள் ஒன்றுவிட்ட சகோதரிகளையும், பெறாமகள்மாரையும் மணம் முடித்திருக்கிறார்கள்! நாம் முதல் அத்தியாயத்தில் கண்ட சேனனின் வம்சத்திலேயே இந்த வழக்கம் இருந்ததைக் காணலாம். அவனது சகோதரர்



களில் முதன்மையானவனான மகிந்தனால் ஏன் அனுரையின் அரசனாக அமர முடியாமல் போனது என்பதற்கான கார ணமே இப்படி இராச தந்திரமாகச் செய்து வைக்கப்பட்ட ஒரு சகோதரத் திருமணம் தான் என்பதை பூடகமாகச் சொல்கி றது, மகாவம்சம்.

தன் மூத்த மகன் ஐந்தாம் காசியப்பன் மீது அதிக பாசம் கொண்டு ஒரே நேரத்தில் அவனை அனுராதபுரத்தின் உபரா சனாகவும், மாயா தேசத்துக்கு மாப்பாவாகவும் நியமிக்கின் றான் இரண்டாம் சேனன் (853 - 887). ஏற்கனவே நாம் பார்த்த, 'வம்சத்தின் மூத்த ஆண் மகன்' என்ற அனுரை மரபுப்படி, உபராசனாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டியவன் சேனனுக் குப் பின்னர் ஆட்சியில் அமர்வதற்கான முழு உரிமையையும் கொண்டிருந்த அவனது முதல் தம்பி மகிந்தன் தான்.

அப்போது மலைய நாட்டில் தங்கியிருந்த மகிந்தன், அண் ணன் தன் சொந்த மகனை உபராசனாக நியமித்திருப்பதை கேள்விப்படுகிறான். உடனே பிக்குமாரை அழைத்து வந்து அரசவையில் நீதி கேட்கிறான். அந்நேரம் சேனன் மகிந்த னோடு ஏதோ உடன்படிக்கையொன்று மேற்கொண்டு மழுப்பி விட்டதாகத் தெரிகின்றது.

ஆனால் மகிந்தனுக்கு முதல் மனைவி மூலம் ஒரு மகளும் இரண்டாவது மனைவி மூலம் நான்கு மைந்தர்களும் பிறந்தி ருந்ததால் சேனன் தன் மகனின் எதிர்காலத்தை எண்ணி சஞ்ச லமடைகின்றான். தன் மகனுக்கு தம்பியின் மக்கள் போட் டிக்கு வரக்கூடாதென்றால், தன் மகனின் ஆட்சியை தம்பி மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே தந்திரமாக தன் மகனுக்கு மகிந்தனின் மூத்த மகள் சங்கையை - தன் தம்பி மகளை - ஒன்றுவிட்ட சகோதரியை - மணம்முடித்து வைக்கி றான். இது முழுக்க முழுக்க சேனனால் அவனது சுயநலத் தைக் கருதியே செய்யப்பட்டது என்பதை மகாவம்சம் வெளிப் படையாகவே சொல்கின்றது.

'உன் பெறாமகன் உனக்கு மருமகன் ஆகிவிட்டான். நீ அரச னாகாவிட்டாலும் மகள் வழியில் உன் பேரன் அரசனாக முடி யும், அல்லவா' என்ற செய்தியைச் சொல்லி மகிந்தனோடு சேனன் சமரசம் செய்திருக்க வேண்டும். மகிந்தன் அந்த சமர சத்துக்கு அப்பாவித்தனமாக ஒத்துக்கொண்டான் என்பதும் தன் அண்ணனின் சமயப் பணிகளுக்கு இறுதி மூச்சு வரை ஒத்துழைத்தான் என்பதும் மகாவம்சத்தில் சொல்லப்படுகின் றது.

மகாவம்சத்தைப் படிக்கும் போது, சேனன் மரிக்க முன்பே மகிந்தன் இறந்துவிட்டான் என்பது தெரிகிறது. என்ன காரணத் தால் அவன் இறந்தான், அவனது இறப்பில் ஏதும் அரசியல் காரணங்கள் இருந்தனவா என்ற கேள்விகளுக்கு மகாவம்சம் மௌனம் சாதிக்கிறது. ஆனால் இதில் ஏதோ சதி சம்பந்தப் பட்டிருக்கிறது என்பது மகிந்தனை அடுத்து கொஞ்ச நாளி லேயே சேனனும் மறையும்போது தெரிகிறது. சேனனின் இறப் புக்குப் பின்னர், உபராசனாக நியமிக்கப்பட்ட அவன் மகன் ஐந்தாம் காசியப்பனே முடிசூடியிருக்க வேண்டும். ஆனால் அவன் ஆட்சியில் அமராமல், வழக்கமான 'வம்சத்தின் மூத்த ஆண் மகன்' பாரம்பரியப்படி, உயிரோடு இருந்த சேனனின் இரண்டாவது தம்பி 'இரண்டாம் உதயன்' மன்னனாக முடிசூ டிக்கொள்கிறான்.

சகோதரச் சண்டைகளுக்கும் பதவியாசைக்கும் அஞ்சியப டியே இரண்டாம் உதயனும் அரசியற்றினான் என்பது தெரிகி றது. மரபுக்கு வழுவாமல் முறைப்படி ஆட்சிக்கு வந்தாலும் காசியப்பன் மூலம் தனக்கு உயிர் ஆபத்தின்றி, தன் ஆட்சி யைத் தக்கவைத்துக் கொள்ள உதயனும் இரண்டு தந்திரங் கள் செய்கிறான். இன்றைய சமூக ஒழுக்கத்தின் வழி நின்று பார்த்தால் அவை பெரும்பழிகள்.

முதலில் தனக்குப் பின் ஆட்சியுரிமை கோரி தனக்கு அச்சு றுத்தலாக இருக்கக்கூடிய உடன்பிறந்த தம்பி நான்காம் காசி யப்பனுக்கு மாப்பா பதவியைக் கொடுத்ததுடன், அவன் மக ளான திசை என்பவளை தானே மணந்து கொண்டான். பெறா மகளை அவன் மணந்தது அக்காலச் சமூகத்தில் எத்தகைய அதிர்வலைகளை உண்டாக்கியது என்பது தெரியவில்லை.

இறந்துபோன அண்ணன் சேனனின் மகன் ஐந்தாம் காசியப்-பன் அப்போதும் உபராசனாகவே இருந்ததால் அவனால் ஏற்-படக்கூடிய சதிகளைச் சமாளிக்க, நான்காம் காசியப்பனின் மகளும் திசையின் தங்கையுமான சேனை என்பவளை, ஐந் தாம் காசியப்பனின் இன்னொரு உடன்பிறவா தங்கையை, அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான்!

இப்படி ஒன்றுவிட்ட இரு சகோதரிகளை மணந்த முதலாவது மன்னனாக இலங்கையரசர் வரலாற்றில் இடம் பிடிப்பவன் ஐந் தாம் காசியப்பன். அவனை முன்மாதிரியாகக் கொண்டோ என்னவோ, பின்னாளில் பொலனறுவையின் மகாபராக்கிரம-பாகு மன்னனும் தன் சிற்றப்பன் மகளான லீலாவதியை திரும ணம் செய்துகொள்கிறான்.

மகாவம்சம் வெகு இயல்பாகவே இந்தத் திருமணங்களைக் கூறிச் செல்வதால், அக்கால வழக்கப்படி, இந்த மணங்கள் சமூகத்தால் ஏற்கப்பட்டிருந்தன என்றே கொள்ளமுடிகின்றது. ஆட்சி நிலைத்திருக்கையை உறுதிப்படுத்தவும், அமைதி யான ஆட்சியை வழங்கவும் மன்னர்களுக்கு மாத்திரம் சில விசேட சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்தச் சலுகைக ளின் கீழ் இத்தகைய முறைசாரா மணங்கள் சமூகத்தால் அங் கீகரிக்கப்பட்டிருக்கக்கூடும். கிரேக்க, உரோம நாகரிகங்க ளில் உடன்பிறந்த சகோதரிகளை மணக்கும் வழக்கமே அரச குடும்பங்களில் பரவலாகக் காணப்பட்டிருக்கிறது என்பதை நாம் இங்கு ஒப்பிடலாம். நாம் சமூக ஒழுக்கங்கள் மாறுபட்டி ருந்த அந்தக் காலம் வேறு, இந்தக் காலம் வேறு என்ற புரித லோடு இதை கடந்து செல்வோம்.

சரி, மீண்டும் பத்தாம் நூற்றாண்டுக்குத் திரும்புவோம். கேர-ளப் படைவீரர்களுக்கு அஞ்சி உரோகணத்தின் சீதுபர்வதகா மத்தில் வசித்து வந்த ஐந்தாம் மகிந்தன் அதற்குப் பிறகு என்ன ஆனான்?

- தொடரும்...



thulanchanan.v@thaiveedu.com

# மதமும் பண்பாடும்

ஜிஃப்ரி ஹாசன்

இன்றைய உலகு பல மதங்கள், பண்பாடுகள், மொழிகள், இனங்கள் எனப் பிரிந்திருக்கும் பன்மை நிலமாகும். இன்று ஒவ்வொரு தனிமனிதரும் ஏதேனுமொரு இனத்தின், மதத்தின், சமூகத்தின், பண்பாட்டின், மொழியின், தேசத்தின் உறுப்பின ராகவே இருக்கிறார். பழங்குடிகள் கூட ஒரு சமூகமாகவே வாழ்ந்து வருகின்றனர். மனித சமூகங்களின் பௌதீக வாழ்வி லும், சிந்தனை முறையிலும் மரபார்ந்த வாழ்க்கை முறையிலி ருந்து பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள இந்த யுகத்திலும் இது தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் மதமும் பண்பாடும் மொழியும் முதன்மையானதாகவும், வழிபாட்டுக்குரியதாகவும், அவர்க ளின் குருதியில் கெட்டியாகக் கலந்து விட்டதாகவுமே இருக்கி றது. இந்த எல்லைகளைக் கடந்து நிற்பவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு குறித்த விகிதத்தில் இருக்கத்தான் செய்கி றார்கள். இந்தப் பண்பாடுகள், மொழிகள், மதங்கள், நாகரீ கங்கள், தேசங்கள் அனைத்தும் ஒரே நாளில், ஒரே இடத்தில் அல்லது ஒரே காலப் பகுதியிலோ தோன்றியவை அல்ல என் பதை நாம் அறிவோம்.

ஆயினும் சில மதங்களுக்கிடையில் அவை தோன்றிய நிலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு தொடர்புகள் இருப்ப தைக் காணலாம். உதாரணமாக மத்திய கிழக்கு நிலப்பகுதி யில் தோன்றிய யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றுக் கிடையில் தொடர்புகள் உள்ளன. பொதுவாக இம்மூன்று பெருமதங்களும் பலதெய்வ (Multitheism) வழிபாட்டுச் சமூ கங்களிலிருந்து பல்லிறைவாதத்தை எதிர்த்துத் தோன்றிய மதங்களாகும். அதனால் இந்த மும்மதங்களினதும் மையக் கொள்கையாக ஓரிறைவாதம் (Monotheism) விளங்குகிறது.

அரேபியத் தீபகற்பத்தில் தோன்றிய இம்மூன்று மதங்களின தும் கடவுள்கொள்கை, வேதம் கூறும் செய்திகள் போன்றவற் றில் ஒத்த தன்மை இருப்பதையும் காணலாம். அதேபோன்று, இந்திய மண்ணில் தோன்றிய சமணம், சைவம், பௌத்தம் போன்றவற்றுக்கிடையிலும் இந்த நெருக்கம் உள்ளது. அதே போன்று ரஸ்யா, பாரசீகம், சிரியா, கிரேக்கம் மற்றும் ஐரோப்பா போன்ற பகுதிகளில் தோன்றிய மதங்கள் மற்றும் தத்துவங்க ளும் கூட ஒன்றுக்கொன்று ஒத்த தன்மையைக் கொண்டுள் ளன. இது ஒன்றின் மீது மற்றொன்று ஏற்படுத்தும் தாக்கம் தான். முன்னையதிலிருந்து (அல்லது சமகாலத்தில் நிலைபெ றும் மற்றையதிலிருந்து) பின்னையது தாக்கம் பெறாமல் முழு மையாகத் தனித்துவமானதாக எந்த மதமும் இல்லை என் பதை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்.

ஒரு மண்ணில் தோன்றும் மதமோ, தத்துவமோ முதன்மையாக அந்த மண்ணுக்குத்தான் அசலானதாக இருக்கும். ஏனெனில் அந்த மதம் அந்த சமூகத்தின் பாரம்பரியமான மொழி, பண்பாடு, மரபுகள், கலைகள், சமூக உளவியல், மானுடவியல் கூறுகள், சமூகத் தன்மைகள் போன்றவற்றையே பெருமளவில் பிரதி பலிக்கும். கடவுள் கொள்கையில் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, மிகச்சிறு அளவில் வணக்கமுறைகளில் புதுமையை அறிமுகப்படுத்தும்.

ஒரு மதம் அது தோன்றிய மண்ணிலிருந்து, தேசத்திலிருந்து, கலாசாரத்திலிருந்து, நாகரீகத்திலிருந்து, சமூகத்திலிருந்து மிகத் தொலைவிலிருக்கும் வேறு சமூகங்களுக்கு, பண்பாடு களுக்கு, இடங்களுக்குப் பரவிச்செல்லும் போது அந்த அந்த சுதேச சமூகங்களுக்கு அப்புதிய மதம் செயற்கையானதாக, அந்நியமானதாகவே (exotic) தோன்றும். காரணம், ஒரு மதம் புதிதாக ஒரு சமூகத்தில் அறிமுகமாகும் போது அந்த மக் கள் ஏற்கனவே ஒரு மதத்தின், சமூகத்தின், மொழியின், பண் பாட்டின் உறுப்பினர்களாகவே இருப்பார்கள். அவர்களில் எல்லோருமே தங்களது பழைய நம்பிக்கையை, மதத்தைத் துறந்து புதிய மதத்தை ஏற்றுக்கொண்டு அது உருவாக்கும் சமூகத்தினதோ, இனத்தினதோ, பண்பாட்டினதோ உறுப்பின ராக ஆகிவிடுவதில்லை. மாறாக, தாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை, பண்பாட்டு நடைமுறைகள், வழக்காறுகள், இனத் தனித்துவங்கள், மொழிப் பாவனைகள் போன்றவற்றை அப்ப டியே பேணிக்கொண்டு கடவுள் கொள்கையாகப் புதிய மதத் தைத் தழுவிக்கொள்கின்றனர். ஆயினும் இந்த மாற்றம் இல குவில் நடந்து முடிவதுமல்ல.

பழைய மதத் தலைவர்களினதும், அபிமானிகளினதும் பலத்த எதிர்ப்புகள் (அதன் உச்ச எல்லையாக யுத்தம் வரை அந்த எதிர்ப்பு இருக்கும்)அனைத்தையும் தாண்டித்தான் ஒரு மதத்தால் இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. உலக வரலாற் றில், பெரும் மதங்களுடன் மோதி இதில் தோல் வியடைந்த பல மதங்கள் அப்படியே எச்சசொச்சம் இல்லாமல் அழிக்கப்பட்டு முள்ளன.

### உள்நாட்டுச் சமூக மரபுகளை மறு ஆக்கம் செய்யும் வெளிநாட்டு மதங்கள்:

புதிதாக ஒரு மதம் அந்த மண்ணிலிருந்தே உருவாகி வரும் போது அல்லது வேறு மண்ணலிருந்து வந்து அறிமுகமாகும் போது அம்மண்ணில் வாழும் சுதேச மக்கள் அப்புதிய மதத் தைத் தழுவிக்கொண்டாலும், அதன் பண்பாடு மற்றும் மரபுக ளையும் சேர்த்துப் பின்பற்றுவதில்லை. காலப்போக்கில், அது திட்டமிட்டவகையில் அந்த மக்களின் பழைய நம்பிக்கைகள், வழக்காறுகள் போன்றன முற்றாகப் புதிய மதத்தால் களை யப்பட்டு மறு ஆக்கம் செய்யப்படும். அப்புதிய மதத்தைப் பின்பற்றும் சுதேச மக்களின் மூன்றாம் நான்காம் தலைமுறை யினரை அவர்களது முன்னோரின் பழைய நம்பிக்கைகள், வழக்காறுகள், கலாசார எச்சங்கள் போன்றவை தம்முடை

யவை அல்ல, அவை அழிக்கப்பட வேண்டியவை அல்லது வழிகேடானவை எனப் புதிய மதத்தின் தூய்மைவாதிகளால் மூளைச் சலவை செய்யப்பட்டு புதிய மதத்தின் தூய்மைவாத பக்தர்களாக மாற்றப்படுகின்றனர். இப்படித்தான் தூய்மைவாதம் உருவாகிறது.

கி.பி. 6-ம் நூற்றாண்டில் மக்காவில் இஸ்லாத்தை முதன் முதலில் முகம்மது நபிகளார் முன்வைத்தது, பல்லிறைவாத வழிபாட்டிலிருந்த, இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட மத நம்பிக்கை கொண்ட, கலாசாரத்தைக் கொண்ட அரபிகளிடம் தான். அப்போது அந்த அரபிகளின் பிரதான மதமாக அவர்களின் மூதாதையரின் மதமான பல்லிறை வழிபாடு (multitheism) விளங்கியது. அதேநேரம் அவர்களை மிக அண்டிய பகுதிகளில் கிறிஸ்வதம், யூதம் போன்ற மதங்களும் காணப்பட்டன. முகம்மது நபிகள் அரபிகளின் பாரம்பரிய மதமான பல்லிறைவாத மதத்திலிருந்தே தோன்றினார்.

ஏற்கனவே, அரபுத் தீபகற்பத்தில் ஒரு நாகரீகத்தை, வரலாற்றைத் தோற்றுவித்த அரபிகள், அரபு மொழியையும் உருவாக்கி இருந்தனர். அரபுத் தீபகற்பத்தில் பல்வேறு மதங்கள், நம்பிக்கைகள், பண்பாடுகள், மரபுகள் உருவாகி வந்த போதிலும் வலுவானதும், உறுதியானதுமான மொழியாக அரபும், அரபுப் பண்பாடும் விளங்கியது. இதனால் தான் அந்த மக்களும், தேசமும், அரபுக்கள் என்றும் அரேபியா எனவும் அழைக்கப்படுகிறது. எனினும் இதன் மூலம் இஸ்லாம் வருவதற்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அந்த மக்களிடமிருந்து வந்த வழக்காறுகள், மரபுகள், மொழி, கலாசாரம் போன்றன இந்தப் புதிய மதத்தின் வருகையினால் முற்றாக அழித்தொழிக்கப்படவில்லை. கடவுள் வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும்தான் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இஸ்லாத்தின் வருகையின் பின்னரும் அரபுமொழி மாற்றியமைக்கப்படவில்லை. அரபிகளின் பாரம்பரியமான ஆடை, உணவு, கலை போன்ற பண்பாட்டுக் கூறுகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னரும் இஸ்லாத்துக்கு முன்னர் இருந்த அதே மொழியும், பண்பாடும், மரபுகளும், பாரம்பரியங்களும் தான் இஸ்லாத்துக்குப் பின்னரும் தொடர்ந்தது. இதிலிருந்து இஸ்லாத்திற்காக ஒரு சமூகம் தங்கள் மொழியை, மரபுகளை, பண்பாட்டை, பாரம்பரியங்களைக் கைவிட வேண்டிய எந்த அவசியமுமில்லை என்பது புலனாகிறது.

இந்திய, இலங்கைச் சூழலில் இஸ்லாம் பரவுவதற்கு முன் இங்குள்ள மக்கள் சுதேச மதத்தின், பண்பாட்டின், இனத்தின் மொழியின் உறுப்பினர்களாகவே இருந்திருப்பார்கள். இஸ்லாம் இங்கு அறிமுகமானதன் பின்னர் இந்திய, இலங்கைச் சுதேசிகளாக இருந்த சிலர் இஸ்லாத்தைத் தழுவி இஸ்லாம் என்ற புதிய மதத்தின் அங்கத்தவர்களாயினர். ஆனால் அவர்களின் பூர்வீக மதம் இஸ்லாமல்ல. மொழி அரபு அல்ல. அவர்களின் பண்பாடும் மரபும் கூட அரபுப் பண்பாடோ, மரபோ அல்ல. அநேகமாக அவர்களும் பல்லிறைவாத நம்பிக்கையுடைய இந்நாடுகளின் சுதேசக் குடிகள்தான். இவ்வாறு புதிதாக இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட சுதேசிகள் மத்தியில் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மாற்றம் நிகழ்ந்து வந்திருக்கும். அது மெல்ல மெல்ல நிகழ்ந்து நான்காம் ஐந்தாம் தலைமுறையாகும் போது மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபட்ட ஒரு இனக்குழுமமாக உணரத் தலைப்பட்டிருப்பர். மற்ற சமூகங்களின் புதிய தலைமுறையினரும் அவர்களை ஒரு வேறு இனக்குழுமமாகவே பார்த்திருப்பார்கள். ஏனெனில் அவர்களது 4ம் 5ம் தலைமுறைக்கும் இவர்களின் கடந்த காலங்களில் இவர்கள் மத்தியில் நிகழ்ந்த சமூகப் பண்பாட்டு, மதரீதியான மாற்றங்கள் தெரிந்திருக்காது. அவர்களும் தங்களிலிருந்து சென்றவர்கள்தான் என்ற உண்மையை அவர்களால் உணரமுடியாது. காரணம், அவர்கள் சிறு பிள்ளைகளாகச் சமூகத்திலிருந்து உருவாகி, சமூகமயமாகி வரும்போது இவ்வாறு பண்பாட்டு மாற்றத்துக்கு உள்ளானவர்களைப் புதிய இனமாக, வேறு மதமாகத் தங்களிலிருந்து வேறுபட்டவர்களாகப் பார்த்தே பழகி வந்திருப்பார்கள்.

இலங்கை முஸ்லிம்கள், இலங்கை எங்கிலும் பரந்து வாழ்ந்தாலும் அவர்களின் தாய்மொழி தமிழ். வரலாற்று ரீதியாகப் பார்த்தால், மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் இனம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சிங்களவர்கள் பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பின்தொடர்பவர்கள். ஆனால் இனம் சார்ந்து அவர்கள் சிங்களவர்கள். இங்கு அவர்களின் மொழி, சமூக உளவியல், கூட்டுறவு, கலை, கலாசாரத் தளம் ஆகியவை இனப் பண்பாட்டினாலேயே இன்றளவும் தீர்மானிக்கப்படுகின்றன. சிங்களவர்கள் பௌத்த-கிறிஸ்தவ வித்தியாசங்களின்றித் தங்களைச் சிங்கள இனமாகவே உணர்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை சிங்களவர்களில் ஒரு சொற்ப அளவினர் இடைநடுவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டவர்கள் அவ்வளவுதான். தமிழர்களிலும் இந்துக்கள்-கிறிஸ்தவர்கள் மத வேறுபாடு இருந்தாலும் மொழியினடிப்படையில் தமிழர்களே. அவர்களது பௌதீகத் தோற்றம், சமூக உளவியல், அறிவுத் திறம் போன்றவையும் ஒரேமாதிரியானதுதான்.

அதேபோன்றுதான் அரபிகள், பாரசீகர், ஆங்கிலேயர், ஜேர்மனியர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், இத்தாலியர் என்போர் இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்க மதத்தவராக இருந்தாலும் அவர்களது இனம், மொழி அடிப்படையில் அமைந்தது தான். ஏனெனில் மதத்துக்கு முன்னரே மொழியும், இனமும் உருவாகி இருக்கிறது. அதுவே இயற்கையான அளவீடாகும். தொன்றுதொட்டு ஒரு சமூகம் என்ன அடையாளத்துடன் இருந்ததோ அதுவே அதன் உண்மையான அடையாளமாகும். அவர்கள் புதிய மதத்தைத் தழுவிக்கொண்டாலும் உடல் தோற்றம், மொழி, பண்பாடு, வழக்காறு, மரபுகள், சமூக உளவியல் என்பன அதன் உண்மையான அந்த ஆதியினக் குழுமத்தினதுடையதைப் போன்றே இருக்கும். அவர்களது உடல் தோற்றத்திலோ, நடத்தைகளிலோ, உளவியலிலோ எந்த மாற்றமும் நிகழாது. வேண்டுமானால் புதிய மதத்தைத் தழுவும் போது இனக் கலப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால் அவர்களின் ஆதி இனக்கூறிலிருந்து சிறிது வித்தியாசம் வெளிப்படலாம். காரணம் மதத்தால் மட்டுமே ஒரு இனம் மாறுவதில்லை. இயற்கையில் அது எந்த இனமாக இருந்ததோ அந்த இனத்தின் பண்புகளையும், உளவியலையும், உடற்கூறுகளையும் தான் அது வெளிப்படுத்துகிறது. எனவே ஒரு மண்ணுக்கு அதன் அசல் பண்பாடு பொருந்துமளவு ஏனைய பண்பாடுகள் சற்றே செயற்கைத் தன்மையுடன்தான் பொருந்துகின்றன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் அசல் பண்பாடுகளோடு ஏனையவை ஓர் ஆழமான இடைவினை கொண்டே தன்னை நிறுவிக்கொள்வது அவசியம் என்றே நினைக்கிறேன்.



jiffry.hassan@thaiveedu.com

# ஈழமண்ணில் இந்திய இராணுவம் : நூல்வழிப் பதிவுகள்

## அமைதிப்படை பற்றிய ஆய்வுகளும் பின்னூட்டங்களும்


– என். செல்வராஜா

6




1987-இல் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதி காக்கும் படையின் வரவு, சமாதானப் படை, ஆக்கிரமிப்புப் படையாக மாறியதன் காரண காரியங்களை அலசி ஆராய்ந்து பின்னாளில் பல வெளியீடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கின்றன. பல தமிழக எழுத்தாளர்களும் இது பற்றி விரிவாக எழுதியிருப்பதாக அறியமுடிகின்றது. இக்கட்டுரை பெரும்பாலும் ஈழத்துப் படைப்புகளையே முதன்மைப்படுத்தி எழுப்படுகின்றபோதிலும், இப் பிரச்சினை தொடர்பாக வெளிப்படையாகத் தமிழகத்தில் ஒலித்த பழ. நெடுமாறன் அவர்களது குரலின் வெளிப்பாடாயமைந்த நூலொன்றை முக்கியத்துவம் கருதி இங்கு குறிப்பிடுகின்றேன்.

‘இலங்கைத் தமிழர் பிரச்சினை: தில்லியின் துரோகக் கொள்கை’ என்ற தலைப்பில் எழுந்த இந்நூல் தமிழக அரசியல்வாதியான பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப்பட்டு சென்னை தமிழ்க்குலம் பதிப்பாலயத்தினால் செப்ரெம்பர் 1987-ல் வெளியிடப்பட்டது. இந்நூலில் இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட செயற்பாடுகள், மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை பறிப்புக்கு உடந்தையாக இருந்தது முதல் அமைதிப் படையை அனுப்பி ஈழத் தமிழர்களின் உயிரைப் பறித்தது வரையிலான நடவடிக்கைகள் விரிவாக ஒரு தமிழகத்தைச் சேர்ந்த ஈழவிடுதலை ஆதரவாளரின் பார்வையில் விளக்கப்பட்டுள்ளது.




தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் வாழ்ந்து மறைந்தவர் அன்ரன் பாலசிங்கம் (மார்ச் 04, 1938 - டிசம்பர் 14, 2006). அவர் எழுதிய இரண்டு நூல்கள் இலங்கையில் இந்திய இராணுவப் பிரசன்னம் பற்றிய பதிவுகளைக் கொண்டுள்ளன.

‘விடுதலை: கட்டுரைத் தொகுப்பு’ என்ற நூல் அன்ரன் பாலசிங்கம் எழுதி நவம்பர் 2003-ல் வெளியிட்டிருந்த நூலாகும். பல்வேறு காலகட்டங்களிலும் அவர் எழுதிய முக்கிய அரசியல் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றிருந்தன. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் பங்களிப்பும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணியில் 1987 ஜுலையில் புதுடில்லியில் நிகழ்ந்த சந்திப்பின்போது ராஜீவ்-பிரபாகரன் இடையே செய்து கொள்ளப்




பட்ட இரகசிய ஒப்பந்தம் உள்ளிட்ட பல விடயங்களையும் தெளிவுபடுத்தும் 11 கட்டுரைகள் இதில் உள்ளன.


‘போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு’ என்ற தலைப்பில் செப்ரெம்பர் 2005-இல் அவர் எழுதிய மற்றொரு நூல் லண்டனிலிருந்து வெளிவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் 27 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்புகொண்டிருந்த நூலாசிரியரின் இந்த அரசியல் வரலாற்று நூல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விறுவிறுப்பாக விளக்கிக் கூற முனைந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்த கொந்தளிப்பான அரசியல் பின்னணி, அதன் ஆரம்பகால ஆயுதப் போராட்டம், காலப்போக்கில் அதன் அபாரமான

போரியல் வளர்ச்சி என்ற ரீதியில் புலிகள் அமைப்பின் புரட்சிகரமான போராட்ட வரலாற்றை உண்மைத் தகவல்களுடன் உள்வீட்டுப் பிள்ளையின் பதிவாக வெளிப்படுத்தியது. ஒருபுறம் நீண்ட தொடர்ச்சியான, இரத்தம் சிந்தும் ஆயுதப் போராகவும், மறுபுறம் அமைதி வழியில் தீர்வுகாண வேண்டிய சமாதான முயற்சிகளாகவும் கட்டவிழ்ந்த விடுதலைப் புலிகளினது போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், திருப்பங்களையும் கால வரிசையில் மிக நேர்த்தியாக இந்நூல் எடுத்துக் கூறியது.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் சிலாபத்துக்கு அருகேயுள்ள மருதங்குளம் என்ற கிராமத்தில் பிறந்தவர் ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் அவர்கள். 1960-களில் இலங்கை வானொலி அறிவிப்பாளராகிய இவர் மூன்று தசாப்தங்களாக இலங்கை வானொலியில் பணியாற்றியவர். சங்க இலக்கியப் புலமை பெற்றவர். ஜனரஞ்சகத் திரைப்படப் பாடல்களினூடாக சங்க இலக்கியத்தின் இரசனையை பாமர மக்களிடம் அக்காலத்தில் எடுத்துச் சென்றவர். 'என் தமிழ்' என்ற பெயரில் பெப்ரவரி 1987-ல் ஓர் ஆக்க இலக்கிய நூலையும், 'கம்பரும் கவிஞரும்' என்ற பெயரில் செப்ரெம்பர் 1988-ல் மற்றுமொரு இலக்கியக் கட்டுரை தொகுப்பையும் வெளியிட்டிருந்த இவர், 'மனம் போன போக்கில்' என்ற தலைப்பில் செப்ரெம்பர் 1988-ல் மற்றுமொரு முக்கிய நூலை வெளியிட்டிருந்தார். இந்நூலில் தனது அனுபவ வாயிலான மனப்பதிவை எழுத்தில் தெளிவாக வடித்திருந்தார். இலங்கையில் இந்திய இராணுவம் கால்பதித்த வேளையில் பலத்த எதிர்பார்ப்புகளுடன் இருந்த ஈழத் தமிழர்களின் நம்பிக்கைகள் படிப்படியாக IPKF-ன் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளாலும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா அரசின் திட்டமிட்ட காய் நகர்த்தல்களாலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டம் கண்ட வேளையில் 27.10.1987 திகதி வரை தனது உணர்வுகளையும், வேதனைகளையும் நூலாசிரியர் பதிவாக்கியிருக்கிறார். ஒலிபரப்புத்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய இவர், இலங்கை வானொலியில் பணியாற்றிய வேளையில் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்களும் அவநம்பிக்கையூட்டும் சம்பவங்களும் இக்கட்டுரையின் பின்னணியில் இழையோடுகின்றன.

'சிதைந்த சித்தாந்தங்கள்' என்ற நூல் இலங்கை-சமூக விஞ்ஞான கலை இலக்கியக் கழகம், என்ற அமைப்பினால் ஏப்ரல் 1990-ல் வெளியிடப்பட்டது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பல்வேறு போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளையும் பதியும் வகையில் உருவாக்கப்பட்ட நூல் இதுவாகும். இந்தியப்படை வெளியேற்றம், இலங்கை அரசின் நிலைப்பாடு, இலங்கை இந்திய ஒப்பந்தம், இடைக்கால நிர்வாகம், விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப்பாடு, கல்வித் தரப்படுத்தலும் தமிழ் மாணவர் எதிர்ப்பும், தமிழ்ப் புதிய புலிகள் உருவாக்கம், பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை கொலை, மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல், சுந்தரம் கொலை, தமிழ் இயக்கங்களின் முக்கிய இராணுவ செயற்பாடுகள் எனப் பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள் இந்நூலில் பதியப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கருதி, வெளியிட்ட இடம், அச்சகம் போன்ற விபரங்கள் நூலில் காணப்படவில்லை.

ஈழத்து நவீன கவிதைத் துறையிலும், கலை-இலக்கியத் துறையிலும் ஆழக்கால் பதித்தவர் சேரன். கவிஞர் மஹாகவி (உருத்திரமூர்த்தி)யின் மகனான சேரன் கவிதைத்துறை, ஒவியத்துறையுடன் பத்தி எழுத்துக்களிலும் ஈடுபாடு கொண்டவர்.





ஈழத்து அரசியல் நிலைமைகளை இவர் கட்டுரைகள் வாயிலாகவும், பத்தி எழுத்துகளின் வழியாகவும் பதிவுசெய்து வருகின்றார். 1983-ல் இவரது முதலாவது நூல் இரண்டாவது சூரிய உதயம் வெளியாகியது. தொடர்ந்தும் பல கவிதைத் தொகுதிகளையும், கட்டுரைத் தொகுதிகளையும் வழங்கிய இவரது 'உயிர் கொல்லும் வார்த்தைகள்' என்ற நூல்பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்படுவது பொருந்தும். டிசம்பர் 2001-ல் வெளிவந்த இந்நூல் திசை, வீரகேசரி, சரிநிகர், செந்தா-மரை(கனடா), ஆகிய இதழ்களில் வெளிவந்த சேரனின் பத்திகளின் தொகுப்பாகும். ஈழப் போராட்டம், ஐரோப்பிய பயண அனுபவங்கள், தமிழ் தேசியவாதம், திரைப்படம், மொழி, இதழியல், இசை, ஈழத்து முஸ்லீம்களின் நிலை எனப் பல பொருள்கள் சுதந்திரமான விவாதத்திற்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக இலங்கையில் இந்திய இராணுவத் தலையீடு பற்றிய இவரது கருத்துக்களை இந்நூல் பதிவு செய்திருக்கிறது. புதிய தகவல்களையும் புதிய பார்வையினையும் அங்கதச் சுவையுடன் இயல்பான கவித்துவ நடையில் சேரன் தன் பத்திகளில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

1920-களில் யாழ். குடாநாட்டில் நிகழ்ந்த சமூக உருவாக்கத்தினை முதன்மை மையப் பொருளாகக் கொண்டு, அச்சமூக உருவாக்கத்தில் பங்காற்றிய சிந்தனைப் போக்குகளின் பிரதிநிதிகளில் கனதியான பாத்திரத்தை வகித்த யாழ். வாலிபர் காங்கிரஸ் குறித்தும் அவ்வமைப்பின் பங்களிப்பாளர்களுள் ஒருவராக இருந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விபுலானந்

தரின் பங்கு குறித்தும் பேசுகின்ற நூலொன்றினை அ.கௌரி-காந்தன் அவர்கள் சாளரம் வெளியீடாக 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் (1920-களில்)' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தார். இந்நூலின் 1-வது பதிப்பு, பெப்ரவரி 1992-லும், 2-வது பதிப்பு, மே 2013-லும் வெளியிடப்பட்டிருந்தது.


இந்நூலின் முதற்பதிப்பு வெளிக்கொண்டுவரப்பட்ட 1992-ம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் அந்நிய நேரடி இராணுவத் தலையீட்டை எதிர்கொள்வதின் போதான பேரிழப்புகளின் பின்னால், தமிழீழ அரசு மீளவும் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. அந்நிய இராணுவத் தலையீடும் அதை வெற்றிகொள்ள புலிகள் இயக்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இராணுவ, அரசியல் வழிமுறைகளும், பல படிப்பினைகளை தமிழ் பேசும் மக்களுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்திருந்தன. இப் படிப்பினைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் அரசியல் சிந்தனைப் போக்குகளை தமிழ்பேசும் மக்களிடையேயும், புலிகள் இயக்த்திற்குள்ளேயும் தோற்றுவித்தன. புலிகள் இயக்கத்துள் ஆக்கபூர்வமான, சுமூகமான ஓர் உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமானது என்றும் கூறலாம். இது புலிகள் இயக்கத்திற்கு முற்றிலும் புதிய தோர் மரபாகும். புலிகள் இயக்கமும் இதைப் புரிந்து கொண்டிருந்தது. மறுபிறப்பெடுக்க முயற்சித்தது. அதற்கான வழிமுறைதான் மேற்குறிப்பிட்ட உட்கட்சிப் போராட்டமாகும். இம்முயற்சிகளின் வெளிப்பாடுகளில் ஒரு துளிதான் இந்நூல் எனலாம்.




'தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஈழவேந்தனின் பதிவுகள்' என்ற நூல் நாகலிங்கம் குனசேகர் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, கனடாவிலிருந்து முகம் வெளியீடாக, மார்கழி 2007-ல் வெளிவந்திருந்தது.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பிறந்த ஈழவேந்தன், சென். ஜோன்ஸ் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தவர். இலங்கை மத்திய வங்கியில் தொழில் புரிந்து வந்த வேளையில் மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராக விளங்கினார். பின்னர் தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்ட இவர், காவலூர் நவரத்தினம் தமிழரசுக் கட்சியுடன் கொண்ட கருத்து முரண்பாடு காரணமாகத் தமிழர் சுயாட்சிக் கட்சியை உருவாக்கியபோது அதில் தன்னையும் இணைத்துக்கொண்டவர். பின்னர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர்ந்து, திம்புப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறியபோது காசி ஆனந்தன் போன்றோருடன் இந்தியாவுக்குச் சென்று தமிழகத்தில் தங்கியிருந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டவர் இவர். பின்னர் அங்கிருந்து இந்திய அரசினால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார். அதன்பின் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டபோது நியமனப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரானவர். இத்தகைய அரசியல் பின்புலத்தில் உருவாகிய ஈழவேந்தனின் கடிதங்கள், உரைகள், கட்டுரைகள் என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அவரது 50 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையின் பதிவாகவும், ஈழத்து அரசியல் போக்கின் ஒரு காலகட்ட வரலாற்றை உள்ளிருந்து பார்க்கும் ஒரு பார்வையாகவும் இந்த நூல் அமைகின்றது. கடந்த காலத்தில் ஈழவேந்தன் எழுதி வெளியிட்ட வரலாற்றுப் பதிவுகளின் மறு பதிப்பாகவும், வேறும் புதிய பதிவுகள் சேர்க்கப்பட்டும் இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழன் கண்ட முருகன் தொடங்கி, அண்மையில் ஐ.நா. தலைமைச் செயலாளர் பான் கி-மூனுக்கு எழுதிய கடிதம் வரை இந்த நூலில் பதிவாகியிருக்கிறது. இவற்றுள் ஈழவேந்தனின் நாடாளுமன்ற உரைகளும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் என்பனவும் அடங்குகின்றன.

'சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும்' என்ற நூல் 'ஈழம்-காலச்சுவடு பதிவுகள் 1988-2008' என்ற உபதலைப்புடன் காலச்சுவடு கண்ணனை தொகுப்பாசிரியராகக் கொண்டு டிசம்பர் 2009-ல் காலச்சுவடு பிரசுரமாக வெளிவந்திருந்தது. சுந்தர ராமசாமியின் காலச்சுவடு தோன்றிய காலகட்டம் முதல் நான்காம் ஈழப்போருக்கு முந்தைய காலகட்டம் வரை காலச்சுவடில் வெளிவந்த அரசியல் பதிவுகளின் தொகுதியாக இந்நூல் அமைந்திருந்தது. இந்திய அமைதிப் படையின் கோர முகத்தை உரித்துக் காட்டிய சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும் என்ற கட்டுரை காலச்சுவடு இதழ் இரண்டில் வெளிவந்த வேளையில் தமிழகச் சூழலில் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ் ஈழ அறிஞர்கள் வெளியேற்றப்பட்டமைக்கான எதிர்வினை, சூரியக்கதிர்-2 தாக்குதலின் அனுபவப் பதிவு, ஈழம் தமிழ்த் திரைப்படங்களில் சித்திரிக்கப்பட்ட விதம், ஈழப் போராட்டம்



பற்றிய சேரனின் விமர்சனப் பார்வை, ஜுலை 83 கலவரத்தின் இருபத்தைந்தாம் நினைவாண்டு சிறப்பிதழ், தமிழக முகாம்க ளில் ஈழத்தமிழர் நிலை என சுமார் இருபதாண்டு கால ஈழம் பற்றிய பன்முகப்பட்ட பதிவுகளின் தொகுதியே இந்நூலாகும். ஈழப் பிரச்சினை பற்றிய முழுமையான புரிதலுக்கு அவசிய மான வாசிப்பாக இத்தொகுதி அமைகின்றது.

'ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு' என்ற தலைப்பில் ஒரு நூலை இரு பாகங்களாக தமிழகத்தின் முக்கியமான படைப் பாளியான பாவை சந்திரன் ஏப்ரல் 2010-இல் தமிழகத்திலி ருந்து வெளியிட்டிருந்தார். சென்னை, கண்மணி கிரியேட்டிவ் வேவ்ஸ் என்ற நிறுவனம் இதனை வெளியிட்டிருந்தது. கடந்த 30 ஆண்டு அறவழிப் போராட்ட காலத்தையும், தொடர்ந்த 30 ஆண்டு ஆயுதப் போராட்ட காலத்தையும் உள்ளடக்கிய ஈழத் தமிழரின் போராட்டத்தின் வரலாறு இரண்டு பாகங்களில் எழு தப்பட்டுள்ளது. இந்நூலின் இரண்டாம் பாகம், இந்திய இரா ணுவ ஆக்கிரமிப்புக்கால வரலாற்றைப் பதிவுசெய்து வைத் துள்ளது. இவ்விரண்டாம் பாகத்தில் 31-வது அத்தியாயத்திலி ருந்து 57-வது அத்தியாயம் வரை எழுதப்பட்டுள்ளது. இதில் ஜே.ஆர். ஜெயவர்த்தன கால அரசியல் முனைப்பு, இந்திய-இலங்கை ஒப்பந்தச் சூழல், பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு, இந்திய அமைதிப்படைக் காலம், பிரேமதாசவின் நயவஞ்சக அரசியல், பத்மநாபா மீதான தாக்குதல், புலிகள்-முஸ்லிம் கள் உறவு, ராஜீவ் காந்தி படுகொலை, ஆனையிறவுப் போர், யாழ்ப்பாணத்தில் புலிகள் நிர்வாகம், விடுதலைப் புலிக ளுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்ட தடை, கிட்டுவின் உயிர்த் தியாகம், சந்திரிகாவின் ஆட்சிக்காலம், பேச்சுவார்த்தை, மூன்றாம் ஈழப்போர், நோர்வேயின் சமாதான முயற்சி, புலிக ளின் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகத் திட்டம், புலிகளைத் தாக்கிய ஆழிப் பேரலை, மகிந்த ராஜபக்ஷ காலம், மாவி லாறு அணைப் பிரச்சினை, வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை மறுத்தது, நான்காம் கட்ட ஈழப்போர், பிரபாகர னின் மாவீரர் தின உரை என முள்ளிவாய்க்கால் அவலம் வரை இவ்வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம் பற்றித் தமிழில் வெளிவந்த நூல்களைப் போலவே சிங்கள மொழியி லும் பல நூல்கள் அக்காலகட்டத்தில் வெளிவந்திருந்தன. குறிப்பாக சிங்கள புத்தி ஜீவிகளால் தொகுக்கப்பட்ட பல நூல்களுள்- தமிழாக்கம் செய்யப்பட்ட ஒரு தொகுப்பு நூல் பற்றி இங்கு குறிப்பிட்டுச் செல்வது பொருத்தமாக இருக்கும்.

'இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்வி கள், மற்றும் பாடங்கள்' என்ற தலைப்பிலான பாரிய தொகுப் பொன்றின் இரண்டு தொகுதிகள் வெளிவந்திருக்கிறது. முத லாவது தொகுதி 2002-ல் வெளிவந்தது. சிங்கள புத்திஜீவி யான குமார் ரூபசிங்க இதனைத் தொகுத்திருந்தார். திம்புக் கோட்பாடுகளை மீட்டுப்பார்த்தல்: ஓர் ஒருங்கிணைப்புக் கண் ணோட்டம் (சுமனசிறி லியனகே, நிருபா விக்கிரமசிங்க), LTTE-யின் தோற்றமும் 1987-ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தமும் (தோமஸ் ஏப்ரஹாம்), இலங்கையில் இந்தியத் தலையீடும் 1987-ம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்த மும்: ஒரு பின்நோக்கிய மதிப்பீடு (J.N. டிக்ஷித்), இலங்கை அரசாங்கமும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் வரையிலான சமாதான முயற்சிகளும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (பேர்னாட் திலகரட்ன), இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இனப் பிரச்சினையும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (கேதீஸ்-வரன் லோகநாதன்), புலனாய்வு மற்றும் பாதுகாப்பு முகவர்க ளின் வகிபங்கு (எம்.கே. நாராயணன்), ஜனாதிபதி பிரேமதாச வின் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 1989-1990 (பிரட்மன் வீரக்கோன்), ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் LTTEயிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை: ஒரு பின்னோக் கிய மதிப்பீடு (A.J.I. சந்திரகாந்தன்), ஆண்டு 1989-90 பிரேம தாச-LTTE பேச்சுவார்த்தைகள் ஏன் தோல்வியடைந்தன? உண்மையில் நடந்தது என்ன? (தயான் ஜயதிலக்க), அரசாங் கம் LTTE பேச்சுவார்த்தைகள் 1994-1995 மற்றுமொரு இழந்த வாய்ப்பு (P. இராஜநாயகம்), இலங்கையின் இன முரண்பாடு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமை பற்றிய தொரு பகுப்பாய்வு (ஜெஹான் பெரேரா), நோர்வே நாட்டு வச திப்படுத்தல் மூலமான அரசாங்கம் LTTE பேச்சுவார்த்தை முயற்சி 2000 சூழமைவு, சிக்கனத் தன்மைகள் மற்றும் பாடங் கள் (ஜயதேவ உயங்கொட), இலங்கையில் தொடரும் முரண் பாடுகளும், அணி திரட்டப்பட்ட புலம்பெயர் தமிழர்களின் தாக்கமும் (ரொஹான் குணரட்ன), சமாதானத்திற்கான முக் கிய தடை மனப்பாங்கு (ராஜன் ஸ்ரீஸ்கந்தராஜா) ஆகிய 14 கட்டுரைகளும், இவை தொடர்பான கடிதங்களும், மேற்கொள் ளப்பட்ட ஒப்பந்தங்களும் பின்னிணைப்பாகவும் தரப்பட்டிருந் தன.

இந்நூலின் இரண்டாவது பாகம் 2006-ல் வெளிவந்தது. அதே வேளையில் முதற்பாகத்தின் 2-வது பதிப்பும் கூடவே வெளியி டப்பட்டிருந்தது. முதற்பாகம் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளிட்டதாக 2000-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற் குரிய ஆய்வாக அமைந்திருந்த நிலையில், இரண்டாவது தொகுதி அதன் பின்னைய சமாதானச் செயற்பாடுகள் பற் றிய ஆய்வாக அமைந்திருந்தது.

கண்டி மாவட்டத்தின் பேராதனையைச் சேர்ந்த சார்ள்ஸ் தயா நந்த இலங்கையின் பிரபல்யமான கருத்தோவியக் கலைஞர் (கார்ட்டூன் ஓவியர்). 1971-ல் கிளர்ந்தெழுந்த ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன) ஆயுதப் போராளிகளுள் ஒருவர். ஜுலை 1971-ல் அரசினால் கைதுசெய்யப்பட்டு ஆறு ஆண்டு கள் தீவிர சிறைவாசத்தின் பின்னர் 1977-இல் விடுதலையாகி யவர். 'யுத்தத்தின் வரலாறு' என்ற நூல் சார்ள்ஸ் தயானந்த வின் கார்ட்டூன் சேகரிப்புகளின் தொகுப்பாகும். பேராதனை: National Integrated programme Unit and Media Circle அமைப்பினால் ஏப்ரல் 2000-ல் வெளியிடப்பட்ட இவ்வோவி யத் தொகுப்பு, 23-26 ஒக்டோபர் 1998-இல் நடைபெற்ற கண் காட்சியில் இடம்பெற்ற சமகால அரசியல் கேலிச் சித்திரங்க ளைக் கொண்டிருந்தது. இவை 1980-98 வரையான காலப்பகு தியின் இலங்கை அரசியல் நிலவரங்களை கருத்துப் படங்க ளாக்கியிருந்தன. இத்தொகுப்பினூடாக 20 வருட கால அரசி யல் இன வாத குழப்ப நிலை படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ள துடன் இந்திய அமைதிப் படை பற்றிய சிங்கள மக்களின் பார் வையும் ஆங்காங்கே இக் கருத்தோவி யங்களுள் பதிவாகியுள்ளன.



selvarajah.n@thaiveedu.com

# வீரசோழன்

- த. ஜீவராஜ்

14

அவர்கள் நால்வரும் விஜயராஜ விண்ணகரத்தை வந்த டைந்தபோது முற்றாக இருட்டிவிட்டிருந்தது. அறிவாட்டியிடம் கேட்டவற்றை வைத்துக்கொண்டு கற்பனை செய்திருந்ததை விடவும் ஆலயம் பிரம்மாண்டமானதாக இருந்தது. நீண்ட நாட் களாக மனக்கண்ணில் கண்ட இறைவனின் சந்நிதியை நேரில் கண்டதும் ஆதினிக்கு உடம்பெல்லாம் சிலிர்த்துப்போனது. அவர்கள் பிரயாணம் செய்து வந்தவர்கள் என்பதால் கோயி லுக்குள் செல்லாமல் தூரத்தில் நின்றபடி பாற்கடலில் துயி லும் பெருமானின் பள்ளியறைப் பூசையினைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

***‘மன்னு பெரும்புகழ் மாதவன்***
***மாமணி வண்ணன் மணிமுடி மைந்தன்***
***தன்னை உகந்தது காரண மாகஎன்***
***சங்கிழக் கும்வழக் குண்டே***
***புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்***
***பொதும்பினில் வாழும் குயிலே***
***பன்னியெப் போது மிருந்து***
***விரைந்தென் பவளவா யன்வரக் கூவாய்’***

நீடித்து நிற்கும் புகழுடைய மாதவன் மீது குயிலினைத் தூது விடும் ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழிப் பாடல் அது. அப்போது அந்தப் பாடலைப் பாடிய தேவரடி யார் யார் என்பதை அவர்களால் பார்க்க முடியாது இருந்தது. ஆனால் நால்வரும் அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்டு அசை யாது நின்றார்கள். அவர்கள் நடந்து வந்த களைப்பையெல் லாம் அந்த இனிய கானம் ஆற்றுப்படுத்தி இல்லாமல் செய் தது. ஆங்காங்கே விட்டுவிட்டு ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீபங்களின் ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆலயத் தின் அழகிலும், பாடலின் இனிமையிலும் நால்வரும் மயங்கி நின்றார்கள். ஆலயப் பூசைகள் முடிந்து சிறிது நேரமாகி இருக்கும். ஆலயத்தில் இருந்து அறிவாட்டி என்று கத்தியபடி ஒரு உருவம் வாசலை நோக்கி ஓடிவந்தது. முல்லை அழகி என்று கத்தியபடி அறிவாட்டி அவ்விடம் சென்று அந்த உரு வத்தை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

‘யாரக்கா இவ?’ என்று முழங்கையால் இடித்தபடி கோதை கேட்டாள்.

‘முல்லை அழகி. முல்லைத்தீவைச் சேர்ந்தவர்’ என்று ஆதினி யிடமிருந்து பதில் வந்தது.

‘முல்லைத்தீவா... அது எங்க இருக்குது?’

‘அந்த இடம் வடக்குப் பக்கமாக இருக்கிற ஊர் என்று அறி வாட்டிப் பாட்டி சொல்லி இருக்கிறா. பாட்டியும், அவரும் நெருங்கிய சினேகிதிகள்’ என்று சிரித்தபடி கோதையிடம் சொன்னாள் ஆதினி.

அவர்கள் ஐவரும் ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாகச் சிறிது தூரம் நடந்து சென்று வீரசோழன் ஆதுரர் சாலையை அடைந் தார்கள். அவர்கள் போய்ச் சேர்ந்த இடம் களஞ்சிய சாலை என்பதை அந்த மண்டபத்தின் ஓரத்தில் குவித்து வைக்கப்பட் டிருந்த மூலிகைச் செடிகளும், அவற்றின் மணமும் உணரச் செய்தது. அந்த மண்டபம் சுத்தமாக அவர்கள் தங்குவதற்கு ஏற்ற ஆயத்தங்களோடு தயார் செய்யப்பட்டிருந்தது. அவை அனைத்தும் முல்லை அழகிப் பாட்டியின் ஏற்பாடுகள் என் பதை நால்வரும் புரிந்து கொண்டார்கள். அவர்களுக்காகச் சுடச் சுடச் சமைத்த உணவைக் கொண்டு வந்திருந்தாள் பாட்டி. குளித்து சிரமப் பரிகாரங்களை முடித்துக் கொண்டு நால்வரும் உணவருந்தினார்கள்.


நடந்து வரும் பொழுது வீரசோழன் ஆதுரர் சாலையின் நோயாளர் பராமரிப்பு மண்டபத்தில் இருந்து வலி பொறுக்க மாட்டாமல் வெளிவந்த சத்தங்கள் ஆதினியின் கண்களைக் கலங்கச் செய்தது. கேசவனின் நினைவுகளால் அவள் மனம் நிறைந்திருந்தது. ஆதினியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு ஆறுதலாக நடந்தாள் கோதை.

ஆதினியின் மனவோட்டங்களில் ஒரு மாறுதலை ஏற்படுத்தும் நோக்கோடு ‘வீரசோழன் யாரு பாட்டி?’ என்று கோதை அறி வாட்டியிடம் கேட்டாள். அறிவாட்டியும், முல்லை அழகியும் அருகருகாகப் படுத்திருந்தார்கள். அறிவாட்டி தன் பழைய ஞாபகங்களுக்குள் போய் திரும்பி வர முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள். நீண்ட நேரத்தின் பின் அறிவாட்டி ‘என்ன கேட்டாய்?’ என்று கேட்டாள்.

‘என்ன பாட்டி... பக்கத்தில இருந்து நான் கேட்டது உங்க காதுல விழவே இல்லையா?’ என்று சலித்துக் கொண்டாள் கோதை.

‘வீரசோழன் யார் பாட்டி?’ என்று மீண்டும் உரத்துச் சத்தமிட்ட படி கேட்டாள்.

‘சோழ இலங்கேஸ்வர தேவர்’ என்று அறிவாட்டியிடமிருந்து



அமைதியாகப் பதில் வந்தது. கோதையும், ஆதினியும் ஏக காலத்தில், சோழப் பெருமன்னர் மகனல்லவா அவர். இலங்கை முழுவதையும் ஆட்சி செய்தவர் பெயரா வீரசோழன்?' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். ஆம் என்பதற்கு அடையாளமாக அறிவாட்டியிடம் இருந்து 'உம்' என்ற சத்தம் மட்டும் வெளிவந்தது. கரிகாலசோழன் என்டும் அவரைச் சொல்லுவாங்க என்றாள் முல்லை அழகி.

'வீரசோழன் என்றது சொந்தப் பேரா பாட்டி?' கோதை ஆர்வத்தோடு கேட்டாள்.

யாருக்குத் தெரியும். கட்டியக்காரன் சொல்ற பெயரத்தானே நம்மட சனத்துக்குத் தெரியும். முல்லை அழகி சிரித்தவாறே பதிலளித்தாள்.

சோழ இலங்கேஸ்வர தேவர் காலத்தில் கந்தளாய்க் குளமும், அதனுடைய வாசுதேவ வாய்க்கால், விக்கிரமசோழ வாய்க்கால் மற்றும் கண்ணாறுகள் முதலான பகுதிகள் தூர்வாரப்பட்டு திருப்பணிகள் செய்யப்பட்டது பற்றி அறிவாட்டி முன்னர் ஆதினியிடமும், கோதையிடமும் விரிவாகச் சொல்லியிருந்தார். அத்தோடு சோழ இலங்கேஸ்வர தேவர் சோழப்பெரு

மன்னர் இராஜேந்திர சோழருடைய மகனார் என்பதையும், அவருடைய வீரத்தைப் பற்றியும் நிறையவே அறிவாட்டி இரு வரிடமும் சொல்லி இருந்தார். இது தவிர சோழ இலங்கேஸ்வர தேவர் திருக்கோணேச்சரத்திற்குச் செய்த திருப்பணிகள் தொடர்பில் அவள் ஒரு விரிவான பாடமே எடுத்திருந்தாள். இன்னும் சோழ இலங்கேஸ்வர தேவர் தொடர்பில் கேட்டறிவதற்கு நிறைய விடயங்கள் இருந்தபோதும் அன்றைய தினம் அவர்கள் வீரசோழன் ஆதுரர் சாலையின் பெயர் தொடர்பில் அறிந்துகொள்ள அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

'சரி பாட்டி விஜயபாகு தேவருக்கு வீரசோழ மன்னர் பெரிய எதிரிதானே, அப்ப ஏன் அவற்ற பேர மாத்தாம விட்டார்?' கோதை விடுவதாக இல்லை.

'வீரசோழ மன்னர் காலத்தில அவருக்குத் துணையாகப் பெரிய பலம் பொருந்தின படைப்பிரிவு ஒண்டு பாதுகாப்புக்காக இருந்தது'. அறிவாட்டி சொல்லிக்கொண்டு வரும்போது இடைமறித்தாள் ஆதினி.

'நாம நடந்து வரும்போது ஒரு குதிரை வீரன் போனாரு, அவங்களா பாட்டி?' என்றாள் ஆதினி.

'ஆமா வலங்கை வேளைக்காரர் சேனை என்றது அந்தப் படைப்பிரிவின் பெயர்' என்றாள் அறிவாட்டி.

'வேளைக்காரரா? அவங்க கொஞ்சம் முரட்டுப் படையாச்சே' என்று கோதையின் தாய் கேட்டாள். ஆதினியும், கோதையும் அறிவாட்டியின் முகத்தைப் பார்த்தார்கள். நீண்ட காலத்தின் பின் அறிவாட்டியின் உரையாடலைக் கேட்கும் சந்தோஷத்தில் ஒருக்களித்துப் படுத்தபடி அறிவாட்டியின் முகத்தைப் பார்த்தபடி இருந்தாள் முல்லை அழகி.

'சாதாரண படை வீரர்கள் என்ன செய்வார்கள்?' என்றாள் அறிவாட்டி.

'போர் வந்தால் சண்டை பிடிப்பாங்க' என்று இருவரும் ஒரு குரலில் சொன்னார்கள்.

'வேளைக்காரர் சேனை அரசருடைய பாதுகாப்புக்கான தனியான படை. தங்கட உயிரைக் கொடுத்தாவது அரசரையும், அரச குடும்பத்தையும் காப்பது அவர்கள்ர கடமை. அவங்கள மீறி அல்லது அவங்கட கவனக் குறைவால அரசருக்கு ஏதும் தீங்கு வந்தால் வேளைக்காரர் சேனை வீரர்கள் அவங்கட உயிரைத் தாங்களே மாய்த்துக் கொள்வார்கள். அவங்க செய்த சத்தியத்தின்படி துர்க்கையின் முன்னால் தங்களைத் தாங்களே நரபலி கொடுத்துக் கொள்வார்கள்' என்றாள் அறிவாட்டி. அறையில் மௌனம் நிலவியது.

'படைப்பிரிவு மட்டும் இல்ல அதன் பெயர்கூடப் பெரியது' என்றாள் முல்லை அழகி.

'என்ன பெயர்?' என்று ஆர்வத்தோடு கேட்டாள் கோதை.

'விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்' என்றாள் முல்லை அழகி.

'ஆஹா பெயரைக் கூட மூச்சைப் பிடித்துக் கொண்டுதான் சொல்ல வேண்டி இருக்குது' என்று ஆச்சரியப்பட்டாள் கோதை.

'அது சரி பாட்டி இந்தப் படையணிக்கும் வீரசோழன் ஆதுரர் சாலைக்கும் என்ன தொடர்பு?' என்று கேட்டாள் ஆதினி.

விஜயபாகு தேவருக்கும், சோழருக்கும் நடந்த சண்டையில சோழப்படை பின்வாங்கி சோழ தேசம் போய்விட்டது. நம்மட நாட்டில இருந்த வேளைக்காரப் படையணியில சிலது இங்கேயே தங்கி விட்டது. அந்தப் படையணிகள் விஜயபாகு தேவர மன்னராக ஏற்றுக்கொண்டு அவருக்குச் சேவகம் செய்வதற்குச் சம்மதம் தெரிவிச்சது. வேளைக்காரப் படைப்பிரிவுக்குத் தேவையான வசதிகள மன்னர் செய்து கொடுத்தார்.

இடையில் கேள்வி கேட்டுக் குழப்பாமல் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள் கோதையும், ஆதினியும்.

'விஜயபாகு தேவருக்கும், சோழர்களுக்கும் நடந்த சண்டையின் போது இந்த ஆதுரர் சாலை வேளைக்காரப் படைப் பிரிவின் கட்டுப்பாட்டில் இருந்தது. சண்டை முடிந்து சோழப் படை வெளியேறிய பின் இங்கிருந்த பெரிய ஆலயங்கள், நிறுவனங்களின் பெயர்கள் புதிய மன்னர் விஜயபாகு தேவரின் பெயரில் மாற்றம் பெற்றது. ஆனால் வேளைக்கார படைப் பிரிவின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த இந்த ஆதுரர் சாலையின் பெயரை ஒரு நல்லெண்ண அடிப்படையில் விஜயபாகு மன்னர் மாற்றாமல் விட்டார்' என்றாள் அறிவாட்டி.

'நல்லெண்ணம்...' என்று இழுத்தபடி அறிவாட்டியைப் பார்த்துக் கொடுப்புக்குள் சிரித்தபடி முல்லை அழகி, 'அதெல்லாம் ஒன்றும் இல்லை எல்லாம் அரசியல்' என்றாள்.

'எது அரசியல் பாட்டி?' என்று முல்லை அழகியிடம் ஆதினி கேட்டாள்.

'சோழர் படை வேளைக்காரப் படைப் பிரிவை விட்டிட்டுப் போனதும், விஜயபாகு மன்னர் அவர்களை அரவணைத்ததும்' என்றாள் முல்லை அழகி. கோதையின் தாயிடம் இருந்து குறட்டைச் சத்தம் மெதுவாக வந்து கொண்டிருந்தது.

'சரி பாட்டி பிறகொரு காலத்தில சோழர்கள் திரும்பிப் படையெடுத்து வந்தா இந்த வேளைக்காரப் படைப்பிரிவு யார் பக்கம் நிற்கும் பாட்டி?' என்று ஆதினி எழுந்திருந்தபடி கேட்டாள்.

அறிவாட்டியும், முல்லை அழகியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். 'இனி இங்குதானே இருக்கப் போகிறாய். அடிக்கடி அந்த வேளைக்காரப் படைப்பிரிவு வீரர்களை வீதியில் பார்ப்பாய். இதை நீ அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்' என்றபடி திரும்பிப் படுத்துக் கொண்டாள் அறிவாட்டி.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

# ஆய்வு என்றால் என்ன
# ஆய்வு முன்மொழிவு என்றால்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட

தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

**‘தாய் வீடு’ நவம்பர் 2023 இதழில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்களின் ‘Writing Research Proposals: In the Social Sciences and Humanities – A Theoretical and Practical Guide’ என்னும் ஆங்கில நூலின் அறிமுக விமர்சனம் வெளியிடப்பட்டது. ஆராய்ச்சி முறையியல் (Research Methodology) பற்றிய இந்நூலின் முதலாவது அத்தியாயத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை இம்மாத இதழில் வெளியிடுகின்றோம்.**

## ஆய்வு: அறிவு உற்பத்தியின் நெறிமுறைப்படுத்தப்பட்ட செயல்முறை:

ஆய்வு முன்மொழிவுகளை எழுதுதல் பற்றிய இந்நூலினை ஆய்வு என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கத்துடன் ஆரம்பித்தல் பொருத்தமானது எனக் கருதுகிறோம்.

ஆய்வு என்பது அறிவின் உற்பத்தி சார்ந்த செயல்முறையாகும். அறிவின் உற்பத்தி சார்ந்த அச்செயல்முறை உயர் கல்விக் கற்கைப் பண்பாட்டில் (Culture of Higher Learning) வேரூன்றியதாகவும் உள்ளது. துறைதோய்ந்தவர்களான ஆய்வாளர் சமூகமான சிறப்புத் தொழிலாளர்களின் (Professionals) பணியாக விளங்கும் அறிவின் உற்பத்தி, அச்சமூகத்தின் நடைமுறைகள், விழுமியங்கள், நியமங்கள் என்பனவற்றுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வின் மூலம் இயங்குவதாகும். ஆராய்ச்சியாளர்கள் சிறப்புத் தொழிலாளர் கழகங்கள், புலமை நிறுவகங்கள், சபைகள், சங்கங்கள் போன்ற அமைப்புகளில் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிப் பணிக்கு உதவி வருகின்றன. பின் பட்டப்படிப்புப் பாடநெறிகளை நடத்தி ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மாணவர்களோடு இணைந்து ஆராய்ச்சிகளைச் செய்தல் என்ற இருவகையில் இந்த உதவி வழங்கப்படுகிறது. ஆராய்ச்சியின் பயனாக அமையும் அறிவின் உற்பத்தி குறிப்பிடப்பட்ட புலமைத் துறைகளைச் சார்ந்தே நடைபெறுகிறது. இதனால் அறிவு ‘புலமைத்துறைசார் அறிவு’ (Disciplinary Knowledge) எனக் கூறப்படும். (Discipline என்ற சொல் ‘புலமைத்துறை’ என்ற பொருள் உடையது.)

புலமையாளர்களிடம் தமது துறையின் அறிவு உற்பத்தி, என்ன முறைகள் (Methods) மற்றும் என்ன நடைமுறைகளின்படி செய்யப்பட வேண்டும் என்பது பற்றிய பொதுவான இணக்கம் காணப்படும். அவர்கள் ஆராய்ச்சியின் பயனாக அமையும் அறிவை ஏற்புடையது என உறுதிப்படுத்தும் (Validation) பணியையும் செய்கின்றனர். இவ் உறுதிப்படுத்தல் தொடர்பாகப் பொதுவான இணக்கப்பாடும் அவர்களிடம் இருக்கும். ஆராய்ச்சியாளர்கள் விஞ்ஞான சமூகத்தின் (Scientific Community) உறுப்பினர்களுமாவர். இச் சமூகத்தின் உறுப்புரிமையைத் தனிநபர் ஒருவர் பெறுவதற்கு மேற்குறித்த முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அவசியமானது. புலமையாளர்களின் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதுண்டு. அவ்வாராய்ச்சி மாநாடுகளில் கட்டுரை சமர்ப்பித்தலும், படித்தலும் ஆராய்ச்சியாளருக்கு வழங்கப்படும் அங்கீகாரமாகும். இவ்வாறே ஏற்புடைமை பெற்ற புலமையாளர்கள் குழுவால் வெளியிடப்படும் பருவ இதழ்களில் (Journals) தம் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுதல் ஆய்வாளருக்குக் கிடைக்கும் முக்கியமான அங்கீகாரமாகும்.

பின் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆராய்ச்சியில் பயிற்சி பெறுதல் கட்டாயமானது. அவர்களது பின் பட்டப்படிப்பின் தகுதி அவரது ஆராய்ச்சியின் பயனான ஆய்வேட்டின் தரத்தை வைத்தே மதிப்பிடப்படும். பின் பட்டப்படிப்புப் பயிற்சியைப் பெற்ற ஒருவர் ஆராய்ச்சியாளர்கள் என்னும் உப பண்பாட்டுக் (Sub-Culture) குழுவில் சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்படுகிறார். சாதாரண மனிதர்களைவிடத் தாம் மேலானவர்கள் என்ற எண்ணம் இந்த உப பண்பாட்டுக் குழுவினரிடம் இருப்பதுண்டு. அவர்கள் ஆராய்ச்சி முறைகள், முடிவுகள் என்பன குறித்துத் தமக்கிடையே கடுமையான வாதங்களில் ஈடுபடுவர். இவை குழுச் சண்டைகளாகவும், அதிகாரத்திற்கான போட்டியாகவும் அமைவதுண்டு. எவருடைய அறிவு மாதிரி (Paradigm of Knowledge) மேலானது, உயர்ந்தது என்பதற்கான போட்டியின் வெளிப்பாடாகவும் இது இருக்கும்.

அறிவின் உற்பத்தி நெறிமுறைப்படுத்தப்பட்ட செயல்முறையாகும் என்ற கருத்து மிகவும் பழமையானது. உதாரணமாக அரேபியர்கள், கிரேக்கர்கள், இந்தியர்கள், சீனர்கள் ஆகியோர் பண்டைய காலத்தில் அறிவின் உற்பத்திக்குச் சில உபாயங்களைக் கையாண்டுள்ளனர். ஆழ்ந்த சிந்தனை, பிரதிபலிப்பு, விவாதித்தல், தர்க்கமுறையில் நியாயித்தல் என்பன அவர்களால் கையாளப்பட்ட உபாயங்களாகும். இந்தியச் சிந்தனை மரபிலும், கிரேக்க சிந்தனை மரபிலும் தர்க்கவியல் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்தது. அம்மரபுகளில் சரியான வழிமுறையைப் பெறுவதற்குரிய வழியாகத் தர்க்கவியல் அமைந்தது.

பண்டைய நாகரிக சமூகங்களில் அறிவைப் பெறும் செயல் முறை இருந்ததெனினும் ஆராய்ச்சி என்று நாம் இன்று கரு தும் செயல்முறை அண்மைக் காலத்திலேயே தோன்றியது. 17-ம் நூற்றாண்டில் 'நவீன விஞ்ஞானம்' வளர்ந்தது. அத னோடு சமாந்தரமாக ஆராய்ச்சி செயல்முறையும் வளர்ச்சி பெற்றது. நவீன விஞ்ஞானத்தின் தோற்ற வரலாற்றில் பிரான்-சிஸ் பேக்கன் (1561-1626) சிறப்புக்குரிய இடத்தைப் பெறு கின்றார். விஞ்ஞான அறிவின் உற்பத்தி என்றால் என்ன என் பதை மிகத் தெளிவாக நெறிமுறைப்படி முதன்முதலாக வகுத்துரைத்தவர் பிரான்சிஸ் பேக்கன் ஆவார். விஞ்ஞான அறிவின் உற்பத்தியில் ஈடுபடும் போது என்ன நிகழ்கிறது, பௌதிக அறிவு முறைகளிலிருந்து விஞ்ஞான அறிவு எப்படி வேறுபடுகிறது, விஞ்ஞான அறிவின் உற்பத்தியில் என் னென்ன படிமுறைகள் உள்ளன என்பனவற்றையெல்லாம் பிரான்சிஸ் பேக்கன் வரையறுத்துக் கூறினார்.

அறிவு உற்பத்தியின் நெறிமுறைப்படுத்தல் (Systematiza-tion) முதலில் இயற்கை விஞ்ஞானங்களிலேயே ஆரம்பித் தது. பிரான்சிஸ் பேக்கன் இதற்கு செய்த பங்களிப்பு மகத்தா னது. அவர் பண்டைய மெய்யியலாளர்கள் அறிவின் உற்பத் திக்குக் கையாண்ட நெறிமுறையில் இருந்து முற்றிலும் வேறு பட்ட நெறிமுறையைப் புகுத்தினர். இவ்வேறுபட்ட நெறி முறைக்கு அழுத்தம் கொடுத்த முதல்வர் பேக்கன் ஆவார். முற்காலத்தில் மெய்யியலாளர்கள் பகுத்தறிவுமுறை (Ra-tional Method) அல்லது தர்க்கமுறை நியாயித்தல் என்பதை அறிவின் உற்பத்திக்கான வழிமுறையாகக் கையாண்டனர். இம்முறையைக் கையாண்டவர்களில் அரிஸ்டோட்டில் புகழ் பெற்ற ஒருவர். பேக்கன் அரிஸ்டோட்டிலின் முறையைத் தவ றுடையது என்று ஒதுக்கினார். அவதானித்தல் (Observation), பரிசோதனை (Experimentation), பொதுமைப்படுத்தல் (Generalisation) ஆகியனவே அறிவின் உற்பத்திக்கான சரி யான வழிமுறைகள் என பேக்கன் கூறினார். அவர் காலத்தில் பொறியியலாளர்களும், விஞ்ஞானிகளும் இதனையே நம்பத் தகுந்த அறிவைப் பெறும் வழிமுறையாகக் கொண்டிருந்த னர். அவரது சமகாலத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், பேக்கனால் சரியான வழி என அடையாளம் காணப்பட்டது மான இம்முறையை 'விஞ்ஞான முறை' (Scientific Method) என அழைப்பர். இது Inductive Method எனவும் அழைக்கப் பட்டது. பேக்கன் காலம் முதலாக இயற்கை விஞ்ஞானங்க ளின் ஆராய்ச்சிப் பண்பாட்டில் 'விஞ்ஞான முறை' முதன்மை பெறலாயிற்று.

மனித சமூகம் பற்றிய ஆய்வில் ஆய்வு முறையைக் கையாள வேண்டும் என்ற எண்ணம் 19-ம் நூற்றாண்டிலேயே தோன்றி யது. இயற்கை விஞ்ஞானங்களில் உபயோகிக்கப்படும் விஞ் ஞான முறையை மனிதப் பண்பியலிலும், மனித சமூகம் பற் றிய ஆய்விலும் பிரயோகிக்க வேண்டும் என்ற சிந்தனையின் முன்னோடி யோன் ஸ்ரூவாட் மில் (1806-1873) என்ற ஆங்கில நாட்டு மெய்யியலாளராவார். கார்ல் மார்க்ஸ் (1818-1884) ஐரோப்பிய அறிவியல் சிந்தனை மரபில் கோலோச்சிய அபௌதிகவியல் (Meta-Physics), அறிவுவாதம் (Rational-ism) என்பன குறித்து விமர்சன நோக்குடையவராக இருந் தார். அவர் பிரான்சிஸ் பேக்கன் தொடக்கிவைத்த விஞ்ஞான மரபு குறுகிய அனுபவவாதத்தின் (Narrow Empiricism) குறை பாடுகளை உடையது என்ற கருத்தையும் கொண்டிருந்தார். அவர் சமூகம் பற்றிய ஆய்வில் மெய்யியல் முறையினை உரு வாக்கினார். அவரது மெய்யியல் முறையின் முதன்மைக் கூறு களாக இயக்கவியலும் (Dialectics), வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் (Historical Materialism) அமைந்தன. அக ஷட் கொம்ட் (August Comte: 1798-1857), எமில் டர்க்கீம் (Emile Durkheim: 1858-1917) என்னும் இரு பிரஞ்சு தேசத்துச் சிந்தனையாளர்கள் இயற்கை விஞ்ஞான முறையை மனித சமூகம் பற்றிய ஆய்வில் புகுத்துவதில் முனைப்போடு செயற் பட்டவர்களாவர்.

கொம்ட் அறிமுகம் செய்த அனுபவவாத முறை (Empiricist Method) நேர்காட்சிவாதம் (Positivism) என அழைக்கப்பட் டது. இதனையடுத்து விஞ்ஞான முறையை சமூகவியலில் பிர யோகித்தவர் எமில் டர்க்கீம் ஆவார். இவர் சமூகவியல் ஆய்வு முறை பற்றிய விதிகள் (The Rules of Sociological Method) என்ற வழிகாட்டி நூலை 1895-ம் ஆண்டு வெளியிட் டார். இதற்குப் பின்னர் இயற்கை விஞ்ஞானங்களில் உபயோ கிக்கப்படும் விஞ்ஞான முறையை, மனிதப் பண்பியலிலும், சமூக ஆய்விலும் பிரயோகித்தல் வலிதுடையதா என்பது குறித்துப் பல சர்ச்சைகளும் விவாதங்களும் இடம்பெற்றன. இவ்விவாதங்களில், ஜேர்மனிய தேசத்து அறிவாளிகள் மத்தியில் இடம்பெற்ற முறை பற்றிய சர்ச்சை (Clash over Method) புகழ்பெற்றது. இதனை 'Methodenstreit' என்ற யேர்மன் மொழிச் சொல்லால் குறிப்பிடுவர். இயற்கை விஞ்ஞானங்க ளில் ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறை, மனித சமூகம் பற்றிய ஆய்வுக்குப் பொருத்தம் உடையதா என்பதே இவ்விவாதத்தின் விடயப் பொருளாகும். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற இவ்விவா தத்தை விபரிப்பது இங்கே எனது நோக்கமன்று. அது ஒரு தனி நூலாகவே விரித்து எழுதப்பட வேண்டியது. அதனைப் பற்றி இந்நூலில் பிறிதொருபகுதியில் சுருக்கமாகக் குறிப்பிடு வோம்.

## புதிய அறிவு:

ஓர் ஆய்வுத் திட்டத்தின் கீழ் ஆய்வாளர் ஒருவர் அறிவு உற் பத்தியை செய்யும்போது, அவர் படைத்தளிக்கும் அறிவி னால் அவர் ஆய்வுக்குட்படுத்திய பிரச்சினை குறித்துப் புதி யதொரு விளக்கம் கிடைக்கிறது. அப்பிரச்சினை பற்றிய புரி தல் சாத்தியமாகிறது என்று நம்பப்படுகிறது. பின் பட்டப்ப டிப்பு மாணவர்கள் தாம் சமர்ப்பித்த ஆய்வேட்டினை நேர்மு கம் ஒன்றில் சமூகமளித்து பேராசிரியர்கள் குழு ஒன்றின் முன் நியாயப்படுத்த வேண்டும். அவ்வேளை பேராசிரியர்கள் ஆய் வாளரிடம் வினவும் வழமையான வினா, 'உங்கள் ஆய்வு இவ் விடயம் பற்றி ஏற்கனவே இருக்கும் அறிவுத் தொகுதிக்குப் புதிதாகக் கொண்டுவந்து சேர்ந்திருப்பவை எவை?' என்பதா கும். குறித்தவொரு ஆய்வேடு அவ்வாறான 'புதிய அறிவைப் பங்களிப்பாக வழங்கத் தவறுமிடத்து அல்லது ஆய்வாளர் தமது ஆய்வு அத்தகைய புதிய அறிவை வழங்கியுள்ளது என் பதை பேராசிரியர்கள் குழுவினை ஏற்றுக்கொள்ளச் செய்யத் தவறுமிடத்து ஆய்வாளருக்குப் பட்டம் வழங்கும் சாத்தியம் இல்லாது போகலாம். இவ்வாறே ஒரு பருவ இதழில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை நாம் வாசிக்கும் போது அக்கட்டுரையில் புதிய கருத்துகள், புதிய வாதங்கள், புதிய பகுப்பாய்வு என் பன உள்ளனவா, புதிய கோட்பாட்டுத் தகவல்கள் தரப்பட் டுள்ளனவா என்றே தேடிப் பார்க்கின்றோம். புலமைத் துறை யினரின் ஆராய்ச்சிப் பண்பாட்டில், ஆராய்ச்சியின் பெறுபே றாக அமையும் அறிவு புதியதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆழமாகப் பதிந்துள்ளது. ஏற்கனவே இருந்துவ ரும் அறிவுத் தொகுதிக்கு, ஆய்வு புதிய பங்களிப்பைச் செய்து, குறித்தவொரு துறையை மேம்படுத்துகிறது எனக் கருதப்படுகிறது. அவ்வாறான பங்களிப்பை வழங்குமிடத்து

தான் ஒரு ஆராய்ச்சியாளரின் ஆய்வு, புலமையாளர் சமூகத்தின் கவனத்தைப் பெறுகிறது.

அறிவின் உற்பத்தி என்ற செயல்முறையில், ஆராய்ச்சியின் வழிகாட்டியாக முறையியல்களும் முறைகளும் அமைந்துள்ளமையினால் அவை முக்கியம் பெறுகின்றன. ஆராய்ச்சி ஒரு நெறிமுறைப்படுத்தப்பட்ட செயல்முறை என்பதை இயற்கை விஞ்ஞானமும், சமூக விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆகையால் ஆய்வின் பயனான அறிவை மதிப்பிடுவதற்கு, ஆய்வுச் செயல்முறையில் உபயோகிக்கப்பட்ட முறைகள் யாவை என்பது முக்கியம் பெறுகிறது. உலக முழுமையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இம் மரபுக்கேற்ப ஆய்வாளர்கள் தமது



பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

ஆய்வைத் தொடங்குமுன் ‘ஆய்வு முன்மொழிவு’ (Research Proposal) ஒன்றை எழுதி வழங்குவர். இவ்வாய்வு முன்மொழிவில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- விசாரணை செய்யப்படவிருக்கும் ஆய்வுப் பிரச்சினை பற்றிய விபரம்.
- குறித்த ஆய்வுப் பிரச்சினை எத்தகைய அறிவு வரைசட்டத்தின் (Knowledge Framework) பின்புலத்தில் அமைந்துள்ளது என்ற விபரம்.
- ஆராயவிருக்கும் ஆய்வு வினாக்கள் யாவை என்பது பற்றிய விபரம்.
- ஆய்வின் போது பயன்படுத்தப்படவிருக்கும் ஆய்வு முறைகள் பற்றிய விபரம்.

மேற்குறிப்பிட்ட காரணத்தால் ‘ஆராய்ச்சி முன்மொழிவை’ எழுதி வழங்குதல், ஆய்வாளர் ஒருவருக்கு ஆய்வுத் தொழிலில் தமக்கு இருக்கும் திறமையைக் காண்பிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் எனக் கருதலாம். ஆய்வாளர் தமது ஆய்வேட்டை இறுதியில் சமர்ப்பிக்கும் போதும், அவரது ஆராய்ச்சி அறுவடையின் பெறுமதியும் வலிதுடைமையும் அவர் கையாண்ட ஆய்வு முறைகளை வைத்தே ஆய்வுச் சமூகத்தால் மதிப்பீடு செய்யப்படும். ஆய்வாளர் தொகுத்த தரவுகளின் தரம், தரவுகளைத் தொகுப்பதற்கு அவர் பயன்படுத்திய முறைகள், தரவுகளை விளக்குவதற்கு அவர் உபயோகித்த உபாயங்களும், நுட்ப முறைகளும் கவனத்தில் கொள்ளப்படும். அத்தோடு ஆய்வாளர் முன்வைக்கும் கோட்பாட்டு வாதங்களின் நம்பகத்தன்மையும், அவர் கூறும் ஆய்வு முடிவுகளின் தரம், அம் முடிவுகள் ஏற்புடமை பெறக்கூடியவையா என்பனவும் அவர் கையாண்ட ஆய்வு முறைகளினால் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆய்வாளர்கள் தமது தேச எல்லைக்குள்ளும், உலகு தழுவியும் குறித்த துறை அறிவுத் தொகுதியின் நிலையை வரையறை செய்து தாம் செய்யவுள்ள பங்களிப்பைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். தாம் பங்களிப்புச் செய்யவுள்ள புதிய அறிவு பற்றிய வாதத்தை முன்வைப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக இது அமையும். ஆய்வாளரால் தேடித் தொகுக்கப்பட்ட தரவுகள், நேர்வுகளின் புதுமை, கொடுக்கப்படும் விளக்கத்தில் வெளிப்படும் புதுமை, ஆய்வின் ஊடாக முன்வைக்கப்படும் கோட்பாடுகள் ஊடான வாதங்கள் என்பன புதியனவாக அமைந்து, ஆய்வின் மதிப்பை உயர்த்துவனவாக இருக்கும்.

## ஆராய்ச்சியும் கருத்து உருவாக்கமும்:

சமூக விஞ்ஞான ஆராய்ச்சியை ஊடகங்கள் ஊடாகப் பொது மக்களிடையே செய்யும் கருத்து உருவாக்கம் (Opinion Making), கருத்தியல் என்பனவற்றில் இருந்து வேறுபடுத்தி நோக்க வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றில் கட்டுரைகளை எழுது வதன் மூலம் கருத்து உருவாக்கம் நடைபெறுகிறது. இது அறிவின் உற்பத்திக்கும், அறிவைப் பரப்புவதற்குமான சிறந்த வழிமுறையாகவும் உள்ளது. பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஊடகவியலாளர்களைக் கொண்டும், புலமைத் துறையினரைக் கொண்டும் பத்தி எழுத்துகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றன. இச்செயற்பாடு அறிவின் உற்பத்திக்கான தகவுடைய வழி என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவ்வெழுத்துகளும், கட்டுரைகளும் ‘விஞ்ஞான ஆராய்ச்சி’ எனக் கொள்ளப்படுவதில்லை. கருத்துகளும், கருத்தியலும் சமூக அறிவின் கூறாக அமைவனவே.

ஆயினும், ஆய்வுச் சமூகம் கருத்துகளையும், கருத்தியலையும் நெறிமுறைப்பட்ட ஆராய்ச்சியின் விளைவான அறிவுக்கு நிகரானவையாக அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. கருத்துக்கூறல் முறையிலான கட்டுரைகளை எழுதும்போது அவற்றை எழுதுவோர், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைத் தாராளமாக உபயோகிக்கின்றனர். அவ்வேளை அவர்கள் ஆராய்ச்சி தொடர்பான ‘புறநிலைத் தன்மை’ (Objectivity) என்ற எண்ணக்கரு, அதுசார்ந்த நடைமுறைகள் என்பன குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. இதற்கு மாறாக சமூக விஞ்ஞான அறிவு உற்பத்தி சான்றாதாரத்தின் அடிப்படையில் அமைவது. பகுப்பாய்விலும், வாதங்களிலும் சமநிலை பேணப்படுவதோடு, நிதானமும் கடைப்பிடிக்கப்படும். ஆய்வு ‘புறநிலைத் தன்மை’-யுடையதாக இருக்கும். ‘புறநிலைத் தன்மை’-யுடைய அறிவின் உற்பத்தி நடைமுறை பற்றி ஆராய்ச்சியாளர் சமூகம் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளுக்கு அமைவானதாக ஆராய்ச்சி அமைதல் வேண்டும்.

## அறிவைச் சமயச் சார்பற்றதாக ஆக்குதல் (Secularization of Knowledge):

ஒழுங்கமைக்கப்பட்ட அறிவு உற்பத்தி முறைகளுள், சமயம் என்ற நிறுவனம், அறிவு உற்பத்திக்கும், அறிவைப் பரப்புவ

தற்குமான முக்கிய நிறுவனமாக இருந்து வந்துள்ளது. ஆகவே ஆராய்ச்சி மட்டுமே அறிவு உற்பத்திக்கான ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன முறை எனக் கருதக் கூடாது. விஞ்ஞான அறிவின் வளர்ச்சியினால் சமயத்தின் வகிபாகம் இக்காலத்தில் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் அறிவொளி யுகத்தின் போது விஞ்ஞான அறிவு உயர்ந்த மதிப்புக்குரிய, முதன்மையான அறிவு முறையாக எழுச்சி பெற்றது. விஞ்ஞான அறிவுக்கும் புதிய சமூக வர்க்கங்களுக்கும், அரசு, தொழில்நுட்பம் என்பனவற்றிற்கும் இடையே நெருங்கிய பிணைப்பும் தொடர்பும் ஏற்பட்டது. இதனால் விஞ்ஞான அறிவு உயர் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் பெற்றது. சமயத்திற்கு நிகரான அல்லது அதனிலும் மேம்பட்ட அந்தஸ்தும் அதிகாரமும் கூட விஞ்ஞான அறிவுக்குக் கிடைத்தது. பல்கலைக்கழகங்கள் அறிவின் உற்பத்திக்கான உயர் மதிப்புடைய நிறுவனங்களாக வளர்ச்சியடைந்தன. இன்று பல்கலைக்கழகங்களின் பட்டப் பின்படிப்பு நெறிகள் ஆராய்ச்சிக்கு முதன்மையிடத்தை அளிக்கின்றன. நமது பல்கலைக்கழகங்களின் பணிப் பொறுப்பில் ஆராய்ச்சியும் ஆராய்ச்சிக்கான பயிற்சியும் மிக இன்றியமையாத கூறுகளாக அமைந்துள்ளன.

அறிவு உற்பத்திக்கான ஆராய்ச்சி ஒரு நடைமுறை (Practice)யாக வளர்ச்சியுற்ற போது, பல விவாதங்களும் சர்ச்சைகளும் இடம் பெற்றன. இவ்விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் பொதுவான அறிவு பற்றியும், தனித்தனித் துறைகள் சார்ந்த அறிவு பற்றியும் விவாதிக்கப்பட்டன. முற்கால ஐரோப்பாவில் அறிவின் உற்பத்தி மெய்யியலாளர்களுக்கு (Philosophers) உரிய விடயமாக இருந்தது. இம்மெய்யியலாளர்கள், பண்டைய கிரேக்கத்தில் அறிவுக் கழகங்களுடன் இணைந்திருந்தனர். மத்தியகால ஐரோப்பாவில் மெய்யியலாளர்கள் அரசர்களது அல்லது உயர்குலப் பிரபுக்களது ஆலோசகர்களாக இருந்தனர். நவீனத்துக்கு முந்திய ஐரோப்பாவில் மெய்யியல் பரந்த ஒரு அறிவுப் பரப்பைத் தன்னுடன் கொண்டிருந்தது. அப்பாலைத் தத்துவம், தருக்கவியல், பௌதிகவியல், வானியல், கணிதம், அரசியல் தத்துவம், அரசியல் தந்திரோபாயம், சட்டம், சட்டவியல், அறிவியல், அழகியல் எனப் பல துறைகள் மெய்யியலிற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய செவ்வியல் சிந்தனைப் பள்ளியின் மாதிரியாகக் கொள்ளப்படக் கூடியவர் அரிஸ்டோட்டில் ஆவார். இவர் அரசியல் தத்துவம், தருக்கவியல், பௌதிகவியல், அழகியல், அறிவியல் எனப் பல துறைகள் பற்றியும் எழுதியுள்ளார்.

உலகியல் சார் அறிவு பல்வேறு சிறப்புப் பிரிவுகளாகவும் துறைகளாகவும் பிரிவுபட்டுப் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றது. முதலில் இது இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என இரு பிரிவுகளாகவும் பின்னர் அவற்றுள் வெவ்வேறு சிறப்புத் துறைகளாகவும் வளர்ச்சியுற்றது. இச் செயல்முறையில் நவீன பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். (Peter Manicas 1987-இல் எழுதிய A History and Philosophy of the Social Sciences). இன்று அறிவு உற்பத்தி நிறுவனமயப்படுத்தப்பட்டதாக வளர்ச்சி பெற்று, ஒவ்வொரு சிறப்புத் துறைகளிலும் நெறிமுறையான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### ஆராய்ச்சி முன்மொழிவு:

அடுத்து நாம் இவ்வியலின் விடயப்பொருளான 'ஆராய்ச்சி முன்மொழிவு' என்பது குறித்தும் அது அறிவின் உற்பத்தி நடைமுறையில் கொண்டுள்ள தொடர்பு குறித்தும் கவனம் செலுத்துவோம்.

ஆராய்ச்சி முன்மொழிவின் மிக அடிப்படையான விடயமாக அமைவது, ஆராய எடுத்துக்கொண்ட கருத்தைப் பற்றிய வரைசட்டம் (Framework) ஒன்றை வழங்குவதும், அதனை ஆராய்வதன் தேவையை நியாயப்படுத்துவதும், ஆராய்வதற்கான முறைகளை வகுத்துரைப்பதும் ஆகும். முன்மொழிவு என்பது ஆராய்ச்சிக்கான வழி வரைபடம் (Road Map) எனவும் கூறலாம். ஆய்வாளர் மேற்கொள்ளும் ஆராய்ச்சியின் இன்னொரு முக்கிய கூறையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அறிவு உற்பத்தி தொடர்பாக ஆராய்ச்சியாளர் சமூகத்தில் (Research Community) அதிகாரம் பெற்றவர்களாய் உள்ளவர்களின் அங்கீகாரத்துடன் பொதுவெளியில் இடம்பெறும் நடவடிக்கையாக ஆராய்ச்சி அமைவதோடு, ஆராய்ச்சியாளர் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நியமங்களுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்றதாகவும் ஆராய்ச்சி அமைதல் வேண்டும். இவ்வுண்மையைக் கருத்தில் கொள்ளும்போது தான் ஆராய்ச்சி முன்மொழிவின் முக்கியத்துவம் துலக்கமாகும். ஆராய்ச்சியைத் தொடங்கும் போது, ஆராய்ச்சிச் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றி ஒழுகுதலின் அவசியம் பற்றிய அனுமானம் இங்கே உள்ளார்ந்து இருப்பதைக் காணலாம். ஆகையால், ஆராய்ச்சி முன்மொழிவை எழுதுவதன் ஊடாக, ஆராய்ச்சியில் பயிற்சியாளர்களும், பட்டப் பின்படிப்பு மாணவர்களும், மேலோங்கியிருக்கும் அறிவுப் பண்பாட்டிற்குள் சமூகமயமாதலுக்கு உட்படுவதோடு, அப்பண்பாட்டின் நியமங்கள், ஆசாரமுறைகள், நடைமுறைகள் என்பனவற்றை உட்செரித்துக் கொள்கின்றனர்.

இந்நூல் இளம் ஆய்வாளர்களைக் கட்டுப்பாடுடைய ஆராய்ச்சி முறைமையில் பரிச்சயமுடையவர்களாக்கி, அந்த ஒழுக்கநெறிகளைச் சிந்தனையிலும், நடைமுறையிலும் பின்பற்றக் கூடியவர்களாக ஆக்கும் நோக்குடன் எழுதப்பட்டது. புலமையாளர்களிடம் பின்பற்றப்படும் ஆய்வு மரபுகளின்படி, ஆய்வு முன்மொழிவு ஒன்று பின்வரும் கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அவையாவன:**

- ஆய்வுப் பிரச்சினை,
- சூழமைவும் பின்னணியும்,
- ஆய்வு வினாக்கள்,
- பொருத்தப்பாடும் நியாயப்படுத்தலும்,
- குறித்த விடயப் பொருள் சார்ந்த நூல்கள் பற்றிய மீளாய்வு,
- ஆராய்ச்சி வரைசட்டம்,
- கருதுகோளும் ஆய்வுத்திட்டமும்.

மேற்குறித்த கூறுகளை உள்ளடக்கியதாக, வேண்டியவிடத்து சில மாற்றங்களுடன், இந்நூலை எழுதியுள்ளேன்.



shanmugalingam@thaiveedu.com



# லெனினின் நூற்றாண்டு நினைவை நோக்கி

# அரசும் புரட்சியும்

7

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்:

லெனினின் ‘அரசும் புரட்சியும்: அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாடும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்’ என்ற நூலே லெனினால் எழுதப்பட்ட நூல்களில் செல்வாக்கு மிக்க, அதிகம் படிக்கப்பட்ட மற்றும் மிகவும் மதிப்புமிக்க படைப்பாகும். லெனினின் முக்கியமான தத்துவார்த்தப் பங்களிப்புகளில் ஒன்றாக இந்நூல் கருதப்படுகிறது. உண்மையான கம்யூனிஸ்டாக வாழ விரும்பும் எவரும் அல்லது நவீன கம்யூனிசத்தின் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள விரும்பும் எவரும் லெனினின் அரசும் புரட்சியும் என்ற இச் சிறு புத்தகத்தைப் படிக்க வேண்டும். 1917 ஒகஸ்ட் முதல் ஒக்ரோபர் வரை, ஆட்சியைக் கைப்பற்றிய புரட்சிக்கு சற்று முன்பு, தப்பியோடி, தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து, காவல்துறையினரிடம் இருந்து மறைந்திருந்தபோது, மார்க்சியம் மற்றும் புரட்சிக்கான இந்த மகத்தான பங்களிப்பை லெனினால் கிட்டத்தட்ட முடிக்க முடிந்தது. அரசும் புரட்சியும் கிட்டத்தட்ட உலகில் உள்ள பெரும்பான்மையான மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. ரஷ்யப் புரட்சிக்கான உண்மையான அறிக்கையாக இது கருதப்படுகிறது. இருப்பினும், 1917 ஒக்ரோபர்-நவம்பரில் தொழிலாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை அது வெளியிடப்படவில்லை என்பதால், அந்தப் புத்தகம் புரட்சியில் எந்த பங்கையும் வகிக்கவில்லை என்று சொல்லிவிட முடியாது.

வெற்றிகரமான ஒக்ரோபர் கிளர்ச்சியைத் தொடர்ந்து இதன் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டது. புரட்சிக்கான செயல் வழிகாட்டியாக மட்டுமே லெனின் புத்தகத்தை எழுதியிருந்தால், புரட்சிக்குப் பிறகு இரண்டு மாதங்களில் புத்தகத்தை முடிக்க இவ்வளவு நேரம் ஒதுக்குவது அவருக்குத் தேவையற்றதாக இருந்திருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நேரத்தில் அவரும் மற்ற முன்னணி போல்ஷிவிக்குகளும் புதிய அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டனர். புத்தகத்தின் முதன்மையான நோக்கம் எதிர்வரும் நிகழ்வுகளுக்கு நடவடிக்கைக்கான வழிகாட்டியாக செயல்படுவது மட்டுமல்ல, எதிர்கால சோசலிச அரசு எந்த வடிவத்தை எடுக்கும் என்பதை விவரிக்கவும் இல்லை. சோசலிசத்தை அடைவதற்கான பாதையாக அதன் நாடாளுமன்ற எந்திரத்தைப் பயன்படுத்துவதை விட, தற்போதுள்ள அரச அதிகாரத்தை அடித்து நொருக்கி அழிக்க வேண்டும் என்ற மார்க்ஸின் அசல் புரட்சிகர போதனைகளை மீண்டும் நிலை நிறுத்தும் புத்தகமாகவே அதன் உள்ளடக்கங்களும் எழுதப்பட்டன. புத்தகத்தின் முதன்மை நோக்கம் மார்க்சிசத்தை கீழிறக்கம் செய்து அதை வெறும் சீர்திருத்தக் கோட்பாடாக முன்னெடுப்பதில் இருந்து பாதுகாப்பதும், மார்க்சிசத்தை புரட்சியின் கோட்பாடாக மீட்டெடுப்பதுமாகும்.

லெனின் அரசும் புரட்சியும் என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: ‘மார்க்சிசத்தின் முன்னோடியில்லாத வகையில் பரவலான சிதைவைக் கருத்தில் கொண்டு, அரசு விஷயத்தில் மார்க்ஸ் உண்மையில் கற்பித்ததை மீண்டும் நிலைநாட்டுவதே எங்கள் பிரதான பணியாகும்.’ வெகுஜன சோசலிசக் கட்சிகளின் தலைவர்கள் மார்க்சிசத்தை ‘திருத்தல்வாதத்திற்கு உட்படுத்துகிறார்கள்’ என்று குற்றம் சாட்டுகிறார்: ‘அவர்கள் இந்தப் போதனையின் புரட்சிகரப் பக்கத்தை, அதன் புரட்சிகர ஆன்மாவைத் தவிர்க்கிறார்கள், அழிக்கிறார்கள் மற்றும் சிதைக்கிறார்கள். அவர்கள் முன்னோக்கி தள்ளுகிறார்கள். இது முதலாளித்துவத்திற்கு ஏற்புடையதாக இருக்கிறது’.

லெனின் இந்நூலைப் புரட்சிகர செயல்பாட்டில் தலையிடுவதற்காக எழுதவில்லை. அதனாலேயே ஒக்ரோபர் புரட்சிக்குப் பிறகே வெளியானது. ரஷ்யப் புரட்சியைச் தொடர்ந்து சர்வதேச தொழிலாளர் மத்தியில் வலுப்பெற்று வரும் மார்க்சிசத்தின் சிதைவுகளுக்கு எதிராக போராடுவதற்காகவும் மார்க்சிசத்தை புரட்சிக்கான கோட்பாடாகவும் வழிகாட்டியாகவும் மீட்டெடுப்பதை இலக்காகவும் கொண்டு இதை லெனின் எழுதினார். இதற்கான பெரும்பாலான ஆய்வுகள் அந்த ஆண்டின் தொடக்கத்தில், அவர் அரசு மற்றும் அரசு அதிகாரம் பற்றிய மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் எழுத்துக்களை மீளப் படித்த போது நடந்தது. பின்வரும் பிரதான வினாக்களில் லெனின் கவனம் செலுத்தினார். அரசு என்றால் என்ன? அரசுக்கு வர்க்க குணாம்சம் உள்ளதா? புரட்சியானது ஏற்கனவே இருக்கும் அரசு எந்திரத்தைப் பயன்படுத்த முடியுமா அல்லது அதை அடித்து நொறுக்க வேண்டுமா? ஆவ்வாறு அகற்றினால் அரசின் இடத்தை எது எடுக்கும்? சோசலிசத்தில்

இருந்து கம்யூனிசத்திற்கு மாறும்போது அரசு எவ்வாறு ‘உதிர்ந்து போகும்’?

## வரலாற்று வழித்தடத்தில் விளங்கிக்கொள்ளல்:

1917 ஜனவரி மற்றும் பிப்ரவரியில் லெனினால் அரசும் புரட்சியும் நூலுக்கான முக்கிய கருத்துக்கள் உருவாக்கப்பட்டன, மேலும் அரசு அதிகாரம் பற்றிய கேள்வியில் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் எழுதிய அனைத்தையும் மறுசீரமைப்பதற்கான அவரது முடிவின் அடிப்படையாக இவை அமைந்தன. இந்த ஆய்வு சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் உள்ள ஒரு நூலகத்தில் நடந்தது, அப்போது லெனின் நாடுகடத்தப்பட்டிருந்தார்.

பெப்ரவரி 1917-ல் தொடங்கி, ஒக்ரோபரில் போல்ஷிவிக் தலைமையிலான கிளர்ச்சியுடன் உச்சக்கட்டத்தை அடைந்த, விரைவாக வெளிவரும் புரட்சிகர செயல்முறையின் வாய்ப்புகள், சாத்தியங்கள் மற்றும் சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில் முக்கிய கருத்துக்கள் உருவாக்கப்படவில்லை. மாறாக, சர்வதேச சோசலிச இயக்கத்தின் முன்னணி மார்க்சிச கோட்பாட்டாளராக பரவலாக அங்கீகரிக்கப்பட்ட கார்ல் காவுட்ஸ்கி மற்றும் ‘இடது’ மார்க்சிஸ்டுகளுக்கு இடையே நடந்து வரும் தத்துவார்த்த விவாதத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவை உருவாக்கப்பட்டன.

சோசலிஸ்டுகள் எவ்வாறு அரசியல் அதிகாரத்தை வெல்வார்கள், முதலாளித்துவ சமூகத்தில் இருக்கும் அரச அதிகாரத்தை சோசலிசத்தைக் கட்டியெழுப்ப ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வி 1883-ல் மார்க்சின் மரணத்திற்குப் பிறகு ஒரு சீரான புரட்சிகர திசையில் பரிணமித்தது. உலகை முன்னெப்போதுமில்லாத அழிவுப் போரில் அரசுகள் மூழ்கடித்திருந்த நிலையில் இந்த தத்துவார்த்த வினா முக்கியமானது. இதுவே எல்லா இடங்களிலும் சோசலிஸ்டுகளின் பொதுவான மூலோபாயம் வேண்டி நின்ற பதிலாக இருந்தது. அவ்வகையில் இவ்வினா அழுத்தமான மற்றும் மகத்தான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.

இந்த சூழலில் லெனின், மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸை மறுபரிசீலனை செய்ய முடிவு செய்தார், மேலும் இது அவரைப் பற்றி தனது சொந்த பார்வையை மாற்ற அல்லது கூர்மைப்படுத்த வழிவகுத்தது. ஜனவரி 1918 வரை வெளியிடப்படாவிட்டாலும், முதல் சோசலிச அதிகாரத்தைக் கைப்பற்றியதில், புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் மாதங்களுக்கு முன்பே ஒரு முக்கியமான பங்கைக் கொண்டிருந்தன. லெனின் இந்த யோசனைகளின் புரட்சிகர சாரத்தை போல்ஷிவிக் தலைவர்களுக்கு அனுப்பினார், மேலும் அங்கிருந்து, இந்த யோசனைகள் கட்சி முழுவதையும் வழிநடத்தின. எளிமையாகச் சொல்வதானால், ஒக்ரோபர் சோசலிசப் புரட்சி கட்சியின் தலைமை இல்லாமல் வெற்றி பெற்றிருக்க முடியாது, மேலும் லெனின் அரசு குறித்த பிரச்சினையில் உருவாக்கிய கருத்துக்களுடன் கட்சி புகுத்தப்படாவிட்டால் அந்தத் தலைமை சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

புத்தகத்தின் மையக் கருத்துக்கள், ஜெர்மனி மற்றும் பிற ஐரோப்பிய நாடாளுமன்றங்களில் குறிப்பிடத்தக்க சக்தியாக மாறியிருந்த பிரதான சோசலிசக் கட்சிகளில் இருந்து கூர்மையான விலகலைப் பிரதிநிதித்துவப்படுத்தின. அவர்கள் போல்ஷிவிக் கட்சியின் சிந்தனையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சோசலிஸ்ட் இன்டர்நேஷனல் (இரண்டாம் அகிலம்) கட்சிகளின் முக்கிய தலைமைக்கு எதிராகவும், குறிப்பாக கார்ல் காட்ஸ்கி, அந்த நேரத்தில் சர்வதேச சோசலிசத்தின் முதன்மையான ஜேர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி ஆகியவற்றுக்கு எதிராக அரசும் புரட்சியும் ஒரு விவாதமாக இருந்தது. சோசலிச இயக்கத்தின் முக்கிய நீரோட்டமானது, இரண்டு தோல்வியுற்ற புரட்சிகளின் அனுபவத்தைத் தொடர்ந்து அரசு பற்றி மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் உருவாக்கிய முடிவுகளை மறந்துவிட்டது அல்லது புறக்கணிக்கத் தேர்ந்தெடுத்தது: பிப்ரவரி 1848 பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் புரட்சிகள், இன்னும் பெரிய விளைவான 1871 பாரிஸ் கம்யூன் ஆகியன இதற்கு உதாரணங்களாகும். 1871-ம் ஆண்டில், பாரிசைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர், அவர்களின் கம்யூன் இரண்டு மாதங்கள் அரசியல் அதிகாரத்தை தக்கவைத்ததைத் தொடர்ந்து அழிக்கப்பட்டது.

லெனின் புத்தகத்தின் முதன்மையான பணியை அதன் முதல் வாக்கியங்களிலேயே தெளிவாக்குகிறார்:

‘மார்க்ஸின் போதனைகளுக்கு இப்போது என்ன நடக்கிறது என்பது, வரலாற்றின் போக்கில், புரட்சிகர சிந்தனையாளர்கள் மற்றும் விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் தலைவர்களின் போதனைகளுக்கு மீண்டும் மீண்டும் நிகழ்ந்துள்ளது. மாபெரும் புரட்சியாளர்களின் வாழ்நாளில், ஒடுக்கும் வர்க்கங்கள் அவர்களைத் தொடர்ந்து வேட்டையாடி, அவர்களின் போதனைகளை மிகவும் காட்டுமிராண்டித்தனமான வெறுப்புடனும், மிகவும் ஆவேசமான வெறுப்புடனும், பொய்கள் மற்றும் அவதூறுகளாலான மிகவும் நேர்மையற்ற பிரச்சாரங்களுடனும் மழுங்கடித்தனர். அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அவர்களை பாதிப்பில்லாத சின்னங்களாக மாற்றவும், அவர்களை புனிதப்படுத்தவும், ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் ‘ஆறுதல்’க்காகவும், பிந்தையவர்களை ஏமாற்றும் நோக்கத்திற்காகவும், அவர்களின் பெயர்களை ஒரு குறிப்பிட்ட ஒளிவட்டத்துடன் அடக்க முயற்சிக்கப்படுகிறது. அதே நேரத்தில் புரட்சிகர போதனையின் சாராம்சத்தை சிதைத்து, அதன் புரட்சிகர விளிம்பை மழுங்கடித்து, கொச்சைப்படுத்துகிறது.’

மார்க்சும் ஏங்கெல்சும் அரசியல் கோட்பாட்டை அறிவியலாக அணுகினர். அவர்களின் கோட்பாடு உண்மைகள், சான்றுகள், தரவு மற்றும் அனுபவம் ஆகியவற்றின் ஆய்வின் அடிப்படையில் அமைந்தது. அவர்கள் எதிர்காலத்தைப் பற்றி அதிகம் ஊகங்களில் ஈடுபடவில்லை. சிறந்த உலகத்திற்கான கற்பனாவாதங்கள், திட்டங்கள் அல்லது புதிய அமைப்புகளை அவர்கள் கனவு காணவில்லை. அவர்களின் கோட்பாடு வரலாற்றில் வர்க்கப் போராட்டத்தின் பொதுவான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.



கம்யூனிஸ்ட் அறிக்கை 1848-ல் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவில் உள்ள பிற நாடுகளில் பரவிய ஆழமான (முதலாளித்துவ) ஜனநாயகப் புரட்சிகளுக்கு முன்னதாக எழுதப்பட்டது. அந்த புரட்சிகள் 1849-ல் வன்முறையால் தோல்வியில் முடிந்தது. இதை மார்க்சும் ஏங்கெல்சும் ஜனநாயகக் கட்சி, விவசாயிகள் மற்றும் நகர்ப்புற நடுத்தர வர்க்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் தொழிலாளர் கட்சி, தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் குறித்தனர். இதன் விளைவாக பல தசாப்தங்களாக தொழிலாள வர்க்க ஆர்வலர்கள் மீது கடுமையான அடக்குமுறை இருந்தது. மார்க்சும் ஏங்கெல்சும் ஜெர்மனியை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டு இங்கிலாந்தில் தங்கள் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டிய நிலைக்கு ஆளாகினர்.

1847-ல் இங்கிலாந்தில் தொடங்கிய பொருளாதார நெருக்கடியானது பிரான்சிற்குப் பரவியது. பிரான்சில் லூயிஸ் பிலிப் மன்னர் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பிப்ரவரி 1848-ல் ஒரு கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. புதிய அரசாங்கம் மற்ற சீர்திருத்தங்களுக்கிடையில் வேலையற்ற தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவதாக உறுதியளித்தது.

ஜூன் 1848-ல், பிரெஞ்சு அரசாங்கம் இந்த பொருளாதார சீர்திருத்தங்களை நிறுத்தி அகற்றுவதற்கு முனைந்தது. இந்நிலையில் பெரிய மற்றும் குட்டி முதலாளித்துவத்திற்கு எதிராக தொழிலாளர்கள் மட்டுமே தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கப் போராடினர். ஒரு துணிச்சலான போராட்டத்திற்குப் பிறகு அது தோல்வியில் முடிவடைந்தாலும், தொழிலாளர் வர்க்கம் தீவிர ஜனநாயக குட்டி முதலாளித்துவத்தின் வாலாக இல்லாமல் ஒரு சுதந்திர சக்தியாக அரசியல் ரீதியாக செயல்பட்டது இதுவே முதல் முறை.

கம்யூனிஸ்ட் அறிக்கையானது, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை அடைவதன் மூலம் முதலாளிகளின் அரசியல் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வாதிட்டது, மேலும் அரசு அதிகாரம் 'ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம்' மற்றும் தொழிலாள வர்க்கம் 'ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி பெறுவதன் மூலம்' தீவிரமாக மாற்றப்பட வேண்டும் என்று வாதிட்டது. ஆனால் இந்தப் பணியை எப்படி நிறைவேற்றுவது என்ற கேள்விக்கு கம்யூனிஸ்ட் அறிக்கையில் பதில் இல்லை.

1848-ல் புரட்சிகளின் தோல்விகள் மார்க்ஸ் அறிக்கையின் பொதுவான சூத்திரத்திற்கு அப்பால் சென்று அந்த அனுபவத்தை அதிக தெளிவுடன் தொகுக்க அனுமதித்தது. 1848 புரட்சிகளைப் படிப்பதன் மூலம், அவர் ஒரு சுருக்கமான சூத்திரத்தைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட வழியில் மாநில அதிகாரத்தின் கேள்வியை சமாளிக்க முடியும். 1852-ல், மார்க்ஸ் எழுதினார்: 'எல்லா முந்தைய புரட்சிகளும் இந்த இயந்திரத்தை உடைப்பதற்குப் பதிலாக முழுமையாக்கியது.' பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்து அரசு இயந்திரத்தை அழிக்க வேண்டும் என்று அறிவித்தார். மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் இந்த முடிவை அவர்களின் புரட்சிக் கோட்பாட்டில் ஒரு முக்கியமான படியாகக் கருதினர், மேலும் 1852-ல் அவர்களின் முழு உலகக் கண்ணோட்டத்திற்கும் இது அடித்தளமாக இருந்தது.

எதிர்கால தொழிலாளர் அரசு எந்த வடிவத்தை எடுக்கலாம் என்று மார்க்ஸ் ஊகிக்கவில்லை. எதிர்கால 'சிறந்த உலகம்' எப்படி இருக்கும் அல்லது 'பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்' எந்த வடிவத்தை எடுக்கும் என்பது பற்றிய தீர்க்கதரிசனங்களை வழங்குவதில் அவர் ஈடுபடவில்லை. அடித்து நொருக்கப்பட்ட மற்றும் உடைக்கப்பட்ட அரச அதிகாரத்தின் இடத்தை எது எடுக்க முடியும், என்ற கேள்விக்கு அப்போது வர்க்கப் போராட்ட வரலாறு இன்னும் பதிலளித்திருக்கவில்லை.

1871-ல் பாரிஸில் தொழிலாள வர்க்கத்தால் இரண்டு மாதங்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்க முடிந்தமையானது - பாரிஸ் கம்யூன் - ஒரு தொழிலாளர் அரசு

எப்படி இருக்கும் மற்றும் முதலாளித்துவ அரசில் இருந்து அதன் அடிப்படை வேறுபாட்டின் அனுபவத்தையும் ஆதாரத் தையும் முன்வைத்தது. கம்யூனிஸ்ட் அறிக்கை ‘சில விவரங்க ளில் பழமையானதாகிவிட்டது,’ என்று மார்க்ஸ் மற்றும் ஏங் கெல்ஸ் 1872-ல் ‘முதன்முதலில் (1848) பிப்ரவரி புரட்சியிலும், பின்னர் இன்னும் அதிகமாக, பாரிஸ் கம்யூனில் பெற்ற நடை முறை அனுபவத்தின் பார்வையில்’ எழுதினார்கள். பாட்டாளி வர்க்கம் முதல் முறையாக இரண்டு மாதங்கள் முழுவதுமாக அரசியல் அதிகாரத்தை வைத்திருந்தது. குறிப்பாக கம்யூன் மூலம் ஒரு விஷயம் நிரூபிக்கப்பட்டது, அதாவது, தொழிலா ளர் வர்க்கம் வெறுமனே ஆயத்தமான அரசு இயந்திரத்தை கைப்பிடித்து, அதன் சொந்த நோக்கங்களுக்காக பயன்ப டுத்த முடியாது’.

பாரிஸ் கம்யூன் நடந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு மார்க்ஸ் இறந்தார். பாரிஸ் கம்யூனின் தோல்வி சோசலிச இயக்கத்தை பின்னுக்குத் தள்ளியது, முதலாம் அகிலம் அதன் எழுச்சியில் பிளவுபட்டது. மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் அதன் தலைமைய கத்தை லண்டனில் இருந்து நியூயார்க் நகரத்திற்கு மாற்றினர், அங்கு அது மேலும் சுருங்கியது. சில ஆண்டுகளுக்குப் பிறகு முதலாம் அகிலம் அதன் இயற்கையான முடிவுக்கு வந்தது. பரவலான விரக்தி இருந்ததுடன் இயக்கத்தின் ஒவ்வொரு பெரிய பின்னடைவுக்கும் ஒரு தோல்வி மனநிலை இருந்தது. ஆனால் ஒரு சில ஆண்டுகளில் மிகவும் குறைவான புரட்சிகர வடிவத்தில் ஒரு மறுமலர்ச்சி தொடங்கியது. மார்க்ஸ் இறந்த பத்தாண்டுகளில், ஐரோப்பாவில் சோசலிச இயக்கங்களின் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் எங்கெல்ஸ் செயல்பட் டார். பாரிஸ் கம்யூனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தொழில் புரட்சி வேகமாகப் பரவியதால், தொழிலாளர்களின் போராட்ட வடிவம், அளவிலும் பண்பிலும் மாறியது. ஒழுங்க மைக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்களின் கொந்தளிப்பான வளர்ச்சி வாக்களிக்கும் உரிமையின் விரிவாக்கத்துடன் ஒத் துப்போனது. புதிய சோசலிச இயக்கம் வெகுஜன தொழிற் சங்க அமைப்புக்கள் தேர்தல் அரசியலுக்குள் அனுப்பப்பட் டது. தொழிலாள வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட சோசலிஸ்ட் கட்சிகள் அதிவேகமாக வளர்ந்தன.

பாரிஸ் கம்யூனை விட குறைவான புரட்சிகரமானதாக இருந்த போதும், முன்னையதை விடப் பரந்த அளவில் புதிய சோச லிஸ்ட் கட்சிகள் இரண்டாம் அகிலத்தை உருவாக்கின. மார்க்ஸ் முதல் அகிலத்தின் ஒரு நிறுவனத் தலைவராக செயல்பட்டாலும், அது இன்னும் சோசலிசக் கட்சிகளையும் குழுக்களையும் இயக்கங்களையும் சேர்க்கவில்லை, அவரு டைய கருத்தியல் மற்றும் அரசியலைப் பின்பற்றுபவர்கள் சிறு பான்மையினர் மட்டுமே. இதற்கு நேர்மாறாக, இரண்டாம் அகி லம், தொழிலாள வர்க்கத்தினுள் ஒரு வெகுஜன அடித்தளத் தைக் கொண்டிருந்த புதிய அரசியல் கட்சிகளை அடிப்படை யாகக் கொண்டது, மேலும் அவை அனைத்தும் மார்க்சிஸ் டாக அடையாளப்படுத்தப்பட்டன. இவ்வாறு மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் போதனைகள் இரண்டாம் அகிலத்திற்குள் முதன்மையான அரசியல் சக்தியாக மாறியது. புதிய சர்வதேச மானது மார்க்சியம், சோசலிசம் மற்றும் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஒரு பெரிய படியாக இருந்தது. ஆனால் இரண்டாம் அகிலத்தின் புதிய தொழிலாளர் கட்சிகள், பெரிய தொழிற்சங்கங்களை அமைப்பதன் மூலமும், நாடாளுமன்ற அரங்கில் தேர்தல்களில் வெற்றி பெறுவதன் மூலமும் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்தியதால், மார்க்சிசத்தின் புரட்சிகர சாரத்தை மழுங்கடித்தனர்.

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், வாக்களிக்கும் உரிமை (சொத்து இல்லாத ஆண் தொழிலாளர்களுக்கு) ஐரோப்பா வின் பெரும்பகுதிகளில் அடையப்பட்டது. தொழிலாள வர்க் கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெகுஜன சோசலிசக் கட் சிகள் பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றங்களுக்குள் இன் னும் பெரிய தொகுதிகளைப் பெற்றன. இந்தக் கட்சிகள் தங் களை மார்க்சிஸ்டுகளாகக் கருதும் மக்களால் வழிநடத்தப் பட்டன, மேலும் பாட்டாளி வர்க்கத்தின் ‘அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கு’ நாடாளுமன்றப் போராட்டம்தான் வழி என்று நம்பினார்கள்.

ஐரோப்பாவின் மிக முக்கியமான சோசலிஸ்ட் கட்சியான ஜெர் மன் சமூக ஜனநாயகக் கட்சியும் அதன் தத்துவார்த்த தலை வர்களும் - கார்ல் காவுட்ஸ்கி உட்பட - சோசலிச அகிலத்தின் ‘மையமாக’ கருதப்பட்டனர். லெனின் 1914-ல் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியானது ஜேர்மன் நாடாளுமன்றில் இரண் டாம் உலகப் போரில் ஜேர்மனின் போர் முயற்சிக்கு ஆதர வாக வாக்களிக்கும் வரை, ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி யையும் கார்ல் காவுட்ஸ்கியையும் அங்கீகரித்தார். மரபுவழி மார்க்சியவாதியாகக் கருதப்பட்ட காவுட்ஸ்கி, உண்மையில் ஒரு மையவாதியாக (வார்த்தைகளில் புரட்சியாளர், செயல்க ளில் சீர்திருத்தவாதி) ஆனார், ‘கம்யூனிஸ்ட் அறிக்கையில்’ விபரிக்கப்பட்டுள்ளபடி ‘அரசியல் அதிகாரத்தை கைப்பற்று வது’ ஒரு அமைதியான, நாடாளுமன்ற பாதை மூலம் சாத்தி யப்படலாம் என்று தெளிவாகக் கருதினார். நாடாளுமன்றத் தில் பெரும்பான்மையைப் பெற்று, சோசலிஸ்ட் தலைமையி லான நாடாளுமன்றத்தை அரசாங்கத்தின் வழிநடத்தும் சக்தி யாக உயர்த்துவதன் மூலம், அமைதியான, நாடாளுமன்ற பாதை பொருளாதாரத்தின் சோசலிச மறுசீரமைப்பிற்கான பாதையை வகுக்க முடியும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது.

‘எங்கள் அரசியல் போராட்டத்தின் குறிக்கோள் இப்போது வரை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை வெல்வதன் மூலம் அரச அதிகாரத்தை கைப்பற்றுவது மற்றும் நாடாளு மன்றத்தை அரசாங்கத்தின் எஜமானராக உயர்த்துவது என்ப தாகவே இருந்துள்ளது. இருப்பினும், அரச அதிகாரத்தை அழிப்பது அல்ல’ என்று 1912-ல் கார்ல் காட்ஸ்கி எழுதினார். ஜேர்மனியில் 1890 வரை சோசலிச எதிர்ப்பு சட்டங்கள் நடை முறையில் இருந்தன. எனவே, 1875-ல் உருவாக்கப்பட்ட சமூக ஜனநாயகக் கட்சி, சட்டவிரோத நிலைமைகளின் கீழ் வேலை செய்ய வேண்டியிருந்தது. அந்தச் சட்டங்கள் நீக்கப் பட்டு, கட்சி சட்டபூர்வமாக செயற்பட அனுமதிக்கப்பட்ட போது, அது வேகமாக வளர்ந்தது.

1912-ம் ஆண்டளவில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உறுப்பினர் களைக் கொண்டதாக இக்கட்சி வளர்ந்தது. அது சில வழிக ளில் சோசலிஸ்ட் தலைமையிலான ‘நாட்டிற்குள்’ ஒரு அரசை உருவாக்கியது. சமூக ஜனநாயகக் கட்சி தலைவர்களும்

உறுப்பினர்களும் ஒரு தேர்தல் வெற்றியை கற்பனை செய்த னர், இது இந்த 'நாட்டிற்குள் உள்ள அரசு' புதிய மாதிரியாக நாடு முழுவதும் நீட்டிக்கப்படுவதற்கான ஆணையை வழங் கும் என எதிர்பார்த்தனர்.

1912 நாடாளுமன்றத் தேர்தலில், சமூக ஜனநாயகக் கட்சி எந் தக் கட்சியையும் விட அதிக எண்ணிக்கையிலான வாக்குக ளைப் பெற்றது, மேலும் 110 இடங்களைப் பெற்று நாடாளு மன்றுக்குள் மிகப்பெரிய சக்தியாக மாறியது. இந்த வெற்றி யின் அடிப்படையில், அந்த நேரத்தில் அனைத்து சோச லிஸ்ட் கட்சிகளுக்கும் சமூக ஜனநாயகக் கட்சி 'முன்மாதிரி' ஆனது. இந்தப் பெருவெற்றி சாத்தியமானது, அது ஒரு சட்டக் கட்சியாக மிகவும் வெற்றிகரமாக இருந்ததால்தான், அதன் தலைவர்கள் தாங்கள் சாதித்த எதனையும் இழக்க விரும்ப வில்லை. ஐரோப்பாவின் போட்டியிடும் முதலாளித்துவ அர சாங்கங்களுக்கு இடையே முதலாம் உலகப்போர் வெடித்த போது, சமூக ஜனநாயகக் கட்சியும் அதன் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குள் எப்படி வாக்களிக்க வேண்டும் என் பதை தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. போருக் குத் தேவையான செலவினங்களுக்கு எதிராக வாக்களித் தால் ஜேர்மன் இராணுவத்தின் உயர் கட்டளையால் கட்சியை துரோகிகள் என்று முத்திரை குத்தப்படும் அபாயம் இருந்தது.

சமூக ஜனநாயகக் கட்சிக்கு வாக்களித்த மில்லியன் கணக் கான தொழிலாளர்களாலும் இந்த தேசத்துரோக குற்றச் சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி சுமத்தப்பட்டிருக்கும். எல் லாப் பெரிய போர்களின் தொடக்கத்திலும் நடப்பது போல், ஒரு போர் வெறி மக்களைத் தாக்கியது. ரஷ்ய முடியாட்சியின் பிற்போக்கு படைகளான 'எதிரி' யிடமிருந்து அழியும் அச்சு றுத்தல், தேசபக்தி மற்றும் தேசிய ஒற்றுமையின் அலையை உருவாக்கியது. இந்தப் பின்னணியில் போர் நிதிக்கு எதிராக வாக்களிப்பதென்பது, இந்த அலைக்கு எதிராக நின்று ஜாரிச ரஷ்யாவிற்கு உதவிய குற்றச்சாட்டை எதிர்கொள்வதை அர்த் தப்படுத்தியிருக்கும்.

சமூக ஜனநாயகக் கட்சியின் தலைமை, சோசலிச அகிலத் தின் மற்ற கட்சிகளுடன் சேர்ந்து, உலகப் போரின் ஆபத்து உண்மையானது என்பதை முன்னரே கண்டிருந்தது. 1912-ல், அனைத்து சோசலிசக் கட்சிகளும் சுவிட்சர்லாந்தின் பாசெல் நகரில் ஒரு மாநாட்டில் கூடி, போர் வந்தால் ஒவ்வொரு தேசி யக் கட்சியும் தங்கள் நாட்டுத் தொழிலாளர்களைக் கொல்ல வும் மற்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களால் கொல்ல வும் அனுப்பப்படுவதை எதிர்க்கும் என்று சபதம் செய்தன. மாநாட்டில், அவர்கள் மீண்டும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!' என்ற பதா கையை உயர்த்தினார்கள்.

போருக்கு முன்னதாக, பாசெல் காங்கிரஸின் அறிக்கை இவ் வாறு அழைப்பு விடுத்துள்ளது: 'எனவே அனைத்து நாடுக ளின் பாட்டாளி வர்க்கங்கள் மற்றும் சோசலிஸ்டுகளே, இந்த தீர்க்கமான நேரத்தில் உங்கள் குரல்கள் உரத்து ஒலிக்கவும் அதை மக்கள் செவிமடுக்கவும் செய்யுமாறு காங்கிரஸ் கேட் டுக்கொள்கிறது! ஒவ்வொரு வடிவத்திலும் எல்லா இடங்களி லும் உங்கள் விருப்பத்தை அறிவிக்கவும்; உங்களின் முழுப் பலத்துடன் உங்கள் எதிர்ப்பை நாடாளுமன்றங்களில் எழுப் புங்கள்; மாபெரும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களில் ஒன்றுபடுங் கள்.'

ஆனால் ஒகஸ்ட் 1914-ல் போர் வெடித்தது. ஏகாதிபத்திய சக் திகள் ஒருவரையொருவர் தாக்கி ஆக்கிரமித்துக்கொண்டிருக் கும் நிலையில், சோசலிஸ்டுகள் ஒதுங்கி நின்று தங்கள் தேசத்தை 'காப்பாற்ற' உயிருக்கும் மரணத்திற்கும் இடையி லாக போரில் ஈடுபட்டிருக்கும் தங்கள் நாட்டு ராணுவத்தை எதிர்ப்பார்களா? அவ்வாறு செய்வது நிச்சயமாக சட்ட அந் தஸ்தை இழக்க நேரிடும். வெகுஜன அமைப்புக்கள் மூடப் பட்டு, நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் தேசத் துரோகத்திற்காக சிறைக்கு அனுப்பப்படுவதை அது அர்த் தப்படுத்துகிறது.

ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி ஒகஸ்ட் 1914-ல் அதே சவாலை எதிர்கொண்டது. கட்சியின் போல்ஷிவிக் பிரிவு நாடாளுமன்றத்தில் (டுமா) தொழிலாள வர்க்க மாவட் டங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை வென்றது. லெனினின் வழிகாட்டுதலின் கீழ், அவர்கள் போர்க் கடன்களுக்கு எதி ராக வாக்களித்தனர். பாசெல் காங்கிரஸின் தீர்மானத்தை அவர்கள் கடைப்பிடித்தனர். அவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர் மற்றும் ரஷ்யாவின் துரோகிகள் என்று குற்றம் சாட் டப்பட்டனர் மற்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரண தண்ட னையை எதிர்கொள்ளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட னர்.

ஜேர்மனியில், சமூக ஜனநாயகக் கட்சியின் 110 நாடாளுமன்ற பிரதிநிதிகளில் 109 பேர் போர்ச் செலவுகளுக்கு ஆதரவாக வாக்களித்தனர். கட்சியின் இடதுசாரி உறுப்பினரான கார்ள் லிப்க்னெக்ட் எதிர்த்து வாக்களித்தார். அவருக்கு நாடாளு மன்ற விலக்கு இருந்தபோதிலும், லிப்க்னெக்ட் கைது செய் யப்பட்டார், இராணுவத்தில் சேர்க்கப்பட்டார், ரஷ்யாவிற்கு எதிரான போரின் கிழக்கு முன்னணிக்கு அனுப்பப்பட்டார்.

இந்தப் பின்புலத்திலேயே அரசும் புரட்சியும் நூலையும் அது எழுதப்பட்ட சூழலையும் நோக்க வேண்டியுள்ளது. அக்காலத் தில் அரசு குறித்தும் புரட்சி குறித்தும் பெரும்பான்மையான சோசலிசக் கட்சிகளின் சிந்தனையுடன் ஒப்பிடும் போது மிக வும் வேறுபட்டதாக லெனினின் அரசும் புரட்சியும் நூல் இருந் தது. முதலாம் உலகப் போர் வெடிக்கும் வரை மற்றும் ஜேர் மன் சோசலிஸ்டுகள் போர் முயற்சிக்கு சரணடையும் வரை, லெனின் சர்வதேச இயக்கத்தின் முன்னணி மார்க்சிய கோட் பாட்டாளராக கவுட்ஸ்கியை ஏற்றுக்கொண்டார். லெனினைப் பற்றிய வாழ்க்கையை எழுதிய, ஆராய்ந்த வரலாற்றாசிரியர் கள் மற்றும் அறிஞர்கள் அரசும் புரட்சியும் ஒரு மாற்றியமைக் கும் படைப்பாக இருந்ததா என்பது குறித்துச் சொல்லுகின்ற பொதுவான கருத்து காவுட்ஸ்கியின் சீரழிவு லெனினை தனது சொந்த கருத்துக்களை மறுபரிசீலனை செய்ய வழிவகுத்தது. சோசலிசத்திற்கான நாடாளுமன்றப் பாதையில் காவுட்ஸ்கி யின் மோகத்தை அவர் நிச்சயமாக பகிர்ந்து கொள்ள வில்லை. உதாரணமாக, லெனின் 1905 ரஷ்யப் புரட்சியின் போது ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதற்கு ஆதரவ ளித்தார். ஆனால் 1917-க்கு முன், லெனின் காவுட்ஸ்கிக்கும்

'இடதுசாரி' மார்க்சிஸ்டுகளுக்கும் இடையே அரசின் பங்கு மற்றும் சோசலிஸ்டுகள் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு அடைய முடியும் என்ற தத்துவார்த்த விவாதத்தில் நுழைய வில்லை. இந்தப் பின்புலத்திலேயே லெனினின் அரசும் புரட் சியும் நூல் முக்கியத்துவம் பெறுகிறது. மேலதிகமாக புரட்சி பற்றிய மார்க்சியப் பார்வையில் லெனினின் தத்துவார்த்த ஆய்வுகள் இடம்பெற்றிருந்த சமகாலத்தில் தற்செயலாக ஒரு உண்மையான புரட்சியின் வெடிப்புடன் ஒத்துப்போனது. அரசை அடித்து நொருக்க வேண்டும், புதிய அரசை உரு வாக்க வேண்டும் என்ற புதிய சிந்தனைகள் அனைத்தும் இந் தப் புரட்சியின் வெற்றியுடன் உடனடியாகப் பொருந்தின. இத னால் இச் சிந்தனைகள் செல்வாக்குப் பெற்றன.

## நூல் என்ன சொல்கிறது:

ஓகஸ்ட்-செப்ரெம்பர் 1917-ல் லெனினால் எழுதப்பட்ட, அர சும் புரட்சியும் அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாட்டின் உறுதி யான விளக்கத்தை வழங்குகிறது. லெனினின் பண்புரீதியாக தெளிவான மற்றும் கூர்மையான நடையில் எழுதப்பட்ட இந் நூல் புரட்சிகர மார்க்சியத்தின் அடிக்கல்லாக உள்ளது.

அரசு பற்றிய மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் கருத்துக்களை யும், அது தொடர்பான தொழிலாள வர்க்கத்தின் நிலைப்பாட் டையும் முன்வைத்து, லெனின் தனது கோபத்தை 'சோசலிசத் தின் தலைவர்களின்' அடிமைத்தனமான தழுவல் மீதும் அவர் களின் தேசிய நலன்களுக்கு மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்க நலன்களுக்காக அவர்களின் 'அரசு' பற்றிய குறிப்பு கள் மீது வெளிப்படுத்தினார். இன்று இந்த விமர்சனம் எவ்வ ளவு முக்கியமானது என்பதை ஒரு நூற்றாண்டுகால வரலாறு காட்டியுள்ளது. 'சோசலிஸ்டுகள்' என்று கூறிக்கொள்ளும் போது, உலகெங்கிலும் உள்ள ஏகாதிபத்திய சாகசங்களில் 'தங்கள்' சொந்த அரசுக்கு ஆதரவளிக்கவும், உள்நாட்டில் 'தங்கள்' முதலாளித்துவத்தின் நலன்களை ஆதரிக்கவும், அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு சமாதானம் மற்றும் சம ரசம் ஆகியவற்றைப் போதிக்கவும் முனைகின்ற சமரசவாதம் மீதான மிகக் கூர்மையான விமர்சனத்தை லெனின் முன்வைத் தார். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் அராஜகவாதி களுக்கு மாறாக, லெனின் வெறுமனே அரசை 'அழிக்க' அல் லது அரச அதிகாரத்தை நிராகரிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகா ரத்தைப் பற்றிய மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் கருத்தாக்கத் தைத் தொடர்ந்து, லெனின் முதலாளித்துவ அரசை தகர்த்து, முதலாளித்துவத்தின் அபகரிப்பு மற்றும் ஒடுக்குமுறையை இலக்காகக் கொண்ட ஒரு தொழிலாளர் அரசைக் கொண்டு அதற்குப் பதிலாக வர்க்க சமூகத்தை தூக்கியெறிவதற்கு அழைப்பு விடுக்கிறார். ஏனெனில் அதைச் செய்யாமல் அர சின் 'உதிர்ந்துவிடும்' பொருள் அடிப்படை சாத்தியமாகாது.

இந் நூலுக்கான முன்னுரையில் லெனின் பின்வருமாறு எழுதி னார். 'சோசலிச பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பு பற்றிய கேள்வி என்பது நடைமுறை அரசி யல் முக்கியத்துவத்தை மட்டும் பெறவில்லை, ஆனால் இன் றைய அவசரப் பிரச்சினையின் முக்கியத்துவத்தையும், மக்க ளுக்கு விளக்குவதில் உள்ள சிக்கலைப் பெறுகிறது. முதலா ளித்துவ கொடுங்கோன்மையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வெகுஜன மக்கள் வெகு காலத்திற்கு முன்பே என்ன செய்ய வேண்டும்.' அந்த இடத்திலேயே தனது நிலைப் பாட்டை மேம்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக, லெனின் நேரடியாக மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸிடம் சென்று, மார்க்சி யக் கோட்பாட்டிற்கான தீவிர அணுகுமுறையின் அடிப்படை யில் தனது புரட்சிகர திட்டத்தை வரைந்தார். இந்த பெருமை மிக்க பாரம்பரியம் இன்றும் தொடர வேண்டும்.

அரசு மற்றும் புரட்சியின் முதல் அத்தியாயம் 'வர்க்க சமுதாய மும் அரசும்' என்ற தலைபில் அமைந்தது. லெனின், சமூகத் தில் அரசின் தோற்றம் மற்றும் பங்கு குறித்து மார்க்ஸ் மற்றும் (குறிப்பாக) ஏங்கெல்ஸைப் பேச அனுமதிப்பதன் மூலம் தனது மீதமுள்ள வாதங்களுக்கு அடித்தளம் அமைக்கிறார். ஏங்கெல்ஸின் குடும்பம், தனியார் சொத்து மற்றும் அரசின் தோற்றம் மற்றும் டூரிங் எதிர்ப்பு ஆகியவற்றிலிருந்து பல முக் கிய மேற்கோள்களை அமைத்து, கார்ல் காட்ஸ்கி போன்ற 'சந்தர்ப்பவாதிகளின்' திரிபுகளுக்கு எதிராக, அரசு மீதான மார்க்சிச நிலைப்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளை லெனின் வரைந்துள்ளார்.

முதல் அத்தியாயத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, லெனின் பின்வரும் அடிப்படை முடிவுகளை முன்வைக்கிறார்: சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிரித்ததில் இருந்து அரசு எழுந்தது; சுரண்டப்படும் வெகுஜனங்கள் மீது ஆளும், உடை மையாளர் வர்க்கத்தின் ஆணையை சுமத்துவதற்காகவும், சமூகத்தில் போராடும் வர்க்கங்களை 'சமரசம்' செய்வதற்கா கவும் அது உள்ளது; இந்தச் செயற்பாட்டைச் செய்வதற்கு அது ஆயுதப் படையை நம்பியுள்ளது; அதிகாரத்தைக் கைப் பற்றுவதில் பாட்டாளி வர்க்கம் இந்த அரசை ஒழித்துவிட்டு, பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை அதற்குப் பதிலாக மாற்றுகிறது. வன்முறைப் புரட்சி இல்லாமல் இது சாத்தியமற் றது. இந்த முக்கிய யோசனைகளின் அடிப்படையில்தான் லெனின் மற்ற புரட்சிகளின் வரலாற்று அனுபவங்களை ஆய்வு செய்து, அரசு குறித்த தனது நிலைப்பாட்டை மேலும் வளர்த்துக் கொள்கிறார். புரட்சிகர மார்க்சிசத்திற்கும் சீர்தி ருத்தவாதத்திற்கும் இடையேயான பிளவுக் கோட்டையும் துல் லியமாக இந்தக் கருத்துக்கள்தான் உருவாக்குகின்றன.

'1841-1851 காலப்பகுதியின் அனுபவங்கள்' என்ற இரண்டா வது அத்தியாயத்தில்; 1848 பிரெஞ்சுப் புரட்சி மற்றும் 1851 டிசம்பரில் லூயிஸ் போனபார்டே அதிகாரத்தைக் கைப்பற் றிய சம்பவங்களைத் தொடர்ந்து அரசு பற்றிய மார்க்சின் சிந் தனையின் வளர்ச்சியை லெனின் மிக நெருக்கமாகப் பார்க்கி றார். மார்க்ஸின் புரட்சிக்கு முந்தைய எழுத்துக்களின் அடிப்ப டையிலும், லூயிஸ் போனபார்ட்டின் பதினெட்டாம் புருமை ரின் அடிப்படையிலும் லெனின் நிறுவுகிறார். சந்தர்ப்பவாதிக ளால் கூறப்படும் 'ஜனநாயகத்தின் அமைதியான வளர்ச்சி' என்பதற்கு மாறாக 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' என்ற கருத்து மார்க்சின் படைப்பு முழுவதும் தொடர்ந்து காணக்கூ டிய ஒன்றாகும் என்று எடுத்துக்காட்டுகிறார். வர்க்கப் போராட் டத்திற்கு மேலாக அரசு உயரும் மற்றும் சிறுபான்மையினரை பெரும்பான்மையினருக்கு பணிவுடன் பணியச் செய்யும் என்ற கருத்தை 'குட்டி முதலாளித்துவ கற்பனாவாதம்' என்று விவ ரிக்கும் லெனின், அரசு குறித்த மார்க்ஸின் முடிவுகளின் சாராம்சம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியம் என்று வாதிடுகிறார். மேலும், மார்க்ஸ் அனைத்து முந்தைய

புரட்சிகளையும் முதலாளித்துவத்தின் அரசு எந்திரத்தை (எப்போதும் விரிவடைந்து வரும் அதிகாரத்துவம் மற்றும் இராணுவத்தின் வடிவில்) மேலும் முழுமைப்படுத்தியதாகக் கண்டார் என்பதையும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பணி தற்போதுள்ள அரசைப் பெறுவது அல்ல என்றும் வாதிட்டார். ஆனால் அதை அடித்து நொருக்கி அதற்கு பதிலாக 'ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம்' ஒன்றை உருவாக்குவது பற்றி விரிவாகப் பேசுகிறார்.

'1871 பரீஸ் கம்யூன் அனுபங்கள்' என்று தலைப்பிடப்பட்ட மூன்றாவது அத்தியாயத்தில் லெனின், பாரிஸ் கம்யூனை மார்க்ஸின் 'ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்கப்பட்ட' தொழிலாள வர்க்கத்தின் முதல் அனுபவமாக நடத்துவது பற்றி ஆராய்கிறார். தொழிலாள வர்க்கம் 'ஏற்கனவே தயாரான அரசு இயந்திரத்தை வெறுமனே பிடித்து அதன் சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியாது', அதற்குப் பதிலாக ஏற்கனவே இருக்கும் அதிகாரத்துவ இயந்திரத்தை 'நொருக்க வேண்டும்' என்பதை சுருக்கமாக நிறுவியிருப்பது மார்க்ஸுக்கும் மார்க்சிஸ்டுகளுக்கும் அவசியமாக இருந்தது. இந்த எந்திரம் எதன் மூலம் மாற்றப்பட வேண்டும் என்பதை இன்னும் உறுதியான சொற்களில் விளக்க வேண்டும். இந்த விளக்கம் தொழிலாள வர்க்கத்தின் உண்மையான போராட்டங்களில் இருந்து மட்டுமே வர முடியும் என்று லெனின் குறிப்பிடுகிறார். அதேவேளை மேலும் வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தின் முதல் உதாரணத்தை மார்க்ஸுக்கு வழங்கியது பாரிஸ் கம்யூன் தான் என்பதையும் பதிவு செய்கிறார். இந்த தொழிலாளர் அரசின் முக்கிய அம்சங்களாக லெனின் குறிப்பவை பின்வருமாறு: 'ஆயுதமேந்திய மக்களை' கட்டமைக்கப்பட்ட இராணுவத்திற்கு மாற்றியமைத்தல், திரும்ப அழைக்கும் உரிமையுடன் தேர்தல்கள் மூலம் காவல்துறை மற்றும் நீதித்துறை உட்பட அனைத்து அதிகாரிகளையும் தெரிவு செய்தல், அதிகாரிகளின் சம்பளத்தை 'தொழிலாளர்களின் ஊதியத்திற்கு' சமமானதாக மாற்றல், சட்டமன்ற மற்றும் நிர்வாக செயல்பாடுகள் (அதனால் வெறும் 'பேச்சு கடை' என்பதை விட) தேசிய சட்டமன்றத்திற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் தொழிலாளர் கவுன்சில்களை நிறுவுவதற்கு ஆதரவாக நாடாளுமன்றவாதத்தை ஒழித்தல். லெனினால் முன்வைக்கப்பட்ட இந்த அம்சங்கள் இன்றுவரை தொழிலாளர்களின் ஜனநாயகத்திற்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.

'ஏங்கல்ஸின் மேலதிக விளக்கங்கள்' என்ற நான்காவது அத்தியாயத்தில் எங்கெல்ஸின் மேற்கோள்களை விரிவாகப் பயன்படுத்தி லெனின் தனது மார்க்சிய பகுப்பாய்வைத் தொடர்கிறார். மார்க்சியப் பகுப்பாய்விற்கும், அரசு வறண்டு போவதைக் காணாத, ஆனால் ஒரே இரவில் ஒழிக்கப்பட்ட அராஜகவாதிகளின் கருத்துக்களுக்கும் இடையே தெளிவான வேறுபாட்டைக் காட்டுவதன் மூலம் அவர் தொடங்குகிறார். முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத எதிர்ப்பை முறியடிக்க பாட்டாளி வர்க்கம் அரசை ஒரு தற்காலிக வழிமுறையாகப் பயன்படுத்த வேண்டும். அராஜகவாதிகள் புரட்சியைப் பாதுகாப்பதற்கான இந்த மதிப்புமிக்க வழிமுறையை தொழிலாள வர்க்கத்திற்கு மறுப்பார்கள். கம்யூன் மற்றும் அனைத்து உண்மையான தொழிலாளர்களின் அரசுகளும் முன்பு இருந்த அனைத்து அரசுகளிலிருந்தும் வேறுபடுகின்றன, அவை சிறுபான்மையினரை அடக்குவதற்கு பெரும்பான்மையினரால் முதல் முறையாக பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் விளக்குகிறார். சமுதாயத்திற்கு மேலே நிற்கும் ஒரு சிறப்பு சக்தியாக இருப்பதற்குப் பதிலாக அது பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதியாக மாறுகிறது. முதலாளித்துவ அரசுகள் என்ன வடிவத்தை எடுக்கின்றன என்ற கேள்விக்கு மார்க்சிஸ்டுகள் ஏன் நடுநிலை வகிக்கவில்லை என்றும் சர்வாதிகார முடியாட்சியை விட ஜனநாயக குடியரசு ஏன் விரும்பத்தக்கது என்பதை லெனின் விளக்குகிறார். சிறந்த வடிவம் ஒரு மையப்படுத்தப்பட்ட ஜனநாயக குடியரசு என்றாலும், இது தேசியப் பிரச்சினையைத் தடுக்காது என்பதையும் லெனின் குறிப்பிடத் தவறவில்லை. அரசின் செயற்பாட்டைப் பொறுத்தவரை, இது சலுகை பெற்ற அதிகாரிகளுக்கு சொந்தமானது அல்ல என்பதை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை லெனின் தெளிவுபடுத்துகிறார். மாறாக ஒவ்வொரு தனிமனிதனும் அரசின் நிர்வாகத்தில் பங்களிப்பதை உறுதி செய்ய வேண்டும். இறுதியில் அரசு உதிர்ந்து போக இது இன்றியமையாதது.

'அரசு உதிர்ந்து போவதன் பொருளாதார அடிப்படைகள்' என்ற ஐந்தாவது அத்தியாயத்தில் லெனின் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவதை விளக்குகிறார். பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் நிறுவப்பட்டவுடன் உதிர்ந்து போகத் தொடங்கும் ஒரு அரசியல் இடைக்காலத்தை எப்போதும் உள்ளடக்கும். ஒரு சோசலிசப் புரட்சி ஒரு முழுமையான ஜனநாயகத்தை நிறுவுவதை உள்ளடக்குகிறது. மேற்கின் பல முதலாளித்துவ நாடுகள் ஜனநாயக நாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன, இருப்பினும் பெரும்பான்மையான மக்கள் ஒவ்வொரு சில வருடங்களுக்கும் வாக்களிப்பதைத் தாண்டி உண்மையான அரசியலில் பங்கேற்க வழி இல்லை. அதேசமயம், முதலாளிகள் தங்கள் செல்வத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி, சராசரி தொழிலாளியை விட அதிக அளவில் அரசில் செல்வாக்கு செலுத்த முடியும். அதன் இருப்புக்கான நிலைமைகளும் மறைந்ததால் ஒரு அரசின் தேவை மறைந்து விடும். சட்டங்களைப் பின்பற்றுவதற்கு வற்புறுத்தப்படுவதற்குப் பதிலாக, சமூக வாழ்க்கையின் விதிகளைப் பின்பற்றுவதற்கு மக்கள் பழக்கமாகிவிடுவார்கள். லெனின், கோதா திட்டத்தின் (Gotha programme) மீதான மார்க்ஸின் விமர்சனத்தைக் குறிப்பிடுவதன் மூலம் தொடர்கிறார். அதில் அவர் கம்யூனிச சமுதாயத்தின் கீழ்நிலை (சில நேரங்களில் சோசலிசம் என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் கம்யூனிசத்தின் உயர்நிலை ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டைக் காட்டுகிறார். கம்யூனிசத்தின் வளர்ந்து வரும் கீழ்நிலை இன்னும் பழைய முதலாளித்துவ சமூகத்தின் பிறப்பு அடையாளங்களைத் தாங்கி நிற்கிறது. சுரண்டல் ஒழிக்கப்பட்டாலும், இன்னும் முழு சமத்துவம் இல்லை. ஏனெனில் விநியோகம் இன்னும் உழைப்பின் அளவை அடிப்படையாகக் கொண்டது. முதலாளிகள் அபகரிக்கப்பட்டவுடன், உற்பத்தி சக்திகளின் பாரிய வளர்ச்சியை அடைய முடியும், அதன் அடிப்படையில் தான் கம்யூனிச சமூகத்தின் மிக உயர்ந்த கட்டத்தை உணர முடியும். இந்த மிக உயர்ந்த கட்டத்தில்தான் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறனுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப' என்ற விதி எட்டப்படும்.

'சந்தர்ப்பவாதிகளால் கொச்சைப்படுத்தப்படும் மார்க்ஸியம்' என்ற இறுதி அத்தியாயத்தில் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக புரட்சியைக் குறைத்து மதிப்பிடுபவர்களுக்கு எதிராக மார்க்சி

யத்தின் புரட்சிகர மரபுகளைப் பாதுகாக்க லெனின் முயல்கிறார். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ அரசின் கட்டுப்பாட்டை எடுக்கவோ அல்லது அரச அதிகாரத்தைப் பயன்படுத்த மறுக்கவோ முடியாது என்பதை லெனின் மீண்டும் வலியுறுத்துகிறார். கோட்பாட்டாளர் காவுட்ஸ்கியை விமர்சிக்கும் லெனின், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பணி முதலாளித்துவ அரசின் அதிகாரத்துவங்களை உடைப்பதாக இருக்கும் என்று வாதிடுகிறார், அனைத்து செயல்பாட்டாளர்களுக்கும் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு, சராசரியாக வேலை செய்யும் ஊதியம் திரும்பப் பெறப்படும். எவ்வாறாயினும், நிர்வாகம் ஒரு கூட்டு முயற்சியாக மாறும் நிலைக்கு மாறுவது அவசியமாகும் என்று வலியுறுத்துகிறார். அரசு பற்றிய மார்க்சின் நிலைப்பாட்டை காவுட்ஸ்கி சிதைக்கிறார். பாட்டாளி வர்க்கத்தின் அரச அதிகாரத்தை வெறுமனே நாடாளுமன்ற பெரும்பான்மையால் ஆளுவதன் மூலம் சாதிக்க முடியாது, ஆனால் அரசின் வர்க்கத் தன்மை மாறும்போது பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கமாக அல்ல, ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்கப்படும். இதை புரட்சியால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதே லெனினின் அடிப்படையான வாதமாகும். உழைக்கும் மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்படுவதால் முதலாளித்துவத்தின் கீழ் ஒரு அதிகாரத்துவம் இல்லாமல் சமூகம் செயல்பட முடியாது என்று லெனின் விளக்குகிறார். ஒரு விசுவாசமான அதிகாரத்துவம் என்பது முதலாளிகள் அரசின் மீது கட்டுப்பாட்டை வைத்திருக்கும் வழிகளில் ஒன்றாகும். சுருக்கப்பட்ட வேலை நாள், தொழிலாளர்கள் அரசியல் நடவடிக்கைகளிலும் அரசை நடத்துவதிலும் ஈடுபடுவதற்கு உதவுகிறது, இதனால் அவர்கள் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரத்துவத்தை முதலாளிகள் இழக்கின்றனர்.

லெனின் ஏழு அத்தியாயங்களாக இந்நூலைத் திட்டமிட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, ஒக்ரோபர் புரட்சி வெடித்ததால் லெனினால் புத்தகத்தை முடிக்க முடியவில்லை. இதனால் ஏழாவதும் இறுதியுமான அத்தியாயத்தை எழுதவில்லை. அவர் எழுதிய பின்குறிப்பில்; 'புரட்சியின் அனுபவத்தை' பற்றி எழுதுவதை விட அதன் வழியாக செல்வது மிகவும் இனிமையானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

## நிறைவுக் குறிப்புகள்:

**மா**ர்க்ஸைப் போலவே, லெனினின் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படைத் தூண்களில் ஒன்று, சமூகப் புரட்சியின் முதல் கட்டம், அரசை தூக்கியெறிதல் மற்றும் கலைத்தல் ஆகும். 'ஒவ்வொரு புரட்சியின் மையப் பிரச்சினையாக' அரசு பற்றிய கேள்வி லெனினை அவரது மாணவப் பருவத்திலிருந்தே ஆக்கிரமித்திருந்ததுடன் மார்க்சிசத்திற்கு முந்தைய ரஷ்ய புரட்சிகர சிந்தனையில் வேரூன்றி, பல்வேறு வரலாற்று வடிவங்களை எடுத்தது. எவ்வாறாயினும், லெனின் வர்க்க குணாதிசயங்களையும், புரட்சியின் சமூக மற்றும் உலகளாவிய நிலைப்பாடுகளையும் வலியுறுத்தினார், குறிப்பாக 'விவசாயிகள்' மற்றும் 'தேசியவாத' கற்பனாவாதங்களை எதிர்கொண்டார். புரட்சிகளின் வரலாற்றில் லெனினுக்கு மிகவும் ஆர்வம் இருந்தது, தொழிலாளர்கள் ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கு மட்டுமே தங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்தும் திறனை எவ்வாறு பெற்றனர் என்பதுதான் அந்த வினா. அவர் இந்த விஷயத்தை விஞ்ஞான முறையில் ஆராய்ந்தார், குறிப்பாக ரஷ்யாவில் அரசின் வளர்ச்சியின் சிறப்புகள் குறித்து ஆழமாக நோக்கினார். ஒரு முதலாளித்துவ அரசின் செயற்பாடு, கட்சிகளின் நிறுவன சமூகவியல் மற்றும் அதிகாரத்துவ வழிமுறைகள் தொடர்பான விடயங்களில் அவர் எந்த ஆர்வத்தையும் கொண்டிருக்கவில்லை. முதலாளித்துவ அரசின் சமூகவியலின் அறிவியல், அவரது கருத்துப்படி, அரசின் பாதுகாப்பாக, அறிவியல் அடிப்படையிலான நியாயத்தை அளித்தது. லெனின் நவீன முதலாளித்துவ அரசை பொருளாதாரம் மற்றும் மிக உயர்ந்த வரிசையின் அறிவுசார் சுரண்டல் என்று கண்டார். முதலாளித்துவ நாடாளுமன்றவாதம் முதலாளித்துவ உற்பத்தியின் மிக நவீன வடிவங்கள், மூலதனத்தின் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதோடு அதிலிருந்து வளர்கிறது என்று அவர் கண்டறிந்தார்.

லெனின் தனது ஆய்வுகளில், சட்ட சமத்துவம் மற்றும் சமூக-பொருளாதார சமத்துவமின்மைக்கு இடையே விரிவடையும் ஜனநாயகத்துடனான முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத மற்றும் தொடர்ச்சியான மோதல்கள் குறித்து கவனத்தை ஈர்த்தார். முதலாளித்துவ அமைப்பு இந்த முரண்பாட்டை 'ஊழல்' மற்றும் 'லஞ்சம்' ஆகியவற்றைக் குறிக்கும் பண்புகளின் பரந்த வலையுடன் தீர்க்க முயற்சிக்கிறது என்றார். லெனினின் பார்வையில், ஏகாதிபத்தியத்திற்கும் ஏகபோக முதலாளித்துவத்திற்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு என்னவென்றால், முந்தைய காலத்தில் 'பங்குச் சந்தையின் சக்தி அதிகரிக்கிறது', ஏனெனில் பெரிய வங்கிகள் பங்குச் சந்தையுடன் ஒன்றிணைந்து அதை முழுவதுமாக விழுங்குகின்றன. மூலதனம் அதன் மேற்பார்வையின் கீழ் அரசியலின் கோளத்தை அது மற்றொரு விற்பனைப் பொருளாக, ஒருவித சந்தை நிகழ்வாக இழுக்கிறது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் விபச்சாரமும் ஊழலும் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டு வரம்பற்றது என்பதை நிச்சயமாக லெனின் அறிந்திருந்தார். இருப்பினும், அதே நேரத்தில், சட்டபூர்வமாக்கப்பட்ட ஊழலின் இந்த செயல்முறைகள் செல்வத்தில் வேரூன்றியுள்ளன என்று அவர் வலியுறுத்தினார். ஏனெனில் செல்வம் 'எந்தவொரு ஜனநாயக குடியரசின் மீதும் லஞ்சம் மற்றும் பங்குச் சந்தை மூலம் ஆதிக்கம் செலுத்தும் திறன் கொண்டது. அதாவது, அரசியல் ரீதியாக சுதந்திரமான, குடியரசு' என்றவர் சொன்னார். முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரம் அல்ல மாறாக 'கொள்வனவு செய்வதற்கான சுதந்திரம்' என்பதே இங்கு லெனினின் முக்கிய சிந்தனையாகும்.

லெனின் முதலாளித்துவ ஜனநாயகத்தை முதலாளித்துவ மேலாதிக்கத்தின் ஒரு வடிவமாகக் கருதினார். உண்மையில், 'முதலாளித்துவ சமுதாயத்தின் எளிதில் வாங்கப்பட்ட மற்றும் அழுகிய நாடாளுமன்றவாதத்தின்' நன்மைகளைப் போற்றுவதற்கான ஒரே தேவை (இந்தத் தேவை மிகவும் அவசியமானதாக இருந்தாலும்) தொழிலாளர் இயக்கம் அதன் எல்லைக்குள் வளர்ச்சிக்கான அதிக வாய்ப்பைக் கண்டறிவதுதான். எதேச்சதிகார, வெளிப்படையாக சர்வாதிகார ஆட்சிகள் வழங்கிய சூழ்நிலைகளை விட சூழ்ச்சிக்கான இடம். முதலாளித்துவ நாடாளுமன்றவாதம் இந்த அர்த்தத்தில், லெனினுக்கான சிறப்பு அறிவியல் சார்ந்த 'வரலாற்று ஆர்வத்தை' மட்டுமே கொண்டுள்ளது, ஆனால் அதற்கு எதிர்காலம் இல்லை.

லெனின் முதலாளித்துவ அமைப்பின் பொதுவான நெருக்கடியை மட்டுமல்ல, முதலாளித்துவ ஜனநாயகத்தில் (அதிகா

ரத்துவ, ஊழல், ஒட்டுண்ணி, முதலியன) செயலிழந்த உறுதியான பகுதிகளையும் எடுத்துக் கொண்டார். அவரது நிலைப்பாடு பல்வேறு அரசுகளுக்குக் காரணமாக இருந்தது, 'முதலாளித்துவ அரசுகள் வடிவத்தில் மிகவும் வேறுபட்டவை, ஆனால் அவற்றின் சாராம்சத்தை 'இந்த அரசுகள், அவற்றின் வடிவம் எதுவாக இருந்தாலும், இறுதி ஆய்வில் தவிர்க்க முடியாமல் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரமாகும்' என்று லெனின் எழுதினார். இது முதலாளித்துவ சுரண்டல் தனியார் சொத்தின் இடத்தில் அல்லது அதற்கு இணையான உடைமையின் வகுப்புவாத வடிவத்தை 'மீண்டும் நிலைநிறுத்துவதற்கான' சாத்தியத்தை விலக்குகிறது. அவரது விளக்கத்தில், 'நாடாளுமன்ற ஆட்சி' என்பது 'கெடுபிடி' (வேலைகள், பொருளாதார நிலைகள் போன்றவை) போட்டியிடும் அதிகாரக் குழுக்களின் போர் மட்டுமே. இந்த அமைப்பு அதை சட்ட மற்றும் அரசியல் அடிப்படையில் கேள்விக்குள்ளாக்குகிறது. இந்த காரணத்திற்காகவும் முதலாளித்துவ ஜனநாயகங்களும் லெனினின் கோட்பாட்டின் படி சர்வாதிகாரங்களாக இருக்கின்றன, எனவே புரட்சி இல்லாமல் இதைச் சரி செய்ய முடியாது.

லெனின் தனது போர் அனுபவங்களைத் தொடர்ந்து நாடாளுமன்ற ஜனநாயகம் பற்றிய இன்னும் மோசமான பார்வையை அடைந்தார், ஏனெனில் அவற்றில் அவர் நிதி மற்றும் மூலதனத்தின் நலன்களின் நிறுவன வெளிப்பாடுகளை மட்டுமே கண்டார். இது கையாளுதல் மற்றும் ஏமாற்றுதலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இது முதலாளித்துவ இலாப உற்பத்தியின் நலன்களுக்காக கூலித் தொழிலாளர்களின் எதிர்ப்பைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வறுமையும் ஜனநாயகம் வழங்கும் சட்ட விதிகளுக்கு உண்மையான உதவியை சாத்தியமற்றதாக ஆக்குகிறது என்ற முடிவுக்கு லெனின் வந்தார். ஏழைகளுக்கு ஜனநாயகத்தின் 'ஆசீர்வாதங்களை வாங்க' வாய்ப்பு இல்லாததால் மட்டுமல்ல, 'முதலாளித்துவ சுரண்டலின் நிலைமைகளின் காரணமாக, நவீன கூலி அடிமைகள் தேவையாலும் வறுமையாலும் நசுக்கப்படுகிறார்கள், அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி கவலைப்பட முடியாது', 'அரசியலில் தலையிட முடியாது', சாதாரண, அமைதியான நிகழ்வுகளில், பெரும்பான்மையான மக்கள் பொது மற்றும் அரசியல் வாழ்க்கையில் பங்கேற்பதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளனர். அரசை அரசியல் அமைப்பாக கலைக்கும் புரட்சிகர வேலைத்திட்டத்தில், 'ஒட்டுண்ணி அரசு' ஒழிப்பு என்பது 'தொழிலாளர்களின் பொருளாதார விடுதலையின்' அரசியல் முன்நிபந்தனையாக ஒரு முக்கியமான வாதமாக இருந்தது. லெனினைப் பொறுத்த வரையில், அரசு மற்றும் சுதந்திரம் என்பது முற்றிலும் எதிர் கருத்துகளாக விளங்கலாம்.

இந்தச் சிறிய புத்தகத்தின் வெற்றிக்கு ஒரு 'ரகசியம்' இருக்க வேண்டும், ஏனெனில் இதே துறையில் வெளியான ஏனைய புத்தகங்களை விட இதற்கு வரலாற்றில் சிறப்பான இடமுண்டு. அதற்குக் காரணம் இது அதன் தர்க்கத்தின் தெளிவான விளக்கத்துடன் படிக்க எளிதானது, மேலும் இது ஒரு அரசியல் துண்டுப்பிரசுரத்தின் தேவைகளைப் போலவே அறிவியல் தத்துவார்த்த விளக்கத்தின் தேவைகளையும் உள்ளடக்கியது. இது பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடைமுறைப்படுத்துவதற்கான அழைப்பு மற்றும் புரட்சியின் அடிப்படை நோக்கங்களின் செவ்வியல் சுருக்கம் ஆகிய இரண்டும் போராட்டத்தின் உணர்வில் முழுக்க முழுக்க ஒரு உணர்ச்சி மிக்க வேலையாகும் என்பதைக் காட்டுகிறது. மேலும், கம்யூன் போன்ற அரசை உணர்ந்து கொள்வதற்காக பாரம்பரியத்தை அணிதிரட்டுவதற்காக இந்த கேள்வியை எதிர்கொள்ளும் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் மிக முக்கியமான எழுத்துக்களை மறுகட்டமைக்கும் அரசு புரட்சியின் கருத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது. புரட்சிகர இயக்கங்களுக்கு இது ஒரு 'கையேடு' என்பது தற்செயல் நிகழ்வு அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக, புத்தகத்தின் துணைத்தலைப்பு புரட்சிகர தொழிலாளர்களின் கையேடாக மாறுவதற்கான நடைமுறை நோக்கத்தைக் கொண்டுள்ளது.

உலக வரலாற்றில் புத்தகத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், ஒன்றுக்கு மேற்பட்ட உணர்வுகளில் அது ஒக்ரோபர் புரட்சியின் தத்துவமாக மாறியது. புரட்சியானது அதன் உடனடி நோக்கம் (அதிகாரத்தைக் கைப்பற்றுதல்) மற்றும் இறுதி இலக்கு (சுதந்திர சமூகங்களின் தன்னார்வ கூட்டாண்மை) ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் முன்வைக்கப்படுகிறது, அரசியல் புரட்சியானது சமூகப் புரட்சியின் ஆரம்ப வேகமாக காட்டப்படுகிறது. இது புரட்சிக்கு முந்தியதாக இருந்தாலும், அதன் முன்னோக்கு விமர்சனக் கோட்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியது.

இன்றைய காலகட்டத்தில் ஏன் அரசும் புரட்சியும் என்ற நூல் முக்கியமானது என்ற வினாவுக்கான பதிலுடன் இந்தக் கட்டுரையை நிறைவு செய்வது பொருத்தம். முதல் உலகப் போர் வெடித்ததைத் தொடர்ந்து சோசலிச இயக்கத்தில் ஏற்பட்ட கொந்தளிப்புக்கு பதிலளிக்கும் வகையில் இந்த சிறிய துண்டுப்பிரசுரம் எழுதப்பட்டது. பல சோசலிச அமைப்புகள் தம்மைப் புரட்சிகரமானவை என்று கூறிக்கொண்டன, அவை இரண்டாம் அகிலத்துடன் தங்களை இணைத்துக் கொண்டன. ஆனால் அவை அனைத்தும் அந்த நேரத்தில் ஐரோப்பாவில் பரவியிருந்த தேசியவாத வெறிக்கு அடிபணிந்தன.

இந்த நிலை இன்று உலகெங்கும் முற்போக்கான அமைப்புகள் என்று சொல்லப்படும் பலவற்றில் காணப்படும் ஒரு பண்பாகும். இடதுசாரி, மார்க்ஸிச லெனினிச அமைப்பாக தம்மை இனங்கண்டாலும் அவர்களின் அடியாளத்தில் தேசியவாத மேலாண்மை குறிகொண்டுள்ளது. அரசு மீதான மார்க்சிச அணுகுமுறையை மீண்டும் வலியுறுத்தும் லெனினின் முயற்சியை அரசும் புரட்சியும் பிரதிநிதித்துவப்படுத்தியது. இரண்டாம் அகிலத்தின் சோசலிஸ்டுகள் என்று அழைக்கப்படுபவர்களின் போலி முகத்திரையைக் கிழிப்பதற்கு இது போன்ற ஒரு மறு பிரவேசம் முக்கியமானது. இன்று பற்றியெறியும் காஸா குறித்த மௌனம் இதற்கு ஒப்பானதே.

இந்நூலுக்கான முதல் பதிப்பின் முன்னுரையில் லெனின் எழுதிய மேற்குறிப்போடு இதை நிறைவு செய்தல் பொருத்தம்: 'நீடித்த போரின் முன்னெப்போதுமில்லாத பயங்கரங்களும் துயரங்களும் மக்களின் நிலையை தாங்க முடியாததாக ஆக்குகிறது. அவர்களின் கோபத்தை அதிகரிக்கிறது. உலக பாட்டாளி வர்க்கப் புரட்சி தெளிவாக முதிர்ச்சியடைந்து வருகிறது. அரசுடனான அதன் தொடர்பு பற்றிய கேள்வி நடைமுறை முக்கியத்துவம் பெறுகிறது.'



meenilankco@thaiveedu.com



# பழமும் கனியும்

**– நாஞ்சில் நாடன்**

**ஓவியம்: ஜீவா**

பொதுவாக நாட்டு வழக்கில் பழம் எனில் அது வாழைப் பழம். வாழைக்கு இலக்கியச் சொல் கதலி. இன்று நாம் கதலி என்று எழுதினால் ஏதோ இந்தி சினிமா நாயகி எனத் தீர்மானிப்பான் தமிழன். சபரிமலை ஐயப்பனுக்கு விரதம் இருந்து மலையேறும்போது, மலையாளிகளின் சரண கோஷம் -

***'இருமுடிக் கட்டும் சாமிக்கே!***
***கதலிப் பழமும் சாமிக்கே!'***

என்பதாகும். வாழை மரம் போல, ஒரேயொரு முறை ஈன்றவளைக் குறிக்க கதலி மலடு என்றொரு வசைச் சொல் இருந்திருக்கிறது பண்டு. நாஞ்சில் நாட்டில் கதலி என்றால் வாழை இனங்களில் ஒரு வகை. அவற்றுள்ளும் ரச கதலி, நெய்க் கதலி, தேன் கதலி என மூன்று பிரிவு உண்டு. பண்டு செய்யுள் அமைதிகளுள் ஒன்றினைக் குறிக்க கதலீ பாகம் என்றனர். நானறிய சங்க இலக்கியம் கதலி எனும் சொல்லைப் பயன்படுத்தவில்லை.

'நெல்லு' என்றொரு மலையாள சினிமா, 1974-ல் வெளியானது, அதில் லதா மங்கேஷ்கர் பாடிய பாடலின் முதல் வரி, 'கதலி கண்கதலி செங்கதலிப் பூவேணோ?' என வரும். இங்கு கதலி என்பதோர் மலரைக் குறித்தது, அச்சொல்.

அன்றாட உரையாடலில் பழம் எனும் சொல் பரக்கக் கையாளப்படுகிறது.

'சாப்பிட்டதும் ஒரு பழம் சாப்பிடணும்'

'கடையிலே போய் ரெண்டு பழம் வாங்கீட்டு வாலே!'

'புதுமாப்பிள்ளை-புதுப்பெண்ணுக்கு பாலும் பழமும் கொடுங்க'

'அவன் ஒரு விரிசம் பழம்லா!'

'பழம் திண்ணு கொட்டையும் போட்டவன்லா!'

'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல'

'கோயிலுக்கு தேங்கா பழம் வாங்கீட்டுப் போகணும்'

'அவனை வெற்றிலை பாக்கு தேங்கா பழம் வச்சுத்தான் அழைக்கணுமா?'

'பழம் ஏன் நஞ்சு போய் இருக்கு?'

என்ற உரையாடல்களில் வரும் பழம் எனும் சொல் வாழைப் பழத்தையே குறிக்கும். வாழைப் பழத்தை வாளைப்பளம், வாயப் பயம் என்றெல்லாம் வழங்குவது அவரவர் தமிழ்.

மற்ற பழங்களைப் பெயர் சுட்டிப் பேசுவார்கள். மாம்பழம், சக்கைப் பழம் அல்லது பலாப் பழம், பனம் பழம், அன்னாசிப் பழம் அல்லது புருத்திச் சக்கைப் பழம், கொய்யாப் பழம், நாவல் பழம், காராம் பழம், கொல்லாம் பழம் அல்லது முந்திரிப் பழம், பூலாத்திப் பழம், உண்ணிப் பழம், பேரீச்சம் பழம், ஈந்தம் பழம், எலுமிச்சம் பழம், வெள்ளரிப் பழம், மாதுளம் பழம், ஆலம் பழம், அத்திப் பழம், விளாம் பழம், புளியம் பழம், பப்பாளிப் பழம், முலாம் பழம், ஆரஞ்சுப் பழம் என வாங்கு. தேங்காயைத் தெங்கம் பழம் என்றோம். 'நாய் பெற்ற தெங்கம்பழம்' என்பது எனதோர் கட்டுரைத் தலைப்பு.

திருவள்ளுவர் நெருஞ்சி முள்ளைக் கூடப் பழம் என்பார். சிறு நெருஞ்சி, பெரு நெருஞ்சி என இரண்டறிவோம் யாம். காமத்துப்பாலில், நலம் புனைந்துரைத்தல் அதிகாரத்தில்,

***'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்***
***அடிக்கு நெருஞ்சிப் பழம்'***

என்பார் குறளாசான்.

முக்கனிகளைப் பேசும்போது மா, பலா, வாழை என்று மூன்றாவது இடத்தில் வைத்துப் பேசுவது ஒழிய, பொதுவாக வாழைக்கனி எனக் குறிப்பதில்லை. என்றாலும் அகநானூற்றில் கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல் வரிகள்,

***'கோழிலை வாழைக் கோள்மிகு பெருங்குலை***
***ஊழுறு தீம் கனி'***

என்கிறது. வாட்டசாட்டமான இலைகளைக் கொண்ட வாழை

மரம் பெரிய குலைகளைத் தள்ளி முதிர்ந்த கனிகளைத் தந்தது என்று பொருள்.

பழம் எனும் சொல்லுக்குப் பேரகராதி தரும் பொருள் ஐந்து.

- Fruit, Ripe fruit. கனி.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தின் மரபியல் நூற்பா மரவகை உறுப்புக்கள் பேசுமிடத்து, 'காயே பழமே தோலே செதிளே' என்கிறது.

- Very Aged Person. வயது முதிர்ந்தோன்.

பழுத்த பழம் அல்லது பழுத்த கிழம் என்பர் வழக்கில்.

- Fruitfulness, Success. அனுகூலம்.

'காயா பழமா ?' என்பர் மக்கள், ஒரு காரியம் வெற்றியா தோல்வியா என்பதறிய.

- Winning Points. ஆட்டக் கெலிப்பு.
- Three quarters. முக்கால்.

பழம் எனில் கனி என்பதைக் கடந்து, பழமை, தொன்மை, நீண்ட காலம் கடந்த எனும் பொருள்களும் உண்டு. அதுகுறித்த பழமொழிகளும் உண்டு. 'அவன் ஒரு பழம் பெருச்சாளியில்லா!' என்பது ஒரு மனிதரைப் பற்றிய மதிப்பீடு. 'மரத்தை வைத்து வளர்த்துப் பின் பழத்தைக் கோர வேண்டும்' என்பது பழம் எனும் கனி குறித்த பழமொழி.

***பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல***

***பசிக்காமல் இருக்க வரம் தருவேன்;***
***ஆனால் பழங்கஞ்சி இருந்தால் தாரும்***

***ஆடிமாதம் பழஞ்சோறும் ஆதண்டங்காய் வற்றலும்***
***தேடித் தின்றவனுக்கு தெய்வலோகம் கிடைக்கும்.***

போன்ற பழமொழிகளின் பழம் காலம் குறித்த சொல். எடுத்துக்காட்டுக்கு பழமொழி எனும் சொல்லையும் கூறலாம்.

பழம் பகை, பழம் பஞ்சாரம், பழம் பெருச்சாளி, என்பனவும் உதாரணங்கள். பழவினை எனும் சொல்லை, முன்வினை எனும் பொருளில் திருவாசகம் ஆண்டுள்ளது. பழமனை எனில் இடிந்துபோன வீடு என்கிறது யாழ்ப்பாண அகராதி.

பழங்கணக்கு, பழங்கதை, பழங்குடி, பழஞ்சரக்கு, பழஞ்சோறு, பழஞ்சி, பழையது, பழஞ்சொல் என்பன பழமை எனும் பொருள் தரும் சொற்கள்.

திருக்குறள் ஒரேயொரு குறளில் பழம் பேசும். மற்றொரு குறளில் பழங்குடி பேசுகிறார். பொருட்பாலின் குடிமை அதிகாரத்துப் பாடல்,

***'வழங்குவதுள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி***
***பண்பில் தலைப்பிரிதல் இன்று'***

கொடை வழங்கும் வசதி குன்றிப் போனாலும் பழம் பெருமை வாய்ந்த குடியினர் தம் கொடைப் பண்பைக் துறவார் என்பது பொருள்.

பழம் எனும் சொல்லை, வாழைப் பழம் எனும் பொருளில் பொதுவாகக் கையாண்டாலும், வாழைப் பழத்தில் பல்வேறு வகைகள் உண்டு. தோலின் தன்மை, தோலின் நிறம், இனிப்புக்கூறு, மாவுத்தன்மை, வாசனை, உருவம், அளவு எனப் பாகுபாடு கொண்டவை. கன்னியாகுமரி மாவட்டத்தின் சில வாழைப்பழ வகைகளைத் தருவேன்.

மட்டி, சிங்கன், பேயன், மொந்தன், துளுவன், செந்துளுவன், வெள்ளைத் துளுவன், பாளையங்கோட்டன், ஏத்தன், தேன்கதலி, நெய்க்கதலி, ரசகதலி, அண்ணன் பூவன் எனச் சில இன்னும் என் நினைவில். எந்த வெற்றிலை பாக்குக் கடையிலும் இன்றும் இவற்றுள் ஆறேழு தினுசுகள் குலை குலையாகத் தொங்கிக் கிடப்பதைக் காணலாம்.

பழம் எனும் சொல் தொல்லிலக்கியங்கள் பலவற்றிலும் ஆளப் பெற்றுள்ளது. வடமொழியில் கேலா என்றால் வாழைப் பழம். ஃபல் என்றால் பழம் அல்லது கனி. ஆம் எனில் மா. ஃபனஸ் எனில் பலா. பல வட மாநிலங்களிலும் மாமரங்கள் உண்டு. ஆனால் வாழையும் பலாவும் சில மாநிலங்களில் மட்டுமே.

புறநானூற்றில் சோழன் நலங்கிள்ளியை ஆலந்தூர் கிழார் கையறு நிலையில் பாடிய பாடல் ஒன்றில்,

***'தலையோர் நுங்கின் தீம் சேறு மிசைய***
***இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்***
***கடையோர் விடுவாய்ப் பிசிரொடு சுடு கிழங்கு நுகர'***

என்று வரும்.

சோழன் நலங்கிள்ளியின் படையினர், முதலணியில் வருவோர் பனை நுங்கின் இனிய கலவையை அருந்துவர். அடுத்து வரும் அணியினர் பனம் பழத்தினை உண்பர். இறுதி அணியினர் தோலுடன் கூடிய சுட்ட பனங்கிழங்கினைத் தின்பார்கள் - இது பொருள். அதாவது முழுப் படையணிகளும் ஒரு இடத்தைக் கடந்து செல்லும்போது பனை நுங்கு விளைந்து காயாகிக் கனிந்து உதிர்ந்து, பனங்கொட்டைகள் முளைத்துக் கிழங்கு ஆகிவிடுமாம். அத்தனை நீண்ட படை அணிகள்.

அகநானூற்றின் மருதத் திணையின் நக்கீரர் பாடல், 'பழஞ்செந்நெல்' என்கிறது. பழைய செந்நெல் என்பது பொருள். அஞ்சியத்தை மகள் நாகையார் பாடிய குறிஞ்சித்திணைப் பாடல், 'முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரும் பழம்' என்னும் வளைந்த பலா மரத்தின் குடம் போன்று முதிர்ந்த பெரும் பழம் என்பது பொருள்.

புறநானூற்றின் 61-வது பாடல், 'தெங்கு படு வியன்பழம்' என்கிறது. தெங்கு என்றால் தென்னை, வியன்பழம் எனில் நெற்றுத் தேங்காய். பதினோராம் நூற்றாண்டில் தான் தென்னை

எனும் தாவரம் இந்தியாவுக்குள் நுழைந்தது என ஆய்வடங்கல் எழுதும் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்களைக் கொண்டாடும் அறிவுஜீவிகளையும் அரசுகளையும் தமிழன்னை காக்க!

குமண வள்ளலைப் பாடிய பெருஞ்சித்திரனார் பாடல் ஒன்று மிகச் சிறப்பானது. ஒன்பது அடிகள் கொண்ட முழுப் பாடலையும் தரலாம். குமணனைக் கண்டு பாடிப் பரிசில் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் மனையாட்டிக்கு சொன்னது பாடலின் சம்பவம்.

***'நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்***
***பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்,***
***கடும்பின் கடும்பசி தீர யாழ நின்***
***நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்***
***இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,***
***வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்***
***எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே!***
***பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்***
***திருந்து வேல் குமணன் நல்கிய வளனே'***

என்பது முழுப்பாடல்.

பரிசில் பெறுவதற்கு முன் மனையாட்டியின் நிலைமை, வேறொரு பாடலில், பெருஞ்சித்திரனார் சொற்களில்,

***'பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி***
***இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை'***

அத்தகைய வறுமைச் சூழலில் பேசுகிறார் புலவர் - மனையறம் காக்கும் உரிமைப் பெண்ணே! பல்வகை மரங்கள் காய்த்துப் பழங்கள் பழுத்துத் தொங்கும் முதிர மலைத் தலைவனும், செவ்விய வேலை உடையவனுமாகிய குமண வள்ளலிடம் யாம் பெற்று வந்த கொடைப் பொருள் அனைத்தையும்,

***உன்னை விரும்பி இருப்பவர்க்கும்***
***நீ விரும்பியவர்களுக்கும்***
***சிறந்த கற்பமைந்த சுற்றத்தார்க்கும்***
***நம் பசி தீர்க்க தம் அன்பினால் கைம்மாறாகக் கொடுத்தவர்க்கும்***
***இன்னார் இனியார் என்று கருதாமலும்***
***என் அனுமதி பெற்றே கொடுக்க வேண்டும் என்று கருதாமலும்***
***இப்பொருள் காத்து வைத்து நெடுங்காலம் வாழ்வோம் என்று நினையாமல்***
***எல்லோருக்கும் கொடுப்பாயாக!***

மேற்சொன்ன பாடலுக்கு எனது உரை.

பாடிப் பரிசில் பெற்றதைப் பகிர்ந்தளிக்கச் சொல்கிறார், 'ஆடு நனி மறந்த கோடு உயர் அடுப்பின் ஆம்பி பூப்ப' எனும் வறுமையில் வாடிய புலவர். இன்றோ தரகுப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்குகிறார்கள் மக்களை உய்விக்க வந்த உத்தம மாண்புகள்.

பெரும் பதுமனார் பாடல், 'கடவுள் ஆலத்துத் தடவு சினைப் பல்பழம்' என்கிறது. தெய்வம் உறையும் ஆலமரத்தின் பெருங் கிளைகளில் பழுத்த பழங்கள், என்பது பொருள்.

***'தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒருவிதை***
***தெள்நீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்***
***நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை***
***அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு***
***மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே'***

என்பது வெற்றிவேற்கை நூலின் பாடல், அதிவீரராம பாண்டியர் யாத்தது.

புறநானூற்றில், மதுரை நக்கீரர், சோழ நாட்டுப் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனைப் பாடிய பாடலில், 'பழஞ் சோறு' பேசுகிறார். ஐயூர் முடவனார், தாமான் தோன்றிக் கோனைப் பாடிய பாடலிலும் பழஞ்சோறு பேசுகிறார்.

குறுந்தொகையில் கபிலர் பாடல், 'சிறு கோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு' என்று பலா மரத்தின் சிறு கிளைகளில் பெரிய பலாப்பழங்கள் தொங்கியது போன்று என்று உவமை சொல்கிறார். 'இவள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே' என்று பேசும் கட்டத்தில், அதாவது சிறிய கிளைகளில் பெரிய பலாப் பழங்கள் தொங்குதல் போல, இவளுடைய உயிரோ சிறியது, ஆனால் அது தாங்கும் காமமோ பெரிதே என்பது பொருள்.

பரணர் பாடல், தலைவியின் பிரிவுத்துயர் குறித்துப் பேசும் போது, அவள் மனம், 'எழு குளிறு மிதித்த ஒரு பழம் போல' என்பார். எழு குளிறு எனில் ஏழு நண்டுகள் என்று பொருள்.

இவ்வாறு சங்க இலக்கியங்களான பாட்டும் தொகையும் பகிர்ந்தளிக்கும் பழங்களை விவரித்துக் கொண்டே போனால் அது முனைவர் பட்ட ஆய்வேடு ஆகிவிடும். எழுதிக் கொடுக்க இன்றைய சந்தை மதிப்பு ஐந்து இலக்கம் பணம் எனக் கேள்வி.

மறுபடியும் குறுந்தொகையில் அள்ளூர் நன்முல்லை 'வேப்ப ஒண்பழம்' என்பார் வேம்பின் கனியை. நம்மில் எத்தனைபேர் வேம்பின் பழம் உதப்பித் தின்று வேப்பங் கொட்டையை உமிழ்ந்திருக்கிறோம்? அதே நூலில் பெயரறியாப் புலவர் ஒருவர் பழைய குழியைக் குறிக்க 'பழங்குழி' எனும் சொல்லை ஆள்கிறார். பாடல் எண் 379. அவர் இன்றைய குறுக்குச் சாலைகளில் நடந்து பார்த்தால் பழங்கிணறு என்பாரோ என்னவோ!

நற்றிணையில் கயமனார் பாடல் விளாம்பழத்தை, விளம்பழம் என்கிறது. 'விட்டதடி ஆசை விளாம்பழத்து ஓட்டோடு' என்பதும் 'யானை உண்ட விளாம்பழம்' என்பதும் நம் பழைய பழமொழிகள். ஓரம்போகியார் பாடல் நாட்பட்ட காமத்தைப் 'பழம்பிணி' என்கிறது. அம்மூவனார் பாடலில் உதிர்ந்து



கிடந்த நாவற் பழங்களை வண்டுகள் தம் இனம் என்று மொய்த்த காட்சி பேசப்படுகிறது. காவன் முல்லைப் பூதனார் பாடல் பழங்களை உதிர்க்கும் குமிழ் மரங்களைக் குறிப்பிடு கிறது. பரணர் பாடல் மாமரம் எனும் மரத்துக்கு கொக்கு எனும் சொல் கையாண்டு அதிலிருந்து பழங்களைப் பேசுகிறது.

'தேய்புரிப் பழங்கயிறு' எனும் உவமை ஆண்டு அதனாலேயே 'தேய்புரிப் பழங் கயிற்றினார்' என்று குறிக்கப் பெற்ற புலவ ரும் உண்டு ஈண்டு. பழங்கயிறு எனும் சொல்லும் பதிவா யிற்று. பழமையின், பழமொழி, போன்ற சொற்களை அகநா னூறு கையாண்டுள்ளது.

பழம் எனும் சொல்லின் மாற்றுச் சொல் கனி. கனி எனும் சொல்லுக்குப் பேரகராதி தரும் பொருள் ஆறு.

- Ripeness, Maturity. கனிவு.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான, திருத்தக்க தேவர் இயற்றிய, பதின்மூன்று இலம்பகங்களாகப் பிரிக்கப்பட்ட, 3145 பாடல்கள் அடங்கிய சீவக சிந்தாமணி எனும் நூலின் இரண்டாவது இலம்பகம் கோவிந்தையார் இலம்பகம். அதன் ஒரு பாடலின் முதலிரு அடிகள்,

***'கனி வளர் கிளவி காமர் சிறு நுதல் புருவம் காமன்
குனிவளர் சிலையைக் கொன்ற!
குவளைக்கண் கயலைக் கொன்ற'***

என்பனவாகும். கனித்தன்மை தோற்றுகின்ற தன்மையை உடையாளின் நுதலும் புருவமும் மன்மதனின் சிலையைத் தோற்கடித்தன! அவளது குவளை மலர் போன்ற கண்கள் கயலை வென்றன, என்பது பொருள்.

- Fruit, Ripe, Mellow fruit. பழம்.

- Sweetness. இனிமை (சூடாமணி நிகண்டு).

கனிமொழி என்றால் இனிமையான மொழிதலை உடையவள் என்பதாம்.

- Essence. சாரம்.
- கனிச்சீர்.

- மூவசைச் சீரின் இறுதியிலுள்ள நிரையசை.

தேமாங்கனி, புளிமாங்கனி.

கனி எனும் சொல்லுக்கு பொன் முதலாய உலோகத் தாதுக்

கள் எடுக்கும் சுரங்கம் என்றும் பொருள். கனிமம், கனிமத் தாது, கனிம வளம், கனிமக் கொள்ளை எனும் சொற்களை யும் நினைவுகூரலாம்.

கனிதல் எனும் சொல்லுக்கு எட்டுப் பொருள் பட்டியல் இடப் பட்டுள்ளது பேரகராதியில்.

- To ripen as fruits. To turn to mellow luscious. Sweet. பழுத்தல்.

கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், வனம்புகு படலம் பாடலில்:
‘காலம் இன்றியும் கனிந்தன கனி; நெடுங்கந்த
மூலம் இன்றியும் முகிழ்த்தன நிலன் உற முழுதும்’
என்பான் கம்பன்.

- To be over ripe. அளிதல்.
- To become complete, Perfect. முதிர்தல்.

பரிபாடலில் வையையைப் பாடும் நல்லந்துவனார்,
‘கன்னிமை கனியாக் கைக்கிளைக் காமம்’ என்பார். கன் னிமை முதிராத, ஒரு தலைக் காமம் தருகின்ற தலைவி இடத்து என்பது பொருள்.

- To melt, grow tender, become soft, as the heart by affection, love, devotion. மனம் முதலியன இளகுதல்.
- To be mellifluous, To be full of sweetness. இனித்தல்.
- To be red-hot; To glow. தழல் மிகுதல். நெருப்பு கனிந்தது.
- To become red-hot as metal. பழுக்கக் காய்தல். கனிய வெந்த இரும்பு.
- To get suddenly angry. To be irritate. முன்கோபம் அடை தல் (சூடாமணி நிகண்டு).

கனித்தல் என்றொரு சொல்லும் கண்பட்டது. பொருள் - To melt, Soften. இளகச் செய்தல். கனிதல் என்றால் பழுத்தல் என்பது முதற்பொருள். பிற பொருள்கள், To burry, conceal, Hide, புதைத்தல் (பிங்கல நிகண்டு) என்பன பிற பொருள் கள். கனிக்காய் எனில் Unripe fruit in the process of ripening. பழுக்கும் நிலையிலுள்ள காய். நாங்கள் செங்காய் என் போம். வேறு சில சொற்கள்.

| | |
|---|---|
| கனிக்காழ் | - Seadling. Sead of a fruit. பழத்தின் விதை அல்லது கொட்டை (திவாகரம்) |
| கனிகாலம் | - Fruit Season. பழுக்கும் காலம் |
| கனிச்சீர் | - கனி எனும் வாய்பாடு கொண்ட அசையை இறுதியில் உடைய வஞ்சி உரிச்சீர். |
| கனிட்டன் | - 1. Last born Son. கடைசிப் பிள்ளை, கடைக்குட்டி.<br>2. Younger brother, தம்பி.<br>3. Base, Vibe, low person. கீழ்மகன் (திவாகரம்)<br>4. கனிஷ்டன் |
| கனிட்டை | - 1. Last born daughter. கடைசி மகள்.<br>2. Younger sister. தங்கை<br>3. The little finger. சிறுவிரல்<br>4. கனிஷ்டை |
| கனிட்டிகை | - கனிட்டை |
| கனிந்த பாடம் | - தெளிந்த பாடம் |
| கனிப்பு | - இனிமை |
| கனிய | - முற்ற |
| கனிலாமணக்கு | - பப்பாளி |
| கனிவாழை | - வாழை இனம் |
| கனிவு | - 1. Ripening. முதிர்தல்.<br>2. Love, Compassion. அன்பு.<br>3. இரக்கம் |

கனிகரம் என்றுமோர் சொல் கண்டேன். Affection, love, அன்பு என்று பொருள். காமம், காதல், நேசம், ப்யார், லவ், மொஹபத் எனும் சொற்களுக்கு மாற்றாக இனிமேல் கனிகரம் எனும் சொல் பயன்படுத்தலாம். அதனைத் தமிழன் செய்யத் தொடங்க வேண்டுமானால் எவனோ ஒரு மெகா நடிகன் தன் படத்தில் ஒரேயொரு முறை பயன்படுத்தினால் போதும். மற்ற படி எந்தத் தெய்வம் பிரத்யட்சமாக வந்து கட்டளை இட்டா லும் நம்ம ஆள் கூட்டாக்க மாட்டான்.

முன்பு திருமண அழைப்பிதழ்களில் மணமக்களைக் குறிக்க கனிஷ்ட குமாரன் அல்லது கனிஷ்ட குமாரத்தி என்று அச்ச டிப்பார்கள். ஜேஷ்ட குமாரன் அல்லது ஜேஷ்ட குமாரத்தி என் றும்.

பழம் என்ற சொல்லை ஒருமுறை பயன்படுத்தி, அதனை நெருஞ்சி முள்ளை குறிக்கப் பயன்படுத்திய திருவள்ளுவர், கனி எனில் கனியக் கனியப் பேசுகிறார்.

அறத்துப் பாலில் இனியவை கூறல் அதிகாரத்தில்

***‘இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்தற்று’***

என்கிறார். இந்தக் குறளுக்குப் பொருள் கூறப் புகுந்தால், அது இந்தக் கட்டுரையை வாசிப்பவர்களை அவமதிப்பதா கும்.

காமத்துப்பாலில் தனிப்படர் மிகுதி அதிகாரத்தில் ஒரு பாடல்:

***‘தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி’***

என்பதாகும். நம்மால் காதலிக்கப்படுபவரால் நாமும் காத லிக்கப்பெறும் பேறு பெற்றால் அந்தக் காமம் - காதல் - நேசம் - அன்பு - கனிகரம், விதையே இல்லாத கனியைப் பெற்றதைப் போன்றது என்பது பொருள். காழ் எனில் விதை, கொட்டை. இன்னொரு பொருள் மரத்தின் வயிரம்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் நூற்பா -

*‘புறக் காழ் அனவே புல் என மொழிப*
*அகக் காழ் அனவே மரம் என மொழிப’*

என்னும். புறத்தே வயிரமுடைய பனை, தென்னை போன்றவை புல் வகையைச் சாரும் என்றும் உள்ளே வயிரமுடைய தேக்கு, மருது, வேம்பு, வாகை போன்றவை மரம் வகையைச் சாரும் என்பதும் பாடல் வரிகளின் பொருள்.

காழில் கனி என்றால் - புரியும் படியாகச் சொன்னால் - Seedless Fruit. யாவற்றையும் Seedless ஆக்கும் முயற்சியில் தற்போது முயற்சிகள் நடைபெறுகின்றன. திராட்சை, கொய்யா, பப்பாளி, மா என. மனிதனும் விரைவில் ஆகிவிடுவான் Seedless போலும்.

காமத்துப்பாலில் புலவி அதிகாரத்துக் குறள் பேசுகிறது,

*‘துனியும் புலவியும் இல்லாயிற் காமம்*
*கனியும் கருக்காயும் அற்று’*

என்று. பெரிய மன முறிவு ஏற்பட்டு விடாமல் காத்தால் காமம் இனிமையான கனியாகும். சிறிய பிணக்கு - ஊடல் - புலவி கூட நேராமற் போனால் காமம் துவர்க்கின்ற பிஞ்சு ஆகிவிடும் என்பது உரை.

பழம் போன்றே, கனி எனும் சொல்லும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களில் அறுபதுக்கும் மேற்பட்ட பாடல்களில் ஆளப்பெற்றுள்ளது. புறநானூற்றில் ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடும்போது, ‘சிறியிலை நெல்லித் தீம்கனி’ என்பார். ஐயூர் முடவனார், தாமான் தோன்றிக்கோனைப் பாடுமிடத்து, ‘ஓங்கு சினைமாவின் தீம்கனி நறும்புளி’ என்று மாம்பழப் புளிசேரி பற்றிக் குறிப்பிடுகிறார்.

திரிகூட ராசப்பக் கவிராயர் எழுதிய குற்றாலக் குறவஞ்சியில் இரு பாடல் வரிகள்,

*‘வானரங்கள் கனி கொடுத்து*
*மந்தியொடு கொஞ்சும்*
*மந்தி சிந்து கனிகளுக்கு*
*வான்கவிகள் கெஞ்சும்’*

என்று நீளும். வானரம் - ஆண்குரங்கு, மந்தி - பெண்குரங்கு, வான்கவிகள் - வானுலக மாந்தர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

*‘கனியிடை ஏறிய சுவையும் - முற்றல்*
*கழியிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் - தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!’*

என்பார்.

தாயுமானவர் பாடல்களில் ஒன்று,

*‘கனியேனும் வறிய செங்காயேனும்*
*உதிர் சருகு கந்த மூலங்களேனும்*
*கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்*
*புசித்து நான் கண்மூடி மௌனியாகித்*
*தனியே இருப்பதற்கு எண்ணினேன்*
*எண்ணமிது சாமி நீ அறியாததோ’*

என்று நீளும்.

பழங்காலத்தில் இருந்தே, நாம் பழங்குடிகளாக வாழத் தலைப்பட்ட காலம் தொட்டே, பழம் பாரதத்தின் பழந்தமிழ் நாட்டில் கனி எனும் சொல்லை விடப் பழம் எனும் சொல்லே அதிகம் புழங்குகிறது மக்கள் மத்தியில். பெயர் பூணும்போது நம்மிடம் தங்கப்பழம் உண்டு, செல்வக்கனியும் உண்டு. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான குன்றத்தின் பெயர் பழனி - பழநி - பழம் நீ. பழனி, பழனியப்பன், பழனிச்சாமி, பழனிவேலு, பழனித்துரை, பழனி நாதன், பழனி அம்மாள், பழனியாச்சி எனப் பல பெயர்கள். பழம் எனும் சொல்லுக்குக் கனி எனவோ பழமை எனவோ பொருள் கொள்ளலாம்.

‘தெவிட்டாத கனி - பிள்ளை, தெவிட்டாத பானம் - தண்ணீர்’ என்பதோர் பழமொழி. ‘தானாகக் கனியாததைத் தடி கொண்டு தல்லிப் பழுக்க வைக்கலாமா?’ என்பதுவும் பழமொழிதான்.

பழமானாலும் காயானாலும் கல் வைத்துப் பழுக்க வைப்பதும், இரசாயன ஊசிகள் ஏற்றுவதும், கெமிக்கல் பொடிகள் தூவுவதும், இரசாயனங்கள் கரைத்த நீரில் முழுக்காட்டி எடுப்பதும் வணிக நோக்கங்கள், பாவக் கூறுகள், குற்றச் செயல்கள். வாங்கித் தின்பவருக்கு எந்நோய் பெருகினால் என்ன, புற்று வைத்தால் என்ன, தன் பக்கறை நிரம்பினால் போதும் என்பது வணிகச் செம்மல்களின் பக்தி மனம்.

‘கடவுளுக்குப் பொதுவா நடந்துக்கோ’ என்பது மரபின் மனோபாவம். ‘கடவுள் கெடக்கான், காசு சம்பாதிக்கப்பட்ட வழியைப் பாரு’ என்பது புரட்சி மனோபாவம்.

சமூக அறம் என்பதே அழுகல் பழம், நொந்த கனி என்றாயிற்று.

யாரை நொந்து என்ன காரியம்?



nanjilnadan@thaiveedu.com




**மட்டக்களப்பு மாவட்டத்தை – தற்கால மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் இணைந்த பகுதி – தாம் ஆக்கிரமித்த பகுதி எனக் கருதாது, தாம் நிரந்தரமாக வாழப்போகும் மண் எனக்கருதி, அதன் ஆக்கத்துக்கும் விருத்திக்கும் ஊக்கமுடன் உழைத்தவர்கள் டச்சுக் காரர்கள் என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகிறார் இக்கட்டுரை ஆசிரியர். வீதி அமைப்பு, வேளாண் விருத்தி ஆகிய வற்றில் அவர்களின் பணி இன்றும் நிலைத்திருப்பது அவர்களின் சிறப்பை காட்டுகிறது. உதாரணத்துக்கு 'எல்லாக் காலங்களிலும் முக்கியமாக கரவாகு, சம்மாந்துறை சமவெளிகளில் விவசாயம் செழிக்க வழியேற்பட்டது' என்ற கூற்றின் உண்மைத் தன்மையை கருத்தில் கொள்ளலாம். மொ–ர்**

டச்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பு மட்டக்களப்பில் 1638-ம் ஆண்டிலிருந்து 1796-ம் ஆண்டு வரை இருந்தது. 1643-க்கும் 1665-க்கும் இடையே அவ்வாட்சி இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதைப் பற்றி அவர்கள் பிற்பாடு கவலைப்பட்டனர். சந்தேகமில்லாமல் இதனை ஓர் இழப்பு என்று அவர்கள் எண்ணினர். இதனால் வாவி முகத்துவாரத்தை காவல் காக்க முடியாமல் போனது. பொது வேலைகளுக்கும் கோரமண்டல கரைக்கும் மரம் கொண்டு போவது தடைப்பட்டது போன்ற பல இழப்புகள் நிகழ்ந்ததாக அவர்கள் கூறுகின்றனர். வர்த்தகம் டச்சுக்காரர்களால் மட்டுப்பட்ட அளவில் நடைபெற்றது. அவர்கள் தமது வர்த்தகப் பண்டங்களை விற்று கறுவா, மிளகு, மெழுகு, தானியம் ஆகியவற்றை வாங்கிக்கொண்டனர். இதுவெல்லாம் டச்சு ஆக்கிரப்பு தொடங்கிய முதல் முப்பது வருடங்களில் நிகழ்ததாகும். அதனால், இக்காலத்தில் மட்டக்களப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. முன்நாட்களில் டச்சுக்காரர் பகுதியாக புளியந்தீவு மாத்திரமே கருதப்பட்டது. சிங்களவர்களுடன் ஏற்பட்ட 1766 பெப்ரவரி 14-ம் திகதிக்குரிய ஒப்பந்தம் காரணமாக, கிழக்கு கரையில் ஒரு நீண்ட துண்டு நிலம் அவர்களுக்கு கிட்டியது. அதன் ஒருமுனை வடக்கே யாழ்ப்பாணப் பட்டணத்தின் தென் எல்லை வரையும் மறுமுனை வளவ கங்கை வரையும் நீண்டிருந்திருந்தது. இதனால் மட்டக்களப்பில் கடைசி முப்பது ஆண்டுகளின் டச்சு ஆட்சி முன்னைய காலங்களை விட உறுதியாக நிலைகொண்டது.

இக்கட்டுரை மதிப்பீடு செய்ய முனையும் காலத்துக்கு முன்னர், மட்டக்களப்பு ஓப்பெர்ஹூஃப் அல்லது தலைமை சிவில் அதிகாரி என்பவரின் கீழ் பணியாற்றும் இராணுவத் தலைமை அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. மதிப்பீடு செய்ய முனையும் காலத்தில் சிவில் சேவையாளர் ஒருவரின் கீழ் இருந்தது. இப்பொறுப்பில் இக்காலத்தில் இருந்தவர் சிவில் சேவையாளரான அன்றினஸ் ஜோகானஸ் ஃபிராங் என்பவராவார். 1734-ல் ஃபிளெண்டெர்ஸ், லுயிஸ் என்ற இடத்தில் பிறந்த அவர் 1756-இல் ஓர் உதவியாளராக இலங்கைக்கு வந்தார். 1760-ல் கொழும்பில் இருந்த பாக்கு திணைக்களத்திற்கு ஆணையாளராக நியமிக்கப்பட்டார். அவர் கொழும்பில் வைத்து திருகோணமலையில் பிஸ்காலாக இருந்த சாலமோன் வான் லியர் என்பவரின் மகளான கஸ்டவா ரோபெர்ட்டினா வான் லியர் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அத்திருமணத்தின் மூலம் நான்கு குழந்தைகள் பிறந்தன. ஃபிராங் 1766-ம் ஆண்டில் மட்டக்களப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஃபிராங்கின் நிர்வாகக் காலத்தில் நிகழ்ந்த ஒரு குறித்த சம்பவம் பிற்காலத்தில் டச்சுக்காரர் கடைப்பிடித்த கொள்கையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. 1766 ஒக்ரோபர் 8-ம் திகதியில் நடந்த அரசியல் கூட்டத்தில் சுதேசியத் தலைவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவை:

- தாங்கள் உட்பட மட்டக்களப்பின் ஏழு மாகாணங்களில் வாழும் சுதேசிகள் கம்பெனியின் ஆதிபத்தியத்துக்கு கட்டுப்படுகின்றனர்.
- அவர்கள் அறுவடைக்கு பின் ஆண்டுதோறும் நெல் வரியை தவறாமல் செலுத்த கடமைப்பட்டுள்ளனர்[1]
- 15-45 வயதுக்குட்பட்ட எல்லாப் பிரசைகளும் வருடத்தின் மூன்று மாதம் ஊதியமில்லாமல் கம்பெனிக்கு உழைக்க உடன்படுகின்றனர்.
- பரம்பரை வழக்கத்தின் படி தமது பண்டிகைகளை கொண்டாட சுதேசிகள் உரித்துடையவர்களாகின்றனர். சுதேசிகள் தம்மை கண்காணிக்க வரும் கம்பெனி உத்தியோகத்தர்களுக்கு கீழ்ப்படிவுடன் நடந்து கொள்ள சம்மதிக்கின்றனர்.

- கம்பெனிக்கு வரி வழங்க அவர்கள் உடன்படுகின்றனர். அவ்வாறு வரி செலுத்தியதற்கும் தங்கள் தேவைக்கும் போக மீதி உள்ள நெல்லை கம்பெனிக்கு ஒரு ரிக்ஸ் டொலருக்கு 10 பரா நெல் வீதம் வழங்க உடன்படுகின்ற னர். சுதேசிகள் வைத்திருக்கும் மிளகு, மெழுகு, மான் கொம்பு போன்றவற்றை வழமையான விலைக்கு கம்பெ னிக்கு விற்கலாம்.[2]

உள்நாட்டுச் சுதேச தலைவர்ளோடு ஏற்பட்ட உடன்பாட்டின் வழியாக ஃபிராங்கின் எட்டு வருட நிர்வாகத்தில் மட்டக்களப் பில் வரியாக பெருமளவு நெல் அறவிடப்பட்டது. ஆண்டு தோறும் 20,000 பரா நெல்லை வரியாக விவசாயிகள் செலுத்தி வந்தனர். ஆயினும் ஃபிராங்கின் நிர்வாகத்தில் வரி அறவிடுதலில் ஒரே சீரான தன்மை இல்லாமை போன்ற குறை பாடுகள் காணப்பட்டதை மறுக்க முடியாது. அதனால் சேக ரிக்கப்பட வேண்டிய அளவைவிட குறைந்த அளவான நெல் லையே, கம்பெனி சேகரிக்க முடிந்தது. 1856-ல் அரசாங்க அதிபராக இருந்த ஜே. டபிள்யூ. பேர்ச் ஒரு அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

'தாழ்ந்த சமவெளியில் ஒடி வரும் ஆற்றின் குறுக்கே இயற் கையாக உருவாகிய நாலு பெரும் பள்ளங்களான கொட்டவட் டுவான் வில்லு, அம்பாறை வில்லு, இறக்காமம் வில்லு, குடா வில்லு என்பன பெருமளவு நீரை பிடித்து விவசாயத்தை பெருமளவில் தடை செய்தன. திரு. ஃபிராங். குடா வில்லு, அம்பாறை வில்லு ஆகியவற்றுக்கு நீர் செல்வதற்கு முன் னுள்ள இடத்தில் அணை கட்டி நீரை திருப்பிவிட்டார். இத னால் எல்லாக் காலங்களிலும் முக்கியமாக கரவாகு மற்றும் சம்மாந்துறை சமவெளிகளில் விவசாயம் செழிக்க வழியேற் பட்டது எனலாம்'

பொறுப்பு வாய்ந்த தலைமை அதிகாரியாக பதினெட்டு வரு டங்கள் பணியாற்றிய பின் ஃபிராங் ஓய்வுபெற அவரிடத்துக்கு திரு. ஜாகோப் பேர்னாட் 1784 ஏப்ரல் மாதத்தில் பதவியேற் றார். அவரை நியமிக்கும் போது ஆளுநர் கிடைக்கின்ற வரியை உபயோகித்து நெல் செய்கையை விருத்தி செய்தல் வேண்டும், தென்னை, கமுகு மற்றும் பழ மரங்களின் உற்பத் தியை பெருக்குதல் வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை வழங்கி இருந்தார். பேர்னாட் விட்டுசென்ற சுருக்க குறிப்பு அவர் தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றினார் என்பதை காட்டுகிறது. தனக்கு முன்னர் பத வியில் இருந்தவர்கள் விட்ட பிழைகளை நன்கு உணர்ந்து அவை தன் நிர்வாகத்தில் இடம்பெறாமல் பார்த்துக்கொண் டார். வித்தியாசமான வகையில் வரி விதிப்பது, சுதேசிகளை ஊழியம் (Oeliam) செய்ய தெண்டிப்பது போன்ற முன்னவர் விட்ட பிழைகளை அவர் தவிர்த்தார்.[3] இக்காலத்தில் இரண்டு வழிகளில் நிலவருமானம் கிடைத்து வந்தது. இரண்டும் சுதேசி யத் தலைவர்கள் டச்சு அரசாங்கத்துக்கு அளித்த சம்மதத்தி லிருந்து பெறப்பட்டவையாகும். அவை வருமாறு:

- நில அடிமைத்தனம்
- ஊழியம் அல்லது கட்டாய வேலை

நில ஊழியம் பின்வருவனவற்றை உள்ளடக்கி உள்ளது.

- சுதேச தலைவர்கள் வரிச் சேகரிப்பை ஒழுங்காக செய்ய மாட்டார்கள் என்று கருதிய பேர்னாட் பண்ணையில் வேலைசெய்பவர்கள் தொகையை எண்ணி வரி அறவிடு செய்யும் புது முறையை அறிமுகம் செய்தார். இது நீர்ப்பா சன மேற்பார்வையாளர்களுக்கு பிடிக்கவில்லை. அவர்கள் கோபமடைந்தனர். அவர்கள் புது முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கண்டி பிரதேசத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர். பேர்னாட் ஆலோசனை நடத்தி அவர்கள் மீண்டும் வர நடவடிக்கை எடுத்தார். 1785-ல் பெறப்பட்ட வரி ஓப்பீட்டளவில் கடந்த ஆறு வருடங்களைவிட அதிக மாக இருந்ததால் கம்பெனி திருப்தியடைந்தது.
- பயிர்செய்யப்பட்ட மற்றும் பயிர்ச்செய்யப்படாத நிலங்க ளுக்கான வரி முறையே 12 ஸ்ரிவர், 6ஸ்ரிவர் காசாக அல் லது பொருளாக அறுவடைக்கு கிட்டவாக அறவீடு செய் யப்பட்டது. மோசமான அறுவடை ஏற்பட்டால் விவசாயிகள் வரி அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.
- துருப்பினரும் கம்பெனியின் உத்தியோகத்தர்களும் சுற்று லாவரும் போது அவர்களுக்கு தேவையான உணவை தலையாரிகள் மக்களிடம் இருந்து திரட்டுவார்கள். அவர் கள் தேவைப்படும் அளவைவிட மூன்று மடங்கு உணவுப் பொருட்களை மக்களிடமிருந்து சேகரிப்பார்கள். மேலதிக மானவற்றை தாம் சுருட்டிக் கொள்வார்கள். இதை பேர்- னாட் தடைசெய்தார்.
- கம்பெனியின் பணத்தை கொண்டு செல்வது மக்களுக்கு கடும் சுமையான காரியமாக இருக்கவில்லை.

சேனைச் செய்கை இக்காலத்தை போலவே அக்காலத்திலும் பிரச்சினையாக இருந்தது. இதற்கு எதிராக சொல்லப்பட்ட காரணங்கள் வருமாறு:

- காட்டில் வெட்டு மரங்கள் வளர்வதை இது வெகுவாக குறைக்கிறது.
- சுதேசிகளை நெற்செய்கையில் இருந்து வெளியேற்றுகி றது.
- தெங்குச் செய்கையை பாதிக்கிறது.

நல்ல விளைவை ஏற்படுத்தும் முகமாக காட்டை பேர்னாட் கம்பெனிக்கு உடமையாக்கினார். 20x40 பாகம் காட்டு நிலத்தை வெளியாக்கி பயிர் செய்ய ரிக்ஸ் டொலர் அறவிட் டார். நெற் செய்கை பிழைக்கிற போது வரி விதிப்புக்கு விலக் களித்தார்.

பேர்னாட் சுதேசிகளால் கைவிடப்பட்டிருந்த பழச்செய் கையை விருத்தியாக்க அதன் மீது கூடிய கவனம் செலுத்தி னார். மாவட்டம் முழுவதும் 100,000 பழமரக்கன்றுகள் விநி யோகித்தார். ஆயினும் அவற்றில் மக்கள் அக்கறையில்லா மல் இருப்பதை அறிந்த அவர் தனது செலவில் பழமரச் செய் கையை கண்காணிக்க ஆராய்ச்சிகளை நியமித்தார். மாவட் டத்தில் உள்ள பழமரத் தோட்டங்களின் தொகையை கணக் கெடுத்தார். 10000-ஆக இருந்த அத்தோட்டங்களில் அதிக மானவற்றில் ஒரு மரமும் இருக்கவில்லை. அவைகள் பூரண மாக கைவிடப்பட்டிருந்தன. அவைகளில் மீள நடவு செய்ய நடவடிக்கை எடுத்தார். அவை பூர்த்தியடைய பல ஆண்டு கள் செல்லும் எனக் கணித்தார். மிளகும் கோப்பியும் செய்கை பண்ண முயற்சி எடுக்கப்பட்டது. ஆயினும் நல்ல

வெற்றி கிட்டவில்லை. யானைகளின் ஊடறுப்பு காரணமாக தெங்குச் செய்கை வெற்றியளிக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டம் மூன்று நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மத்தியில் உள்ளது மட்டக்களப்பு பகுதி, வடக்கில் கோரளைப் பற்றும் தெற்கில் பாணமைப் (Panoa) பற்றும் உள்ளன.[4] சிவில் அமைப்பு பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது.

- ஒப்பர்கூஃப்ட் 1
- பதிவுகாரர் அல்லது தோம்புதோர் 1
- ஆவணக் காப்பாளர் (நில ராட்டின் செயலாளரின் ஆவண உதவியாளர்கள் 3 (அவர்களில் ஒருவர் வர்த்தக அதிகாரிக்கும் மற்றொருவர் பாணமை மாவட்டத்திற்கும் இன்னும் ஒருவர் கோரளைப் பற்றுக்கும் இருந்தனர்)[5]
- இளைய உதவியாளர் இருவர். (ஒருவர் வர்த்தக உத்தியோகத்தருக்கும் மற்றவர் செயலாளருக்கும் உதவிபுரிந்தனர்.)
- தொழில் கற்க வந்தவர்கள் 2
- ஆஸ்பத்திரி வைத்தியர் 1
- பாட்சாலை ஆசிரியர் 1

அமைச்சகம் பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது:

- லெஃப்ரினன்ற் அல்லது கொமாண்டர் 1
- வைத்தியர் 5
- கோபோறல் 5
- சாதாரண ஐரோப்பியர் 2
- சுதேசிகள் 52

### பீரங்கிப் படை:

- பம்பாட்டியர் (ஐரோப்பியர்) 1
- சுடுபவர் (ஐரோப்பியர்) 1
- உதவியாளர் (ஐரோப்பியர்) 2
- உதவியாளர் (சுதேசிகள்) 2

### உள்ளூர் கம்பெனி:

- உத்தியோகத்தர்கள் 3 அதாவது கப்டன் 1, லெஃப்ரினன்ற் 1, இராணுவ கொடி அதிகாரி 1
- வைத்தியர்கள் 3
- கோப்பேரல் 7
- ஆட்கள் 94

கடைசியாக குறிப்பிட்ட கம்பெனி 1788-ல் ஆரம்பிக்கப்பட்டது. மலே வம்சாவழியிலிருந்து திரட்டப்பட்ட ஆட்களுக்கு மாதத்துக்கு 4 றோயல் டொலர் அல்லது உள்நாட்டு துருப்பினருக்கு கொடுப்பதில் மூன்றில் இரண்டு பங்கும் கொடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்கு அப்பால் செயற்பட கம்பெனிக்கு அதிகாரம் இல்லை. வணிக கூட்டுத்தாபனங்களின் ஆட்கள் குறைந்து வரத்தொடங்கினர். கடைசியில் அதில் இருந்த ஐரோப்பியர்கள் விலகியதும் அது 100 மூர்களை கொண்டதாக மாறியது. கடைசியில் அவர்களும் ஒவ்வொருவராக விலக அவர்களின் இடத்தை சிப்பாய்கள் பிடித்து கொண்டனர். கடைசியாக கம்பெனி அறுகம்பையில் இருந்து இயங்கியது.

இந்த மாவட்டதின் வருமான வரி அதிகாரியை ஒப்பர்ஹுவுட் என்று அழைத்தனர். அவருக்கு உதவியாக உள்நாட்டு உதவி அதிகாரிகள் இருந்தனர். ஒருவர் பாணமையிலிருந்தும் மற்றவர் கோரளைப் பற்றிலிருந்தும் செயல்பட்டார். முன்னையவருக்கு ஒரு கங்காணியும் இரு லஸ்கோரின்களும் உதவியாக இருந்தனர்.[6] பின்னையவருக்கு ஒரு கணக்கப்பிள்ளையும் இரண்டு லஸ்கோரின்களும் உதவியாக செயற்பட்டனர்.[7] அவர்கள் வரிகளையும் நில வருமானத்தையும் சேகரித்தனர். தகுதியான நபர்களை இந்த பதவிகளுக்கு தேர்தெடுப்பதில் பாரிய சிக்கல் இருந்தது. இக்காலத்தில் உள்ள அரசாங்க அதிபருக்கு நிகராக இப்பதவிகள் இருந்தன.

நீதிமன்ற நீதிபதி, நில ராட்டின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல் சபை மூன்றும் இணைந்ததாக திட்டமிடும் அமைப்பு இருந்தது. முதல் இரண்டு அமைப்புகளிலும் அங்கம் வகித்தவர்கள் ஓரே மாதிரியானவர்களாவர். அதாவது ஒப்பர்ஹுட், தலைமை இராணுவ அதிகாரி, கணக்காளர் ஆகியவர்கள். அவர்கள் திருமணம் சார்ந்த பிணக்குகளையும் தீர்த்து வைத்தனர். மற்றதில் நில ராட்டின் உறுப்பினர்களோடு ஆளுநரால் நியமிக்கப்பட்ட சுதேசிய தலைவர்களும் அரசியல் சபையில் அங்கம் வகித்தனர். பாணமை, கோரளைப்பற்றில் உள்ள உதவியாளர்களும் காலகதியில் இதில் அங்கம் வகித்தனர். பிற்காலத்தில் G Authoriseerde, surgeon ஆகியவர்களையும் இணைத்து பலமான அமைப்பாக அது மாற்றப்பட்டது. நில ராட் நிலச் சேவை மற்றும் நிலம் தொடர்பான பிரசைகளிடையே எழும் எல்லாப் பிணக்குகளை தீர்த்து வைத்தது. 1789-ம் ஆண்டில் அரசியல் சபையும் நீதி மன்றமும் நீக்கப்பட்டன. நில ராட் மாத்திரம் செயல்பட்டு பறங்கியர், கம்பெனி உத்தியேகத்தர்கள், சுதேசிகள் ஆகியவர்களிடையே எழும் பிரச்சினைகளை தீர்த்து வைத்தது. தற்பேர்து நில வெர்காடரிங் என்ற புது அமைப்பு ஏற்படுத்தப்பட்டு நில ராட்டின் பணிகளை செய்தது.

கம்பெனிக்கு கிடைக்கப் பெற்ற வருமானங்கள் பின்வரும் மூலங்களிலிருந்து பெறப்பட்டன.

- கம்பெனியால் செய்யப்படும் வியாபாரத்தால் வரும் இலாபம்
- பாக்கு, சாராயம் என்பனவற்றுக்கு விதிக்கப்பட்ட வரிகள்
- முத்திரை ஒட்டிய காகிதம், மற்றும் அசையாத சொத்துக்களை விற்றல் மூலம்
- உப்பு வரி மூலம்
- கஸ்துமேட் (தலைமை சிவில் சேவையாளருக்கு தனிப்பட்ட வகையில் வழங்கப்படும் பணம்) பணம் மூலம்
- நெல் வரி
- தலை வரி
- ஊழியம் - சேவை

ஊழியத்துக்கான வரியையும் தலை வரியையும் வேறுபடுத்தி

விளங்கிக் கொள்வது சிரமமானது. ஆயினும் தலைவரி முழு சாதிக்கும் மொத்தமாக விதிப்பது, எல்லாக் காலத்துக்கும் ஒரே மாதிரி இருப்பது. ஆனால் ஊழிய வரி தனிப்பட்டவர்க ளின் கடமை, அது இரு வருடத்துக்கு ஒரு தடவை 3 றோயல் டொலரை ஒருவர் செலுத்த வேண்டும். பின்வரும் சாதிகள் 2-இல் இருந்து 2.8 ரோயல் டொலர் வரை தலைவரியாக செலுத் தின. அச்சாதிகள் வருமாறு: வெள்ளிக் கொல்லர், தையல் காரர், வண்ணமடிப்பவர், சாயமிடுபவர், மீனவர், வண்ணார் கள், நாவிதர் ஆகியோர். தோம்புகளை அல்லது பதிவுகாரர் களை நியமித்து சரியாக வரி செலுத்த வேண்டியவர்களை கணக்கெடுத்தது பேர்னார்ட் செய்த சீர்திருத்தமாகும். 1793 - 1798 ஆகிய ஆண்டுகளில் தலைவரியாக 1913 ரோயல் டொலரும் ஊழிய வரியாக 3188 ரோயல் டொலரும் கிடைத் தது குறிப்பிடத்தக்கது. தனது கடமை தொடர்பாக அதாவது வரி விதிப்பது தொடர்பாக கலந்துரையாட ஆளுநரிடம் அனு மதி கேட்டிருந்தார் பேர்னார்ட். பல தவிர்க்க முடியாத கார ணங்களால் மட்டக்களப்பை விட்டு 1789 வரை அவரால் நகர முடியவில்லை. அவர் ஆளுநரை சந்தித்துவிட்டு மட்டக்களப் புக்கு ஜுன் மாதம் திரும்பினார். அவரது ஆலோசனைகளை ஆளுநர் ஏற்றிருந்தது அவருக்கு திருப்தியளித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்குப் பிரதேசம் அதாவது அறுகம்பையும் அதனை அண்டிய பிரதேசங்களும் தெங்கு செய்கைக்கு வாய்ப்பானதாக அமைந்திருந்தது. இதனை கண்டுபிடித்ததில் பெரும் பங்கு பேர்னார்ட்டை சாரும். தனது பின்னவர்களுக்கு விட்டுச் சென்ற குறிப்பில் அவர் எழுதி னார்: 'பாணம பிரதேசத்தில் விசேடமாக அறுகம்பை பகுதி யில் தென்னம் பிள்ளைகள் சிரமத்தின் மத்தியில் நடப்பட்டுள் ளன. இன்னும் ஆயிரம் நாற்றுக்களை நாட இடமிருக்கிறது'.

மட்டக்களப்பில் தபால் சேவை மிகவும் ஆரம்ப கட்டத்தில் இருந்தது. கடிதங்களை அல்லது ஓலைகளை கொண்டு செல் வதற்கு எட்டு லஸ்கரின்கள் வடக்கு பகுதிக்கு நான்கு பேராக வும் தெற்கு பகுதிக்கு நான்கு பேராகவும் நியமிக்கப்பட்டிருந் தனர். அவர்களுக்கு போதிய வேலை இன்மையால் கம்பெனி வேறு வேலைகளை செய்ய அவர்களை பணித்தது. ஒரு காலத்தில் கண்டிக்கும் மட்டக்களப்புக்கும் இடையே தபால் சேவை இருந்தது. ஆயினும் அது பிற்காலத்தில் நிறுத்தப்பட் டது.

தலைமை சிவில் சேவையாளர்களின் வருமானம் பல வகைப் பட்டதாக இருந்தது. வருடத்தில் ஒரு தரம் வயல் வருமானத் தில் அரசனுக்கு ஒரு பங்குகொடுப்பது வழமையாக இருந் தது. இந்த வழக்கம் அரசனுக்கு முன் ஏதும் சிறிய பரிசு இல் லாமல் தோன்றக்கூடாது என்ற நடைமுறையால் வந்ததாகும். டச்சுக்காரர் மட்டக்களப்பை கைப்பற்றிய போது தலைமை சிவில் சேவகருக்கு இந்த மாதிரி அளிக்கப்பட்டது. அது பிங் கோசன் எனப்பட்டது.[8] திரு ஃபிராங்கேயின் முதல் சில வருட நிர்வாக காலத்தில் அவரது வீடும் கோட்டையும் காவி வரப் பட்ட பிங்கோசன்களால் (மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளால்) நிரம்பி வழிந்தன.

பாவனைக்கு மேலதிகமாக இருந்த அவைகள் அழுகி நாற்ற மெடுத்தன. இதனால் ஃபிராங்கே இந்த பிங்கோசன்களுக்கு பதிலாக பணத்தை தருமாறு கோரினார். இந்த நடைமுறை கீழ்நிலை உத்தியோகத்தர்களிடையே பிழையான நடத்தைக ளுக்கு வித்திடுகிறது எனக் கண்ட பேர்னார்ட் அதை இல்லா மல் செய்துவிட்டார்.

இன்னொரு அன்பளிப்பு பரிசென் எனப்பட்டது.[9] பிரமுகர்கள் சுதேச தலைவர்களாகவும் கம்பெனி சேவையாளர்களாகவும் நியமிக்கப்பட்டு நிலப் பிரதிநிதியாக செயற்பட தொடங்கும் போது அதுவும் வழக்கில் இருந்தது. இதுவும் தீங்கான பாதிப் புக்களை ஏற்படுத்தக் கூடியதென்று திடமாக நம்பிய பேர்-னார்ட் இதையும் தனது பின்னவர்கள் பயன்பெறும் பொருட்டு எழுதிய நினைவுக் குறிப்புக்களில் அவைகளைப் பற்றி குறிப் பிட்டுள்ளார்: 'எனது அபிப்பிராயப்படி இந்த தீங்கான பழக் கங்கள் நிலவும் இடத்தில் எந்த நிர்வாகியும் சரியாகவும் நீதி யாகவும் நடந்துகொள்ள முடியாது. இலங்கையில் சில இடங் களில் நிலவும் இவ்வாறான பழக்கங்களால் எந்த கௌரவ மான மனிதனும் கெட்டுப் போவான்' என்று குறிப்பிட்ட அவர் தொடர்ந்து 'இன்றைய சூழ்நிலையில் அற்ப பொருள் ஒன்றை யார் தந்தாலும் அதை ஏற்றால் உனது அதிகாரமும் கௌரவ மும் பாதிக்கப்படும். இந்த நிலை விரைவாகவோ தாமதமா கவோ வரும்.'

மூன்றாவது இனாம் கஸ்தூமேட் காசாகும். இது தலைமை சிவில் சேவையாளருக்கு தனிப்பட்ட வகையில் கொடுக்கப்ப டும் பணமாகும். வயல் செய்கை அல்லாத வர்த்தகம் மற்றும் சில குறித்த சாதிகளால் வழங்கப்படுவதாகும். இதற்கு பதி லாக பேர்னாட் அரசாங்க நடைமுறைக்கு ஏற்ற வகையில் தலைமை சிவில் சேவையாளருக்கு ஒரு குறிப்பிட்ட கொடுப்ப னவு கிடைக்க ஒழுங்குகள் செய்தார். இவற்றைவிட வர்த்தகம் செய்யும் போது கிடைக்கும் இலாபத்தில் ஒரு சிறிய பங்கு போன்ற சிறிய இனாம்கள் பல நடைமுறையில் இருந்தன. ஆயினும் இவைகள் எந்த தாக்கமும் செலுத்தத்தக்கனவாக இருக்கவில்லை.

டச்சுக்காரர் தங்களது வேலைகளை செய்ய அடிமைகளை வைத்திருந்தனர். 1794-ல் மட்டக்களப்பில் கம்பெனியின் அடி மைகளாக 92 பேர் அதாவது 26 ஆண்களும் 32 பெண்களும் 34 சிறுவர்களும் இருந்தனர். இவர்கள் போர்த்துக்கீசர் வைத் திருந்த அடிமைகளின் பெண் வழித் தோன்றல்களாவர். அவர் களில் பெரும்பான்மையினர் கொத்தனார்களாக, கொல்லர்க ளாக, கடைசல் செய்பவர்களாக, பீப்பாய் பழுதுபார்ப்பவர்க ளாக வேலைசெய்தனர். அவர்கள் எந்த நேரமும் வேலை செய்ய அழைக்கப்படுவர். நேரமும் காலமும் அவர்களுக்கு இல்லை. ஒரு பொழுது அவர்கள் வழமையாகப் பெறும் நெல், மிளகு, உப்பு ஆகியவற்றுக்கு மேலதிகமாக ஒரு மாதத்திற்கு 16 ஸ்ரிவெர்கள் பெற்றனர். பின்னர் காசுக் கொடுப்பனவு 30 ஸ்ரிவெராக உயர்த்தப்பட்டது. 1786-ல் இருந்து பெண்க ளுக்கு ஆண்களை போலவே சம்பளம் கொடுக்கப்பட்டது. ஆணும் பெண்ணும் ஆறு மாதத்திற்கு ஒரு தரம் 18 முழம் தூத்துக்குடி துணியையும் சிறுவர்கள் அதைவிட குறைவாக வும் பெற்றனர். ஒரு பொழுது தூத்துக்குடியிலிருந்து துணிவ ராததால் அடிமைகளுக்கு 11/2 றோயல் டொலரை கொடுத்த னர். இக்காசை அவர்கள் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டா லும் அதற்கு வாங்கிய துணி 'முரட்டுத் தன்மையாகவும் ஒடுக் கமாகவும்' இருப்பதாக குறைபட்டுக் கொண்டனர்.[10] தனது பின்னவர்களுக்கு பேர்னார்ட் இவ்வாறு ஆலோசனை கூறி னார்: 'இந்த மக்களுக்கு கொடுக்கும் கொடுப்பனவில் எந்த குறையும் செய்ய முனையாதீர்கள். அவர்கள் எளிதாக கலவ

ரத்தில் ஈடுபடும் குணமுள்ளவர்கள். அவர்கள் கடுமையான நிபந்தனைக்குள் இருப்பவர்கள் ஆதலால் அவர்களின் கொடுப்பனவில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது.'[11]

மட்டக்களப்பில் உள்ள டச்சு மக்கள் பிரத்தியேகமாக டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் உத்தியோகத்தர்களாக இருந்த னர். அவர்கள் கோட்டையின் உள்ளே தங்கியிருந்தனர்.[12] இந் தக் குடியிருப்பு புளியந்தீவில் ஒரு முனையில் இருந்தது. கோட்டையில் நான்கு கொத்தளங்கள் ஒவ்வொன்றும் எட்டுப் பீரங்கிகளுடன் அமைந்திருந்தது. இரண்டு பக்கமும் வாவியா லும் மற்ற இரு பக்கமும் செயற்கையாக தோண்டப்பட்ட அக ழியாலும் கோட்டை பாதுகாக்கப்பட்டிருந்தது. விசாலமான வில்வளைவு கொண்ட நுழைவாயில் சிறிய நாற்சதுர முற்றத் திற்கு இட்டுச் சென்றது. அதில் ஒரு தேவாலயமும் இருந்தது. இப்போது அதன் தடயங்கள் ஏதும் இல்லை. அதற்கு பக்கத் தில் வெடிமருந்து களஞ்சியம் உள்ளது. கோட்டையில் துருப் பினர்களும் கொமாண்டரும் தங்கியிருந்தனர். அவர்கள் திரு கோணமலைக்கு மாற்றப்பட்டதால் அங்கிருந்த படைக்கலங் களில் பெருமளவானவை இடமாற்றப்பட்டுவிட்டன.

இங்கே ஒரு கதை சொல்லப்படுகிறது. அதன் உண்மை பொய் எனக்கு தெரியாது. பதிய டச்சு ஆளுநர் ஒருவர் பதவி யேற்கும் போது மட்டக்களப்பில் இருக்கும் கொமாண்டரை நீக்கிவிட்டு தன்னோடு வந்திருக்கும் தகுதியான ஒருவரை கொமாண்டராக நியமிப்பது வழக்கம். அந்த கொமாண்டர் உல்லாசமான இளம் பெண் ஒருவரை திருமணம் செய்திருந் தான். அவள் அழகிய தோற்றம் கொண்ட வான் பெற்றிசர் என் னும் லெஃப்ரினன்ற் உடன் காதல் கொண்டாள். அவள் அன்றி ரவு அவனை சந்திக்க வருவதாக காதல் கடிதம் எழுதி அறி வித்துவிட்டு அவனை சந்திக்க சென்றாள். அவர்கள் இருவ ரும் சந்தித்து இனிமையாக இருக்கும் போது அவளுடைய கணவன் அதைக் கண்டான். அடக்க முடியாத கோபத்துக்கு உள்ளான அவன் தனது உடை வாளை உருவி இருவரையும் வெட்டி ஆற்றில் தள்ளிவிட்டான்.[13]

இக்காலத்தில் மட்டக்களப்பு ஒரு சலிப்பூட்டும் இடமாக இருந் தது. இந்த சலிப்பிலிருந்து மீள டச்சுக்காரர்களுக்கு வேறு மார்க்கம் ஒன்றும் இல்லாமல் இருந்தது. அங்கிருந்த டச்சுக் காரர்களின் எண்ணிக்கையே முப்பது பேருக்கு மேல் இல்லை. பெண்களின் தொகையே விரல்விட்டு எண்ணக்கூடி யது. ஜாக்கேப் பேர்னார்ட் கூட, நான் அறிந்த வரையில் திரும ணம் செய்யாதவராகவே இருந்தார். எங்கள் முன்னோர்கள் விளையாட்டுக்கு முன்னுரிமை அளித்ததாக தெரியவில்லை. மட்டக்களப்பில் இருந்த மைதானத்தில் கிரிகெட்டோ உதை பந்தாட்டமோ ரென்னிஸோ பெரிதாக நடக்கவில்லை. வெளி உலகத்தின் செய்திகள் மிக மெதுவாகவே கசியும். அவர்கள் வேலை முடிந்தவுடன் ஒரு வீட்டில் கூடி ஆறு மாதத்துக்கு முன்னைய செய்திகளை விவாதித்த படி மது அருந்துவார் கள். வாவியில் படகு விடுதலும் மீன் பிடித்தலும் அவர்களின் விருப்பமான பொழுதுபோக்கு. சில வேளைகளில் டச்பா ருக்கு வேட்டையாட செல்வர்.

பழைய கோட்டையின் விபரங்களையும் அக்காலத்தில் வாழ்ந்த டச்சுக்காரர்களின் வாழ்க்கை சித்திரங்களையும் தந் தமைக்கு ஒரு பழைய எழுத்தாளருக்கு நான் கடமைப்பட்டுள் ளேன். அவரின் சித்தரிப்பு வருமாறு: 'வைகறை வெளிச்சம் தெரிந்தவுடன் டச்சுக்காரர் எழுந்துவிடுவார்கள்.(பொதுவாக அவர்கள் அதிகாலையில் எழுந்துவிடும் பழக்கம் உள்ளவர் கள்) காலையில் வைக்கப்படும் வேட்டு மீதிப் படுத்திருப்பவர் களை எழுப்பிவிடும். கொமாண்டரும் துருப்பினரும் அணிந டைக்கு தயாராவார்கள். அவர்கள் மைதானத்தில் திரும்பித் திரும்பி நடக்கும் போது காலை சூரிய ஒளியில் அவர்களின் துவக்குகள் பளபளக்கும். அவர்களின் அணிநடை முடிந்தவு டன் தமது சுக்கான்களை நிரப்பிக் கொள்வார். பின்னர் முட்டை, பால், பன்றி இறைச்சி ஆகியவை அடங்கிய காலை டச்சு உணவை ஒரு கை பார்ப்பதற்கு முன்னர் 'ஸ்நப்' எனப்ப டும் ஹேலண்டு சாராயத்தால் தமது கிளாஸ்களை நிரப்பிக் கொள்வார்கள். பின்னர் சுக்கான் வெறுமையாகும் வரை புகைப்பர். பின்னர் பாசறையில் இருக்கும் துருப்பினரின் மனைவிகள் பற்றிய வம்புக்கதைகளை நாள் பூராவும் பேசு வர். வேலை இல்லாத போது இந்த துருப்பினர் இருவராக சேர்ந்து பஜார் பக்கம் கறுப்பு இளம் பெண்களை இச்சை யோடு பார்ப்பர். அல்லது தெருவோர மூலையில் இருக்கும் அமைதியான சோம்பேறித்தனமான இந்துக்களிடம் பல டொலர்களை கொடுத்து தமது இயற்கை தேவைகளை பூர்த்தி செய்ய வழி காணுவர். பொதுவாக டச்சுத் துருப்புகள் அமைதியானவர்கள். அவர்களின் இனக்கூறுகள் இங்கு வாழும் சுதேசிகளிடம் காணக்கிடைக்கிறது.[14]

சமூகத்தின் சமயத் தேவைகளை அங்கிருக்கும் இரு தேவால யங்கள் தீர்த்து வைத்தன. அங்கே கூடுகிறவர்களின் தொகை 250 ஆகும். அவர்களில் பெரும்பான்மையினர் சுதேசிகள். அவர்களில் ஐந்தில் நான்கு தொகையினர் பெயரளவு கிறித்த வர்கள். ஏற்கெனவே கோட்டைக்குள் இருப்பதாக குறிப்பிடப் பட்ட தேவாலயம் அவற்றுள் ஒன்று. மற்றது கம்பெனியின் தோட்டத்தில் உள்ளது. இது சுதேசிகளுக்காக கட்டப்பட்ட தால் மலபார் சேர்ச் என்று அழைக்கப்பட்டது. 1784-லும் கட்டு மான நிலையில் இருந்த இந்த தேவாலயம் பொருத்தமான சூழலில் அமையவில்லை என அறிந்த பேர்னாட் கொமாண் டர் காஹெலிடம் ஒரு துண்டு நிலத்தை தனது சொந்த பணத் தில் வாங்கி தேவாலயத்தை கட்டி மக்கள் தேவைக்கு விட் டார். அவர் மேலும் மதகுரு தங்கி இருக்கவும் ஒரு வீட்டையும் கட்டிக்கொடுத்தார். மதகுரு இல்லாதவிடத்து கம்பெனியின் சிவில் சேவை அதிகாரி அந்த வீட்டில் தங்கிக் கொள்ளலாம் என்ற நிபந்தனை கொண்ட அந்த உறுதி மட்டக்களப்பு செய லகத்தில் பாதுகாக்கப்படுகிறது. கோட்டையில் உள்ள தேவா லயத்தில் அது சார்ந்து கல்லில் எழுதப்பட்ட பின்வரும் வாச கங்களை தவிர மற்றவை எல்லாம் அழிந்து போய்விட்டன:

DEZE KERK IS GESTIGHT
DEN 13 FEB. A0. 1740
WAAR VAN DEN EERSTEN
STEEN IS GELEYT DOOR
MEJUFFW MA . M. DE MOOR
HUYSV. VANT OPPERHT
DE E. MR. RD. BUYK

கோட்டைக்கு வெளியில் இருந்த தேவாலயம் பூரணமாக அழிந்துவிட்டபடியால் அது இருந்த இடத்தை என்னால் அடையாளம் காண முடியவில்லை. மட்டக்களப்பில் டச்சு மத

குருக்கள் யாரும் ஒழுங்காக நிலை கொண்டிருக்கவில்லை. ஒரு கட்டத்தில் திருகோணமலையில் இருந்த மதகுருவை வந்து போவதற்குரிய கொடுப்பனவுகளை கொடுத்து மட்டக்களப்புக்கு வரவழைத்து காரியமாற்றினர். காலகதியில் இப்பதவி மட்டக்களப்பில் இல்லாமல் செய்யப்பட்டது. ஆயினும் அக்கடமைகளை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி என்னும் இடங்களிலிருந்து இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு தரம் வருகை தரும் மதகுருக்களை கொண்டு தேவாலங்களையும் பாடசாலைகளையும் கண்காணித்தனர். கடைசியாக அவ்வாறான வருகை இடம்பெற்றது 1787-ம் ஆண்டிலாகும். பல வருட இடைவெளிக்கு பின் பிரதிநிதிகள் கொழும்புக்கு சென்றனர். தலைமைச் செயலகத்தில் இருந்த அதிகாரிகள் மதகுருக்கள்; விரைவில் வருவார்கள் என்று கூறி வந்தனர். யாரும் வரவில்லை. கடைசியாக வண. ஹெஃப்மான் திருகோணமலைக்கு வந்தார். ஆயினும் அவர் சுகவீனமடைந்ததால் திருகோணமலையை விட்டு வேறு எங்கும் செல்லவில்லை. பேர்னார்ட் இந்த தேவ ஊழியத்தின் மகிமையை நன்கு உணர்ந்திருந்தார். அவர் தனது அறிவுறுத்தல்கள் அடங்கிய நினைவுக் குறிப்பில் மட்டக்களப்பில் குருமாரை ஒரிரு மாதங்கள் தங்க வைத்து தேவாலயங்களை நிர்வகிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார். நிரந்தர மத குரு இல்லாதவிடத்து சிறிய கொடுப்பனவில் லேய் ரீடராலும் பாடசாலை ஆசிரியர்களாலும் இது கண்காணிக்கப்படலாம் என்று அவர் கருத்துரைத்திருந்தார்.

சீர்திருத்த கிறித்தவம் தொடர்பான விடயங்கள் திருப்தியில்லாமல் போய்க் கொண்டிருக்கும் போதில் மட்டக்களப்பில் றோமன் கத்தோலிக்கம் உறுதியாக காலூன்றி முன்னேறிக் கொண்டிருந்தது. இது பற்றி பேர்னாட் கூறும் போது: 'அதிகம் ஆட்களை திரட்டி பெரும் ஊக்கத்துடன் நன்கு அறிவுறுத்தப்பட்டவர்களாகவும் புரோடஸ்தாந்துகளை விடவும் (கறுப்பு மக்கள் தொடர்பில்) அவர்களின் தொகை நாளும் அதிகரிக்கிறது. இது அவர்களின் மிஷனறிகளின் (அஞ்ஞானிகளோடு தொடர்ச்சியாக உரையாடுவதால்) தொடர்ச்சியான ஊடாட்டத்தால் சாத்தியமாகிறது. இது கம்பெனிக்கும் நன்மையாக அமைந்துள்ளது.'[15] இந்த அபிப்பிராயம் விரிந்த மனம் கொண்ட ஒருவரிடமிருந்து வரக்கூடியது. டச்சுக்காரர்களில் மதவெறியர்களாக இருப்பவரிடமிருந்து இந்த அபிப்பிராயம் வராது. மத வளர்ச்சிக்கு திரட்டப்பட்ட நிதியை புரோடஸ்தாந்து அல்லாத வேறு சமயப் பிரிவுகளுக்கும் பயன்படுத்த பேர்னாட் இசைந்தது மத விவகாரங்களில் பேர்னார்ட்டின் விரிந்த மனப்பான்மைக்கு சான்றாக அமைகிறது.

ஆளுநரால் தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை பேர்னாட்டின் செவ்வனே நிறைவேற்றினார் என்பதை யாவரும் ஒப்புக் கொண்டனர். சேர் ஹென்றி வேர்ட்டு, 1850-ல் கிழக்கு மாகாணத்தில் அரசாங்க அதிபராக பதவி வகித்த ஜே.ஆர். பேர்ச்சு போன்றவர்கள் பேர்னாட்டை சிறந்த குறிக்கோளும் திறமையும் உள்ளவர் என்றும் அதி சிறந்த வருமான வரி அதிகாரி என்றும் புகழ்ந்துள்ளனர். அவர் தனது பின்னவர்களுக்கு 1794 செப்ரெம்பர் 27-ம் திகதி எழுதிய நினைவுக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'பத்து வருடங்கள் இந்த அலுவலகத்தில் பணியாற்றி ஒய்வு பெற்றுள்ள நான் பொது மக்களுக்கு நன்மை செய்ய என்ன திட்டங்களையும் உபாயங்களையும் மேற்கொள்ளலாம் என்பதை சொல்ல உரிமையுடையவனாகிறேன். நிர்வாகம் மூலமாக இந்த மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள வறுமையை நீக்கி செழிப்பை கொண்டுவரும் முயற்சிகள் எனக்கு மகிழ்ச்சியை தந்திருக்கின்றன. இதில் சுதேசிகளதும் கம்பெனி ஆட்களதும் ஈடுபாடுகள் இணைந்துள்ளதால் இந்த சாதகமான சூழ்நிலை நிர்வாகம் நிலைத்திருக்கும் மட்டும் அல்லாது நிகழ் காலத்தின் தொடக்கமாகவும் அமையும்.'

'பல ஆண்டுகள் வாழ்ந்த இடத்தை உண்மையாக நேசிப்பது என்னவென்றால் இந்த இடத்தின் தாழ்வுகள் பற்றி விசாரித்து அறிந்து அவற்றை நீக்க எல்லா வகையிலும் பாடுவதாகும். இந்த நினைவுக் குறிப்புகளை முடிப்பதற்கு முன்னர் இதன் செழிப்புக்கு நீங்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கம்பெனியைவிட இந்த மாவட்டத்திற்கு நலன்கள் பல கிட்ட வேண்டும்'

பேனார்ட்டுக்கு பின்னர் தலைமை அதிகாரியாக மட்டக்களப்புக்கு வந்தவர் ஜோகன்னஸ் ஃபிலிப்பஸ் வம்பெக் என்பவராவர். அவர் தனது பதவியை 1796-ல் துறக்க நேரிட்டது. அதாவது அந்த ஆண்டு மட்டக்களப்பு உட்பட இலங்கையில் இருந்த டச்சு உடைமைகள் யாவும் பிரித்தானியாவுக்கு கைமாற நேரிட்டது. இவ்வாறு இலங்கையில் டச்சு ஆட்சி முடிய, பிரித்தானிய ஆட்சி உதயமாகியது.


உசாத்துணை:

- Tamil for paddy
- This was not insisted on after 1769
- This word is probably derived from the Tamil "Uliyam"corrupted into Oelium, having originally meant the obligation of a slave to his master , it came in Dutch times to mean a compulsory services of a manial character which certain inferior classes were required to render . Report on the Dutch Records by R. G. Anthonisz, p. 60
- Panama
- An officer authorized to attest public documents, Report on the Dutch Records by R.G. Anthonisz
- Kangany, Tamil
- Accountant, Tamil
- The Dutch plural form of Pingoஞீ a pliant piece of wood about 5 ft. in length carried on the shoulders from from the two ends of which burthens to be carried are supported by ropes. The term is generally used to signify the whole thing, poles, burthens and all. Codrington`s Glossary of Native Words.
- A Dutch colloquialism for paresse pingoes presented at the annual "paresse" or appearance
- Burnand`s Memoir
- Idid
- See Frontispiece
- Ceylon Quarterly Magazine, September,1871
- Ceylon Quarterly Magazine , 1871, p147
- A lecture delivered by Mr. R.L. Brohier at the Union Hall on 7 November, 1950




thiruvenysangamam@thaiveedu.com



# பாரதி சொல்லும் சிதம்பர ரகசியம்

– கிருங்கை சேதுபதி

ஓவியம்: ஜீவா

ஓசைகளில் இருந்து உருத்திரட்டி, வாசகம் எழுதத் தொடங்குகிற வழக்கம் பாரதிக்கு உண்டு. அதனை, 'கோபந்நா' கதையில் கண்டோம். அதன் முடிவில், கருடன் திருப்பதி மலையிலும், கிளி தென்னை மரத்திலும் பறக்கிற காட்சியை, மாற்றுத் திறனாளியாகிய பிச்சைக்காரர் சொல்லிச் செல்கிறார். இவ்விரண்டும் பறவைகள். இவற்றுக்கு இடையில் 'சிதம்பரத்திலே கொடி பறக்குது என்றும் சொல்கிறார்.

பறவைகள் பறப்பதற்கும் கொடி பறப்பதற்கும் வேறுபாடு உண்டு. பறவைகள் தன்னிச்சையாகப் பறக்கும் உயிரினங்கள். கொடியோ கயிற்றில் கட்டுண்டு கிடக்கும் துணி. உயிரற்ற அதற்கு உயிர்ப்புண்டாக்கிப் பறக்க வைப்பது காற்று.

இந்தக் கொடிக்குள் குறிப்புப் பொருள் உண்டு என்பதை விட, தனித்துவமான வரலாறும் இருக்கிறது.

இதனை அறியத் தில்லையாகிய சிதம்பரத்திற்குத்தான் செல்ல வேண்டும். அதுவும், காலத்தால் பின்னோக்கி. அது பொ.ஆ.பி.(கி.பி.) 1300-களில் நிகழ்ந்த அற்புதம்.

சிதம்பரம் திருக்கோயிலில் ஆனித் திருமஞ்சனவிழா தொடங்கவேண்டிய தருணம். அதற்கு முன்னதாகக் கொடியேற்றம் நிகழவேண்டும். உரிய சடங்குகளை இயற்றி, கொடியேற்றியபோது, அது ஏறாது நின்றது. தீட்சிதர்கள் திகைத்து நின்றபோது, வானில் இருந்து ஒலி எழுந்தது. 'உமாபதி வந்தால் கொடி ஏறும்' என்ற வாசகம் வந்தது.

உமாபதி சிவம், தில்லையாகிய சிதம்பரத்தில் வாழ்ந்த தீட்சிதர்களுள் ஒருவர். தம் மரபிலும் குறைந்த குலத்தவராகிய மறைஞான சம்பந்தரைத் தமது குருவாகக் கொண்டு, ஒழுகி வந்த காரணத்தால், அவர்கள் அவருக்குச் சாதி விலக்களித்தனர். பூசை புரியும் உரிமையையும் மறுத்து ஒதுக்கினர். அதனால், அவர் தில்லையை விடுத்து, அடுத்திருந்த கொற்றவன் குடியில் குடிலமைத்து வாழ்ந்து வந்தார். அன்று அவர்தம் பூசை முறை. அவர் இல்லாமல் வேறொருவரை அப்பணிக்காக நியமித்துக் கொடியேற்ற முயன்றபோதுதான் இறைவன் திருவருளால், கொடி ஏறாது நின்றது. 'உமாபதி வந்தால்தான் கொடியேறும்' என்ற கட்டளையும் பிறந்தது.

வேறுவழியின்றி, உமாபதி சிவாச்சாரியார் உரிய மரியாதையுடன் அழைத்துவரப்பெற்றார். வந்தவர், கொடிமரத்தின் முன்னின்று, இறையருளை எண்ணித் துதித்துப் பாடத் தொடங்கினார். கொடி தானாகவே ஏறிற்று. விழாவும் இனிது நடந்தேறிற்று.

அன்று முதல் அந்தக் கொடிக்கவி பாடியே கொடியேற்ற நிகழ்வு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
அக்கவிகள் இவைதாம்.

***'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று***
***ஒளிக்கும் எனினும் இருள்அடராது உள்ளுயிர்க்(கு) உயிராய்த்***
***தெளிக்கும் அறிவு திகழ்ந்(து) உளதேனும் திரிமலத்தே***
***குளிக்கும் உயிர் அருள் கூடும்படிக் கொடி கட்டி னனே' - 1***

***'பொருளாம் பொருள்ஏது போதேது கண்ணே***
***திருளாம் வெளியேது இரவே(து) - அருளாளா***
***நீபுரவா வையமெலா நீஅறியக் கட்டினேன்***
***கோபுர வாசற் கொடி' - 2***

***'வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்***
***தாக்கா(து) உணர்வரிய தன்மையனை - நோக்கிப்***
***பிறித்தறிவு தம்மில் பிறியாமை தானே***
***குறிக்கும்அருள் நல்கக் கொடி' - 3***

***'அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்து நாலெழுத்தும்***
***பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்***
***பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்***
***கூசாமற் காட்டக் கொடி' - 4***

சைவ சித்தாந்தத் தத்துவத்தின் நுண்பொருளை விளங்குவிக்கும் இப்பாடல்களின் தெளிபொருள் பின்வருமாறு.

'ஒளியாகிய ஞானத்துக்கும் இருளாகிய ஆணவத்துக்கும் இடம் ஒன்றுதான். அது உயிர் (ஆன்மா). இதில் ஒன்று மேலிடில் ஒன்று ஒளிந்து நிற்கும். அதாவது, ஞானம் மேலிடுகிற போது, ஆணவம் ஒளிந்து நிற்கும். ஆணவம் மேலிடுகிற போது ஞானம் ஒளிந்து நிற்கும். எனினும் இருளால் ஒளியை அடர்த்து எழ முடியாது. இறையருளால், ஞானம் மேலோங்கி நின்ற காலத்திலும், உயிரானது ஆணவமலச் சார்பினால், மும்மலங்களுக்குள்ளும் மூழ்கிக் கிடக்கின்றது. அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ள வலிமையற்றுக் கிடக்கும் உயிரான ஆன்மா அருள் கூடும்படிக்குத் தீட்சைக் கிரமங்களி

னாலே மலங்களைப் போக்க, இக்கொடியினைக் கட்டினேன்' என்கிறது முதற்பாடல்.

'பொருளிலே அழியாத மெய்ப்பொருள் ஏது? அப்பொருளின் கண் நின்றும் வெளிப்படுகின்ற ஒளியாகிய அருள் ஏது? அந்த ஒளியிலே காணும் கண் ஏது? அந்தக் கண்ணை மறைத்து நிற்கும் இருளாகிய வெளி ஏது? இரவுதான் ஏது? அருள் நிறைந்த பரம்பொருளே! நீ காக்கின்ற இந்த உலகம் முழுவதும் இவற்றை எல்லாம் அறியுமாறு உன்னையே சான்றாகக் கொண்டு, நின் கோபுர வாயிலில், இந்தக் கொடியினை ஏற்றினேன்' என்கிறது இரண்டாவது பாடல்.

'சொல்லாலும், சொல்லைவிட மிகுந்த விரைவுகொண்ட மனத்தாலும் ஒரு காலத்திலும் அடைவதற்கும், உணர்வதற்கும் அரிதாகிய தன்மை உடையவனை, அறிவுக்கும் அறிவாக விளங்குகின்ற இறைவனை அறிவதற்கான அருளை அவனே வழங்குமாறு வேண்டிக் கொடி கட்டினேன்' என்கிறது மூன்றாவது பாடல்.

'சிவாயநம' எனும் அஞ்செழுத்தும், 'ஓம் ஆம் ஔம் சிவாயநம' என்கிற எட்டெழுத்தும், 'ஓம் நமசிவாய' என்கிற ஆறெழுத்தும், 'ஓம் சிவாய' என்கிற நாலெழுத்தும் இப்படி உச்சரிக்கிற விதிப்படி உச்சரித்து. பிஞ்செழுத்தாகிய 'வ' கரமாகிய பராசக்தியையும், மேலைப் பெருவெழுத்தாகிய 'சி'கரமாகிய சிவத்தையும் தன்னுடைய நெஞ்சத்தில் அழுத்தமுறப் பதிவிக்க, கொடியினை நாட்டினேன்' என்கிறது நான்காவது பாடல்.

இந்தக் கொடிக்கவியும், கொடியேற்ற மரபும் குறிக்கின்ற பொருள்தான் யாது என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

**பொ**துவாகக் குடியாளும் மன்னவனுக்குக் கொடி உண்டு. அதன் பொருள் தன் நிழலில் வாழும் எவ்வுயிர்க்கும் இடர் வாராமல் காக்கும் கடமை அவனுக்கு உண்டு என்பதை உணர்த்துவதாகும். அவனது ஆட்சியும் அதிகாரமும் செலுத்தும் இடத்தைக் கொடிகட்டி ஆளுகிற பகுதியாக அறிவோர் அறிவர்.

அதுபோல், தண்ணருளால் மன்னுயிர் அனைத்தும் காக்கும் இறைவனின் ஆளுமையை அறிவிப்பது திருக்கோயிலில் ஏற்றப்படும் திருக்கொடி. தான் உயர்ந்து நிற்பதுபோல், தரிசிக்க வரும் ஆன்மாக்களின் வாழ்வினையும் உயரச் செய்வது கொடிமரத்தின் கடப்பாடாகும்.

'கொடிமரங்கள் பெரும்பாலும் சந்தனம், தேவதாரு, வில்வம் மற்றும் மகிழம் போன்ற மரங்களினாலேயே செய்யப்படுகின்றது. கொடிமரத்தின் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமையப்பெற்றிருக்கும்.

இதன் அடிப்பாகம், சதுர வடிவத்தில் இருக்கும். இது படைத்தல் தொழிலைக் குறிக்கும் 'பிரம்மபாகம்' என்றும், அதற்கு மேலே உள்ள எண்கோண வடிவமானது காத்தல் தொழிலைக் குறிக்கும் 'விஷ்ணுபாகம்' என்றும், அதற்கும் மேலாக உருண்டையான நீண்ட பாகம், அழித்தல் தொழிலைக் குறிக்கும் 'ருத்திரபாகம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

கொடிமரத்தின் பீடம், 'புத்திரபீடம்'. பக்தர்களின் ஆன்மாவைப் பாசக்கயிறு சுற்றியிருப்பதை நினைவூட்டும் வகையில் கொடிமரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். தரிசிக்க வருபவர்கள் இறைவனிடம் தங்கள் ஆன்மாவின் மீதான பாசக்கட்டு அறுமாறு மனதைப் பலியிட்டு இறைவனிடத்தில் தஞ்சம் புக வேண்டும். மேலும், கொடிமரத்தில் 32 வகையான வளையங்கள் சுற்றப்பட்டிருக்கும். இது நம் உடலில் உள்ள முதுகுத்தண்டு வடத்தின் 32 எலும்பு வளையங்களைக் குறிக்கிறது.

ஆலயங்களில் கொடிமரம், கருவறைக்கு நேராக நடப்பட்டிருக்கும். மேலும், கருவறையில் இருந்தும், ராஜகோபுரத்தில் இருந்தும் கொடிமரத்தை எவ்வளவு தூரத்தில் அமைக்க



வேண்டும் என்பதற்கும் விதிமுறைகள் உள்ளன. கொடிமரங்களை மழை, வெயில் போன்ற இயற்கை மாற்றங்களில் இருந்து காப்பதற்காகப் பித்தளை, செம்பு போன்ற உலோகங்களாலான கவசங்களை அணிவிப்பது வழக்கம். சில ஆலயங்களில் தங்கக் கவசங்கள் வரை அணிவிக்கப்படுகின்றன.

திருவிழா நாட்களின் முதல் நாளன்று கொடிமரத்தில் கொடியேற்றப்படுகின்றது. இந்த நிகழ்வு, 'துவஜாரோகணம்' என்று அழைக்கப்படுகிறது. இதன் நோக்கம், கோயிலுக்கு வந்து இறைவனைத் தரிசிக்க முடியாதவர்களுக்கு இறைவனே வீதியுலாவாக வந்து தரிசனம் தந்து அருள்பாலிக்க இருப்பதை அறிவிப்பதற்குத்தான். அதேபோல திருவிழாக்கள் நிறைவுற்றதும், கொடிகள் இறக்கப்படுகின்றன. இது 'துவஜாவரோகணம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

கொடிமரத்தைச் சூட்சும லிங்கமாக எண்ணி வணங்க வேண்டும். இறைவனின் மூல மந்திரத்தை உச்சரித்தபடியே மூன்று முறை வலம் வந்து, ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

சிவாலயத்தில் நந்தியும், பெருமாள் கோயிலில் கருடனும், அம்பாள் வீற்றிருக்கும் ஆலயங்களில் சிம்மமும், முருகர்

ஆலயத்தில் மயிலும், விநாயகர் ஆலயங்களில் மூஷிகமும், துர்க்கை ஆலயத்தில் சிம்மமும், கொடிமரத்தின் மேற்புறத்தில் கொடிச் சின்னங்களாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

மின்னூட்டமடைந்த பிரபஞ்சக் கதிர்கள், கருவறை விமானத்தின் மீதுள்ள கலசங்களால் ஈர்க்கப்படுகின்றது. பின்னர் இந்தக் கதிர்கள் மூலவரின் மீது பரவுகின்றன. இந்தப் பிரபஞ்ச சக்தியை நேரடியாக உணரும் தன்மை பக்தர்களுக்கு இருப்பதில்லை. கொடிமரமே இந்தச் சக்தியை ஈர்த்து பக்தர்களின் உடல் ஏற்கும்படியாகச் செய்கிறது. கொடிமரம் இல்லை எனில், இந்தச் சக்தியை நேரடியாகப் பக்தர்கள் ஏற்றுக்கொள்வது கடினம். இது ஆலயங்களில் கொடிமரங்கள் அமையப் பெற்றிருப்பதற்கான அறிவியல் காரணி!' என்கிறார் இரா. செந்தில் குமார். (https://www.vikatan.com/spiritual/temples/85636-benefits-of-religious-flagstaffs-in-the-temples)

கொடி மரம்-இறைவன், கொடிக் கயிறு-சக்தி, கொடித் துணி-ஆன்மா, கொடி ஏற்ற பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு - பாசம், கொடி ஏற்றம் என்பது, உயிர்களையும், அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது. அதாவது தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால், கொடித் துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் இறைவன் திருவடியை அடைதல் என்ற தத்துவத்தைக் கொடி ஏற்றம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

பொதுவாக, சைவர்களுக்குக் கோயில் என்பது சிதம்பர நடராசர் கோயிலையே குறிப்பதாகும். கோயிலே, குறியீட்டுப் பொருள் கொண்டு அமைவதுதானே. அதில் நிகழ்வுறும் அனைத்துச் சடங்குகளும் குறியீட்டு நிலையில் பொருள் உணர்த்தி, உயிர்களை உய்விப்பதாக அமைவதுதானே.

அந்த வகையில், சிதம்பரத்தில் பறக்கும் கொடிக்கு நாம் மேல் விளக்கம் காண இயலும். இந்த நுட்பப் பொருள்களை யெல்லாம் சொல்லாமல் சொல்லி, 'சிதம்பரத்திலே கொடி பறக்குது' என்கிறார் 'கோபந்நா' - கதையின் நாயகன்.

•

கொடி பறத்தலுக்கு இந்த விளக்கம் எனில், கோயிலுக்குத் தனி விளக்கமும் வேண்டும் அல்லவா? அதைத்தான் பாரதியின், 'சிதம்பரம்' சொற்சித்திரம் விளக்குகின்றது. அதுவும் 'கோபந்நா' - சித்திரம் போலவே ஒலிகளில் இருந்து உயிர்த்தெழுகின்றது. இதிலும் ஒரு பிச்சைக்காரர் வருகிறார். காரிய நோக்கமுடன் வல்லூறு நாய்க்கர் வருகிறார். கூடவே குள்ளச்சாமி வந்து வழக்கம்போல் விளக்கமும் கூறுகிறார். அத்துடன் குள்ளச்சாமி பற்றிய குறிப்பினையும் பாரதி எழுதுகிறார். 'சிதம்பரம்' சித்திரம் பின்வருமாறு தொடங்குகின்றது.

•

காலை பத்து மணி இருக்கும். நான் ஸ்நானம் செய்து, பூஜை முடித்து, பழம் தின்று, பால் குடித்து, வெற்றிலை போட்டு, மேனிலத்திற்கு வந்து நாற்காலியின் மேல் உட்கார்ந்து கொண்டு இன்ன காரியம் செய்வதென்று தெரியாமல் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஜன்னலுக்கு எதிரே வானம் தெரிகிறது. இளவெயில் அடிக்கிறது. வெயிற்பட்ட மேகம் பகற் சந்திரன் நிறங்கொண்டு முதலையைப் போலும் ஏரிக்கரையைப் போலும் நானாவிதமாகப் படுத்துக்கிடக்கிறது. எதிர்வீட்டில் குடி இல்லை. அதற்குப் பக்கத்து வீட்டிலிருந்து சங்கீத ஓசை வருகின்றது. வீதியிலிருந்து குழந்தைகளின் சப்தம் கேட்கிறது. வண்டிச் சப்தம், பக்கத்து வீட்டுவாசலில் விறகு பிளக்கிற சப்தம். நான்கு புறத்திலும் காக்கைகளின் குரல், இடையிடையே குயில், கிளி, புறாக்களின் ஓசை, வாசலிலே காவடிகொண்டு போகும் மணியோசை, தொலையிலிருந்து வரும் கோயிற் சங்கின் நாதம், தெருவிலே சேவலின் கொக்கரிப்பு, இடையிடையே தெருவில் போகும் ஸ்திரிகளின் பேச்சொலி, அண்டை வீடுகளில் குழந்தை அழும் சப்தம், 'நாராயணா, கோபாலா!' என்று ஒரு பிச்சைக்காரரின் சப்தம், நாய் குரைக்கும் சப்தம், கதவுகள் அடைத்துத் திறக்கும் ஒலி, வீதியில் ஒருவன் 'ஹ்ரூகும்' என்று தொண்டையை லேசாக்கி இருமிக் கொள்ளும் சப்தம், தொலைவிலே காய்கறி விற்பவன் சப்தம், 'அரிசி, அரிசி' என்று அரிசி விற்றுக்கொண்டு போகிற ஒலி - இப்படிப் பலவிதமான ஒலிகள் ஒன்றன்பின் மற்றொன்றாக வந்து செவியில் படுகின்றன. இந்த ஒலிகளை யெல்லாம் பாட்டாக்கி இயற்கைத் தெய்வத்தின் மஹா மௌனத்தைச் சுருதியாக்கி என் மனம் அனுபவித்துக் கொண்டு இருந்தது.

•

'கோபந்நா' கதையில் வருவதுபோலவே, இதிலும் ஓசைகள் உயிர்த்தெழுந்து பாரதியின் சிந்தையுள் புகுந்து பாடலாகக் காத்திருக்கின்றன. அதற்குள் கிருஷ்ணகான சபையின் செயலாளர் வல்லூறு நாய்க்கர் வந்து நிற்கிறார். கவிதை, உரைநடையாகிவிடுகிறது. பாரதியின் எழுதுகோல் செயல்படத் தொடங்குகிறது.

•

இப்படி இருக்கையில், என் முன்னே வேதபுரம் கிருஷ்ணகான சபையாரின் காரியதரிசியாகிய வல்லூறு நாய்க்கர் வந்து நின்றார். உட்காரும்படி சொன்னேன். உட்கார்ந்தார். 'விஷயமென்ன?' என்று கேட்டேன். அவர் சொல்லுகிறார்: 'அடுத்த செவ்வாய்க்கிழமை இரவு நமது சபையின் ஆதரவின்கீழ் நடைபெறும் இராமாயண உபந்நியாசக் கோவையில் இரண்டாவது பகுதியாகிய சீதா கல்யாணம் நடக்கிறது. முதல் கதையாகிய ஸ்ரீ ராமஜனனம் சென்ற புதன்கிழமை நடந்தது. தஞ்சாவூரிலிருந்து மிகவும் நன்றாகப் பாடக்கூடிய பின்பாட்டுக்காரர் வந்திருக்கிறார். இவருக்குச் சன்னமான சாரீரம்; ஆனால் பெண் குரல் அன்று. நன்றாகப் பாடுவார். ஒருதரம் வந்து கேட்டால் உங்களுக்கே தெரியும். மேலும் இந்த இராமாயணக் கதையில் வசூலாகும் பணத்தில் ஒரு சிறு பகுதி நமது அரசாங்கத்தாரின் சண்டைச் செலவிற்கு உதவி செய்வதாக அதிகாரிகளிடம் வாக்குக் கொடுத்திருக்கிறோம். நான்கு ரசிகர் வந்து கேட்டால்தானே பாகவதத்திற்குச் சந்தோஷம் ஏற்படும். ரசிகராக இருப்பவர் வந்து கேட்டால் மற்ற ஜனங்களும் வருவார்கள். நம் சபைக்கு இலாபம் உண்டு. பாகவதர் இராமாயணப் பிரசங்கத்தில் தேர்ச்சியுடையவர். மிருதங்கம் அடிக்கிற பிராமணப் பிள்ளை பதினைந்து வயதுடையவன்; ஆனால் மிகவும் நன்றாக அடிக்கிறான். தாங்கள் அவசியம் வரவேண்டும்' என்றார்.

அதற்கு நான், 'சீதா கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம், லக்ஷ்மண சக்தி, பட்டாபிஷேகம் என்கிற நான்கு கதைக்கும் நான் வரலாமென்று உத்தேசிக்கிறேன்; நிச்சயமாக வருகிறேன். எனக்கு இரவில் தூக்கம் விழிப்பது கொஞ்சம் சிரமம், ஆயினும் தங்கள் பொருட்டாகவும், தங்கள் சபையின் தலைவராகிய ஓங்காரச் செட்டியார் பொருட்டாகவும், அந்தச் சிரமத்தைப்

பார்க்காமல் வருவேன்' என்றேன். 'இராமாயணப் பிரசங்கத்தில் வரும் தொகையிலே ராஜாங்கத்தாரின் சண்டைச் செலவிற்காக உதவி செய்யப்படும் என்ற விஷயத்தைத் தனியாகக் காட்டி ஒரு விசேஷ விளம்பரம் போடப் போகிறோம்; அதில் என்ன மாதிரி வக்கணை எழுத வேண்டும் என்பதைத் தாங்கள் தெரிவிக்க வேண்டும்' என்று வல்லூறு நாயக்கர் பிரார்த்தித்துக் கொண்டார். நான் வக்கணை சொன்னேன். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் குள்ளச்சாமி வந்து சேர்ந்தார்.

●

இதுவரையில் இல்லாத புதுவிஷயம் ஒன்றை இனி, பாரதி எழுதப்போகிறார். அது குள்ளச்சாமி குறித்த அறிமுகத்தோடு பின்வருமாறு தொடங்குகிறது.

●

குள்ளச்சாமி யாரென்பதை நான் முன்னொரு முறை சுதேச மித்திரன் பத்திரிகையில் எழுதிய, 'வண்ணான் கதை'-யில் சொல்லியிருக்கிறேன். இவர் ஒரு பரமஹம்ஸர். ஜடபரதரைப் போல், யாதொரு தொழிலும் இல்லாமல் முழங்காலுக்கு மேல் அழுக்குத் துணி கட்டிக் கொண்டு, போட்ட இடத்தில் சோறு தின்று கொண்டு, வெயில் மழை பாராமல் தெருவிலே சுற்றிக் கொண்டிருக்கிறார். இவருடைய ஒழுக்க விநோதங்களை மேற்படி பாரதி அறுபத்தாறு 30, 31, பாடல்களையும் காண்க. 'வண்ணான் கதை'-யிலே காண்க.

●

பாரதியார் 'பாரதி அறுபத்தாறு - கவிதையிலும், வண்ணான் கதையிலும் சொல்லியது போலவும், அதில் சொல்லாத ஒன்றைப் பற்றியும் இனிச் சொல்லப்போகிறார் என்பதை அறிவித்தற் பொருட்டு, இந்த முன்னுரையினை அவர் எழுதியிருக்கிறார். இனித்தான் குள்ளச்சாமி விளக்கப்போகும் பரிபாஷை விளக்கத்தைச் சொல்லப் போகிறார்.

●

இவர் வந்து 'சோறு போடு' என்று கேட்டார். தாம் திருவமுது செய்யுமுன்பாக' ஒரு பிடி அன்னம் என் கையில் நைவேத்தியமாகக் கொடுத்தார். நான் அதை வாங்கியுண்டேன்.

அப்பொழுது சாமியார் போஜனம் முடித்த பிறகு, என்னுடன் மேல் மெத்தைக்கு வந்தார்.

'கண்ணை மூடிக்கொள்' என்றார்.

கண்ணை மூடிக்கொண்டேன்.

நெற்றியில் விபூதியிட்டார். 'விழித்துப் பார்' என்றார்.

கண்ணை விழித்தேன்.

நேர்த்தியான தென்றல் காற்று வீசுகிறது. சூரியனுடைய ஒளி தேனைப் போல மாடமெங்கும் பாய்கின்றது. பலகணி வழியாக இரண்டு சிட்டுக்குருவிகள் வந்து கண்முன்னே பறந்து விளையாடுகின்றன.

●

இது இயல்பான இயற்கைக் காட்சிதான். இவற்றுக்குள் ஏதோவொரு நுண்பொருள் காட்டவிழைகிறார் குள்ளச்சாமி என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார் பாரதி. அதற்கு அடையாளமாய்த் தான் குள்ளச்சாமி சிரிக்கிறார் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

●

குள்ளச்சாமியார் சிரிக்கிறார். கடைக்கண்ணால் தளத்தைக் காட்டினார்.

கீழே குனிந்து பார்த்தேன்.

ஒரு சிறிய ஓலைத்துண்டு கிடந்தது.

அதை நான் எடுக்கப் போனேன்.

அதற்குள்ளே அந்தக் குள்ளச்சாமி சிரித்துக் கொண்டு வெளியே ஓடிப்போனார்.

அவரைத் திரும்பவும் கூப்பிட்டால் பயனில்லை என்பது எனக்குத் தெரியும். அவர் இஷ்டமானபோது வருவார்; இஷ்டமானபோது ஓடிப்போவார். சிறு குழந்தை போன்றவர். மனுஷ்ய விதிகளுக்குக் கட்டுப்பட்டவரில்லை. ஆகவே நான் அவரைக் கூப்பிடாமலே கீழே கிடந்த ஓலையை எடுத்து வாசித்துப் பார்த்தேன்.

- 'எப்போதும் வானத்திலே சுற்றும் பருந்துபோல் போக விஷயங்களினால் கட்டுப்படாமல், பரமாத்மாவின் ஞானக் கதிரை விழித்து நோக்குதலே, விடுதலை. அதுதான் சிதம்பரம். மகனே! சிதம்பரத்துக்குப் போ.
- சிதம்பரத்தில் நடராஜருடன் சிவகாம சக்தி பக்தருக்கு வரதானம் கொடுக்கிறார். போய் வரம் வாங்கு.
- சிதம்பரமே ஸ்ரீரங்கம்; அதுவே பழனிமலை. எல்லாப் புண்ணிய ஷேத்திரங்களும் ஜீவன் முக்திச் சின்னங்கள் என்று தெரிந்துகொள். உனக்கு ஷேமமும், நீண்ட வயதும், ஜீவன் முக்தியும் விளைக'

என்று எழுதியிருந்தது.

இந்த வசனங்கள் நமது புராதன வேத தர்மத்திற்கு ஒத்திருக்கிறபடியால், அவற்றைச் சுதேசமித்திரன் பத்திரிகை மூலமாக வெளியிடலானேன்.

குறிப்பு:- 'சிதம்பரம் போகாமல் இருப்பேனோ? இந்த ஜன்மத்தை வீணாகக் கழிப்பேனோ?' என்று நந்தன் சரித்திரத்தில் கோபாலக்கிருஷ்ண பாரதியார் பாடியிருப்பதற்கும் இதுவே பொருள் என்று உணர்க.

●

இத்துடன் 'சிதம்பரம்' சித்திரம் முடிந்துவிடுகின்றது. எல்லாப் புண்ணியத் தலங்களும் இந்தச் சிதம்பரத்திற்குள் ஒன்றிவிடுகின்றன. ஓலையில் எழுதப்பட்ட சிதம்பர ரகசியம் சுதேசமித்திரனில் பாரதி எழுதியதன் மூலமாக, உலகறிந்த ரகசியமாகிவிடுகிறது. கூடவே நந்தனாரைக் கூட்டிக்கொண்டு கோபாலக்கிருஷ்ண பாரதியாரும் வருகிறார். சிதம்பரம் நோக்கிச் சிந்தை குவிகிறது. சிதம்பரத்தில் ஞானத்தின் கொடி பறக்கத் தொடங்கி விடுகிறது. பாரதி மெல்ல மெல்லச் சித்தராகிவிடுகிறார்.



sethupathi@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

21

தாய்வீடு மாத இதழில் கம்பனின் கருவூலம் திறந்து என்னும் தொடரில் நான் எழுதி வருகின்ற கட்டுரையில் சென்ற அக்டோபர் மாத இதழுடன் பால காண்டம் நிறைவு பெற்றுள்ளது. நவம்பர் மாத இதழிலிருந்து கம்பராமாயணத்தின் இரண்டாவது காண்டமாகிய அயோத்தியா காண்டத்தில் கம்பனின் கவியின்பத்தையும் அங்கே கூறப்படுகின்ற செய்திகளையும் கூறும் எனது கட்டுரைத் தொடர் தொடங்கப்பட்டு அதன் முதலாவது படலமாகிய மந்திரப் படலம் எடுத்து வரப்பட்டது. இவ்விதழில் அயோத்தியா காண்டத்தின் இரண்டாவது படலமாகிய மந்தரை சூழ்ச்சிப் படலத்தினுள்ளே சென்று அதன் சுவையை நுகர்ந்து பார்ப்போம். இராமாயணக் கதையின் பெரும் திருப்பு முனையாக அமைந்தது மந்தரை சூழ்ச்சிப் படலம். மந்தரை என்பவள் தயரதனின் இரண்டாவது மனைவி கைகேயியின் தோழியாவாள். மந்தரை என்பது மனதைக் கலக்குபவள் என்னும் காரணப் பொருள்படும் மந்தரா என்னும் வடசொல்லின் திரிபாகும்.

இராமனுக்கு மணிமுடி சூட்டுவதற்கு விரும்பிய தயரதன் தனது சோதிடர்களை அணுகி, முடி சூட்டுவதற்கு நல்ல நாள் கூறுமாறு கேட்க, நாளைய நாளே பொருத்தமான நல்ல நாள் என்று சோதிடர்கள் கூறுகிறார்கள். மகிழ்ச்சியுற்ற தயரதன் வசிட்ட முனிவனிடம் சென்று இராமனுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்வித்து அவனுக்கு வேண்டிய உறுதி மொழிகளைப் போதிக்குமாறு வேண்டுகிறான். வசிட்ட முனிவனும் இராமனிடம் சென்று உறுதி மொழிகளைப் போதிப்பதைக் கம்பர் 15 செய்யுள்களில் எடுத்துக் கூறுகின்றார். அவற்றுள் முதலில் வரும் ஐந்து செய்யுள்களும் அந்தணர்களை மிக உயர்ந்தவர்களாகக் கூறி, அவர்களுக்கு அவன் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுவனவாக இருக்கின்றன. அவற்றுள் ஒரு செய்யுள் இவ்வாறு வருகின்றது.

***கரிய மாலினும் கண்ணுத லானினும்***
***உரிய தாமரை மேலுறை வானினும்***
***விரியும் பூதமொ ரைந்தினும் மெய்யினும்***
***பெரியர் அந்தணர் பேணுதி யுள்ளத்தால்***

- கம்ப. அயோத்தி. 106

கரிய நிறத்தையுடைய திருமாலை விட, நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனை விட, தாமரை மலரில் உறைகின்ற பிரமதேவனை விட, பரந்து காணப்படுகின்ற ஐம்பூதங்களை விட, உண்மையை விட அந்தணர்கள் உயர்வானவர்கள். அவர்களை நீ நன்மனத்தோடு ஆதரிப்பாயாக என்பது இச்செய்யுளின் பொருள். தைவா தீநம் ஜகத் சர்வம், மந்த்ரா தீநம் துவைதம், தந்மந்த்ரம் ப்ராக்மணா தீநம், ப்ராக்மணா மம தேவதா என்று மகாபாரதத்தில் கிருட்டின பரமாத்மா உபதேசித்ததாகச் சொல்லப்படும் வடமொழிச் சுலோகத்தை ஒட்டியதாக இச்செய்யுள் அமைந்திருக்கிறது. உலகம் முழுவதும் தெய்வத்துக்குக் கட்டுப்பட்டது. அத்தெய்வம் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டது. அம்மந்திரம் பிராமணருக்குக் கட்டுப்பட்டது. அப்பிராமணர்கள் எமக்குக் கடவுளராவார் என்பது இதன் பொருளாகும். இதன் அடிப்படையில் கடவுள்களை விடவும் அந்தணர்கள் உயர்ந்தவர்கள் என்ற வைதீகக் கருத்தைக் கம்பரும் இங்கே வழிமொழிந்திருப்பதை அறியும்போது அவரது கவியாற்றலை வியந்து படிக்கும் என் போன்ற பலருக்கும் மனதில் ஒரு பெரும் நெருடல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதிருக்கிறது. கம்பரின் காலமாகிய 9-ம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் இவ்வாறான வைதீகக் கோட்பாடுகள் மிக ஆழமாக வேரூன்றி விட்டன என்பதைக் கம்பராமாயணத்தில் பல இடங்களிலும் சான்றாகக் காண முடிகிறது. வைதீகக் காப்பியத்தைப் பாட வந்ததால் கம்பருக்கும் அதனைத் தவிர்த்து விட்டுக் கடந்து போக முடியவில்லையோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

தயரதனின் வேண்டுகோளின்படி இராமனுக்கு உறுதிப் பொருள்களை உபதேசிக்கின்ற வசிட்ட முனிவன் வாயிலாக கம்பன் கூறும் அரசியல் அறநெறிக் கருத்துகளை எடுத்து வரும் பல செய்யுள்களுள் சிலவற்றை இங்கே பார்க்கலாம்.

***யாரொ டும்மனக் கோளில தென்றபின்***
***போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்***
***தாரொ டுங்கல் செய்யாதது தக்கபின்***
***வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ***

- கம்ப. அயோத்தி. 112

ஒருவனுக்கு எவரோடும் விரோதம் இல்லை என்ற பின் போர் அடங்கினாலும் அவனது புகழ் அடங்காது. அவனுடைய படை வலிமையும் கெடாது. இத்தகைய நன்மை உண்டான பின்பு அவனுடைய பகைவரும் வேரோடு கெட்டுப் போக வேண்டுமென விரும்ப வேண்டியதில்லை என்பது செய்யுளின் பொருள். எவரோடும் மனம் மாறுபாடு கொள்ளாது அன்பு பூண்டால் போர் உண்டாவதற்கே வழியில்லை. அதனால் புகழே ஓங்கும். பகைவரும் வேருடன் அழிந்து போக வேண்டுமென்று எண்ணுவதற்கும் இடமில்லை. இவ்வாறான கருத்துக

ளால், போரற்ற அமைதியான உலகத்தையே கம்பன் காண விழைந்தான் என்பதை இச்செய்யுள் நமக்கு உணர்த்துகிறது.

வசிட்ட முனிவன் வாயிலாகக் கம்பர் காட்டும் அரசியல் நெறியைக் கூறும் இன்னுமொரு செய்யுள்:

***உமைக்கு நாதற்கும் ஓங்குபுள் ஊர்திக்கும்***
***இமைப்பின் நாட்டமொ ரெட்டுடை யானுக்கும்***
***சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்***
***அமைச்சர் சொல்வழி யாற்றுதல் ஆற்றலே.***

- கம்ப. அயோத்தி. 114

உமையம்மையின் நாயகனாகிய சிவபெருமானுக்கும், உயர்ந்த கருட வாகனனாகிய திருமாலுக்கும், இமைத்தலில்லாத எட்டுக் கண்களையுடைய பிம்மாவுக்கும் உள்ள தோள்வலியை மன்னன் ஒருவன் பெற்றிருந்தாலும் அமைச்சர்கள் சொற்படியே காரியங்களை ஆற்றுவதே அவனுக்கு வலிமையைத் தருவதாகும் என்பது கம்பரின் அரசியல் நெறி. தமது உயிரையும் துச்சமாக எண்ணி மன்னனுக்கு வேண்டியபோது இடித்துரைக்கும் அமைச்சர்களுக்குரிய தகைமைகளை, தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர் என்று மந்திரப் படலத்தில் கம்பர் எடுத்துக் கூறியள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கலாம். அரசர்கள் தன்னிச்சையாகச் செயலாற்றும்போது கொடுங்கோன்மை தலைதூக்கும் என்பதைக் கம்பர் இங்கே மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றார். மேலும்,

**கடவுள்களை விடவும்**
**அந்தணர்கள் உயர்ந்தவர்கள்**
**என்ற வைதீகக் கருத்தைக்**
**கம்பரும் இங்கே**
**வழிமொழிந்திருப்பதை**
**அறியும்போது**
**அவரது கவியாற்றலை**
**வியந்து படிக்கும் என் போன்ற**
**பலருக்கும்**
**மனதில் ஒரு**
**பெரும் நெருடல் ஏற்படுவதைத்**
**தவிர்க்க முடியாதிருக்கிறது.**

***தூம கேது புவிக்கெனத் தோன்றிய***
***வாம மேகலை மங்கைய ரால்வரும்***
***காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்***
***நாம மில்லை நரகமு மில்லையே***

- கம்ப. அயோத்தி. 120

வால் நட்சத்திரம் தோன்றினால் பூமியிலே கேடு உண்டாகும் என்பது போல அழகிய மேகலையை அணிந்த மங்கையரால் ஏற்படுகின்ற காம நோய் இல்லையானால் மிகுந்த கேடு விளைந்ததே என்னும் பெயர் ஏற்படப் போவதுமில்லை. நரகம் என்னும் துன்பமும் ஏற்படப் போவதில்லை என்பது இச்செய்யுளின் பொருள். வால் நட்சத்திரம் தோன்றுமானால் உலகில் பெருங் கேடு விளையும் என்பது ஒரு நம்பிக்கை. அதே போலப் பெண்ணாசை தோன்றினால் அதனால் விளையும் கேட்டிலும் பெருங்கேடு வேறு இல்லை என்பதைக் கூறக் கம்பர் கடுங் கேடு என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார். பெண்ணாசையால் மாபெரும் பேரரசுகள் பல வீழ்ச்சியடைந்தன என்னும் வரலாற்று உண்மையையும், பின்னர் நிகழவிருக்கும் இராவணனின் வீழ்ச்சிக்கான காரணத்தையும் இங்கே கம்பர் கோடிட்டுக் காட்டுவதாகவும் இச்செய்யுளைக் கருதலாம்.

தயரதனின் வேண்டுகோளின் படி வசிட்ட முனிவன் இராமனுக்கு உறுதி மொழிகளை உபதேசித்த பின்பு மணி முடி சூடுவதற்கு முன்பாகச் செய்ய வேண்டிய சடங்குகளையும் செய்விக்கின்றான். அதன் பின்னர் இராமனுக்கு மணிமுடி புனையும் திருவிழா நாளை நடைபெறும் என முரசறைவிக்கத் தயரதன் கட்டளையிடுகிறான். அச்செய்தி கேட்டு அயோத்தி நகரத்து மக்கள் அடைந்த பெரு மகிழ்ச்சியைக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

***ஆர்த்தனர் களித்தனர் ஆடிப் பாடினர்***
***வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்***
***போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்***
***தூர்த்தனர் நீள்நிதி சொல்லினார்க் கெலாம்.***

- கம்ப. அயோத்தி. 126

இராமன் முடிசூடப் போவதைக் கேள்வியுற்ற அந் நகரத்து மக்கள் எல்லோரும் ஆரவாரம் செய்தார்கள், பெருமகிழ்ச்சியில் பாட்டுப் பாடி ஆனந்தக் கூத்தாடினார்கள், மகிழ்ச்சியால் உடல் வியர்த்தார்கள். அங்கமெல்லாம் பூரித்தார்கள். உணர்ச்சியால் மயிர் சிலிர்த்தார்கள். மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். இம்மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னவர்கட்கு எல்லாம் மிகுந்த திரவியத்தை அள்ளிக் கொடுத்தார்கள். இவ்வாறாக, மங்கலமான செய்தியைக் கேட்டு மக்களிடம் ஏற்பட்ட உவகை உணர்ச்சி மெய்ப்பாட்டின் விளைவுகளைக் கம்பர் அழகாகத் தன்மை நவிற்சி அணியில் கூறியிருப்பது நயம் பயக்கின்றது.

பெருமகிழ்ச்சியுற்ற மக்கள் அயோத்தி நகரினை அலங்கரிக்கத் தொடங்குகிறார்கள். அந்நகரில் செய்யப்படும் அலங்காரத்தைப் பற்றிப் பத்துச் செய்யுள்களிலே கம்பர் அழகாக வருணிக்கின்றார். அத்தனை செய்யுள்களும் கம்பரின் கற்பனைத் திறனை வெளிப்படுத்துவன. அவற்றுள் இரண்டு செய்யுள்

களை இங்கே பார்க்கலாம்.

***மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்***
***அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன***
***தங்கொளி முறுவலின் தாமம் நான்றன***
***கொங்கையின் நிரைத்தன கனக கும்பமே.***

- கம்ப. அயோத்தி. 129

அந்நகரத்தில் மங்கையரது தொடை எனத் தோன்றும் வகையில் வாழை மரங்கள் நடப்பட்டன. அவர்களது கழுத்தின் தோற்றத்தில் கமுக மரங்கள் நிறைக்கப்பட்டன. அவர்களது வெண்மையான பல் வரிசையாய் ஒளி வீசும் முத்து மாலைகள் தொங்கவிடப்பட்டன. அவர்களது மார்பகங்களாகப் பொன்னிறமான நிறை குடங்கள் வரிசையாக அமைக்கப்பட்டன எனக் கம்பர் வருணிக்கின்றார். அந்நகரத்து மக்கள் நகரம் முழுவதும் வாழை மரங்களையும், கமுக மரங்களையும் கட்டி வைத்து, முத்து மாலைகள் தொங்க விட்டு, நிறைகுடங்கள் அமைத்துச் செய்துள்ள அலங்காரத்தை அழகிய பெண்களாகக் கம்பர் கற்பனை செய்துள்ளதைப் பார்க்கிறோம். உவமைப் பொருளை (உவமானம்) உவமிக்கப்படும் பொருளாக (உவமேயம்) இங்கே கூறியுள்ளது அணியிலக்கணத்தில் எதிர்நிலை உவமையணி எனப்படும். மேலும் ஒரு அழகான செய்யுளைப் பார்க்கலாம்.

***பூமழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்***
***தூமழை தரளத்தின் தோமில் வெண்மழை***
***தாமிழை நெரிதலிற் தகர்ந்த பொன்மழை***
***மாமழை நிகர்த்தன மாட வீதியே.***

- கம்ப. அயோத்தி. 135

மாளிகைகள் நெருங்கிய தெருக்களில் எல்லாம் பெருமழையாகப் பூமாலைகள் நிறைந்திருக்கவும், புதிய மெல்லிய சுண்ணம் என்னும் வாசனைப் பொடி காற்றிலே கலந்து நிறைந்திருக்கவும், தூய வெண்மையான முத்துகள் தூவப்படுவதும், மக்களின் நெரிதலிலே அணிகலன்கள் உடைந்து அவற்றிலிருந்து தகர்ந்து விழும் பொன்னும் மழையாக அந்நகரத்தின் வீதிகளிலே சிதறவும் புயல்மேகம் பெருமழை பொழிவதைப் போன்றிருந்தது என்பது இச்செய்யுளின் பொருள்.

அந்நகரத்து மக்கள் வீதிகளிலே நீர் தெளித்து மலர்களையும், சுண்ணப் பொடிகளையும், முத்துகளையும், பவளங்களையும் தூவி அலங்கரித்ததும், நகரிலே கூடுகின்ற மக்கள் கூட்டத்தின் நெரிசலிலே அவர்கள் அணிந்திருந்த பொன் அணிகள் தகர்ந்து பொன் மழை போல உதிர்ந்து கொள்வதும் அங்கு ஒரு மாமழை பொழிவதுபோல் இருந்ததாகக் கம்பர் வருணித்துள்ளது கம்பரின் கவித்திறனுக்கு மேலுமோர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு அயோத்தி நகரம் அலங்கரிக்கப்பட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தபோது ஒரு மாறுபாடான நிகழ்ச்சி நடைபெறுகிறது.

***அந்நகர் அணிவுறும் அமலை வானவர்***
***பொன்னகர் இயல்பெனப் பொலியும் எல்வையில்***
***இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்***
***துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.***

- கம்ப. அயோத்தி. 138

அயோத்தி மாநகரம் அலங்கரிக்கப்படுகின்ற ஆரவாரத்தினால் அந்நகரம் விண்ணுலகத்தினது தன்மைபோலப் பொலிந்து விளங்கும் காலத்தில் துன்பத்தைச் செய்கின்ற இராவணன் முன்னர் இழைத்த தீவினை இப்பிறப்பில் உருவெடுத்து வந்ததைப் போலக் கொடிய மனத்தினளாகிய மந்தரை வெளிப்பட்டுத் தோன்றினாள் என்பது இச்செய்யுளின் பொருள்.

மந்தரை என்ற பெயரைக் கொண்ட கூனி என்பாள் அரச மாளிகையின் பலகணி மீதிலிருந்து நகரம் அலங்கரிக்கப்படுவதையும் நகரத்து மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிப்பதையும் கண்டு இராமனுக்கு முடி சூட்டு விழா நடைபெறப் போவதை அறிந்து கொள்கிறாள். இச்செய்யுளில் மந்தரை என்ற பாத்திரத்துக்குத் துன்னருங் கொடுமனக் கூனி என்னும் அடைமொழியைக் கம்பர் கொடுத்திருப்பதைக் காண்கின்றோம். மந்தரை என்பவள் நெருங்கி நட்புக் கொள்ளத் தகாதவளாக உருவத்தாலும் பெயரினாலும் மட்டுமன்றி உள்ளத்தாலும் கொடியவள் என்பதை இந்த அடைமொழி குறிக்கின்றது.

அங்ஙனம் வெளிப்பட்ட கூனியைப் பற்றி மேலும் கம்பர் கூறுவதைக் காண்போம்.

***தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள்***
***ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்***
***கான்றெரி நயனத்தாள் கலிக்கும் சொல்லினாள்***
***மூன்றுல கினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள்.***

- கம்ப. அயோத்தி. 139

இராமன் முடி சூடப் போவதனை அறிந்த கூனி சினத்தால் துடிக்கின்ற நெஞ்சை உடையவளாய், கோபத்தில் நிலை கொண்டவளாய், மன உளைச்சலுக்கு உட்பட்டவளாய், கனல் கக்குகின்ற கண்களை உடையவளாய், சொல் தடுமாறியவளாய், மூவுலகுக்கும் பெருந்துன்பத்தை மூட்டுபவளாய்க் காணப்பட்டாள் என்று அவளின் தோற்றத்தையும் செயல்களையும் வருணிக்கின்றார் கம்பர். இராமனின் மகுடம் சூட்டு விழாவுக்காக யாவரும் மகிழ்ச்சியோடிருக்கக் கூனி பொறாமையால் நெஞ்சு துடிக்க, உள்ளம் கொதிக்க, கண்களில் தீப்பொறி பறக்க, உரை தடுமாற, மூவுலகத்துக்கும் பெருந்துயரம் விளைவிக்கும் வகையில் வழி தேடலானாள் என்கிறார் கம்பர்.

மந்தரை சூழ்ச்சிப் படலத்தின் ஒரு பகுதியாக இராமனின் முடி சூட்டு விழாவுக்குச் செய்யப்பட்ட ஆயத்தங்கள் பற்றிய செய்திகளையும், கைகேயியின் தோழியான கூனி என அழைக்கப்படும் மந்தரையின் வெளிப்பாட்டையும் கம்பரின் கவித்திறத்தோடு படித்து அனுபவித்தோம். தொடர்ந்து அடுத்த இதழில் மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் முக்கிய திருப்பு முனையாக நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கம்பரின் கவிநயம் மிக்க செய்யுள்களோடு எடுத்து வருகிறேன். சுவைத்து மகிழ்வோம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com




**தி.** ஜானகிராமன் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஒரு சமயம் பேராசிரியர் கல்யாணராமனிடம் இந்த ஆசையைச் சொன்ன போது அப்படியொரு எண்ணத்தில் தானும் இறங்கியுள்ளதாகச் சொன்னார். இருவரும் சேர்ந்து கோவையில் நடத்தலாம் என்று திட்டமிட்டோம். கட்டுரையாளர்களுக்கு உரிய மதிப்பூதியம் அளித்துவிடலாம் என்று சொன்னார். 'மோகமுள்' குறித்து நானும் விரிவான ஒரு கட்டுரை ஒன்றை அவருக்குக் கொடுத்தேன். கொரோனா காலம் நடத்த விடாமல் தள்ளித் தள்ளிப் போய் போட்டுவிட்டது. நண்பர்களிடம் தி.ஜா. குறித்து எழுதும்படி கேட்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில் கவிஞர் சிற்பி ஐயா என்ன செய்றீங்க என்று கேட்டார். நான் இந்த மாதிரி ஜானகிராமனுக்கு நூற்றாண்டு விழா வருகிறது, அவருக்கு சிறப்பான கருத்தரங்கம் ஒன்றை நடத்தலாம் என்று நண்பர்களிடம் கட்டுரை கேட்டுவருகிறேன் என்றேன். சிற்பி ஐயா, அதை சாகித்திய அகாதெமி வழியாக இரண்டு நாள் கருத்தரங்கமாக நடத்தலாமே என்றார். நாம் கட்டுரை கேட்டிருப்பவர்களை அப்படியே கருத்தரங்கிற்குப் பயன்படுத்தலாம் என்றார். அதன்படி கோவை பி.எஸ்.ஜி. கல்லூரியில் நடத்த திட்டமிடப்பட்டது. கல்லூரியில் சில நடைமுறைச் சிக்கல்களால் நடத்துவதற்கு தற்சமயம் வாய்ப்பில்லை என்று அவர்கள் சொன்னதால், சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடத்தும் விதமாய் அமைந்தது. இதற்கு முழு காரணமாக இருந்தவர் சிற்பி ஐயா.

இந்த நூற்றாண்டு விழாவில் தி. ஜானகிராமனின் அன்பு மகள் உமா சங்கரி அம்மா கலந்துகொள்ள வேண்டும் என்றும் விரும்பினேன். சங்கரி அம்மா தன் மகள், பேரக்குழந்தையுடன் கலந்துகொண்டு உரையாற்றியது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. தி.ஜா.வின் நிறைவுப் பேருரையை மிகப்பெரிய ஓர் இலக்கிய ஆளுமையைக் கொண்டு நிகழ்த்தப் பெயர் பட்டியலைத் தயார் செய்தபோது சிற்பி ஐயா, அந்த நிறைவுறையை நீயே நிகழ்த்துவது சரியாக இருக்கும் என்றார். நிறைவுறை ஆற்றும்படியாக நான் பெரிய ஆள் இல்லையே என்றேன். தி. ஜானகிராமன் குறித்து நீ எழுதிய ஒரு கட்டுரை போதும். அவர் எழுத்துமீது நீ கொண்டிருக்கும் ஆழமான உறவு எத்தகையது என்பதை சொல்கிறது. நீ தான் செய்யணும் என்றார். இவ்விதமாக இதைச் செய்ய இந்த ஆசீர்வாதமும் பெயரும் கிடைத்திருக்கிறது. 1986-ல் மாரடோன உலகக் கோப்பைக்கான கால்பந்து ஆட்டத்தில் அவரது தோளில் பட்டு வலைக்குள் சென்றதா தலையில் முட்டித்தான் தள்ளினாரா என்று மயக்கமான விடைதெரியா நிகழ்வாக ஒரு கோல் பேசப்படுவதுண்டு. அதை கோல் என்று அங்கீகரித்தபோது மாரடோனாவிடமே அது சரிதானா என்று கேட்கப்பட்டது. அது கடவுளின் கை என்றார். தி. ஜானகிராமனுக்கு நூற்றாண்டை கொண்டாட நினைத்தேன். நிறைவுறை செய்யவைத்ததும் அந்த கடவுளின் கை தான்.

பெரியார் சாதி மறுப்பாளர். சாதியின் ஏற்றத்தாழ்வுகளை வெறுத்து சமத்துவம் பேணியவர். அவர் பெயரிலான இந்த பெரியார் பல்கலைக்கழகத்தில் நடத்துவது ஒரு வகையில் பொருத்தமானது. தி.ஜா. தன் அன்பு மகள் சங்கரி விரும்பிய மணாளனுக்கு திருமணம் செய்து வைத்தவர். நான் 18 வயதில் தி.ஜா.வின் படைப்புக்களைப் படிக்கத் தொடங்கினேன். அவர் என்னை எல்லா சாதியினரையும் தன் கதைகளின் வழி நேசிக்க வைத்தார். தவம், இசை பயிற்சி, பரதேசி வந்தான், கோபுர விளக்கு, கோதாவரி குண்டு, தேவரின் குதிரை என்று எத்தனையோ கதைகள்வழி அம்மக்களை நேசிக்க வைத்தார்.

தி.ஜா. எழுத்தின் மீது எனக்கு ஏற்பட்ட கவர்ச்சிக்கு ஒரு காரணம் என்று மட்டும் சொல்ல முடியாது. அவரின் விவரணை, அந்த நேரத்து உவமானம், உரையாடலின் சாகசம், சின்னச் சின்ன சித்திரங்கள், கவனப்படுத்தி இருக்கும் நுணுக்கங்கள், அவரது பார்வை, அவர் திறந்து வைக்கும் புதிய காட்சி, அது தரும் அனுபவம் என்று பல்வேறு அம்சங்கள் கூடி கலந்தது தான் என்னை ஈர்த்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். நான் முதன்முதல் சுந்தர ராமசாமியைச் சந்தித்தபோது, உனக்கு பிடித்த எழுத்தாளர் யார்? என்று கேட்டார். தி. ஜானகிராமன் என்று மெல்ல கூறினேன். அவருடைய கதைகளில் எந்தெந்த கதைகள் பிடிக்கும் என்று கேட்டார். 'சிலிர்ப்பு', 'தவம்' என்று சில கதைகளைச் சொன்னேன். அவர் எழுதிய கதைகளில் 'சிலிர்ப்பு' அபாரமான கதை என்றார்.

இன்று நான் ஒரு எழுத்தாளனாக உருவாகிவிட்டேன். என் எழுத்து எனக்கு ஏதேனும் கற்றுக்கொடுத்ததா என்று கேட்டால் உடனடியாக பதில் சொல்ல முடியாது. ஒரு கதை உலகை நான் நினைக்காதபடியும் உருவாக்க முடிகிறது என்று சொல்லலாம். நான் நினைக்காத மனித வெளிப்பாடுகளை வெளிப்படுத்த நேர்கிற சந்தர்ப்பத்தைச் சொல்லலாம். நேருக்கு நேராக என் எழுத்திலிருந்து இன்னதைக் கற்றுக் கொண்டேன் என்று உடனே சொல்ல முடியவில்லை. ஆனால் நான் ஒரு வாசகனாக மற்ற எழுத்தாளர்களைப் படிக்கும்

போது பலவற்றைக் கற்றுக்கொள்கிறேன். அவர்களின் யோசனையைக்கூட ஏதோ விதத்தில் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு நானே எழுதி கற்பிக்காத எழுத்து பிறர் எழுதும்போது எனக்கு ஒரு அனுபவத்தைத் தருகிறது. நான் பொள்ளாச்சியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது என் அறை மேசையில் வண்ணதாசனின் சிறுகதை தொகுப்பான 117 கதைகள் கொண்ட பெருந்தொகுப்பை வைத்திருந்தேன். என் அறையின் நண்பர் மாரிமுத்து. மாரிமுத்துவின் நண்பரிடம் என்னைப் பற்றி சொல்லியுள்ளார். ஒருநாள் காலை நாங்கள் கிளம்பி கொண்டிருக்கும்போது எங்கள் அறைக்கு அவர் வந்தார். அவர் பெயர் சுந்தரம். என் மேசையில் இருந்த வண்ணதாசனின் பெருந்தொகுப்பை எடுத்து பிரித்துப் பார்த்தவர், வண்ணதாசனைப் படிக்கவில்லை என்றால் நான் என் மனைவியை எப்போதோ விவாகரத்து செய்திருப்பேன். என் மனைவிமீது நேசம்கொள்ள வைத்ததும் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொண்டதும் அவரது எழுத்துத்தான் என்றார். இப்படியான ஏதோ ஒன்று எனக்கும் தோன்றியிருக்கிறது. ஒரு அம்பு குத்தி நிற்பதுபோல கண்டதில்லை. அந்த வாசகர் சட்டென துல்லியமான ஒரு எண்ணத்தின் மாற்றத்தைச் சொன்னார்.

லா.ச.ரா.வின் கதைகளை சிறுவயதில் படித்திருந்தாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பு படித்தபோது அவர் கூறிய ஓர் இடம் என் சட்டையைப் பிடித்தது உலுக்கி கேட்பதுபோல இருந்தது. 'தன்னை நம்பி இருக்கிற குடும்பத்தைக் காப்பாற்றாத மனிதன் என்ன மனிதன்' என்று ஒரு கதையில் கேட்டது என்னைப் பார்த்து கேட்டது போலவே இருக்கிறது. இங்கு முன்னாள் அமர்ந்திருக்கிற கவிஞர் ரவி சுப்பிரமணியத்தையும் அப்படி கேட்பதாகவே நினைக்கிறேன்.

18 வயதில் தி.ஜா.வை படிக்கும்படி ஒரு நற்பேறு வாய்க்கப் பெற்றேன். 'அம்மா வந்தாளை' வாசித்து முடித்ததும் மனம் ஒரு நிலையில் இல்லை. இந்துவின் துயரத்தையும் அன்பின் வெளிப்பாட்டையும் அப்பு இவ்வளவு உதாசீனம் செய்யலாமா என்று தவித்தேன். அந்தச் சிறுவயதில் நான் வளர்ந்து பெரியவன் ஆனதும் இது போன்று ஒரு விதவையை மணந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். ஐந்தாறு ஆண்டுகள் கழித்து 'மோகமுள்' நாவலைப் படித்தேன். அப்போது யமுனாவை திருமணம் செய்துகொள்ள நினைத்தேன். எனவே கும்பகோணம் செல்ல வேண்டும் என்பது நீண்டநாள் திட்டமாகவே இருந்து வந்தது. ஒருவேளை அவள் உயிரோடு இருந்தால் அப்போது எனக்கு 23 வயது இருக்கும். யமுனா உயிரோடு இருந்திருந்தால் (1956-ல் மோகமுள் வந்தது) 80 வயதாக இருக்கும். இது ஒரு தர்க்க ரீதியான வயதின் கணக்கீடு. ஆனால் அந்த யமுனா இன்னும் 39 வயதிலேயே இருந்து கொண்டு இருக்கிறாள்.

'இசைப் பயிற்சி' கதையைப் படித்தபோது தலித் கலைஞன் மீது நேசம் கொள்ள வைத்தது. இசைஞானம் பெற்ற அவனை தி.ஜா. வீட்டிற்குள் அழைத்து இருத்தி பயிற்சி அளித்தது போல செய்யத் தோன்றியது. இப்படித்தான் தி.ஜா.வின் ஒவ்வொரு கதையும் எனக்கு ஒவ்வொரு மேன்மையைக் கற்றுத் தந்தது. எனவே சிற்பி ஐயா சொன்னதுபோல தி. ஜானகிராமன் எனக்கு ஒரு பெரியார். இலக்கியத்தின் வழி ஒளி காட்டிய பெரியார். என் வாழ்வில் நான் சந்திக்க விரும்பிய முதல் எழுத்தாளர் தி. ஜானகிராமன் தான். அப்படி நான் நினைத்ததற்கு ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அவர் மறைந்துவிட்டார் என்பது தெரியாது.

கி.அ. சச்சிதானந்தம் எனக்கு நண்பர், அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். அவர் வாழ்ந்துகொண்டிருக்கும் வீட்டை காட்டி இந்த வீட்டில் இருந்துதான் அண்ணா உதயசூரியன் சின்னத்தை தன் கட்சிக்கு வைத்தார் என்றார். அந்த வீட்டின் நிலைப்படியின் மேல் உதயசூரியின் வடிவில் ஜன்னல் இருந்ததைக் காட்டிச் சொன்னார். இவ்விதம் ஏராளமான தகவல் சொல்லும் சச்சிதானந்தம் கோவை வந்திருந்தபோது என் வாடகை வீட்டிற்கு வந்தார். மாலையில் இருவரும் அந்த கிராமத்திற்கு வெளியே நடைபப்யிற்சி சென்றோம். அப்போது ஒன்று சொன்னார். உமா சங்கரி அம்மா பற்றித்தான். அவர் கோபித்துக்கொள்ளமாட்டார். 1975 வாக்கில் தி. ஜானகிராமன் சென்னை வரும்போது இலக்கிய கூட்டங்களில் கலந்துகொள்வது வழக்கமாம். அப்படி கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு தி.ஜா. உமாசங்கரியையும் அழைத்து வருவாராம். சி.சு. செல்லப்பாவிற்கு சச்சி நெருங்கிய இளம் நண்பர். சிஷ்யன் என்றும் சொல்லலாம். செல்லப்பா மற்றும் ஜானகிராமன் சென்னை வந்திருக்கிறார். இந்த கூட்டத்தில் கலந்துகொள்கிறார். போகணும் வர்றியா என்று கேட்க, சச்சி ஜானகிராமனைப் பார்க்கவில்லை என்றாலும் அவருடைய மகளைப் பார்க்கலாம் நல்ல அழகு என்று சொல்லவும் செல்லப்பா குதிகுதியென்று குதித்து விட்டாராம். நீ எப்படி ஒரு இலக்கிய நிகழ்வில் ஒரு பெண்ணைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லலாம். என்று திட்டித் தீர்த்ததோடு, நான் இலக்கியக் கூட்டத்திற்குப் போகவில்லை என்று உட்கார்ந்து கொண்டாராம். சச்சிதானந்தம் நான் அப்படி பேசியது தப்புதான் என்று சொல்லி மன்னிப்பு கேட்ட பின் ஒரு பெருமூச்சு விட்டு சரி வா என்று கிளம்பினாராம். செல்லப்பாவிற்கு இலக்கியம் தவிர வேறு ஆசாபாசங்கள் குறித்து பேசக்கூடாது. கண்ணியக் குறைவாகப் பேசினால் கோபித்துக்கொள்வார். சச்சி சொன்னது இதுதான். மகள் உமாசங்கரியை பார்த்தால் தி. ஜானகிராமனைப் பார்க்கவேண்டியதில்லை. அச்சு அசல் ஜானகிராமனைப் போலவே இருப்பார் என்று சொன்னார். எனவே ஜானகிராமனைப் பார்க்க எனக்கு கொடுத்துவைக்கவில்லை. தி.ஜா.வின் மகளைப் பார்க்கவேண்டும், பேசவேண்டும், நட்புகொள்ள வேண்டும் என்று எனக்கு ஒரு கனவும் அப்பிக்கொண்டது.

2000-ம் ஆண்டில் கி.அ. சச்சிதானந்தன், சா. கந்தசாமி, வெங்கட்சாமிநாதன் இன்னும் சில நண்பர்கள் சென்னையில் தி. ஜானகிராமனுக்கு ஒரு விழா எடுத்தார்கள். அந்த விழாவில் ஒரு பார்வையாளனாக கலந்துகொண்டேன். உமாசங்கரி அம்மா அந்த விழாவிற்கு வந்திருந்தார். மகிழ்வாக இருந்தார். அவரைப் பார்த்ததும் தி. ஜானகிராமனைப் புகைப்படத்தில் பார்த்திருந்ததும் ஒன்றாகவே இருந்தது. அப்படி ஒரு உருவ ஒற்றுமை. முக்கியமாக இருவரின் மூக்கு. அந்த நிகழ்வில் உமாசங்கரி அம்மாவுடன் பெரிதாக பேசவில்லை என்றாலும் முகவரியை மட்டும் வாங்கிக்கொண்டேன். மறுபடியும் ஒரு இருபது ஆண்டுகள் கழித்து இந்த விழாவில் என்னை சம்பந்தப்படுத்திக்கொண்டதால் உமாசங்கரி அம்மாவை நானே தொலைபேசியில் அழைத்துப் பேசினேன். மகிழ்வுடன் கலந்துகொண்டார். எனக்கு நிரம்ப மகிழ்ச்சி.

நான் முதன்முதல் பார்த்த எழுத்தாளர் ஜெயகாந்தன்.1986-ல் எங்கள் கல்லூரிக்கு வந்திருந்தார். மூன்று நாள் நிகழ்வு. ஜெயகாந்தன் வருகையை ஒட்டி அவரது ஆக்கங்களை நான்கு மாதம் தேடிப் படித்தேன். ஜெயகாந்தனிடம் இருந்து



நான் கற்றுக்கொண்டது, ஒரு விஷயத்தை எப்படி தேர்ந்தெடுப்பது, அதை எப்படி அணுகுவது, எவ்விதம் வெளிப்படுத்துவது என்கிற பார்வையைக் கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். அதே காலத்தில் தி. ஜானகிராமனைத் தீவிரமாய் படித்தேன். தி. ஜானகிராமனை வாசிக்க வாசிக்க ஒரு ஆக்கம் எப்படி கலையாக மாறுகிறது என்பது கணிதம்போல இது துலக்கம்பெற்றது என்று சொல்ல முடியாது. ஜெயகாந்தனிடம் வெளிப்படாத ஒரு கலை உணர்வு தி.ஜா.விடம் இருப்பதை மனம் உறிஞ்சிக்கொண்டது என்று சொல்லலாம்.

சுந்தர ராமசாமி ‘மோகமுள்’ குறித்து பேசும்போது அவரது புனைவில் வெளிப்படும் கும்பகோணத்து பிராமண மொழி நேரில் சந்திக்கும்போது இல்லை என்றார். அது ஏமாற்றமாக இருந்தது. இன்றைய மொழியில் எழுத வேண்டும் அவர் மறைந்துபோன ஒரு மொழியில் எழுதுகிறார் என்பது போலச் சொன்னார். நான், சார் தி. ஜானகிராமனின் மொழி இன்றைய மொழி அல்ல. அது அவர் பாட்டியிடம், அப்பாவிடம் கேட்டு வளர்ந்த மொழி. அது அவரது ஆழ்மனதிலிருந்து வெளிப்பட்டிருப்பதாக நினைக்கிறேன் என்றேன். சு.ரா. நான் சொன்னதை ரசிக்கவில்லை என்றாலும் கேட்டுக்கொண்டார். இந்த நூற்றாண்டு விழாவையொட்டி ‘மோகமுள்’ நாவலை மீண்டும் படித்தேன். ஜே.ஜே. சில குறிப்புக்களில் வரும் டைரி குறிப்பு போல மோகமுள்ளில் ரங்கண்ணாவின் இசைக் குறிப்புகளைத் தேடியும் படித்தும் பாபு பரவசம் கொள்வதாக ஒரு அத்தியாயமே இருப்பது பொட்டில் அடித்ததுபோல துலங்கியது. ‘மோகமுள்’ சு.ரா.வை அதிகமாக பாதித்திருக்கிறது. ஆனால் ஏனோ அந்நாவல் பிடிக்கவில்லை என்பது போல கூறிக்கொண்டிருந்தார். ஜே.ஜே. சில குறிப்புக்கள் நாவல், மோகமுள் நாவலின் இசைக் குறிப்புக்களுக்கு இணையாக ஒரு எழுத்தாளன் பற்றிய குறிப்புகளாக இருப்பது தெரிந்தது. இது பற்றி விரிவாக கட்டுரையாக எழுதியிருக்கிறேன். எதார்த்தத்தின் மேல் கனவின் பனிப்படலத்தை விரித்தவர் என்று சு.ரா. சொன்னாலும், மோகமுள் ஒரு அபாரமான கலைப் படைப்பாக உயர்ந்து நிற்கிறது. தமிழினி வசந்தகுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு தி. ஜானகிராமனின் படைப்புகளுக்கு ஒரு செம்பதிப்பு கொண்டுவரவேண்டும் என்று சொன்னார். பின்னாளில் தி.ஜா.வின் படைப்புக்களை காலச்சுவடு செம்பதிப்புக் கொண்டுவரத் தொடங்கியதும் வசந்தகுமார் அக்காரியத்தை

அப்படியே விட்டுவிட்டார்.

கிருஷ்ணன் நம்பிக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர் தி. ஜானகிராமன். தி.ஜா.வின் மொழிநடையில் நம்பி பெரிய மையல் கொண்டிருந்தார். ஒரு மோதிரத்தை வாங்கி ஜோப்பில் வைத்துக்கொள்வேன். என்றேனும் அவரை நான் எதிரெதிராக சந்திக்க நேர்ந்தால் நான் யார் என்று அறிமுகம் செய்யாமலே அவரது கையைப் பற்றி அந்த தங்க மோதிரத்தை அவரது விரலில் போட்டுவிட்டு ஒன்றும் சொல்லாமல் போய்க் கொண்டே இருப்பேன் என்று சொன்னதை சுந்தர ராமசாமி என்னிடம் மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்.

க.நா.சு 'மோகமுள்' தமிழில் ஒரு அபூர்வமான சாதனை. சாதனை என்று கூறிக்கொள்ளாத சாதனை என்றார். உலக வாசகர்களுக்கு அந் நாவலை அறிமுகம் செய்ய முடியாமல் போனது குறித்து தன் வருத்தத்தைச் சொல்லியிருக்கிறார். அதற்கு மோகமுள் அப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்க் கப்படாததே காரணம் என்றும் சொன்னார். 'மோகமுள்' பிடித்த க.நா.சு.க்கு 'அம்மா வந்தாள்' பிடிக்கவில்லை. 'அம்மா வந்தாள்' பிடித்த சு.ரா. விற்கு 'மோகமுள்' பிடிக்கவில்லை. பிராமண சாதிக்குள் நிகழ்ந்த உடைசல்களை இவ்வளவு துணிவோடு தி.ஜா. முன்வைத்தது சுந்தர ராமசாமிக்கு பிடித்திருந்தது என்று யோசிக்கிறேன். இப்படியொரு உடைப்பை தி.ஜா. நிகழ்த்தியிருக்க வேண்டியதில்லை என்று க.நா.சு விரும்பியிருக்கக்கூடும் என்று யூகிக்கிறேன். 'அம்மா வந்தாள்' நாவலில் வரும் அலங்காரத்தம்மாள் பாத்திரத்தை க.நா.சு. நம்ப மறுத்தார். இதை ஒரு காரணமாகச் சொன்னார். உண்மை அவருக்கு கசப்பைத் தந்திருக்கிறது என்று எனது அனுபவத்தின் வழி உணர்கிறேன்.

சிட்டிக்கும் தி. ஜானகிராமனுக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. தி. ஜானகிராமன் தன் பிறந்தநாளில் சிட்டியிடம் ஆசீர்வாதம் பெறுவது உண்டு. ஒருபோதும் தன் எழுத்து குறித்து சிட்டி எழுதாதற்கு வருத்தப்பட்டதே கிடையாது. அவரும் ஜானகிராமன் எழுத்து குறித்து சிறப்பாக ஒன்றும் கூறியது கிடையாது. என்றாலும் அதுபற்றியெல்லாம் எதிர்பார்க்காமல் நட்புடனேயே இருந்தார். ஜானகிராமன் இறந்த பின் அவர் எழுத்தினுடைய உயர்வு குறித்து அவர் உயிரோடு இருக்கும்பொழுது எழுதவில்லையே என்று வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார். தி.ஜா. நட்பையும் எழுத்தையும் ஒரே தட்டில் வைத்து வாழ்ந்தவர் கிடையாது. எழுத்து சார்ந்து மதிப்பை வேண்டியவரும் கிடையாது.

பொதுவாக தி. ஜானகிராமன் அமைதியானவர். அதிர்ந்து பேசமாட்டார். அவரது படைப்புகளை, நுட்பங்கள் குறித்து வியந்து பேசினால் சங்கோஜப்படுவார். தன் படைப்புகள் குறித்து அதிகம் பேசமாட்டார் என்று அவருடன் பழகிய பலரும் இவ்விதம் சொல்லியிருக்கின்றனர். இது உண்மைதான் என்றாலும் ஒரே ஒருமுறை தன் கனவை வெளிப்படுத்தியிருக்கிறார். 1945-ல் கோவையில் நடந்த இலக்கிய மாநாட்டில் கல்கி ஒரு இலக்கிய உரையாற்றியிருக்கிறார். அறிஞர் அண்ணாதுரை தென்னாட்டின் பெர்னாட்ஷா என்று குறிப்பிட்டு பேசியிருக்கிறார். அந்த மேடையில் 23 வயது இளைஞனான தி. ஜானகிராமன் கரிச்சான்குஞ்சுவை இழுத்துக்கொண்டு மேடைக்குச்சென்று வருங்காலத் தமிழ் இலக்கியத்தில் நாங்கள் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்துவோம். நாங்கள் புத்தம் புதியதான தமிழ் பெர்னாட்ஷாக்கள்போல வருவோம் என்று கூறிவிட்டு இறங்கியதாக மாலன் சொன்னார். தன் எழுத்துப் பயணத்தை இப்படி கொஞ்சம் ஆவேசத்துடனே தி.ஜா. ஒருமுறை வெளிப்படுத்தியிருக்கிறார். அதன்பின் அவர் மிகமிக அமைதியுடன் எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் இதை செய்திருக்கிறார்.

இங்கு வந்திருக்கும் தி.ஜா.வின் பேத்தியிடம் தி. ஜானகிராமனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? எப்படி எழுதுவார், கவனித்திருக்கிறீர்களா என்று கேட்டேன். அவர் மிகச் சின்னக் குழந்தையாக இருந்திருக்கிறார். இரவு இரண்டு மணி வரை நடந்து கொண்டே இருப்பாராம். சட்டென ஒரு கணம் மேசை முன் அமர்ந்துகொண்டு எழுதத் தொடங்குவாராம். அழித்தல் திருத்தல் இல்லாமல் விடியற்காலையில் ஒரு கதையை எழுதி பத்திரிக்கைக்குத் தருவாராம். நல்ல விதை நிலத்தில் விழுந்துவிட்டால் என்றேனும் அது முளைத்தே தீரும். மழை விழுந்ததும் அது முளைத்து விடும் என்பது போல தான் எழுதுவதற்கான மனச்சூழல் கூடிவிட்டால் மளமளவென எழுதிவிடுவார் என்று கேள்விப்பட்டதைப் பகிர்ந்துகொண்டார். ஒரு சமயம் நல்ல எழுத்து எப்படி இருக்கும் என்று கேட்டபோது அடுத்தவரின் அழகான மனைவியைக் கண்டதும் மனதில் ரசிக்கிறோம் அல்லவா நெருங்க முடியாது என்றாலும் மோகம் தவிர்க்க முடியாது அது போன்ற ஒரு அடைதலைத் தான் சிறந்த எழுத்து என்றாராம்.

கு.ப. ராஜகோபாலன் மீது ஜானகிராமனுக்கு அளவுகடந்த பற்று. அத்தோடு அவரது படைப்புகள் மீது பெரிய மதிப்பும் கொண்டிருந்தார். கு.ப.ரா.வின் இறுதி கால எழுத்துக்கள் ஒரு உச்சம்பெற்று இருந்தன. மிகவும் பக்குவப்பட்ட எழுத்தாகவும் அதே சமயம் பெண்களின் துணிச்சலான குரலாகவும் இருந்தன. சிறிது வெளிச்சம் கதையைப் படித்தால் தெரியும். எம்.வி. வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு, ஜானகிராமன் மூவரும் கு.ப.-ராவுடன் நெருங்கிப் பழகினர். ஆனால் அது கு.ப.ரா.வின் அந்திமக் காலம். கு.ப.ரா. பெண்களின் கொதிப்பைச் சொல்லியதோடு நிறுத்தினார். தி. ஜானகிராமன் பெண்கள் தங்களுக்கான வாழ்க்கையைத் தேர்வு செய்துகொள்வதற்கான பக்கத்திலும் நின்றார். பொதுவாக கு.ப.ரா படைப்பைக் கச்சிதமாக உருவாக்குவதில் மெனக்கட்டு இருப்பது தெரியும். தி. ஜானகிராமன் மெனக்கெடல் இல்லாமல் லாவகமாகச் செய்தார். இந்த கலைப் பக்குவம் மற்றவர்களைவிட தி.ஜா.விற்கு இன்னும் இயல்பாக கூடிவந்தது. ஒரு வகையில் தி.ஜா. குருவை மிஞ்சிய சீடன்.

எம்.வி. வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு, இருவரையும் விட கு.ப.ராவை தி.ஜா. அதிகம் நேசித்தார். கு.ப.ரா.வும் தி.ஜா. மீது மேலான அன்பைச் செலுத்தினார். தி.ஜா.வின் தந்தையார் கு.ப.ராவுடன் கொண்ட உறவை வெறுத்தர். தன் மகன் எழுத்தாளர் ஆவதைவிட நல்ல இசைக் கலைஞனாக வர விரும்பினார். அதனால் சங்கீத வகுப்பிற்கு அனுப்பினார். கு.ப.ரா.வின் வறுமையைக் கண்ட தி.ஜா.வின் தந்தையார் தரித்திரப்பயலுடன் தன் மகன் இருக்கிறானே என்று விசனமும் பட்டர். தி.ஜா.விற்கு திருமணமான மூன்றாம் நாள் கு.ப.ரா. சாகக் கிடக்கிறார், அன்று இரவெல்லாம் வீட்டிற்கு வராமல் கு.ப.ரா. வீட்டிலேயே இருக்கிறார். திருமணமான மாப்பிள்ளை மீது உறவினர்கள் சந்தேகம் கொள்கின்றனர். விமர்சிக்கவும் செய்கின்றனர். தி.ஜா.விற்கு அது பற்றி எல்லாம் கவலை இல்லை. கு.ப.ரா. இறப்பதற்கு முன் காவிரித் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்று சொல்ல, மூவரும் காவிரித்

தண்ணீர் கொண்டுவந்து தந்திருக்கின்றனர். மரணமும் நிகழ்கிறது. வளர்ந்துவரும் ஒரு எழுத்தாளனான தி.ஜா.விற்கு இந்த மரணம் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்திருக்கிறது.

தி.ஜா.வின் எழுத்தின் விசேஷத்திற்கு கு.ப.ரா. பாணி என்பது காரணமாகத் தெரியவில்லை. கு.ப.ரா. போல எழுத விரும்பினாலும் தி.ஜா.வின் எழுத்தில் இருக்கும் தனித்துவத் தன்மைக்கு அவரது தந்தையார்தான் காரணம். அவர் ஊர் ஊராகச் சென்று ஹரிகதை சொல்லும் ஒரு கதாகாலட்சேபக் கலைஞர். தி.ஜா.வும் அவர் நிகழ்த்தும் கலை நிகழ்விற்கு உடன் செல்வதை சிறுவயதில் வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார். அதில் உள்ள மரபின் ஆற்றல் தி.ஜா.விற்கு இயல்பாக வந்தடைந்திருக்கிறது. தி.ஜா.வின் தந்தையார், இரவு நேரங்களில் நடந்த நிகழ்வையும் அதை ஒட்டி மனிதர்கள் நடந்துகொண்ட விதங்களையும் சொல்வாராம். தந்தையார் அந்த அனுபவங்களை எடுத்துரைத்த விதங்கள் தி. ஜானகிராமனுக்கு கதைகளில் இயற்கையாக வெளிப்படுத்திக்கொள்ள உதவியிருக்கின்றன என்று நம்புகிறேன். மோகமுள்ளில் வரும் பாபுவின் விதவை அக்கா தி. ஜானகிராமனின் சொந்த அக்காவின் நடமாட்டங்களாகவே தெரிகின்றன.

ஜானகிராமனிடம் கனிவான குணம் இயற்கையிலேயே அமைந்திருந்திருக்கிறது. சக நண்பர்கள் துன்பப்படும்போது அதை சாதாரணமாகக் கடந்துசெல்ல முடியாத ஒருவராக இருந்திருக்கிறார். சென்னையில் இருக்கும்போது சாலையில் கும்பகோணத்துக்காரரான நடராஜன் என்ற ஓவியரைப் பார்த்திருக்கிறார். என்ன இங்க என்று விசாரித்திருக்கிறார். சென்னையில் ஏதாவது வேலை பார்க்கலாம் என்று வந்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த சென்னை அவ்வளவு ஒன்றும் நல்ல ஊர் கிடையாது. யாரை நம்பி இப்படி புறப்பட்டு வந்தீர்கள் என்று ஜானகிராமன் கேட்க. ஏன் நீங்கள் இல்லையா என்று நடராஜன் சொல்லியிருக்கிறார். அப்படியே நடராஜனை அழைத்து வந்து ஒரு மாதம் வீட்டில் வைத்து உபசரித்திருக்கிறார். பின் அவருக்கு வேலையும் கிடைத்தது. சாவியில் ‘அம்மா வந்தாள்’ மறுபடியும் தொடராக வெளியிடப்பட்டபோது அதற்கு ஓவியம் வரைந்தவர் அந்த நடராஜன்தான்.

1975-ல் ருத்திரய்யா, அவள் அப்படித்தான் என்ற படத்தை எடுத்து புகழ்பெற்றார். அவருக்கு ‘அம்மா வந்தாள்’ நாவலைப் படமாக்க வேண்டும் என்று பெரு விருப்பம். அதற்கான அனுமதிபெற எழுத்தாளர் வண்ணநிலவனை டெல்லிக்கு அனுப்பிவைத்தார். அவள் அப்படித்தான் படத்தில் வண்ண நிலவனும் பணியாற்றினார். நண்பருக்காக தி.ஜா.வை டெல்லியில் சந்தித்தார். மூன்று நான்கு நாட்கள் ருத்திரய்யா முதல் வரைவுத்திட்டம் எழுதி வைத்திருப்பதைக் காட்டிப்பேசி பத்தாயிரம் ரூபாயை அட்வான்ஸ் ஆக தந்துவிட்டு வந்தார். கால ஓட்டத்தில் ‘அம்மா வந்தாள்’ படம் எடுக்கப்படவில்லை. தி.ஜா. ஓய்வுபெற்று சென்னை வந்ததும், ருத்திரய்யாவிடம் அந்த அட்வான்ஸ் பணத்தை திரும்பி தந்திருக்கிறார். அவர்கள் வாங்க மறுத்த போதும் அந்த பணத்தை நான் வைத்திருப்பது எனக்கு முடியாததாக இருக்கிறது என்று திரும்பி ஒப்படைத்திருக்கிறார்.

எம்.வி. வெங்கட்ராம் வசதியான வீட்டுப்பிள்ளை. தி. ஜானகிராமன் கும்பகோணம் கல்லூரியில் படித்தபோது இருவரும் நண்பர்களானார்கள். எழுத்தாளர்களாக அறிமுகமானார்கள். எம்.வி.வி. நடத்திய தேனீ இதழில் தி.ஜா. நிறைய எழுதினார். செல்லப் பிள்ளைக்கே உரிய மேனாத்தமான குணத்தால் எம்.வி.வி. வியாபாரத்தில் ஈடுபட்டார். ஒரு சமயம் ஏற்றமும் கண்டார். பின் ஒரு சமயம் மிகப்பெரிய வீழ்ச்சியையும் அடைந்தார். வியாபாரத் தோல்வியால் சீட்டாட்டத்தில் மூழ்கினார். தி. ஜானகிராமன் உற்ற நண்பராக அந்த சீட்டாட்டப் பழக்கத்தை விடும்படி கேட்டுக்கொண்டார். பல நெருக்கடிக்கு ஆளான எம்.வி.வி. சென்னைக்குச் சென்றார். தி.ஜா. தன் மாடி அறையை ஒதுக்கித் தந்தார். சகஸ்ரநாமம் வைத்திருந்த நாடகக் குழுவிடம் அறிமுகப்படுத்தி நாடகம் எழுத வைத்தார். மொழிபெயர்ப்பு செய்ய வைத்தார். மறுபடியும் எழுத்தில் இறங்கி சாதிப்பதற்கு தி. ஜானகிராமன் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தார்.

எம்.வி.விக்கு எந்தக் குறையும் வராமல் தி.ஜா. பார்த்துக்கொண்டார். இரவு உணவு தி. ஜானகிராமனுடன் உண்பார். பகலெல்லாம் மாடியில் இருப்பார். இவரது உடைகளை தி. ஜானகிராமனின் மனைவி துவைத்துத் தருவார். ஒருநாள் இரவு உணவு உண்ண தொடங்கும்போது தி.ஜா., ரவை நன்றாக இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். ‘இது நாய் சாப்பிடுமா’ என்று தன்னை மறந்து சொல்லிவிட்டார். உடனே தி.ஜா. அப்படியே உணவை வைக்கும்படி கூறி, மாடிக்கு அழைத்துப் போயிருக்கிறார். எவ்வித கல்மிசமும் காட்டாமல் இலக்கியம் குறித்து உரையாடியிருக்கிறார். ஒரு மணி நேரத்தில் புதிய உணவு தயாரானதும் கீழே அழைத்துவந்து பரிமாறியிருக்கிறார். அடுத்தவர் வீட்டில் ஆறு மாதம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்மீதுகொண்ட அளவற்ற பிரியத்தால் பாதுகாத்து வரும் தி.ஜா. வையும், அவரது மனைவியையும் மனம் கோணும்படி எப்படி அப்படி ஒரு கடுமையான வார்த்தையைச் சொன்னேன். நான் அந்நியன் எனக்கு எத்தனை நாள் உணவு பரிமாறியிருக்கிறார். என் துணிகளைத் துவைத்துத் தந்திருக்கிறார். எப்படி அப்படிச் சொன்ன பின்பும் சிறு முகக் குறிப்பும் காட்டாமல் என்னைத் தாங்க முடிந்தது. என் கெட்டத்தனத்தை எப்படி அவரும் அவரது குடும்பமும் தாங்கிக் கொள்ள முடிந்தது. எப்படி தி.ஜா. அதனை இயல்பாக எடுத்துக்கொண்டு கடந்துபோக முடிந்தது என்று வருந்தியும், தன் தவறைச் சொல்லியும், தி.ஜா.வின் பெருந்தன்மையைப் போற்றியும் எழுதியிருக்கிறார்.

சென்னையில் ஒரு இசைக் கச்சேரி தி.ஜா. முன்வரிசையில் அமர்ந்திருக்கிறார். அன்று பாடியவர் பிரமாதமாகத் தன் இசையாற்றலை வெளிப்படுத்தியிருக்கிறார். எல்லோரும் அந்த நல்ல இசைக்குக் கைத்தட்டல் செய்து ஆரவாரம் செய்திருக்கிறார்கள். தி. ஜானகிராமன் அந்த இசையை கண்ணீர் சோர, முகம் சிவக்க, கண் மூடிக் கேட்டுக்கொண்டிருந்ததை வாஸந்தி பதிவு செய்திருக்கிறார். இது மாதிரியான நிகழ்வுகள் தி. ஜானகிராமன் குறித்து இருந்தால் உமாசங்கரி அம்மா, தன் தந்தை குறித்து எழுத வேண்டும். அவரிடம் தி.ஜா. குறித்து நிறைய கேட்க ஆசையாக இருக்கிறது.

உண்மைக்கு ஒரு பேரழகு இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு கூடுதலான உண்மையைத் தன் எழுத்தில் கொண்டுவந்தவர் தி.ஜா. மனிதர்களிடம் புதைந்திருக்கும் குரோதம், வஞ்சம், துரோகம், சாபம், அன்பு, கருணை, பிரியம் எல்லாம் வெளிப்படும் தருணங்களைக் காட்டினார். மனித மனங்களைப் பிட்டுபிட்டு வைத்தார்.

ஒரு கதையில் தேங்காய்ச்சில் வாங்கி வரும்படி ஒரு ரூபா

யைக் குழந்தையிடம் கொடுத்து கடைக்கு அனுப்புகிறாள் தாய். 50 பைசாவிற்கு தேங்காய்ச்சில் வாங்கி வருகிறான். மீதம் 50 பைசா கடைக்காரன் தரவில்லை. தாய் மகனை இழுத்துக்கொண்டு கடைக்கு வருகிறாள். மீதி பணம் தாருங்கள் என்று கேட்க, கடைக்காரன் குழந்தையிடம் கொடுத்து அனுப்பியதாகவும் எங்கோ தவறி போட்டுவிட்டான் என்றும் கூறுகிறான். குழந்தையிடம் கேட்டால் மீதி பணம் தரவில்லை என்கிறது. கடைக்காரன் பொய் சொல்கிறான் என்று தெரிந்ததும், கடைக்காரன் முன் அந்தக் குழந்தையை ‘பொய் சொல்லுவியா பொய் சொல்லுவியா’ என்று அடி அடி என்று அடிக்கிறாள் தாய். அந்தக் கடைக்காரன் இந்த ஜென்மத்தில் இன்னொரு குழந்தையை ஏமாற்றக்கூடாது என்ற அளவில் வெளுத்து வாங்கிவிடுகிறாள். இப்படி ஒரு கதையை எழுதியிருக்கிறார்.

தி. ஜானகிராமனின் எழுத்து குறித்து சுந்தர ராமசாமி ‘சிருஷ்டியின் விசித்திரங்களை மேடையேற்றி, கடைசி நாற்காலியில் அமர்ந்து புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்தவர்’ என்று குறிப்பிட்டிருக்கிறார். ‘இந்திய மரபில் நின்றுகொண்டு இந்தியத் தத்துவ மரபினையும் சுய மரபினையும் புரிந்துகொண்டவராக இருந்தாலும் அதில் கட்டமைக்கப்பட்ட புனிதங்களைக் கவிழ்த்து நடைமுறை யதார்த்தத்தை காண்பித்தார். நிலவுடமை சமூகம் விரிசல்கண்ட காலத்தில் நடுத்தர வர்க்கம் வேலை வாய்ப்புத் தேடி நகரங்களை நோக்கிச் சென்றது. நிலவுடமை சமூகத்தின் வீழ்ச்சியின் சகல பரிமாணங்களையும் ஏதோ ஒரு வகையில் அதற்கு பெரிதாக ஒரு அழுத்தம் தராமலேயே நுட்பமாக எழுதியிருக்கிறார். பெண்களை இவ்வளவு பரிவுடன் சொன்ன எழுத்தாளர் வேறு ஒருவர் இல்லை என்று தி.சு. நடராஜன் விரிவாகவே ஜானகிராமன் எழுத்துலகம் குறித்து எழுதியிருக்கிறார்.

பிராமணர்கள் செய்த முதல் தவறு தங்கள் நிலங்களை விட்டு வெளியேறியது. நிலத்துடன் உள்ள உறவை அறுத்துக் கொண்டு அரசு வேலையே குறி என்று ஓடியது. இன்று மண்ணிலிருந்தே அவர்களைப் பிரித்துவிட்டது. கொங்கு மண்டலத்தில் இன்றளவும் வெள்ளாளர்கள் பல்வேறு அரசுப் பதவிகளில் இருந்தாலும், நிலத்துடன் உள்ள உறவை அவர்கள் துண்டித்துக் கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். இது பற்றி உமாசங்கரியுடன் பேசியபோது, ‘நான் விவசாயம்தான் பார்க்கிறேன்’ என்றார். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

நடப்பியல் உண்மைகளை, மனிதர்களின் மனபோகங்களை இயல்புணர்ச்சியின் அடித்தளத்தோடு தனது படைப்புகளில் வெளிப்படுத்தினார். தனிமனித உணர்வும் சமூக உறவும் பின்னிப் பிணைந்த உருவில் அவரது படைப்பில் வெளிப்பட்டன. தி. ஜானகிராமனை தஞ்சை வட்டாரத்தை எழுதிய எழுத்தாளராக கூறுகின்றனர். அவர் வட்டாரத் தன்மையைத் தன் படைப்புகளுக்கு அடிநாதமாக வைத்துக்கொண்டு மானிடப் பிரச்சினைகளையே பேசினார்.

தி.ஜா.வின் படைப்புகளில் உரையாடல் ஒரு தனித்த அழகியலோடு கூடி வந்தது. கேட்பவர்களுக்கு ஒரு பதிலாகவோ அல்லது கதையை நடத்திச் செல்வதற்கான, நீட்டிப்பதற்கானதாகவோ இருக்காது. பாத்திரங்களின் சுயம்புவான எண்ண வெளிப்பாடுகள் கணத்திற்கு கணம் தெறிக்கும் தன்மையில் அமைந்திருப்பது தனிச்சிறப்பானது. அதேபோல மரபின் சத்தான பகுதி இந்த உரையாடலுக்கு கூடுதல் அழுத்தத்தையும் தனித்துவத்தையும் தருகிறது. ‘கழுகு’ கதையில் கிழவர் சாகக் கிடக்கிறார். அவருடைய மகள் தான் வந்திருப்பதை உணர்த்த ‘அப்பா இது எத்தனை விரல் சொல்லுங்க’ என்கிறார். தி.ஜா. எழுதுகிறார் ‘மகா யாத்திரை செய்ய போகிறவனுக்கு எவன் யாராக இருந்தால் என்ன? எது எத்தனை விரலாய் இருந்தாலென்ன? மாமாவின் காதில் யமன் விரலை வைத்துவிட்டான்’ நினைவில்லாமல் போய்விட்டதை குறும்பான எள்ளலுடன் சொல்கிறார்.

ஆண்களின் கண்களிலிருந்து பெண்களின் அழகை ஆராதனை செய்பவர் என்று விமர்சித்தவர்கள் உண்டு. அந்த ஆணின் கண்களில் இருந்துதான் தாசிமார்களின் துயர உலகை பரிவுடன் எழுதினார். ‘தவம்’ ‘கோபுர விளக்கு’ கதையெல்லாம் பெண்களை பூரணமான கருணையுடன் அணுகிய கதைகள். ‘செண்பகப்பூ’ கதையில் ‘பெண்கள் குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதிலேயே காலமெல்லாம் ஓடிவிடுகிறது’ என்று மெனக்கெடாத தன்மையில் எழுதிவிடுகிறார்.

தி. ஜானகிராமன் தன் படைப்புகளில் முன்வைப்பது காதலா? காமமா? என்றால் காதலுடன் கூடிய காமத்தையும், காமத்துடன் கூடிய காதலையும் பிரிக்க முடியாத தன்மையில் வைக்கிறார். அர்த்தநாரீஸ்வர வடிவம்போல சிவமும் சக்தியும் போல மனித வாழ்வில் ஒரு நாணயத்தின் இரு பக்கம்போல அவை இயைந்து இருப்பதைத்தான் தி.ஜா. முன்வைக்கிறார்.

ஞானம் என்றால் என்ன என்பதற்கு மோகமுள்ளில் வரும் ரங்கண்ணா ‘மனசுல நினைக்கிறதைச் சிற்பத்திலேயே கொண்டு வருகிற கலைதான் ஞானம்’ என்பார். தி.ஜா. மனதில் உருத்திரண்ட வாழ்வின் சித்திரங்களை எழுத்துவடிவில் நமக்குக் கொடுத்த சிறந்த படைப்புக் கலைஞர்.

நான் 2019-ல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஓராண்டு முழுக்க தி. ஜானகிராமனின் படைப்புக்களைத் திரும்ப படிக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தேன். வாழ்க்கை நெருக்கடி அதை செய்ய விடவில்லை. அந்த பெருங் கவலையோடு பல படைப்புகளைத் திரும்ப படிக்க முடியாத வருத்தம்தான் இந்த நூற்றாண்டு விழாவில் வந்து வாய்த்ததே என்று வருந்துகிறேன், என்றாலும் அவரின் படைப்புகளில் பாதிபங்கேனும் திரும்ப படிக்க முடிந்தது.

கரிச்சான் குஞ்சுவுடன் 25 வயதில் தங்களை மிகச்சிறந்த எழுத்தாளர்களாக வருவோம் என்று பிரகடனப்படுத்திக் கொண்டார்கள் அல்லவா அதைப் போலவே தி.ஜா. உருவானார். தி. ஜானகிராமனுக்கு உலகின் உன்னதமான இலக்கியம் எவை என்பதில் மிகத்தெளிவான பார்வை இருந்தது. ஆந்ரே ழீடின் ‘குள்ளன்’ கிரேஸயா டெலடாவின் ‘அன்னை’ நாவல்களை அந்த வரிசையில்தான் தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்தார். பாக்னரின் 20 கதைகளை மொழி பெயர்த்தார். அவை நம் கைக்குச் சிக்காமல் மறைந்து போயின. உலக இலக்கிய மகத்தான அத்தியாயங்களில் ஒருவர் தி. ஜானகிராமன். தமிழில் அசைக்க முடியாத அத்தியாயம். புனைகதை உலகில் மகத்தான கலைஞன்.

நன்றி!



venugopal@thaiveedu.com




**தொகுப்புரை:**

**தொ**ன்மை தொடர்பான பல தலைப்புகளில் குறிப்பிட்ட சில விடயங்கள் ஆயப்பட்டன. தொடர்ந்து, ஆயப்பட்ட விடயங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.

- தொல்காப்பியத்தில் திணைக் குடிகள், வளர்ச்சி.
- புறத்திணையியல் வழி பண்டைய குடிகள், போர் முறைகள், அரச உருவாக்கம்.
- தொல்காப்பியத்தில் மூவேந்தர் பற்றிய குறிப்புகள், நடுகற்கள் முதலிய தொல்லியல் தரவுகள்.
- புறநானூறு 201-ம் பாடல், அசோகரின் கிர்னார் கல்வெட்டு, பதிற்றுப்பத்து, அரச உருவாக்கமும் காலமும்.
- தமிழ்நாட்டு மன்னர்கள், வேளிர் குடி, வேளிர் என்பவர் யார், வேளிர் குடித் தொன்மை, கபிலரும் இருங்கோவேளும், தலையாலங்கானத்துப் போர், கல்வெட்டுச் சான்றுகள் முதலியன.

**தொல்காப்பியத்தில்:**

திணைக் குழுக்களாக இருந்த அரசுகளின் தொடக்கம், காலப்போக்கில் அரசுகளாக உருவாகிவிட்டன என்பது ஆராய்ந்து விளக்கப்பட்டது.

வாழ்வாதாரத்திற்காக நடந்த வெட்சிப் பூசலும், மண் காரணமாகப் பொருத வஞ்சிப் போரும், மதில் காரணமாகப் பொருத உழிஞைப் போரும் என்று வேறுபட்ட போர்களைத் தொல்காப்பியம் காட்டுகிறது. இப் போர்கள் ஒன்றன் வளர்ச்சி மற்றையது என்று கூறமுடியாது. இப்போர்கள் அனைத்துமே அவரவர் வாழ்ந்த நிலம் சார்ந்தவையாகவே காணப்படுகின்றன.

தொல்காப்பியத்தில் வேந்து உருவாகிவிட்டார்கள், சங்கப் புறப்பாடல்கள் ‘அரச உருவாக்கத்தில் மன்னரைப் போற்றி வளர்ப்பவையாகக் காணப்படுகின்றன.’

புறத்திணையியல் 63-ம் நுற்பாவில் ‘போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம்’ என்னும் அடியால் சேர, சோழ, பாண்டியர்கள் தத்தம் அடையாளப் பூவால் குறிக்கப்படுகிறார்கள், இவ்வடிகளில் மன்னர் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை, பூசல் நிறைந்த சேர, சோழ, பாண்டியரின் அரச வளர்ச்சிக் காலத்தை இது குறிக்கிறது என்று கொள்ளக் கிடக்கிறது. இது, அடையாளப் பூ பற்றிக் கூறும் பொதுப் பகுதியாகும்.

தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் அரங்கேறியதாகத் தொல்காப்பியப் பாயிரம் கூறுவது உண்மையாயின், பொ.ஆ.மு. 711-ம் ஆண்டளவில் பாண்டிய மன்னர் தலைமையில் நிலையானதொரு பாண்டிய அரசு இருந்திருக்கிறது. பாண்டிய மன்னர் தமிழோடு இணைத்துப் பேசப்படும் நிலைக்கு உயர்ந்திருந்தார்கள் என்று கொள்ளக் கிடக்கிறது.

சங்க இலக்கியங்கள் அரச உருவாக்கத்தில் ‘முதுகுடி மன்னர்’ உருவாகிவிட்ட நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. வேளிர், மழவர், ஆவியர் போன்ற பழங்குடி மன்னர்கள் மலைப் பகுதியில் உருவாகி விட்டார்கள். அதியர்குடி, ஆய்குடி, வேளிர்குடி முதலிய குடிகள் சிறப்பாகப் பேசப்படுகின்றனர். ஒளியர், ஆவியர், அதியர், மழவர், வழுதியர், பழையர், கொங்கர், சென்னி, கிள்ளி, ஆதன், எல்லி, செழியன், உதியர், பஞ்சவர், கவுரியர், மறவர் முதலிய பல்வேறு குடித் தலைவர்கள் தோன்றிய நிலை உருவாகிவிட்டது.

**மூவேந்தர் பற்றிய குறிப்புகள், நடுகற்கள் முதலிய தொல்லியல் தரவுகள்.**

30 நூற்பாக்களே கொண்ட புறத்திணை இயல், ஆதித் தமிழகத்தில் அரசு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறும் வரலாற்று ஆவணமாகும். தொல்காப்பியத்தில் எந்த ஒரு இடத்திலும் மன்னர்கள், தலைவர்கள், அரசர்கள் எவர் பெயரும்

குறிப்பிடப்படவில்லை.

ஆனால் தொல்காப்பியம் முழுமையிலும் (மொத்த நூற்பாக்கள் 1611) இரு இடங்களில் மட்டுமே மன்னர்கள் பேசப்பட்டுள்ளார்கள்.

முதலாவதாக புறத்திணையியலில்,

***'வேந்திடைத் தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்***
***போந்தை வேம்பே ஆர் என வரூஉம்***
***மாபெரும் தானையர் மலைந்த பூவும்'***

- தொல். பொருள். புறத்திணையியல் நூ. 5

என மூவேந்தரும், தொல்காப்பியரால் அவரவருக்கு உரிய அடையாளப் பூக்களால், அதாவது சேரர், போந்தைப் பூவாலும் (பனை), பாண்டியர் வேப்பம் பூவாலும், சோழர் ஆத்திப் பூவாலும் குறிப்பிடப்படுகிறார்கள். 'வேந்திடைத் தெரிதல் வேண்டி' என்று, போரில் அடையாளம் காண்பதற்காகவே பூக்கள் அணியப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிற்காலத்தில், சீருடை அணிந்து செல்லும் பாடசாலை மாணவர்கள், அவர்கள் அணியும் கழுத்துப் பட்டியால் எந்தப் பாடசாலை மாணவர்கள் என்று அறியப்பட்டார்கள், அதே போல.

இரண்டாவதாக செய்யுளியலில்,

***'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
***நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்***
***யாப்பின் வழியது என்மனார் புலவர்.'***

- தொல். பொருள். செய்யுளியல் நூ. 75.

இதன் மூலம் அறியப்படுவது, தொல்காப்பியர் காலத்தில், தமிழ்நாடு விந்திய மலையை வட எல்லையாகக் கொண்ட பெருநிலப் பரப்பு என்பதும், அந்நிலப் பரப்பைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவரசுகள் ஆண்டன என்பதும் ஆகும்.

## பாண்டிய மன்னர் பற்றிப் பாயிரம் தரும் தகவல்:

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் இயற்றியவர், தொல்காப்பியரது ஒரு சாலை மாணாக்கராக அறியப்படும் பனம்பாரனார் ஆவார். தொல்காப்பியம் நிலந்தரு திருவில் பாண்டியன் அவையத்தில் பாடப்பட்டதாகப் பனம்பாரனார் பாயிரத்தில் பதிவு செய்கிறார். பாடல் பகுதி வருமாறு -

***'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து'***

- தொல்காப்பியப் பாயிரம், அடி 9

### பாயிரத்தால் அறியப்படும் செய்திகளாவன:

- தொல்காப்பியர் காலத்தில் பாண்டிய அரசு என்னும் ஒரு அரசு நிலைபெற்றிருந்திருக்கிறது.
- பாண்டிய மன்னர் தலைமையில் தமிழ் வளர்த்த 'அவை' ஒன்று இயங்கி வந்திருக்கிறது.
- தொல்காப்பியம் என்னும் தமிழ் நூல் பாண்டியன் அவையில் அரங்கேற்றப்பட்டது.
- தொல்காப்பியத்தைக் கற்றறியும் திறனுள்ள மக்கள் குழாம் ஒன்று, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகில்' வாழ்ந்திருக்கிறது.

இவ்வாறு, பொ.ஆ. பின் 711-ம் ஆண்டளவில் தமிழ்நாட்டு அரசியல் நிலை இருந்திருக்கிறது.

## அசோகரது கிர்னர் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டும் தமிழ்நாட்டு வரலாற்றுக் காலக்கணிப்பும்:

மௌரிய மன்னர் அசோகரது கல்வெட்டுக்கள் அவரது 8-ம் ஆட்சி ஆண்டு முதலாக 87-ம் ஆட்சி ஆண்டு வரை பொறிக்கப்பட்டவை. தமிழ்நாடு தவிர்ந்த இந்தியா முழுவதும் இக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவை அசோக மன்னரது ஆணைகளைத் தாங்கி வருவதால் 'அசோகன் ஆணைகள்' என்று அழைக்கப்படுகின்றன. இக் கல்வெட்டுகள், பாறைக் கல்வெட்டுகள், தூண் கல்வெட்டுகள், குகைக் கல்வெட்டுகள் என அவை அமைந்திருக்கும் இடத்தைக் கொண்டு மூன்றாகப் பிரிக்கப்படும். பாறைக் கல்வெட்டுகள், பெரும்பாறைக் கல்வெட்டு, சிறுபாறைக் கல்வெட்டு என இரு வகைப்படும். இக் கல்வெட்டுகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாக அமைந்திருக்கும்.

அசோகர் கல்வெட்டின் முதலாம் அடி பெரும்பாலும் அவர் பெயராலேயே 'தேவநாம்பியஸ் பியதசி' என்று அமைந்திருக்கும். சில கல்வெட்டுகளில் 'அசோக்' என்னும் அவர் பெயர் இணைந்திருக்கும். பெரும்பாறைக் கல்வெட்டுகள் பாக்கிஸ்தான், உத்தரப்பிரதேசம், குஜராத், முதலிய இடங்களில் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் நன்னெறிகளை மக்களிடையே போதிப்பவையாகவே இருக்கும்.

இவற்றுள், எமது ஆய்வுக்குரிய, அசோகரது கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு குஜராத் மாநிலம், கத்தியவாரில் கிடைக்கப்பெற்றது. இது, அசோக மன்னரால், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில், அசோகர் பிராமியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் தொடர்பான அரிய செய்திகளைத் தாங்கி நிற்கிறது. இக் கல்வெட்டுக் குறிக்கும் தமிழ்நாடு தொடர்பான கல்வெட்டுப் பகுதி வருமாறு -

- ***ஸர்வத் விஜிதே(ம்)ஹி தேவாநாம்பிர்யஸ பிர்யதர் ஸினோ ராஞோ***
- ***ஏவமபி ப்ர சந்தேஸீ யதா சோடா, பாடா ஸதியபுதோ கேதளபுதோ ஆ தம்ப***
- ***பர்ணி அன்தியோகோ யோன ராஜா யே வாபி அன்தியகஸ் ஸாமிநோ***

இக்கல்வெட்டின் முதலாம் அடி 'தேவனுக்குப் பிரியமானவன்' என்னும் முன் குறிப்புடன் தொடங்கி, இரண்டாம் மூன்றாம் அடிகள், 'தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மட்டுமன்றி அண்டை நாடுகளான சோழர் (சோடா), பாண்டியர் (பாண்டா), சத்தியபுத்திரர் (ஸதியபுதோ), சேரர் (கேதளபுதோ), இலங்கை (தம்பபர்ணி) ...' தமிழ்நாட்டின் சுதந்திர அரசுகளாக இருந்த அரசுகளின் வம்சங்கள், இலங்கை முதலிய நாடுகளும் குறிப் பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டினை, பிரின்செப் (PRINSEP), வில்சன் (WIL-SON) என்னும் மேலை நாட்டு அறிஞர் இருவர் படித்துப் பொருள் அறிந்துள்ளனர். அவர்களுள் பிரின்செப் என்பார், அசோகரின் மேற்படி அரசாணை அறிவிப்பானது அசோகர் வென்ற நாட்டுப் பரப்பு அனைத்திலும் (CONQUERED PROV-INCE) மற்றும் நம்பிக்கைக்குரிய (FAITHFUL) அரசர்களின் ஆட்சிப் பகுதிகளிலும் செயற்படுத்தப்படுகிறது என்பதாகக் குறிப்பிடுகிறார். நம்பிக்கைக்குரிய அரசர் வரிசையில் மேற் படி சோடா, பாண்டா, சதியபுத, கேதளபுத மற்றும் தொலை வில் இருக்கும் தம்பபர்ணி (THANBAPANNI) என்னும் இலங்கை (பிரின்செப், CEYLON என்று குறிப்பிடுகிறார், இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் சிலோன் என்று அழைக் கப்பட்டது.) ஆகியோர் குறிப்பிடப்படுகிறார்கள். மேலும், ஆண்ட்டியோக்கஸ் (ANTIOCHUS) என்னும் கிரேக்க அரச ரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியும் குறிப்பிடப்படுகிறது (கொங்குக் கல்வெட்டு ஆய்விலிருந்து).

இக் கல்வெட்டு, அசோகர் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிக ளில் மட்டுமன்றி அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தம்பபர்ணி (ஈழம்), யோன அரசரான அன்டியோகஸ் (கிரேக்கம்) மற்றும் அவருடைய அண்டை நாடுகளுக்கும் இரு வகைச் சிகிச்சைகள் அளிக்கப் படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை உறுதி செய்கி றது.

இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஸதியபுதோ' யாரைக் குறிக்கிறது என்பது நீண்ட காலமாகப் பெரும் புதிராகவே இருந்தது. இங்கு, ஏற்கெனவே சேர, சோழ, பாண்டியர்கள் குறிப்பிடப்பட்டாகிவிட்டது. கன்னிங்காம் (Cunningham) உள் ளிட்ட அறிஞர்கள் பலரும் அது, சாத்தவாகனரைக் குறிக் குமா, ஆந்திரரைக் குறிக்குமா என்று பலவாறாக அபிப்பிரா யப்பட்டார்கள்.

## ஜம்பைக் கல்வெட்டு:

'சதியபுத' என்பது தகடூரை ஆண்ட வேளிர் குடி மன்னரான அதியமான் நெடுமான் அஞ்சியையே குறிக்கும் என்பது ஈற் றில் உறுதிப்படுத்தப்பட்டது. 'அதிய' என்னும் தமிழ்ப் பதம் வடமொழியாக மாறும் பொழுது 'சதிய' என்று மாற்றம் பெறு வது இயல்பு. அதியமான் என்பதிலுள்ள 'மான்' என்னும் பிற்ப குதி 'மகன்' என்பதன் திரிபு. இன்றும் யாழ்ப்பாணத்தில் (ஈழம்) மகனைக் குறிக்கும் 'மோன்', 'மேன்' என்னும் வழக்கு உண்டு. மகன் என்னும் பொருள் பெறும் 'புத' (புத்திரன்) என்று பிராகி ருத மொழியில் வழங்கியிருக்கவேண்டும். அது, 'புத்ர' என்று வடமொழி வடிவம் பெறுகிறது.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில் ஜம்பை என்னும் இடத்தில் 1981 ஆண்டு, தமிழி வரிவடிவில் எழுதப் பட்ட, ஏறக்குறைய பொ.ஆ. 1-ம் நூற்றாண்டுக்கு உரியதான, சங்ககாலக் கல்வெட்டு ஒன்று தொல்பொருள் ஆய்வாளர்க ளால் கண்டெடுக்கப்பட்டது. இது, ஜம்பைக் கல்வெட்டு என்று இன்று ஆய்வாளர்களால் அறியப்படுகிறது.

பாடம் - ஸதிய புதோ அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி.

பொருள் - ஸத்திய புத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி என் பவர் தானமாகக் கொடுத்த பாளி (சமணர் படுக்கை) என்பதா கும். இதன் மூலம் பெறப்படுவது -

- இது சங்க கால மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு.
- திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட, பெரும் போர் பலகண்ட மலையமான் திருமுடிக்காரியுடன் அதியமான் போரிட்டு வென்றதாக இலக்கியம் கூறுகிறது.
- இதனை உறுதி செய்வதாகத் திருமுடிக்காரியின் தலைநக ரான திருக்கோவலூரில் இக் கல்வெட்டு கிடைத்துள்ளது.
- அசோகர் கல்வெட்டில் மூவேந்தருக்கு இணையான தமிழ் நாட்டு அரசர் ஒருவரையே அவர் குறிப்பிட்டிருப்பார் என்று கொள்வதே பொருந்தும்.

எனவே ஜம்பைக் கல்வெட்டு குறிப்பிடும் அதியன் நெடுமான் அஞ்சியே அசோகரது கினார்(Girnar) இரண்டாம் பெரும்பா றைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஸதிய புதோ' என் பது தெளிவாகியது.

1981-ல் திருக்கோவலூர், ஜம்பை என்ற ஊர்க் கல்வெட்டின் மூலம் அசோகர் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள 'ஸதிய புதோ' யார் என்பது கேள்விக் குறியாகவே இருந்தது. அது, மலைய மான் திருமுடிக்காரியுடன் போரிட்டுத் தகடூர் எறிந்த கடை யெழு வள்ளல்களுள் ஒருவரான அதியமானே என்பதைச் சந் தேகத்திற்கு இடமின்றி நிறுவியவர் ஆர். நாகசாமி.

ஜம்பைக் கல்வெட்டில் 'ஸதிய புதோ அதியன் நெடுமான் அஞ்சி' என்று குறிப்பிட்ட அதியமான் எந்த அதியமானாக இருந்தாலும் இருக்கட்டும். ஆனால் அவர்,

- வேளிர் குடி மன்னர் அதியமான் என்பதும்,
- அந்த அதியமானுக்கும் கோவலூருக்கும் தொடர்பு உண்டு என்பதும்,

- அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட 'ஸதிய புதோ' வேளிர் குடி அதியமான் என்பதும்,
- அந்த 'மன்னர்' முடியுடை மூவேந்தருடன் வைத்து எண்ணப் படுவதும்,
- மூவேந்தர் பெயர் குறிப்பிடப்படாத நிலையில் 'ஸதிய புதோ' மட்டும் யார் என்று கணிக்கக் கூடியதாக இருப்ப தும்,
- சங்க காலத்தின் 'காலக் கணிப்பிற்கு' இந்தக் கல்வெட்டுப் பதிவு உறுதிசெய்வதும் வரலாற்றில் மிகப்பெரிய விடயமாகும்.

சத்தியபுத்திரன் என்னும் வேளிர் மன்னர், ஒரு சுதந்திரமான சிற்றரசர், தனது ஆற்றலால் வடநாட்டுப் பேரரசர் ஒருவரின் கவனத்தை ஈர்த்து அவர் கல்வெட்டில் இடம்பெற்றதன் மூலம், வேளிர் பெருமையை நிலைநாட்டியதுடன், சங்க கால வர லாற்றை எழுதுவதற்குரிய ஒரு புற ஆவணத்தை உருவாக் கிக் கொண்டார் என்பது அரிய சாதனையாகும்.

சங்க கால வரலாற்றை எழுதுவதற்கு எமக்குச் சங்க இலக்கி யங்களாகிய அகச் சான்றுகளே நெடு நாட்களாக இருந்து வந்தன. புறச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படாத அகச் சான்றுகள் வெறும் இலக்கியங்களே.

அசோகச் சக்கரவர்த்தியின் கிர்னார் கல்வெட்டு தமிழ்நாட்டு வரலாற்றுக் கணிப்பில் ஒரு மைல் கல்லாக அமைந்தது. அசோகரின் காலம் பொ.ஆ. முன் 3-ம் நூற்றாண்டு, அசோக ரின் கிர்னார் கல்வெட்டால் அறியப்பட்ட அதியமான் நெடு மான் அஞ்சியின் காலமும் பொ.ஆ. முன் 3-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

அவ்வாறு கொள்ளுமிடத்து, அதியமானுடன் தொடர்பு கொண்ட மன்னர்கள், புலவர்கள், அப் புலவர்களுடன் தொடர் புடைய மன்னர், புலவர் என்றதொரு பெரு வட்டம் உருவாகக் காணலாம். இவர்கள் அனைவருமே ஏறக்குறைய சமகாலத்த வராக, பொ.ஆ. முன் 3-ம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர்க ளாகக் கொள்ளக் கிடக்கிறது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதியர் என்னும் குறுநில மன்னர்கள் ஆண்டுவந்தனர். அதியர் குலத்தின் முதல்வர் சேரர் குலத்தில் உதித்தவர் என்று அறியப்படுகிறார். மிகப் பழங்காலத்திலேயே அதியமானின் முன்னோர் சேரர் குலத்தி லிருந்து தனிக் கிளையாகப் பிரிந்து தனியாக அரசு அமைத்து நாடாளும் உரிமையைப் பெற்றிருந்தனர். தொல் காப்பியர் 'போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் பெருந் தானை மலைந்த பூவும்' என்று மூவேந்தரை அவரவர் அடை யாளப் பூக்களால் அறிமுகப்படுத்தியுள்ளார். இவற்றில் சேரருக்கு உரியது 'பனை', அதியமான் வழி வந்தவர்களும் பனம் தோட்டையே மாலையாக அணிந்தனர். இவர்கள் சேர ருக்குரிய 'பனை மாலையையும் கண்ணியையும் அணிந்தமை யால், இவர்கள் சேரர் குடியுடன் தொடர்புடையவர்கள் என்று கொள்ளப்படுகிறது. அதியர் குடி, சேரரின் கிளைக் குடியாக இருக்கலாம் என்பதற்கும் வலுவான சான்றுகள் உள.

ஔவையார் அதியமான் மேல் பாடிய புறநானூறு 99-ம் பாட லில் அதியன் தன் முன்னோரைப் (சேரர்) போல பனை மாலை அணிந்தமை கூறப்படுகிறது.

***'தொன்னிலை மரபின்நின் முன்னோர் போல***
***ஈகைஅம் கழற்கால் இரும்பனம் புடையல்'***

- புறநானூறு 99: 4-5

வேளிர் தனியான குடியாக அறியப்பட்டாலும் அவர்கள் சேரர் வழி வந்தவராக இருக்கலாம்.

## புறநானூற்றுப் பாடல் 201 கபிலர் பாடியது:

அசோகச் சக்கரவர்த்தியின் 'கிர்னார்' கல்வெட்டு, தகடூர் யாத் திரை முதலிய ஆவணங்கள் தமிழர் வரலாற்றில் பெறும் முக் கியத்துவம் ஆராயப்பட்டன. தொடர்ந்து சங்கத் தொகை இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் கபிலரால் செய் யப்பட்ட பதிவு ஒன்று ஆராயப்படுகிறது.

## தலையாலங் கானத்துப் போர்:

சங்ககாலத்தில் நடந்த போர்கள் பலவற்றுள்ளும் புலவர்கள் பலராலும் பாடப்பட்ட போர் இதுவாகும். தலையாலங்கானம் என்னும் இடம் தற்காலத்தில் திருவாரூர் மாவட்டத்திலுள்ளது, கானம் என்பது காடு. பிற்காலத்தில் இவ்வூர் தலையாலங் காடு என்று அழைக்கப்பட்டது.

அரச விரிவாக்கக் காலத்தில் முடியுடை வேந்தர்களான சேர மான், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் கிள்ளிவளவனும் திதியன், எழினி, எருமையூரன், இளங்கோ வேண்மான், பொருநன் ஆகிய வேளிர்களுடன் இணைந்து இளையோனாகிய பாண்டியர் நெடுஞ்செழியனை இழிவாகப் பேசிப் போர் தொடுத்தனர். தலையாலங் கானத் தில் அவர்களை எதிர்கொண்ட பாண்டியர் நெடுஞ்செழியன் எதிரிப் படைகளை முறியடித்து அவர்களது அரச சின்னங்க ளான முரசு, வெண்கொற்றக்குடை யாவற்றையும் தனதாக்கிக் கொண்டார் (அகம். 34).

இப் போர் குறித்து பாண்டியர் நெடுஞ்செழியன் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் (75) இடம்பெற்றிருக்கிறது. அக்கால அரசியல், வஞ்சினம் உரைத்தல், சங்ககால மன்னர் உயர்வா கக் கொண்டவை போன்ற பல அரிய செய்திகள் இப் பாடல் வாயிலாக அறியப்படுகிறது.

இப்போர் வெற்றியின் காரணமாக நெடுஞ்செழியன், தலையா லங்கானத்துச் செருவென்ற பாண்டியர் நெடுஞ்செழியன்

என்று வரலாற்றில் போற்றப் பெற்றார்.

இப்போர், இருங்கோவேளுக்குப் பெருந் தோல்வியைத் தந்தாலும் வேளிர் வரலாற்றின் காலத்தைக் கணிப்பதற்கு ஒரு சான்றாக அமைந்தது.

பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டுக்கு உரியதாக மதிக்கப்படும் மாங்குளம் கல்வெட்டு நெடுஞ்செழியன் பெயரைக் குறிக்கிறது. கல்வெட்டு வாசகம் வருமாறு,

'நந்த ஸிரிகுவன் என்ற சமணத் துறவிக்கு பாண்டியர் நெடுஞ்செழியனின் பணியாள் கடலன் வழுதி என்பவர் படுக்கை பொளிந்து கொடுத்தார்.

இந்தக் கட்டுரையின் தேவைக்காக, வேறு உறுதியான தடயங்கள் கிடைக்கும் வரை, பாண்டியர் நெடுஞ்செழியன் காலம் பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இருங்கோவேள் தலையாலங்கானததுப் போரில் பாண்டியர் நெடுஞ்செழியனுக்குத் தோற்றார். பாண்டியர் நெடுஞ்செழியன் காலம் பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டாக ஏற்றுக் கொள்ளப் பட்டால் இருங்கோவேளின் காலமும் ஏறக்குறைய பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

## கபிலரும் இருங்கோவேளும்:

இருங்கோவேளின் அரச சபை, கபிலர், கம்பீரமாக அரச அவையுள் நுழைகிறார், கூடவே பாரிமகளிர் இருவர். கபிலர், தான் அழைத்து வந்திருந்த அரசகுமாரிகள் இருவரையும் முன்னிலைப் படுத்துகிறார்.

***'இவர் யார் என்குவை யாயின் இவரே***
***ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்***
***முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்***
***படுமணி யானைப் பறம்பின் கோமான்***
***நெடுமாப் பாரி மகளிர் யானே***
***தந்தை தோழன் இவர் என் மகளிர்'***

- புறநானூறு 201

இவர்கள் யாரென்று கேட்பாயாயின், தனக்குச் சொந்தமான ஊர்கள் யாவற்றையும் இரவலருக்குத் தானமாக வழங்கியவரான பறம்பு மலையின் தலைவர் பாரியின் மகளிர், நான் அவர்கள் தந்தையின் தோழர், எனவே, இவர்கள் என் மக்கள், என்றார் கபிலர். தொடர்ந்து, 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' என்று ஒற்றை வாய்க்கியத்தில், கபிலர் தம்மை ஒரு அந்தணராகவும் புலவர் என்றும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

கபிலர், கல்வியிற் சிறந்தவர், பாரியின் அவைப் புலவர், மிகப் பெரிய எண்ணிக்கையிலான சங்கப் பாடல்கள் பாடியவர், 'குறிஞ்சிக்குக் கபிலர்' என்னும் பெயர் பெற்றவர், புலவரும் புரவலரும் போற்றிப் பாடிய பெருமைக்கு உரியவர், வரலாற்றுச் செய்திகளைத் தன் பாடல்களில் தன்னிச்சையாகப் பதிவு செய்தவர், புலன் அழுக்கற்ற அந்தணார், தனக்கென வாழாதவர், நட்புக்காகத் தன்னையே அர்ப்பணித்த பேராளர்.

இவர்கள் பாரி மகளிர், நான் அந்தணர், புலவர் என்பதுடன் அறிமுகம் முற்றுப்பெற்றது. தொடர்ந்து, தான் நாடி வந்த காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டிய இருங்கோவேள் பற்றிக் கூறுகிறார்.

***'நீயே ......***
***நாற்பத் ஒன்பது வழிமுறை வந்த***
***வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்***
***தார் அணி யானைச் சேட்டு இருங்கோவே***
***ஆண் கடன் உடைமையில் பாண் கடன் ஆற்றிய***
***ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்***
***யான் தர இவரைக் கொண்மதி வான் கவித்து'***

- புறநானூறு 201, அடி 8-16

நீரோ, பழமையான வேளிர் குடியில் வந்தவர். 49 தலைமுறை கண்டவர், வேளிர்களுக்கு எல்லாம் தலைவர். இருங்கோவேளே! தலைவர் கடமையை அறிந்து அதனைத் தனது கடப்பாடாகக் கொண்டு பாணர்க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்பவர் நீர். யான் தர, இவர்களை நீ ஏற்றுக் கொள்வாயாக என்று கூறுவதாக அமைகிறது இப்பாடல்.

இப் பாடலில் எமது ஆய்வுக்குரிய பகுதி, 'நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே' என்பதாகும். இப் பாடல் அடிகள் கூறும் தகவல் -

'வேளிர் தலைவரான இருங்கோவேள் 49 வழிவந்த வேளிர் குடியின் 50-ம் மன்னர்'.

ஒரு மன்னருக்கு, சராசரி 20 ஆண்டுகள் ஆட்சி என்று கணக்கிட்டால் இருங்கோவேளின் மூதாதையரான வேளிர் குடியின் ஆட்சிக் காலம் ஏறக்குறைய 1000 ஆண்டுப் பழமையானது.

அதாவது தொல்காப்பியரை விடப் பழமையானது வேளிர் திணைக் குழு.

மூவேந்தரை அவரவர் அடையாளப் பூக்களால் குறிப்பிட்ட தொல்காப்பியர், மூவேந்தருடன் சம காலத்தில் அரசாண்ட வேளிர் குடி பற்றி ஏன் குறிப்பிடவில்லை?

பண்டைக் காலம் முதலாக தமிழ்நாட்டின் பெரும்பாலான மேற்கு மலைப் பகுதிகள் வேளிர் இனக் குழுவின் ஆட்சியின் கீழ் இருந்ததைச் சங்க இலக்கியங்களும் பிற சான்றுகளும் உறுதி செய்கின்றன. கபிலர், ஔவையார் போன்ற பெரும் புலவர்கள் பாரி, அதியமான் போன்ற வேளிர் குழுத் தலைவர்களின் நெருங்கிய நண்பர்களாக இருந்து அரிய பாடல்கள்

அவர்கள் மேல் பாடியிருக்கிறார்கள்.

‘தொன்று முதிர் வேளிர் குன்றூர் குணாது’ - (குறு. 164), என்றும்,

‘ஓம்பா ஈகை மாவேள் எவ்வி’ - (புறம் 24) என்றும்,

‘பாரி வேள்பால் பாடினை செலினே’ - (புறம் 105) என்றும்,

‘மலை கெழு நாடன் மாவேள் ஆஅய்’ - (புறம் 135) என்றும்,

பாடப்பட்ட பல சங்கப் பாடல்கள், வேளிரை, ‘முதுகுடிகள்’ என்றும் ‘மலைநாட்டை ஆண்டவர்கள்’ என்றும் ‘வள்ளல்கள்’ என்றும் கூறுகின்றன.

***‘வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக் களவின்***
***ஆதந்து ஓம்புதல் மேவற்றாகும்’***

- புறத்திணையியல் 2

தொல்காப்பியர் காலத்தில், குறிஞ்சி நிலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட ஊர்காவல் நடைபெற்றிருக்கிறது. வேந்தனுடைய ஆணைப்படி, ஊரின் முனைப் பகுதியில் இருக்கும் வீரர்கள், வேற்றுப் புலத்தில் ஆநிரை கவரச் செல்வார்கள், அம் முனைப் பகுதியில் தங்கியிருக்கும் முனைவர்களின் தலைவர், படையைத் தலைமை தாங்கிச் செல்வார். இந் நூற்பாவில், ‘ஆதந்து ஓம்பல்’ என்றது, கவர்ந்து வந்த பசுக்களை, பசுக்களின் சொந்தக்காரர் மீட்டுச் செல்லாதவாறு பாதுகாத்தலாகும்.

தொல்காப்பியர் காலத்தில் வெட்சிப் போருக்குப் போன திணைக் குழுவினர் வேளிரா ? இது, ஆய்வு செய்ய வேண்டிய விடயம். வேளிர் காலம் தொல்காப்பியரை விடவும் தொன்மையானது என்பதில் மாற்றுக் கருத்தக் கிடையாது.

தொல்காப்பியத்தின் எவ்விடத்திலும் வேளிர், அவர்கள் அடையாளப் பூவால் கூடக் குறிப்பிடத் தவறியமை வேளிர், சேரருடன் இணைத்துப் பார்க்கப்பட்டிருக்கலாம். வேளிர், சேர நாட்டின் எல்லைப்புற மலைகளில் பெரும்பாலும் ஆட்சி செய்தமையும் வேளிர், சேரரின் எல்லைக் காவலராக இருந்திருக்கலாமோ என்ற ஐயத்தையும் தருகிறது.

வேளிர், சேரரின் அடையாள மாலையைத் தமக்குரியதாகக் கொண்டிருந்தமையும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

சேரருடன் வேளிருக்கு இருந்த திருமணத் தொடர்புகள் காரணமாகவும் இருக்கலாம்.

இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், மூன்றாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய இருவரும் சகோதரர்கள். இவர்களின் தந்தை வெளியன் வேள், தாய் வேள்மாள் நல்லினி. இருவரும் வேளிர்.

நான்காம் பத்தின் பாட்டுடைத் தலைவர் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் பெருஞ்சேரல் இரும் பொறையும் சகோதரர்கள். அவர்கள் தந்தை வேள் ஆவிக் கோமான் பதுமன், வேளிர் குலத்தவர்.

ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் தந்தை வேள் ஆவிக் கோமான், வேளிர் குலத்தவர்.

ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவர் இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை மையூர் கிழான் வேண்மான், தாய் வேள்மாள் அந்துவன் செள்ளை, இவர்களும் வேளிரே. அழிந்தவை போக எமக்கு இன்று கிடைத்துள்ள பதிற்றுப்பத்தின் எட்டுப் பத்துக்களில் ஆறு பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் நேரடியாக வேளிருடன் திருமணத் தொடர்பு கொண்டவர்கள். வேளிர் தனியாக அடையாளப்படுத்தப் படாமைக்கு இதுவும் காரணமாகலாம். ஆனால், வேளிர் தொன்மையானவர்கள் என்பது மறுக்கமுடியாதது.

## ஆதிச்ச நல்லூர் அகழாய்வும் வேளிரும்:

தொல்காப்பியத்தில் (பொ.ஆ.மு. 711) அரச விரிவாக்கம் தெளிவாகவும், சிறப்பாகவும் பேசப்பட்டிருக்கிறது. ஆதிச்ச நல்லூர் காலம் பொ.ஆ.மு. 905 என்று கரிமப் பரிசோதனையால் அறியப்படுகிறது. ஆதிச்ச நல்லூரில் இரும்புத் தொழில், நெசவுத் தொழில், தச்சுத் தொழில், பானை வனையும் தொழில் முதலியவை பெரியளவில் நடைபெற்றிருக்கின்றன. ஆதிச்ச நல்லூர் ஒரு பெரும் வணிக நகரமாக இருந்தமை சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது. வணிகம் மிகப் பெரியளவில் நடந்திருக்கிறது. ஒரு பெரும் வணிக நகரத்தைக் கொண்டு நடத்துவதற்கான பெரியதொரு அரசியல் கட்டமைப்பு ஆதிச்ச நல்லூரில் இருந்திருக்கவேண்டும். ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த மக்கள் வேளாண் தொழிலை மேற்கொண்டு வேளாண் குடிகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவு.

பெருங் கற்படைக் காலத்தில் வேளிர், சிறு சிறு குழுத் தலைவர்களாக உருப்பெற்றிருக்க வேண்டும். பெருங் கற்படைக் காலத்தைத் தொடர்ந்த ஆதிச்ச நல்லூர் பண்பாட்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் சிறுகச் சிறுக வளர்ந்த வேளிர் குடிகள் பெரு வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

ஆதிச்ச நல்லூர், திருநெல்வேலிக்கு அண்மையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். பாரியின் பறம்பு மலை அரசும் ஆதிச்ச நல்லூர் பகுதியில் அமைந்திருப்பது என்பது வேளிர் ஆதிக்கத்தில் இப் பகுதி வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்று கருத இடமளிக்கிறது.

வேளிர் பொ.ஆ.மு. 1000-ம் ஆண்டளவில் சிறு குழு நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்று கொள்ளலாம். தொடர்ந்து பதிற்றுப் பத்தின் அடிப்படையில் சேர மன்னர்கள் காலம் தொகுக்கப்படுகிறது.

தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com

# தமிழ்வலை - 98


‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-98 வினா

### இடமிருந்து வலம்

4 ஒரு தமிழக மாசிகை

6 தொலைவான

7 நீக்கு

8 வெந்நீரில் ஆக்கு

9 புலவர்

11 ஒரு புள்

12 ஒரு நிறம்

14 அகவை

15 ஒரு விளையாட்டு

17 சின்னம்மா

### மேலிருந்து கீழ்

1 வேகா எவையும் எனத் துவங்கும் வாக்கின் இறுதி(2-3)

2 கொடுத்த பொருளை அடுத் தபொழுதில் பாடும் பாட்டு

3 ஒரு நங்கையின் முதல் மேடை நடனம்

5 பாதை

8 நெடுங்கணக்கு

9 கந்தபுராண ஆசிரியர்

10 வலு

11 அம்பு


13 பாலஸ்தீண் விடுதலை அமைப்பின் நிறுவனர்

16 மொட்டையடி


விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை - 97க்கான விடைகள்



## தமிழ்வலை-97 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

புஷ்பம் சிவநாதன், பாரிஸ்.
உமா கதிர், ஏஜக்ஸ்.
தேவாம்பிகை அரவிந்தன், UK.
சபேசன் சிவராஜா, ரொறன்ரோ.
அண்ட்ரு ஜூட். நோத்யோர்க்
த.செ. நடராசா, ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**தவராணி நாமகள்**
யாழ்ப்பாணம்.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# வாழ்வுரிமை

05

## மா. சித்திவிநாயகம்

மிருகப் பண்ணையின் வெளியே இருந்த பிரமாண்டமான தொலைக்காட்சிக்கு முன்னால் கிளிநொச்சியின் அதிக மனிதர்கள் குழுமியிருந்தனர். இஸ்ரேல் எனும் யூத தேசம், பாலஸ்தீனிய அப்பாவிகளின் தலையில் போடும் குண்டுகளை அதில் பார்த்து ரசித்த வண்ணம் அவர்கள் பொழுது கழிந்து கொண்டிருந்தது. இவ்வாறான சம்பவம் தங்களுக்கு முள்ளிவாய்க்காலில் முன்பு நடந்ததென்பதை அவர்கள் முழுவதுமாக மறந்தவர்கள் போலிருந்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் முரணோடு பேசினார்கள்.

ஆசிர்வதிக்கப்பட்ட பூமியில் கைவைத்தால் கடவுள் சும்மா இருப்பாரா? அது கடவுளின் பூமி என்றான் பைபிள் படிக்கின்ற சைமன். யூதர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்காமல் நாம் ஓயமாட்டோம் என்றான் ஓங்கி மேசையைக் குத்தியபடியே கரீம் காக்கா. எஞ்சியிருந்த மாற்று மதம் சார்ந்தவர்கள் ஆளுக்காள் அது இஸ்ரேலுக்குத்தான்... அது பாலஸ்தீனுக்குத்தான்...

கட்சி கட்டி இரண்டாகப் பிரிந்து சண்டைக்குத் தயாரானார்கள்.

நல்ல வேளை ஸ்ரெவ்வனி அங்கு வந்தாள். அவள் வந்ததும் எல்லோரும் பெட்டிப் பாம்பாகினார்கள்.

இஸ்ரேலியப் பாரம்பரியம் பேண் அமைச்சர் அணுக்குண்டு போட்டேனும் பாலஸ்தீனரை அழிப்பேன் என்று வெளிப்படையாகச் சூளுரைத்த செய்தியைத் தொடர்ந்து அவரைப் பதவியிறக்குவதாக இஸ்ரேல் நாடகமாடிய செய்தியும், மறுபுறத்தில் இந்த நிமிடம் வரை இஸ்ரேல், பாலஸ்தீனமெங்கும் குண்டு போட்டுக் குழந்தைகள் உட்பட அனைவரையும் அழித்துக் கொண்டிருக்கின்ற செய்தியும் ஒன்றாகவே தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார்கள். இதுதான் முதலாளித்துவ சித்தாந்தம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது!

2014-ல் டோரிட் ராபினியன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட எல்லை வாழ்க்கை (Border life) எனப்படுகின்ற அற்புதமான நாவல் 2015-ம் ஆண்டிற்கான பெர்ன்ஸ்டீன் பரிசு பெற்ற ஹீப்ரு மொழி நாவல்.

ஒரு யூதப் பெண்ணுக்கும் பாலஸ்தீனிய ஆணுக்கும் இடையிலான காதல் விவகாரத்தைப் பற்றிய உன்னதமான அந்த நாவலைக்கூட இஷ்ரேலியர்கள் தடை செய்தார்கள். இது யூதர்களுக்கும், யூதர் அல்லாதவர்களுக்கும் இடையிலான திருமணத்தையும், பரஸ்பர அன்பையும் ஊக்குவித்துவிடும் என்கின்ற கோபம் அவர்களுக்கு.


என்றோ பிறந்த வர்ணாச்சிரமக் கதையை வைத்து இன்றைக்கும் இங்கு சாதி பிரிப்பதைப் போலத்தான்.

பைபிளில் என்றோ பிறந்த ஆபிரகாமின் மூத்த தாரப் பிள்ளைகளுக்கும் இளைய தாரப் பிள்ளைகளுக்குமான இன்றைய போர் என்று சொல்லப்படுகின்ற இந்த ஏமாற்று என்று பெருமூச்செறிந்தாள் ஸ்ரெவ்வனி.

கரீம் காக்கா கரடிப்போக்குச் சந்தியிலிருந்த அவனது தோழனின் கடையிலிருந்து மட்டன் றோல்ஸ் கொண்டுவந்திருந்தான். எல்லோரும் ரசித்து ருசித்துச் சாப்பிட்டார்கள். 'இளங்குட்டி ஆட்டின் இறைச்சி எவ்வளவு ருசி... இப்போவெல்லாம் மட்டன் றோல்ஸினுள் ஓரிரண்டு துண்டு மட்டன்களைத்தான் வைக்கின்றார்கள் மிகுதியெல்லாம் வெறும் கிழங்குதான்' என்கிற மனிதரின் மாமிசவெறியை மிருகங்கள் உள்ளிருந்து கேட்டவண்ணமேயிருந்தன.

உள்ளே மிருகங்கள் ஒருவரையொருவர் கொல்கிற இந்த மூளையற்ற மனிதர்களை எவ்வாறு விரட்டுவது என்றே சதாகாலமும் சிந்தித்தன. ஆனால் அவற்றின் திட்டங்கள் எதுவும் இதுவரை நிறைவேறிய பாடில்லை. ரங்கரின் இழப்போடு நமக்காகத் திட்டமிடுபவர்கள் எவரும் நமக்கில்லை என்று குறைப்பட்டன விலங்குகள்.

அதிலும் குரு என்றழைக்கப்பட்ட குதிரை இனியும் காலந் தாழ்த்துவதால் எந்தப் பிரயோசனமுமில்லை. எம் உயிரின் விலை நிர்ணயிக்கப்பட்டு நாம் உட்கார்ந்திருக்கின்றோம். நாம் உடனேயே எதையாவது செய்யவேண்டும். இவர்களை விரட்ட என்னிடம் ஒரு வழியுண்டு என்றது. நாம் எல்லோரும் சேர்ந்து இரவு 12 மணிக்கு ஒரே குரலில் கத்தினால் பேய்களுக்கும், ஆவிகளுக்கும் பயப்படுகிற இந்த மனிதர்கள் அந்த வித்தியாசக் குரலை பேயென்றெண்ணிப் பயப்படுவார்கள். ஒவ்வொரு நாளும் இரவில் நாம் ஒலியெழுப்பினால் அந்த விபரீத ஒலியினால் அவர்கள் இந்த இடத்தை விட்டுப்




போக வாய்ப்புண்டு என்றது குதிரை குரு.

பன்றித் தலைவனான தேவன் சிரித்தான்.

நீ ஒல்லாந்துக்காரரின் ஒட்டுறவான குதிரை. இப்படித்தான் தான்தோன்றித் தனமாகப் பேசுவாய். எங்கும் பூட்டியிருக்கிற கமராக்கள் எங்களின் காட்டுக் கத்தலை அவர்களுக்குக் காட்டிக் கொடுக்காதா? அவர்கள் அதன் பிறகு எம்மைத் தனித்தனியாக அடைத்து விட வழிவகுக்கின்றாயா? என்றான் தேவன் கோபமாக.

குதிரைக்குக் கடுங்கோபம் வந்தது. நாம் ஒல்லாந்துக்காரரால் கொண்டு வரப்பட்டவர்களல்ல. மணிவாசகரும் சிவனும் உள்ள போதே நாம் இங்கு முன் தோன்றி வாழ்ந்த குதிரைகள் என்றது.

பழங்கதைகள் பேசுவதில் வல்லது அந்தக் குதிரை.

தெரியாததைத் தெரிந்தது போலப் பேசி எல்லோரையும் பிரமிக்க வைப்பது குரு. மிருகங்கள் எல்லோர்க்கும் அது சொல்கிற கதைகள் பிடிக்கும். நெடுந்தீவுக் குதிரையான குரு காலங்காலமாக அங்குள்ளோர் நம்பும் கதையொன்றைச் சொல்லத் தொடங்கிற்று.

முன்னர் ஓர் காலத்தில் வெடியரசர் இராட்சியம் ஈழக் கடலையும், ஈழப்பெரு நாட்டையும் ஆண்ட பேரரசாகவிருந்தது. மருந்து மாமலை வனம் என விரிந்த பெருந் தேசத்தை வெடியரசர் என்ற மன்னர் கோட்டைக் காடு என்னும் பகுதியில் இருந்து ஆண்டு வந்தார். அந்த வனம் மிளகு உட்பட அதிசயிக்கத்தக்க அரிய மூலிகைவகைகளின் பெருவனம். இந்தியப் பெருங் கோவில்களுக்குப் பூவும், பாலும், தயிரும் பூசைக்கு அனுப்பிய பெருநகர். கொண்டுவானாலாந்துக் காலம் (Gondwanaland) அது. அப்போது தீவுகளாக ஈழமண் பிரிக்கப்படவில்லை. கண்டங்கள் நகராக் காலம். எகிப்தின் செராபிஸ்ஸில் (The Serapeum of Alexandria) கண்டெடுக்கப்பட்ட மிளகுப் பானை இந்நிலங்களிலிருந்துதான் சென்றிருக்க வாய்ப்புண்டு.

வெடியரசரின் பேரரசு நெடுந்தீவு மற்றும் சூழவுள்ள பெருவூர்களையும் தன் ஆட்சிக்குட்படுத்தியிருந்தது. வெடியரசர் என்ற பெயர் அங்கு ஆண்ட வேறு சில மன்னர்களும் பின்னாட்களில் தங்களுக்கு இட்டுக் கொண்ட பெயர். அந்த அரசர் வேட்டையாடுவதில் தீவிர விருப்புடையவர். ஒரு மனோரம்மியமான காலை வேளையில், தன் வேட்டைக் குழுவோடு காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். பலர் கூட இருந்தாலும் அரசர் தானேதனித்து மிருகங்களை வேட்டையாடுவதே சிறப்பு என்றெண்ணுபவர்.

அவரைச் சுமந்து சென்றவர் என் பாட்டனுக்குப் பாட்டன் அஸ்வத்தாமன். மகாபாரதக் கிருஷ்ணர் அளித்த சாபத்தால் இன்னும் நெடுந்தீவுக் காடுகளில் சிரஞ்சீவியாக அலைகிறவர். அஸ்வத்தாமன் என்பவர்கள் மத்தியில் அரசரோ தன் குதிரைக்கு அஸ்வத்தாமா என்று பெயர் வைத்திருந்தார். தன் பரிவாரத்தையும் குதிரையையும் விட்டு விட்டு வேட்டையில் குறியாயிருந்த மன்னர் தனது வேட்டைக்கான மிருகங்களை அடர்ந்த காட்டிடையே தேடித் தன்னந் தனியாக முன்னேறிச் சென்றார்.

அடர் கானகத்துள் திக்குத் திசை தெரியாது. காட்டின் அடர்பகுதியில் ஆழத் தொலைந்த அரசர் வானத்தை அண்ணாந்து பார்த்தார். அங்கு வானமும் இல்லை. திசையும் இல்லை. அவர் நாலுபுறமும் ஓடினார். அவர் எங்கு சென்றாலும், அவர் தொடங்கிய இடத்திலேயே திரும்ப வந்து நின்றார். பயமறியா அரசரின் நரம்புகளில் கடும்பீதி பரவியது.

வனத்தின் பயங்கர அமைதியைக் கிழித்தபடி பறவைகள் அலறின. திடீரென்று, தூரத்தில் பெருஞ்சூறை விசையாகச் சுற்றியது. சுழன்ற அந்தக் காற்றின் உள்ளே மிகப் பெரும் ஒளி தோன்றியது. கண்ணைக் கூசச் செய்த அந்த ஒளியிலிருந்து ஓர் உருவம் மெல்ல நடந்தது.

அது யார் என்று உற்றுப் பார்ப்பதற்குள் அரசரை நோக்கி அழகான பெண் தேவதை ஒருத்தி வந்தாள்.

இந்த அடர் காட்டில் இவள் என்ன செய்கிறாள்? இவளும் ஒரு வேளை நம்மைப் போல் காட்டில் தொலைந்த பேதையோ என்றெண்ணிய அரசர் அம்பை உருவியபடியே அவளை நெருங்கினார்.

காட்டைப் பற்றி அறிந்தவளெனில் ஒருவேளை அவள் எனக்கு உதவலாம். இதை விட, இந்த இக்கட்டிலிருந்து நான் வெளியேற வேறு வழியில்லை என்பதை உணர்ந்த அரசர் அவளை அண்மித்துப் 'பெண்ணே, நான் இத்தேச அரசர், வேட்டையாட வந்து சிக்கிக் கொண்டேன். இப்போது நான் இந்தக் காட்டில் தொலைந்துவிட்டேன். இந்தக் காட்டில் இருந்து வெளியேறுவது எப்படி என்று எனக்குச் சொல்வாயா என்று வெடியரசர் பவ்யமாக வேண்டினார்.

காட்டில் திசைமாறிவிட்ட தன் சோகக் கதையை அவளுக்குச் சொன்னார்.

அந்தப் பெண் மரநிழலில் இருந்து வெளியேறித் தன் அழகிய கூந்தலை ஒரு கையால் ஒதுக்கியபடியே, 'நான் நீண்ட காலமாக இங்கு தான் வசிக்கிறேன். இந்தக் காட்டின் ஒவ்வொரு அங்குலமும், மூலை முடுக்கும் எனக்கு நன்றாகவே தெரியும். நான் உங்களுக்கு நிச்சயம் உதவ முடியும் என்றாள். ஈச்சம்பழங்களைப் பறித்து உண்ணக் கொடுத்தாள். கைப்பையில் வைத்திருந்த சிமிளில் இருந்து தேன் கலந்த இலந்தைப் பழரசம் கொடுத்தாள். அரசருக்கு மகிழ்வாக இருந்தது.

'நெடுங்காலமாக நான் இங்கே காட்டில் என் வேலையாட்களுடன் தனியாக வசித்து வருகிறேன். நான் வழியைக் காட்டுவதற்கு முன், சில நாட்கள் என் வீட்டில் தாங்கள் விருந்தாளியாக இருக்க வேண்டும் பிரபு' என்று பணிவான வேண்டுகோள் விடுத்தாள்.

அரசர் யோசித்தார்.

திக்குத் தெரியாத இந்தக் காட்டில் தொலைந்து போவதை விடவும் இன்னும் சில நாட்கள் தங்குவதில் தவறில்லை என்று அவர் ஒப்புக்கொண்டார்.

அந்தப் பெண் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அரசருக்கு மிகுந்த ஆச்சரியம். குட்டி அரண்மனை போன்றிருந்தது அவளது வீடு. அவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். இரவு வெகுநேரம்வரை விழித்திருந்து பேசிச் சிரித்துக்கொண்டே இருந்தார்கள், உணவும், உறக்கமும் ஒன்றாகவே கழிந்தது. அந்தப் பெண் அவளது அரண்மனை மற்றும் சுற்றியுள்ள காடுகளைச் சுற்றிக் காட்டினாள், அவர்கள் அங்கு வேட்டையாடி மகிழ்ந்தார்கள். அவளும் வேட்டையில் மிகவும் வல்லவள்.

நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் மாறியது. தன்னை அறியாமலேயே இவர்களது நட்புக் காதலாக மாறி, அரசனும், அந்தப் பெண்ணும் ஒன்றிக் கலந்து உறவாடி மகிழ்ந்து காந்தர்வ மணம் புரிந்துகொண்டனர்.

நெடு நாட்களின் பின் அவரது குதிரை அஸ்வத்தாமா அவரைத் தேடி வந்தது. அரசருக்கு மகிழ்ச்சி, அரசர், 'என் அன்பிற்கினிய ராணியே, நான் மீண்டும் என் ராஜ்யத்திற்குச் செல்ல வேண்டும். ஆட்சியாளர் இல்லாமல் என் ராஜ்ஜியத்தில் மக்கள் இடர்ப் படுவார்கள். அவர்கள் என்னைத் தேடுவார்கள். தயவுசெய்து என்னுடன் நீங்களும் வாருங்கள்' என்று அவளை அழைத்தார்.

அவள் அவரை மிகவும் நேசித்தாலும், அவள் தன் காட்டையும், தனது வீட்டையும் விட்டு வெளியேறமாட்டேன் எனப் பிடிவாதம் செய்தாள். நீங்கள் போய் வாருங்கள் என்று அவரை

வழியனுப்பிய அவளுக்கு, அவர் மீண்டும் அவளைப் பார்க்க வருவதாக உறுதியளித்துப் பயணித்தார்.

ஆசைக் காதலியை விட்டுப் பிரிந்து போவதில் அவர் வருத்தமாக இருந்தபோதிலும், அரசராக மக்களுக்குத் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்பதில் கருத்தோடு இருந்தார். அவர் தனது பிரிய ராணியிடம் அவளைப் பார்க்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திரும்பி வருவேன் என்று சத்தியம் செய்தபின் தன் அரண்மனைக்குப் புறப்பட்டார்.

வெடியரசர் திரும்பி வந்ததும், மக்கள் மிகவும் ஆரவாரத்துடன் அதனைக் கொண்டாடினர். இருப்பினும், நீண்ட காலமாகத் தனது ராஜ்யத்தை விட்டு வெளியேறியதால், நிறைய வேலைகளை அவர் செய்யவேண்டியிருந்தது.

அரசர் தன் அரச வேலைகளில் மிகவும் ஈடுபாட்டோடு இருந்தார், அவர் தனது அன்பு மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைவிற் கொள்ள மறந்துவிட்டார்.

இப்படியே பல மாதங்கள் பறந்தோடி விட்டன.

ஒரு நாள், அரசர் தூங்கிக் கொண்டிருக்கும் போது, குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. படுக்கையிலிருந்து எழுந்து அழுகை எங்கிருந்து வருகிறது என்று அவர் சுற்றிலும் பார்த்தார்.

அவருக்கு அதிர்ச்சி, அவரது வீட்டு வாசலில் ஒரு அழுகின்ற குழந்தையைக் கண்டார். இது யாருடைய குழந்தை? இந்தக் குழந்தையை என் வீட்டு வாசலுக்குக் கொண்டு வர யாருக்குத் துணிச்சல் உண்டு? அவர் குழந்தையை எடுத்துக் கொண்டு தனது வேலைக்காரர்களை, காவலர்களை அழைக்கத் தொடங்கினார்,

ஆனால் ஒரு பிரகாசமான ஒளி மறுபடியும் அங்கு உண்டாகி, அந்த ஒளியிலிருந்து ஓர் உருவம் அவருக்கு முன்னால் தோன்றியது. அது வேறுயாருமல்ல அவருடைய காந்தர்வ மனைவி தான்.

அந்தக் குழந்தை எங்கள் குழந்தை. இனி நான் அந்தப் பெண் குழந்தையை உங்கள் பாதுகாப்பில் விட்டு விடுகிறேன். நீங்கள் இங்குள்ள நல்ல மனிதர்களைப் போல அவளை நடத்துங்கள் என்றாள்.

'நல்ல மனிதர்களா? அப்படியெனில் நீங்கள் யார்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று வியப்போடு வினவினார் அரசர்.

'நான் மானிடப் பிறவியல்ல. ஓர் தேவதை. இந்த நெடுந்தீவின் இயற்கையின் பாதுகாவலர். நீங்கள் அவளை ஒரு மனிதக் குழந்தையைப் போல விரும்பி வளர்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 'கோகிலா' என்பது அன்பு, தாராளம், தயவு, அமைதி, மற்றும் சுதந்திரத்திற்காகப் போராடுகின்ற சொல், இத் தீவகத்தின் தொலைநோக்கு அவள். அப்பெயரையே அவளிற்குச் சூட்டுங்கள்.

அவர் பதில் சொல்வதற்குள் அவள் மறைந்தாள். முன்பெல்லாம் மக்கள் கொள்ளிவாய்ப் பிசாசுகள் ஊரெங்கும் உள்ளதாகச் சொன்னாலும் அவர் அது பற்றி நம்பியவரல்ல.

ஆனால் இன்று ஒளித் தேவதையைக் கண்முன்னே காண்கின்றாரே.

வெடியரசர் தனது மகளைத் தனது அறைக்கு அழைத்து வந்தார். அவரிடம் விடை தெரியாத கேள்விகள் ஏராளம், ஆனால் மகளின் இனிய புன்னகையை ஒரு முறை பார்த்தாலே அவருடைய பிரச்சினைகள் அனைத்தும் கரைந்துபோயின. அவள் தன் அம்மாவைப் போலவே மிக அழகாகவும், அமைதியாகவும் இருந்தாள். அவளுக்கு கோகிலா என்றே பெயரிட்டார்.

எல்லோராலும் விரும்பப்படுகின்ற, ஞானம் மிக்க இளவரசியான கோகிலா அழகான, கனிவான உள்ளம் கொண்ட இளம் பெண்ணாக வளர்ந்தாள். காண்போரை நேசிக்கின்ற அவளை நெடுந்தீவு மக்கள் போற்றி நேசித்தனர்.

கோகிலா தனது தாயின் சாயலில் இருந்தமையால் அரசருக்கு அவரது மனைவியினை என்றும் நினைவூட்டுபவளாக அவள் இருந்தாள். பல காலமாக அவர் தன் மனைவியை நாடு, காடு என்று எங்கும் தேடியலைந்தார், எட்டுத் திக்கும் அவளின் சாயலுள்ள உருவம் வரைந்து தேடக் கட்டளையிட்டார். ஆனால் அவரின் எந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இறுதிவரை அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளைத் தெற்குக் காட்டில் அம்மனாய்ச் சிலை செய்து வழிபடலானார்.

மந்திரிகளின் வற்புறுத்தலின் பேரில் மறுமணம் புரியவேண்டிய நிர்ப்பந்தம் அரசருக்கு வந்தது. அவருக்கு ஆண் வாரிசு இல்லாததனாலும், கோகிலாவை வளர்க்க ஓர் அம்மா தேவையென்பதாலும் வேறு வழியின்றி மீண்டும் திருமணம் செய்து கொண்டார்.

அண்மித்த வேறொரு ராஜ்ஜியத்தைச் சேர்ந்த இளவரசி ஆதிரையை அவர் திருமணம் செய்துகொள்ள கோகிலாவிடம் அவர் சம்மதம் கேட்டார். அவள் அப்பாவை மிக நேசித்ததால், உடனேயே ஒப்புக்கொண்டாள், 'எனக்கு எல்லாமே நீங்களே அப்பா... உங்கள் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி... அப்பா..' என்று அவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் கோகிலா.

திருமணம் முடிந்தபின்,

அவரின் இரண்டாவது மனைவி அனைவரிடமும், குறிப்பாக தேவி கோகிலாவிடமும் மிக அன்போடு இருந்தார். சில மாதங்களுக்குப் பிறகு, ராணி கர்ப்பமானாள். அவள் கர்ப்பமான செய்தியைக் கேட்டு யாவரும் மகிழ்ந்தனர். இந்தக் கர்ப்பத்தின் பின் ராணி ஆதிரை தலைகீழாக மாறிப்போனாள். தன் கணவரின் மூத்த பிள்ளையின் மேல் பொறாமை, கோபம் கொண்ட சுயநல ராணியாக மாறினாள். அவளது நடவடிக்கைகள் நாளுக்கு நாள் மோசமாகின. வேண்டாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தி இளவரசி கோகிலாவை வெளியே அனுப்ப வேண்டுமென்று அவள் அழுது அடம் பிடித்தாள். இந்தச் சம்பவங்கள் ராஜாவை வருத்தப்படுத்தியது, அவர் அவளுக்குப் பல அறிவுரைகள் கூறினார். பல தடவைகள் வாக்குவாதப்பட்டார். ஆனால் அவளோ இனிமேல் அதைப் பற்றிப் பேசக் கூடாது. அவள் இங்கே இருப்பது கேடு என்றே தன் கணவருக்குச் சொல்லி வந்தாள்.

அதனால் அவளில் கணவருக்கு கோபம் உண்டாகியது. ஆயினும் கர்ப்பிணியான பட்டத்து இராணியை அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

கோகிலா இருக்கும் வரை அரசர் தன்னோடு சந்தோசமாக இருக்க மாட்டார் என்றெண்ணிய இராணி ஆதிரை, எப்படியாவது கோகிலாவைப் பழிவாங்கி ராஜ்யத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதில் உறுதிகொண்டு ஒரு மந்திரவாதியைப் பார்க்கச் சென்றார். தன் வளர்ப்பு மகளுக்குச் சாபம் கொடுத்து அழிக்க அந்தச் சூனியக்காரிக்குப் பெரும் பணங் கொடுத்துக் கட்டளையிட்டாள்.

அன்றிரவு, கோகிலா தூங்கும்போது, அரண்மனை வளாகத்தின் இளவரசியின் அறைக்குள் ஒரு வாசனைத் திரவியத்தை சூனியக்காரி தூவினாள்.

இரவு முழுவதும் அந்த வாசனையை நுகர்ந்த கோகிலா பின்னிரவில் பெருவலியால் துடித்தாள். தண்ணீர்... தண்ணீர்... என்று நாவரளக் கத்தினாள். அவளது கூக்குரலை எவரும் கேட்காமல் நாலு சுவர்களுக்குள் அவள் குரல் அடங்கிப் போயிற்று.

விடியலின் அமைதியைக் கிழித்தபடி கோகிலா அலறினாள்.

‘கடவுளே என்னுடைய தோல்! எனக்கு என்ன நடக்கிறது?’ இளவரசியின் அறையைப் பலரும் முற்றுகையிட்டார்கள்.

அவள் உடல் முழுவதும் சீழ் நிரம்பிய புண்களால் மூடப்பட்டிருந்தது. அழுகிய சதைகளாய் அவளது அழகுடல் பிய்ந்து தொங்கியது. அவள் நகங்களால், அரிக்கின்ற அவளது புண்களைக் கீறிக் கீறி மேலும் மேலும் இரத்தமாக்கினாள். ஒரு பெரும் தொழுநோய்ப் பைத்தியக்காரியைப் போன்றாகி விட்டாள் கோகிலா.

அவளின் தந்தையைத் தவிர வேறு யாரும் அவளை நெருங்கத் துணியவில்லை. எல்லோரும் அவளைப் பார்த்துப் பயந்தார்கள். என்ன நடந்தது என்று எவருக்கும் தெரியவில்லை.

தன் மகளைத் தாங்க முடியாத வேதனையுடன் பார்த்து அரசர் பெருங் கவலை கொண்டார். எட்டுத் திக்கிருந்தும் அதி விசேட மருத்துவர்களை வரவழைத்தார். பல மாதங்களாக, அவர் தனது அன்பு மகளைக் குணப்படுத்த எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போயின. புதிய புதிய மருந்துகளை ஒவ்வொன்றாகக் கொடுத்தார்கள், ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. இளவரசி கோகிலா எல்லோராலும் கைவிடப்பட்டு ஒதுக்கப்பட்டாள்.

அந்தத் தருணத்திற்காகவே காத்திருந்த ராணி ஆதிரை, மன்னரிடம் போய், அவரது காதுகளில் அன்புருகக் கிசுகிசுத்தாள். கோகிலாவில் மிகுந்த கவனிப்பும், அக்கறையும் கொண்டவள் போல அரசருக்கு நடித்த அவள், தான் மிகுந்த கவலையில் இருப்பதாகச் சொன்னாள்.

‘அரசே, இந்த நோய் என்னவென்று எங்களுக்குத் தெரியாது. நாடு முழுவதிலுமிருந்து அனைத்து மருத்துவர்களும் குணப்படுத்த முயற்சித்தார்கள், ஆனால் இந்த நோய் பற்றி எவரும் இதுவரை அறிந்திருக்கவில்லை. இது எல்லோர்க்கும் தொற்றுகின்ற ஊர்கொல்லி நோயா? இந்நிலையில் இவள் நோய் தமக்குத் தொற்றிவிடும் என்று பயந்த மக்களும், மருத்துவர்களும் கூட இங்கிருந்து அகன்று விட்டார்கள்.

இந்நிலையில் நமக்குப் பிறக்கப் போகின்ற மகவிற்கு என்ன நடக்குமோ என்று தெரியவில்லை பிரபு... இப்படியே விட்டால் எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? எமக்கும் இது தொற்றிவிட்டால்... அவள் மனம் பேதலித்துக் கோபம் கொண்டு எம்மைத் தீண்டி, மோசமாக நடந்தால் கர்ப்பிணியான நானும் பிள்ளையும் இறந்து விடுவோமே? ஒரே ஒரு வழிதான் உண்டு அரசே நீங்கள் அவளை இங்கிருந்து வெளியேறச் சொல்ல வேண்டும். வேறு எங்காவது விட்டுவிட வேண்டும் என்றாள் அழுதவண்ணம்.

வெடியரசரிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. கண்ணீரை அடக்கிக் கொண்டு இறுதியில், ‘கோகிலா என் செல்வமே! நீ கிளம்பு. இனி எம்மால் உனக்கு உதவமுடியாது. மன்னிக்க வேண்டும் மகளே’ என்றழுதான். காவலர்களிடம் சொல்லி அவளை நகர எல்லைக்கப்பால் உள்ள வனத்தில் விடப் பணித்தான். கோகிலாவின் மனம் உடைந்து போனது. தனக்கு மிகத் துன்பமான நேரத்தில் அப்பா தன்னை இப்படிக் கைவிடுவார் என்று அவள் கனவிலும் நினைத்தவளல்ல.

இராணி ஆதிரை நேரத்தை வீணடிக்காமல் அவளை வெளியே அனுப்புவதில் குறியாயிருந்தாள். ‘கோகிலா, நீ உன் அப்பாவை நேசிக்கிறாய் என்றால், இங்கிருக்கும் எஞ்சியவர்களுக்கும் உன் நோய் தொற்றி, உன்னைப்போல் ஆவதற்குள் இப்போதே கிளம்பிவிடு! என்று கட்டளையிட்டாள். அழுதுகொண்டே கண்ணீருடன் கோகிலா வெளியேறினாள்.

கோகிலா தான் மிக விரும்பிய ஆலமாவனத்தைச் சுற்றிப் பல நாட்கள் இலக்கில்லாமல் நடந்தாள். அவள் மண்டியிட்டு மௌனமாகக் கடவுளை மன்றாடிக் குணமடைய வேண்டிக் கொண்டாள். திடீரென்று, எங்கிருந்தோ, ஒரு பிரகாசமான ஒளி அவள் முன் தோன்றி, கோகிலா என்று உரிமையோடு அழைத்தது.

தன் கண் முன்னே நடப்பதைக் கண்டு கோகிலா திகிலடைந்தாள். ‘யார் நீங்கள்? நான் காண்பது உண்மையா? ஒளியாகி நகர்கிற தாங்கள் யார்? தயவு செய்து காயமுற்ற என்னை மறுபடியும் காயப்படுத்தாதீர்கள்’ என்று கோகிலா அழுதாள்.

‘பயப்பட வேண்டாம். நான் உன் அம்மா! உன் வாழ்நாள் முழுவதும் நீ நம்பிய அப்பா மற்றும் ஊரவர்களால் நீ எவ்வாறு துன்பப்பட்டாய் மற்றும் கைவிடப்பட்டாய் என்பது எனக்குத் தெரியும். நீ இப்போ என்னை உருக்கமாக வேண்டிக்கொண்டதையும் நான் அறிவேன். வருத்தமுறாதே மகளே... இனித்தான் உனக்கு நல்ல நாட்கள் காத்திருக்கின்றன. நீ சாதாரண மனிதர் இல்லை. நீ என் குழந்தை. இந்த நெடுந்தீவெனும் இயற்கையின் தேவதை. நீ குணமடைய விரும்பினால், நான் சொல்வதைக் கேள். இங்கிருந்து தெற்குக் கடலின் கரைக்குச் செல்’. இளவரசி கோகிலா பதில் சொல்வதற்குள், அந்த ஒளி தோன்றியது போலவே மறைந்து போய் விட்டது.

கோகிலா தயங்கினாள். ஆனால் வேறு வழியில்லை, கோகிலா தன் தாயான ஒளிக் கடவுளின் அறிவுரைக்குச் செவி

சாய்த்தாள். கால் வலிக்க நடந்தாள். தென் கரையை அடைய நாட்கள் எடுத்தது, ஆலமாவனம் சூழ்காட்டினுள் நடந்தாள்.

அவள் இறுதியாகத் தெற்குக் கடலின் கடற்கரையை அடைந் ததும், 'கோகிலா, என் குழந்தையே! நிற்காதே நேராகக் கட லுக்குள் போ' என்ற அம்மாவின் அசரீரிக் குரல் மீண்டும் கேட் டது.

படபடக்கும் இதயத்துடன், கோகிலா அந்தத் தென் கடலின் வெதுவெதுப்பான நீரில் ஒரு அடி எடுத்துவைத்தாள். பின்பு அவள் மேலும் கடலுக்குள் நடந்தாள். கடலுள் இறங்க, இறங்க தண்ணீர் அவள் முழங்கால்வரை எட்டியது, பின்னர் அவள் இடுப்பு மற்றும் அவள் கழுத்து வரை...

எல்லாம் அமைதியாக இருந்தது.

இனியென்ன... யோசிப்பதற்குள் ஆழிப்பேரலைகள் ஆகாயம் அளவிற்கு உயர்ந்து அவளைத் தூக்கி வாரி மேலெறிந்து கட லின் அதல பாதாளத்திற்கு அமுக்கியது. தீவுகள் பிளவுண் டன. ஏழாற்றுப் பிரிவுகள் உண்டாகின. மலை போல் பேரலை கள் மலையடியாய் உயர்ந்தன. மட்டிகளும் நண்டுகளும் ஊரெல்லாம் பரவ கடல் மேவிப் பின் தணிந்தது. நன்னீர் உப் பானது. மண் கரைந்து பாறையானது. எங்கும் கல். நிலமெங் கும் சிப்பிகளும் ஊரிகளும். ஒன்றாயிருந்த ஊர்கள் என்றெல் லாம் பிளவுண்டு பிரிந்தது.

அந்த ராட்சதப் பேரலைச்சுழி கோகிலாவின் மீது மோதியப டியே இருந்தது. கோகிலா அந்த நீரோட்டத்தின் அடியில் இழுக்கப்பட்டாள். அவள் உடல் கடலின் இருண்ட, பயங்கர மான ஆழத்திற்கு மேலும் மேலும் இழுத்துச் செல்லப்பட்டு, ஈற்றில் தளர்வான ஒரு பாறைக்கல்லைப் போல அவள் விடப் பட்டாள். உப்பு நிறைந்த கடல் நீர் அவள் கண்களை எரியச் செய்தது. வாயில் உப்புக் கரித்தது. அவளால் சுவாசிக்கவோ சுற்றிவரை எதையும் பார்க்கவோ முடியவில்லை.

ஆனால் ஒரு நொடிக்குள் எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் எல்லாம் திடீரென ஸ்தம்பித்தது. கடல் அமைதியானது. உப்பு அவளுக்கு இயல்பானதாயிற்று. கடல் நடுவே எடை யின்றி ஓர் மீனைப்போல மிதந்துகொண்டிருந்த அவள் உடல் கடலின் வெதுவெதுப்பான நீரால் குணமாவதைக் கண்டாள். அவள் தோல்முழுவதும் மின்னல் பாய்வதைப் போல உணர்ந் தாள். அவள் ஒளியாகவும், அமைதியாகவும் நிர்மலமானாள். அவள் முன்பு உணர்ந்த பயம் அனைத்தும் அவள் உடலை விட்டு வெளியேறியது. அவள் நீருள்ளும் மூச்சு விடுவதைக் கண்டாள். மெதுவாகக் கண்களைத் திறந்தாள். அவள் இன் னும் தண்ணீருக்கு அடியில் இருந்தாள்.

கடலின் அழகிலும், கடலில் வாழும் அனைத்து உயிரினங்க ளிலும் மயங்கிய கோகிலாவின் இதயம் மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சியை நிரப்பிக் கொண்டது. அவளது உடலில் சீழ் நிரம்பி நாறிய கொப்புளங்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. கோகிலா அந்தத் தென் கடலின் பட்டுப்போன்ற நீரில் தூய மகிழ்ச்சியுடன் சறுக்கினாள். தண்ணீர் அவளின் தோலை மிகுந்த கரிசனையோடு குணப்படுத்திக் கொண்டாடியது. வெதுவெதுப்பான தெளிந்த நீர் அவளுடைய உடைந்த இத யத்தை மேலும் குணப்படுத்தியது. அவள் கடலன்னைக்கு நன்றிக்கடன் பட்டாள். தன்னுள் பெரும் மாற்றம் நிகழ்வதை யும், தான் கடற்பேரழகியாக உருவாவதையும் அவள் அந்நே ரம் உணர்ந்தாள். அவள் இவ்வாறு குணமடைந்து விட்டதால் இனித் தன் தந்தையின் பக்கத்தில் இருக்கும்படி மனம் விரும் பினாலும் கடல் தனக்குச் செய்த பேருதவியை நினைத்து நன் றியுள்ளவளாகக் கடலின் உள்ளேயே இருக்க விரும்பினாள். தன்னை வீட்டை விட்டு வெளியே துரத்தியமைக்காக அவள், தன் தந்தை மீது வெறுப்புக் கொள்ளவில்லை, ஆனால் தான் கடலின் ஒரு பகுதியாக இனி இருக்க வேண்டும் என்று அவள் மனம் அவளிற்கு உணர்த்தியது. தன் நினைவாக நெடுந்தீவுக் கிழக்குக் கடற்கரையின் பாறையில் பன்னீர் மரமொன்றைச் சிருஸ்டித்தாள்.

அவளின் அந்தப் பன்னீர் மரத்தின் அழகிய பூக்கள் காட்டு இராமன் கடலில் நிறைந்து மிதந்தன. கடலின் ஆன்மாக்கள் அவளுடைய விருப்பங்களைக் கேட்டன, அவள் கடலை எவ் வளவு நேசிக்கிறாள் என்பதை அவை அறிந்தன. எனவே, அவர்கள் கடலின் ஒரு பகுதியாக அவள் இருக்க வேண்டும் என்ற அவளது விருப்பத்தை நிறைவேற்றியது மட்டுமல்லா மல், அவர்கள் அவளைத் தெற்குக் கடலின் ராணியாகவும் அதன் பாதுகாவலராகவும் முடிசூட்டினார்கள். அந்த மாற்றம் நிகழ்ந்த போது, கோகிலா அனைத்துச் சக்திவாய்ந்த நெடுந் தீவின் கடல்ராணி என்று பெயர் பெற்றவளானாள். கடலின் இதயம் அவளுடைய இதயமாக மாறியது, இப்போது அவள் கடல் சக்கரவர்த்தினி. கடலை மரியாதை செய்பவர்களுக்கு அன்பையும், நிந்திப்பவர்களுக்கு ஆபத்தையும் கொடுப்ப வள். உதவியற்று, நோயுற்ற சிறுமி இப்போது பரந்த கடல் எனும் சாம்ராஜ்யத்தின் பெரு அரசி.


அவள் விரும்பியபடி கடலைக் கட்டுப்படுத்தினாள், கடலை வன்முறை அலைகளாக மாற்றவும் அல்லது தனது கட்டளை யின் பேரில் அவற்றை மென்மையான சிற்றலைகளாக அமை திப்படுத்தவும் அவளுக்கு அதிகாரம் இருக்கிறது. கடலில் வாழ்வாதாரம் செய்யும் அனைத்து உயிரினங்களையும் அவள் பாதுகாத்தாள். தன் கடல் உயிர்களை அழித்து, மீன்க ளைச் சூறையிடும் மீனவர்களைக் கூட அவர்கள் உயிருக் காய் அழுது தத்தழிக்கிறபோது காப்பாற்றும் கருணை அவள்.

இன்றைக்குப் பிளவுண்ட தீவுச் சமூகங்கள் அவளைச் சமாதா னப்படுத்தப் பல பெயர்களில் பல வேள்விகளையும் சடங்குக ளையும் இன்றும் செய்து வருகின்றன. கடற் தெய்வமான மணி மேகலா தெய்வம் இவளது பிறப்பே என்று நம்புவோரும் உண்டு. பேரலைகளை, கடலின் உள்ளேயும் வெளியேயும் கொட்டுகிற கடற் குமுறல்களைக் கட்டுப்படுத்துகிற தேவதை யவள், தீவகம் காக்கும் தேவதையாகி மகத்தான சக்திக ளைக் கொண்டிருக்கிற அவள் எல்லோராலும் மிகவும் மதிக் கப்படுகிற கடற் கன்னி.

அந்தப் பன்னீர் மரம் தந்த தேவதை காக்கிற பசுந்தீவின் அஸ்வத்தாமன் குதிரையின் வழித் தோன்றல் தான் நானென் றது குதிரை குரு.

விலங்குகள் முகத்தில் வியப்பு!

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



# திரு. வேட்ஸ்வேத்தும் கிராமத்துச் சிறுமியும்

- ஸ்ரீ:.பன் ப்பட்லர் லீக்கொக்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

‘ஒரு கிராமத்துச் சிறுமியைச் சந்தித்தேன்

அவளுக்கு எட்டு வயது

அடர்த்தியான என் தலைமுடியில் பல சுருள்கள்

தலையைச் சுற்றிக் கொத்துக் கொத்தாகக் கிடக்கின்றன’

என்றாள்.

இதுதான் நிகழ்ந்தது.

அவர் பிறந்த இடமான கம்பலான்ட் கிளர்ச்சியற்ற ஒரு சிறிய மலைப்பகுதி. அங்கே வயது முதிர்ந்த அந்த அரசவைக் கவிஞர் குனிந்த தலை நிமிராமல் கவலை தோய்ந்த முகத்துடன் அலைந்து கொண்டிருந்தார்.

வயது முதிர்ந்த அவரின் அந்தக் காலம் அத்தனை சிறப்பானதாக இருக்கவில்லை.

அவரின் காற்சட்டைப் பைக்குள் சில நாணயங்கள் மட்டுந்தான் இருந்தன. அதோடு சென்ற் லியோன் மருந்துக்குக் கொடுப்பதற்காக ஒரு காசோலையும் இருந்தது. அவர் மனம் கசப்பால் நிறைந்திருந்தது.

தூரத்தில் ஒரு குழந்தை அசைவது தெரிந்தது. உருவத்தில் அது குழந்தை. ஆனால் அதன் முகத்திலுள்ள ரேகைகள் வயது முதிராமலே முதிர்ந்ததைக் காட்டின.

கவிஞர் அந்தக் குழந்தையைக் கண்டார். அதைப் பின்தொடர்ந்து சென்றார். பின் அவளையும் தாண்டிச் சென்றார். அவள் தன் மூச்சை மெலிதாக இழுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒவ்வொரு உறுப்பும் உயிர் இருப்பதையும் அவள் மரணத்தை வென்று கொண்டிருக்கிறாள் என்பதையும் காட்டிற்று.

‘சற்று நேரம் இங்கிருந்து அந்தக் குழந்தையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்’ என்று கவிஞர் தனக்குள் முணுமுணுத்தார். தன் கைத்தடியால் அவளை விழுத்தி அவள் மேல் இருந்து கொண்டு சிந்திக்கத் துவங்கினார்.

அப்படி அதிக நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். அவரின் கீழே கிடந்த குழந்தை, ‘இவருடைய இதயம் கனத்துள்ளது’ என்று சொல்லி பெருமூச்செறிந்தது.

இறுதியில் ஒரு குறிப்பேட்டையும் பென்சிலையும் எடுத்துத் தன் தொடையில் வைத்து எழுதத் துவங்கினார்.

அந்தச் சின்னஞ் சிறு குழந்தையைப் பார்த்து, ‘என் அன்புக்குரிய இளம் பெண்ணே. உன் முகத்தில் உள்ள ரேகைகள் எனக்கு வேணும். உனக்கு வயது ஏழா ?’ என்றார்.

‘ஓம், நாங்கள் ஏழு பேர்,’ என்றது அந்தக் குழந்தை கவலையுடன். ‘உங்களுக்கு என்ன வேணும் என்பது எனக்குத் தெரியும். என் துயரப்படும் குடும்பத்தைப் பற்றிக் கேட்க விரும்புகிறீர்கள் இல்லையா ? நீங்கள் திரு. வேட்ஸ்வேத் அல்லவா ? நீங்கள் பென்னிக் கலைக் களஞ்சியத்தின் கொட்டேஜர்கள் பதிப்புக்குப் பிணவறைப் புள்ளிவிபரங்கள் எடுக்கிறீர்கள் அல்லவா ?’ என்றது குழந்தை மேலும் தொடர்ந்து.

‘உனக்கு எட்டு வயது இல்லையா ?’ என்றார் கவிஞர்.

‘அப்படித்தான் இருக்க வேணும். பல ஆண்டுகளாக எனக்கு எட்டு வயது.’

‘உனக்கு மரணத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது அல்லவா ?’ என்றார் கவிஞர் உற்சாகத்துடன்.

‘எனக்கெப்படித் தெரியும் ?’ என்று பதிலளித்தது குழந்தை.

‘அப்படியானால்...’ என்று தொடர்ந்தார், மதிப்பிற்குரிய வில்லியம் வேட்ஸ்வேத்.

‘சரி. நாங்கள் விசயத்திற்கு வருவோம். உன்னுடைய சகோதர சகோதரிகளின் பெயர்களைச் சொல்லு.’

குழந்தை சோர்வுடன் பார்ப்போம் என்று சொல்லத் துவங்கியது. றூபி, ஐக், மற்ற இரண்டு பேருடைய பெயர் என் நினைவில் இல்லை. ஜோனும் ஜேனும்.’

‘ஜோனையும் ஜேனையும் கணக்கெடுக்க முடியாது’ என்றார், கவிஞர் கண்டிப்புடன். ‘அவர்கள் இறந்து விட்டார்கள். அதனால் அவர்களை ஏழு பேர்களில் சேர்க்க முடியாது.’

‘அவர்களை நான் கணக்கில் சேர்க்கவில்லை. சிலவேளை



அவர்களை நான் பிழையாகக் கூட்டியிருக்கலாம்' என்று சொன்னது குழந்தை.

'தயவுசெய்து உங்களுடைய சப்பாத்தை என் கழுத்திலிருந்து எடுங்கள்' என்றது குழந்தை.

'மன்னித்துக் கொள்' என்றார் முதியவர். 'அதுவொரு நரம்புப் பிரச்சினை. என் மனம் வேறு ஒன்றில் தோய்ந்திருந்தது. கவிதைகளின் யாப்பில் என் மனம் தோய்ந்து விட்டிருந்தது. அதனால் தான் கால்களை உன் மேல் வைத்து விட்டேன். சரி தொடர்ந்து பேசுவோம். எவர் முதலில் இறந்தார்?'

'முதலில் இறந்தது, சின்னஞ்சிறிய ஜேன்' என்றது குழந்தை.

'அது கட்டிலில் முனகிக் கொண்டு கிடந்தது இல்லையா?'

'ஓம், கட்டிலில் முனகிக் கொண்டு கிடந்தது.'

'எந்த நோய் அவளைக் கொன்றது?'

'தூக்கமின்மை' என்று பதிலளித்தாள் சிறுமி.

'எங்கள் அண்ணன்மார் ஏற்கெனவே கொன்வே நகரத்திற்குப் போய் விட்டார்கள். அதற்கு முன் எங்கள் கிராமம் மகிழ்ச்சியாக இருந்தது. அப்போது அவள் ஜோனுடன் விளையாடினாள். ஏற்கெனவே பலவீனமான அவளுக்கு அது அதிகபடியாகி விட்டது' என்றாள் அந்தச் சிறுமி.

'நடந்ததை நீ நன்றாகச் சொல்கிறாய்' என்றார் கவிஞர்.


'இப்போ அதிர்ஷ்டமில்லாத மற்ற அண்ணனைப் பற்றிச் சொல். நீ வெண்பனியில் ஓடியும் சறுக்கியும் விளையாடினாய். அப்போது, உறைபனிக் காலம் அவனுக்கு எப்படி இருந்தது?'

'என் அண்ணன் ஜோனுக்குப் போக வேண்டிய கட்டாயம், காலம் வந்துவிட்டது. அவன் இறந்ததற்கான காரணத்தை எங்களால் கண்டறிய முடியாது போய் விட்டது. புதிதாக விழுந்த உறைபனியின் பேரொளி அவனுடைய அமைதியற்ற மூளையைத் தாக்கி இருக்கிறது. நான் உறைபனியில் செய்த சாதனைகள் போல அவனும் செய்ய நினைத்து அவற்றைச் செய்தான். அதனால் அவனுக்கு மரணம் ஏற்பட்டிருக்கலாம். ஐயா, பாவப்பட்ட ஜேனைப் பற்றி மென்மையாகப் பேசுங்கள். அண்ணன் ஜோனைப் பற்றி எதையும் பேசலாம். அவனை நாங்கள் பனியில் சறுக்குவதற்கு அனுமதிப்போம்' என்றாள் தொடர்ந்து.

'சரி, முடிவில் உன்னிடம் ஒரு சிக்கலான கேள்வி ஒன்றைக் கேட்க வேண்டும். அதற்கு இடம் தருவாயா? நீ எப்போதாவது உன் சிறிய கஞ்சிக் கிண்ணத்தை எடுத்திருக்கிறாயா?' என்றார் கவிஞர்.

குழந்தை வெளிப்படையாகவே, 'ஓம்' என்று சொன்னது.

'கதிரவன் மறைந்த பின், அடிக்கடி எடுப்பேன்.
ஒளியும் அழகும் எல்லாவிடமும் நிறைந்திருக்கும்போது



ஸ்ரீஃபன் ப்பட்லர் லீக்கொக் 1869-1944. ஒரு கனடிய எழுத்தாளர், பேராசிரியர், அரசியல் விஞ்ஞானி, நகைச்சுவையாளர். 1915-1925 காலத்தில் ஆங்கில மொழி பேசும் உலகத்தில் பெரிதாக அறியப்பட்டவர். நகைச்சுவையுடன் மக்களின் மதியீனங்களை விமர்சித்தவர்.

அவர் இங்கிலாந்து சவுதம்ரனில் வசதியான குடும்பத்தில் பதினோராவது குழந்தையாகப் பிறந்து, ஆறு வயதாக இருக்கையில் கனடா ஒன்ராறியாவுக்குப் பெற்றோருடன் குடிபெயர்ந்தார். ரொறன்ரோவிலுள்ள உயர் குடிக்கான அப்ப கனடாக் கல்லூரியிலும் பின் ரொறன்ரோ பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றார். அதற்கிடையில் குடும்பச் சூழ்நிலை காரணமாகத் தான் கற்ற அப்ப கனடாக் கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்பொழுதே பல்கலைக்கழகச் சஞ்சிகையில் எழுத ஆரம்பித்துவிட்டார்.

ஆசிரியர் தொழிலில் விருப்பமில்லாத அவர் சிக்காக்கோ பல்கலையில் படித்து அரசியல், விஞ்ஞானம், அரசியல் பொருளியலில் முனைவர் பட்டம் பெற்றார். பின் மொன்றியலில் உள்ள மக் ஹில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பல காலம் பணியாற்றினார்.

பழமை பேணியவர், பெண்கள் வாக்குரிமை பெறுவதற்கு எதிரானவர், ஆங்கிலேயர் தவிர்ந்த பிறர் கனடாவில் குடியேறுவதை விரும்பாதவர், பிரித்தானிய ஏகாதிபத்திய ஆதரவாளர், ஆங்கிலேயர்கள் உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை உடையவர்.

ஆரம்பத்தில் புனைவுகள், நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதினார்.

இவர் எழுதிய நூல்கள் பல. அவற்றில் பெயர் பெற்றவை. Sunshine Sketches of a Little Town, Arcadian Adventures with the Idle Rich, My Financial Career, Literary Lapses, Nonsense Novels. இவருடைய படைப்புகள் தொலைக்காட்சித் தொடராகப் பல ஆண்டுகள் காட்டப்பட்டுள்ளன. நகைச்சுவையாளர்களால் தொடர்ந்து தனிநபர் நகைச்சுவை அரங்கக் காட்சிகளாக நடிக்கப்பட்டுள்ளன. பல படைப்புகள் தழுவப்பட்டு நாடகங்களாகவும் நடிக்கப்பட்டுள்ளன.

இவருடைய பெயர் பல இடங்களுக்குச் சூட்டப்பட்டுள்ளது. யுகோன் பிரதேசத்திலுள்ள ஒரு மலை, மக் ஹில் பல்கலைக் கட்டடம் ஒன்று, ஒட்டாவா, ரொறன்ரோ ஆகிய இடங்களிலுள்ள உயர்தரப் பள்ளிகளுக்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

என் சிறிய கிண்ணத்தை அடிக்கடி எடுப்பேன்.'

'அதன் பிறகு நான் என்ன செய்வேன் என்று எனக்கு அதிகம் நினைவில் இல்லை. ஆனால் நான் அதை எடுப்பது எனக்குப் பிடித்திருந்தது. அது எனக்குத் தெரியும்.'

'அது பிரச்சினையில்லை. நீ உன் சிறிய கிண்ணத்தில் எதுவும் கலக்காமல் குடிப்பாய். கஞ்சியை மட்டும் குடிப்பாய். அல்லது சிறிது கசப்புச் சேர்த்துக் குடிப்பாய். அல்லது உணவுண்ட பின் தண்ணீருடன் கலந்து எடுப்பாய். நீ சிறிய கிண்ணத்திலுள்ள கஞ்சியை ஒழுங்காகக் குடித்திருந்தால் மக்கள் திருப்தி அடைந்திருப்பார்கள்.

இன்னும் உன்னை மேலும் தாமதிக்க வைக்கவில்லை. இந்தா ஆறு பென்ஸ் பணம். பொறு, சென்ற் லியோன் நீர் வாங்கவும் ஒரு காசோலை தருகிறேன். நீ கொடுத்த தகவல்கள் மிகவும் மதிப்புள்ளவை. நான் அதைக் கொண்டு கவிதை எழுதி விடுவேன். ஏனென்றால் நான் தான் வேட்ஸ்வேத் என்ற கவிஞன்.'

இந்த வார்த்தைகளைச் சொல்லி விட்டு அந்தக் குழந்தைக்கு முதிய கவிஞர் பணிவுடன் தலை தாழ்த்தி வணக்கம் சொன்னார். பின் தலையைக் குனிந்து கொண்டு, காற்றுடன் ஏதாவது மட்டமான மலர் அடித்து வரப்படுகிறதா என்று பார்த்துக் கொண்டு, கம்பலான்ட ஆம்ஸ் என்ற மதுசாலைப் பக்கம் நடந்தார்.

*(நாங்கள் ஏழு பேர் என்ற கவிதையை எடுத்துக் கற்பனையில் காட்சிப்படுத்திக் குழந்தையுடன் பேசுகிறார் கவிஞர். உன்னுடன் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று கேட்கிறார். குழந்தைகள் ஏழு என்கிறது. அதில் இரண்டு பேர் இறந்துவிட்டனர் என்றும் சொல்கிறது. அப்படியானால் நீங்கள் எத்தனை குழந்தைகள் என்று கேட்கிறார் கவிஞர். நாங்கள் ஏழு பேர் என்று திரும்பவும் சொல்கிறது குழந்தை. அதையே கவிஞர் ஒரு உரையாடலாக உருவகித்துக் காட்சிப்படுத்துகிறார்.*

*அந்த உரையாடலை லீக்கொக் கற்பனை செய்து நகைச்சுவையுடன் எழுதுகிறார். நாங்கள் ஏழு பேர் என்ற இந்தக் கவிதையில் குழந்தை இறந்தவர்களையும் உயிருடன் இருப்பதாகவே வஞ்சகமில்லாமலே கருதுகிறது. அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடக்க இருக்கிறது. அப்போது இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், கடலுக்குப் போனவர்கள், வீட்டில் வேலைக்காகச் சென்றவர்கள் ஆகியோரை எப்படிக் கணக்கெடுக்க முடியும் என்ற பிரச்சினைகள் பேசப்பட்டன. அதையே பின்னணியாகக் கொண்டு இக்கவிதை எழுதப்பட்டதாகக் கற்பனை செய்கிறார் லீக்கொக்.*

*வில்லியம் வேட்ஸ்வேத் ஒரு நடைப்பயணி. தினமும் குறைந்தது இரண்டு மணி நடப்பார். மலைப்பகுதிகள், கிராமப்புறங்கள் போன்ற இயற்கைக் காட்சி நிறைந்த இடங்களில் நடப்பார். அப்படி ஒருநாளில் இந்தக் குழந்தையைச் சந்தித்ததாக லீக்கொக் கற்பனைசெய்து இந்தக் கட்டுரையில் எழுதுகிறார்.*

*வேட்ஸ்வேத் ஆரம்ப கால றோமான்ரிக் கவிஞர். இந்தக் கவிதை லிரிக்கல் பலட் என்ற பாடல் நூலில் 1798-ல் வெளிவந்தது. இவருடன் சேர்ந்து இன்னொரு றோமான்ரிக் கவிஞரான கோல்ரிட்ஜும் சில அருமையான கவிதைகள் எழுதியுள்ளார். கோல்ரிட்ஜ் வேட்ஸ்வேத்தின் இணைபிரியா நண்பர்.)*



mahalingam.k@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com



கடன் தொல்லையா?
CREDIT CARD
BANK
ROBERT JONES
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
• கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
• நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
• வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
• Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
• உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




**BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE**

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
விற்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
GRAND MASTER CLUB
Chairman's Club Award Winner
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner
Platinum Club Winner 2022
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்தால் CO
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E: aatekcanada@gmail.com
We Are Specialists in
We Are Professional trouble shooters for all major gas appliances
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
416-834 5753



Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
DILEEP Thangavel
Realtor
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
www.thanahomes.com


HomeLife Today Realty Ltd.,
Brokerage*
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225


Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
Credit Solution Centre



Suba Aynkharan
RE/MAX COMMUNITY REALTY INC.



2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER



Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd.,


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe
Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner